ரவீந்திரர்

கதைத் திரட்டு

I

616
07
2616

சாகித்திய அக்காதெமி

ரவீந்திரர் கதைத் திரட்டு

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து இந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூஸியம், புது தில்லி.)

ரவீந்திரர் கதைத் திரட்டு

(ரவீந்திரநாத டாகுரின் இருபது கதைகள்)

தமிழாக்கம்:

த. நா. குமாரஸ்வாமி

சாகித்திய அக்காதெமி

Ravindirar Kathai Thirattu : Twenty Stories by Rabindranath Tagore. Translated from Bengali into Tamil by T. N. Kumaraswami. Sahitya Akademi, New Delhi. First Edition 1961, Reprint 1986. Rs. 50.

© Sahitya Akademi, New Delhi. Rights for Translations of Stories 1, 3, 10 and 11 vests with Alliance Company, Madras; Stories 7, 13, 15 and 18 with Kalaimagal Publications, Madras; Stories 6, 17 and 20 with T. N. Kumaraswami and Story 2 with Mangala Noolagam. Madras.

முதல் பதிப்பு : 1961,
இரண்டாம் பதிப்பு : 1986

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம் :
ரவீந்தரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

கிளை அலுவலகங்கள் :
29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

பிளாக் V-B. ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா-700 029.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய்-400 014.

விலை : ரூ. 50.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :
ஆர். கே. எஸ். பிரிண்டர்ஸ். சென்னை-600 005.

ரவீந்திரர் கதைத் திரட்டு

			பக்கம்
	ரவீந்திரரின் கதைகள்	...	v
1.	போஸ்ட் மாஸ்டர் (போஸ்ட் மாஸ்டர்)	...	1
2.	ஓர் இரவு (ஏக ராத்ரி)	...	8
3.	வாழ்வும் சாவும் (ஜீவித ஓ ம்ருத)	..	17
4.	காபூல்காரன் (காபூலிவாலா)	....	30
5.	தண்டனை (சாஸ்தி)	...	41
6.	இனிது முடிந்தது (ஸமாப்தி)	...	54
7.	காரும் கதிரும் (மேக ஓ ரௌத்ர)	...	75
8.	நள்ளிரவில் (நிசிதே)	...	107
9.	பாட்டனார் (டாகுர்தாதா)	...	122
10.	கல்வின் வேட்கை (க்ஷுதித பாஷாண்)	...	133
11.	அதிதி (அதிதி)	...	149
12.	துராசை (துராசா)	...	171
13.	கண் கொடை (த்ருஷ்டி தான்)	...	188
14.	மாஸ்டர் மஷாய் (மாஸ்டர் மஷாய்)	...	214
15.	புதையல் (குப்த தன்)	...	249
16.	ராஸமணியின் பிள்ளை (ராஸமணிர் சேலே)	...	268
17.	ஹால்தார் குடும்பம் (ஹால்தார் கோஷ்டி)	...	308
18.	மனைவியின் கடிதம் (ஸ்த்ரீர் பத்ர)	...	333
19.	இடம் இருக்கிறது (அபரிசிதா)	...	354
20.	நல்ல வரன் (பாத்ர ஓ பாத்ரீ)	...	371

ரவீந்திரரின் கதைகள்

ரவீந்திரருடைய சிறுகதைகள், உலகத்துப் பிரபலமான சிறுகதை எழுத்தாளரிடையே அவருக்கு உயர்வான இடம் அளித்திருக்கின்றன. அவருடைய சிறுகதைகளில் தென்படும் முக்கிய அம்சங்களை ஆராயப் புகுவதில் பயனுண்டு. சிறுகதை எழுதுவதை அவர், தம் வாழ்க்கையின் முக்கிய வேலையாகக் கொண்டிருக்கவில்லை. அவருடைய பன்முகமான மேதை வெளிப்படுவதற்கு வகுத்துக்கொண்ட வழிகளுள் இக்கலையும் ஒன்றாகும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இக்கதைகளைப் படித்து இவற்றின் சுவையை நுகர்வதற்கு முன்னால், இவற்றை உருவாக்கியவரின் பண்பையும், இந்த ஆக்கங்களின் தன்மை, விரிவு ஆகியவைபற்றியும் ஓரளவு நாம் தெரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

உலகில் தோன்றிய பேரிலக்கியச் செம்மல்களுள் ஒருவர் ரவீந்திரர். எக்காலத்திலும், எந்நாட்டிலும் அவருக்கு இணையான பாடற் புலவர் எவரும் இல்லை என்பது தெளிவு. ஆனால் மற்ற இலக்கியத் துறைகளில் அவருக்குள்ள திறமை புறக்கணிக்கக்கூடியதன்று. பெருங்காப்பியம் தவிர, அவரது கை பட்டு வெற்றி பெறாத இலக்கிய வடிவம் ஒன்றேனும் இல்லை எனலாம். கவிதைக்கோப் புனைவதோடு நிற்காமல், நவீனம், சிறுகதை, உரை நடையிலும் செய்யுள் வடிவிலும் சமூக, உருவக நாடகங்கள், அரசியல், சமயம், சமூகம், தத்துவம் இவை பற்றிய கட்டுரைகள், கணக்கற்ற அருமைக் கடிதங்கள், தெளிவான இலக்கிய விமரிசனங்கள், சிறுவர்க்கு விருந்தான நூல்கள், தன் - வரலாற்றுக் குறிப்புக்கள் இவை போன்ற துறைகளிலும் அவர் ஒங்கி நிற்கிறார். அவருடைய படைப்பின் உத்வேகம், அறுபது ஆண்டுக்காலம் இடையறாது உழைத்தும் சிறிதளவும் சுருங்கிவிடவில்லை. தரத்திலும், அளவிலும் அவருடைய படைப்புக்கள் வியக்கத் தக்கன. நீண்ட ஆயுட் காலத்தில் அவர் செய்துள்ள இச் சாதனைகள் வெறும் விஷயங்கள் அல்ல; அற்புத அழகுகளை வெளிக்காட்டுவன. புதுமைப் படைப்புகளாகவே விளங்குகின்றன.

அவர் சிறந்த எழுத்தாளராக வருவதற்குத் துணையாக இருந்தவை, அவரது தனிப் பண்பும், வாழ்க்கையின் வளமுமே

யாம். அவருடைய கவிதையில் வரும் ஷாஜஹானைப்போல் அவர் தம் சொந்தப் படைப்புக்களையும் மிஞ்சி நிற்பவரென்றால் அது முற்றும் உண்மையே. பல வகைப்பட்ட அவருடைய முயற்சிகளையும், நிறைவும் ஒளியும் மிகுந்த அவருடைய வாழ்க்கையைப்பற்றியும் கூறுதுபோனால் அவருக்குள்ள மேன்மையை நாம் உணர்வது அரிது. இளமையில் அவர் தம் ஜமீன் சொத்துக்களைக் கவனிக்கும்பொருட்டுப் பத்மா ஆற்றோரத்தில் கண்ணுக்கினிய வங்க நாட்டுப்புறத்தில் தனிமையில் வாழ்ந்து வந்தார். இயற்கையோடு இணைந்து, ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை நேரில் கண்டு நவநவமான இலக்கியங்களைப் படைப்பதிலும், கவிதைகள், கதைகள் எழுதுவதிலும் தம் முழு நேரத்தைக் கழிப்பார்: புதியன படைப்பதில் தளராத ஊக்கமே அவரை வேறு வழிகளில் திருப்பாமல் காத்தது. ஒன்றைச் செய்துவிட்டு ஓய்ந்துவிடுபவர் அல்லர் அவர். அவர் தாம் எழுதிய ஒரு கடிதத்தில், மனிதனுடைய பூரண மலர்ச்சி, அவன் பலவிதமான வேலைகளில் ஈடுபட்டால்தான் தோன்றும் என்று கூறியுள்ளார். உலக மக்களுடனும், அவர்கள் நடத்தும் வாழ்க்கையிலும் ஒன்றி இருப்பதற்கே தண்மையும் அமைதியும் தரும் பத்மா ஆற்றோரத்தைவிட்டு, போராட்டமும் அல்லலும் மிகுந்த உலகிடையே நுழைந்தார். ஒரே பாதையில் வாழ்க்கை, இனிய சந்தத்துடன் செல்லும்போது திடுமெனச் சலிப்புத் தட்டிப் பெரிய செயலை நடத்தும் புது வழியில் அவர் திரும்புவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். அவரது வாழ்வில் இதுபோல் பன்முறை நேரிட்டிருக்கிறது. ஒரு படலம் முடிந்ததும், மற்றொரு தனிப் பண்பை வெளிப்படுத்தும் வேறு படலத்தைத் தொடங்கிவிடுவார்.

ரவீந்திரரின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே பிரிந்து நிற்பவை என்று கருதுவது தவறாகும். அவர் புரிந்துள்ள செயல் யாவும், அவருடைய இலக்கியங்கள், பாட்டுக்கள், விசுவபாரதியை உருவாக்க அவர் செய்துள்ளவை, ஸ்ரீநிகேதனில் அவர் புரிந்துள்ள கிராம நிர்மாணப் பணிகள், அநீதத்தையும் அட்டூழியத்தையும் எதிர்த்து அவர் தொடுத்த போர்கள், நாடு விடுதலை பெற அவர் பங்கெடுத்துக் கொண்டது, உலக மக்களுக்கு இந்தியாவைப்பற்றிச் செய்தி அறிவிக்க மேலைநாடுகளிலும் கீழை நாடுகளிலும் அவர் செய்துள்ள சுற்றுப் பிரயாணங்கள், உலகில் தமக்கு நிகரான உத்தம மனிதர்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு இன்னும் அவர் ஆற்றியுள்ள அரும் பெருஞ் செயல்கள் ஆகியவை உலக ஒருமைப்பாட்டில் அவருக்குள்ள உறுதியைத் தான் எடுத்தோதும்.

அடிப்படையான இந்நோக்கு எங்கிருந்து வந்ததென்பதை இப்போது ஆராய்வோம்: ஒரு தனி மனிதரிடம் இத்தனை அருஞ் செயல்கள் குவிவது விந்தையே. அவரிடம் இத்தனை சக்திகளும் இணைந்திருப்பது பின்னும் விந்தை மிக்கது. பல பண்புகள் ஒன்று சேர்ந்து, நிறைவான ஒரு மனிதனை உருவாக்கி விட்டன. அவர் ஏற்றுச் செய்து முடித்த பணிகள் ஒவ்வொரு வகையாய் இருப்பினும் பெரிய அளவை உடையன. ஆனால் அவற்றை ஆர்ப்பாட்டமின்றியும், ஒழுங்காகவும், அழகாகவும், எளிதாகவும் செய்து முடித்தார். அவர் வாழ்வு முழுவதும் இவை போன்ற முயற்சிகள் நடந்து வந்ததை எவருமே அறியார். இப்பெருந்தகையார் இடையறாத உழைப்பில், அமைதியும் ஒய்வும்/ சூழ இருந்ததை நினைக்கும்பொழுது நமக்கே வியப்பாக இருக்கிறது. தம் சொந்த வாழ்வின் குறுகிய வரம்புக்குள் கட்டுப்பட்டிராமல், மனிதன் வாழும் வியனுலகில் ஆன்மிகப் பற்றுடன் திகழ்ந்தவர்' ரவீந்திரர். இவரது உள்ளம் அற்புத உணர்வு கொண்டு மானிடரின் செயலுக்கும், சிந்தனைக்கும் எதிரொலி தந்தது: ஆனால் சற்றும் நிலை பிறழாதது இவர் கொண்டிருந்த உறுதி.

'ஆத்ம பரிசய' (தன் அறிமுகம்) என்பதில் வரும் ஓர் அழகியசந்தர்ப்பத்தில், அவர் தம் வாழ்வில் வழிகாட்டி அதற்கு ஓர் உருத் தந்த குறிக்கோளின் இரகசியத்தை நமக்குத் திறந்து சொல்லுகிறார்: ''இவ்வுலகின்பால் எனக்கு ஆசை உண்டு: பெருந்தகையோரை நான் வணங்குபவன்; விடுதலைக்காக விழைபவன்; எல்லாம் வல்ல இறைவனிடம் அர்ப்பணம் செய்துகொண்டுவிடும் ஒரு நிலையை விரும்புபவன் நான்; மனித உள்ளத்தில் உறைபவன் இறைவன், அவனுடைய அம்சமான மனிதனின் வாய்மையில் எனக்கு நம்பிக்கை உண்டு. என்னுடைய செயல்களையும் தியாகங்களையும் ஒன்று திரட்டி அவ் விறைவனுக்கே உரிமையாக்கிவிட்டேன். வெளியிலிருந்து எனக்கு எதிர்ப்புக்கள் வரினும், உள்ளத்துள் ஓர் ஆழ்ந்த ஆறுதலையே பெற்றிருக்கிறேன். உலகமாகிய இந்தப் புனிதத் தலத்தில் நான் வந்துள்ளேன். மனிதனின் வரலாற்றை மையமாகக் கொண்ட இப்புவியில் எக்காலத்திலும், எந்நாட்டிலும் அவனுடைய இறைவன் திகழ்கிறான். அந்த இறைவனின் பாத பீடத்தின்கீழ் நான் மௌனமாக அமர்ந்து, இந் நாள் வரையில் தற்பெருமை, தனிப்பட்டு நிற்கும் செருக்கு எனும் மாசு நீங்கப் புனிதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறேன்.''

அருஞ் செயல் புரிவதற்கும், அற்புத இலக்கியங்களை உருவாக்குவதற்கும் இந்த இலட்சியமே ரவீந்திரரை ஊக்கியது எனலாம்.

விலியிலா எழுத்துச் செல்வத்தையும், தனி அழகும் தகைமையும் கொண்ட ஒரு வாழ்வின் படிப்பினையையும் நம் நாட்டினருக்கு அவர் விட்டுச் சென்றிருக்கிறார். உலகத்தவருக்குத் தம் உள்ளத்தையே திறந்து காட்டினார். 'விச்வம் பவதி ஏக நீடம் (உலகினைத்தும் ஒரே கூடு)' என்ற நிலையை எய்திய உள்ளம் படைத்தவர் டாகுர். தம் அரும்பெருஞ் செயல்களாலும், தன்மையாலும், மாண்பினாலும் தம் காலத்திலேயே அவர் அளாவி நின்றார். சோம்பலிலும், தற்பெருமையிலும் ஆழ்ந்த மக்களைத் தட்டி எழுப்பி, உண்மையை ஆராய்வதற்கு அவர்களை ஊக்கி, வாழ்வில் இன்பமும் நிறைவும் பெறுவதற்கு வழி காட்டினார். தம் நாட்டினருக்கு மட்டுமா இது? உலக மாந்தர்பாலும் அவர் உள்ளம் படர்ந்தது. துன்பம், அவலட்சணம் இவற்றிற்கிடையே, வாழ்வில் தென்படும் அழகுகளைப்பற்றிப் பாடியும், மனிதத்தன்மையை இழந்து கொடுமையில் திளைக்கும் உலகத்திற்கு உண்மை அறத்தை உபதேசித்தும் சென்றார். 1931-இல் வெளியான டாகுரின் பொன் மலரில் (Golden Book of Tagore) அவருக்குத் தம் காணிக்கையைச் செலுத்தும்பொழுது கௌன்ட் ஹெர்மான் கெய்ஸர்லிங் என்னும் ஜெர்மன் தத்துவ அறிஞர் கூறியதாவது: ''இப்புவியில் அவரைப்போல் ஒருவரைக் காண்பது என்றென்றும் அரிது. அவர் ஒரு பெரிய நாட்டையே உருவாக்கியவர். டாகுரைவிட நான் எவரையும் போற்ற மாட்டேன். எனக்குத் தெரிந்த அளவில் அவர், உலகு முழுவதும் பரந்த நோக்குடைய, முற்றும் நிறைந்த ஒரு முனிவரென்றே சொல்வேன்.''

இனி, டாகுரின் சிறுகதைகளுக்கு வருவோம். இக்கதைகள் தோன்றுவதற்கான காரணத்தை ஆராயப் புகுவது வீண் முயற்சி ஆகும். சிறுகதை எழுதுவதில் அவருக்கு இணையாக நிற்பவர் எவருமே இல்லை. அவருக்கு முன் வங்கத்தில் இக்கலையைத் தோற்றுவித்த முன்னோர்கள் எவருமே இல்லை. வெளிநாட்டைச் சேர்ந்த எந்த எழுத்தாளருக்கும் ரவீந்திரர் கடமைப்பட்டிருக்கவில்லை. உண்மையைக் கூர்ந்து நோக்கும் திறமையிலும், கற்பனைச் செறிவிலும் இவை அவருடைய கவிதைகளுக்குச் சமமாக நிற்பவை. அவருடைய வாழ்க்கைப் பகுதிகளில் அவர் இருந்துவந்த சூழ்நிலை, கொண்டிருந்த எண்ணங்கள், உணர்ச்சிகள் யாவுமே இவற்றில் சுவைபடத் தோய்ந்துள்ளன.

மூன்று பாகங்கள் கொண்ட 'கல்பகுச்ச' என்ற தொகுதிகளில் அவருடைய சிறுகதைகள் அடங்கியுள்ளன. ஸே, கல்பஸல்ப என்ற அவருடைய கதைத் தொகுதிகளில் வருவன சிறுகதை இலக்கணத்திற்குப் பொருந்தாதவை. அவை மெல்

லிய கோடுகளால் வரைந்த சொல் ஓவியங்களே. 1891-1895 வரை, டாகூரின் படைப்புத் திறமை ஒங்கியிருந்த காலத்தில் இச் சிறுகதைகள் தோன்றின. அந்தக் காலத்தைச் 'சாதனு' யுகம் என்பார்கள். அப் பெயருடைய பத்திரிகையை அவர் நடத்தி, அதன் ஆசிரியராகவும் இருந்தார். பல ஆண்டுகள் இடைவெளியுடைய இக்காலத்திலேயே இந்தக் கதைகள் தோன்றியுள்ளன.

பெரிய அளவிலான கதைகள் ஏழு 1914-இலும், அதே போல் மூன்று 1917-இலும் வெளிவந்தன. இக் கதைகளே அவருடைய சிருஷ்டியின் சிகரமெனலாம். அச் சமயம் பிரமத் சௌதுரி நடத்திவந்த 'ஸபுஜ் பத்ர' (பச்சைத் தளிர்) என்ற பத்திரிகையில் இவை இடம் பெற்றன.

இத் தொகுதியில் வரும் முதல் பதினெரு கதைகள் முதல் காலத்தைச் சேர்ந்தவை. இவையே பெரிய அளவிலுள்ள கதைகள். அடுத்தபடி ஆறு கதைகள் 1898-1911-க்கு இடையே தோன்றியவை. மிகுதி நான்கும் 'ஸபுஜ் பத்ர' காலத்திலும், கடைசிக் கதையான 'பாத்ர ஓ பாத்ரீ' (நல்ல வரன்) 1917-இலும் வெளிவந்தவை.

ஸியால்தஹ், பதிஸார், ஷாஜாத்புர் போன்ற கிராமங்களில் தம் குடும்ப அலுவல்களைக் கவனித்துக்கொண்டு ரவீந்திரர் தம் வாழ்க்கையின் இளமைப் பகுதியைக் கழித்தாரெனக் கூறியுள்ளேன். இதுபற்றிய இனிய வருணனைகளை அவருடைய 'சின்ன பத்ர' (கடிதத் துணுக்கு) என்ற நூலில் காணலாம். அவருடைய முதல் கதைகள் இத்தகைய வங்க நாட்டுப்புறத்தையே நிலைக்களனாகக் கொண்டவை. இக் கடிதங்களில், இக் கதைகள் பிறந்த விதத்தை நாம் ஒருவாறு காணலாம். தம் முடைய முதல் கதைகளே உயர்ந்தவை என்று ரவீந்திரரே கருதினார். அவற்றில்தான் தம் இளம் வயதுக்குரிய நோக்கத் தெளிவும், உணர்வின் மலர்ச்சியும் இருப்பதாக அடிக்கடி அவரே குறிப்பிடுகிறார். பின்னர், பல பொறுப்புக்களின் சுமை அதிகரித்து, முதுமையும் வந்துவிடவே, இந்த ஆற்றல் தமக்கு மெல்ல மறைந்துவிட்டதாகக் கூறுகிறார். ஆரம்பக் கதைகளை அவரே தம் பிற்காலத்தில் படித்தபோது, 'இவ்வுலகிலிருந்து அந்தப் பழமையின் அழகே போய்விட்டதே!' என்கிறார். 1932-இல் எழுதிய ஒரு கடிதத்தில் அவர் கூறுவதாவது: "வங்க நாட்டின் இயற்கை எழிலை நேருக்கு நேர் கண்ட பொழுது என்னுடைய நாட்கள் இன்பப் பெருக்கில் மிதந்து சென்றன. எளிமை மிக்க, ஆடம்பரமற்ற கதைகளில் அந்த இன்பம் ஊடுருவிச் செல்கிறது. இத்தகைய அன்பும், அழகும் சூழ்ந்த வங்க நாட்டுப்புறத்திலிருந்து விலகி வந்துவிட்டேன்.

அதனால் இப்போது மோட்டார் வேகத்தில் விரையும் என் பேனு மீண்டும் இன்னிழல் கவிந்த அந்த இலக்கியச் சோலை வழியே செல்லாது.''

தாம் எழுதிய முதல் கதைகளைப்பற்றி ரவீந்திரரே 1895 ஜூன் தேதி இட்ட ஷாஜாத்புர் கடிதத்தில், இவ்வாறு கூறியுள்ளார்: '' 'சாதனா'வுக்காக இந்தக் கதைகளை எழுதிக் கொண்டிருக்கிறேன். என்னைச் சூழ்ந்துள்ள உலகம் ஒளியுடனும் நிழலுடனும் கூடி என் சொற்களுடன் கலந்துவிடுகிறது. நான் கற்பனை செய்யும் காட்சிகளுக்கு - குணசித்திரங்களுக்கு - இங்கு நான் காணும் கதிரவனின் ஒளி, மழை, ஆறு, நாணற் புதர், மேகம் கவிந்த வானம், மரநிழல் கவிந்த ஊர், மழை நீரில் செழித்த வயல் வெளிகள் யாவும் ஓர் உண்மையையும் உயிரினையும் தருகின்றன. என் முன்னுல் சலசலத்து ஓடும் ஆற்று நீரில் பளபளக்கும் ஒளியையும், ஆற்றங்கரையின் பச்சென்ற அழகையும், ஊர்க் காட்சிகளையும் என் கதைகள்மூலம் வாசகர் முன் தத்ரூபமாக நிறுத்துவேனுயின் என் கதையில் மண்டிக் கிடக்கும் சுவையை ஒருவாறு புரிந்துகொள்ள முடியும்.''

கிராமங்களில் தங்கியிருக்கையில் அவர் சந்தித்த ஆடவர், பெண்டிர், சிறுவர், குழந்தைகள் போன்ற எளிய மக்களை வைத்தே தம் கதாபாத்திரங்களை அவர் உருவாக்கி யிருக்கிறார். இவர்களுடைய வாழ்க்கைப் போராட்டங்களை அவர் புரிந்துகொண்டார்; உண்மையினின்றும் சிறிதும் வழுவாமல் குணசித்திரங்களை அமைத்துப் படிப்படியாகச் சிரிப்பு, அழுகை, இரக்கம், ஆத்திரம் போன்ற உணர்ச்சிகளை எழுப்பும் ஆற்றல் அவரிடம் இருந்தது. போஸ்ட் மாஸ்டர் என்ற கதையில் வரும் ரதனை எடுத்துக்கொள்வோம். பதின் மூன்று வயதான திக்கற்ற இந்த நாட்டுப்புறப் பெண், அவ்வூர் போஸ்ட் மாஸ்டருக்கு ஏவல் புரிகிறுள். நகரத்திலிருந்து மாற்றலாகித் தொலைவான உலாபுர் என்ற பட்டிக்காட்டிற்கு வந்த போஸ்ட் மாஸ்டருக்குக் கிராம வாழ்க்கை ருசிக்கவே இல்லை. இந்தச் சிறுமியின் சேவையில்தான் சற்று ஆறுதலைப் பெறுகிறுர். நோய்வாய்ப்பட்டிருக்கையில் தமக்கு உள்ளன்புடன் தொண்டு புரிந்து, தம்மைத் தேற்றிய அந்த ரதன் மீது அவருக்கு பரிவு பிறக்கிறது: கணப்பொழுதில் அவர் கண்ணுக்கு அப்பெண் பூரணப்பொலிவுள்ள தாயாகவே மாறி விடுகிறுள்; இவ்வளவு இருந்தும், போஸ்ட் மாஸ்டர் கல்கத்தாவுக்குப் போகத் துணிகிறுர். அவருக்கு அந்த ஊரே பிடிக்கவில்லை. ரதன் தம்மிடம் காட்டும் அன்பை அவர் உணராமல் இல்லை. அவருடைய இதயத்துள் ஒரு மென்மையான இடத்தை இந்த ரதன் தொட்டு அசைத்துவிடுகிறுள்.

ரவீந்திரரின் கதைகளில் இந்த ரதனைப்போன்ற உன்னத குண சித்திரமே காணலாம். ஒரு சிறு நிகழ்ச்சியை வைத்து ஓர் அற்புதக் கதையை அல்லவோ படைத்துவிட்டார்? உண்மை வாழ்வில் மதிப்பிராத சிறு விஷயங்கள் கதையில் காணும் பொழுது என்ன ஜீவகளையுடன் திகழ்கின்றன! இக்கதையின் நிலைக்களனும், சாதாரணமான மலேரியா பீடிக்கும் வங்க நாட்டின் ஒரு கிராமமே. அங்கே வாழும், வீண் வேதனை கொள்ளும் ரதனின் சித்திரம் நம் இதயத்துள் பதிந்து விடு கிறதல்லவா!

இக்கதைகளை நாம் வெகுவாய்ப் பாராட்டுவதற்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு: ரவீந்திரருக்கு முன்னர் எளிய மக்கள், இலக்கியத்தில் இடமே பெறவில்லை. முதன் முதல் ரவீந்திரர்தாம் தம் கதைகளில் அவர்களுக்கு உரிய இடத்தைத் தந்தார். 'ரவீந்திரரின் கவனமெல்லாம் உயர் வகுப்பினர்பாலே சென்றது; ஏழை எளியவர்களை அவர் கவனிக்காதது அவருக்குள்ள பெருங்குறை' என்று சிலர் பழி சுமத்துவதைப் பொய்யென இக்கதைகள் கட்டாயம் தெளி வாக்கிவிடும். அவருடைய கதை இலக்கியத்தில், பத்ரவானின் நவாப் மகளுடன், கிரிபாலா, மிருண்மயி போன்ற நாட்டுப்புற மடந்தையரும் இடம் பெறுகின்றனர்: நயன்ஜோர் ஜமீன் தாரைப் போன்றவருடன் கீழ்ச்சாதி ருஇக்களும் வருகின்றனர்: கல்கத்தாவில் தெருவில் கூவிப் பழம் விற்கும் காபூல்காரன், பரீச்சில் சணல் மூட்டை அளக்கும் குமாஸ்தா - இப்படிப் பல வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவருடைய கதைகளில் நடமாடு கின்றனர். எவ்வகுப்பினர் பாலும் அவர் அன்பு கொண்டு ஒழுகினார். பெயர், ஊர் இல்லாத எளிய மக்களுக்கும் அவ ருடைய கதை இலக்கியத்தில் புக உரிமை இருந்தது.

அவருடைய கதைகளில் 'காபூல்காரன்' சிறந்த இடம் பெறுகிறது. இலக்கியத் தரத்திலும் இது உயர்ந்ததே. மினி என்ற வங்கச் சிறுமி ஆகார சோகாரையான அந்தக் காபூல் காரனுடன் மனம் விட்டுப் பயமின்றி நட்புக் கொண்டு பழகு கிறாள். தெருவில் தன் சரக்கைக் கூவிச் செல்லும்பொழுது அவனை அழைத்து மழலை பேசி மகிழ்விக்கிறாள். இருவருக்கும் சலிப்பே தட்டவில்லை. கதை என்னவோ சோக முடிவுடையது தான். உள்ளம் நெகிழ வைக்கும் வகையில் அவர் தம் கற்பனை உருவங்களை உண்மைக்கு ஏற்ப எவ்வளவு அற்புதமாகப் பின்னி வருகிறார்! அவ்வழகிய சிறுமி மினி, உலகத்தில் எத்தனையோ குடும்பங்களில் ஓடி விளையாடும் பெண்தான். அவளுடைய மழலைப் பேச்சும், அன்பு உள்ளமும் கரடுமுரடான அந்த மலை நாட்டான் இதயத்திலும் மென்மையை ஊறச் செய்து விடு

கின்றன. மினியை மணக்கோலத்தில் பார்க்கும்போது தன்னுடைய சொந்த மகளும் அவ்வாறுதானே வளர்ந்து பெரியவளாகி இருப்பாளென்ற வேதனையுடன், அவளைக் காணத் துடிக்கும் ஏக்கமும் காபூல்காரனைப் பற்றுகிறது.

இத்திரட்டில் வரும் ஒவ்வொரு கதையும் தனிச் சுவை பயப்பது; படித்து இன்புறக் கூடியது. அவற்றைக் குறித்து விரிவாய் ஆராய்வதற்கு இங்கு இடமில்லை. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

'மேக ஒ ரௌத்ர' (காரும் கதிரும்) என்ற கதையின் ஜோடனை அவ்வளவு நேர்த்தியாக அமையாவிடினும் இக்கதை, பல அருமையான வருணனைகளைக் கொண்டுள்ளது. இன வெறுப்புக் கொண்டவரையும், பதவிச் செருக்கால் வெறி பிடித்தவர்களையும் டாகுர் எவ்வளவு வெறுப்புடன் நோக்குகிறாரென்பது தெளிவாகும். மனித உரிமையைக் காத்து நிற்பவர் அவர். உலகத்தில் எந்த மூலையில் அநீதம் தலை விரித்தாடினாலும், அவர் தம் குரலை எழுப்பி அதைக் கண்டிக்காமல் விடவில்லை. இக்கதையில் வரும் மூன்று ஆங்கிலேயரைப்பற்றிய நிகழ்ச்சிகள் 1894-இலும், அதன் பின்னரும் பல ஆண்டுகள் வரை இந்தியா இருந்த அவகேடான நிலைமையையே சுட்டும்.

'ஸமாப்தி' (இனிது முடிந்தது) மற்றோர் அழகிய கதை. அடங்காப் பிடாரியாகத் திரிந்த சிறுமி மிருண்மயி, அன்பும் அடக்கமும் கொண்ட ஓர் அழகிய பெண்ணாக மாறுவதைப் பார்க்கிறோம். மனத்தத்துவத்துடன் இனிமை தரும் நகைச் சுவையையும் கலந்து இதை அற்புதமாகச் சமைத்துவிட்டார்.

'திருஷ்டிதான்' (கண் கொடை): குருட்டு மனைவி தன் கண்ணைக் கெடுத்த கணவன்பால் வைக்கும் மாறுத அன்பும், அக்கணவனின் கரவும் துரோகமும் ஒன்றுக்கொன்று அணித்தாக எவ்வளவு பளிச்சென்ற உண்மையுடன் திகழ்கின்றன! வேறு சாமானிய எழுத்தாளன் கையாக இருந்தால் இந்தக் கதையின் தரம் குன்றிப் போயிருக்கும். எடையில் ஏற்றத் தாழ்வின்றி டாகுர் இதை உயர்தரச் சித்திரமாக்கிவிட்டார்!

'அதிதி' என்ற கதையில் வரும் தாராபதன் என்ற பையன் டாகுர் உருவாக்கிய அழியாத பாத்திரங்களில் ஒருவன். அவன் வயதுள்ள பிள்ளைகளிடம் என்னவெல்லாம் தென்படுமோ அவ்வரிய பண்பினால் எவர் மனத்தையும் அவன் ஈர்த்துவிடுகிறான். யாரிடமும் அவன் ஒன்றுபவன் அல்ல; இயற்கையின் வழிப்போக்கன்; ஒரே இடத்தில் அவன் மனம் நிலைக்கவில்லை. எதிலும் அவனுக்கு அக்கறை இல்லை. இயற்கை அன்னையின் தாட்சிண்ணியத்தில் வளர்ந்த பிள்ளை. அவனுக்குப் பிடித்த மனிதர் எவருமே இல்லை; அவன்

மனத்தை மயக்கிப் பிடிக்கும் இடமோ இல்லை. தன்னைச் சுற்றி வளைக்கும் அன்பின் வலையிலிருந்து திடுமென அவன் ஒரு நாள் மறைந்துவிடுகிறான்.

இந்தத் தொகுதியில் அருவ விஷயங்களைக் குறிக்கும் மூன்று கதைகள் உள்ளன: 'க்ஷுதித பாஷாண்' (கல்லின் வேட்கை), 'நிஷீதே' (நள்ளிரவில்), 'மாஸ்டர் மஷாய்' என்பவற்றில் முதலாவது தலை சிறந்தது. தம் கற்பனை வண்ணத்தை யெல்லாம் இதில் கொட்டியுள்ளார் டாகுர். கவிதை போல் தொனிக்கும் பல வருணனைகளை இதில் காணலாம். எல்லையற்ற இன்பம், கொடுமை, அவலம், தணியாத வேட்கை இவை மலிந்த பழங்காலத்துச் சித்திரம் இது. மொகல் காலத்துப் பாழும் மாளிகை ஒன்றில் இந்தக் காட்சி அமைகிறது. அந்தக் கல்மாளிகை மீண்டும் உயிர் பெற்று விடுகிறது. நிகழ்காலமும் இறந்த காலமும் இதில் கைகோத்துச் செல்கின்றன. ஒளியும் நிழலும் ஆடும் ஒரு விந்தை உலகினை இங்கே காண்கிறோம். தீராத ஆசைகள் பேயென உலாவுகின்றன; மயிர்க்கூச்செறியும் காட்சிகள்.

ரவீந்திரரின் இடைக்காலக் கதைகளில் 'நஷ்டநீட' (சிதைந்த கூடு), 'ராஸமணிர் சேலே' (ராஸமணியின் பிள்ளை) என்பவை குறிப்பிடத் தகுந்தவை. 1911-இல் 'ராஸமணியின் பிள்ளை' வெளியாகியது. இக்கதையில் வரும் நடை மிகவும் விறுவிறுப் புடையது. வறுமையில் ஆழ்ந்த ஒரு பணக்காரக் குடும்பத்தின் சோக முடிவான சித்திரத்தையே இதில் காண்கிறோம். அக் குடும்பம் தலைதூக்குவதற்கு நம்பிக்கை தரும் வெளிச்சமான ஒரே மகன் காளிபதனின் மரணத்தால் அந்தக் குலம் அவிந்து விடுகிறது. உடல் மெலிந்தாலும் உள்ளம் மெலிவடையாதவன் காளிபதன். அன்னையிடந்தான் என்ன பற்றுதல் அம்மகனுக்கு! பொறுமை மிகுந்த ராஸமணியை மறக்கவே முடியாது.

'ஸபுஜ் பத்ர' பத்திரிகையில் வெளியான சிறுகதைகளில் எளிய கிராம மக்களையோ, அதன் சூழ்நிலையையோ காண முடியாது. அக்கதைகளில் நடுத்தர வகுப்பினரின் சமூகப் பிரச்னைகளையே காணலாம். பெண்கள் குடும்பத்தில் படும் தொல்லை, கணவனுக்கு அடிமைபோல் வாழ்வது, அவமானத்துக்கு உள்ளாவது - இவை போன்ற சமூக ஊழல்களை அம்பலப் படுத்தும் வகையில் கதைகளைப் புனைந்துள்ளார். 1914-இல் வெளியான 'ஸ்த்ரீர் பத்ர' (மனைவியின் கடிதம்) என்ற கதை அவருடைய கருத்துக்களை வெளியிடுகிறது. பதினைந்து ஆண்டுகள் குடும்பத்தில் உழன்றுவிட்டு, மிருணாள் கடைசியில் தன் பெண்மைக்குரிய மதிப்பை உணர்ந்து வெளியேறுகிறாள். தன்னலம், பொய்ம்மை, இழிவு இவை மலிந்த ஆடவர்களை

வெறுக்கிறாள்; அவளுடைய ஆத்மா விழிப்புற்று, இந்த அநீதத்தை எதிர்த்து நிற்கிறது. வீட்டுச் சிறையிலிருந்து வெளியேறும் வாய்ப்புக் கிடைத்ததும் சுதந்தரப் பெண்ணாகிறாள். கடித உருவில் வரும் இக்கதை, உலக ஆடவருக்கு ஒரு பெண் விடும் சவாலாக அமைகிறது.

இக்காலத்துக் கதைகளின் சுருதி வேறுவிதமாகவே ஒலிர்கிறது. சமூகத்தில் பெண்மைக்குரிய இடம், அவர்கள் படும் அவதி - இவைபற்றியே டாகுர் தம் கவனத்தைச் செலுத்தியிருப்பது நன்கு விளங்கும்.

ரவீந்திரரின் கதைகளுக்கு முகவுரையே தேவை இல்லை. தமக்குள்ள சிறப்பினை அக்கதைகளே கூறிவிடுகின்றன. மொழி பெயர்ப்பானாலும் இக்கதைகளில் காணும் ஓர் அழகு வாசகர் இதயத்தைக் கவர்ந்து விடுமென்பதில் ஐயமே இல்லை; மனிதப் பண்பு நம் இந்தியாவில் எப்பகுதியிலும் ஒரே மாதிரி என்பதை இக்கதை மூலம் நாம் உணரலாம். வங்க மண்ணில் தோன்றிய ஆடவரும் பெண்டிரும், நமக்கு நெருங்கியவர்களாகவே மாறிவிடுகின்றனர்.

சோமநாத மைத்ர

ரவீந்திரர் கதைத் திரட்டு

போஸ்ட் மாஸ்டர்

முதலில் வேலையில் சேர உலூபுர்க் கிராமத்திற்குப் போஸ்ட் மாஸ்டர் வரவேண்டியதாயிற்று. சாதாரணமான கிராமந்தான். அருகே ஓர் அவுரிக் கிடங்கும் இருக்கிறது. அதன் துரை பலவாறு முயன்று இப்புதிய தபால் நிலையத்தை ஏற்படுத்திக்கொண்டார்.

எங்கள் போஸ்ட் மாஸ்டர் கல்கத்தாவைச் சேர்ந்தவர். தண்ணீரில் இருக்கும் மீனை மேட்டில் எடுத்துப்போட்டால் எப்படித் துடிக்குமோ அப்படிப்பட்ட நிலை, பட்டிக்காட்டுக்கு வந்ததும் போஸ்ட் மாஸ்டருக்கு ஏற்பட்டது. இருண்ட வீடு ஒன்றில் அவருடைய அலுவலகம். அருகிலேயே பாசிபிடித்த குளம். அதைச் சுற்றி நாலு பக்கமும் புதர். அவரித் தொட்டிக் குமாஸ்தா போன்ற உத்தியோகஸ்தர்களுக்குப் பேச அவகாசமே இராது; அவர்கள் பெரிய மனிதர்களோடு பழகத் தகுதி அற்றவர்கள்.

முக்கியமாகக் கல்கத்தா ஆசாமிகளுக்கு நாலு பேரோடு பழகத் தெரியாது. பழக்கம் இராத இடத்துக்குப் போனால் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண் டிருப்பார்கள். ஆகவே, இருக்கும் ஜனங்களோடு சேர்ந்து பழக அவரால் முடியவில்லை. வேலையோ அதிகமில்லை. எப்போதாவது ஒன்றிரண்டு கவிதைத் துணுக்குகள் எழுத முயல்வார். அதன் நடையைப் பார்த்தால், 'நாள் முழுவதும் இளந்தளிர்களின் சலசலப்பைக் கேட்டுக்கொண் டிருந்தாலும், வானிடை உலவும் மேகத்தைப் பார்த்துக்கொண் டிருந்தாலும் போதுமே இந்த வாழ்க்கைக்கு! என்ன இன்பம்!' என்ற எண்ணங்கள் தொனிக்கும். ஆனால் கடவுளுக்குத்தான் தெரியும், அதன் உள்ளுறை! அராபிக் கதையில் வரும் பூதம் ஏதாவது சட்டென ஒரே இரவிற்குள் தளிர் கொஞ்சிடும் மரக்கொம்பை யெல்லாம் வெட்டி வீழ்த்தி நல்ல சாலையை உண்டாக்கி, வரிசை வரிசையாக மாடி வீடுகள் எழுப்பி, மேகங்களைக் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிடுமேயானால், வாடிச் சாகும் இந்த நகர இளைஞர் புத்துயிர் பெற்றுப் போவாரே! போஸ்ட் மாஸ்டரின் வருவாய் சொற்பந்தான். தாமே சமைத்துச் சாப்பிடவேண்டும். கிராமத்தில் கதியற்ற ஒரு

சிறுமி அவருக்குப் பணிவிடையெல்லாம் செய்வாள். அவளுக்கும் சாப்பிடக் கொஞ்சம் கிடைக்கும்: அவள் பெயர் ரதன்; வயது பன்னிரண்டு, பதின்மூன்று இருக்கும். இன்னும் மணம் ஆகவில்லை.

சாயங்காலம், கிராமத்தில் தொழுவங்களில் புகை சுழன்று எழும். தோப்புக்களில் விட்டில்கள் இரைச்சலிடும். தொலைவில் கிராமத்துக் கஞ்சா அடிக்கும் ஆண்டிகளின் கூட்டம் கஞ்சிராவையும் ஜால்ராக்களையும் கொட்டி உரக்கப் பாடும். இருண்ட தாழ்வாரத்தில் தனிமையாக உட்கார்ந்து மரங்களின் அசைவைக் கண்ணுற்றும் கவிஞரின் உள்ளமும் சற்றுத் துணுக்குறும். அச்சமயத்தில் உள்ளே ஒரு மூலையில் மெல்லிய ஒளி தரும் விளக்கை ஏற்றிவிட்டுப் போஸ்ட் மாஸ்டர், ''ரதன்'' என்று கூப்பிடுவார். ரதன் வாயிலருகே உட்கார்ந்து இதற்காகத்தான் காத்திருப்பாள். ஆனால் முதல் தடவை கூப்பிடும் பொழுதே வர மாட்டாள். ''என்ன பாபு, கூப்பிட்டீர்களா?'' என்பாள்.

போஸ்ட் மாஸ்டர்: என்னடி செய்கிறாய்?

ரதன்: சமையலறைக்கு அடுப்பு மூட்டப் போகவேணும்.

போஸ்ட் மாஸ்டர்: உன் சமையல் அறை வேலை எல்லாம் அப்புறம் ஆகட்டும். ஒரு தடவை ஹுக்காவை நிரப்பிக் கொடு.

சற்று நேரத்திற்கெல்லாம் ஹுக்காவில் தணலைப் போட்டு ஊதிக்கொண்டே ரதன் உள்ளே நுழைவாள். ஹுக்காவை வாங்கிக்கொண்டு போஸ்ட் மாஸ்டர், ''ரதன், உன் அம்மாவை நினைவு இருக்கிறதோ?'' என்று கேட்பார். அது பெரிய விஷயம்: சில ஞாபகம் இருக்கும்; சில இரா. தாயை விடத் தகப்பனாரே அவளை அதிகமாக நேசித்தார். அவரைப் பற்றிய ஞாபகம் இருந்தது: நாள் முழுவதும் உழைத்துவிட்டு அவர் சாயங்காலமாக வீடு திரும்புவார். அக்காலத்து நினைவுகள் சில அவள் உள்ளத்தில் சித்திரம்போல் பளிச்செனப் பதிந்திருந்தன. பேசிக்கொண்டே ரதன் போஸ்ட் மாஸ்டரின் காலடியில் தரையில் உட்காருவாள். அவளுக்கு ஒரு சின்னத் தம்பி இருந்தான். வெகு நாளைக்கு முன் மழைக்காலத்தில் ஒரு நாள் ஒரு குட்டையின் கரையில் மரக்கிளையின் மிலாறு ஒன்றைப் பிய்த்துத் தூண்டிலாகப் பாவித்து மீன் பிடிப்பது போல விளையாடினார்கள். அந்தச் சின்ன விஷயமே அடிக்கடி அவள் உள்ளத்தில் மூண்டெழும். இவற்றைப்பற்றிப் பேசுகையிலே சில நாள் வெகு நேரமாகிவிடும். பேச்சுச் சுவாரசியத்தில் போஸ்ட் மாஸ்டருக்குச் சமையல் செய்து சாப்பிட வேண்டுமே என்ற நினைவே இராது. காலையில் சமைத்தது ஏதாவது இருக்கும். ரதன் பரபரவென்று அடுப்பை மூட்டி

ரொட்டி தட்டுவாள். இருவரும் அதைத் தின்று அன்றை இரவைக் கடத்துவார்கள்.

ஒவ்வொரு நாள் அந்திப் பொழுதில், அந்தக் குடிசையின் வெளித் தாழ்வாரத்தில் ஒரு மூலையில் மரக் கட்டிலில் உட்கார்ந்து போஸ்ட் மாஸ்டர் தம் வீட்டு விஷயத்தை எடுப்பார்: தம் சிறிய தம்பி, தாய், தமக்கை இவர்களைப் பற்றித்தான்! வேறு இடத்தில் தனியாக இருக்கையில் இந்த நினைவுகள் துக்கத்தைக் கிளறிவிடும். நெருங்கிய நண்பர்களிடங்கூட மனத்தை விட்டுச் சொல்லாத குடும்ப விஷயங்களைப்பற்றி, ஒன்றும் அறியாத அச்சிறுமியிடம் சொல்லுவார். இந்தப் பழக்கத்தினால் அவளும் அவருடைய வீட்டு மனிதர்களை அம்மா, அக்கா என்று குறிப்பிடத் தொடங்கினாள். அவர்களை அச்சிறுமி பார்த்ததில்லை. ஆயினும், அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை அவள் தன் கற்பனைத் திரையில் கண்டாள்.

மழைக் காலத்தில் ஒரு நாள், வானில் மேகங்கள் எங்குமே இல்லை. உஷ்ணமான காற்று வீசிக்கொண்டிருந்தது. வெயில் உறைக்கக் காய்ந்தது. ஈரப் புல் உலரும் வாசனையும் மரங்களில் ஒழுகும் பிசினுடைய மணமும் பரவியிருந்தன. மாநிலம் அலுப்புற்று விடும் மூச்சு உடம்பில் வந்து படுவது போல் இருந்தது. எங்கேயோ ஒரு பறவை நடுப்பகலில் விடாப் பிடியாகக் கூவிக்கொண்டிருந்தது. இயற்கை அம்பலத்தில் அம்முறையீடு நெஞ்சை உருக்கும்வண்ணம் ஒலித்தது. போஸ்ட் மாஸ்டருக்கு அச்சமயம் கையில் ஒரு வேலையும் இல்லை. அன்று மழையில் குளித்த மெல்லிய தளிர்களின் அசைவும், பங்கமுற்ற மேக நிரை வெயிலில் வெண்மேனி பெற்று உலவும் காட்சியும் அநுபவிக்கத் தகுந்தனவாக இருந்தன. போஸ்ட் மாஸ்டர் இந்த இயற்கை எழிலைக் கண்டு களிக்காமற் போகவில்லை. இந்த மாதிரி சமயங்களில் தம்முடன் அநுபவிப்பதற்கு நெருங்கிய ஆத்மா ஒன்று பக்கத்தில் இல்லையே என்ற வருந்தந்தான்; இதயத்துடன் ஒன்றி வாழும் ஓர் ஆள் இல்லாத குறையே. விடாமல் கூவும் அப்பறவைக்கும் இவ்வேதனைதானோ? மனிதர் இராத நிழல் கவிந்த இந்தப் பகற் பொழுதில் இலைகளின் சலசலப்பில் இந்த ஏக்கமே தொனிப்பதுபோல் இருந்தது. அந்தச் சிற்றூரில் குறைவான ஊதியத்தில் காலங் கடத்தும் போஸ்ட் மாஸ்டரின் மனத்துள், ஒய்ந்த பகல் வேளையில், அத்தகைய பாவனைகள் மெல்ல மிதந்து வந்தன.

போஸ்ட் மாஸ்டர் பெருமூச்செறிந்து, ''ரதன்'' என்று கூப்பிட்டார். அவள் அப்பொழுது கொய்யா மரத்தின்கீழ்க்

காலே நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொய்யாக் காய் தின்று கொண்டிருந்தாள். எசமானர் கூப்பிடுவதைக் கேட்டு ஓடி வந்தாள். இரைக்க இரைக்க, ''பாபு, கூப்பிட்டீர்களா?'' என்றாள். போஸ்ட் மாஸ்டர், ''உனக்குக் கொஞ்சம் கொஞ்ச மாகப் படிக்கக் கற்றுக்கொடுக்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பகலில் அவளுக்கு ஆனு ஆவன்னு கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். இவ்வாறு சில நாட்களுக்குள் ளேயே அக்ஷராப்பியாசம் முடிந்தது.

ஆவணி மாதத்தில் மழைக்கு ஒரு கணம் ஓய்வில்லே. வாய்க்கால், ஏரி, சாக்கடையிலெல்லாம் நீர் நிரம்பிக் கிடந் தது. நாள் முழுவதும் மழையின் ஓசையும், தவளேயின் இரைச்சலுந்தான். கிராமத்துச் சாலேயில் ஜனங்களின் நட மாட்டம் வெகுவாக நின்றுபோய்விட்டது. படகில்தான் சந்தைக்குப் போகவேண்டி யிருந்தது. ஒரு நாள் காலேயி லிருந்தே மழை பலமாகப் பெய்தது. போஸ்ட் மாஸ்டரின் மாணவி வெகு நேரம் வாயிலருகே காத்துக்கொண் டிருந்தாள். ஆனல் வழக்கப்படி போஸ்ட் மாஸ்டர் கூப்பிடாமற்போகவே தன் புத்தகங்களுடன் உள்ளே நுழைந்தாள். போஸ்ட் மாஸ்டர் கட்டிலின்மேல் படுத்திருந்தார். இளேப்பாறு கிறாரோ என்று நினேத்து ஓசைப்படாமல் வெளியே செல்லத் தொடங்கினுள். ''ரதன்'' என்று போஸ்ட் மாஸ்டர் கூப் பிடவே, படபடப்புடன் திரும்பி, ''பாபு! தூங்கிக்கொண் டிருந்தீர்களா?'' என்றாள். போஸ்ட் மாஸ்டர் நடுங்கும் குரலில், ''உடம்பு சரியாக இல்லே. என் நெற்றியைத் தொட்டுப் பார்'' என்றார். துணேக்குப் பக்கத்தில் எவரும் இராத அந்தத் தனி வாழ்வில், கொட்டும் மழையினுல் நோயுற்று உடல் மெலிந்திருக்கும் நிலேயில், யாருடைய பணிவிடை யையோ எதிர்பார்த்தது அவர் உள்ளம். ஜுரத்தால் கொதிக்கும் நெற்றிக் கட்டில் சங்குவளே பூண்ட கரங்களின் மெல்லிய பரிசத்தை நாடியது அவர் உடல். இந்தத் தனிமை யில் அன்னேயோ தமக்கையோ அருகே உட்கார்ந்திருக்க மாட் டார்களா என எண்ணினர். இந்த இடத்தில், வெளியூரில் தனி வாழ்வு நடத்தும் அவர் விருப்பம் வீணுகவில்லே. சிறுமி ரதன் சிறு பெண்ணுக இல்லே. அந்தக் கணமே அன்னேயின் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். வைத்தியரை அழைத்து வந்தாள். குறித்த காலத்தில் மாத்திரை கொடுத்தாள். இராத்திரி முழுவதும் தலேமாட்டில் உட்கார்ந்திருந்தாள். கஞ்சி போட்டுத் தந்தாள். ''இப்போது எப்படி இருக்கிறது. பாபு?'' என்று அடிக்கடி கேட்டுக்கொண் டிருந்தாள்.

போஸ்ட் மாஸ்டர் இளேத்துப் போய்ப் படுக்கையிலிருந்து

எழுந்தார். எப்படியாவது இங்கிருந்து மாற்றலாகிவிட்டால் போதும் என்று தோன்றியது அவருக்கு. தாம் இருக்கும் இடத்தின் நிலைமை உடல்நிலைக்கு ஒவ்வாது என்று எடுத்துக் காட்டி மேலதிகாரிகளுக்கு அன்றைய தினமே எழுதி மாற்றலுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்.

ரதன் கதவுக்கு வெளியே தன் பழைய இடத்திற்கு வந்து விட்டாள். ஆனால் முன்போல் போஸ்ட் மாஸ்டர் அடிக்கடி அவளைக் கூப்பிடுவதில்லை. நடுநடுவே எட்டிப் பார்ப்பாள். அவர் சாய்வு நாற்காலியிலாவது கட்டிலிலாவது யோசனையில் ஆழ்ந்து படுத்திருப்பார். ரதன் அவர் கூப்பிடுவதற்காகக் காத்திருப்பாள். அவர் தாம் போட்ட மனுவுக்கு என்ன பதில் வருமோ என்று திகிலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருப்பார். சிறுமி தன் இடத்திலேயே உட்கார்ந்து பழைய பாடத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண் டிருப்பாள். அவர் கூப்பிட்டால் என்ன செய்வது? எல்லாம் மறந்து போய்விடுமோ என்ற சந்தேகம் அவளுக்கு.

பதினைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் சாயங்காலம் போஸ்ட் மாஸ்டர் அவளை அழைத்தார். பெருமையுடன் அவள் உள்ளே நுழைந்து, ''என்னைக் கூப்பிட்டீர்களா, பாபு?'' என்றாள்.

போஸ்ட் மாஸ்டர்: நாளைக்கே நான் போகிறேன், ரதன்.

ரதன்: எங்கே போகிறீர்கள், பாபு?

போஸ்ட் மாஸ்டர்: வீட்டுக்குப் போகிறேன்.

ரதன்: எப்பொழுது வருவீர்கள்?

போஸ்ட் மாஸ்டர்: வரவே மாட்டேன் இனிமேல்.

ரதன் மேலே ஒன்றும் கேட்கவில்லை. போஸ்ட் மாஸ்டர் தாமாகவே அவளிடம் செய்தியைச் சொன்னார். தாம் மாற்றலுக்காக விண்ணப்பம் செய்தது, அதை அவர்கள் நிராகரித்தது எல்லாவற்றையும் சொன்னார். ஆகவே, வேலைக்குச் சிட்டு எழுதிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போகிறாராம்.

வெகு நேரம் இருவரும் பேசவில்லை. மினுக்கு மினுக்கென்று விளக்கு எரிந்துகொண் டிருந்தது. ஓர் இடத்தில் வீட்டின் ஓட்டைக் கூரை வழியாக மழைநீர் தரையில் டப்டப் என்று சொட்டிக்கொண் டிருந்தது. சற்று நேரங் கழித்து ரதன் மெல்ல எழுந்து ரொட்டி தட்டச் சமையலறைக்குச் சென்றாள். மற்றை நாட்களைப் போலப் படபடப்பு அவளிடம் காணவில்லை. நடுநடுவே ஏதேதோ சிந்தனைகள் எழுந்தன. போஸ்ட் மாஸ்டருக்கு உணவு தயாரானதும் சிறுமி அவரைச் சட்டென்று, ''என்னையும் உங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறீர்களா, பாபு?'' என்று கேட்டாள்.

போஸ்ட் மாஸ்டர் சிரித்தபடி, ''அது எப்படி முடியும்?'' என்றார். ஏன் அவளை அழைத்துப் போக முடியாது என்றெல்லாம் சொல்லவேண்டியது அவசியமாகப் படவில்லை அவருக்கு.

இரவு முழுவதும் நனவிலும் கனவிலும் அச்சிறுமியின் காதில், ''அது எப்படி முடியும்?'' என்று அவர் சிரித்துக் கொண்டே சொன்னது கேட்டுக்கொண் டிருந்தது.

போஸ்ட் மாஸ்டர் காலையில் எழுந்து பார்க்கும்பொழுது, குளிக்க நீர் தயாராக இருந்தது. கல்கத்தா வழக்கப்படி அவர் விளாவிய நீரில்தான் குளிப்பார். அவர் எப்போது புறப்படுகிறார் என்று அவளால் கேட்க முடியவில்லை. ஒரு வேளை விடியற்காலையிலே போக வேண்டியிருக்குமோ என்று நினைத்து இரவோடு இரவாக ரதன் ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்திருந்தாள். குளித்தானதும் ரதனைக் கூப்பிட்டார். ரதன் ஓசைப்படாமல் அவரது கட்டளையை எதிர்பார்த்து அவர் முகத்தை நோக்கினாள். அவர், ''ரதன்! என் இடத்திற்கு வரும் ஆளிடம் சொல்லிவிட்டுப் போகிறேன். அவர் என்னைப் போலவே உன்னிடம் பட்சமாக இருப்பார். நான் போகிறேன் என்று நீ யோசிக்க வேண்டாம்'' என்றார். இந்தச் சொற்கள் அன்பும் பரிவும் கொண்டு எழுந்தன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பெண்ணின் உள்ளத்தை யார் அறிவார்? ரதன் எத்தனை தடவை அவருடைய திட்டுக்களையெல்லாம் பொறுத்து வந்திருக்கிறாள்! ஆனால் இன்று அவருடைய நயமான பேச்சுக்கள் அவளுக்குப் பொறுக்கவில்லை. ஒரேயடியாகத் துக்கம் பொங்கி எழ அழுதுகொண்டே, ''வேண்டாம்; என்னைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் சொல்ல வேண்டாம்; நான் இங்கே இருக்க மாட்டேன்'' என்றாள். ரதன் இப்படி இருப்பாள் என்று போஸ்ட் மாஸ்டர் நினைக்கவே இல்லை. பிரமித்துப் போனார்.

புதிய போஸ்ட் மாஸ்டர் வந்தார். அவரிடம் பொறுப்பை ஒப்பித்துவிட்டுப் பழைய போஸ்ட் மாஸ்டர் புறப்பட்டார். போகும்பொழுது ரதனைக் கூப்பிட்டு, ''ரதன், உனக்கு ஒன்றும் தர முடியவில்லை. இருந்தாலும், போகும்போது கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டுப் போகிறேன். அதை வைத்துக் கொண்டு காலங் கடத்து, அம்மா'' என்றார். வழிச் செலவுக்குச் கொஞ்சம் வைத்துக்கொண்டு, தம் சம்பளம் முழுவதையும் பையிலிருந்து வெளியே எடுத்தார். ரதன் தரையில் விழுந்து அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''பாபுஜீ! உங்கள் காலில் விழுகிறேன். எனக்கு ஒன்றும் தரவேண்டாம்; எனக்காக ஒருத்தரும் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறியவாறு ஒரே தாவலில் அங்கிருந்து ஓடிவிட்டாள். போஸ்ட் மாஸ்டர் பெருமூச்செறிந்து, ஒரு கையில் கான்வாஸ் பையும்,

தோளில் குடையும், இன்னும் ஒரு கையில் நீலமும் வெளுப்புமாகக் கோடு போட்ட பெட்டியும் எடுத்துக்கொண்டு படகை நோக்கிச் சென்றார்.

படகில் ஏறிக்கொண்டார். படகும் நகர்ந்தது. மழையினால் பெருக்கெடுத்த நதியின் நீர்த்திரள் பொங்கி எழும் கண்ணீரெனத் ததும்பியது, நாற்புறமும். அப்போது இதயத்துள் ஒரு வேதனையிருள் கவிந்திருந்தது. சாமானியமான ஒரு கிராமப் பெண்ணின் துயர் நிரம்பிய முகத்தில் உலகின் வருத்தமெல்லாம் திரண்டிருந்தன. திரும்பிப் போய், உலகத்தின் மடியிலிருந்து நழுவிவிட்ட அந்த அநாதைச் சிறுமியைக் கூடவே அழைத்துச் செல்ல வேண்டுமென்ற ஓர் எண்ணம் வந்தது அவருக்கு. ஆனால் படகோட்டிகள் பாயை விரித்து விட்டார்கள்.

ஆற்றுநீர் கடுவிசையாக ஓடியது. படகும் துள்ளிக் கிராம மயானத்தைக் கடந்து ஏகியது. நதியோடு இழைந்து செல்லும் ஒரு பிரயாணியின் உள்ளத்தில் ஓர் உண்மை புலனுயிற்று. வாழ்வில் இதைப் போல் எத்தனையோ பிரிவின் துயரங்கள் ஏற்படுவது இயல்புதானே? திரும்பித்தான் என்ன பலன்? இந்த உலகில் யார் யாருக்கு உறவு?

ஆனால் ரதனுடைய உள்ளத்தில் இந்த மாதிரி வேதாந்தம் தோன்றவில்லை. தபால் நிலையத்தைச் சுற்றி நாலு பக்கமும், கண்களில் நீர் ததும்ப அலைந்தாள். அந்த எண்ணத்திலே இந்த இடத்தைவிட்டு நகர அவளால் முடியவில்லை. அடபேதை மனமே! பிரமை கொஞ்சத்தில் விலகுவதில்லை. ஆறுதல் நிதானமாகவே மூளையில் ஏறுவது வழக்கம். பொய்யான மாயை, எதிரே அத்தாட்சி இருந்தும், அதை நம்பாமல் நம்பிச் கையை இரு கையாலும் இதயத்தோடு தழுவிக்கொண்டுதான் நிற்கிறது. ஒரு நாள் இதய ரத்தத்தையெல்லாம் குடித்து விட்டு அது ஓட்டம் பிடிக்கிறது. அப்பொழுது புத்தி வருகிறது. மீண்டும் பழைய பாசத்தின் மேலே நாட்டம் செல்கிறது. அந்த வலையில் சிக்கி மனம் அல்லலுறுகிறது.

ஓர் இரவு

சுரபாலாவும் நானும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். எல்லா விளையாட்டிலும் எனக்குத் துணையாக இருப்பாள். கணவன் மனைவியாகவும் விளையாடியிருக்கிறோம். அவர்கள் வீட்டிற்கு நான் போகும்போதெல்லாம், சுரபாலாவின் தாய் என்னை அன்புடன் அழைப்பாள். எங்கள் இருவரையும் சேர்ந்தாற்போல் நிற்க வைத்து, ''ஆகா! சரியான ஜோடி'' என்று தனக்குத் தானே சொல்லிப் பூரித்துப் போவாள்.

அப்போது அறியாத வயது எனக்கு. ஆனால் அவள் சொன்னதன் உட்கருத்துப் புரியாமல் போகவில்லை. எல்லாரையும்விடச் சுரபாலா விஷயத்தில் உரிமை எனக்கே அதிகம் என்ற எண்ணம் வேரூன்றிவிட்டது. அந்த உரிமையால் வெறி தலைக்கேறி அவளைப் பலவிதத்திலும் மிரட்டி எனக்கு அடங்கும்படி செய்வேன். பாவம்! அவளும் தொல்லைகளைப் பொறுத்துக்கொண்டு நான் இடும் ஏவல்களைச் சரிவரச் செய்து முடிப்பாள். சச்சரவே அவளுக்குப் பிடிக்காது. அமைதியை விரும்பும் இயல்புடையவள். நல்ல அழகியென்று ஊரார் அவளைக் கொண்டாடியபோதிலும் ஒரு முரட்டுப் பையன் கண்ணில்மட்டும் அந்த அரிய லாவண்யம் படவில்லை. 'சுரபாலா எனக்கு அடிபணிந்து நடக்கவேண்டியே பிறவி எடுத்திருக்கிறாள்' என்பது என் எண்ணம். அதனாலேயே அவள் என் அலட்சியத்திற்கு ஆளானாள்.

என் தகப்பனார் சௌதுரி - ஜமீன்தாரின் கீழ் மணியம் வேலை பார்த்து வந்தார். எனக்கு உரிய வயது வந்து, கொஞ்சம் கல்வி கற்றதும் என்னை ஜமீன்தாரின் கச்சேரியிலோ சிரஸ்தேதாரின் கச்சேரியிலோ வேலையில் அமர்த்த வேண்டுமென்ற ஆசை அவருக்கு. ஆனால், எனக்கோ உள்ளூற வெறுப்பு. எங்கள் ஊர் நீலரதன் கல்கத்தாவுக்கு ஓடிப் போய், நன்றாகப் படித்துவிட்டுக் கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கிறான். நல்ல செல்வாக்கு. எனது லட்சியமும் அந்தச் சிகரத்தையே எட்டத் தாவியது. கலெக்டரின்கீழ் இராது போனாலும் ஜில்லாக் கோர்ட்டு நீதிபதிக்காவது முக்கிய குமாஸ்தாவாக இருக்க வேண்டுமென்று மனத்துள் உறுதி செய்துகொண்டேன்.

என் தந்தை மேற்சொன்ன கோர்ட்டுப் பேர்வழிகளிடம் அதிக மதிப்பு வைப்பவர். அவர் பல சந்தர்ப்பங்களில் காரியம் கைகூடுவதற்குத் தூக்குத் தூக்காகக் காய்கறியும், கூடை கூடையாக மீனும் இந்தக் குட்டித் தெய்வங்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தியதை நான் சிறு வயது முதற்கொண்டு அறிந்திருக்கிறேன். இதனாலேயே கோர்ட்டில் பேனா ஒட்டும் சிறிய குமாஸ்தா - ஏன், பணத்திற்குப் பேய்போல் திரியும் டவாலிச் சேவகர்கள்கூட - என்வரைக்கும் கௌரவம் நிர்ம்பியவர்களாகவே தோற்றினர். இவர்கள் அல்லவோ நம் நாட்டை ஆட்டிவைக்கும் சக்தி வாய்ந்த தேவதைகள்? முப்பத்து முக்கோடியென்ற குழுவில் சேர்ந்தவர்கள் இவர்களும்! காரியம் அநுகூலமாக வேண்டுமானால் சித்திவிநாயகரைவிட இவர்களுடைய தயைதான் முக்கியம். முன்னெல்லாம் விக்கினேசுவரருக்கு அப்பம், அவல், பொரி எல்லாம் நைவேத்தியம் செய்தார்கள். இந்தக் காலத்திலோ இவர்களுக்கு வெள்ளியப்பனுகப் படைக்கவேண்டியிருக்கிறது.

ஒரு நாள் நானும், அன்று நீலரதன் காட்டிய வழியே சிறந்தது என்று எண்ணி உற்சாகத்துடனே கிளம்பிவிட்டேன், கல்காத்தாவுக்கு. முதலில், எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன். அப்புறம் விஷயம் வெளிச்சமானதும் மாதந்தோறும் என் படிப்புச் செலவுக்கு ஏதாவது உதவி அப்பாவிடமிருந்து வரும். நானும் கண்ணுங் கருத்துமாய்ப் படிக்கத் தொடங்கினேன்.

அதோடு நிற்கவில்லை. நான் பல சங்கங்களில் சேர்ந்து பல வகை மனிதர்களுடன் பழகலானேன். நாட்டுக்காக உயிரைத் துறக்கவேண்டிய அவசியம் இருப்பின் அத்தகைய வீரச் செயலை எப்படி நடத்திக் காட்டுவது என்பதுதான் எனக்குப் புரியாமல் இருந்தது. காரணம், வழிகாட்டச் சங்கத்து நண்பர் எவரும் முன் வராததுதான்.

ஆனால் என் ஆர்வம் குறைந்துவிட்டதாக எண்ணுதீர்கள்! நாங்கள் 'நாட்டுப்புறத்தான்'களே; கல்கத்தாவில் ஊறி வளர்ந்த பிள்ளைகள்போல் எதைக் கண்டாலும் தூக்கி அடித்துப் பேசமாட்டோம். ஆகவே, எங்களுக்கு இருந்த ஆர்வம் திடமானது. எங்கள் சங்கத் தலைவர்கள் வாய் நீளமாகப் பேசுவதில் சமர்த்தர்கள். வெயிலில் திரிந்து ஒவ்வொரு வீடாக உண்டி குலுக்கிச் சந்தாச் சேர்ப்போம்; மகாநாடுகளுக்கு இரவு பகலாக உழைத்து அலங்காரமெல்லாம் செய்வோம்; எங்கள் மேய்க்கும் தளபதிமீது யாரேனும் இழுக்கான வார்த்தை சொல்லிவிட்டாலோ கச்சை கட்டிக்கொண்டு அடிதடிக்கு முந்துவோம். அத்தகைய லட்சணங்கள் பொருந்திய

எங்களைப் பார்த்து நகரத்துச் சீமான்கள் 'பட்டிக்காட்டான்' கள் என்று ஏன் திருநாமம் சூட்டமாட்டார்கள்?

சிரஸ்தேதாராக வேண்டுமென்ற நோக்குடன் வந்தேன். ஆனால் இயக்கங்களில் ஈடுபட்ட பின்னர் ஒரு மாஜினி, ஒரு கரிபால்டி (இத்தாலிய தேசநாயகர்கள்) இவர்களைப் போல் உன்னத நிலைக்கு வரவேண்டுமென்ற பித்தம் பிடித்துக்கொண்டது என்னை. இதே சமயம் என் தந்தையும் சுரபாலாவின் தகப்பனாரும் ஒன்றுகூடி அவளை எனக்கு மணம் செய்து வைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்துவந்தனர்.

கல்கத்தாவுக்கு ஓடி வந்தபோது எனக்கு வயது பதினேந்தே; சுரபாலாவுக்கு எட்டு. எனக்கு இப்போது பதினெட்டு; மணத்திற்குரிய காலம் கடந்து விடுகிறதென்று அப்பாவுக்கு ஆத்திரம். ஆனால் விவாகமின்றியே தேசத்திற்கென உழைத்துச் சாகவேண்டுமென்பது என் பிரதிக்ஞை ஆயிற்றே! படிப்பு முடியுமுன்னர்க் கல்யாணம் அவசியமில்லையென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன், அப்பாவிடம்.

இரண்டொரு மாதத்துக்கெல்லாம் வக்கீல் ராமலோசன பாபுவுக்குச் சுரபாலாவைக் கட்டிக் கொடுத்ததாகச் செய்தி வந்தது. சீர்குலைந்த பாரதத்தின் பொருட்டுச் சந்தாத் தொகை திரட்டுவதில் கருத்தாயிருந்தேன் நான், அச்சமயம். இந்தச் செய்தி எனக்குப் பிரமாதமாகத் தோற்றவில்லை.

பிரவேசப் பரீட்சையில் தேறினேன். காலேஜில் சேரலாம் என்றிருந்த சமயம் அப்பா திடீரெனக் காலமானார். குடும்பத்தில் நான் ஒரு தனி ஆள் அல்ல; ஒரு தாய், இரண்டு தங்கைமார் இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு என் தலையில் விழுந்தது. உயர்தரப் படிப்பை ஏறக் கட்டிவிட்டு உத்தியோக வேட்டைமேல் சென்றேன். மிகுந்த சிரமத்தின் பேரில் நோவாகாலி ஜில்லாவில் எங்கோ ஆரம்ப பாடசாலை ஒன்றில் எனக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. எனக்கு ஏற்ற வேலையே என்று ஆறுதல் அடைந்தேன். உபதேசங்கள் செய்தும், உற்சாகம் ஊட்டியும் மாணவர்களை வருங்காலத்துப் பாரதநாட்டு வீரசிகாமணிகளாக்குவது இலேசான பணியா?

ஆரம்பித்தேன், என் இயக்கத்தை. போகப் போக வருங்காலப் பாரதத்தைவிட வரப்போகும் பள்ளிப் பரீட்சையே முக்கியம் என்பதை உணர்ந்தேன். பிள்ளைகளுக்கு இலக்கணம், பீஜகணிதம் இவற்றைத் தவிர வேறு எந்த விதமான பாடம் கற்பித்தாலும் தலைமை ஆசிரியருக்குக் கோபம் வந்துவிடும். இரண்டொரு மாதத்துக்கெல்லாம் எவ்வளவு மும்முரமாக என் காரியத்தைத் தொடங்கினேனோ அவ்வளவு சப்பிட்டுப் போனேன்.

எங்களைப் போல் வாய் செத்த பிராணிகள்தாம் வீட்டு மூலையில் உட்கார்ந்தபடி பல வண்ணமான கற்பனைகள் புனை வார்கள். தொழிலில் இறங்கும்போது ஏரடிக்கும் மாடுக ளாகிறோம்.

இது போதாமல் எங்கள் வாலையும் ஒடித்துத் துன்புறுத்து கிறார்கள். இதைச் சகித்துக்கொண்டு, களிமண் உருண்டை புழுதியாகும் வரை மூன்று சால் ஓட்டவேண்டும். இவ்வளவு பாட்டிற்கும் அரை வயிற்றுத் தீனியோடு திருப்தி அடைந்து விடுகிறோம். குதித்து உற்சாகத்துடன் வேலை செய்வதற்குத் தெம்பு எங்கிருந்து வரும்?

பள்ளிக் கூரைக்கு யாராவது கொள்ளி வைத்து விடுவார் களோ என்ற திகிலினுல் முன் எச்சரிக்கையாக ஒவ்வோர் உபாத்தியாயரும் அவரவர் முறைப்படி பள்ளிக்கூடத்தில் படுத் துக்கொள்ள வேண்டுமென்று கட்டளை பிறந்தது. நான் தனி ஆள்; மனைவி மக்கள் இல்லாதவன். ஆகையால் என் மேலேயே இப்பொறுப்பை மெல்லப் போட்டுவிட்டார்கள். பள்ளிக்கூடத்து அறையின் ஒரு புறமாகத் தட்டியின் மறைவில் நான் வாசம் செய்ய வேண்டியதாயிற்று.

பள்ளிக்கூட விடுதிக்கும் ஊருக்கும் சற்றுத் தொலைவு. பக்கத்தில் ஒரு பெரிய குளம். அதன் சுற்றுப்புறம் எங்கும் கமுகு, தெங்கு, மாமரங்கள் அடர்ந்த தோப்பு. கட்டிடத்தின் மீது உராய்ந்தவண்ணம் வேப்ப மரங்கள் இரண்டு உறவாடித் தண்ணிழலைப் பரப்பின.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே; இத்தனை நாள்வரை அந்த விஷயம் குறிப்பிடத் தகுதியற்றது என்றே நினைத் திருந்தேன். இந்த ஊரிலேயே சர்க்கார் வக்கீலான ராம லோசன ராய் இருந்தார். அவருடைய வீடு பள்ளிக்கூடத்திற்கு வெகு தூரம் அல்ல. அவருடன் அவர் மனைவி - இளமையில் என்னுடன் விளையாடிய சுரபாலாதான் - இருந்தாள். அவ் வளவேதான் எனக்குத் தெரியும் அவர்களைப்பற்றி.

இரண்டொரு தடவை நான் ராமலோசன பாபுவைச் சந்தித்தும் இருக்கிறேன். அவருடன் பேசியதும் உண்டு. சுர பாலா எனக்குப் பழக்கமானவள் என்பது அவருக்குத் தெரி யுமோ தெரியாதோ? அதை அவரிடம் சொல்லிக்கொள்ள நானும் விரும்பவில்லை.

சுரபாலா ஒரு சமயம் என் வாழ்க்கையோடு பின்னிக் கிடந்தாள். பழைய விஷயத்தைக் குறித்து நான் மூளையைக் குழப்பிக்கொள்ளவில்லை. அந்த நினைவுகள் மங்கிவிட்டன.

ஒரு விடுமுறை நாளன்று ராமலோசன பாபுவைக் காண அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். வேறு எதற்கு?

அரட்டை அடிப்பதற்குத்தான். என்ன பேசினேன் என்ப தெல்லாம் இப்போது நினைவு வருகிறதா? இந்தியாவின் சீர் கேடான நிலையைக் குறித்து ஏதாவதிருக்கும். அவரும் பேச்சுத் துணைக்கு ஓர் ஆளைத் தேடி ஏங்குபவர். மணிக்கணக்காக நீண்டு எங்கள் பேச்சும் சொந்தக் குடும்பக் கவலைகளை மனம் விட்டுச் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு வந்துவிடும். பக்கத்து அறையில் வயலின்கள் குலுங்கும் இனிய ஓசையும், யாரோ நழுவுவதுபோன்ற புடைவையின் சலசலப்பும் எனக்குக் கேட் கும். பலகணியின் இடுக்கு வழியாக இரு கண்கள் என்னையே நோக்குவதை உணர்ந்தேன். சட்டெனப் பழைய நினைவுகள் எங்கிருந்தோ கூடிவிட்டன. நம்பிக்கை, பேதைமை, உருக்கம் யாவும் தோய்ந்த இரு கருவிழிகள்; கனத்த இமைகள் - குளிர்ந்த நோக்குடைய சுரபாலாதான்! உடனே என் இத யத்தை ஏதோ ஒன்று அழுத்திப் பிழிந்தது; துடித்தேன்.

வீடுதிக்குத் திரும்பினேன். ஆனால் அந்த அதிர்ச்சி என்னை உள்ளூற வாட்டிவிட்டது. படிப்பதிலோ எழுது வதிலோ எவ்வளவு கவனம் செலுத்தினால்தான் என்ன, அது தீரவே இல்லை; பெருஞ் சுமைபோல் என் நெஞ்சை அழுத்திக் கொண்டே இருந்தது.

மனத்தைச் சற்றுக் கட்டிப் பிடித்து, இப்படி ஏன் நேர வேண்டுமென்று யோசித்தேன். என் உள்ளத்திலிருந்து ஒரு குரல், 'உன்னிடம் ஆசை வைத்த அந்தச் சுரபாலா எங்கே போய்விட்டாள்?' என்றது. அதற்குப் பதில் கொடுத்தேன்: 'அவளை மனப்பூர்வமாக நான்தான் மறந்துவிட்டேனே! எனக் காக வாழ்நாளெல்லாம் அவள் காத்துக்கொண் டிருப்பாளா என்ன?'-என் அந்தரங்கத்துள் ஒன்று மீண்டும், 'நீ முன் அணுகிய அளவில் உனக்கு எட்டக்கூடியவள்; ஆனால் இன்று நீ மண்டையை உடைத்துக்கொள்வதா யிருந்தாலும் வர மாட்டாள். அவளைக் கண்ணால் பார்ப்பதற்குக்கூட உனக்கு உரிமையில்லை. இளமை யில் உன்னுடன் விளையாடிய அதே சுரபாலாதான். நீ அவள் கைவளையல் செய்யும் ஓசையைக் கேட்கலாம். அவள் கூந்தலி லிருந்து வரும் இன்மணத்தை வெளியிலிருந்து மோந்து அநுபவிக்கலாமே ஒழிய உனக்கும் அவளுக்கும் இடையே சுவர் ஒன்று நிற்கிறதே; என்ன செய்வாய்?' என்று குத்திக் காட்டியது.

'இருக்கட்டும், அதனால் என்ன?' என்றேன் நான். 'அவள் எந்த விதத்திலும் உனக்கு உறவில்லைதான். ஆனால் சுரபாலாவை நீ எப்படி வேண்டுமானாலும் பாவித்துக் கொள்ள லாம்' என்று பதில் வந்தது.

உண்மையே; சுரபாலாவை நான் எப்படி வேண்டு

மாஞலும் ஆக்கிக்கொள்ள முடியும் - என் மனத்துள்தான்! எல்லாரையும்விட என் இதயத்தின் அருகில் அவளை நிறுத்தி வைக்கலாம். என்னுடைய இன்பதுன்பங்களைப் பங்கிட்டுக் கொள்ள என் பாதியாகவும் அவளைச் செய்துகொள்ளலாம். ஆனால் இன்று அவள் என்னை விட்டு எவ்வளவு தூரம் அகன்றுவிட்டாள்! 'அவளைப் பார்ப்பது தவறு; அவளுடன் பேச ஆசைப்படுவது பின்னும் குற்றமாகும்; அவளைக் குறித்துச் சிந்திப்பதோ பெரும் பாவம்! எங்கிருந்தோ குதித்தான் இந்த ராமலோசனன்! இரண்டு மந்திரத்தைப் பந்தலில் முணுமுணுத்துவிட்டு என் சுரபாலாவை இமைப் பொழுதில் தட்டிக்கொண்டு போய்விட்டானே, பருந்து கவர்வது போல்!'

மனித சமூகத்தில் புதியதொரு மாறுதலைக் கொண்டு வர நான் பிரசாரம் செய்யவில்லை; ஏற்கனவே இருக்கும் சமுதாயக் கட்டுத்திட்டங்களை உடைத்தெறிவதும் என் விருப்பம் அன்று. என் மனத்தில் செல்லும் எண்ணங்களை உள்ளவாறு வெளிவிடுகிறேனே தவிர வேறல்ல. ஒருவன் மனத்துள் கிளர்ந்தெழும் உணர்ச்சிகள் எல்லாம் பரிசீலனைக்கு உகந்தவையா? 'ராமலோசனனுடைய மனையுள் வலைய வரும் அந்தச் சுரபாலா ராமலோசனனை விட எனக்கே உரியவள்'-இந்த எண்ணத்தை என்னால் விட்டொழிக்க முடியவில்லையே! இந்த மாதிரி சிந்தனைக்கு இடந் தருவது தவறு; அநீதமுந்தான்; நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இயற்கைக்கு மாறுபட்டதன்று.

எந்த வேலையிலும் என் மனம் பதியவில்லை. இதே ஏக்கம்; பகல் வேளையில் பள்ளியில் பிள்ளைகள் இரைச்சல் போட்டுப் படித்துக்கொண்டிருப்பார்கள். வெளியில் வெயில் பட்டை உரியக் காயும். வேப்ப மரத்துக் காற்று, பூவின் வாசனையுடன் என் அறையினுள் புகும். இருப்புக் கொள்ளாது எனக்கு; எதை நோக்கியோ என மனம் படரும். எதை நினைத்தோ என் உள்ளம் ஏங்கும். எதற்காக என்பது எனக்கே தெரியாது. இதுமட்டும் சொல்லுவேன். இலக்கணப் பிழைகளைத் திருத்தி, வருங்காலத்திற்கு ஏற்ற மனிதராக்க நாள் முழுவதும் மாணவர்களுடன் மாரடிக்கும் வாழ்வு வேண்டாமப்பா!

பள்ளிக்கூடம் விட்டதும், எனக்கென ஒதுக்கியிருக்கும் அந்தப் பெரிய அறையில் தனிமையாக வாட என் மனம் அரை நிமிடமேனும் ஒப்பாது. அந்தச் சமயம் யாராவது என்னோடு உரையாட வந்தாலும் எனக்கு எரிச்சலாக இருக்கும். மாலை நேரங்களில் குளத்தங்கரைக் கமுகஞ் சோலையின்

சலசலப்பைக் கேட்டவாறு இனிய சிந்தையில் ஆழ்வேன். மனித சமூகம் என்பது பெருந் தவறுகள் கொண்டு இழைத்த சிக்கலான வலையாகவே தோற்றும் எனக்கு. உரிய காலத்தில் உரிய காரியத்தைச் செய்ய எவருக்குமே தோன்றுவதில்லை. இது ஏன்? எண்ணங்கள் வந்து ஏன் இப்படியெல்லாம் அலைக்க வேண்டும்? பிரபஞ்சம் ஒரு பெரும் புதிரல்லவா?

'உன்னைப் போன்ற மனிதன் சுரபாலாவுக்குக் கணவனாக வாய்த்துக் கிழ வயதுவரைக்கும் அவளுடன் சுகமாக வாழ்ந்திருக்கலாம். நீதான் கரிபால்டி, மாஜினி இவர்களைப் போல் ஆகவேண்டுமென்று விலகிப் போனாய்! கடைசியில் இந்தப் பட்டிக்காட்டுப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளை மேய்க்கும் வேலைதான் உன் தலையில் எழுதியிருந்தது. ராமலோசனனைப் பார்; வக்கீல். சுரபாலாவின் கணவனாக வருவதற்கு அப்படி என்ன தலைப்பொறியோ அவனுக்கு; தெரியவில்லை; மணத்திற்கு முன்பு அவனுக்கும் சுரபாலாவுக்கும் என்ன சம்பந்தம் இருந்தது? அவனுக்குச் சுரபாலா எந்த முறையில் இருந்தாளோ அதே முறையில் பவசங்கரியுந்தான் இருந்தாள். யாராக இருந்தால் என்ன? ஒரு பெண்ணைக் கட்டிக்கொள்ள வேண்டும்; சம்சாரம் பண்ணவேண்டும்; இவ்வளவே லட்சியம். நாலு காசு சேர்க்கவேண்டும்; இதுவே அவன் நோக்கம். பெண்களுக்குரிய இயல்பான மதிப்பை உணர்ந்தா அவன் மணந்து கொண்டான்? தப்பித் தவறி, பால் அடுப்பில் பொங்கி வழிந்துவிடும். சுரபாலாவை வாய்கொண்டமட்டும் திட்டி விடுவான். தனக்குத் தெம்பு உண்டாகும்போது சேர அணைத்துக்கொண்டு நகை பண்ணிப் போடுவதாக ஆசையும் காட்டுவான். சுரபாலா பொம்மையா, மனைவியா? அவன் பருமனான ஆசாமி. கோட்டும் தலைப்பாகையுமாகக் கோர்ட்டுக்குப் போகத் தவறமாட்டான். ஒருவிதக் குடும்பத் தொல்லையும் இல்லை. குளத்தங்கரையிம் ஆகாயத்தை வெறித்துப் பார்த்தவண்ணம் பெருமூச்சு விட்டுப் பொழுதைப் போக்க வேண்டிய நிமித்தமே இல்லை, அவனுக்கு.'

ராமலோசன பாபு ஒரு முக்கியமான வழக்கை முன்னிட்டுச் சில நாட்கள் வெளியூருக்குச் சென்றிருந்த சமயம் அது. நான் என் அறையின் தனிமையில் வாடிக்கொண்டிருந்தது போல் சுரபாலாவும் தன் வீட்டில் துணையின்றிக் கிடந்தாள். அன்று திங்கட்கிழமை என்று ஞாபகம். உதயம் முதல் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது, வானம். பகலுக்கெல்லாம் பிசு பிசுவென்று தூற்றல் ஆரம்பித்துவிட்டது. ஆகாயம் இருந்த நிலையைப் பார்த்துத் தலைமையாசிரியர் பொழுதோடேயே பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டார். பொதி பொதியாகக் கருமேகங்

கள் எத்திசையிலும் வந்து குவிந்தன. அன்று இரவே பலத்த மழை கொட்டத் தொடங்கியது. பின்னல் பெரும் புயல் வரப் போவதைக் காற்றின் விசை முன் கூட்டியே அறிவித்தது. இரவு ஏற ஏற ஆர்ப்பாட்டமாகப் புயலும் எழுந்தது. காற்றும் மழையும் சேர்ந்து கோர தாண்டவம் புரிந்தன.

இந்த மாதிரிப் பயங்கர இரவுகளில் தூக்கம் எப்படி வரும்? சுரபாலா தனியாகத் தன் அறையில் எப்படி நடுங்கு கிறாளோ என்ற வேதனையே எனக்கு. பள்ளிக்கூட விடுதி அவளது வீட்டைவிட எவ்வளவோ வலிவான கட்டிடம்; எதை யும் தாங்கும். அவளை என் அறைக்கு அழைத்து வந்துவிட லாமா என்ற ஓர் அசட்டு எண்ணம் வந்து போய்க்கொண்டே இருந்தது. ஆனல் ஒரு முடிவிற்கும் வராமல் என் அறைக் குள்ளேயே அலைந்தேன்.

நடு நிசி. மணி ஒன்றுக்குமேல் இருக்கும். வெள்ளம் புரண்டு வரும் பெருத்த ஓலம் கேட்டது. கடல்தான் பொங்கி வந்துவிட்டதோ என்று பயந்தேன். எழுந்து வெளியே வந் தேன். சுரபாலாவின் வீட்டை நோக்கி என் கால்கள் தாமா கவே விரைந்தன. குளத்தங்கரை ஓரமாக வழி. அந்த மேடான இடத்திலும் முழங்கால் அளவு நீரைக் கடக்க வேண்டி யிருந்தது. இன்னும் மேடான இடத்தில் ஏறினேன். பெரிய அளவில் எதிர் நீரோட்டம் வந்தது. நான் நின்ற இடந்தான் அந்த ஊரிலேயே உயரமான இடம். முன் ஜாக்கிரதையாகக் கரையில் இன்னும் மேடான பாகத்தை நோக்கி நடந்தபோது எனக்கு எதிர்ப்புறத்திலிருந்து ஓர் ஆள் அதே இடத்திற்குச் சரசரவென்று வருவதைக் கவனித்தேன். அந்த ஆள் யாரென்பதை என் அந்தராத்மா மட்டுமா உணர்ந்தது? தலை தொட்டுக் கால்வரை என் தேகத்தின் ஒவ்வோர் அணுவும் உணர்ந்தது. நான் யாரென்று அந்த ஆளுக்கும் தெரிந்திருக் கும்; சந்தேகமே இல்லை.

வீடு, வெளி, குளம், வயல் யாவும் சமமாக வெள்ளக் காடாகக் காட்சி அளித்தன, அந்தப் பேய் இருட்டில். நீர் மட்டத்தை மீறி ஐந்து அல்லது ஆறு அடி உயரமே இருந்த தீவில் நாங்கள் இருவரும் வந்து நின்றோம். இரண்டு பேருக்குத் தான் இடம் இருந்தது.

ஊழிக் காலத்தில் தோன்றுமென்பார்களே, அத்தகைய இருள்; ஒளி அவிந்த உலகு. ஊழி வெள்ளம் சுற்றிலும் சீறும் அந்த வேளையில் மனம் விட்டு ஒரு வார்த்தையைச் சொல்வ தால் தவறு எதுவும் இல்லை. ஆனல் அந்தச் சொல் வாயை விட்டு வந்தால்தானே? ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் அருகருகே நின்றோமே தவிரப் பேச்சே இல்லை; நலம் விசாரிக்

கக்கூட நா எழ மறுத்தது. அந்தப் பிரளய இருட்டில் ஒருவரை ஒருவர் கண்ணுரப் பார்த்துக்கொண்டோம். எங்கள் காலின்கீழ்க் குபுகுபுவென்று வெள்ளம் பாய்ந்தோடியது. உலகம், குடும்பம் அனைத்தையும் மறந்து என் அருகே வந்து நின்ருள் சுரபாலா.

அன்று என்னைவிட உறுதுணை அவளுக்கு வேறு எவருமே இல்லை. எத்தனையோ பிறவியைக் கடந்து அறிவுக்கு எட்டாத ஓர் இருளிலிருந்து சூரிய சந்திரர் சுடர்விடும் ஒளி மயமான இந்த உலகிடை விரைந்து வந்து சுரபாலா இளமையில் என்னை அணுகினுள். அது ஒரு காலம். இன்ரே, இன்பம் குலவிய பல நாட்கள் வீணுகியபின் அச்சந் தரும் இந்தப் பிரளய இருள் சுரபாலாவை அதிசயமான விதத்தில் என்னிடம் சேர்த்து விட்டது. விதியின் ஓர் அலை, பூம்பாவையாக இருந்த அவளை என்னிடம் கொண்டு தள்ளியது. அவளை ஓர் அற்பக் கிளிஞ்சி லென ஒதுக்கிவிட்டு இத்தனை நாள் பராமுகமாக இருந்தேன்; இன்று மறலியின் உருவெடுத்த இருண்ட வெள்ளம், பூர்ண மாக மலர்ந்து வாடும் இந்தப் பெண் மலரை என்னுடன் இணைத்தது. ஓர் அலை வர வேண்டியதுதான் பாக்கி; நாங்கள் ஒன்றிக்கொண் டிருக்கும் உலகத்தின் துளி காம்பும் அற்றுப் போய் என்றென்றைக்கும் ஒன்ருவோம்.

அந்த அலை வராமல் இருக்கட்டும்; சுரபாலா தன் கணவ ருடன் நீண்ட நாள் எல்லா ஐசுவரியத்துடனும் வாழட்டும். இந்த ஓர் இரவு என் பக்கத்தில் வந்து நின்றதே போதும். மரணம் உலவும் ஓர் இருண்ட கரையில் நின்றவண்ணம் நான் பருகிய இன்பமோ அபூர்வமானது.

இருள் கரைந்து வந்தது. புயலின் ஆட்டமும் ஓய்ந்தது. படிப்படியாக வெள்ளமும் குறைந்தது. சுரபாலா ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தன் வீட்டை நோக்கி நடந்தாள். நானும் பேச்சின்றி என்னிடத்தை அடைந்தேன். நான் ஒரு சிரஸ்தேதாரனுக உத்தியோகம் பாராமற் போனுல்தான் என்ன; ஒரு கரிபால்டியாகத் தேசத்தின் விடுதலைக்குப் பாடுபடாது போனுலும் பரவாயில்லை. தாழ்ந்த நிலையுள்ள பள்ளிக்கூடத்து ஆசிரியனுக இருந்ததே என் பாக்கியம். அந்தக் கண நேரத்தில் நான் அநுபவித்த இன்பம் என் வறண்ட வாழ்வையே பளிச் சென்று ஆக்கிவிட்டது. என்னைச் சூழ்ந்திருந்த இருள் விலகிப் பொன்னிற உதயமாக மாறியது. என் ஆயுள் நாளில் அந்த ஓர் இரவே நான் ஆசை கொள்வதற்குக் காரணமாக விளங் கியது - நினைக்கும்போதெல்லாம் தெவிட்டாத இன்பத்தைக் கொடுத்த ஓர் இரவு!

வாழ்வும் சாவும்

ராணிஹாட் ஜமீன்தார் சாரதாசங்கரரின் வீட்டு விதவை மருமகளுக்குப் பிறந்த வீட்டு உறவினர் எவரும் இல்லை. ஒவ்வொருவராக எல்லோரும் பரலோகம் போய்விட்டார்கள். புக்ககத்திலும் தன்னுடையவர் என்று சொல்லிக்கொள்ள ஒரு பிள்ளையும் இல்லை. மைத்துனரின் பிள்ளையும் ஒருவன் - சாரதாசங்கரரின் சிறிய பிள்ளை; அவன்தான் அவளுடைய கண்மணி. பிறந்ததுமுதல் அவன் தாய் ஒரே படுக்கையாக இருந்ததால் விதவையான சித்தி காதம்பினியே அவனை எடுத்து வளர்த்து வந்தாள். பிறருடைய பிள்ளையை எடுத்து வளர்த்தால், அதிகப் பாசமே ஏற்படுகிறது. அவன்மீது, இதைவிட வேறு என்ன உரிமை இருக்கிறது அவளுக்கு? சமூக உரிமையும் இல்லை. அன்பின் பிணைப்பு மட்டுந்தான். ஆனால் வெறும் அன்புமட்டும் இருந்தால் சமூகத்திற்கு ஏற்காது. தனக்குச் சொந்தமல்லாத செல்வனை இரு மடங்கு ஆவலுடன் நேசிப்பதோடு நிற்க வேண்டியதுதான்.

விதவை காதம்பினி தன் உள்ளத்தில் அடங்கியிருந்த அன்பு அனைத்தையும் இச் சிறுவனின்மேல் பொழிந்துவிட்டு ஆவணிமாதத்தில் ஓர் இரவு திடீரென்று மரணம் அடைந்தாள். எதனாலோ அவள் இதயம் நின்றுவிட்டது. அன்பு குடிகொண்ட அந்த மென்மையான இதயத்துள் ஏனோ காலத்தின் விசை ஓடாமல் நின்றுவிட்டது! பின்னால் போலீஸாரின் உபத்திரவம் நேரும் என்று அதிக ஆடம்பரம் இல்லாமல் ஜமீன்தாரின் வேலைக்காரர் நால்வர் பிணத்தைப் பொசுக்க எடுத்துச் சென்றனர்.

ராணிஹாட்டின் சுடுகாடு ஊருக்கு வெகு தொலைவில் இருந்தது. குளத்தங்கரையில் ஒரு குடிசை, அருகே ஒரு பெரிய ஆலமரம், விசாலமான வெளி - இவை தவிர வேறு ஒன்றும் இல்லை. முன்பு இதன் வழியாக ஓர் ஆறு ஓடும். இப்பொழுது அது வற்றிக் கிடந்தது. அதன் பக்கத்தில் ஓர் இடத்தில் குளம் வெட்டியிருந்தார்கள். இங்குள்ள மக்கள் இந்தக் குளத்தைத்தான் புண்ணிய தீர்த்தமாக எண்ணி வந்தார்கள். பிணத்தைக் குடிசையில் கிடத்திவிட்டுச் சிதைக்கு வேண்டிய விறகுக்காக நால்வரும் காத்திருந்தனர். நாழிகை ஆக ஆகப் பொறுமையை இழந்த நால்வருள் நிதாயியும் குருசரணனும்,

'கட்டை வர ஏன் தாமதம்?' என்று பார்க்கச் சென்றனர். விதுவும் வனமாலியும் பிணத்துக்குக் காவலாக இருந்தனர்.

ஆவணி மாதத்து இருண்ட இரவு. மழை மேகங்கள் அடர்ந்திருந்தன. ஒரு நட்சத்திரங்கூடக் கண்ணில் பட வில்லை. அந்த இருளில் இருவரும் மௌனமாக உட்கார்ந் திருந்தனர். ஒருவன் மேல் போர்வையில் தீப்பெட்டியை முடிந்து வைத்திருந்தான். மழையில் நனைத்துப் போய் அது பற்றவே இல்லை. பக்கத்தில் இருந்த லாந்தரும் அணைந்து விட்டது.

வெகு நேரம் சும்மா இருந்தபின் ஒருவன், ''அண்ணே! ஊக்கா ஒர் இழுப்பு இழுத்தால் நல்லா இருக்கும். அவசரத் தில் ஒண்ணும் கொண்டு வரவில்லை'' என்றான்.

மற்றொருவன், ''நான் சட்டுன்னு ஓடிப்போய் எல் லாத்தையும் கொண்டு வரட்டுமா?'' என்றான்.

வனமாலி ஓடுவதாகச் சொன்னதன் காரணத்தைத் தெரிந்துகொண்ட விது, ''அட ராமா! என்னைத் தனியாக இங்கே விட்டுவிட்டால்?'' என்றான்.

மறுபடியும் மௌனம் நிலவியது. ஐந்து நிமிஷம் கழிவது ஒரு மணிபோல் இருந்தது. கட்டை கொண்டுவரச் சென்ற வர்களை உள்ளூறத் திட்டிக்கொண்டார்கள். அவர்கள் நிம்மதி யாக எங்கேயாவது உட்கார்ந்து கஞ்சாக் குடித்துக்கொண்டு வம்பு அளந்துகொண் டிருப்பார்கள் என்று இவர்களுக்குச் சந்தேகம் தோன்றியது.

ஓர் ஓசையும் இல்லை. குளத்தங்கரை பிலிருந்து மட்டும் தவளைகளின் அரவமும் விட்டில்களின் இரைச்சலும் கேட்டன. இந்தச் சமயத்தில் பாடை சற்று நெளிந்து கொடுத்துப் பிணம் திரும்பிப் படுப்பதுபோலத் தோன்றியது.

விதுவும் வனமாலியும் நடுங்கிக்கொண்டே ராம நாமத்தை ஜபிக்க ஆரம்பித்தார்கள். சட்டென்று உள்ளே ஒரு பெருமூச்சுக் கேட்டது. விதுவும் வனமாலியும் ஒரே குதி யில் வெளியே வந்து ஊரை நோக்கி ஓட்டம் பிடித்தனர். சுமார் ஒன்றரை மைல் தூரம் வந்ததும் தங்கள் தோழர்கள் விளக்குடன் வருவதைப் பார்த்தார்கள். உண்மையாகவே அவர் கள் கஞ்சாக் குடிக்கத்தான் சென்றிருந்தார்கள். கட்டை விஷயமே அவர்களுக்குத் தெரியாது. இருந்தாலும், மரத்தை வெட்டிக் கட்டை பிளந்துகொண் டிருப்பதாகவும், விரைவில் வந்துவிடுமென்றும் சொன்னார்கள். விதுவும் வனமாலியும் குடிசையில் நடந்தவற்றை விவரித்தார்கள். குருசரணனும் நிதாயியும் அதை நம்பாமல், காரியத்தைக் கைவிட்டு வந்த தற்காகக் கோபங்கொண்டு அவர்களைத் திட்டினார்கள்.

தாமதம் ஆக்காமல், நால்வரும் சுடுகாட்டில் உள்ள குடிசையை அடைந்தார்கள். உள்ளே நுழைந்து பார்த்தால். பிணத்தைக் காணவில்லை. வெறும் பாடைமட்டுந்தான் கிடந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். 'ஏதாவது நரி தூக்கிக்கொண்டு போயிருக்குமோ? ஆனல் போர்த்திருந்த துணியைக்கூடக் காணவில்லையே!' வெளியே வந்து தேடும்பொழுது வாயிலுக்கருகே, சேற்றில் ஒரு பெண்ணின் காலடையாளம் பதிந்திருந்தது.

சாரதாசங்கரர் சாதாரணப் பேர்வழி அல்லர், பூதக் கதைகள் சொன்னல் நம்புவதற்கு! ஆகவே, நால்வரும் கூடிப் பிணத்தைத் தகனம் செய்தாகிவிட்டது என்று சொல்வதுதான் சரி என்று தீர்மானித்தார்கள். விடியற்காலையில் கட்டை கொண்டு வந்தவர்களிடம், 'நாழிகை ஆகவே, குடிசையில் இருந்த கட்டையை கொண்டு தகனக்கிரியை செய்தாகிவிட்டது என்று செய்தி சொல்லிவிட்டனர். எளிதில் யாருக்கும் இதில் சந்தேகம் ஏற்படாது. ஏனென்றல் பிணம், விலையுயர்ந்த பொருளா, பிறர் ஏமாற்றித் திருடிக்கொண்டு போவதற்கு?

இதயத் துடிப்பு இராது போனலும் பல சமயங்களில் உயிர் அசையாமலிருந்து, மறுபடியும் குறித்த நேரத்தில் இதயம் வேலை செய்யத் தொடங்குவது எல்லாருக்கும் தெரியும். காதம்பினி சாகவில்லை; என்ன காரணத்தாலோ அவளுடைய இதயம் தன் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டது! நினைவு வந்து அவள் எழுந்தபோது நாலு பக்கமும் ஒரே இருள். வழக்கம்போல் படுத்துக்கொள்ளும் இடம் அல்லவே இது? ''அக்கா'' என்று ஒரு முறை கூப்பிட்டாள். இருண்ட குடிலில் யாரும் பதில் தரவில்லை. பயத்துடன் எழுந்தபோது, படுக்கையாகக் கிடந்தது நினைவுக்கு வந்தது. திடீரென்று மார்பில் ஒரு வேதனை மூச்சுத் திணறியது, தன்னுடைய ஓரகத்தி குழந்தைக்காகப் பால் காய்ச்சிக்கொண்டிருந்தது, தான் நிற்க முடியாமல் கட்டிலின்மேல் தொபீலென்று விழுந்தது, தொண்டை அடைக்க, 'அக்கா, குழந்தையைக் கொண்டு வாயேன். எனக்கு என்னவோ செய்கிறது' என்று தான் சொன்னது: அதற்கப் புறம் எல்லாம் மங்கலாகிவிட்டன. எழுதின தாளின் மேலே மை முழுவதும் கொட்டினற்போல் காதம்பினியின் நினைவு, அறிவு எல்லாம் ஒரேயடியாகக் குழம்பிவிட்டன. குழந்தை தன்னைக் கடைசித் தடவையாக இன்மழலையால், ''தித்தி'' என்று அழைத்தானே என்னவோ? பழக்கமான உலகிலிருந்து அறிவுக்கெட்டாத ஒரு மரண லோகத்திற்குச் செல்லும் பொழுது அன்பின் இந்தக் கடைசிச் செலவைப் பெற்றதுகூட அவளுக்கு நினைவில்லை!

யமலோகமும் இதேபோல் இருண்டு தனிமையாக இருக்குமோ! பார்ப்பதற்கு அங்கே ஒன்றுமே இல்லை. கேட்பதற்கும் இல்லை. செய்ய அலுவலும் இல்லை. இந்த மாதிரிதான் எந்தக் காலமும் விழித்து உட்கார்ந்திருக்க வேண்டுமோ?—இவ்வாறெல்லாம் அவள் நினைத்தாள்.

அப்புறம் திறந்த வாயிலினூடே திடீரென்று குளிர் காற்று வீசியது. கார்காலத்தில் தவளையின் குரல் காதில் கேட்டது. கணப்பொழுதில் அந்த அற்பாயுளின் சிறு வயது தொட்டு அவள் கண்ட மழைக்கால நினைவு முழுவதும் திரண்டெழுந்து வருவதுபோல் இருந்தது. பூமி நெருங்கித் தொடுவது போல் இருந்தது. ஒரு முறை மின்னல் வெட்டியது. எதிரே குளம், ஆலமரம், மைதானம் தொலைவில் மரங்களின் வரிசை எல்லாம் இமைப்பொழுது கண்முன் தோன்றி மறைந்தன. நடுநடுவே புண்ணிய தினங்களில் நீராட இங்கே குளத்திற்கு வருவது நினைவுக்கு வந்தது. அப்போதெல்லாம் வேகும் பிணத்தைக் கண்டால் சாவு பயங்கரமானதென்று தனக்குத் தோன்றுமே என்று எண்ணினாள்.

முதலில் வீட்டுக்குத் திரும்பிவிடலாம் என்று எண்ணினாள். உடனே, 'நான்தான் உயிருடன் இல்லையே! என்னை ஏன் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்? அங்கே அதனால் அமங்களம் நேரலாம். ஜீவராசியிலிருந்துதான் என்னைப் பிரஷ்டம் செய்தாகிவிட்டதே; நான் வெறும் பிரேதந்தானே?' என்று சிந்தித்தாள்.

இல்லாவிட்டால் சாரதாசங்கரர் இந்த நடுநிசியில் பாதுகாப்பான அந்தப்புரத்திலிருந்து நெடுந்தூரம் இந்தச் சுடுகாட்டிற்கு எதற்காக எடுத்துக்கொண்டு வரப்போகிறார்? இன்னும் தன்னை எரித்திராவிட்டால், அதற்காக வந்த ஆட்கள் எங்கே? சாரதாசங்கரரின் வெளிச்சமான அறையில் மரணத் தறுவாயில் தான் இருந்தது நினைவுக்கு வந்தது. அடுத்தாற் போல, வெகு தொலைவில் ஜன சந்தடியற்ற இந்த இருண்ட சுடுகாட்டில் தன்னந்தனியே தான் இருப்பதை உணர்ந்தாள். 'நான் இனி மனித சமூகத்தில் ஒருத்தி அல்ல. நான் பயங்கரமானவள். அமங்களமானவள். நான் வெறும் பேயே' என்று அவள் சொல்லிக்கொண்டாள்.

இதை நினைத்தமாத்திரம் நாலு பக்கங்களிலிருந்தும் உலகத்தின் தொடர்பு அறுபட்டு விட்டதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. அவளுக்கு இனி அற்புதமான சக்தியும் அடங்காத சுதந்திரமும் உண்டு. நினைத்த இடத்துக்குச் செல்லலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம். முன்பின் தோன்றுததொரு புதிய உணர்வு வரவே, வெறிபிடித்துத் திடீ

ரென்று வீசும் ஒரு காற்றுச் சுழல் போலக் குடிலிலிருந்து கிளம்பி இருண்ட மயானத்தினூடே சென்றாள். உள்ளத்தில் பயமோ வெட்கமோ சிந்தனையோ எள்ளளவும் அவளுக்கு ஏற்படவில்லை. போகப் போக அவளுடைய கால்கள் தள்ளாடின. உடலும் சோர்ந்துவிட்டது.

மாளாது சென்றது வழி. நடுவே வயல்கள். சில இடங்களில் முழங்கால் அளவு நீர் தேங்கியிருந்தது. கிழக்கு மெல்ல வெளுத்த சமயம், அருகில் வீட்டுக் கூரைகளின் மேலிருந்து ஓரிரண்டு பறவைகளின் குரல் கேட்டது.

அவளுக்கு ஒரு மாதிரியான அச்சம் மூண்டது. உலகத்தில் உயிருள்ள மனிதருடன் தனக்கு இருக்கும் புது உறவு என்ன என்பது அவளுக்குத் தெரியவில்லை. வெறும் வெளியில் இருந்திருக்கிறாள்; சுடுகாட்டில் இருந்திருக்கிறாள். அப்போதெல்லாம் பயமே தோன்றவில்லை. அவளுக்குச் சொந்த இடத்தில் இருப்பதுபோல் பட்டது. இப்போது பகல் ஒளியில் மனிதர் இருக்கும் இடம் அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது. மனிதன் பிசாசுக்குப் பயப்படுகிறான். பிசாசும் மனிதனைக் கண்டு அஞ்சுகிறது. மரணத்தின் இரு புறங்களிலும் இவர்கள் வசிக்கிறார்கள்.

துணியில் சேறு படிய, அலங்கோலமான உடையுடன், இரவு விழித்திருந்ததனால் பைத்தியக்காரி வழியாக் காதம்பினி வருவதைக் கண்டால், ஜனங்கள் பயப்படாமல் இருப்பார்களா? சிறுவர்களும் தொலைவில் ஓடிக் கல்லை வீசி எறிவார்கள். நல்ல வேளை! ஒரு வழிப்போக்கன் முதலில் அவளை இந்த நிலையில் கண்டான். ''அம்மா, உன்னைப் பார்த்தால், பெரிய இடத்தில் புகுந்தவள் போல் தோன்றுகிறது. இந்த நிலையில் ஒன்றியாக எங்கே போகிறாய்?'' என்று கேட்டான்.

காதம்பினி முதலில் ஒன்றும் பேசவில்லை. என்ன சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் இவ்வுலகில்தான் இருக்கிறாள், பெரிய இடத்தில் புகுந்தவள் போல் தோன்றுகிறாள் என்றெல்லாம் இந்த வழிப்போக்கன் பேசுகிறானே! இது உண்மையில் நடக்கிறதா என்ற ஐயம் பிறந்தது அவளுக்கு.

அவன் மறுபடியும், ''வா, அம்மா. உன்னை வீட்டில் சேர்த்துவிட்டு வருகிறேன். உங்கள் வீடு எங்கே? சொல்'' என்றான்.

காதம்பினி யோசிக்கத் தொடங்கினாள். புக்ககத்திற்குச் செல்ல மனம் இல்லை. பிறந்த வீடோ இல்லை. இள வயதுத் தோழி ஒருத்தியின் நினைவு வந்தது. அந்த யோக மாயையை விட்டுச் சிறு வயதிலேயே பிரிந்தபோதிலும் கடிதப்

போக்குவரத்து உண்டு. ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கும் அன்பைக் குறித்துச் சண்டையும் நடக்கும். காதம்பினி தனக்கு அவள்மேல் அன்பு அதிகம் என்பாள். யோகமாயை, தன்மேல் காதம்பினி அன்பாக இல்லை என்று வாதாடுவாள். எப்போதாவது இருவரும் ஒன்று கூடினால் கண நேரங்கூட ஒருவரை யொருவர் பிரிந்திருக்க மாட்டார்கள். காதம்பினி வழிப்போக்கனிடம், ''நிச்சிந்தபுரத்தில் ஸ்ரீபதி பாபுவின் வீட்டிற்குப் போக வேண்டும்'' என்றாள். அவன் கல்கத்தாவுக்குச் சென்றுகொண்டிருந்தான். நிச்சிந்தபுரம் அருகில் இராவிட்டாலும் அவன் போகும் வழியில்தான் இருந்தது. ஆகவே, தானே பொறுப்பு ஏற்று, ஸ்ரீபதி பாபுவின் வீட்டில் கொண்டு விட்டான்.

இரு தோழிகளும் ஒன்று கூடினர். முதலில் அடையாளம் தெரிந்துகொள்ளச் சற்றுத் தாமதம் ஆகியது. பின்னரே, இளவயது நினைவுகள் வந்தன.

யோகமாயை, ''அடியம்மா என்ன அதிருஷ்டமடி? திடீரென்று உன்னைப் பார்ப்பேன் என்று நான் நினைக்கவில்லையே! நீ எப்படியடி வந்தாய்? உன் புக்ககத்தார் உன்னை உதறி விட்டார்களா?'' என்றாள்.

காதம்பினி சற்று மௌனமாயிருந்த பின், ''என் புக்ககத்து விஷயமெல்லாம் கேட்காதே! உன் வீட்டின் மூலையில் வேலைக்காரியைப் போல் இருக்க ஓர் இடம் தா. உனக்காக வேலைகள் எல்லாம் செய்கிறேன்'' என்றாள்.

யோகமாயை, ''என்ன பேச்சடி இது? வேலைக்காரி போல இருப்பானேன்? நீ என் தோழி; என்னுடையவள்தானே நீ?'' என்றெல்லாம் சொன்னாள்.

இதே சமயத்தில் ஸ்ரீபதி உள்ளே நுழைந்தான். காதம்பினி சற்று நேரம் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பின் மெதுவாக வெளியே சென்றாள். தலையை முக்காட்டினால் மறைத்துக்கொள்ளவோ கூச்சப்படவோ இல்லை. ஸ்ரீபதி தன் தோழியைப்பற்றி விரசமாக ஏதாவது எண்ணிக்கொள்ளப் போகிறானே என்று படபடப்பாக யோகமாயை பலவிதமான சமாதானங்கள் சொன்னாள். தான் சொன்னதை ஸ்ரீபதி இவ்வளவு சீக்கிரத்தில் நம்பிவிட்டது யோகமாயைக்கு அவ்வளவாக மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை.

காதம்பினி தன் தோழி வீட்டை வந்து அடைந்தாள். ஆனால் அவளுடன் பழக முடியவில்லை. நடுவே சாவு குறுக்கிட்டது. தன்னைப்பற்றியே ஒரு சந்தேகம் அவளுக்கு. அந்த உணர்வில் பிறருடன் பழகுவது கடினம். காதம்பினி யோகமாயையின் முகத்தைப் பார்த்தவாறு யோசிப்பாள்: 'கணவ

ருடன் சம்சாரம் நடத்தியதென்ன? இப்போது நான் இருக்கும் நிலை என்ன? அன்பு, கடமைகளுடன் உலகத்தவர் வாழ்கிறார்கள்; நானே வெறும் நிழல்தானே? அவர்கள் இருப்பது உண்மையான உலகத்தில். நானே வேறு உலகில் சஞ்சரிக்கிறேன்' என்று எண்ணுவாள்.

யோகமாயைக்கு என்ன என்னவோ தோன்றின. ஒன்றுமே புரியவில்லை அவளுக்கு. பெண்களுக்கு ஒளிவு மறைவே சகிக்காது. நிச்சயமில்லாததைக் கொண்டு கவியும் புனையலாம்; வீரம் காட்டலாம்; சாமர்த்தியத்தை வெளிப்படுத்தலாம். ஆனால் சம்சாரம் நடத்த முடியுமா? இதனாலேயே பெண்கள், ஒன்று, அப்படி இருப்பதை அறவே மறந்துவிடுவார்கள். இல்லையென்றால், அதற்குப் புது உருக் கொடுத்துச் சொந்தக் காரியங்களுக்கு ஏற்ப அதை அமைத்துக்கொள்வார்கள். இரண்டும் முடியாவிட்டால் எரிந்து விழுவார்கள்.

காதம்பினியின் விஷயம் புரிபடாமல் இருக்க இருக்க, யோகமாயையின் கோபம் அதிகமாகிக்கொண்டே வந்தது. 'இதேதடா உபத்திரவம் என்னை வந்து அடைந்ததே' என்று எண்ணினாள்.

மற்றொரு சங்கடம்; காதம்பினிக்குத் தன்னிடமே ஒரு பயம். பிசாசுக்குப் பயப்படுபவர்கள் எல்லாரும் தங்கள் பின்புறத்தைப் பார்ப்பார்கள். கண் எங்கே செல்லத் தயங்குகிறதோ அங்கேதான் பயம் உலாவுகிறது. ஆனால் காதம்பினிக்குத் தன்னிடத்திலேயே பயம்; வெளிப்பயம் அவளுக்குத் துளிக்கூட இல்லை!

இதனால்தான் பிற்பகலில் தனியாக அறையிலிருக்கும்பொது ஒவ்வொரு சமயம் கூச்சல் போடுவாள். அந்தி மங்கும் வேளையில் விளக்கொளியில் தன் நிழலைப் பார்க்கும்போது அவள் உடல் நடுங்கும். அவள் இப்படித் தன்னைக் கண்டே மருள்வது வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் ஒரு மாதிரி திகிலை மூட்டிவிட்டது. வீட்டு வேலைக்காரர்கள் - யோகமாயைகூட - கண்ட பொழுதெல்லாம் எங்கே பார்த்தாலும் பேயைக் காணத் தொடங்கினர்.

ஒரு நாள் காதம்பினி இரவில் தன் அறையிலிருந்து அழுது கொண்டே வெளியேறி யோகமாயையின் அறைக்கருகில் வந்து, ''அக்கா, உன் கால்களில் விழுகிறேன். என்னைத் தனியாக விட்டுப் போகாதே'' என்றாள்.

யோகமாயைக்குப் பயம், கோபம் இரண்டும் வந்தன. இந்த நிமிடமே காதம்பினியை வெளியேற்றிவிடலாமா என்று எண்ணினாள். தயை மேலிட்டு ஸ்ரீபதி பலவாறாக அவளைத் தேற்றிப் பக்கத்து அறையில் அவளுக்கு இடம் அளித்தான்.

மறு நாள் அகாலத்தில் அந்தப்புரத்தில் ஸ்ரீபதி வந்தான். யோகமாயை திடீரென்று அவனை அதட்டத் தொடங்கினாள். ''என்ன மனுஷர் நீங்கள்? ஒரு பெண் புக்ககத்தை விட்டு வந்து உங்கள் வீட்டிலே இருக்கிறாள். ஒரு மாதமாகிறது; வெளியே போகிற வழியாகக் காணோம். நீங்களோ கொஞ்சங் கூடத் தடை சொல்வதாகத் தெரியவில்லை. என்னதான் எண்ணம் உங்கள் மனசுக்குள்ளே என்கிறேன்! ஆண்களே இந்த மாதிரிதான் போல் இருக்கிறது'' என்றாள்.

உண்மையிலேயே பெண்ணினத்தின்மேல் ஆடவர்கள் இரக்கம் கொள்கிறார்கள். ஆகவேதான் பெண்கள் அவர்கள்மேல் அதிகமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். திக்கற்ற அந்த அழகிய காதம்பினியின்மேல் அளவுக்கு மீறி ஸ்ரீபதி காட்டிய கருணையை யோகமாயை தவறாக எடுத்துக்கொண்டாள். அவள் மேல் ஆணையிட்டுச் சொன்னபோதிலும், அவனுடைய நல்ல எண்ணத்தை யோகமாயை நம்பவில்லை.

'பாவம்! குழந்தைகளற்ற விதவையாயிற்றே; புக்ககத்தில் என்ன கொடுமையாக நடத்தினார்களோ? அது தாளாது இவள் நம்மிடம் வந்திருக்கலாம். தாய் தகப்பன் இல்லை. இவளை எப்படி நாம் நிர்க்கதியாக விடலாம்?' என்று எண்ணி இதை அவன் விசாரிக்கவே இல்லை.

இவற்றையெல்லாம் காதம்பினியின் வாய்மூலம் அறிந்து கொள்ள அவன் துளிக்கூட விரும்பவில்லை. யோகமாயை அவனுடைய நிதான புத்தியைப் பார்த்து அவனைப் பலவாறுகக் குத்திக் காட்டலானாள். காதம்பினியின் புக்ககத்தாருக்கு விஷயம் தெரிவித்தால் வீட்டில் அமைதி நிலவும் என்று அவன் நினைத்தான். திடீரென்று கடிதம் எழுதினால் நல்ல பலன் விளையாது. ராணிஹாட்டிற்குத் தானே நேரில் சென்று விஷயத்தை அறிந்து வந்து செய்யவேண்டியதைச் செய்யலாமென்று முடிவு செய்தான்.

ஸ்ரீபதி போய்விட்டான். இங்கே யோகமாயை காதம்பினியிடம் வந்து, ''இங்கே நீ இனிமேல் இருப்பது நன்றாக இல்லை, அம்மா. நாலுபேர் என்ன சொல்வார்கள்?'' என்றாள்.

காதம்பினி கவலையில் ஆழ்ந்து யோகமாயையின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, ''எனக்கும் நாலு பேருக்கும் என்ன சம்பந்தம்?'' என்றாள்.

யோகமாயை இதைக் கேட்டு வாயடைத்துப் போனாள். சற்றுக் கோபமாக, ''உனக்கு இராவிட்டால் எங்களுக்கு இல்லையா? பிறர் வீட்டில் புகுந்தவளை எங்கள் வீட்டில் எப்படி வைத்துக்கொள்ள முடியும்?'' என்றாள்.

''எனக்குப் புக்ககம் எங்கேடி?'' என்றாள் காதம்பினி.

''அடி, நீ நாசமாய்ப் போக! என்னடி சொன்னாய், சனியன் பிடித்தவளே!''

காதம்பினி மெதுவாக, ''உனக்கு நான் யார்? நான் இந்த உலகத்தைச் சேர்ந்தவளா? நீங்கள் சிரிக்கிறீர்கள், அழுகிறீர்கள். உங்கள் காரியங்களைக் கவனிக்கிறீர்கள்; அன்பு பாராட்டுகிறீர்கள். நான் சும்மா பார்த்துக்கொண்டு மட்டுந்தான் இருக்கிறேன். நீங்கள் மனிதர்கள்; நானோ நிழல். உங்கள் உலகின் நடுவே பகவான் என்னை ஏன் வைத்திருக்கிறான் என்று எனக்குப் புரியவில்லையே! உங்கள் ஆனந்தத்தின் நடுவே நான் அமங்களம் ஏற்படுத்தி விடுகிறேனே என்று நீங்கள் அஞ்சுகிறீர்கள். உங்களுக்கு நான் எந்த விதத்தில் உறவு என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் பகவான் எனக்கென்று ஓர் இடமும் படைக்கவில்லையே! என் பந்தங்கள் அறுபட்டும் உங்களைச் சுற்றிச் சுற்றித்தான் திரிகிறேன்'' என்றாள்.

இவ்வாறு அவள் சொல்லிக்கொண்டே போனபோது யோகமாயைக்கு ஒன்றிரண்டு புரிந்ததே ஒழிய மூலக்கருத்து இன்னதென்று விளங்கவில்லை. பதிலும் சொல்ல முடியவில்லை. இரண்டாந் தரம் கேட்கவும் முடியவில்லை. கவலையில் ஆழ்ந்து மெதுவாக எழுந்து சென்றாள்.

இரவு சுமார் பத்து மணிக்கு ஸ்ரீபதி ராணீஹாட்டிலிருந்து திரும்பினான். பெரு மழை பெய்ததில் எங்கேயும் ஒரே வெள்ளம். சோவென்று கொட்டும் மாரிக்கு ஒரு முடிவில்லை.

''என்ன ஆயிற்று?'' என்று யோகமாயை கேட்டாள்.

''அது பெரிய விஷயம். பிற்பாடு சொல்லுகிறேன்'' என்று கூறி உடை மாற்றிக்கொண்டு சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றான் ஸ்ரீபதி. அவனுக்கு ஏதோ ஆழ்ந்த சிந்தனை போல் இருக்கிறது.

யோகமாயை வெகுநேரம் ஆவலை அடக்கிக்கொண்டிருந்து விட்டுப் படுக்கையில் படுத்ததுமே, ''என்ன விஷயம்? சொல்லுங்களேன்'' என்றாள்.

ஸ்ரீபதி, ''நிச்சயமாக நீ ஒரு தவறு செய்துவிட்டாய்!'' என்றான்.

யோகமாயைக்கு உள்ளுக்குள்ளே ஆத்திரம் வந்தது. பெண்கள் தவறே செய்யமாட்டார்கள்; செய்தாலும் நல்ல புத்திமான்களான கணவர்கள் அதை எடுத்துச் சொல்வது உசிதம் அல்ல. தங்கள் மேலேயே போட்டுக்கொள்வதுதான் சரி. சற்றுச் சூடாகவே யோகமாயை, ''எப்படியாம்?'' என்றாள்.

ஸ்ரீபதி, ''நீ இடம் தந்திருக்கிறாயே, அந்தப் பெண் உன் தோழி காதம்பினி இல்லை'' என்றான்.

இந்த மாதிரியான பேச்சைக் கேட்டால், முக்கியமாகக் கணவனின் வாயால் கேட்டால், பெண்களுக்கு எளிதில் கோபம் வந்துவிடும். யோகமாயை, ''என் தோழியை எனக்குத் தெரியாது! உங்கள் மூலமாகத்தான் தெரிந்துகொள்ளவேண்டுமாக்கும்! என்ன அழகு?'' என்றாள்.

ஸ்ரீபதி, ''பேச்சின் அழகைப்பற்றி இங்கே ஒரு விவாதமும் இல்லை. பிரமாணத்தைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும்'' என்றான். யோகமாயையின் தோழி காதம்பினி செத்துப் போய்விட்டாள் என்பதில் சந்தேகம் இல்லை.

யோகமாயை, ''இதோ பாருங்கள். நிச்சயமாக ஏதோ குழப்பிவிட்டு வந்திருக்கிறீர்கள். ஓர் இடத்திற்குப் பதில் வேறோரிடம் போய்விட்டீர்களோ, என்னவோ? என்ன கேட்க, எதைக் கேட்டீர்களோ? அதற்கு ஒரு வழியைக் காணும். உங்களை யார் போகச் சொன்னார்கள்? ஒரு கடிதம் எழுதினால் எல்லாம் தெளிவாகியிராதா?'' என்றாள்.

தன் திறமையில் மனைவிக்கு இருக்கும் நம்பிக்கைக் குறைவைக் கண்டு ஸ்ரீபதி வருத்தமுற்று, விவரமாக எல்லாவற்றையும் ஆதாரங்களுடன் சொன்னான். ஆனால் பலன் ஒன்றும் இல்லை. இரு கட்சியினரும் உண்டு, இல்லை என்று இரண்டு சாமம்வரை வாதம் புரிந்தனர்.

காதம்பினியை இந்தக் கணமே வெளியேற்ற இருவருக்கும் சம்மதந்தான். அவர்களுடைய விருந்தாளி மாறுவேடத்தில் வந்து தன் மனைவியை ஏமாற்றிவிட்டாள் என்பது ஸ்ரீமதியின் எண்ணம். அவள் ஒடிவந்தவள் என்பது யோகமாயையின் தீர்மானம். இருந்தாலும், இந்தத் தர்க்கத்தில் இருவரும் தோற்றுப் போக விரும்பவில்லை. இருவருடைய குரலும் ஓங்க ஆரம்பித்தன. காதம்பினி அடுத்த அறையில் படுத்திருப்பதை மறந்தனர். ''நல்ல சங்கடத்திலே மாட்டிக்கொண்டேன். என் காதாலேயே கேட்டுவிட்டு வந்தேன்!'' என்றான் ஸ்ரீபதி.

''அதைக் கேட்டு என்ன பலன்? என் கண்ணாலேயே பார்க்கிறேனே இதோ?'' என்றாள். கடைசியில், ''காதம்பினி எப்பொழுது செத்தாள், சொல்லுங்கள்?'' என்றாள்.

காதம்பினி எழுதிய ஏதாவது ஒரு கடிதத்துடன் ஸ்ரீபதி சொல்லிய தேதி ஒத்துப் போய்விடும். அப்போது அவன் பிழையை எடுத்துக் காட்டலாம் என்று எண்ணினாள் யோகமாயை. ஸ்ரீபதி சொன்ன தேதியைக் கணக்கிட்டபொழுது அது அவள் வீடு வந்து சேர்ந்த முதல் தினமாக இருந்தது. இதைக் கேட்டதும் யோகமாயையின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. ஸ்ரீபதிக்கும் என்னவோபோல் ஆகிவிட்டது.

அப்போது அறைக்கதவு திறந்துகொண்டது. மழைக் காற்றுச் சட்டென்று வீசவே தீபம் அணைந்துவிட்டது. வெளியில் இருந்த இருட்டு உள்ளேயும் பரவியது. காதம்பினி விரைவாக உள்ளே நுழைந்தாள்; ''உன் தோழி காதம்பினிதானடி நான். ஆனால் நான் உயிரோடு இல்லை. நான் செத்துப் போய் விட்டேன்'' என்றாள்.

யோகமாயை பயந்து கூக்குரலிட்டாள். ஸ்ரீபதிக்கு நா எழவில்லை.

''ஆனால் நான் செத்துப்போனது தவிர, உங்களுக்கு என்ன தவறு செய்திருக்கிறேன்? இங்கே எனக்கு இடம் இல்லை யானால், பரலோகத்திலும் இடமில்லை. ஐயோ! நான் எங்கே போய் நிற்பேன்?'' என்று காதம்பினி கூவி, இருண்டு மழை கொட்டும் அந்த இரவில் கண்ணுறங்கும் கடவுளை நோக்கி, ''ஐயோ! நான் எங்கே போவேன்?'' என்றாள். ஸ்ரீபதியும் அவன் மனைவியும் மூர்ச்சை போட்டு விழுந்தார்கள்.

அவர்களை அப்படியே விட்டுவிட்டுக் காதம்பினி பரந்த உலகிடைத் தன் இடத்தைத் தேடிச் சென்றாள். காதம்பினி எவ்வாறு ராணிஹாட்டிற்குத் திரும்பிச் சென்றாள் என்று கூறுவது கடினம். ஆனால் முதலில் யாரையும் பார்க்கவில்லை. நாள் முழுவதும் ஓர் இடிந்த கோயிலில் பட்டினியாகக் கிடந்தாள். மழை இருட்டினால் சீக்கிரம் அஸ்தமித்துவிட்டது. பெருமழை வருமென எதிர்நோக்கி ஊரார் தங்கள் தங்கள் வீட்டில் அடைந்துகொண்டதும், காதம்பினி வெளியே வந்தாள். புக்ககத்து வாயிலுக்குச் சென்றதும் ஒரு முறை அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டு உள்ளே சென்றாள். வேலைக்காரியென்று நினைத்து வாயில் காப்போர் தடை செய்யவில்லை. அச்சமயம் பெருமழை பெய்தது. காற்றும் வேகமாக வீசியது.

வீட்டுக்காரி சாரதா சங்கரரின் மனைவி, விதவை நாத்தனாருடன் சீட்டாடிக்கொண்டிருந்தாள். சமையற்காரி உள்ளே போயிருந்தாள். குழந்தை ஜுர வேகத்தால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். ஒருவருடைய கண்களிலும் படாமல் தப்பிக் காதம்பினி படுக்கையறைக்குள் நுழைந்தாள். என்ன யோசனையுடன் புக்ககத்திற்கு வந்தோம் என்று அவளுக்கே தெரியாது. குழந்தையை ஒரு முறை கண்ணாரக் காணவேண்டுமென்ற ஆசைதான் அவளுக்குத் தெரியும். பின்னர் எங்கே செல்வது என்று அவள் யோசிக்கவே இல்லை.

விளக்கொளியில், நோயில் மெலிந்த குழந்தை, கையை மூடிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தான். அன்பு ஊற்றெடுத்தது, அவனை ஒரு முறை பார்க்க. 'இவன் அம்மாவுக்குப்

பேச்சுப் பராக்குத்தான். என் கையில் கொடுத்துவிட்டு அவள் இவ்வளவு நாள் கவலையற்று இருந்தாளே! பிள்ளையைப் பெரியவளாக வளர்க்கும் கவலை அவளுக்கு ஏது? இன்று இவளே நம்மைப்போல் சீராட்டி வளர்ப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?' என்று எண்ணினாள்.

அதே சமயம் குழந்தை படுக்கையில் திரும்பி அரைத் தூக்கத்தில், ''சித்தி, தண்ணி'' என்றாள்.

''நான் பாவி! தங்கக் கண்ணே, இன்னுங்கூடச் சித்தியை மறக்கவில்லையா?'' என்று பரபரவென்று கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குழந்தையை மார்பில் அணைத்தவாறு அதைப் புகட்டினாள்.

தூக்கம் இருந்தவரையில், வழக்கம்போல் குழந்தை சித்தியின் கையிலிருந்து தண்ணீர் குடிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கடைசியில் காதம்பினி தன் பல நாள் ஆசை தீர அவன் முகத்தை முத்தமிட்டு அவளைப் படுக்க வைக்கும்போது தூக்கம் கலைந்தது. குழந்தை சித்தியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, ''சித்தி, நீ செத்தூட்டையா?'' என்றாள்.

''ஆமாண்டாப்பா'' என்றாள் காதம்பினி.

''நீ என்னண்டே திரும்ப வந்தூட்டையா? இனிமேல் செத்துப் போக மாட்டியே?'' என்றாள்.

இதற்குப் பதில் சொல்வதற்குள்ளேயே ஒரு கலவரம் ஏற்பட்டது. சமையற்காரி கையில் கஞ்சியுடன் உள்ளே நுழைந்தாள். ''அம்மாடி!'' என்று அலறிப் போட்டுக்கொண்டு கீழே வந்தாள். கூக்குரலைக் கேட்டுச் சீட்டை எறிந்துவிட்டு உள்ளே நுழைந்த வீட்டுக்காரி, மரம்போல விறைத்து நின்றுவிட்டாள். ஓடவும் முடியவில்லை; பேசவும் நா எழவில்லை. இதையெல்லாம் கண்ட குழந்தை அழுதுகொண்டே, ''சித்தி, நீ போயேன்'' என்றாள். வெகு நாள் சென்று தான் சாகவில்லை என்ற நினைவு வந்தது காதம்பினிக்கு. அதே பழைய வீடு வாசல், அதே குழந்தை, அதே பாசம்; எல்லாம் அப்படியே இருப்பதாகத் தோற்றின அவளுக்கு.

நடுவே ஒரு மாற்றுதலும் தென்படாதது போலவே தோற்றியது. தோழியின் வீட்டுக்குச் சென்றிருந்தபொழுது தான் செத்து ஒழிந்துவிட்டதாகப் பட்டது. குழந்தையின் அறைக்குள் வந்ததும் அவனுடைய சித்தி துளிக்கூடச் சாகவில்லை என்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. வருத்தத்துடன், ''அக்கா, என்னைக் கண்டு ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நான் அதே மாதிரிதானே இருக்கிறேன்'' என்றாள். வீட்டுக்காரியால் நிற்க முடியவில்லை; மூர்ச்சை ஆகி விழுந்தாள்.

தங்கையிடம் சமாசாரம் கேட்டுச் சாரதாசங்கரர் தாமே

பின்கட்டிற்கு வந்தார். கை கூப்பிக்கொண்டு காதம் பினியை நோக்கி, ''இதெல்லாம் உனக்கு அடுக்குமா? சதீசன் எனக்கு ஒரே பிள்ளை. அவன்மேல் ஏன் உன் கண்ணைப் போடுகிறாய்? உனக்கு என்ன தவறு செய்தோம் நாங்கள்? நீ போனதிலிருந்து அவன் சுக்காய் வற்றி வருகிறான். நோய் பீடித்துக்கொண்டே இருக்கிறது. இராப் பகலாகச் சித்தி, சித்தி என்றே கத்துகிறான். உலகத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டாயோ இல்லையோ? இந்தப் பாசங்களை ஒழித்து விடு. நான் உனக்கு முறைப்படி கருமாதிகள் செய்கிறேன். விலகிப் போ, அம்மா'' என்றார்.

காதம்பினியால் பொறுக்க முடியவில்லை. உரக்க, ''நான் சாகவில்லையே! நன் சாகவில்லை என்று எப்படி நிரூபிப்பது?'' என்றவாறு அங்கிருந்த வெண்கலத் தம்ளரைத் தரையிலிருந்து எடுத்துத் தலையில் அடித்துக்கொண்டாள். ரத்தம் தாரை தாரையாக ஒழுக்கெடுத்தது. காதம்பினி, ''இதோ பாருங்கள்; நான் பிழைத்திருக்கிறேன்'' என்றாள்.

சாரதாசங்கரர் பதுமைபோல் நின்றிருந்தார். குழந்தை பயத்துடன் தந்தையை அழைத்தான். மயக்கமுற்று இரு பெண்களும் கீழே கிடந்தனர். அப்படியே அந்த மழை இருட்டில் வெளியே புறப்பட்டுப் போனாள் காதம்பினி. சற்று நேரத்துக்கெல்லாம் அருகிலிருந்த குட்டையில் தொபீல் என்று ஒரு சத்தம் கேட்டது.

காலை மழை ஓய்ந்ததும் வந்து பார்த்தால் காதம்பினியின் சவம் மிதந்துகொண்டிருந்தது. தன் உயிரைத் தானே மாய்த்துக்கொண்டதன் மூலம் காதம்பினி தான் சாகவில்லை என்பதை நிரூபித்துவிட்டாள்.

காபூல்காரன்

ஐந்தாண்டு நிரம்பிய என்னுடைய சிறிய பெண் மினிக்குக் கணமேனும் வாய் ஓய்ந்து இராது. இவ்வுலகில் பிறந்ததும் அவள் பேசக் கற்றுக்கொள்வதற்கு ஓராண்டு கழிந்திருக்கும். அதன்பிறகே விழித்துக்கொண்டிருக்கும் நேரத்தின் ஒரு சிறு பகுதியைக்கூட அவள் வாளாவிருந்து வீணுக்கியதில்லை. அவளுடைய தாய் பலமுறை அதட்டி அவள் வாயைப் பொத்துவாள். ஆனால் இதைச் செய்ய என்னால் ஆகாது. மினி வாய் திறவாமல் இருப்பதைப் பார்க்க எனக்கு இருப்புக் கொள்ளாது. இந்தச் சலுகையினால் அவள் என்னுடன் சற்று உற்சாகத்துடனேயே உரையாடி மகிழ்வாள்.

ஒரு நாள் காலை, நான் என்னுடைய புதிய நவீனத்தின் பதினேழாம் அத்தியாயத்தை எழுதத் தொடங்கியபொழுது மினி வந்து பேச்சுக் கொடுத்தாள்: ''அப்பா, அந்து வேலைக்காரன் இருக்கிறானே, ராம்தயால் காக்கையை 'கவ்வா' (ஹிந்தியில்) என்கிறான். அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லையே!''

இந்த உலகில் உள்ள மொழிகள் வெவ்வேறானவை என்பதைக் குறித்து அவளுக்கு நான் விளக்கம் கூறுவதற்கு முன்னரே மினி ஒரு புது விஷயத்தை எடுத்துவிட்டாள்: ''அப்பா, போலா சொல்கிறான் மானத்திலே (வானத்திலே) யானை யெல்லாம் கூடித் தும்பிக்கையாலே நீரை வாரி இறைக்கிறதாம்; அதுதான் மழையாம். அசட்டுப் போலா ஏனப்பா இப்படி உளறுகிறான்?'' இதுபற்றி என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்குக்கூடக் காத்திராமல் திடுமென மினி ஒரு கேள்வி போட்டாள்: ''அப்பா, அம்மா உனக்கு யாராம்?''

மனத்துள்ளேயே, 'அத்தை மகள்' என்று கூறிக்கொண்டு வெளியே, ''மினி, நீ போலாவுடன் போய் விளையாடம்மா; எனக்கு வேலை இருக்கிறது'' என்றேன்.

அச்சமயம், நான் எழுதும் மேஜைப்பக்கத்தில் வந்து அவள் என் கால்மாட்டில் அமர்ந்து தன் முழந்தாள்களையும் கைகளையும் ஆட்டி, 'ஆக்டும் பாக்டும்' (ஆனை ஆனை! அழகர் ஆனை) என்று விரைவாகச் சொல்லி ஆடத் தொடங்குவாள். அச்சமயம் என்னுடைய நாவலின் பதினேழாம் அத்தியாயத்தில் பிரதாபசிம்மன் காஞ்சனமாலையுடன் நள்ளிரவில் சிறைக்

கூடத்தின் உயரமான ஒரு சன்னல் வழியாகக் கீழே பொங்கி யோடும் ஆற்று நீரில் குதித்துவிடுகிறேன்.

என்னுடைய அறை, வாசல்பக்கம் பார்த்தாற்போல் உள்ளது. திடுமென மினி, 'ஆக்டும் பாக்டும்' விளையாட்டை நிறுத்திவிட்டுச் சன்னலருகே ஓடி உரத்துக் கூப்பிட்டாள்; ''ஏ, காபூல்காரா காபூல்காரா!''

அழுக்கடைந்த கால்சட்டையும், தலையில் பாகையுமாய்த் தோளிலும் கையிலும் தொங்கும் பைகளில் ஆங்குர் (உலர்ந்த திராட்சை) முதலிய பொருள்கள் அடங்கிய பெட்டிகளைச் சுமந்தவண்ணம் நெட்டையான காபூல்காரன் ஒருவன் மெதுவாகத் தெருவில் சென்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்துத்தான் என் அருமைச் செல்வி-அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியாது-மூச்சு இரைக்க இரைக்க அவனைக் கூப்பிடத் தொடங்கினாள். 'ஐயோ, இதென்ன தொல்லை! அவன் தன் சுமையை நம் வீட்டில் இறக்கிவிட்டால், அப்புறம் நாம் நம் நவீனத்தின் பதினேழாம் படலத்தை முடித்தாற்போலத்தான்!' என்று திகில் பட்டேன்.

மினியின் உரத்த கூப்பாட்டைக் கேட்டு அந்தக் காபூல்காரனும் திரும்பிப் பார்த்துச் சிரித்தவாறு என் வீட்டை நோக்கி வந்தானே இல்லையோ, மேல் மூச்சு வாங்க மினி பிடித்தாள் ஓட்டம், உட்புறம்! தலைகாட்டவே இல்லை. அவள் மனத்தில், ஒரு வேளை காபூல்காரன் தோளில் தொங்கும் அந்தப் பெரிய பைக்குள் தன்னைப்போல நாலைந்து குட்டிக் குழந்தைகள் அடைபட்டிருக்குமோ என்ற திகிலோ என்னவோ!

இந்தப் பக்கம் காபூல்காரன் உள்ளே நுழைந்து சிரித்த முகமாய் எனக்குச் 'சலாம்' செய்து நின்றான். என்னுடைய பிரதாபசிம்மனும் காஞ்சனமாலையும் இப்பொழுது மிகச் சிக்கலான ஒரு கட்டத்தில் இருப்பினும், காபூல்காரன் என்னவோ வந்தாயிற்று, அவனிடம் ஏதாவது வாங்காமல் போனால் நன்றாக இராதெனத் தோன்றியது.

பழவகை ஏதோ கொஞ்சம் வாங்கினேன். அவனுடன் சற்று அளவளாவிப் பேசினேன். அப்துர் ரஹ்மான், ருஷியர்-ஆங்கிலேயர் இவர்களுக்கிடையே நிலவும் உறவு, எல்லைப் புறக் காவல் இப்படி ஏதேதோ பேச்செழுந்தது.

கடைசியில் அவன் எழுந்து போகையில், ''பாபு, உங்கள் பெண் குழந்தை எங்கே?'' என்றான்.

காபூல்காரனிடம் மினி கொண்டிருந்த அச்சத்தைப் போக்கும் எண்ணத்துடன் உட்புறம் நோக்கி அவளை அழைத்தேன். வந்தாள். என் உடலுடன் ஒட்டியவாறு காபூல்காரனின் முகத்தையும், அவன் தோளில் தொங்கும் பெரிய பையை

யும் மாறி மாறி மருண்டு நோக்கினாள். காபூல்காரன் தன் பையிலிருந்து சிறு திராட்சை, பாதாம்பருப்புச் சிலவற்றை எடுத்து அவள் சின்னஞ்சிறு கையில் தரப் போனான். ஆனால் அவள் அவற்றை வாங்கிக்கொள்ளவே இல்லை. இரட்டிப்புச் சந்தேகம் வந்து என் முழங்காலைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டாள். இவ்வாறு இருவருக்கும் முதல் அறிமுகம் ஆயிற்று.

சில நாட்களுக்குப் பின்னர், ஒரு நாள் காலை முக்கிய அலுவல் ஒன்றைக் கவனிக்க வீட்டிலிருந்து நான் புறப்படும் பொழுது, என் சிறு மகள், வாசல் இடைகழியில் பெஞ்சியில் அமர்ந்து மடை விண்டதுபோல் என்னவோ பேசிக்கொண்டிருந்தாள். அந்தக் காபூல்காரன் அவள் காலடியில் அமர்ந்து அதையெல்லாம் கேட்டு மகிழ்வதைப் பார்த்தேன். அவனும் ஏதோ தனக்குத் தெரிந்த அரைகுறையான வங்கமொழியில் பதில் சொல்லிக்கொண்டிருந்தான்.

மினி தன் ஐந்தாண்டு அநுபவத்தில் தந்தையைத் தவிர இப்படித் தன் பேச்சைப் பொறுமையுடன் கேட்கும் வேறு ஒருவரைப் பார்த்தே இராள். அவளுடைய பாவாடையின் சின்ன முடிச்சில் பாதாம் பருப்பும் திராட்சையும் நிறைய இருந்தன. நான் காபூல்காரனை நோக்கி, ''இதெல்லாம் அவளுக்கு ஏன் கொடுத்தாய்? இனிமேல் தராதே'' என்றதும், ஜேபியிலிருந்து அரை ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்து அவனுக்குத் தந்தேன். அவன் தயங்கியவண்ணம் அதை வாங்கித் தன் பைக்குள் போட்டுக்கொண்டான்.

நான் வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது அந்த அரை வெள்ளிக் காசு ஒரு முழு அளவு குழப்பத்தை உண்டுபண்ணியிருந்தது. மினியின் தாய் தன் கையில் பளபளக்கும் ஓர் அரை ரூபாய்க் காசை உருட்டிக்கொண்டே தன் மகளைப் பார்த்து, ''எங்கே கிடைத்தது இந்தத் துட்டு? யார்கொடுத்தார்கள்?'' என்று கேட்டாள்.

மினி அதற்கு, ''காபூல்காரன் வந்தானே, அவன் கொடுத்தான், அம்மா'' என்றாள்.

அவள் அம்மா, ''எதற்காக இதை அவனிடம் பிச்சை கேட்டாய்?'' என்றாள்.

மினி அழுகை வெடித்து வர, ''இல்லை, அம்மா, நான்.. நான் கேட்கவில்லை, அவனே கொடுத்தான்'' என்றாள். அப்போது மினியை அந்த ஆபத்திலிருந்து காத்து நான் வெளியே அழைத்து வந்துவிட்டேன்.

எனக்கு இப்போதுதான் விஷயம் தெரிந்தது. அந்தக் காபூல்காரனும் மினியும் இதுவரை சந்தித்தது இரண்டு தடவையல்ல. நாள் தவறாமல் அவன் வந்து அவளுக்கு நிறையப்

பிஸ்தா, பாதாம் எல்லாம் தந்து அவளுடைய சிறு உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டான். இதற்குள் இவர்கள் நெடுநாளைய நண்பர்களைப் போல் பேசி அளவளாவுவதைக் கண்டு எனக்கே வியப்பாக இருந்தது. ரஹ்மத்தைப் (காபூல் காரனின் பெயர்) பார்த்தவுடன் என் மகள் சிரித்தவண்ணம், ''காபூல்காரா! உன் பெரிய பைக்குள் என்னவோ இருக்கே, அது என்ன?'' என்பாள்..

ரஹ்மத்தும் மூக்குச் சுவரத்துடன் சிரித்துக்கொண்டே, ''யானை'' என்று பதில் கூறுவான். அதாவது தன் பெரிய பைக்குள் யானை ஒன்று இருப்பதாகச் சொல்வது ஒரு தமாஷ் பேச்சு. இது போன்ற வேடிக்கையான உரைகளை இருவரும் பரிமாறிக்கொள்வார்கள். அந்த நிர்மலமான சரத்காலத்துப் பகல் வேளையில் வயது மூதிர்ந்தவனும், இளம்பிஞ்சான ஒரு பெண்ணும் சேர்ந்து சிரிப்பதைக் காண எனக்குக் களிப்பூறல் எடுக்கும். இவர்களிடையே ஆழ்ந்த நட்பு வெளிப்பட்டது. ரஹ்மத் மினியைப் பார்த்து, ''குழந்தை, நீ உன் மாமனார் வூட்டுக்கு எப்போ போவே?'' என்பான்.

வங்க சமூகத்தில் பிறவி எடுத்த பெண்பாலார் எவருக்கும் இந்த 'மாமனார் வீடு' என்ற சொற்றொடர் மிகவும் பழக்கப் பட்டதாகும். ஆனால் நான் இந்தக் காலத்து மனிதனாகிவிட்ட படியால் இளம்பிராயமுள்ள என் பெண்ணுக்கு இந்த 'மாமனார் வீட்டின்' நினைவையே உண்டாக்கவில்லை. அதனால் ரஹ்மத்தின் பேச்சில் மறைந்திருந்த பொருளை மினி புரிந்துகொள்ளவில்லை. அவன் கேட்டதற்கு விடை தராமல் இருப்பது தன் இயல்புக்கு மாறானது என்ற உணர்வில் மினி திருப்பிக் கேள்வி கேட்டாள்; ''உன் மாமனார் வீட்டுக்கு எப்போது போவே?'' என்றாள்.

ரஹ்மத் தன் கற்பனைக் கண்முன் வந்த அந்த மாமனாரை நோக்கி, தன் இரு கைகளை முஷ்டியிட்டு உயரத் தூக்கி, ''அந்த மாமனாரைக் கொன்று போடுவேன்'' என்பான்.

இதைக் கேட்டு மினி, 'மாமனார்' என்னும் புரிபடாத ஓர் அப்பாவி ஜீவனுக்கு நேரிடப்போகும் கதியைக் கற்பனையில் கண்டு இடி இடி என்று நகைப்பாள்.

துல்லியமான சரத்காலம். பழங்காலத்தில் இப்பருவத்தில்தான் வேந்தர் பார்வேட்டை மேல் புறப்படுவார்கள். ஆனால் நானோ கல்கத்தாவை விட்டு ஒரு நாளாகிலும் வேறிடம் போனவனல்ல. அதனாலேயே என் மனம் உலகு எங்கணும் சுற்றித் திரிந்தது. என் அறையின் குறுகிய எல்லைக்குள் ஒடுங்கியவன்; அதனால் வெளியுலகைக் குறித்து எனக்குமட்டிலா ஆவல் இருந்து வந்தது. ஒரு வெளிநாட்டின் பெயரைக்

கேட்டமாத்திரம், என் சிந்தனை அவ்விடத்தை நோக்கித் தாவி, வேற்று நாட்டவனைக் கண்டதும் எனது கற்பனை, ஆறு மலை வனம் சூழ்ந்த ஓர் அழகிய ஊரின் சித்திரத்தை எழுப்பிக்கொள்ளும். அல்லல் இராததும் யதேச்சையுமான ஒரு வாழ்க்கை முறை என் கண்முன் விரியும்.

நானே, மரம் செடி போன்ற தாவர இனத்தவனாகிவிட்டேன். என் இடத்தை விட்டு நகருவதில்லை. வெளியே செல்வதென்றால் இடி விழுந்து போவேன். இதனால், காலையில் என் சிறு அறையில் மேஜை முன் அமர்ந்து இந்தக் காபூல்காரனுடன் உரையாடுவது, இவ்வுலகைச் சுற்றிப் பார்ப்பது போன்ற மகிழ்ச்சியைத் தரும் எனக்கு. இரு புறமும் கடத்தற்கரிய, செங்குத்தான, செந்நிற மலைத் தொடர்கள்; அவற்றினூடே குறுகலாகச் செல்லும் பாலைவழி; சாமான்களைச் சுமந்து நகரும் ஒட்டகங்களின் வரிசை. அவற்றின்மீது அசைந்து ஆடிக்கொண்டே செல்லும் வணிகர்: பாறை வழியே நடந்து செல்லும் பிரயாணிகளும் உண்டு. சிலர் ஈட்டியும் துப்பாக்கியும் தாங்கியிருப்பர். காபூல்காரன் தன் இடிக்குரலில் அரை குறையான வங்கமொழியில் தன் கதையை எனக்குச் சொல்லும்போது இத்தகைய சித்திரங்கள் என் மனத்திரையில் ஆடும்.

மினியின் அம்மா சற்றுப் பயங்கொள்ளி. தெருவில் ஏதாவது உரத்த சத்தம் கேட்டால், இந்த உலகத்துக் குடிவெறியர்கள் எல்லாரும் ஒன்று கூடித் தன் வீட்டை நோக்கித்தான் ஓடி வருகிறார்களோ என்று கதிகலங்கிப் போவாள். எங்கேதான் கள்ளர், குடியர், பாம்பு, புலி, மலேரியா, மூட்டைப்பூச்சி, பாச்சை, வெள்ளையர் இல்லை? இதுபோன்ற உலகில் இத்தனை நாள் வாழ்ந்த பின்னரும் அவள் மனத்தைவிட்டு இந்தக் கிலி அகலவே இல்லை.

காபூல்காரன் ரஹ்மத் விஷயத்திலும் அவளுக்குச் சந்தேகமே. அவன்மீது ஒரு கண் இருக்க வேண்டுமென்று எனக்கு எப்போதும் எச்சரித்து வந்தாள். அவளுடைய வீண் திகிலை நான் என் சிரிப்பால் உதறித் தள்ளியும், அவள் இந்தக் கேள்வியைப் போடாமல் இல்லை: ''எப்போதாவது குழந்தைகள் திடுமெனக் காணாமல் போய்விடுவதில்லையா? அந்தக் காபூல் தேசத்தில் அடிமைகளை வைத்துக்கொள்ளும் வழக்கம் இல்லையா? மலைமாதிரி இருக்கும் இந்தக் காபூல்காரனுக்கு, இந்தத் துளியுண்டு மினியைக் கவர்ந்து செல்வது முடியாத காரியமா?''

இது நடக்கக்கூடியதென்றாலும் நம்பத் தகுந்ததன்று. ஆனால் அவரவர் நம்பிக்கை அவரவருக்கு இருப்பது இயல்புதானே? என் மனைவிக்கு ரஹ்மத்திடம் நம்பிக்கையில்லை. அதற்காக அவன் இங்கு வருவதை நான் தடை செய்துவிடவில்லை!

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் வந்தால் ரஹ்மத் தன் ஊருக்குப் போவான். அதற்கு முன், தனக்கு வரவேண்டிய பாக்கிப் பணத்தைத் திரட்டுவதில் மும்முரமாக இருப்பான். இதற்காக அவன் எத்தனையோ கடன்காரர்களின் வாசல் படி ஏறி இறங்க வேண்டியிருக்கும். இருப்பினும், நடுநடுவே மினியை வந்து பார்க்காமல் போகமாட்டான். இருவரிடையே ஏதோ சூழ்ச்சி நிலவுவது போலவே தோன்றும், வெளியே இருப்பவருக்கு. ஒரு நாள் காலையில் அவன் இவ்வாறு மினியை வந்து பார்க்கத் தவறிவிட்டாலும், கட்டாயம் மாலை நேரம் வந்துவிடுவான். அந்த மாலை மங்கலையும், தொள தொளவென்ற பாய்ஜாமாவும் சொக்காயும் அணிந்த அந்த நெட்டை விதேசியையும் பார்க்க நேரிட்டால் எவர் மனமும் சற்றுச் சந்தேகந்தான் கொள்ளும். 'காபூல்காரா' என்று சிரித்த முகத்துடன் மினி அவனிடம் ஓடி வருவதைக் காணும்பொழுது முரணான வயதுடைய இருவரிடையே நிலைத்துப் போன ஓர் அன்பின் பிணைப்பு எவர் உள்ளத்திலும் இன்பச் சிலிர்ப்பை மூட்டும்.

ஒரு நாள் காலை, எனது அறைக்குள் நான் அச்சுப்பிழை திருத்துவதில் கவனமாக இருந்தேன். குளிர்காலம் விடைபெறுவதனாலோ என்னவோ, இரண்டு மூன்று நாட்களாக ஒரே சிலுசிலுப்பு ஒடுக்கி எடுத்துவிட்டது. சன்னலைப் பீறிக் கொண்டு காலைக் கதிரவன் ஒளி என் மேஜைமீதும் காலடியிலும் வந்து படிந்தது. மிகவும் இதமாக இருந்தது, அது தரும் வெம்மை. அப்போது மணி எட்டு இருக்கும். தலையிலும் கழுத்திலும் கம்பளி மூடியிட்டுக் காலைநேர நடை பழகிவிட்டு வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தனர் ஜனங்கள். அச்சமயம் தெருவில் கலவரமான சப்தம் கேட்டது. என்ன வென்று கவனிக்கையில், இரு போலீசார் ரஹ்மத்தைத் தம் கையில் கெட்டியாகப் பிடித்தவண்ணம் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் பின்னல் வேடிக்கை பார்க்கும் சிறுவர் கூட்டம். ரஹ்மத்தின் அங்கியில் இரத்தக் கறை. போலீஸ் சேவகன் ஒருவன் கையில் இரத்தம் தோய்ந்த பிச்சுவா. நான் அந்தச் சேவகர்களை நிறுத்தி, ''விஷயம் என்ன?'' என்று விசாரித்தேன். விஷயத்தின் சில பகுதி அவர்கள் மூலமும், சில ரஹ்மத் வாயிலாகவும் தெரிந்துகொண்டேன். பக்கத்துத் தெருவில் இருக்கும் ஓர் ஆள் ராம்புரிச் சால்வை வாங்குவதற்காக ரஹ்மத்திடம் பணம் கடன் வாங்கியிருந்தானும். ரஹ்மத் பணம் கேட்டபோது அவன் கடனே வாங்கவில்லை என்று சாதித்தானும். இதிலிருந்து பேச்சு வலுத்து, கோபாவேசத்தில் ரஹ்மத் அந்த ஆளைக் கத்தியால் குத்தும் அளவிற்கு வந்துவிட்டது.

ரஹ்மத் அந்தப் பொய்யனைக் குறித்து நாக்கில் நரம்பில்லாமல் திட்டிக்கொண்டிருந்தான். அச்சமயம் என்னுடைய மினி, ''காபூல்காரா'' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளேயிருந்து ஓடி வந்தாள்.

ரஹ்மத்தின் முகம் அந்நிலையிலும், அவளைப் பார்த்த கணமே, மலர்ச்சியுற்றது. அப்போது அவன் தோளில் பை எதுவும் தொங்கவில்லை. அதனால் அந்தப் பையைக் குறித்துச் சர்ச்சை எழவில்லை. மினி காபூல்காரனை விளித்து, ''நீ மாமனார் வீட்டுக்கா போகிறாய்?'' என்றாள். ரஹ்மத்தும் சிரித்தவாறு, ''அங்கேதான் போகிறேன்'' என்றான். தான் கூறிய வார்த்தையால் அவள் மகிழ்ச்சியுறவில்லை என்பதை உணர்ந்து காபூல்காரன் தன் வலிவான கையைக் காட்டி, ''அந்த மாமனாரைக் கொன்று போடுவேன்; ஆனால் என்ன செய்வது? என் கையைக் கட்டிவிட்டார்களே!'' என்றான்.

உயிருக்கு ஆபத்து நேரிடும் வகையில் ஒருவனைக் கத்தியால் குத்திய குற்றத்திற்கு ரஹ்மத்துக்கு ஆறு ஆண்டுச் சிறைவாசத் தண்டனை கிடைத்தது.

அவனை அடியோடு மறந்தே போனேன். என்றும் வழக்கம்போல் நாம் நம் வேலையில் ஈடுபட்டு நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கும்போது யதேச்சை மிக்க மலைப்பிரதேசத்தில் பிறந்த ஓர் ஆண்மகன், மதிலோங்கிய வெஞ்சிறையில் தன் காலத்தை எவ்வாறு கடத்துகிறான் என்பது நம் நினைவுக்கே வருவதில்லை. சிறிது பொழுதும் சும்மா இராத மினியின் போக்கு வெட்கம் தரும் விஷயம் என்பதை அவளைப் பெற்ற தந்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். தன் பழைய நண்பனை அவள் மறந்தே போனாள். இப்போது வண்டிக்கார ரவி அவளுடைய கூட்டாளி. அவளுக்கு வயது ஏற ஏற நண்பர்கள் ஒவ்வொருவராக மாறத் தலைப்பட்டனர். இப்போதெல்லாம் அப்பாவின் அறைக்குள் அவள் தலை காட்டுவதே இல்லை. நானும் அவளுடன் 'டூ' விட்டுவிட்டேன்.

ஆண்டுகள் சில ஓடின. மீண்டும் ஒரு சரத்காலம். மினி பெரியவள் ஆகிவிட்டாள். அவளுக்கு ஒரு வரனும் குதிர்ந்து விட்டான். நவராத்திரி விடுமுறையிலேயே மணமுகூர்த்தம் கோடித்தாகிவிட்டது. 'வரைராஜனின் கண்மணியான அந்த உமை'யுடன் என் அகத்தில் ஓடி விளையாடிய இந்த ஆனந்த ரூபிணியும், பிறந்தகத்தை விட்டுக் கணவனுடன் வாழ்க்கை நடத்தச் சென்றுவிடுவாள்.

அன்று வைகறைப் பொழுது என்றும் இராத பொலிவுடன் விளங்கியது. மாரிக்குப் பிறகு மாசு நீங்கித் தூய்மையாகத் திகழும் கதிரவன்ஒளி பொன்னெனப் பெருகி மின்னியது

திசை எங்கும். கல்கத்தாவின் குருட்டுச் சந்துகளில் உள்ள வீடுகள்மீதும் வெயில் பொன் மெருகைப் பூசி இனிமை பூட்டியது.

என் வீட்டில் இரவின் கடையாமம் தொடங்கி மங்கள மேளத்தின் இசை வழிந்தோடியது. அது என் உள்ளத்தில் என்புவரைக்கும் புகுந்து என்னை அசைத்துவிட்டது. இரக்கம் தொனிக்கும் அந்தப் 'பைரவி' ராக ஆலாபனை எனக்கு நேர இருக்கும் ஒரு பிரிவின் துயரை அச் சரத்காலத்து ஒளியுடன் கலந்து இவ்வுலகு முழுதும் பரவியதாகச் செய்தது. பொழுது விடிந்ததும் என் மினிக்கு விவாகம்.

காலையிலிருந்து ஒரே இரைச்சல். ஏராளமான கூட்டம், வருவோரும் போவோருமாய். முற்றத்தில் பூ வேய்ந்த மணப்பந்தல். வீட்டின் கூடம், அறை, தாழ்வாரம் எங்கும் பளிங்கு ஜாலர் டங்டிங் என்று ஒலி செய்யும் லஸ்தர் விளக்குகள். பல்வேறு மனிதக் குரல்கள்; கல்யாணச் சந்தடி.

நான் எனது அறையில் ஏதோ கணக்கு வழக்குச் சரி பார்த்துக்கொண்டிருந்தேன். அச்சமயம் ரஹ்மத் அங்கே தோன்றி, எனக்குச் 'சலாம்' வைத்தான்.

''அடேடே ரஹ்மத்தா! எப்போது வந்தாய்?'' என்றேன் நான்.

''நேற்று மாலையில்தான் விடுதலை ஆகி வந்தேன், பாபு'' என்றான் அவன்.

அச்சொல் என் செவியில் கடுமையாக ஒலித்தது. இது வரை கொலைஞன் எவனையும் நான் நேரில் பார்த்ததில்லை. இப்போது ரஹ்மத்தைக் கண்டபோது என் உள்ளம் கூசியது. இந்தச் சுபவேளையில் இவன் இந்த இடத்தை விட்டுப் போனால் தேவலை என்று எனக்குத் தோன்றியது. நான் அவனை நோக்கி, ''இன்று ஒரு விசேஷம் இந்த வீட்டில்; நீ அப்புறம் வந்தால் நன்றாக இருக்கும்'' என்றேன்.

இதைக் கேட்ட அவன் உடனே போக நகர்ந்தான். தெருப் பக்கம்வரை சென்றதும் திரும்பி வந்து அவன், ''குழந்தையை ஒருதரம் நான் பார்க்கக் கூடாதா?'' என்றான்.

மினி, அவன் முன்பு பார்த்த சிறு பெண்ணாகவே இருப்பாள் என்பது அவன் நினைப்போ என்னவோ! முன்போல் 'காபூல்காரா', என்று கூவிக்கொண்டே அவள் ஓடி வந்து பார்ப்பாள் என்றும் அவன் நினைத்தானோ என்னவோ? முன்போல் 'காபூல்காரா' என்று கூவிக்கொண்டே அவள் ஓடி வந்து சிரிப்பும் குதூகலமுமாய்த் தன்னுடன் பேசுவாள் என்று அவன் எண்ணினானோ போலும்!

அந்தப் பழைய அன்பின் பிணைப்பை உன்னி அவன் தன்

நாட்டைச் சேர்ந்த ஒருவனிடமிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தில் 'ஆங்குர்', 'பாதாம்' போன்ற பழங்களை ஆவலாக எடுத்து வந்திருந்தான். ஆனால் அவன் தோளில்மட்டும் அந்தப் பெரிய பையைக் காணவில்லை.

''இன்று வீட்டில் ஒரு முக்கிய காரியம். அவளால் வந்து பார்க்க முடியாது'' என்றேன் நான்.

அவன் முகம் வாடிப் போயிற்று. நின்ற இடத்தைவிட்டு அசையாமல் சில கணம் இருந்தான். அவன் கண்களில்தான் என்ன ஏக்கம்! அவன் நிமிர்ந்து, ''பாபு, சலாம், வருகிறேன்'' என்றதும் வெளியே போய்விட்டான்.

என் மனத்தை ஒரு வேதனை உலுக்கிவிட்டது. அவனைத் திருப்பி அழைக்கலாமென்று நான் நினைக்கையில் அவனே திரும்பி வந்துகொண்டிருந்தான். அருகில் வந்து, ''இந்த ஆங்குரும் பாதாமும் குழந்தைக்கென்று கொண்டுவந்தேன்; அவளிடம் இதைக் கொடுத்துவிடுங்கள்'' என்றான் அவன்.

அதைப் பெற்றுக்கொண்டு அதற்கான விலையை நான் தர முற்படும்பொழுது அவன் என் கையைத் தொட்டு, ''உங்களுடைய தயையை நான் என்றும் மறவேன். எனக்கு இந்தக் காசு தேவை இல்லை'' என்றான் நெஞ்சடைக்க. மேலும் சொன்னான்: ''பாபு, உங்களுக்கு இருப்பதுபோல் எனக்கும் ஒரு பெண் தொலைவான என் நாட்டில் இருக்கிறாள். அவளை நினைத்துக்கொண்டுதான் உங்கள் குழந்தையைப் பார்த்து இதைக் கொடுத்துவிட்டுப் போக வந்தேன். விற்றுக் காசாக்குவதற்கன்று'' என்றான்.

இதைக் கூறியதும் அவன், தன் சட்டையின் உட்புறம் கையைவிட்டு மார்புக்கு அணித்தாகச் செருகியிருந்த அழுக்கடைந்த ஒரு காகிதத் துண்டை வெளியே எடுத்து என் மேஜை மீது வைத்தான். ஒரு சிறு கையின் தளிர் விரல்களது அடையாளம் அதில் பதிந்திருப்பதைக் கண்டேன். போட்டோ அன்று; வண்ண ஓவியம் அன்று; கையில் மசி தடவி ஒற்றி எடுத்த அடையாளமே! தன் மகளின் நினைவுச் சின்னமாக அதைத் தன் இதயத்தின் அருகில் ஜேபியில் வைத்துக் காப்பாற்றி வந்திருக்கிறான் அவன். அதனுடன் அவன் கல்கத்தா வீதிதோறும் அலைந்து தன் சரக்கை விற்பனை செய்வான். அவனுடைய அச்சிறு குழந்தையின் கை அடையாளம் இத்தனை நாட்கள் பிரிவின் வேதனையால் துடிக்கும் அவன் இதயத்திற்கு என்ன ஆறுதல் தந்ததோ?

அதைப் பார்த்ததும் எனக்குக் கண்ணீர் அரும்பியது. அவனை ஒரு காபூல்காரன்; சரக்கு விற்பவன். நானை வங்காளி; எவர் தயையையும் நாடாமல் வாழ்பவன். எங்களிடையே

உள்ள வேற்றுமையை அறவே மறந்தேன். நான் எப்படியோ அவனும் அப்படியே என்பதை உணர்ந்தேன். அவனும் ஒரு பேதையின் தந்தை; நானும் ஒரு பெண்ணின் தந்தை. தொலைவில் மலைவாழ் அந்தச் சிறு 'பார்வதி' யின் விரலின் சின்னம் என் மினியை எனக்கு நினைப்பூட்டியது. உடனே உட்புறம் விரைந்தேன். என் மகளை அழைத்தேன். சிலர் தடை கூறினர். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. சிவப்பு நிறக் கூறை அணிந்து, நுதலில் சந்தனத் திலகம் துலங்க மங்கள மணமகள் கோலத்துடன் மினி என் அருகில் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் காவல்காரன் திடுக்குற்றுப் போனான். அந்தப் பழைய வேடிக்கைப் பேச்சு அவன் வாயிலிருந்து வரவில்லை. கடைசியில் அவன் சிரித்து, ''குழந்தை, நீ மாமனார் வீட்டுக்குப் போகிறாயா?'' என்றான்.

இப்பொழுது மாமனார் என்ற சொல்லுக்குரிய பொருளை மினி நன்கு அறிவாள். முன்போல் அந்தக் காவல்காரனுக்குத் தக்க விடை தர அவளால் முடியவில்லை. ரஹ்மத் சொன்னதைக் கேட்டதும் காதளவும் நாணத்தால் சிவந்தது அவளுக்கு. முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள். மினி முதல் முதல் காவல்காரனைச் சந்தித்தபோது உள்ளே ஒட்டம் பிடித்தது என் நினைவுக்கு வந்தது. என் உள்ளத்தை என்னவோ வாட்டியது.

மினி சென்றதும், நெடுமூச்செறிந்து ரஹ்மத் தரையில் அப்படியே உட்கார்ந்துவிட்டான். தன்னுடைய பெண்ணும் மினியைப் போல வளர்ந்து பெரியவளாகியிருப்பாள்; அவளைச் சந்திக்கும்பொழுது புது விதமாகத்தான் அவளுடன் அளவளாவ வேண்டும்; பல வருடங்களுக்கு முன் தான் பார்த்த குட்டி மகளாக இருக்கமாட்டாள், அவன் பெண்: எந்த மாதிரி மாறிப் போயிருப்பாளோ யாருக்குத் தெரியும்? அவன் நெஞ்சில் இது போன்ற எண்ணங்கள் உலவினவோ என்னவோ? சரத்காலப் புலரிவேளையில், இன்பம் தரும் கதிரொளியுடன் மங்கள நாகசுர இசையும் இழைந்தது. ரஹ்மத் கல்கத்தாவின் ஒரு சந்து வீட்டில் அமர்ந்து ஆப்கனிஸ்தானத்தின் ஒரு வறண்ட மலையகத்தின் சித்திரத்தை அகக்கண்முன் பார்த்துக்கொண்டிருந்தான்.

நான் அவன் கையில் பெருந்தொகை மதிப்புள்ள ஒரு நோட்டைத் தந்து, ''ரஹ்மத், உன் நாட்டிற்குப் போ; உன் பெண்ணிடம் போய்ச் சேர். நீங்கள் இருவரும் சந்தித்துக் காணும் அந்த இன்பத்தால் என் மினிக்கு மங்களம் உண்டாகட்டும்'' என்றேன்.

அந்தத் தொகையை அவனுக்கு நன்கொடையாகத் தந்த தனால் தேவையிராத செலவுகளைக் குறைத்துவிட்டேன். மணப்

பந்தலில் மின்விளக்குப் போடுவதாகவும், பாண்டு வாத்தியம் வைப்பதாகவும் இருந்தேன். அவற்றை நான் நிறுத்திவிட்டதால் பெண்டுகளிடையே ஒரே முணுமுணுப்பு. ஆனால் நான் ஓர் ஏழையின் உள்ளத்தில் ஏற்றிய மங்கள ஒளியால் இந்த மணவிழா நிறைவடைந்தது.

தண்டனை

1

துக்கிராம் ருஇயும், சிதாம் ருஇயும் உடன்பிறந்தவர்கள். கையில் வெட்டுக் கத்தியுடன் சணல் அறுக்க அவர்கள் வெளியே கிளம்பிச் சென்றதும், அவர்களுடைய மனைவிகளிடையே வாய்ச்சண்டை வலுத்துவிடும். ஆனால் அந்த ஊரினருக்கு இயற்கையில் எத்தனையோ வகையான இரைச்சல் கூரக் கேட்டிருப்பதுபோல் இவர்களுடைய கூச்சலும் பழக்கமாகிவிட்டது. இந்த ஓரகத்திகளின் பூசற்குரல் கேட்டதுமே, ''ஆ! ஆரம்பமாகிவிட்டது; இது கொஞ்சத்தில் ஓயாது'' என்று ஊரார் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வார்கள். அன்றுடம் நிகழும் இந்தச் சச்சரவு ஒரு நாளேனும் நின்றதாகத் தெரியவில்லை. காலையில் கிழக்கே கதிரவன் தோன்றுவதன் காரணத்தை எவரும் ஆராய்வதில்லை. அதே போல் இக்குடியானவர் வீட்டின் இரு ஓரகத்திகளுக்குமிடையே போர் மூள்வதைக் குறித்து எவரும் சிறிதும் அக்கறை கொள்வதில்லை.

இவர்களுடைய சச்சரவுகள், அக்கம் பக்கத்தவர்களைப் பாதிக்காமற் போனாலும் அவ்விரு சகோதரர்களை வருத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் இருவரும் இந்த நீண்ட வாழ்வுப்பாதையில் ஒரே வண்டியில் ஏறிச் செல்பவர்கள். பள்ளம், மேடு இவற்றைக் காட்டாத வில் வண்டியன்று; சற்றைக்கொருதரம் குலுக்கிப் போடும் கட்டை இருசு உடைய சகடமே! விதி தங்களுக்கென இழைத்துள்ள இந்த நியமத்திற்கு அவர்கள் உட்பட்டிருந்தனர்.

என்றைக்காவது சந்தடியற்று வீடு இருந்தால் எதிர்பாராததோர் உபத்திரவம் வருமோ என்ற சங்கை ஏற்படுவது இயல்பே. அது எப்போது வரும், எப்படி வரும் என்பது குறித்து யாராலும் முன்கூட்டிச் சொல்ல முடியாது.

நம் கதை தொடங்கும் நாளன்று, இரு சகோதரர்களும் சணல் அறுத்துவிட்டுக் களைத்துப் போய் மாலை நேரத்தில் சற்றுப் பொழுதோடேயே தம் வீட்டுக்கு வந்தபோது, இது போன்றதொரு நிச்சப்தம் நிலவுவதைக் கண்டனர்.

வெளியே ஒரே இறுக்கமாக இருந்தது. ஒரு பாட்டம் நல்ல மழை பெய்தது. இன்னும் வானில் நாற்புறமும் மேகம்

வரப்புக் கட்டியிருந்தது. துளிக்கூடக் காற்று இல்லை. சில நாட்களாக இப்படி மழை பெய்ததால் வீட்டைச் சுற்றிப் புல்லும் பூடும் செழிப்பாக முளைத்திருந்தன. நீர் தங்கியுள்ள சணல் கொல்லைகளிலிருந்து புதிதாகத் தளிர்க்கும் பூடுகள் விடும் வெம்மை மூச்சு, கனத்த சுவர்போல் சூழ்ந்திருந்தது. மாட்டுத் தொழுவத்தின் பின்புறமுள்ள குட்டையிலிருந்து வரும் தவளைகளின் கூச்சலும், சில்வண்டின் ஒசையும் அவ்வந்திப் பொழுதை நிரப்பின.

சற்றுத் தொலைவில் மழை வெள்ளம் பெருகும் பத்மா ஆற்றின்மீது கருமுகில்கள் பரப்பும் நிழல் பார்க்க அச்சம் தருவதாக இருந்தது. கரைமீதுள்ள வயல்கள் சரிந்து போனதால் ஊருக்கு அருகில் வெள்ள நீர் தலை காட்டியது. இப்படி நிலங்கள் சரிந்ததால், ஆற்றோரமாக உள்ள மா பலா மரங்களின் வேர்கள் வெளியே தெரிந்தன. நரம்பொடியக் கைவிரல்களைத் தூக்கி, எதையோ கெட்டியாகப் பற்றத் தவிப்பது போல் விளங்கின.

துக்கிராமும் சிதாமும் அன்று ஜமீன்தார் அலுவலகத்தில் வேலை செய்யச் சென்றிருந்தனர். அந்தப் பக்கம் வயலில் அறுவடைக்குக் காத்திருந்தன முற்றி வளைந்த கதிர்கள். இந்த வெள்ள நீர் உள்ளே பெருகுவதற்கு முன் அறுவடை செய்வதற்காக ஏழை எளிய மக்கள் தம்தம் சுழனிகளை நோக்கிச் செல்லும் பொழுது, இந்த இரு சகோதரர்களையும் ஜமீன்தார் ஆட்கள், வலுக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றனர். ஜமீன்தார் அலுவலகத்தின் கூரையில் ஒழுக்கு. அதை மூடி மறைப்பதற்கு, தென்னங் கீற்று முடைவதற்காக இவர்களை இட்டுச் சென்றனர். அன்று பகலெல்லாம் அந்த வேலை செய்தே இருவரும் அலுத்துப் போயிருந்தனர். பகலில் அங்கே போட்ட சோறு வயிறு நிரம்பவே இல்லை; மழையில் வேறு நனைய வேண்டியதாயிற்று. எதிர்பார்த்தபடி, செய்த வேலைக்கு ஏற்ற கூலியும் கிடைக்கவில்லை. இது போதாமல் அதிகாரிகளிடம் அநியாயமாக வசவும் திட்டும் வாங்கிக்கொண்டனர்.

சேற்றையும் சகதியையும் கடந்து அவர்கள் இருவரும் மாலைப் பொழுது வீட்டுக்கு வந்து பார்க்கையில், சிறிய ஓரகத்தி சந்திரா கட்டாந்தரையில் சேலைத் தலைப்பைப் பரப்பிக் கம்மென்று படுத்துக் கிடந்தாள். அன்று இருந்த மழை மூட்டம் போலவே, பகலெல்லாம் வேண்டும் அளவு கண்மாரி பொழிந்தானதும் அந்திவேளை நெருங்கியவுடன் ஒய்ந்து ஒடுங்கியிருந்தாள். பெரியவள் ராதா, முகத்தைத் துழுதுழு என்று வைத்துக்கொண்டு முற்றத்து விளிம்பில் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய ஒன்றரை வயதான ஆண் குழந்தை

அழுதுகொண் டிருந்தது. உடன்பிறந்தவர் இருவரும் உள்ளே நுழைந்தபொழுது, வெறும் உடம்புடன் குழந்தை வேறொரு மூலையில் தரையில் தூங்குவதைக் கண்டனர்.

பசியோடு வரும் துக்கிராம், ''தாமதம் செய்யாமல், சோறு போடு'' என்றான்.

பெரிய ஓரகத்தி, வெடி மருந்து உள்ள சாக்குப் பையில் நெருப்புப் பொறி பற்றியதுபோல் அக்கணமே வானமே கிடுகிடுக்கும் கடுமைக் குரல் எடுத்து, ''சோறு? ஆக்கிப் போட அரிசி கொடுத்துவிட்டுப் போனாய் இல்லே, கூலி செய்து பிழைத்து உனக்குச் சோறு போட வேண்டுமா நான்?'' என்றாள்.

நாளெல்லாம் உழைத்து, ஊதியம் காணுமல், பசி வயிற் றைக் கிள்ளத் தன்னைச் சுற்றி இருண்ட காட்சியே தென்படும் பொழுது, வீட்டுக்காரியின் இந்த ரோஷப் பேச்சு, ஏளனமான குத்தல், இல்லாத கோபத்தை மூட்டிவிட்டது துக்கிராமுக்கு.

சிறி எழும் புலியென அவன், ''என்ன சொன்னாய்?'' என்றதும் கணநேரத்தில் தன் வெட்டுக் கத்தியை வீசி, சற்றும் யோசிக்காமல் தன் மனைவியின் மண்டையில் ஆழப் பதித்தான். ராதா தன் ஓரகத்தியின் மடியில் அப்படியே சாய்ந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் துடிதுடித்து அவள் ஆவி பிரிந்தது. சந்திரா இரத்தம் தோய்ந்த உடையுடன், ''ஐயோ! இதென்ன அநியாயம்!'' என்று கூவத் தொடங்கினாள்.

துக்கிராம் வெட்டுக் கத்தியைப் போட்டுவிட்டுத் தலை யில் கை வைத்தபடி பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்து விட்டான். 'ஓ' என்று கூச்சல் கேட்கவே, படுத்துறங்கும் குழந்தை விழித்தெழுந்து அழத் தொடங்கியது.

வெளியே ஒரே அமைதி நிலவியது. ஆயச்சிறுவர் மாட்டு மந்தையுடன் கிராமத்தை நோக்கி வந்துகொண் டிருந்தனர். ஆற்றுக்கு அக்கரையில் பயிர் அறுவடை செய்யச் சென்றிருந்த ஏழெட்டுப் பேர் தம் சிறு ஓடங்களில் தாம் சிரமப்பட்டுவிதைத் துக் கிடைத்த விளைவை ஏற்றி, கரையில் இறக்கித் தானிய மூட்டைகளைத் தலையில் சுமந்தவண்ணம் தம் வீடுகளை நோக்கித் திரும்பிக்கொண் டிருந்தனர்.

சக்கரவர்த்தி வீட்டு ராமலோசனன், கிராமத் தபாலா பீ சில் கடிதம் ஒன்றைப் போட்டானதும், மன அமைதியுடன் மெல்ல ஹுக்காவிலிருந்து புகை இழுத்துக்கொண்டே திரும் பும்பொழுது, தனக்குத் துக்கிராம் கொடுக்க வேண்டிய பணம் பாக்கி நிற்பது ஞாபகத்துக்கு வரவே, தோளில் உருமாலை உதறிப் போட்டுக்கொண்டே அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

அந்தக் குடியானவர் வீட்டிற்குள் நுழைந்தபோது அவன்

கண்ட காட்சி குலையை நடுங்கச் செய்வதாயிருந்தது. இருள் கவிந்த அந்தத் தாழ்வாரத்தில் இருண்ட உருவங்கள் இருப்பது மங்கலாகத் தெரிந்தது. நின்று நின்று, அந்தத் தாழ்வாரத்தின் இருண்ட மூலையிலிருந்து யாரோ விம்மி விம்மி அழும் குரல் வந்தது. நடுநடுவே குழந்தை ஒன்று, ''அம்மா! அம்மா!'' என்று கதறும்பொழுது சிதாம் அதன் வாயைப் பொத்திக் கொண்டிருந்தான்.

சிதாம் விரைவாகத் தாழ்வாரத்திலிருந்து எழுந்து முற்றத்தில் சக்கரவர்த்தியின் அருகில் வந்தான். ''என்ன, பெண்டுகளுக்குள் சண்டையா, என்ன? இன்றெல்லாம் அவர்கள் ஓயவே இல்லைபோல் தெரிகிறதே?'' என்று விசாரித்தான் சக்கரவர்த்தி.

சிதாமுக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. பல்வேறு குழப்பமான எண்ணங்கள் அவன் மூளையில் சுழன்றன. பொறுத்தது பொறுத்தாயிற்று; இரவு அதிக நேரமானதும் பிணத்தை எங்கேயாவது மறைவாகப் போட்டுவிட வேண்டும் என்ற உறுதிக்கு வந்திருந்தான். இதற்கிடையில் இந்தச் சக்கரவர்த்தி திடுமென வருவானென்று அவன் நினைக்கவே இல்லை. சட்டென்று அவன் கேட்டதற்குப் பதில் தர முடியவில்லை. ''ஆமாம், இன்று சண்டை சற்று மும்முரந்தான்'' என்றான்.

சக்கரவர்த்தி, தாழ்வாரத்திற்கு வந்து, ''அதிருக்கட்டும், துக்கி ஏன் அழுகிறான்?'' என்று கேட்டான்.

இனித் தப்ப வழியில்லையென அறிந்த சிதாம், ''சண்டை வலுத்துச் சின்னவள், பெரியவள் மண்டையில் ஓங்கிக் கத்தியால் போட்டுவிட்டாள்'' என்றான்.

நேர்ந்துள்ள கேட்டைவிட வேறென்ன இருக்கக்கூடுமென்பது எவருக்கும் சட்டெனத் தோன்றுதது இயல்பே. பயங்கரமான இந்த உண்மையிலிருந்து தப்புவதற்கு என்ன வழி என்பது ஒன்றே சிதாமின் சிந்தனையைப் பற்றியது. அதைவிட அவன் கூறிய பொய் இன்னும் என்ன பயங்கரமானதென்பதை அவன் துளியேனும் உணரவில்லை. ராமலோசனன் கேட்டதற்குச் சமயசஞ்சீவிபோல் அவன் தந்த பதில் அமைந்தது. வாயில் வந்ததைச் சொல்லிவிட்டான். அதன் விளைவைக் குறித்து அவன் அச்சமயம் அக்கறை கொள்ளவில்லை. ராமலோசனன் விதிர்த்து, ''ஆ! என்ன செத்துப் போய்விட்டாளா?'' என்றான்.

சிதாம், ''செத்தே போய்விட்டாள்!'' என்றதும், சக்கரவர்த்தியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

சக்கரவர்த்திக்கோ இந்தச் சங்கடத்திலிருந்து தப்பி ஓட வழி தெரியவில்லை. 'அட ராமா, சாயங்கால வேளையும் அதுவுமாக, இந்த இழவிலா நாம் சிக்க வேண்டும்? கோர்ட்டில் சாட்சியாக நிற்கவேண்டி வந்தால் நம் உயிரே போய் விடுமே' என்று எண்ணினான்: சிதாம் அவன் கால்களை விடா மல், ''அண்ணா, நீதான் துணை. இப்போது என்னுடைய மனைவியைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டும்'' என்று அழுது வேண்டினான்.

கோர்ட்டு வழக்கு, விவகாரம் போன்ற விஷயங்களில் அந்தக் கிராமத்திலேயே ராமலோசனன் மிகத் தேர்ந்தவ னென்று எல்லார்க்கும் தெரியும். சற்று யோசனை செய்தான தும் அவன், ''ஒரே வழிதான்; நேரே டாணுவுக்குப் போய்ப் பிராது கொடு - உன் அண்ணன் துக்கி மாலை நேரம் வீட்டுக்கு வந்தவுடன் தன் பெண்டாட்டியைச் சோறு போடச் சொன்ன போது, அவள் கம்மென்று இருக்கவே அவள் மண்டையில் கத்தியால் ஓங்கி அடித்தான் என்று சொல்லிவிடு. இப்படி நீ சொன்னால்தான் உன் சம்சாரம் தப்ப வழி இருக்கிறது'' என்று யுக்தி புகட்டினான்.

சிதாமுக்குத் தொண்டை வறண்டே போயிற்று. ''வேண் டாம், ஐயா, பெண்டாட்டி போனால் வேறொத்தி வருவாள். ஆனால் கூடப் பிறந்தவன் போய்விட்டால் வேறொருவன் வரு வானா?'' என்றான். ஆனால், அவன் முதலில் தன் மனைவியின் மீது இந்தப் பழியைப் போட்டபோது இவ்வளவு தூரம் யோசனையே செய்யவில்லை. சொன்னது சொல்லியாயிற்று. போகிற போக்கில் இதை விட்டுவிடுவதே மேல் என்று அவனுக்குத் திண்ணமாகத் தோன்றியது.

சக்கரவர்த்திக்கும், அவனுடைய உறுதியே சரியெனப் பட்டது. ''எப்படியோ, நடந்ததை நடந்தபடியே சொல்லி விடுவது நல்லது. ஒன்றைப் பார்த்தால் மற்றொன்று சரிப்பட்டு வரவில்லையே!'' என்றான்.

இதைக் கூறியதும் ராமலோசனன் தாமதம் செய்யாமல் கிளம்பிப் போய்விட்டான். பார்த்துக்கொண் டிருக்கையில் ஊரெங்கும் கொலையைப்பற்றிய செய்தி பரவிவிட்டது. இக் குடியானவர் வீட்டுப் பெண்டுகளிடையே மூண்ட சண்டை முதல், மண்டையில் கத்திபட்டுப் பெரியவள் மாண்ட வரைக்கும் சமாசாரம் தெரிந்துவிட்டது.

அணை உடைபட்டு நீர்த்திரள் குபுகுபுவென்று புகுவது போல் இச்செய்தி அறிந்து போலீசாரும் உள்ளே புகுந்தனர். குற்றம் செய்தவர், குற்றம் செய்யாதவர் எல்லோருமே பெரும் பரபரப்புக்கும் பயத்திற்கும் உள்ளாயினர்.

2

தான் கோலிக்கொண்ட பாதையிலேயே செல்லவேண்டு மென்று சிதாம் நினைத்தான். அவன் சக்கரவர்த்தியிடம் ஒரு விதமாக வாயை விட்டுவிட்டான்; அது இதற்குள் கிராமம் முழுவதும் பரவியான பிறகு, உண்மையை வெளியிட்டால் என்ன சிக்கல் எல்லாம் நேரிடுமோ என்று பயந்தான். முதலில் சொன்னதையே கடைசி வரைக்கும் சொல்லி அதனுடன் ஏதாவது கதையைக் கற்பித்துத் தன் மனைவியைக் காக்காது போனால் வேறு வழியில்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

சிதாம் தன் மனைவியை அணுகிக் கொலை செய்த குற்றத்தை அவளே ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டான். இதைக் கேட்டு அவள் இடி விழுந்து போனாள். சிதாம் அவளைத் தேற்றி, ''நான் சொல்வதைக் கேள்: இதனால் நீ பயப்பட வேண்டியது ஒன்றுமில்லை; நாங்கள் எப்படியாவது உன்னைக் காப்பாற்றுவோம்'' என்று அவன் கூறினான். அதைச் சொல்லும்போது அவன் தொண்டை வறண்டுவிட்டது; முகம் வெளுத்தே போயிற்று.

சந்திராவின் வயது பதினேழு அல்லது பதினெட்டுக்கு மேல் இராது. கொழு கொழுவென்றிருக்கும் வட்டமான முகம்; மிதமான உயரம்; திரண்ட அங்கங்கள்; ஆரோக்கியத்தின் பொலிவு ஒவ்வோர் உறுப்பிலும். நடையிலும், அசைவிலும் ஒருவித அழகு இயல்பாகவே அவளிடம் தென்பட்டது. புதிதாகச் செய்த ஓர் ஓடம் போல் தளர்வின்றி மிடுக்குடன் இருந்தாள். இவ்வுலகில் காணும் ஒவ்வொரு பொருளிலும் அவளுக்கு ஆர்வமும் ஆவலும் நிரம்ப இருந்தன. அக்கம் பக்கத்தவர்களுடன் ஊர்க் கதைகளைப்பற்றிப் பேசுவதில் அவளுக்கு ஒரு குதூகலம்; இடுப்பில் குடம் ஏந்திச் செல்லுகையில், தலை முசுக்கிலிருந்து தன் கருவிழிகளைச் சுழற்றிச் சுற்றிலும் தென்படும் விஷயங்களை எல்லாம் கண்டு அநுபவிப்பதில் அவளுக்குத் தனிப்பட்ட தெம்பு.

பெரியவள் இதற்கு நேர்மாறானவள். எதிலும் அக்கறையே இராதவள்; ஒழுங்கே அறியாதவள். மடியில் குழந்தையும், கையில் ஏதாவது வீட்டு வேலையுமாக இருப்பவள். அப்படி வேலை இராதுபோயினும், சற்று ஓய்ந்து உட்காரவும் மாட்டாள். சின்னவள் அதிகமாகப் பேசாதவள். ஆனால் அவள் ஏவும் சொல்லம்புகள் இரண்டொன்றானாலும், ஆழக் குத்துவதாக இருக்கும். அதை ஏற்றுப் பெரியவள் குய்யோ முறையோ என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஊரையே ஒன்று கூட்டிவிடுவாள்.

இவ்விரு தம்பதிகளிடையே சுபாவ ஒற்றுமை இருந்ததுதான் வியப்பிற்குரிய விஷயம். துக்கிராம், ஆள் சற்றுப் பெரிய அளவினன். உடம்பில் எலும்புகள் அகலமானவை. கண்முன் தோன்றும் உலகை நோக்கியும் அதைப் புரிந்து கொள்ளாதவன். எதைக் குறித்தும் அவன் ஆராய்வதில்லை. அடங்கி இருப்பதுபோல் தோன்றினாலும், சீறி எழுந்தால் கோரமானவன். இப்படி வன்மையும், மந்தபுத்தியும் உள்ள ஆள் தென்படுவதே அரிது.

சிதாமோ, கன்னங்கரேலென்ற பாறையிலிருந்து செதுக்கி எடுத்தாற் போன்ற வடிவினன். அவனுடைய ஒவ்வோர் உடல் உறுப்பும் அதற்குரிய வேலையைச் செய்து முடிக்கும் திறமை மிக்கது. இதனால் அவன் உடற்கட்டில் ஒரு நிறைவு வெளிப்பட்டது. ஆற்றின் உயர்ந்த கரையிலிருந்து கீழே குதிப்பது, படகைத் தள்ளக் கழியை அழுத்துவது, மூங்கிற் புதருள் நுழைந்து, தேர்ந்த மூங்கிலை வெட்டிச் சேகரிப்பது இவை போன்ற எந்த வேலையையும் கச்சிதமாகவும், அலட்சியமாகவும் செய்து முடிக்கும் ஒரு திறமை அவனிடம் வெளிப்பட்டது. தலை நிரம்பச் சுருண்ட மயிர்; எண்ணெய் தடவி அதை ஒழுங்காக வாரிக் கழுத்து வரை தொங்கவிட்டுக் கொள்வான். உடை உடுத்துவதிலும் ஓர் ஒழுங்கு தென்படும்.

ஊரில் இளம் மடந்தையர்பால் அவன் தன் கண்களை ஓட்டவில்லை என்று சொல்ல முடியாது. அவர்கள் கண்ணுக்குத் தான் அழகனாகத் தோற்றவேண்டும் என்ற அவா அவனுக்கு நிரம்ப உண்டு. இருப்பினும் தன் இள மனைவியிடம் அவனுக்குத் தனிப்பட்ட காதல். இருவரும் அடிக்கடி சச்சரவிட்டுப் பிணங்கினாலும் ஒருவருக்கென ஒருவர் வாழ்ந்தனர். இந்தக் காரணத்தினால் இருவரிடையும் பிணைப்புப் பின்னும் வலுப்பட்டது. சந்திரா சற்றுச் சஞ்சல சுபாவமுடைய பெண். அதனாலேயே அவளிடம் ஒருவித அவநம்பிக்கை தனக்கு இருப்பதாகச் சிதாமுக்குத் தோன்றியது. அதே போல், எத்திசையும் கண்ணை ஓடவிடும் தன் கணவனோடு ஏதாவது சண்டை தொடுத்து அவனைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ளாமற் போனால் சந்திராவுக்கு இருப்புக் கொள்வதில்லை.

இந்த விபரீத சம்பவம் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னேதான் இவர்களுக்குள்ளே ஏதோ மனத்தாங்கல் பொங்கிக்கொண் டிருந்தது. தன் கணவன் வேலை என்ற சாக்கில் வெளியூருக்குச் சென்று இரண்டு மூன்று நாட்கள் கழித்து வருவதையும், காசு கொண்டு வராமல் வீட்டுக்குத் திரும்புவதையும் அவள் கவனித்து வருகிறாள். இதனால் அவள் சற்றுப் பிகுவாக அவனுக்கு முகம் கொடுக்காமல் இருப்பாள்.

நினைத்தபொழுது, துறைக்கும் தோப்புக்கும் போவதாக இருப்பாள். அவளும் ஊரெங்கும் சுற்றித் திரிந்துவிட்டு, தன் கணவன் காதுபடக் காசி மஜும்தாரின் நடுப் பிள்ளையைப் பற்றிப் புகழ்ந்து பேசுவாள்.

இரவில்லை; பகல் இல்லை, அவள் இப்படி நடந்து கொள்ளும் விதம் தன் வாழ்வையே விஷமாக்குவது போல இருந்தது சிதாமுக்கு. எந்த வேலையின் மேல் சென்றாலும் அவனை ஒரு சந்தேகம் வாட்டிக்கொண்டே இருந்தது; மனஅமைதியை இழந்தான். ஒரு நாள் அவன் தன் அண்ணியை இதற்காகக் கடிந்துகொண்டான். அவள் கைகளை ஆட்டி, உரத்த குரல் எடுத்து, இறந்த தன் தந்தையைச் சாட்சியாக அழைத்து, ''என் தலை எழுத்தா இதுவும்? என்னைப் பெற்றானே அவனைச் சொல்லு! வீட்டில் நிற்காமல் திரியும் அவளை என் முன்றானையில் முடிந்துகொள்ள முடியுமா? எனக்குத் தெரியுமே அவளாலேயே இந்தக் குடித்தனம் கெடப் போகிறது.....'' என்றாள்.

சந்திரா, பக்கத்து அறையிலிருந்து மெல்ல நடந்து வந்து, ''அக்கா, உனக்கு என்ன பயமோ இதனால்?'' என்றதும் இருவருக்கும் சண்டை மூண்டுவிட்டது.

சிதாம் விழிகளை உருட்டி, ''இதோ பார்: இன்னொரு தரம் நீ தோப்புக்கோ துறைக்கோ போனால் உன் எலும்பைப் பொடி செய்து போடாது போனால் என் பெயர் சிதாம் இல்லை'' என்று உறுமினான்.

சந்திரா, ''அப்படிச் செய்தால் நிம்மதியாகப் போய் விடுமே!'' என்றதும் உடனேயே வெளியே போய்விட்டாள்.

சிதாம் அவள் பின்னால் சரெலெனத் தாவி, சிண்டைப் பிடித்து உள்ளே இழுத்து வந்து தள்ளிவிட்டுக் கதவை வெளிப் புறமாகத் தாழிட்டுவிட்டான். அப்புறம் அவன் வேலைக்குப் போய்த் திரும்பி வந்து பார்க்கையில் வீட்டு வெளிக்கதவு திறந்து கிடந்தது. உள்ளே சந்திராவைக் காணவில்லை. அவள் மூன்று ஊர்களைக் கடந்து தன் மாமா வீட்டுக்கு எப்போதோ போய்ச் சேர்ந்துவிட்டாள்!

சிதாம் அங்கே சென்று எவ்வளவோ சமாதானப்படுத்தி அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வரப் பட்ட பாடு அவனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அவளிடம் தான் தோற்றுவிட்டது அவனை உள்ளுற வருத்தியது. கைப் பிடிக்குள் பாதரசத்தை அடக்குவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் இவளைத் தன் கைக்குள் அடக்கி வைப்பது என்பதை அவன் நன்கு உணர்ந்தான். எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அவள் நழுவிப் போய்விடக்கூடுமல்லவா?

அதற்குமேல் அதிகமாக அவன் அவளைக் கடிந்துகொள்ள தில்லை. ஆனால் அவனுக்கு இருந்த நிம்மதியெல்லாம் போய் விட்டது. சஞ்சல சுபாவமுள்ள தன் இளம் மனைவியைக் குறித்து ஒரு சந்தேகம், ஆராக் காதல் இரண்டும் சேர்ந்து நரக வேதனையில் ஆழ்த்தியது சிதாமை. அவள் செத்தொழிந் தால் தன் கவலையெல்லாம் தீர்ந்துபோகுமே என்று நினைத் தான். மனிதனுக்குத்தான் தன் இனத்தவர்மீது அருவருப்பு ஏற்படுகிறது; நமனிடத்தில் இது ஏற்படுவதில்லை.

அச்சமயந்தான் இந்தக் கொலை விபரீதம் நிகழ்ந்தது. கொலைப் பழியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டும் தன் கண வனைப் பார்த்துத் திகைத்து நின்றாள் சந்திரா. அவளுடைய இரு கருவிழிகளும், கரிய அழலென அவள் கணவனைச் சுட் டெரித்தன. அவள் உடலும் உள்ளமும் கூசிக்கொண்டன. தன் கணவனின் ராட்சசப் பிடியிலிருந்து எப்படியாவது தப்பி வெளியே செல்ல வேண்டுமென்று துடித்தாள். அவளுடைய அந்தக்கரணம் இதை எதிர்த்துப் போராடியது.

சிதாம் அவளுக்கு நம்பிக்கை ஊட்டிப் பார்த்தான். ''உனக்கு இதனால் ஒரு பயமும் இல்லை'' என்றான்; போலீசாரிட மும், மாஜிஸ்டிரேட் முன்பும் எப்படிச் சொல்ல வேண்டும், என்ன சொல்ல வேண்டும் என்பதையும் அவளுக்குக் கற்றுத் தந்தான். சந்திரா அவனுடைய பசப்பு வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை. மரப் பதுமையெனத் திகைத்து நின்றாள்.

எல்லாக் காரியத்திற்கும் துக்கிராம், சிதாமையே நம்பி யிருப்பவன். குற்றத்தைச் சந்திராவின்மீது சுமத்துவதைக் கேட்டுத் துக்கிராம், ''அப்படியானால் நம் சின்னவள் கதி என்னவாகும்?'' என்று திகிலுடன் கேட்டான். ''அவளை நான் காப்பாற்ற வழி தேடுவேன்'' என்றான் சிதாம். பெரிய உடலினனான அப்பாவி துக்கிராம் இதனால் சற்று ஆறுதல் அடைந்தான்.

3

சிதாம் தன் மனைவிக்கு வாக்குமூலத்தில் எப்படிச் சொல்ல வேண்டும் என்பதைக் கற்றுத் தந்தான்: ''நீ இப்படிச் சொல்லு; பெரியவள் அரிவாள் மனையைத் தூக்கி என்னை அடிக்க வந்தாள். நான் பக்கத்தில் இருந்த வெட்டுக் கத்தியால் அவளைத் தடுத்தபோது இந்த மாதிரி அவள் தலையில் பட்டு விட்டது.'' ராமலோசனன் கற்றுத் தந்த பாடம் இது. இதற்கு அநுகூலமாக என்ன என்ன சொற்களை உபயோகிக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் சிதாமுக்குக் கற்றுத் தந்திருந்தான்.

போலீசார் வந்து விசாரித்தனர். சந்திரா தன் ஓரகத்தியைக் கொலை செய்தாள் என்பதை ஊரார் நம்பிவிட்டனர். சாட்சிகள் யாவரும் இவ்வாறே பிரமாணம் செய்து கூறினர். போலீஸ் சந்திராவை விசாரிக்கையில் அவள், ''ஆமாம்; நான் தான் கொன்றேன்'' என்றாள்.

''எதற்காகக் கொலை செய்தாய்?''

''அவளைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஏதாவது உங்களுக்குள் சண்டை மூண்டதா?''

''இல்லை.''

''உன்னை அவள்தானே முன்னால் அடிக்க வந்தாள்?''

''இல்லை.''

''உனக்கு அவள் ஏதாவது தீங்கு செய்தாளா?''

''இல்லை.''

இப்படி அவள் பேசுவதைக் கேட்டு எல்லோருமே திகைத்து நின்றனர். சிதாமுக்கு உடம்பு பதறியது. ''இல்லை, இல்லை; அவள் சொல்வது சரியல்ல. பெரியவள்தான் முதலில்—'' என்றான் அவன்.

இன்ஸ்பெக்டர் அவனை அதட்டி நிறுத்தினார். சந்திராவுக்குப் பலமுறை குறுக்குக் கேள்வி போட்டும் அதே பதிலைத் தான் அவள் கூறினாள். அதாவது, பெரியவள் தன்னை அடிக்க வந்தாள் என்பதை அவள் ஒப்புக்கொள்ளவே இல்லை.

இப்படி ஒரு மடப் பெண்ணைப் பார்த்தே இருக்க முடியாது. தூக்கு மரத்தில் தொங்க விருப்பம் கொண்ட அவளை யாரால்தான் தடுத்து இழுத்துக்கொள்ள முடியும்? இதென்ன பயங்கரமான பிணக்கு? 'இரு, இரு, உன் உபத்திரவம் பொறுக்காமல்தான் இந்த நிறை இளமையுடன் நான் தூக்குமரத்தில் தொங்கியாவது சாகத் துணிந்துவிட்டேன். உனக்கும் எனக்கும் இப்பிறவுடன் தொடர்பு முறிந்து போகும்' என்று அவள் தன் கணவனை வெறுத்துத் தன்னுள் கூறிக்கொண்டாள்.

கைது செய்யப்பட்டுச் சந்திரா - ஒன்றும் அறியாத - சஞ்சலமும் ஆவலும் குடிகொண்ட அந்தக் கிராமப் பெண், தனக்குப் பழக்கமான ஊர்த் தெருவழியாக, கோயில் தேர் முட்டியைக் கடந்து, சந்தை கூடுமிடம் தாண்டி, துறையோரமாக நடந்து மஜூம்தார் வீடு, தபாலாபீசு, பள்ளிக்கூடம் யாவும் பின்செல்ல, பலபேர் கண்களில் படப் பெரியதொரு குற்றச் சுமையைத் தாங்கி என்றென்றும் தான் வாழ்ந்த இல்லம், கிராமம் யாவையும் நீத்துச் சென்றாள். மந்தையைப் போல் சிறுவர்கள் அவள் பின்னாலேயே சென்றனர். கிராமப் பெண்களும் அவளுடைய தோழியரும் தம் தலைமுசுக்கை நீக்கி, வாயிற்படியிலிருந்தும், மரத்து இடுக்கில் நின்றும் போலீசார்

இட்டுச் செல்லும் சந்திராவைப் பார்த்து வெட்கத்தாலும் அருவருப்பாலும் கூசிக்கொண்டனர்.

டெபுடி மாஜிஸ்டிரேட் முன்பும் சந்திரா தானே குற்றம் செய்ததாக வாக்கு மூலம் தந்தாள். 'கொலை செய்யுமுன் பெரியவள் தனக்குத் தீங்கு இழைக்க வந்தாள்' என்று சிதாம் சொல்லித் தந்த விஷயம் எதையும் அவள் சொல்லவில்லை.

அன்று சிதாம் சாட்சிக் கூண்டில் நின்று கண்ணீர் பெருகக் கைகுவித்து, ''தருமதுரையே, என் மனைவிமீது தவறே இல்லை'' என்று அழுதான். நீதிபதி அவனைக் கடிந்துகொண்டார்; அவர் கேள்வி கேட்டபோது பொங்கி எழும் தன் வேதனையை அடக்கி, அவன் உண்மையில் நடந்ததை ஒவ்வொன்றாக வெளியே சொல்லிவிட்டான்.

நீதிபதி அவனுடைய பேச்சில் நம்பிக்கை வைக்கவில்லை. காரணம், முக்கிய சாட்சியான கண்ணியமிக்க ராமலோசனன் கூறியதாவது: ''கொலை நடந்து சில நாழிகைக்கெல்லாம் நான் அந்த இடத்திற்குத் தற்செயலாகச் செல்ல நேர்ந்தது. சிதாம் என்னிடம் நடந்ததையெல்லாம் சொல்லி என் கால்களைப் பிடித்துக்கொண்டு, 'என் மனைவியைக் காப்பாற்ற ஏதாவது வழி காட்டுங்கள்' என்று கெஞ்சினான். 'என்னுடைய அண்ணன் சோறு போடென்று கேட்டபோது அவன் மனைவி போடாததால் கோபத்தால் வெட்டுக்கத்தியால் அவள் மண்டையில் ஒங்கிப் போடவே, அவள் இறந்து போனாள் என்று சொன்னால் என் மனைவியைக் காப்பாற்ற முடியுமா?' என்றும் கேட்டான் என்னை. அதற்கு நான், 'ஜாக்கிரதை, கோர்ட்டில் ஒரு பொய் சொன்னாயோ, நரகந்தான் உனக்குக் கிட்டும், என்றேன், பிரபு.''

டெபுடி மாஜிஸ்டிரேட் வழக்கைச் செஷன்ஸுக்கு மாற்றி விட்டார். இதற்கிடையே என்றும்போல் சந்தைக்கடைக் கூச்சலும் சிரிப்பும் அழுகையுமாய் உலகத்து அலுவல்கள் நடந்துவந்தன. முன் ஆண்டுகளில் கண்டது போலவே பசும் பயிர் ஆடும் வயல்களில் மாரியும் ஓயாமல் பொழிந்தது.

போலீசார், கைதியையும், சாட்சிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். எதிர்ப்புறமாக உள்ள முன்சீப் கோர்ட்டில் பலர் தம்தம் வழக்கு நிமித்தம் காத்திருந்தனர். அடுக்களைக்குப் பின்புறமாக உள்ள ஒரு சிறு குளத்தில் தனக்குப் பங்கு உண்டென்று வழக்குத் தொடுத்த ஒருவரின் சார்பாகக் கல்கத்தாவிலிருந்து வக்கீல் வந்திருந்தார். முப்பத்தொன்பது பேருக்குமேல் சாட்சி சொல்ல வந்திருந்தனர். இவர்களைத் தவிர, ஒரு சிறு தொகைக்காகக் கோர்ட்டு வரைக்கும் சென்று ஒரு கை பார்த்துவிடுவதென்று வஞ்சினம் கூறி வந்தவர்கள்

பலர். உலகத்தில் இதைவிடப் பெரிய விஷயம் எதுவுமே இல்லை என்பது அவர்கள் நினைப்புப் போலும்! சிதாம், சன்னல் வழியாக இப்படி வியர்த்து வடியும் மனிதர் வாழும் உலகைக் கண்கொட்டாமல் கவனித்தான். அவனுக்கு எல்லாம் கனவில் நடப்பன போல் தோன்றின. கோர்ட்டு மதில் ஓரமாக இருந்த ஆலமரத்தில் குயில் ஒன்று கூவிக்கொண் டிருந்தது. அதன் இன்ப வெறியை அடக்குவதென்பது இந்த உலகத்துச் சட்டதிட்டங்களால் ஆகாத காரியமாகும்!

சந்திரா, நீதிபதி முன் தந்த வாக்குமூலமாவது: ''தருமப் பிரபுவே! ஒரு சமாசாரத்தை எத்தனை தரம் திருப்பித் திருப்பிச் சொல்லுவேன்'' என்றாள். நீதிபதி, அவளுக்கு விளக்கினார்: ''நீ இந்தக் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டால், இதற்கு என்ன தண்டனை தெரியுமா?''

''தெரியாது'' என்றாள் சந்திரா.

''அதற்குத் தண்டனை, தூக்கு'' என்றார் நீதிபதி.

சந்திரா, ''உங்கள் காலில் விழுகிறேன். அதுதான் எனக்கு வேண்டும்! உங்கள் இஷ்டம் போல் தீர்ப்பு அளியுங்கள். என்னால் பொறுக்க முடியவில்லை!'' என்றாள்.

சிதாமைக் கோர்ட்டில் சாட்சியாக நிறுத்தியபோது சந்திரா முகத்தைத் திருப்பிக்கொண்டாள். நீதிபதி அவளைச் சுட்டி, ''சாட்சியின் பக்கம் திரும்பி அவன் உனக்கு என்ன உறவு முறையாக வேண்டும் என்பதைச் சொல்லு'' என்றார்.

சந்திரா தன் முகத்தை இரு கையாலும் பொத்தி, ''அவர் தான் என் புருஷர்'' என்றாள்.

அடுத்த கேள்வி: ''அவனுக்கு உன்மேல் ஆசையில்லையா?''

பதில்: ''ஓ....ரொம்ப ரொம்ப ஆசை!''

கேள்வி: ''அவன்மீது உனக்கு ஆசையில்லையா?''

பதில்: ''ஆசைதான்.''

குறுக்கு விசாரணையில் சிதாம், ''நான்தான் கொன்றேன்'' என்றான்.

கேள்வி: ''ஏன்?''

சிதாம்: ''சோறு போடென்றேன்; என் அண்ணி போடவில்லை.''

துக்கிராமை விசாரிக்கையில் அவன் மயக்கம் போட்டு விழுந்துவிட்டான். மயக்கம் தெளிந்ததும் அவன், ''துரையே! கொலை செய்தவன் நானே'' என்றான்.

''ஏன் செய்தாய்?''

''சோறு கேட்டேன்; சோறு போடவில்லை.''

இன்னும் பல குறுக்குக் கேள்விகளைப் போட்டும், மற்றச் சாட்சிகள் கூறியதைக் கொண்டும் நீதிபதிக்குத் தெளிவாகி

விட்டது: வீட்டுப் பெண்டைத் தூக்குத் தண்டனை அவமானத்திலிருந்து காப்பாற்றவே இப்படி இரு சகோதரர்களும் தாம் குற்றம் செய்ததாகக் கூறுகின்றனர்; ஆனால் சந்திராவோ, போலீஸ் தொடங்கிச் செஷன்ஸ் கோர்ட்டு வரைக்கும் ஒரே விதமாக வாக்குமூலம் கொடுத்து வருகிறாள்; அவள் சற்றும் பிறழ்ந்து கூறவில்லை. இரு வக்கீல்கள் தாமாகவே அவள் சார்பில் தோன்றி வாதாடி அவளை எப்படியாவது தப்புவிக்க முயன்றனர். கடைசியில் அவர்களும் தோல்வியுற்றனர்.

கரு விழிகளுடைய ஒரு சின்னஞ் சிறு பெண்; அவளுக்கு வட்ட வடிவமான அழகு முகம். தன் விளையாட்டுப் பொம்மையைப் பிறந்த வீட்டிலேயே விட்டொழித்து மாமனார் வீட்டில் புகுந்தாள். அன்று ஒரு நல்ல வேளையில் அவளுக்கு நேர்ந்த ஒரு பாக்கியத்தை இப்போது கற்பனை செய்து பார்க்க முடியுமா? அவளுடைய தந்தை மரிக்கு முன்னர், 'நல்ல காலம் வந்தது; என் பெண்ணுக்கும் பகவான் ஒரு முடியைப் போட்டு விட்டார்' என்று நிம்மதியுடன் மூச்சுவிட்டார்.

தூக்கில் இடுவதற்குச் சற்று முன், கருணை மிகுந்தவரான ஜெயில் ஸர்ஜன் சந்திராவைப் பார்த்து, ''உனக்கு யாரையாவது பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''என் அம்மாவை ஒரு தரம் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது'' என்றாள் அவள்.

டாக்டர், ''உன் கணவன் உன்னைக் காணத் துடிக்கிறான்; அவனை வரச் சொல்லட்டுமா?'' என்றார்.

சந்திரா அதற்கு, ''ஐயோ; யமனே....!'' என்றாள்.

இனிது முடிந்தது

1

அபூர்வகிருஷ்ணன் பி.ஏ., பரீட்சையில் தேர்ச்சி பெற்று விட்டுக் கல்கத்தாவிலிருந்து ஊருக்குத் திரும்பினான்.

சிறிய ஆறு. மழைக்குமுன் முக்கால் பாகம் வற்றியே கிடக்கும். இப்போது ஆவணிக் கடைசியில் நீர் நிறைந்து, ஊரின் எல்லைவரையில் பெருகி, மூங்கில் தோப்பைத் தொட்டுக் கொண்டு சென்றது.

சில நாட்களாக அடைமழை பெய்தபின் அன்று வானம் வெளுத்து வெயில் தலைகாட்டியது. படகில் ஏறிவரும் அபூர்வ கிருஷ்ணனின் மனத்துள் திகழும் காட்சிகளைப் பார்க்க முடியு மானால், அவன் மனத்தினுள்ளும் ஓர் ஆறு கரை புரண்டு துளும்புவதையும், ஒளிபட்டுப் பளபளப்பதையும், மெல்லிய காற்றில் சலசலப்பதையும் காணமுடியும்.

படகு தகுந்த துறையில் வந்து நின்றது; கரையிலிருந்தே, அபூர்வனின் வீட்டு மேல்மாடி, மரங்களின் இடுக்கு வழியாகத் தென்பட்டது. அபூர்வன் வரும் செய்தி வீட்டில் எவருக்கும் தெரியாது. அதனால் துறைக்கு ஆட்கள் வரவில்லை. பட கோட்டி பையை எடுத்துக்கொண்டான். அபூர்வன் அவனை நிறுத்தித் தானே பையைத் தூக்கிக்கொண்டு, மகிழ்ச்சியோடு படகிலிருந்து இறங்கினான்.

கரை சற்று வழுக்கியது. இறங்கியதுமே, அபூர்வன் பையோடு சறுக்கி விழுந்துவிட்டான். விழுந்ததுதான் தாமதம், எங்கிருந்தோ இனிமையான சிரிப்பு அலை ஒன்று எழும்பிப் பக்கத்து அரசமரத்தில் இருந்த பறவைகளைக் கிளப்பிவிட்டது.

அபூர்வன் வெட்கத்துடன் பரபரவென்று சமாளித்துக் கொண்டு எழுந்து பார்த்தான். கரையில் பெரிய சரக்குத் தோணி ஒன்றிலிருந்து புதுச் செங்கலைக் குவியலாக இறக்கி யிருந்தனர். அதன்மேல் உட்கார்ந்து ஒரு சிறுமி சிரித்துச் சிரித்து வெடித்துப் போவதைப் பார்த்தான்.

அபூர்வனே அவள் யாரென்று தெரிந்துகொண்டான்: அண்டை வீட்டுக்காரர் பெண் மிருண்மயிதான். தொலைவில் பெரிய ஆற்றின் கரையில் இவர்கள் வீடு. ஆறு கரை பெயரவே மூன்று ஆண்டுகளாக இந்த ஊரில் இருக்கிறார்கள்.

அந்தப் பெண்ணைப்பற்றிய அவதூறுகளுக்கு ஓர் அளவில்லை. ஊரிலுள்ள ஆடவர்கள் அவளுக்குச் செல்லமாக, 'பைத்தியம்' என்று பெயரிட்டிருந்தார்கள். ஆனால் ஊர்ப் பெண்களோ அவளைக் கண்டாலே பயந்து கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள். ஊரில் இருக்கும் பிள்ளைகள் எல்லாருடனும் விளையாடுவாள். தன் வயதுப் பெண்களைக் கரித்துக் கொட்டுவதற்கும் ஓர் அளவில்லை. குழந்தைகளுக்கு அந்தப் பெண் பெருந்தொல்லை என்றே சொல்லலாம்.

அப்பனுக்குச் செல்லப் பெண் அல்லவா? அதனால்தான் இவ்வளவு அடங்காத்தனம். மிருண்மயியின் தாய் தன் தோழிகளிடம் தன் கணவனைப்பற்றிக் குறை கூறுவாள்: ''அப்பாவுக்கு அவளிடம் ஓர் ஆசை. அவர் இருக்கும்போது பெண்ணின் கண்களில் நீர் வடிந்தால் அவருக்குத் தாளாது; நொந்து போவார். இதை எண்ணியே அவளை அதட்டுவதில்லை'' என்று சொல்லுவாள்.

மிருண்மயி பார்வைக்கு மாநிறம். பரட்டை மயிர் முதுகுவரையில் புரளும். துருதுருவென்ற இளம் முகம். பெரிய கருவிழிகளில் வெட்கமோ, பயமோ, அடக்கமோ சிறிதும் இல்லை. நல்ல உயரம். நல்ல ஆரோக்கியமான உடல். ஆனால், அவள் வயதில் சின்னவளா, இல்லை பெரியவளா என்ற கேள்வியாருக்கும் தோன்றவில்லை. வயது ஊராருக்குத் தெரிந்திருந்தால் இன்னும் ஏன் திருமணம் ஆகவில்லை பெண்ணுக்கு என்று அவள் தாய் தந்தையர் மானத்தை வாங்கியிருப்பார்களே! ஊர் ஜமீன்தாரின் படகு துறைக்கு வந்தபோது ஊரார் மரியாதையுடன் பரபரவென்று காரியம் செய்தனர். பெண்களின் முகத்தில் முட்டாக்குத் திரை விழுந்தது. ஆனால் மிருண்மயி எங்கிருந்தோ அம்மணமான குழந்தை ஒன்றை இடுப்பில் தூக்கித் தன் பரட்டை மயிர்த் தலையுடன் துறைக்கு வந்து நின்றாள். வேடர் தொல்லை இராத ஊரில் மான்குட்டி விளையாடுவது போல, பயமற்று ஆவலுடன் நின்று உற்றுக் கவனித்தாள். கடைசியில் தன் வயதான நண்பர்களிடம் போய்ப் புதிதாக வந்த பிராணியின் நடை உடை பாவனைகளைப் பற்றிப் பெரிதாக விவரித்தாள்.

நம் அபூர்வன் இதற்குமுன் விடுமுறைக்கு வீடு வந்த போது சுயேச்சையாகத் திரியும் இச் சிறுமியைக் கண்டிருக்கிறான். ஒய்விருக்கும்போதும் இராதபோதுங்கூட அவளைப் பற்றி யோசனை செய்திருக்கிறான். உலகத்தில் எத்தனையோ முகங்கள் கண்களில் படுகின்றன. ஆனால், ஒரே முகம்மட்டும் சொல்லாமல் கொள்ளாமல் நம் உள்ளத்துள் பதிந்துவிடுகிறது. அது வெறும் அழகினால் மட்டுமல்ல; அதற்குள்ள தனிக்

கவர்ச்சியினால்தான். பெரும்பான்மையோர் முகங்களில் மனிதனின் இயல்பு தெளிவாக மலர்ந்து விளங்குவதில்லை. உள்ளத்தில் பதியும் முகங்களில் ஆயிரத்தில் ஒன்றுதான் நிலைத்து விடுகிறது. அச்சிறுமியின் முகத்திலும் கண்களிலும் அடங்காத பெண்மை - சுயேச்சையாகத் திரியும் ஒரு காட்டு மானின் தன்மை - வெளிப்பட்டது. அதனால் அந்த உயிர் ததும்பும் முகத்தைப் பார்த்த பிறகு மறப்பது எளிதல்ல.

மிருண்மயியின் சிரிப்பு எவ்வளவு இனிமையாக இருந்தாலும், துரதிர்ஷ்டவசமாக அபூர்வனுக்கு அது சற்று வேதனையைத் தந்தது. அவன் படகோட்டியின் கையில் பையைக் கொடுத்துவிட்டு, முகம் சிவக்க வேகமாக வீட்டுக்குச் சென்றான்.

எல்லாம் நன்றாக அமைந்திருந்தன; ஆற்றங்கரை, மர நிழல், பறவைகளின் இன்குரல், இளவெயில், இருபது வயது - அந்தச் செங்கற் குவியல்கூட. அதன் பேரில் இருப்பவள் இந்தக் கடினமான இடத்திலும் மென்மையான அழகுடன் விளங்கியதுதான் அதிசயம். இத்தகைய நாடகம், முதல் அங்கத்தில் காலை வைத்ததுமே கவித்துவம் நிரம்பிய பிரகசனமாகிவிடுகிறது. அதைவிடக் கேலிக்கூத்து வேறென்ன வேண்டும்?

2

செங்கற் குவியலின் மேலிருந்து வரும் சிரிப்பைக் கேட்டவாறு, மேல் துணியிலும் பையிலும் சேற்றைப் பூசிக்கொண்டு அபூர்வன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

திடீரென்று, பிள்ளை வந்து சேரவே, அவன் விதவைத் தாய் மகிழ்ச்சியினால் பூரிப்படைந்தாள். அந்தக் கணமே கட்டித் தயிரும், மீன் வகைகளும் வாங்கிவர ஆட்கள் ஓடினர். அண்டை வீட்டுக்காரர்களிடையே ஒரு பரபரப்பு எழுந்தது.

சாப்பிட்டானதும், அம்மா அபூர்வனின் திருமணப் பேச்சைக் கிளப்பினாள். அபூர்வன் எதிர்பார்த்த செய்தியேதான். ஏனென்றால், அது நெடுநாளாப் பேச்சு. ஆனால் பிள்ளை புது நாகரிகத்தில் மூழ்கி, பி.ஏ. தேறுமல் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று பிடிவாதம் செய்தான். அதற்காக அவன் தாய் இத்தனை நாள் காத்திருந்தாள்: இனிமேல் சாக்குப் போக்குச் சொல்லுவது முடியாது. ''முதலில் பெண் பார்த்தாகட்டும். அப்புறம் நிச்சயம் செய்யலாம்'' என்றான் அபூர்வன். ''பெண் பார்த்தாயிற்று. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்'' என்றாள் அம்மா. இந்தச் செய்தியை அபூர்வன்

தானே யோசித்து, ''பெண்ணைப் பார்க்காமல் எப்படித் திருமணம் பண்ணிக்கொள்வேன்?'' என்றான். 'இதேதடா புது இடக்கு மறுபடியும்?' என்று அம்மா எண்ணி அதற்கு இசைந்தாள்.

அன்றிரவு அபூர்வன் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் படுத்தான். மழையின் இனிய ஓசையையும் இரவின் மோனத்தையும் பீறிக்கொண்டு ஓர் உரத்த சிரிப்பு அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அவனுக்குத் தூக்கம் வரவில்லை. காலியில் கால் சறுக்கி விழாமல் எப்படியாவது சமாளித்திருக்கலாமே என்று அவன் தன்னையே நொந்து கொண்டான். 'அந்தப் பெண்ணுக்கு நான் யாரென்று தெரியவில்லையே! நான் அபூர்வகிருஷ்ணன் - எத்தனையோ தேர்வுகளில் தேறியவன்; கல்கத்தாவில் வெகு நாள் இருந்தவன். ஏதோ கெட்ட காலம் சேற்றில் விழுந்தாலுங்கூட, என்னைப் பார்த்துச் சிரிக்க நான் ஒன்றும் நாட்டுப்புறத்துப் பிள்ளையல்ல' என்று நினைத்துக்கொண்டான்.

மறு நாள் அபூர்வன் பெண் பார்க்கச் சென்றான். பெண்ணின் வீடு வெகு தொலைவில் இல்லை. அதே பேட்டையில் தான். நன்றாக உடை அணிந்தான். வேட்டி, மேல்துண்டை விட்டுப் பட்டு ஜிப்பா, பாயிஜாமா, தலையில் வட்டமான பாகை, மெருகிடச் செய்த புதுப் பூட்ஸ் அணிந்துகொண்டு பட்டுக் குடையும் கையுமாகக் காலியில் வெளிக்கிளம்பினான்.

மாமனாராக வரப்போகிறவரின் வீட்டில் அடி வைத்ததும் தடபுடலாக அவனை வரவேற்றனர். கடைசியில், தக்க சமயத்தில், உடல் நடுங்கும் ஒரு சிறுமியை நன்றாகச் சிங்காரித்துக் கொண்டையில் பூச்சூட்டி, மெல்லிய வண்ணச் சிற்றுடை உடுத்து, பிள்ளையாண்டானின் முன் நிறுத்தினார்கள். அவள் ஒரு மூலையில் தன் முகத்தை முழங்கால்களுக்கு நடுவில் புதைத்துக்கொண்டு கம்மென்று உட்கார்ந்திருந்தாள். வயதான பாட்டி ஒருத்தி அவளுக்குத் தைரியம் சொல்லப் பின்னாலேயே வந்து சேர்ந்தாள். பெண்ணின் தம்பி ஒருத்தன் தன் குடும்பத்துள் அதிகாரமின்றி நுழையப்போகும் ஆளின் தலைப்பாகை, கடிகாரச் சங்கிலி, அரும்புவிடும் மீசை இவைகளை ஒரே நிலையாகக் கவனித்தான். அபூர்வன் முதலில் கொஞ்சநேரம் மீசையைத் தடவிக்கொண்டிருந்த பின் எடுப்பான குரலில், ''நீ என்ன படிக்கிறாய்?'' என்று கேட்டான். போர்வையினுள் வெட்கப்பட்டுக்கொண்டிருந்த பெண் முதலில் ஒன்றுமே சொல்லவில்லை. இரண்டு மூன்று தடவை கேட்டு, பாட்டி அவள் முதுகில் தட்டித் தூண்டியதும், மெதுவான குரலில் ஒரே மூச்சாக அச்சிறுமி சொல்லிக்கொண்டே போனாள்: ''சாரு

பாடம் - இரண்டாம் புத்தகம். வியாகரண சாரம் - முதல் பாகம்; பூகோள விவரணம்; கணக்கு; இந்து தேச சரித்திரம்.''

இதே சமயம் வெளியே யாரோ தபதபவென்று வரும் ஓசை கேட்டது. கணப்பொழுதில், இரைக்க இரைக்க, தலையை விரித்துக்கொண்டு மிருண்மயி உள்ளே நுழைந்தாள். அபூர்வகிருஷ்ணனின் பக்கம் பார்க்காமல், பெண்ணின் தம்பி ராகாலனின் கையைப் பிடித்து இழுத்தாள். ராகாலன் அப்போது அபூர்வனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு எழுந்திருக்கப் பிடிக்கவில்லை. பாட்டி அடங்கிய குரலில் கூடுமானவரையில் மிருண்மயியை அதட்டினாள். அபூர்வன் கம்பீரமாகத் தலைப்பாகை அணிந்த தலையை நிமிர்த்தி அமர்ந்திருந்தான். வயிற்றுக்கருகில் தொங்கும் கடிகாரச் சங்கிலியை அவன் கைகள் அசைத்தன. கடைசியில், தன் தோழனைக் கிளப்ப முடியாமல் அவன் முதுகில் ஓர் அறை வைத்துச் சட்டென்று பெண்ணின் 'கோம்டா' வைத்தள்ளிவிட்டுப் புயல்போல மிருண்மயி அறையைவிட்டு வெளியேறினாள். பாட்டி என்னவோ முணுமுணுத்தாள். தன் தமக்கையின் முக்காடு சட்டென்று விலகவே, ராகாலன் பகபகவென்று சிரித்தான். தன் முதுகில் விழுந்த அறையை அவன் மதிக்கவே இல்லை. ஏனென்றால், இந்த மாதிரி கொடுக்கல் வாங்கல் அவர்களிடையே நடப்பதுண்டு. முன் ஒரு தடவை மிருண்மயியின் தலைமயிர் நடுமுதுகு வரை வளர்ந்திருந்தது. ராகாலன் பின்புறமாக வந்து அவள் கூந்தலில் கத்தியைப் போட்டான். கோபத்துடன் மினி அவன் கையிலிருந்து அதைப் பிடுங்கி மீதியிருந்த மயிரை எல்லாம் டக்டக்கென்று கத்தரித்து விட்டாள், சற்றும் யோசியாமல்! அவளுடைய குழற்கற்றை கொடியிலிருந்து அறுபட்டு விழுந்த கறுப்புத் திராட்சைக் கொத்துப் போலத் தரையில் விழுந்தது. இவர்களிடையே இந்த மாதிரி தண்டனை முறைகள் நடப்பதுண்டு.

அதற்குப்பின் இந்த மோன நாடகம் வெகு நேரம் நீடிக்கவில்லை. உருண்டையாக இருந்த பெண் ஒருவாறாக எழுந்து நின்று பாட்டியுடன் உள்ளே சென்றாள். அபூர்வன் ஆழ்ந்த முகத்துடன் மீசையைத் தடவியவாறு வெளியே செல்லப் புறப்பட்டான். வாயிலருகில் சென்று பார்த்தபொழுது 'பாலிஷ்' செய்த புது பூட்ஸ், வைத்த இடத்தில் இல்லை. எங்கிருக்கிறதென்று தேடியும் அகப்படவில்லை.

வீட்டில் இருந்தவர்கள் எல்லாரும் பரபரப்பு அடைந்தார்கள். அதை எடுத்தவர்மேல் வசைமாரி பொழியலாயினர். எவ்வளவோ தேடியும் அகப்படாமல், கடைசியில் வீட்டுக் காரரின் கிழிந்த செருப்பு ஒன்றை மாட்டிக்கொண்டு, பாண்ட்,

ஜிப்பா, தலைப்பாகையுடன் சேரும இருந்த ஊர்த்தெருவில் இறங்கினான் அபூர்வன்.

குளத்தங்கரையில், தனிமையான பாதையோரத்தில் அந்த உரத்த குரல் சிரிப்பது கேட்டது. மர இலைகளின் நடுவே வனதேவதை ஒன்று குறும்புத்தனமாக, அபூர்வனின் கிழிந்த செருப்புகளைப் பார்த்து ஏளனம் செய்வதுபோல் இருந்தது.

அபூர்வன் அசடு வழிய இப்படியும் அப்படியுமாகப் பார்த்தான். அதே சமயம் அடர்ந்த தோப்பினுள் இருந்த அந்த வெட்கமற்ற குற்றவாளி வந்து அவன் எதிரே புதுச் செருப்புகளை வைத்துவிட்டு ஓடப் பார்த்தாள். அபூர்வன் கப்பென்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

மிருண்மயி தன்னை விடுவித்துக்கொள்ள இப்படியும் அப்படியுமாக நெளிந்து பார்த்தாள். ஆனால், முடியவில்லை. குறும்புச் சிரிப்பு உலாவும் அந்த முகத்தின்மேல் கிளைகளினூடாகச் சூரிய கிரணங்கள் வந்து படிந்தன. வெள்ளி வெயில் பட்டுப் பளபளக்கும் தெள்ளிய அருவியின் அடிவரைக்கும் உள்ளதை வழிப்போக்கன் உற்று நோக்குவது போல, அபூர்வன் ஆழ்ந்த நோக்குடன் அந்த மின் விளையாடும் கண்களையே உற்று நோக்கினான். பின்னர்த் தன் காரியம் ஆனதுபோல கைப்பிடியைத் தளர்த்தி அவளைப் போக விட்டான். அவன் கோபத்துடன் மினியை அடித்திருந்தால் அவள் வியப்படைந்திருக்க மாட்டாள். ஆனால், தனிமையான பாதை நடுவில் இந்தப் புது விதமான தண்டனையின் அர்த்தம் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஆடல் புரியும் இயற்கையன்னையின் சதங்கை ஒலிபோல், கலகலவென்ற சிரிப்பின் அலை வானிடைப் பரந்தது. ஏதோ யோசனையில் ஆழ்ந்து அபூர்வன் மெல்ல வீட்டை வந்தடைந்தான்.

3

அன்றெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லி அபூர்வன் அம்மாவைப் பார்க்க உள்ளே போகவே இல்லை. வெளியே விருந்துக்கு அழைத்திருந்தார்கள். போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தான். அபூர்வனைப் போல் படித்த பையன், படிக்காத நாட்டுப்புறத்துப் பெண்ணிடம் தன் கௌரவத்தை நிலைநாட்டப் பாடுபடுவது சற்று விநோதமாக இருக்கலாம். பட்டிக்காட்டுப் பெண் ஒருத்தி அவனைச் சாதாரணமான ஆள் என்று நினைத்துக்கொண்டால்தான் என்ன? கணப்பொழுது அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் பின்னர் அவன் இருப்பதை மறந்து

முட்டாள் பையனை ராகாலனை விளையாட அழைத்தாள். அதனால் என்ன வந்தது? தான் 'விசுவதீபகம்' என்ற பத்திரிகையில் விமரிசனம் எழுதுவதாகவும், தன் பெட்டிக்குள் எஸன்ஸ், பூட்ஸ், ரூபின் கர்ப்பூரம், கடிதம் எழுதும் நீலநிறக் காகிதம், 'ஆர்மோனியச் சுயபோதினி', தான் எழுதியிருக்கும் குறிப்புகள் இவையெல்லாம் வெளிச்சத்திற்கு வர இருப்பதை அவளிடம் பிரமாணம் செய்யவேண்டிய அவசியந்தான் என்ன? ஆனால், மனத்தைத் தேற்றிக்கொள்ளுவதென்றால் எளிதான காரியமா? நாட்டுப்புறத்துச் சிறுக்கியிடம், திரு. அபூர்வ கிருஷ்ண ராய், பி.ஏ., தோல்வியடையச் சற்றும் தயாராக இல்லை.

சாயங்காலமாக உள்ளே போனதும் அம்மா, ''ஏண்டா அபூ, பெண் எப்படி? பிடித்ததோ இல்லையோ?'' என்றாள்.

அபூர்வன் அசடு வழிய, ''பெண் பார்த்தேன், அம்மா, அதில் ஒருத்தியைத்தான் எனக்குப் பிடித்தது'' என்றான்.

அம்மா திகைத்துப் போய், ''எத்தனை பெண்களையடா பார்த்தாய்?'' என்றாள்.

கடைசியில் கொஞ்சங் கொஞ்சமாக அண்டை வீட்டு மஜும்தாரின் பெண் மினியைத்தான் தன் பிள்ளைக்குப் பிடித்திருக்கிறது என்று தெரியவந்தது. இவ்வளவு படித்த பிள்ளை இப்படியா தேர்ந்தெடுக்கும் பெண்ணை!

முதலில் அபூர்வனுக்குக் கூச்சம் அதிகமாக இருந்தது. ஆனால், அம்மா அதற்குக் கடினமாக ஆட்சேபம் செய்த பொழுது அவன் ரோஷத்துடன் மிருண்மயியைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள முடியாதென்று சொல்லிவிட்டான்; மற்றப் பொம்மைகளைப்பற்றி நினைக்க நினைக்கத் திருமணம் என்றாலே அவனுக்கு வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது.

இரண்டு மூன்று நாட்கள் இருவரும் மனவேற்றுமையுடன் பேசவில்லை. கடைசியில் அபூர்வன் வெற்றி அடைந்தான். 'மிருண்மயி சின்னவள். அவள் அம்மாவுக்குச் சரியானபடி சொல்லிக் கொடுக்கத் தெரியவில்லை. கல்யாணமாகித் நம்மிடம் வந்ததும் தன்னாலேயே குணம் மாறிவிடும்' என்று அம்மா தேற்றிக்கொண்டாள். மிருண்மயியின் முகங்கூட அழகாக இருக்கிறது என்று வரவர அவளுக்குத் தோன்றியது. ஆனால் உடனே அவளுடைய குட்டை மயிர் நினைவுக்கு வரும். மீண்டும் அவள் உள்ளம் வெறுப்படையும். நன்றாகப் பின்னி, நிறைய எண்ணெய் தடவினால் இந்தக் குறையும் நீங்கும் என்று நினைத்துக்கொள்ளுவாள்.

அபூர்வனின் பிடித்தத்திற்கு எல்லாரும் அபூர்வமான பிடித்தம் என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

பைத்தியக்காரி மினியை எல்லாருக்கும் பிடித்தது. ஆனாலும் தங்கள் பிள்ளைக்கு மனைவியாக வரிக்க அவர்கள் எண்ணவில்லை.

மிருண்மயியின் தந்தை ஈசான மஜும்தாருக்குத் தகுந்த காலத்தில் விஷயம் தெரிந்தது. அவருக்கு ஏதோ ஸ்டீமர் கம்பெனியில் குமாஸ்தா வேலை. தொலைவில் ஆற்றங்கரை ஸ்டேஷன் ஒன்றில் தகரக் கூரை வேய்ந்த கொட்டகையில் மூட்டைகள் நிறுப்பதும், டிக்கட் கொடுப்பதும் அவர் வேலை. மிருண்மயியின் திருமணப் பேச்சை எடுத்ததும் அவர் கண்களில் நீர் தாரை தாரையாக வந்தது. அதில் எவ்வளவு துக்கமும் ஆனந்தமும் கலந்திருந்தன வென்று சொல்ல முடியாது. பெண்ணின் கல்யாணத்திற்கென்று ஈசான பாபு தலைமை அலுவலகத் துரையிடம் விண்ணப்பம் செய்தார். துரை அற்ப விஷயம் என்று நினைத்து விண்ணப்பத்தை மறுத்துவிட்டார். பூஜையின்போது விடுமுறை கிடைக்கும் என்று தெரிவித்து, அதுவரை கல்யாணத்தை நிறுத்தி வைக்குமாறு ஊருக்குக் கடிதம் எழுதினார் ஈசானர். ஆனால், அபூர்வனின் தாய் அந்த மாதத்திலேயே நல்ல நாள் இருக்கிறதென்றும், தாமதம் செய்ய விருப்பமில்லை என்றும் எழுதிவிட்டாள்.

இரண்டாந் தடவையும் விண்ணப்பம் பலிக்காமற் போகவே, ஈசான் வேறு ஆட்சேபம் கிளப்பாமல் முன் போல் டிக்கெட் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டார்.

இந்தப் பக்கம் மிருண்மயியின் தாயும் ஊரின் பெரிய பெண்களுமாகச் சேர்ந்து எப்படி இருக்க வேண்டும் என்று இராப்பகலாக மினிக்குப் புத்தி சொல்ல ஆரம்பித்தார்கள். விளையாட்டுத்தனம், வேகமாக நடப்பது, உரத்துச் சிரிப்பது, பிள்ளைகளுடன் பேசுவது கூடாது என்றும், எப்படிக் குறைச்சலாகச் சாப்பிடுவது என்றும் சொல்லித் திருமணத்தை ஒரு பயங்கரமான விஷயமென்று தோன்றும்படி செய்து தீர்த்தார்கள். இனித் தன் வாழ்வெல்லாம் சிறைத் தண்டனை அநுபவித்துக் கடைசியில் தூக்குமேடைக்குப் போக வேண்டியிருக்கும் என்று சந்தேகம் பிடித்துக்கொண்டது மினிக்கு.

முரட்டுக் குதிரை போலத் தலையாட்டிக்கொண்டு, ''நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன்'' என்று பின்வாங்கினாள்.

4

இருந்தும் அவள் திருமணம் பண்ணிக்கொள்ள வேண்டிய தாயிற்று.

அதற்குப் பின் திருத்தும் படலம் தொடங்கியது. ஓர்

இரவிற்குள் மிருண்மயியின் உலகமே அபூர்வனுடைய வீட்டு அந்தப்புரத்தினுள் அடங்கிவிட்டது.

மாமியார் திருத்தும் வேலையில் ஈடுபட்டாள். கடுமையாக முகத்தை வைத்துக்கொண்டு, ''பாரம்மா, இனி நீ பச்சைக் குழந்தை அல்ல. எங்கள் வீட்டில் அந்தமாதிரி தறுதலைத்தனம் நடக்காது'' என்றாள்.

மாமியார் சொன்னவிதத்தில் மிருண்மயி அதை எடுத்துக்கொள்ளவில்லை. 'இந்த வீட்டில் நடக்காவிட்டால் வேறு இடத்திற்குப் போகவேண்டுமோ என்னவோ?..அன்று பகலே அவளைக் காணவில்லை. எங்கே எங்கே என்று தேடினர். கடைசியில் நன்றி கெட்ட ராகாலன் அவள் ஒளிந்திருக்கும் இடத்தைச் சொல்லிவிட்டான். அவள் ஆலமரத்து அடியில் இருந்த ராதாகாந்த சுவாமியின் உடைந்த தேரினுள் பதுங்கியிருந்தாள்.

மாமியார், அம்மா, ஊரில் இருந்த பெண்டுகள் எல்லாரும் மிருண்மயியை எப்படித் திட்டியிருப்பார்கள் என்று நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்.

இரவில் மேகம் கப்பிக்கொண்டு சோவென்று மழை கொட்டத் தொடங்கியது. அபூர்வகிருஷ்ணன் படுக்கையில் மெல்ல மிருண்மயியின் பக்கம் நகர்ந்து, அவள் காதோடு காதாக, ''மிருண்மயி, உனக்கு என்மேல் ஆசை இல்லையா?'' என்றான்.

''ஊஹூம், உன்மேலே எனக்கு ஆசையே இல்லை'' என்றாள் மிருண்மயி பிகுவுடன். அவள் இவ்வளவு நேரமாக அடக்கி வைத்திருந்த கோபமெல்லாம் அபூர்வனின் தலைமேல் விடிந்தது.

அபூர்வன் உள்ளம் குன்றி, ''ஏன், நான் என்ன தப்புச் செய்தேனும்?'' என்றான்.

மிருண்மயி, ''என்னை ஏன் கல்யாணம் செய்துகொண்டாய்?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

இந்தத் தவறுக்குத் திருப்தியான பதில் சொல்வது கடினம். ஆனால் இந்த அடங்காத மனத்தை வசம் செய்துகொள்ள வேண்டும் என்று அபூர்வன் தனக்குள் திட்டம் செய்துகொண்டான்.

மறு நாள் மாமியார் மிருண்மயியின் அடங்காப் பிடாரித்தனத்தைக் கண்டு அவளை உள்ளே பூட்டி வைத்தாள். மிருண்மயி, புதிதாகக் கூட்டில் அடைபட்ட கிளிபோல முதலில் இங்குமங்கும் தப்தப்பென்று அல்லாடினாள். கடைசியில் வெளியே போக வழியிராமல் கோபம் வீணாகி, படுக்கையின் போர்வையையெல்லாம் பல்லால் துண்டு துண்டாகக் கடித்துப் போட்டாள்; தரையின்மேல் குப்புறப் படுத்து உள்ளூற அப்பாவை நினைத்து அழலானாள்.

இதே சமயம் யாரோ அவள் பக்கத்தில் உட்கார்ந்து, ஆதரவுடன், புழுதி படிந்த அவள் தலை மயிரை ஒதுக்கவே, மிருண்மயி கோபத்துடன் தலையை உருட்டி அந்தக் கையைத் தூரத் தள்ளினுள். அபூர்வன் அவள் காதண்டைக் குனிந்து, ''நான் தெரியாமல் கதவைத் திறந்துவிட்டேன். வா...நாம் குளத்தங்கரைத் தோட்டத்திற்கு ஓடிவிடலாம்'' என்றான். மிருண்மயி வேகமாகத் தலையை ஆட்டி அழுதவாறு, ''ஊஹூம்'' என்றாள். அபூர்வன் அவள் மோவாயைப் பிடித்துத் தூக்கி, ''யார் வந்திருக்கிறார், பாரேன்!'' என்றான். ராகாலன், கீழே விழுந்திருந்த மிருண்மயியைப் பார்த்து ஒன்றும் தோன்றுமல் வாயிலண்டை நின்றிருந்தான். மிருண்மயி முகத்தை நிமிர்த்தாமல் அபூர்வனின் கையைத் தூரத் தள்ளினுள். ''ராகாலன் உன்னோடே விளையாட வந்திருக்கிறான், போகிறாயா?'' என்றான் அபூர்வன். அவள் வெறுப்புடன், ''ஊஹூம்'' என்றாள். ராகாலனும் சௌகரியமில்லை என்று தெரிந்து ஓட்டம் பிடித்தான். அபூர்வன் கம்மென்று உட்கார்ந்திருந்தான். மிருண்மயி அழுதுகொண்டே, கடைசியில் களைத்துத் தூங்கி விட்டாள். அபூர்வன் மெல்ல வெளியே போய்க் கதவைத் தாழிட்டுக்கொண்டான்.

மறு நாள் மிருண்மயிக்கு அவள் அப்பாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஈசானர் தம் உயிருக்குயிரான மிருண்மயியின் திருமணத்திற்கு வர முடியாததற்காக ஒரு குரல் அழுது, புது மணமக்களுக்குத் தம் ஆசியை அனுப்பியிருந்தார்.

மிருண்மயி மாமியாரிடம் போய், ''நான் அப்பாவிடம் போகிறேன்'' என்றாள். மாமியார் திடுமென்று அவள் இப்படிக் கேட்பதற்காக அவளை அதட்டினுள். ''அப்பன் எங்கே இருக்கிறானே, யாருக்குத் தெரியும்? அப்பாவண்டை போக வேணுமாம்; பிடிக்கிறதே பிடிவாதமாக இருக்கிறது!'' என்றாள். மிருண்மயி பதில் சொல்லாமல் போய்விட்டாள். தன் அறையினுள் கதவைத் தாழிட்டுக்கொண்டு, எல்லாம் இழந்தவன் கடவுளிடம் முறையிடுவதுபோல், ''அப்பா, என்னை அழைத்துக்கொண்டு போயேன். எனக்கு இங்கே யாரும் இல்லை. இங்கே இருந்தால் நான் பிழைக்க மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டாள்.

அன்று நள்ளிரவில் தன் கணவன் தூங்கியதும் மெல்லக் கதவைத் திறந்துகொண்டு மிருண்மயி வெளியே சென்றாள். மேகம் கவிந்துகொண்டு வந்தபோதிலும், நிலாக் காலம் ஆனதால் வழி தெரிந்துகொண்டு போகவேண்டிய வெளிச்சம் இருந்தது. அப்பாவிடம் போக எந்த வழியில் செல்வதென்று தெரியவில்லை. கடிதம் எடுத்துச் செல்லும் 'ரன்னர்'கள் போகும் வழி

யில் உலகத்தில் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் போக லாம் என்று அவளுக்கு ஒரு நம்பிக்கை. மிருண்மயி அந்த வழி யில் நடக்கலானாள். நடக்க நடக்க அவள் உடல் தளர்ந்தது. பொழுது விடியும் நேரமாகிவிட்டது. காட்டினுள் இரண்டோரு பறவைகள் கிறகடித்து மெல்லக் கூவின. மிருண்மயி ஆற் றங்கரை ஓரம் பெரிய கடைத் தெருவுக்கு வந்து சேர்ந்தாள். இதற்குமேல் எந்தப் பக்கம் போவதென்று தெரியாமல் நின்ற பொழுது, யாரோ ஓடிவரும் ஓசை கேட்டது. கடிதங்கள் நிரம்பிய பையைத் தோளில் போட்டுக்கொண்டு இரைக்க இரைக்க 'மெயில் ரன்னர்' வந்தான். மிருண்மயி பரபரப்புடன் அவனிடம் போய், ''நான் குசீகஞ்சு போகவேண்டும், அப்பா விடம். என்னை அழைத்துச் செல்வாயா?'' என்றாள். ''குசீ கஞ்சு எங்கிருக்கிறதோ, தெரியாது'' என்றான் அவன். தூங் கும் மெயில் படகோட்டியை எழுப்பிப் படகில் புறப்பட்டான். அவனுக்குத் துக்கம் விசாரிக்கவோ, இரண்டு வார்த்தை பேசவோ நேரம் ஏது?

நாழிகை ஆக ஆகத் துறையிலும் சந்தையிலும் கலகலப்பு ஏற்பட்டது. மிருண்மயி துறையில் இறங்கி ஒரு படகோட் டியை, ''என்னைக் குசீகஞ்சு அழைத்துப் போவாயா?'' என்று கேட்டாள். அவன் பதில் சொல்வதற்குள் பக்கத்துப் பட கோட்டி, ''அடயார்! மினுவா! நீ எங்கிருந்து இங்கே முளைச்சே?'' என்றான். மிருண்மயி பொங்கி எழும் ஆவலுடன், ''வனமாலி, என்னைக் குசீகஞ்சில் அப்பாவிடம் அழைத்துப் போயேன்'' என்றாள். வனமாலி அவர்கள் ஊர்ப் படகோட்டி. இந்த அடங்காப்பிடாரிப் பெண்ணை அவனுக்கு நன்றாகத் தெரியும். ''அப்பாவிடம் போகிறாயா! நல்லது வாயேன். நான் அழைத் துப் போகிறேன்'' என்றான். மிருண்மயி படகில் ஏறினாள்.

படகோட்டி படகைத் தள்ளினான். புரட்டாசி மாதத்தில் ஆற்றில் வெள்ளம் மிகுந்து படகை ஆட்டி வைத்தது. மினிக் குத் தூக்கமாக வந்தது. தலைப்பை விரித்துப் படுத்தாள். இயற்கையின் அன்பில் வளரும் குழந்தையென, அந்தத் துஷ் டச் சிறுமி அடித்துப் போட்ட மாதிரி தூங்கினாள்.

எழுந்து பார்த்தால் அவள் புக்ககத்தில் கட்டிலில் படுத் திருந்தாள். அவள் எழுந்ததைக் கண்டு சமையற்காரி திட்டத் தொடங்கினாள். அந்தக் குரலைக் கேட்டு மாமியார் வந்து கடுமையான வார்த்தைகளைச் சொன்னாள். மினி கண்களை அகல விழித்து அவளையே பார்த்துக்கொண் டிருந்தாள். கடைசியில், மாமியார் அவள் அப்பன் சரியானபடி புத்தி கற்றுக் கொடுக்க வில்லை என்று சொன்னபொழுது, மிருண்மயி வேகமாகப் பக்கத்தறையில் போய்க் கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

அபூர்வன் கூச்சம் பிடுங்கித் தின்ன, ''அம்மா, அவளை இரண்டு நாள் பிறந்த வீடு அனுப்பினால் என்ன?'' என்றான். ''இதேதடா, இப்படி முன்னேயும் பார்த்ததில்லை; பின்னேயும் பார்த்ததில்லை'' என்று அம்மா அபூர்வனை அதட்டினாள். ஊரில் இத்தனை பெண்கள் இருக்கும்பொழுது இந்த எரிமூஞ்சிக் கள்ளியைத் தேர்ந்து எடுத்ததற்காக அவனைக் குத்திக் காட்டினாள்.

5

அன்றெல்லாம் வெளியே மழையும் புயலும்; உள்ளேயும் இதேபோலக் குழப்பம்.

மறு நாள் நள்ளிரவில் அபூர்வன் மிருண்மயியை மெல்ல எழுப்பி, ''மினி, அப்பாவிடம் போகிறாயா?'' என்றான். மினி கப்பென்று அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, ''போகிறேனே'' என்றாள். அபூர்வன் மெல்ல, ''வா, நாம் இரண்டு பேரும் ஓடிவிடலாம். துறையில் படகு ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றான்.

மினி நன்றி பொங்கும் உள்ளத்துடன் கணவனைப் பார்த்தாள். பின்னர்ப் பரபரவென்று எழுந்து உடை மாற்றிக் கொண்டு வெளியே கிளம்பத் தயாரானாள். அபூர்வன் அம்மாவின் கவலையை நீக்கக் கடிதம் எழுதி வைத்துவிட்டு, மினியுடன் வெளியே சென்றான்.

அந்த இருட்டில், தனிமையான ஊர் வழியில் முதல் முறையாக, ஆனந்தரிகத்துடன் மினி தன் கணவனின் கையைப் பிடித்தாள். அவள் உள்ளத்தில் பொங்கும் ஆனந்தம் அந்த மிருதுவான கையின் மூலமாக அவள் கணவனின் இரத்தத்திலும் பரவிச் சிலிர்ப்பை எழுப்பியது.

படகு அன்று இரவே புறப்பட்டது. தாங்க முடியாத மகிழ்ச்சி இருந்தும், மினி சற்று நேரத்திற்கெல்லாம் உறங்கி விட்டாள். மறு நாள் அல்லவா அவளுக்கு விடுதலை, ஆனந்தம்! இரு கரைகளிலும் ஊர்கள், சந்தைகள், வயல்வெளிகள், காடுகள். இரு புறங்களிலும் எத்தனையோ படகுகள் போய் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு சின்ன விஷயத்தைப்பற்றியும் ஆயிரந்தடவை கேட்டாள் மினி. 'இந்தப் படகில் என்ன இருக்கிறது? அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? இந்த இடத்தின் பெயர் என்ன?'-இந்த மாதிரி கேள்விகளுக்குப் பதில் அபூர்வனின் கல்லூரிப் புத்தகங்களில் கிடையாது. பி. ஏ., படித்த அறிவு இருந்தாலும் போதாது. நண்பர்கள் கேட்டால் வெட்கப் படலாம். அபூர்வன் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொன்னான். ஆனால் முக்கால்வாசி அவன் தந்த பதிலுக்கும் உண்மைக்கும் பொருத்தம் இல்லை. எள் ஏற்றிச் செல்லும் படகைக் கடலைக்

கொட்டை என்றும், பாஞ்ச்பேடேயை ராய்நகர் என்றும், முன்சீப் நியாய ஸ்தலத்தை ஜமீன்தார் மாளிகை என்றும் சொல்ல அவன் சற்றும் தயங்கவில்லை. இதையெல்லாம் உண்மை என்று எடுத்துக்கொண்ட பெண்ணின் மகிழ்ச்சியும் குறையவில்லை.

மறு நாள் மாலை படகு குசீகஞ்சை அடைந்தது. தகரவீட்டில் சதுரக் கண்ணுடி லாந்தர் ஏற்றி வைத்திருந்தது. ஈசான மஜூம்தார், திறந்த உடம்புடன் நாற்காலியில் ஒன்றில் உட்கார்ந்து, தோல் பைண்டு செய்த பேரேட்டில் கணக்கு எழுதிக்கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் இளந் தம்பதிகள் அறையினுள் நுழைந்தனர். மினி, ''அப்பா'' என்று கூப்பிட்டாள். அந்த அறையில் இதைப் போன்ற குரல் இதுவரை ஒலித்ததில்லை.

ஈசானரின் கண்களில் நீர் பொலபொலவென்று உதிர்ந்தது. என்ன செய்வது, என்ன சொல்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. பெண்ணும் மாப்பிள்ளையும், ராஜாவும் ராஜாத்தியும் போல் வந்து நின்றார்கள். இந்தச் சணல் மூட்டைகளின் நடுவே அவர்களுக்கு ஏற்ற ஆசனம் எப்படித் தயார் செய்வது என்று அவர் அறிவுக்கு எட்டவில்லை.

அப்புறம் சாப்பாடு. அதுவும் ஒரு கவலைதான். அந்த ஏழைக் குமாஸ்தா தம் கையாலேயே பருப்பும் சோறும் சமைத்துச் சாப்பிடுவார். இன்று இந்த மாதிரி விருந்து நாளில் என்ன செய்வது? எதைச் சமைப்பது? ''அப்பா, நாம் எல்லாருமாகச் சேர்ந்து சமைப்போம்'' என்றாள் மினி. அபூர்வன் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

அறையினுள் இடவசதி இல்லை; ஆட்கள் இல்லை; சாப்பாட்டுக்குச் சாமான் இல்லை. ஆனால் சிறு சில்லியின் மூலம் நாலு மடங்கு வேகத்துடன் ஊற்றுப் பீறிடுவது போல, வறுமையின் குறுகிய வசதியின் மூலம் மகிழ்ச்சி முழு வேகத்துடன் பொங்கி வந்தது.

இவ்வாறாக மூன்று நாட்கள் கழிந்தன. இரண்டு வேளைகளிலும் குறிப்பிட்ட நேரத்தில் ஸ்டீமர் வந்து நிற்கும். எத்தனை ஆட்கள்! ஒரே இரைச்சல்! சாயங்காலம் ஆனதும் ஆற்றங்கரையில் ஈ காக்கை இராது; அப்போது எவ்வளவு யதேச்சை! கேட்பார் கிடையாது. மூவருமாகச் சேர்ந்து, பல ஏற்பாடுகள் செய்து, தவறுதலாக ஒன்றுக்கு இன்னென்றைப் பண்ணினார்கள். அப்புறம் மினி கைவேலைகள் குலுங்க, தகப்பனுக்கும் மாப்பிள்ளைக்கும் இலைபோட்டுப் பரிமாறினாள். வீட்டுக் காரியத்தில் பல தவறுகளைக் காட்டி மினியை ஏளனம் செய்வான் அபூர்வன். அதற்கு அவள் வேடிக்கையாகச் சச்சரவு செய்து கோபித்துக்கொள்ளுவாள். கடைசியில் இனி அதிக

நாட்கள் இருக்க முடியாதென்று அபூர்வன் தெரிவித்தான். மினி, ''இன்னும் சில நாட்கள் இருப்போமே'' என்று கெஞ்சினாள். ''அவசியம் இல்லை'' என்றார் ஈசான மஜும்தார்.

விடை பெற்றுக்கொள்ளும்பொழுது, பெண்ணை மார்பில் அணைத்து அவள் தலையைத் தொட்டுத் துக்கம் தொண்டையை அடைக்க, ''அம்மா, நீ உன் புக்ககத்தில் விளக்கேற்றி லட்சுமியாக இரு. என் மினியிடம் யாரும் தவறு கண்டுபிடிக்கக் கூடாது'' என்றார்.

மிருண்மயி அழுதுகொண்டே கணவனுடன் சென்றாள். ஈசானர் வெறிச்சென்ற அறையினுள் போய் வழக்கம்போல் மூட்டைகளை நிறுக்கலானார்.

6

இந்தக் குற்றவாளிகள் இருவரும் வீட்டுக்கு வந்ததும், அம்மா ஒன்றும் பேசவில்லை. அவர்களுடைய நடத்தைக்காக யாரையும் கடிந்துகொள்ளவில்லை. அவள் மனத்தை அழுத்திய இந்தச் சுமை வீட்டுக் காரியங்களைச் செய்யும்பொழுது வெளிப்பட்டது.

கடைசியில் பொறுக்க முடியாமற் போகவே அபூர்வன், ''அம்மா, கல்லூரி திறந்துவிட்டார்கள்; நான் சட்டத் தேர்வுக்குப் படிக்கவேண்டும்'' என்றான்.

அம்மா அலட்சியமாக, ''உன் பெண்டாட்டியை என்ன செய்யப் போகிறாய்?'' என்றாள்.

''இங்கேயே இருக்கட்டும்''.

''அதெல்லாம் வேண்டாமடா, அப்பா. உன்னோடேயே அழைத்துக்கொண்டு போ.''

அபூர்வன் ரோஷத்தினால் உள்ளம் புழுங்கி, ''ஆகட்டும். சரிதான்..சரி'' என்றான்.

கல்கத்தாவுக்குப் போக ஏற்பாடுகள் நடந்தன. போவதற்கு முன்னால் இரவு அபூர்வன் படுக்கைக்கு வந்து பார்த்தபொழுது மினி அழுதுகொண்டிருந்தாள்.

சட்டென்று அவன் உள்ளத்தை ஏதோ தாக்கியது. வருத்தத்துடன், ''மினி என்னுடன் கல்கத்தாவுக்கு வர உனக்கு விருப்பமில்லையா?'' என்றான்.

''இல்லை''.

''என்மேல் உனக்கு ஆசை இல்லையா?'' என்று கேட்டான் அபூர்வன். இந்தக் கேள்விக்குப் பதில் வரவில்லை. பல தடவை இந்தக் கேள்விக்கு அநாயாசமாகப் பதில் வரும். ஆனால் ஒவ்வொரு சமயம் இதனுள் மனத்தத்துவ சம்பந்தமான சிக்கல்கள் இருப்பதால் சிறுமியிடமிருந்து பதில் ஒன்றும் எதிர்பார்க்க முடியாது.

''ராகாலனை விட்டுப் பிரிய உனக்கு என்னவோபோல் இருக்கிறதா?''

''ஆமாம்'' என்று பதில் சொன்னாள் மினி.

இந்தப் பி.ஏ., படித்துத் தேறிய இளைஞனின் உள்ளத்தில் சிறுவன் ராகாலன்மேல் ஒரு பொறுமை ஊசிபோல் குத்தியது. ''நான் பல நாட்கள் வீட்டுக்கு வரமாட்டேன்'' என்றான். இதற்குப் பதில் ஒன்றும் வரவில்லை. ''ஒரு வேளை இரண்டு ஆண்டுகளுக்கு மேல்கூட ஆகலாம்'' என்றான். மிருண்மயி, ''நீங்கள் வரும்பொழுது ராகாலனுக்கு மூன்று தகடு வைத்த ராட்சசக் கத்தி ஒன்று வாங்கிக்கொண்டு வரவேண்டும்'' என்றாள்.

அபூர்வன் படுக்கையில் சற்று எழுந்து, ''நீ அப்படியானால் இங்கேயே இருப்பாயா?'' என்றான்.

''ஆமாம். அம்மாவிடம் போய் இருக்கிறேன்.''

அபூர்வன் பெருமூச்சு விட்டு, ''சரி. அப்படியே இரு. நீ என்னை வரச் சொல்லி எழுதும் வரையில் வரப்போவதில்லை. மகிழ்ச்சிதானே?'' என்றான்.

இதற்குப் பதில் சொல்வது அவசியம் என்று மிருண்மயிக்குத் தோன்றவில்லை. அவள் தூங்கிவிட்டாள். அபூர்வனுக்குத் தூங்கப் பிடிக்கவில்லை. தலையணையை உயர வைத்து அதன் மேல் சாய்ந்து உட்கார்ந்தான்.

இரவு வெகு நேரம் கழித்துச் சந்திரன் உதயமானான். நிலவொளி படுக்கையின்மேல் விழுந்தது. அபூர்வன் அந்த ஒளியில் மிருண்மயியைப் பார்த்தான். அரசகுமாரியை யாரோ வெள்ளி மாயக்கோல் கொண்டு மயக்கி யிருப்பதுபோல் தோற்றியது. தங்கக்கோல் கிடைத்தால் நித்திரை செய்யும் அழகியை எழுப்பி மாலை மாற்றிக்கொள்ளலாம். வெள்ளிக்கோல் சிரிப்பு; தங்கக்கோல் கண்ணீர்.

விடிகாலையில் அபூர்வன் மிருண்மயியை எழுப்பி, ''மினி, நான் போக நாழிகை ஆகிறது. வா, உன்னை உன் வீட்டில் விட்டு வருகிறேன்'' என்றான்.

மினி படுக்கையிலிருந்து எழுந்ததும், அபூர்வன் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்; ''இப்போது ஒரு வேண்டுகோள்; நான் பல தடவைகள் உனக்கு உதவி செய்திருக்கிறேன். இன்று போகும்போது எனக்கு ஒரு பரிசு'' என்றான்.

மிருண்மயி வியப்புடன், ''என்ன?'' என்றாள்.

''நீயாக அன்புடன் எனக்கு ஒரு முத்தம் கொடு.''

அபூர்வனுடைய வியப்பான வேண்டுகோளையும் அவன் ஆழ்ந்த முகத்தையும் கண்டு மினி சிரித்தாள். சிரிப்பை அடக்கிக்கொண்டு முத்தம் கொடுக்க முகத்தை நீட்டினாள். அரு

கில் சென்றதும், அடக்க முடியாமல் பக்கென்று சிரித்தாள். இந்தமாதிரி இரண்டு தடவை செய்தபின், வாயைத் தலைப்பினால் பொத்திக்கொண்டு ஓயாமல் சிரித்தாள். அதட்டலாக அபூர்வன் அவள் காதை நிமிண்டினான்.

அபூர்வனுக்கு ஓர் உறுதி உண்டு. எதையும் கொள்ளையடித்துப் பெறுவது அவனுக்குப் பெரிய அவமானமாகத் தோன்றும். அவன் தெய்வம்போல, பெருமையுடன், தானாகக் கொடுத்த பரிசை ஏற்றுக்கொள்ளுவான். தன் கையால் எதையும் எடுத்துக்கொள்ள மாட்டான்.

மிருண்மயி சிரிக்கவில்லை. அபூர்வன் அவளை விடிகாலையில் வேறு வழியாகப் பிறந்த வீட்டிற்குக் கொண்டு விட்டான். ''யோசித்துப் பார்த்தேன். அவளை என்னுடன் அழைத்துப் போனால் படிப்புக்குத் தடங்கல்; தவிர, அவளுக்குத் தோழியரும் யாரும் இல்லை. நீதான் அவள் இங்கே இருக்கவேண்டாம் என்றாயே! அதனால் பிறந்த வீட்டில்விட்டு வந்தேன்'' என்றான் அம்மாவிடம்.

மனத்தாங்கலுடன் தாயும் மகனும் பிரிந்தார்கள்.

7

பிறந்த வீட்டிற்கு வந்த மினிக்கு எதிலும் மனம் செல்லவில்லை. அந்த வீட்டில் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன போல் தோன்றியது. அவளுக்குப் பொழுதே போகவில்லை. என்ன செய்வது, எங்கே போவது, யாருடன் பேசுவது என்று ஒன்றும் தெரியவில்லை.

திடீரென்று வீட்டிலும், வெளியிலும் மனிதர்களே இல்லை போல் அவளுக்குத் தோன்றியது. பகல் வேளையில் சூரியன் மறைந்த மாதிரி இருந்தது. இன்று கல்கத்தாவுக்குச் செல்ல அவளுக்கு இவ்வளவு ஆசை இருக்கிறதே. ஏன் நேற்று இரவு இல்லை? அது அவளுக்கே விளங்கவில்லை. தான் இழந்த பழைய வாழ்வை அநுபவிக்க அவள் திரும்பியபோது, அதன் சுவையே முற்றும் மாறிவிட்டது.

ஓர் ஆளை இரண்டாக வெட்டினாலுங்கூட வெட்டுப்பட்ட இடம் தெரியாதவாறு வேலை செய்யும் வாளை, கைத்திறம் வாய்ந்த கம்மியர் தயாரித்தனரென்கதைகளில் கேள்விப் பட்டிருக்கிறோம். விதியின் வாளும் அதே போலத்தான். மிருண்மயியின் பேதை, பெதும்பைப் பருவம் இவைகளுக்கிடையே அது பாய்ந்தது. அது அவளுக்குத் தெரியாது. இன்று எவ்வாறோ அது அசைந்தது. இளமையின் அம்சம் யௌவனத்திலிருந்து விண்டது. மினிக்கு வியப்பும் துயரமும் மேலிட்டன.

பிறந்த வீட்டில் அவளுடைய பழைய படுக்கை அறை அவளுடையதென்று தோன்றவில்லை. அங்கே இருந்த எல்லாம் வேருக இருந்தன. அவளுடைய மனம் இன்னொரு வீட்டை நோக்கியது; வேரேர் அறையில் படுக்கை ஒன்றைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

மிருண்மயியை அதற்கப்புறம் வெளியே யாரும் பார்க்கவில்லை. அவளுடைய சிரிப்புக் குரல் கேட்கவில்லை. ராகாலனுக்கு அவளைக் கண்டால் பயம். விளையாட்டின்மேல் அவளுக்குப் புத்தி போகவே இல்லை.

''அம்மா, என்னைப் புக்ககத்தில் கொண்டுவிடேன்'' என்ருள் மினி.

இந்தப் பக்கம், பிள்ளை பிரிந்து போகும்போது, அவன் முகம் கவலையுற்றிருந்ததை எண்ணி, அவன் தாய் வேதனையில் புழுங்கிப் போனுள்; அவன் கோபித்துக்கொண்டு மனைவியைப் பிறந்த வீட்டில் விட்டு வந்தது அவளை உள்ளூற உறுத்தியது.

இந்தச் சமயத்தில் ஒரு நாள் தலையில் 'கோம்டா' இட்டுக் கொண்டு, மினி வாடிய முகத்துடன் மாமியாரின் காலில் வந்து விழுந்தாள். மாமியார் அந்தக் கணமே கண்களில் நீர் துளிக்க அவளைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டாள். கணப்பொழுதில் இருவரும் ஒன்று கூடினர்கள். மாமியார் மருமகளின் முகத்தைக் கண்டு வியந்தாள். அவள் பழைய மிருண்மயியாக இல்லை. இத்தகைய மாறுதல் சாதாரணமாக எல்லாருக்கும் ஏற்படாது. இப்பெரிய மாறுதலுக்கு அமோக சக்தி தேவை.

மிருண்மயியின் குற்றங்களை ஒவ்வொன்ருகக் கண்டிப்பது என்று மாமியார் நிச்சயம் செய்திருந்தாள். ஆனல் கண்ணுக் கெட்டாத ஓர் ஆள் சுருக்கமான வழியொன்றைக் கையாண்டு, மிருண்மயிக்குப் புதுப் பிறப்பு ஒன்றை அளித்துவிட்டார்.

இப்போது மினி மாமியாரைத் தெரிந்துகொண்டாள். மாமியாராலும் மினியைப் புரிந்துகொள்ள முடிந்தது. மரத்திற்கும் கிளைகளுக்கும் உள்ள உறவுபோல வீட்டு வேலைகளுக்கிடையே அவர்கள் இழைந்தனர்.

பரந்த நோக்குடைய பெண்மையின் அழகு மிருண்மயியின் உடலிலும் உள்ளத்திலும் ஒவ்வொரு புரையிலும் நிரம்பியது. அதனல் அவளுக்கு ஒரு வேதனையே மூண்டது. கார் காலத்தில் நீர் முகந்த முகில்போல் அவள் உள்ளத்தில் கண்ணீர் மல்கிய ஊடல் உலவியது. அந்த ஊடல் மிகுதியால் நிழல் கவிந்த அவள் கண் இதழ்கள்மீது ஓர் அபூர்வமான இருள் தயங்கியது. ''எனக்கு என்னைத் தெரியவில்லை என்ருல் நீங்களும் ஏன் என்னைப் புரிந்துகொள்ளவில்லை?

ஏன் என்னை அதட்டியிருக்கக் கூடாது? உங்கள் விருப்பம் போல் என்னை ஆட்டிவைப்பதுதானே? நான் துஷ்டை. உங்களுடன் கல்கத்தாவுக்கு வரமாட்டேன் என்றபோது என்னைப் பலவந்தமாக உங்களுடன் அழைத்துச் செல்வதுதானே? ஏன் என் பேச்சைக் கேட்டீர்கள்? என் முரட்டுத்தனத்தை எல்லாம் ஏன் பொறுத்துக்கொண்டீர்கள்?'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

எல்லாம் அவள் நினைவுக்கு வந்தன: அன்று காலையில் தனிமையான குளத்தங்கரையில், காலை வேளையில் தன் கையைப் பிடித்தது, ஒன்றும் பேசாமல் தன்னையே ஊடுருவி நோக்கியது யாவும்! திடீரென்று அந்த நோக்கின் கருத்து அவளுக்கு விளங்கியது. அன்று பிரிந்து செல்கையில் அபூர்வனின் வாயருகே வந்து திரும்பிய முத்தம் - அந்த அரைகுறையான முத்தம் - இன்று கானல் நீரை மழையென்று எண்ணி ஆலியும் சாதகம் போல் கழிந்துபோன அந்தச் சந்தர்ப்பத்தைக் குறிந்து வருந்தியது. அவளுடைய வேட்கை தணிகிற வழியாக இல்லை. இப்போது அவளுக்கு அடிக்கடி 'அந்தச் சமயத்தில் இப்படிச் செய்திருந்தால், அந்தக் கேள்விக்கு இந்த மாதிரி பதில் சொல்லியிருந்தால் இப்படியாகி இருக்குமா?' என்றெல்லாம் தோன்றும்.

அபூர்வனுக்கு மிருண்மயி இன்னும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே! என்று அவள்மேல் ஒரு வருத்தம். இன்று அவள் உட்கார்ந்து எண்ணமிட்டாள். 'என்ன நினைத்துக் கொண்டு அவர் போய்விட்டாரோ! அடங்காதவள், புத்தி தெரியாதவள், பிடிவாதக்காரி என்று புரிந்துகொண்டிருப்பாரே தவிர, முழு உள்ளத்துடன் அவர் அன்பின் அமுதத்திற்காக ஏங்கியிருக்கும் பெண் என்று அவருக்குத் தெரியாமல் போய்விட்டதே!' என்று தன்னையே நொந்துகொண்டாள். குறையாக நின்ற அந்த முத்தம் - அன்பின் வெள்ளம் - அபூர்வனின் தலையணையிலேயே தன் கடனைத் தீர்த்துக்கொண்டது.

'நீ கடிதம் எழுதாவிட்டால் நான் வீட்டுக்கு வரமாட்டேன்' என்று அபூர்வன் சொல்லிவிட்டுப் போனான். அதை நினைத்துக்கொண்டு அவள் ஒருநாள் அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு கடிதம் எழுத உட்கார்ந்தாள். அபூர்வன் கொடுத்த பொன்போல் கரைபோட்ட நீலக் காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு யோசிக்கலானாள். கோணல் மாணலாய்க் கோடுகள் போட்டு, விரல்களில் மசியைத் தோய்த்துக்கொண்டு பெரியதும் சின்னதுமான எழுத்துக்களில், எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் ஒரு கடிதம் எழுதினாள்: ''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? எனக்கு ஏன் கடிதம் போடுவதில்லை?

வீட்டுக்கு வாருங்கள்'' - இதற்குமேல் என்ன எழுதுவதென்று அவளுக்குத் தோன்றவில்லை. உண்மையாகச் சொல்ல வேண்டியதே இவ்வளவுதான். ஆனால் மனித சமூகத்தில் மனத்திலுள்ளதை இன்னும் சற்று அதிகப்படுத்திச் சொல்ல வேண்டியது அவசியம். மிருண்மயிக்கும் அது புரிந்தது. இதற்காக அவள் வெகு நேரம் உட்கார்ந்து யோசித்த பின் இரண்டொரு புது வரிகளைச் சேர்த்தாள்: ''இனிமேல் எனக்குக் கடிதம் எழுதுங்கள். எப்படி இருக்கிறீர்கள் என்று எழுதுங்கள். வீட்டுக்கு வாருங்கள். அம்மா சுகமாக இருக்கிறார். விசு, புண்டி எல்லாரும் சுகம். நேற்று நம் கறுப்புப் பசு கன்று போட்டது'' என்று கடிதத்தை முடித்தாள். அதை உறையிலிட்டு, மேலே ஒவ்வோர் எழுத்திலும் ஆசையின் ஒவ்வொரு துளியையும் கலந்து 'ஸ்ரீயுக்த பாபு அபூர்வகிருஷ்ண ராய்' என்று எழுதினாள். காதல் எப்படி இருந்தால் என்ன? வரிகள் நேராகவோ, எழுத்துக்கள் அழகாகவோ, உச்சரிப்புச் சரியாகவோ இல்லை.

உறையின் மேல் பெயரைத் தவிர இன்னும் சில எழுத வேண்டியது அவசியமென்று மினிக்குத் தெரியாது. எங்கேயாவது மாமியார், இன்னும் யார் கண்ணிலாவது படப்போகிறதே என்று கூச்சத்துடன் அதை நம்பிக்கையான வேலைக்காரியிடம் கொடுத்துத் தபால் நிலையத்துக்கு அனுப்பினாள்.

அந்தக் கடிதத்தினால் பலன் ஒன்றுமில்லை. அபூர்வன் வீட்டுக்குத் திரும்பவில்லை.

8

தாய் பார்த்தாள். லீவு விட்டும் அபூர்வன் வீட்டுக்கு வரவில்லை. இன்னும் அவனுக்குத் தன்மேல் கோபம் என்று எண்ணிக்கொண்டாள்.

மிருண்மயியும் அவனுக்குத் தன்மேல் வெறுப்பு என்று நிச்சயம் செய்தாள். தன் கடிதத்தை நினைத்துக்கொண்டு அவள் பொருமினாள். அது துச்சமான கடிதம். அதில் ஒன்றுமே இல்லை. தன் மனத்தில் இருப்பதை அதில் வெளியிட முடியவில்லை. அதைப் படித்து இன்னும் அவளைக் குழந்தையென்றே அபூர்வன் நினைப்பான். உள்ளூற வெறுத்திருப்பான். இதை எண்ணும்பொழுது அவள் அம்பு பட்டவள் போலத் துடித்தாள். வேலைக்காரியை அடிக்கடி, ''அந்தக் கடிதத்தை நீ தபாலில் போட்டாயாடி?'' என்று கேட்டாள். அவளைத் தேற்றி வேலைக்காரி, ''ஆமாம், அம்மா. என் கையால் போட்டேன். இத்தனை நாளிலே பாபுவுக்குச் சேர்ந்திருக்குமே'' என்றாள்.

கடைசியில் அபூர்வனின் தாய் அவளை அழைத்து, ''அம்மா,

அபூ ஏனோ வீட்டுக்கு வரவில்லை! கல்கத்தாவுக்குப் போகலாம் என்றிருக்கிறேன். நீயும் வருகிறாயா?'' என்றாள். மினி, ஆகட்டும் என்று தலையசைத்து, அறையினுள் போய்க் கதவை அடைத்துக்கொண்டு படுக்கையின்மேல் படுத்தாள். தலையணையை மார்பில் அழுத்திக்கொண்டு, புரண்டு சிரித்து, மனத்தில் இத்தனை நாள் கட்டுண்டிருந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள். பின்பு ஓய்ந்துபோய் வேதனையுடன் சந்தேகம் குமுற அவள் அழ ஆரம்பித்தாள்.

அபூர்வனுக்குத் தெரிவிக்காமல் இருவருமாக நெக்குருகி, அவன் அன்பைப் பெறக் கல்கத்தாவுக்குச் சென்றனர். அபூர்வனின் தாய் தன் மாப்பிள்ளையின் வீட்டில் போய் இறங்கினாள்.

அன்று, மிருண்மயியின் கடிதத்தை எதிர்பார்த்து ஏமாதவனுய்ச் சாயங்காலமாக அபூர்வன் தன் சபதத்தைக் கலைத்துத் தானே கடிதம் எழுத உட்கார்ந்தான். எந்த வார்த்தையும் அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை. அவளை எப்படி அழைப்பது?—அந்தப் பதத்தில் அன்பும் ஒலிக்க வேண்டும்; கோபமும் தொனிக்க வேண்டும். ஏற்ற சொல் கிடைக்காமற் போகவே தாய் மொழியின்மேல் அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது. இதே சமயம் தங்கையின் கணவரிடமிருந்து, ''அம்மா வந்திருக்கிறார். இன்றிரவு இங்கேயே சாப்பிடலாம். எல்லாரும் நலம்'' என்று கடிதம் வந்திருந்தது.

கடைசியில் ஓர் ஆறுதல் வாக்கியம் இருந்தும் அபூர்வனின் உள்ளத்தில் ஒரு சந்தேகம். தாமதம் செய்யாமல் தங்கையின் வீட்டுக்குச் சென்றான்.

பார்த்த மாத்திரமே, ''அம்மா, எல்லாரும் நலந்தானே?'' என்றான். ''எல்லாரும் நலந்தான். நீ லீவுக்கு ஊருக்கு வரவில்லை. அதுதான் உன்னை அழைத்துக்கொண்டு போக வந்தேன்'' என்றாள் தாய்.

''அதற்காக இவ்வளவு கஷ்டம் எதற்கு? தேர்வுக்குப் படிக்கிறேன். அதுதான்.....''

சாப்பிடும்போது தங்கை, ''அண்ணா, இந்தத் தடவை உன்னோடு உன் மனைவியையும் அழைத்துக்கொண்டு வரவில்லையே; ஏன்?'' என்றாள்.

அண்ணன் கம்பீரமாக, ''தேர்வுக்குப் படிக்க வேண்டாமா?'' என்றான்.

தங்கை கணவன் சிரித்து, ''அதெல்லாம் வெறும் புரட்டு. நமக்குப் பயந்துதான் அனுப்பத்துவரத் துணியவில்லை'' என்றார்.

''பாவம்! குழந்தை பயந்து போகும்'' என்றாள் தங்கை.

இம்மாதிரி கேலிப் பேச்சுகளுக்கிடையே அபூர்வனின் மனம் மிகவும் வதங்கியது. அவனுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை.

'அம்மா கல்கத்தாவுக்கு வந்தாளே! விருப்பம் இருந்தால் மினியும் அவளுடன் வந்திருக்கலாம். அம்மா அவளையும் அழைத்வர முயற்சி செய்திருப்பாள். அவள் வரவில்லையோ என்னவோ!' இந்த விஷயமாகக் கூச்சத்தினுல் அவன் அம்மாவை ஒன்றும் கேட்கவில்லை. மனிதனின் வாழ்வும், உலகமும் அவனுக்குப் பெரிய சூழ்ச்சியாகவே தோற்றின.

சாப்பிட்டானதும், பெரிய புயற் காற்றுக் கிளம்பி, விடா மழை பெய்தது.

''இன்று இங்கேயே இருந்துவிட்டுப் போ, அண்ணு!'' என்ருள் தங்கை.

''இல்லை. என் இடத்துக்குப் போக வேண்டும். வேலை இருக்கிறது.''

''இராத்திரி என்ன, அப்பா, வேலை? இங்கே ஓர் இராத்திரி தங்கினுல் நீ யாரிடமும் பதில் சொல்ல வேண்டியிராது. கவலை என்ன?'' என்ருர் தங்கை கணவர்.

இப்படி அவர் வற்புறுத்தவே அபூர்வன் தன் விருப்பத்திற்கு மாருக, அங்கே இருக்க ஒப்புக்கொண்டான்.

''அண்ணு, ரொம்பக் களைத்திருக்கிருய். நேரம் ஆக்காதே, போய்ப் படுத்துக்கொள்'' என்ருள் தங்கை.

அபூர்வனுக்கும் அதுதான் தோன்றியது. எப்போதடா படுக்கையில் விழப் போகிருேம் என்று இருந்தது; அவனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

படுக்கை அறை வாயிலில் வந்து பார்த்தால் உள்ளே ஒரே இருட்டு. ''காற்றில் விளக்கு அணைந்துவிட்டது; ஏற்றட்டுமா?'' என்ருள் தங்கை.

''அவசியமில்லை. நான் விளக்கு வைத்துக்கொள்வதில்லை'' என்ருன் அபூர்வன்.

தங்கை போனதும் அபூர்வன் இருட்டில் மெல்லக் கட்டிலை நோக்கிச் சென்ருன்.

கட்டிலில் உட்காரப் போகும்பொழுது சட்டென்று வளை கள் குலுங்க, இரு மெல்லிய கரங்கள் அவனைத் தழுவிக் கொண்டன. பூவினும் மெல்லிய இதழ்கள், கள்ளன்போல வந்து, கண்ணீரிடையே அவனை முத்தமிட்டன. அபூர்வனுக்கு முதலில் வாரிப்போட்டது. பின்னர் விஷயம் தெரிந்தது. அன்ருெரு நாள் சிரிப்பில் மூண்ட விஷயம் இன்று கண்ணீர்ப் பெருக்கில் இனிது முடிவடைந்தது.

காரும் கதிரும்

1

முந்திய தினம் நல்ல மழை பெய்ததால் அன்று இளங் காலை, மழை ஓய்ந்து மங்கிய வெயிலும் சிதறிய மேகத்தின் நிழலும் கூடி அழகார்ந்து விளங்கியது. கதிர் முற்றிய பயிர் நிலங்களின்மேல் நிழலும் ஒளியும் மாறி மாறித் தம் நீண்ட தூரிகையினால் வண்ணங்களைத் தீட்டின. நெடுந்தூரம் பரவிய பசுமையின் சித்திரம், ஒரு சமயம் கதிரவன் கிரணங்களை வீசும்போது, பளிச்செனத் திகழும்; மறு சமயம் முகிலின் சாயையினால் கண்ணுக்கினிய இருண்ட நிறம் கொள்ளும்.

விண்ணரங்கில் காரும் கதிருமே நடிக்கும் விசித்திர நாடகம் இவ்வாறு இருக்க, கீழே உலகில் வாழ்க்கையின் கூத்துக் களத்தில் நடக்கும் விந்தைகளுக்கு ஓர் எண்ணிக்கை உண்டோ?

நாம் இந்த இடத்தில் அத்தகைய வாழ்க்கைக் கூத்தின் திரையைச் சற்று நீக்கிப் பார்ப்போம். ஒரு கிராமம். வழி யோரமாக வீடு ஒன்று தெரிகிறது. அதன் வெளிப்புறமாயிருக் கும் அறை ஒன்றுமட்டுமே பாழ் ஆகாமல் இருக்கிறது. அவ்வறையின் இரு மருங்கிலும், சரிந்து விழும் செங்கற்சுவர் வளைத்துக்கொண்டிருக்கும் மண்வீடுகள். சாலையிலிருந்து பார்த்தால், அந்த வீட்டின் உட்புறம் சன்னலுக்கு அருகே ஓர் இளைஞன் மேடைமீது அமர்ந்து சற்றைக்கொருதரம் இடக்கையால் விசிறிக்கொண்டே இறுக்கத்தையும், ஈக்களின் தொல்லையையும் போக்கிக்கொள்வது தெரியும். வலக்கையால் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டி ஊக்கமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

வெளியே ஊர்ப்பாதையில் 'டோரியா' போட்ட சிற்றுடை கட்டிக்கொண் டிருக்கும் சிறுமி ஒருத்தி மடியில் சில கருநாவற் பழங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாக வாயில் போட்டுச் சுவைத்தவண்ணம் கம்பி போட்ட அந்தச் சன்னல்முன் போவ தும் வருவதுமா யிருந்தாள். உள்ளே, புத்தகத்தில் ஊன்றி யிருக்கும் இளைஞனுக்கும் அந்தச் சிறுமிக்கும் இடையே வளரும் நேசம் அவளது முகத்தில் பிரதிபலித்தது. இளைஞனுடைய கவனத்தைத் தன்பால் எப்படியாவது இழுக்க வேண்டுமென் பதே அப் பாவையின் நோக்கம். ஆனால் அவன் நினைவெல்லாம்

எங்கோ நிலைத்துவிடவே, அவள் வெறுப்புற்றுத் தனக்குள் ளேயே, ''என்னைத் திரும்பிப் பார்க்காமல் போனால் போயேன்; எனக்குமட்டும் என்ன அக்கறை, உனக்கு நாவற்பழம் கொடுக்க வேண்டுமென்று? நானே தின்று விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டாள்.

துரதிருஷ்டவசமாக அறையில் படிப்பில் ஊன்றி யிருக் கும் ஆசாமிக்குக் கண் பார்வை சற்று மட்டம். சிறிது தொலை வில் தனக்காக அந்தப் பெண் காத்துக்கொண் டிருப்பது அவ னுக்குத் தெரியவில்லை. அந்தச் சிறுமிக்கும் அது தெரிந்திருந் தாலும், நெடுநேரம் குறுக்கும் நெடுக்கும் அலைந்துவிட்டு அவன் பராமுகமாய் இருந்ததற்குப் பழி தீர்த்துக்கொள்ள நாவற் பழக் கொட்டைகளை ஒவ்வொன்றாக அவன்மேல் விட்டெறிந் தாள்; குருடனிடத்தில் தன் கோபத்தைக் காட்ட இதுதான் அவள் கையாண்ட கடைசி வழி.

சிறிது நேரத்திற்கு ஒரு தரம் இரண்டொரு கொட்டை தற்செயலாக ஜன்னலின் கட்டைமேல் டக்கென்று விழுந்த போது படிப்பில் ஆழ்ந்திருந்த அந்த இளைஞன் நிமிர்ந்து பார்த்தான். அந்த மாயக்காரி அதை உணர்ந்த வளாய் இருமடங்கு ஆர்வத்துடன் மடியிலிருந்து பக்குவமான நாவற்பழங்களைத் தின்பதற்கு எடுத்து வைத்துக்கொள்ள லானாள். இளைஞன் புருவத்தைக் குறுக்கிக் கூர்ந்து கவனித் தான். சிறுமி யாரென்று அறிந்துகொண்டான். புத்தகத்தை வைத்துவிட்டு ஜன்னலுக்கு அருகில் வந்து நின்றுகொண்டு சிரித்த முகத்துடன், ''கிரிபாலா!'' என்று அழைத்தான்.

கிரிபாலா திரும்பிக்கூடப் பாராமல் தன் மடியிலிருந்து கனிந்த நாவற் பழங்களை எடுத்துக்கொண்டே மெல்ல மெல்ல ஒவ்வோர் அடியாக வைத்து வெளியே செல்லலானாள். அப் போதுதான் பார்வைக் குறைவுள்ள அந்த இளைஞனுக்கு விஷ யம் புரிந்தது. அறியாமல் தான் செய்த ஏதோ பிழைக்காக இது தண்டனை போலும் என்று ஊகித்தான். விரைவாக வெளியே வந்து, ''கிரிபாலா, எங்கே, எனக்கு நாவற் பழம் கிடை யாதா?'' என்றான். கிரிபாலா அவன் வார்த்தைகளைக் காதிலேயே போட்டுக்கொள்ளாதவள்போல், நன்றாகப் பழுத்த ஒரு நாவற் கனியைச் சாவதானமாகத் தின்றுகொண் டிருந்தாள். அந்த நாவற் பழங்கள் கிரிபாலாவின் தோட்டத்தில் பறித்தவை. தினந் தோறும் அந்த இளைஞனுக்கு அதில் பங்கு கிடைத்து வந்தது. கனிகளை நமக்காக மட்டுமன்றி மற்றோர் ஆசாமிக்காகவும் கொண்டு வந்தோம் என்பது அவளுக்கு நினைவு இல்லையா? பின்னே, தன் தோட்டத்தில் பறித்த பழங்களை அயல்வீட்டுக் காரன் ஜன்னலுக்கு எதிரே தின்பதன் கருத்துத்தான் என்ன?

அப்போது இளைஞன் அவள் அருகில் சென்று அவள் கையைப் பிடித்தான். கிரிபாலா முதலில் கோணிக்கொண்டு திமிற முயன்றாள். குப்பென்று அவள் கண்களில் நீர் பொங்கி எழுந்தது. மடியிலுள்ள நாவற் பழங்களைக் கொட்டிவிட்டு அவ்விடத்திலிருந்து ஓடிப் போய்விட்டாள்.

காலையில் கண்ணைக் கூசிய வெயிலும், கருமுகிலின் நிழலும் பிற்பகலில் மங்கி அமைதிகொண்டன. வெண்ணிற மேகங்கள் குவியலாக வானவரம்பில் படிந்து கிடந்தன. மாலையின் மங்கும் ஒளி இலைகளின் மேலும், குளத்து நீரின்மீதும் இயற்கை எழிலுடன் பளபளத்தது. மீண்டும் அந்தச் சிறுமி அதே கம்பி போட்ட சன்னல் முன்பு தெரிகிறாள்; அந்த அறையினுள் அதே இளைஞன் உட்கார்ந்திருக்கிறான். முன் இருந்ததற்கு இப்போது வேறுபாடு என்னவென்றால், தற்சமயம் சிறுமியின் மடியில் நாவற் பழங்கள் இல்லை; இளைஞன் கையிலும் புத்தகம் இல்லை. இதைத் தவிர முக்கியமான சில மாறுதல்களும் தென்பட்டன.

இந்தத் தடவையும் அதே இடத்திற்கு அந்தப் பெண் வந்து எதற்காக அலைகிறாள் என்பதை இங்கே கூறுவது கடினம். சிறுமியின் நடவடிக்கையிலிருந்து உள்ளே இருக்கும் இளைஞனுடன் அவள் பேச வரவில்லை என்பதுமட்டும் தெரிந்தது. காலையில் தான் மண்ணில் உமிழ்ந்த நாவற்கொட்டை மாலையில் முளைத்திருக்கிறதா என்று பார்க்கவே அவள் வந்திருப்பதாகத் தோன்றியது. அது ஒருபுறம் இருக்க, அவர்களுடைய போக்கில் மற்றொரு சிறப்பும் தென்பட்டது. இளைஞனின் முன்பு மேடைமேல் நாவற்கனிகள் குவியலாகக் கிடந்தன.

சிறுமி நடுநடுவே, குனிந்து ஏதோ தேடுவதாகப் பாவனை செய்யும்போது அவன் தன் உள்ளத்தில் குமிழ்த் தெழும் சிரிப்பை வெளிக் காட்டாமல் ஆழ்ந்த யோசனையில் இருப்பவன் போல் கனிகளை ஒவ்வொன்றாகப் புசிக்கலானான். கொட்டையை வெளியே துப்பும்போது எதிர்பாராதபடி இரண்டொன்று பெண்ணின் காலில் வந்து விழும். அப்போது கிரிபாலா, 'காலையில் நாம் செய்த காரியத்திற்கு இது பதிலாக்கும்!' என்று உணரலானாள்.

ஆனாலும் இது நியாயமா? அகம்பாவத்தையெல்லாம் அவள் விட்டொழித்துத் தன்னுடைய சின்னஞ்சிறு உள்ளத்தை அவனிடம் சமர்ப்பிக்க வழி தேடும்போது இப்படி அதற்கு இடையூறு செய்வது கொடுமையன்றோ? தானே வலிய அவனிடம் அகப்பட்டுக்கொள்ள வந்ததை நினைத்துக்கொள்ளும்போது பேதையின் முகம் நாணிச் சிவந்தது. அவ்விடத்தை

விட்டு நழுவ முயலும்போது, இளைஞன் வெளியே வந்து அவள் கையைப் பற்றிக்கொண்டான்.

காலையில் நிகழ்ந்ததுபோலவே இப்போதும் சிறுமி உடலை வளைத்துக்கொண்டு அவன் பிடியிலிருந்து தப்பி ஓட முயன்று பார்த்தாள். ஆனால் இந்தத் தடவை அவள் அழவில்லை. முகம் நாணத்தால் இரத்தம்போலச் சிவக்க, கழுத்தைத் திருப்பிக் கொண்டு, தன்னை அலைக்கழிப்பவனின் பின்புறமாக முகத்தை மறைத்து ஓயாமல் சிரித்தாள். விதியின்றித் தோற்றுப் போய் அவள் அந்தக் கிராதி போட்ட அறையினுள் சிறை புகுந்தாள்.

வானவெளியில் முகிலும் வெயிலும் மாறி மாறி இயற்றும் கண்ணுமூச்சி விளையாட்டுப்போல் பூதலத்தின் ஒரு மூலையில் இவர்கள் விளையாடுவதும் நிரந்தரமானதல்ல; அதிசயமானதும் அல்ல. காரும் கதிரும் ஒன்றோடொன்று இழைவது வெறும் விளையாட்டல்ல; ஆனால் நமக்கு அது வேடிக்கையாகத் தோன்றுகிறது. வேலை வெட்டியில்லாத மழைக் காலத்தில் இருவரிடையே நிகழும் இம்மாதிரிச் சிறு நிகழ்ச்சிகள் பல, வெளிக்கு அற்பமானவையாகத் தோற்றும். ஆனால், உண்மையில் அவை அற்பமல்ல. எந்த விதிக்கும் கட்டுப்படாத மூவாமுதலோன், ஊழிதோறும் ஊழியைப் பிணைப்பதுபோல், அச்சிறுமியின் மனத்தில் எழும் அழுகையையும் சிரிப்பையுமே அவள் ஆயுள் முழுதும் நீடிக்கும் இன்ப துன்பமாக மாற்றுகிறான்.

இப்போது அச்சிறுமி ரோஷம் கொண்டதிலோ ஒரு பொருளும் இல்லை. இந்த விசித்திர நாடகத்தைக் காண்பவர்களுக்கு மட்டுமல்ல; இதில் முக்கிய பாத்திரமாக நடிக்கும் இளைஞனுக்கும் அது பொருளற்றதாகவே இருந்திருக்கும். அந்தச் சிறுமி ஒவ்வொரு நாள் அதிகமாகக் கோபித்துக்கொள்கிறாள்; ஒவ்வொரு நாள் அளவு கடந்த அன்பு காட்டுகிறாள். சில நாளில் அவனுக்கு நிறையக் கனிகள் தந்து உபசரிக்கிறாள்; சில தினங்களோ கொடுப்பதையும் நிறுத்திவிடுகிறாள்; இதற்குக் காரணம் என்னவென்று சொல்வது? ஒவ்வொரு சமயம் தன் கற்பனைத் திறமையை யெல்லாம் காட்டி இளைஞனுடன் உல்லாசமாக உரையாட வருகிறாள். ஒவ்வொரு சமயம் திடீரென மனம் கல்லாகித் தன்னால் இயன்றவரையில் அவனோடு சேராமல் விலகி நின்று துன்புறுத்துகிறாள். கடினமாக இருந்த இவ்வுள்ளம் சட்டென அநுதாபத்தால் கண்ணீர்ப் பெருக்கில் கரைந்து உருகுவதும் உண்டு. அற்பமாகத் தோற்றுகின்ற காரும் கதிரும் நடத்தும் இந்த விளையாடல் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்னால் விவரிக்கப்படும்.

2

கட்சிச் சண்டை, குட்டிக் கலகம், வம்பு, வீண் வழக்கு, சணல் வியாபாரம், கரும்புச் சாகுபடி - இவைதாம் அந்தக் கிராமத்தில் இருந்தவர்களுக்குப் பிரதானம். சசிபூஷணனும் கிரிபாலாவும் மட்டுமே இலக்கிய சர்ச்சையிலும் சிந்தைக்கு விருந்தாக உள்ள உரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர். இதைக் குறித்து ஊரில் எவரும் அக்கறையோ, ஆவலோ கொள்ள வில்லை. காரணம், கிரிபாலாவுக்கு வயசு பத்துத்தான். சசி பூஷணன் அப்போதுதான் முளைத்தெழும் எம்.ஏ., பி.எல். இவர்கள் உறவினரல்லர்; அண்டை வீட்டுக்காரர்களே.

கிரிபாலாவின் தந்தை ஹரகுமாரர் ஒரு காலத்தில் அந்தக் கிராமத்திலேயே பெரிய மிராசுதாராக இருந்தவர். இப் போதோ கெட்ட தசையினால் சொத்தெல்லாம் விற்றுத் தொலைத்துவிட்டு அயலூர் ஜமீன்தார் ஒருவனிடம் காரியஸ் தராக அமர்ந்திருந்தார். அவர் வசிக்கும் பர்க்கணவிலேயே அவருக்கு வேலை. அதனால் பிறந்த ஊரை விட்டுப் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

சசிபூஷணன் எம்.ஏ., தேர்ச்சி பெற்றதும் சட்டப் பரீட்சையிலும் தேறினான். ஆனால் இன்னும் எந்தத் தொழி லிலும் ஈடுபடாமல் சும்மா இருந்தான். நாலு பேரோடு கலந்து உறவாடுவதும் இல்லை; கிராமக் கூட்டங்களில் கலந்து கொண்டு இரண்டு வார்த்தைகூடப் பேசுவதும் இல்லை. கண் பார்வை மட்டமானதால் பழக்கமானவர்களைக்கூட அவன் தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. புருவத்தைக் குறுக் கிக்கொண்டு யாரென்று பார்ப்பான். இதை அகம்பாவம் என்று பிறர் எண்ணினார்கள்.

கல்கத்தாவில் மக்கள் திரளிடையே இந்தமாதிரி தன் மனம்போல் இருப்பது அதிசயமாக இராது. ஆனால் ஒரு பட்டிக் காட்டில் இது குற்றமாகக் கருதப்படும். சசிபூஷணனுடைய தகப்பனார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பலன் ஏற்பட வில்லை. முடிவாக, உத்தியோகம் இல்லாமல் இருக்கும் தம் பிள்ளையைப் பயிர் பச்சைகளையாவது கவனித்துக்கொள்ளும் படி கிராமத்திற்கு அனுப்பி வைத்தார். இதனால் கிராமவாசிகள் சசிபூஷணனைக் கேலி செய்து அவனைக் கண்டபோதெல்லாம் இகழ்ந்து வந்தனர். இவற்றையெல்லாம் அவன் பொறுத்துக் கொண்டு வந்தான். அவர்கள், அவனை இகழ்வதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அமைதியை விரும்பும் சசிபூஷண னுக்கு மணம் செய்துகொள்ள விருப்பமில்லை. பெண்ணை வைத்துக்கொண் டிருக்கும் பெற்றோர்கள் அவன் இப்படி இருப்

பதைக் கர்வம் என்று எண்ணி அவனைக் கண்டு பொருமினார்கள்.

அவர்கள் இவ்வாறு அவனுக்குப் பல வகையிலும் தொந்தரவு இழைக்க இழைக்க, அவன் தன் சொந்த வீட்டில் தனிமையிலேயே மறைந்து வசிக்கலானான். அறையின் ஒரு மூலையில் மேடையின் மேல் மெத்தையை விரித்துக்கொண்டு ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பதில் ஈடுபட்டிருப்பான்; நினைத்த வேளையில் படித்த புத்தகத்தைப் படிப்பதே அவன் செய்யும் வேலை. சொத்து எக்கதி அடைந்தால் என்ன அவனுக்கு?

மனித இனத்தில் கிரிபாலா ஒருத்தியோடு மட்டுமே அவனுக்குப் பழக்கம் என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

கிரிபாலாவின் சகோதரர்கள் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி தங்கள் முட்டாள் தமக்கையைப் பார்த்து அவர்கள், 'உலகத்தின் வடிவம் எப்படி இருக்கும்?', 'சூரியன் பெரியதா; உலகம் பெரியதா?' என்று பலவிதமான கேள்விகள் கேட்டு அவளைச் சோதிப்பார்கள். அவள் தப்பாகப் பதில் சொல்வதைப் பார்த்து அவளைத் தூக்கி எறிந்தாற் போல் பேசிப் பிழையைத் திருத்துவார்கள். 'சூரியன், உலகத்தைக் காட்டிலும் பிரம்மாண்டமானது என்ற கொள்கைக்கு ஆதாரம் காட்டு' என்று அவள் துணிவாகக் கேட்டால், அவளுடைய சகோதரர்கள், 'சூ! வாயை மூடு! எங்கள் புத்தகத்தில் எழுதியிருக்கிறது!' என்று அவளை மட்டந் தட்டுவார்கள்.

அச்சடித்த புத்தகத்தில் அப்படி இருக்கிறது என்று கேட்டதும் கிரிபாலாவின் வாய் அடைத்துவிடும். வேறு அத்தாட்சியே அவளுக்கு வேண்டியதில்லை. அவளுக்குமட்டும் மனசில் தானும் அவர்களைப் போலப் புத்தகங்களை வைத்துக்கொண்டு படிக்க வேண்டுமென்று ஆசை. ஒவ்வொரு நாள் தன் அறையில் ஏதாவது புத்தகத்தை வைத்துக்கொண்டு மட மடவென்று படிப்பதுபோல் அபிநயம் செய்து பக்கங்களைப் புரட்டிக் கொண்டே இருப்பாள். பழக்கம் இராத அந்தக் கரிய அச்செழுத்துக்கள் பெரிய தோரணவாயில் வழியாக எந்த இரகசிய லோகத்தை நோக்கியோ கொம்பும், காலும், கீழ் விலங்கும், மேல் விலங்குமாய்ச் சாரி சாரியாகச் செல்வது போல் அவளுக்குத் தோற்றும். கிரிபாலா வினவும் கேள்விகளுக்கு அவை திரும்பிக்கூடப் பதில் தராமல் நிற்கும். பாவம்! ஆவல் குடிகொண் டிருக்கும் அவளிடம், பாட புத்தகத்தில் வரும் சொற்றொடர்கள் புலி, நரி, குதிரை, கழுதை இவற்றைப் பற்றிய ஓர் அதிசயத்தையும் சொல்லாமல் மௌனம் சாதிக்கும்.

கிரிபாலா, தனக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தரும்படி அண்ணன் தம்பிமார்களை எவ்வளவு வேண்டிக்கொண்டும் அவர்கள் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. சசிபூஷணன் ஒருவனே இந்த விஷயத்தில் அவளுக்கு ஒத்தாசையாக இருந்தான். 'கதா மாலை', 'ஆக்யான மஞ்சரி' என்ற பாடப்புத்தகங்கள் புரிபடாமல் இருந்ததுபோலவே சசிபூஷணனுடைய குணமும் முதலில் கிரிபாலாவுக்குப் புரியாமல் இருந்தது. பாட்டையோரமாகக் கம்பி போட்ட அந்தச் சிறிய அறையினுள் அவன் தனிமையாக மேடைமேல் புத்தகங்கள் சூழ உட்கார்ந்திருப்பான். வெளியே கிரிபாலா கம்பியைப் பிடித்துக்கொண்டு, முதுகு வளையப் புத்தகத்தைக் கவிந்து படிக்கும் இந்த அதிசயப் பிரகிருதியைப் பார்த்துத் திகைத்து நிற்பாள். அவனைச் சூழ்ந்துள்ள புத்தகங்களின் எண்ணிக்கையைப் பார்த்துத் தன் அண்ணன்மார்களைவிடச் சசிபூஷணனே நிரம்பப் படித்தவன் என்ற முடிவுக்கு வருவாள். இதைவிட வியப்புத் தரும் விஷயம் அவள் கண்டதில்லை. 'கதா மாலை'யைப் போன்ற எத்தனையோ பாடப்புத்தகங்களைச் சசிபூஷணன் ஓர் எழுத்து விடாமல் படித்திருக்கவேண்டும் என்பதில் அவளுக்கு எள்ளளவும் ஐயமில்லை. சசிபூஷணன் புத்தகங்களின் ஏடுகளைத் தள்ளும்போது அவள் ஒரே இடத்தில் நின்று கவனிப்பாள். அவனது அறிவின் விரிவு எத்தகையதென்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

கடைசியாக ஒரு நாள் வியப்பில் ஆழ்ந்த அச்சிறுமி, கண் பார்வை மங்கிய சசிபூஷணனுடைய கவனத்தைக் கவர்ந்தாள். சசிபூஷணன் பகட்டாகப் 'பைண்டு' செய்த புத்தகம் ஒன்றைத் திறந்து, ''கிரிபாலா, பொம்மை காட்டுகிறேன், வா'' என்று கூப்பிட்டதும் ஒரே ஓட்டம் பிடித்தாள். ஆனால், மறு தினமே மீண்டும் அவள் 'டோரியா' சிற்றுடை அணிந்து கொண்டு அந்தச் சன்னலுக்கு வெளியில் நின்றவண்ணம், முன் போலவே ஒரே கவனமாகச் சசிபூஷணன் படித்துக்கொண்டிருப்பதைக் கண்கொட்டாமல் கவனித்தாள். சசிபூஷணன் அன்றும் அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். அந்தத் தடவையும் கிரிபாலா தலைமயிர் காற்றில் பறக்க, இரைக்க இரைக்க ஓடி மறைந்துவிட்டாள். இவ்வாறு தொடங்கிய இவர்களுடைய நட்பு வரவர முதிர்ந்து வந்தது; பாவை சன்னலுக்கு வெளியிலிருந்து சசிபூஷணன் அறையினுள் வருவதும் மேடையில் உள்ள புத்தகங்களைப் புரட்டிப் பொம்மை பார்ப்பதுமாக அவ்வளவு அந்நியோன்யம் ஏற்பட்டதன் காரணம் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கே பயன் தருவதாகும்.

சசிபூஷணனிடத்தில் கிரிபாலா கல்வி கற்க ஆரம்பித்

தாள். கேட்டால் உங்களுக்குச் சிரிப்பு வரும்; இந்த உபாத்தியாயர் தம் சிறு மாணவிக்கு வெறும் எழுத்து, உச்சரிப்பு, இலக்கணம்மட்டும் கற்றுக் கொடுத்ததோடு நிறுத்தி விடவில்லை; பெரிய பெரிய காவியங்களிலிருந்து மொழிபெயர்த்தும் அவளுக்குச் சொல்வார். அவள் அபிப்பிராயத்தையும் கேட்பார். அந்தப் பெண்ணுக்கு இதெல்லாம் புரிந்ததோ இல்லையோ அது கடவுளுக்குத்தான் தெரியும்; அவளுக்கு மட்டும் இது பிடித்திருந்தது. விளங்கினதையும் விளங்காததையும் கலந்து, தன் சின்னஞ் சிறு உள்ளத்தில் அபூர்வமான கற்பனைச் சித்திரங்களை வரைந்துகொள்வாள். கண்கள் விரிய மௌனமாக, மனம் ஒன்றி அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பாள். ஒவ்வொரு சமயம் சம்பந்தமற்ற கேள்விகளைக் கேட்பாள். அவர்கள் பேச்சு எப்போதாவது இதிலிருந்து வேறு ஏதாவது விஷயத்திற்குத் தாவும். சசிபூஷணன் ஒருபோதும் அவளைத் தடுத்ததில்லை; அவள் விருப்பப்படிப் பேச விட்டுவிடுவான். பெரிய பெரிய காவியங்களைப்பற்றி அவள் கூறும் புகழுரையையோ கண்டனத்தையோ கேட்டு மகிழ்ச்சி அடைவான். அந்த ஊரில் கிரிபாலா ஒருத்தியிடமே அவனுக்கு உள்ளூற அன்பு. சசிபூஷணனோடு அறிமுகமான போது கிரிபாலாவுக்கு வயசு எட்டு; இப்போது அவளுக்குப் பத்து நிரம்பிவிட்டது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் ஆங்கிலமும் வங்க மொழியும் கற்றுக்கொண்டு பாடப்புத்தகங்களை எளிதாகப் படிக்கத் தொடங்கிவிட்டாள். கிரிபாலாவுடன் பழக்கம் ஏற்பட்ட பிறகே, பிடிக்காதிருந்த கிராம வாசமும் அவனுக்குப் பிடித்திருந்தது.

3

இப்படி இருந்தும் கிரிபாலாவின் தந்தை ஹரகுமாரருக்கும் சசிபூஷணனுக்கும் அவ்வளவாக மன ஒற்றுமை இல்லை. இந்த எம்.ஏ., பி.எல்- இடம் தம் வழக்கு விஷயமாக யோசனை கேட்க அவர் முன்னெல்லாம் வருவார். சசிபூஷணன் அதில் சிரத்தை காட்டியதாகத் தெரியவில்லை. தனக்குச் சட்ட விஷயங்களில் அநுபவம் போதாதென்று சொல்லவும் அவன் தயங்கவில்லை. ஆனால் காரியஸ்தர்மட்டும் இதை வெறும் புரட்டு என்று கருதினார். இம்மாதிரி இரண்டு ஆண்டுகள் கழிந்தன.

இதற்கிடையே ஒரு சமயம் தமக்கு அடங்காத குடியானவன் ஒருவனை அவர் தண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வெவ்வேறு இடங்களில் அவன் பேரில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவனை அழுத்துவதற்கான வழி சொல்லும்படி

சசிபூஷணனை அவர் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். இதற்குச் சசிபூஷணன் தந்த பதில் ஹரகுமாருக்கு அநுகூலமாக இல்லை; அவருக்கு எரிச்சலையே உண்டு பண்ணியது.

மற்றொரு குடியானவன்மேல் அவர் தொடுத்திருந்த வழக்கும் அப்போது தோற்றுவிட்டது. அவன் பக்கம் சசிபூஷணனே நின்று மறைவாக வேலை செய்திருக்க வேண்டுமென்ற தவறான எண்ணம் கொண்டார் ஹரகுமாரர். இனிமேல் இந்த மனிதனை ஊரில் இருக்கவிடக் கூடாது என்று உறுதி செய்துகொண்டார்.

சசிபூஷணனின் தோட்டத்தில் திடீரென மாடு, கன்றுகள் புகுந்து செடிகளை நாசமாக்கும்; துவரங் கொல்லை தீப்பற்றி எரியும்; வரப்புக்காக வீண் சச்சரவு மூளும். சொந்தக் குடியானவர்களே குத்தகையைச் சரிவரக் கொடுக்காமல் இழுக்க அடிப்பார்கள். அவன் மேல் அக்கப்போர் தொடுப்பார்கள். அத்தமிக்கும்போது வெளியில் வந்தால் அவனைக் குத்தி விடுவதாகவும், இரவு வேளையில் வீட்டையே தீக்கிரையாக்கப் போவதாகவும் ஊரில் பயமுறுத்தினார்கள்.

கடைசியாகச் சாதுவான சசிபூஷணன் ஊரைவிட்டுக் கல்கத்தாவுக்கு சென்றுவிடத் துணிந்தான். அவன் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் சமயம் கிராமத்தில் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் துரை முகாம் வந்து இறங்கினான். டவாலி போலீஸ் சேவகன், பட்லர், நாய்கள், குதிரை, குப்பைக்காரன், மற்றும் சிப்பந்திகள் கூட வரவே கிராமம் திமிலோகப்பட்டது. புலியின் பின் செல்லும் நரிகள்போல் சிறுவர் கூட்டம், துரை முகாம் போட்டிருக்கும் இடத்தருகில் சுற்றிக்கொண்டிருந்தது.

வழக்கப்படி காரியஸ்தர் ஹரகுமாரர் துரைக்கு வேண்டிய கோழி, முட்டை, நெய், பால் எல்லாவற்றையும் சேகரித்துக் கொடுத்துச் செலவுக் கணக்கில் பற்று எழுதி விட்டார். மாஜிஸ்டிரேட் துரைக்கு, வேண்டிய அளவுக்கு மேல் முகம் சிணுங்காமல் ஹரகுமாரர் பண்டங்களைத் தாராளமாக வழங்கியும் துரையின் குப்பைக்காரன் அவருடைய நாய்க்கு இரண்டு வீசை நெய் வேண்டுமென்று அதிகார தோரணையில் கேட்டான். போதாத வேளை, ஹரகுமாரர் அவனைப் பார்த்து, ''நாட்டு நாயைவிடச் சீமை நாய்க்கு எவ்வளவு கொடுத்தாலும் சரிக்கும்; ஆனால் நீ கேட்கிற அளவு கொடுத்தால் அதற்கு மந்தம் தட்டிவிடும்'' என்று அவனை வெறுங்கையுடன் அனுப்பிவிட்டார்.

குப்பைக்காரன் துரையிடம் போய், ''நாய்க்காக மாமிசம் எங்கே அகப்படுமென்று காரியஸ்தரைக் கேட்டேன். 'ஈன

சாதிப் பயலே! எவனடா உன்னே அனுப்பினுன்?' என்று எல்லாரெதிரிலும் என்னேத் திட்டினுர். உங்களேயும் சும்மா விடவில்லே'' என்று வர்த்தி வைத்தான்.

ஏற்கனவே அந்த மாஜிஸ்டிரேட் பிராம்மணரை வெறுப் பவன். போதாக்குறைக்குத் தன்னுடைய குப்பைக்காரனே இழிவு படுத்தின சமாசாரத்தையும் கேட்டு ஆத்திரம் அடைந்தான். உடனே போலீஸ் சேவகனேக் கூப்பிட்டு, ''அந்தப் பார்ப் பானே உடனே இழுத்துக்கொண்டு வா இங்கே!'' என்று உத்தரவிட்டான்.

காரியஸ்தர் உடல் நடுக்குறத் துர்க்கா நாமத்தை ஜபித்த வண்ணம் துரையின் கூடாரத்தெதிரே வந்து நின்ருர். துரை 'டக் டக்' என்று பூட்ஸ் காலால் அடி வைத்து வெளியே வந்து உரத்த குரலில் ஆங்கில உச்சரிப்புடன், ''நீ என்னுட்டுக்கு நம்ப மனிசனேப் பயமுறுத்தினே? சொல்லு, மான்!'' என்று மிரட்டினுன்.

ஹரகுமாரர் குலேநடுங்கக் கைகளேக் கூப்பி, ''துரையவர் களின் ஆளே நான் திட்டுவேனு, எங்கேயாவது? அவன் தங்க ளுடைய நாய்க்கு இரண்டு வீசை நெய் கேட்டான் முதலில்; நல்ல சாதி நாயாயிற்றே, அதனுடைய உடம்புக்கு ஆகாதே என்றுதான் கொடுக்கவில்லே. ஆனலும் நெய்க்காக ஆளே அனுப்பி இருக்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில் லேயே, துரை!'' என்று மன்ருடினுர்.

மாஜிஸ்டிரேட் விடாக்கிண்டன்; அவன் ஹரகுமாரரைப் பார்த்து, ''யாரை அனுப்பியிருக்கிறே? எங்கே அனுப்பி யிருக்கிறே?'' என்ருன்.

ஹரகுமாரர் தம் வாயில் வந்த இரண்டு பேரைச் சொன் னுர். அந்த ஆட்களேச் சீக்கிரம் நெய்யை எடுத்து வரும்படி துரை சிப்பந்திகளுள் ஒருவனே ஏவிக் காரியஸ்தரைத் தன் கூடாரத்திலேயே நிறுத்திக்கொண்டான். ஏவலாட்கள் திரும்பி வந்து துரையிடம் நெய்க்காக ஹரகுமாரர் எவரையும் எங் குமே அனுப்பவில்லே என்று அறிவித்தனர். இதனுல் காரியஸ் தர் சொன்னதெல்லாம் பொய் என்றும், குப்பைக்காரன் வார்த்தையே மெய்யென்றும் பட்டுவிட்டது துரைக்கு. அவன் உறுமிக்கொண்டே தன் குப்பைக்காரனேக் கூப்பிட்டு, ''இந்தத் தடிப்பயலின் காதைத் திருகி இவன்மேல் ஏறி இந்தக் கூடா ரத்தைச் சுற்றிச் சுற்றிக் குதிரைச் சவாரி செய்'' என்று ஆக்ஞை யிட்டான். குப்பைக்காரனும் தயங்காமல் நாலு பக்கமும் ஜனங்கள் பார்க்கத் துரையின் கட்டளேயை நிறைவேற்றினுன்.

இந்தச் செய்தி ஊரெங்கும் அமளிதுமளிப்பட்டது. ஹர குமாரர் வீட்டுக்குத் திரும்பியதும் உணவு ஒன்றும் கொள்ளா

மல் சப்தநாடியும் ஒடுங்கிப் போய்ப் படுத்துக் கிடந்தார். ஜமீன் நிர்வாக சம்பந்தமாக அவருக்குப் பல விரோதிகள் ஏற்பட்டிருந்தனர். இதைக் கேட்டதும் அவர்களுக்கெல்லாம் வயிற்றில் பாலே வார்த்தாற்போல் ஆயிற்று. இந்த அட்டூழியத்தைப்பற்றிக் கேட்டதும், கல்கத்தாவிற்குப் பயணமாகும் சசிபூஷணனுக்கு இரத்தம் கொதித்து எழுந்தது. அன்று இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை.

மறுநாட் காலையில் அவன் ஹரகுமாரர் வீட்டுக்குச் சென்றிருந்தான். அவன் கையைப் பிடித்துக்கொண்டு துக்கம் பொங்கிவரத் தேம்பித் தேம்பி அழுதார் அவர். மாஜிஸ்டிரேட்டின்மேல் மானநஷ்ட வழக்குத் தொடுக்கும்படியும், தானே அவர் பக்கம் வக்கீலாக இருந்து வாதாடுவதாகவும் உறுதி கொடுத்தான் சசிபூஷணன்.

துரைமீது மானநஷ்ட வழக்கு என்றதும் அவர் முதலில் நடுங்கிப் போனார். ஆனால் சசிபூஷணனே விடுபவனாயில்லை.

ஹரகுமாரர் யோசித்துப் பார்ப்பதாகச் சொன்னார். நாலு பக்கமும் விரோதிகள் கொம்மாளம் அடிப்பதைப் பார்க்கப் பொறுதவராய்ச் சசிபூஷணனுடைய யோசனைக்கு இணங்கினார். ''அப்பனே, நீ கல்கத்தாவுக்குப் போய்விடுவதாகக் கேள்விப்பட்டேனே; போகக் கூடாது. உன்னைப்போன்ற ஒருவன் இந்த ஊரில் இருந்தால் எனக்கு எவ்வளவோ பக்கபலமாயிற்றே! எது வந்தாலும் சரி; என்னை இந்த மானக்கேட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும்'' என்று நைந்துருகிச் சொன்னார்.

4

இதுவரையில் ஊரார் கண்ணுக்குப் படாமல் தனிமையில் காலங் கழித்த சசிபூஷணன் இன்று கச்சேரியில் தோன்றினான். வழக்கின் விவரங்களைக் கேட்டுக்கொண்டு மாஜிஸ்டிரேட் அவனைத் தம் அறையினுள் அழைத்துச் சென்று மிக்க மரியாதையுடன், ''சசி பாபு, இந்த வழக்கை அம்பலமாக்காமல் ஒருவிதமாக ராஜியாகப் போய்விட்டால் நன்றாயிருக்குமே!'' என்றார்.

சசிபூஷணன் மேஜைமேல் இருக்கும் ஒரு சட்டப் புத்தகத்தின்மேல் பார்வையைச் செலுத்தியவண்ணம், ''என்னுடைய கட்சிக்காரர் இதற்கு உடன்பட மாட்டார். நாலு பேர் சிரிக்க அவரை அவமானப்படுத்திய விவகாரமாயிற்றே! எப்படி இதை இரகசியமாகச் சரிப்படுத்துவது?'' என்றான்.

இரண்டொரு வார்த்தையிலிருந்தே, மிதமாகப் பேசும் அந்தச் சசிபூஷணன் எளிதில் மசியக்கூடிய பேர்வழியல்ல

என்பதைக் கண்டுகொண்டு மாஜிஸ்டிரேட் துரை, ''ஆல்ரைட், பாபு! விவகாரம் எவ்வளவு தூரம் போகிறதோ, பார்க்கலாம்'' என்றார்.

வழக்கு விசாரணைத் தினத்தைத் தள்ளிப் போட்டு வெளியூர் அலுவல்களைக் கவனிக்கப் புறப்பட்டுவிட்டார். இதற்குள் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் ஜமீன்தாருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

அதில், ''உம்முடைய காரியஸ்தன் என் வேலையாள் ஒருவனை அவமானப்படுத்தியதோடுகூட என்னையும் வைததாகத் தெரிகிறது. இதற்கு நீர் ஜவாப் சொல்லாவிட்டால் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்'' என்று மிரட்டியிருந்தான்.

ஜமீன்தார் திடுக்கிட்டவராய் உடனே ஹரகுமாரரை வரவழைத்தார்; காரியஸ்தர் நடந்ததை யெல்லாம் ஆதியோடந்தமாகக் கூறிவிட்டார். ஜமீன்தார் கடுகடுப்புடன், ''துரையின் குப்பைக்காரன் இரண்டு வீசை நெய் கேட்டால் அப்போதே கொடுத்துவிடுகிறதுதானே? உம் அப்பன் வீட்டுச் சொத்து என்ன முழுகிப் போகிறது!'' என்று கடிந்துகொண்டான்.

'இவர் சொல்வது வாஸ்தவந்தானே? நம் சொத்து ஒன்றும் புரண்டு போகவில்லையே! கொடுத்து விட்டிருக்கலாம்' என்று பட்டது ஹரகுமாரருக்கும். தம் பிழையை ஒப்புக்கொண்டு அவர், ''என் போதாத காலம், எனக்கு அப்படிப் புத்தி கொடுத்தது! ஊம்!'' என்றார்.

''அதோடு நில்லாமல் மாஜிஸ்டிரேட் மேலேயே தாவா தொடுக்கும்படி உமக்கு யாரையா உபதேசம் பண்ணினது?'' என்றார் ஜமீன்தார்.

''பெரியவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. வழக்குத் தொடுக்க வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை; எங்களூர் வக்கீல் சசிபூஷணன் வழக்கு ஒன்றும் கிடைக்காமற் போகவே என்னைத் தூண்டி இவ்வாறெல்லாம் செய்திருக்கிறான்'' என்றார்.

ஜமீன்தாரினுடைய கினம் சசிபூஷணன்மேல் பாய்ந்தது. 'அவனென்ன, உதவாக்கரை வக்கீல்! தான் பேரெடுக்க வேண்டுமென்று செய்த சூழ்ச்சி' என்று பட்டுவிட்டது ஜமீன்தாருக்கு. காரியஸ்தரை உடனே வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படியும், ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட், பெரிய மாஜிஸ்டிரேட் இவர்கள் காலில் விழும்படியும் உத்தரவிட்டார். காரியஸ்தர் துரையின் கோபத்தைத் தணிக்கக் கொஞ்சம் பட்சணமும் கனி வகைகளும் எடுத்துக்கொண்டு அவனுடைய இருப்பிடத்திற்கு ஓடினார். தமக்கும் வழக்குக்கும் யாதோரு

சம்பந்தமும் இல்லே என்றும், அந்த மீசை முளைக்காத வக்கீல் பயல் சசிபூஷணனே இதற்குக் காரணம் என்றும் மிகவும் வணக்கமாகச் சொல்லிக்கொண்டார். துரை உடனே சசி பூஷணன்மேல் தன் கோபத்தைக் காட்டிக் காரியஸ்தரை வெகு வாகப் புகழந்தான்: ''டெரியாமல் செய்டடற்கு மிகவும் வருட் டம் எனக்கு!'' என்று ஒரு விதமாக விவகாரத்தை மழுப்பி விட்டான்.

அந்தத் துரை வங்கமொழியை நன்கு அறிந்தவன் என்று சம்மானங்கள்கூடப் பெற்றவன். அவன் பொது மக்களுடன் இம்மாதிரி அற்புதமாக உரையாடுவது வழக்கம்.

''அம்மா அப்பா எல்லாம் நீங்களேதான். ஒரு சமயம் அடித்தாலும் ஒரு சமயம் அணைத்துக்கொள்வீர்கள். குழந்தை களான எங்களுக்கு உங்கள் பேரில் குறை கூறுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று காரியஸ்தர் தம் ராஜவிசுவாசத்தைக் காட்டிக்கொண்டார்.

ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டின் ஒவ்வொரு சிப்பந்திக்கும் அவர்கள் மனசுக்குத் திருப்தியாகும்படி பொருள்களே வழங்கி விட்டு ஹரகுமாரர் பெரிய மாஜிஸ்டிரேட்டைப் பேட்டி காணச் சென்றார். 'சசிபூஷணன் தலேக் கிறுக்குப் பிடித்தவன்; அவ னுல்தான் இந்த வழக்கே ஏற்பட்டது' என்பதைக் காரியஸ்தர் கூறக் கேட்டுப் பெரிய மாஜிஸ்டிரேட்டும், ''எனக்குந்தான் அதிசயமா யிருந்தது, ஏது, நீங்களே இந்தமாதிரி பண்ணுவீர் களா என்று. என்னே ஒரு வார்த்தை கேட்டுவிட்டுக் காதோடு காது வைத்தாற்போல் விவகாரத்தை முடிப்பதுதானே அழகு! இப்பொழுது புரிகிறது, எல்லாம் யாருடைய வேலே என்று'' என்றார். கடைசியாக ஹரகுமாரரைப் பார்த்து, ''சசி காங்கிரஸ்காரனு?'' என்று புலன் விசாரித்தார். அவர் சற்றும் தயங்காமல், ''ஆமாம்'' என்றார்.

'இதெல்லாம் காங்கிரஸ்காரர் சூழ்ச்சிதான்!' என்று வெள்ளேத் துரைமார் ரீதியில் விஷயத்தைப் புரிந்துகொண் டார்.

''காங்கிரஸைச் சேர்ந்த சதிக் கூட்டம் ஒன்று 'அமிர்த பஜார் பத்திரிகை'யில் அரசாங்கத்தின்மேல் இல்லாத புகார் களேயெல்லாம் எழுதிக்கொண்டு தலேமறைவாக நாடெங்கும் திரிகிறது. இத்தகைய கூட்டத்தை முளேயிலேயே கிள்ளி எறிய நமக்கு விசேஷ ஆதிகாரம் கொடுக்காத இந்திய சர்க்கார் என்ன சர்க்கார்?'' என்று பலவாறுக அரசாங்கத்தை இகழத் தொடங்கினர்.

'காங்கிரஸ்காரன்' சசிபூஷணனின் பெயர்மட்டும் மாஜிஸ் டிரேட்டின் மனசில் நன்றுகப் பதிந்துவிட்டது.

5

வாழ்க்கையில் நிகழும் பெரிய விஷயங்களே ஒட்டி அற்ப மான சம்பவங்களும் உலகத்தில் வேரூன்றி நிற்கின்றன.

சசிபூஷணன் மாஜிஸ்டிரேட்டுடன் போர் தொடுக்கச் சட்ட புத்தகங்களைப் புரட்டித் தனக்கு அநுகூலமான குறிப் புக்களை எடுத்துக்கொண்டு மனசிற்குள்ளேயே வாதங்களைத் தீட்டி வைத்துக்கொண் டிருந்தான். கற்பனையில் சாட்சிகளை ஜோடித்தான். தன் முன்பு நீதி மன்றத்தில் ஜனத்திரள் நிற்பது போல் பாவனை செய்துகொண்டு இவ்வாறு வேர்த்து வழியப் போர்க்கோலத்துடன் இருக்கும் சமயம், அவனுடைய சிறிய மாணவி ஏடு கிழிந்த தன் பாடப் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு அங்கே படிக்க வந்துவிடு வாள். தோட்டத்திலிருந்து தேர்ந்த நாவற் கனிகளைக் கொண்டு தருவாள். தன் அன்னையைக் கேட்டுச் சுவை உள்ள ஊறுகாய்களைச் சிற்சில தினம் கொண்டுவந்து தருவாள். ஒரு நாள் தேங்காய்ப் பொடிச் சாதம் வரும். வேறு ஒரு தினம் வீட்டிலேயே செய்த தாழம்பூ மணம் கமழும் பிட்டைச் சம யம் பார்த்துக் கொண்டு வந்து வைப்பாள்.

முதல் சில தினங்கள் சசிபூஷணன், சித்திரமே இராத கனமான ஒரு புத்தகத்தை வேண்டா வெறுப்பாய்ப் புரட்டு வதைக் காணும்போது கிரிபாலாவுக்கு அதில் அவன் மனம் ஊன்றவில்லை என்றே தோன்றும். முன்னெல்லாம் இந்த மாதிரிப் புத்தகங்களைப் பிரித்துப் பல அதிசயமான விஷயங் களைச் சொல்லுவான்; ஆனால், இந்த ஒரு புத்தகத்திலுள்ள விஷயத்தைமட்டும் ஏனோ அவன் விவரிக்கவில்லை! அதில் தான் அறிந்துகொள்ளக்கூடியது ஒன்றுமே இல்லையா? இருக்க லாம்; புத்தகம் பெரியதோ அன்றோ? தன் சிற்றறிவுக்கு அது எப்படி எட்டும்?—இவ்வாறு அவள் சிந்திக்கலானாள்.

சசிபூஷணனுடைய கவனத்தைத் தன்பால் இழுக்கக் கிரிபாலா கூந்தலை அலப்பிக்கொண்டே உரத்த குரலில் பதங்களைத் தானே கூட்டிக் கூட்டிப் படித்துப் பார்த்தாள். அதனால் ஒரு பலனும் ஏற்படாமற் போகவே அந்தக் கனமான கறுப்புப் புத்தகத்தின்மேல் அவளுக்கு எரிச்சல் மூண்டது. அதை ஒரு கொடூரமான மனிதனாகவே பாவித்து வெறுத்தாள். புரியாத அந்தப் புத்தகத்தின் ஒவ்வோர் ஏடும் கிரிபாலாவை ஏளனம் செய்வதுபோல் மௌனம் சாதித்தது. அவளுக்கு அதன்மேல் இருந்த பொறுமையினால் எவளவது அதைத் திருடிக்கொண்டு போயிருந்தால் அவனுக்கு, வீட்டில் செய்த நல்ல பட்சணங்

கூட்டுக்கூட வழங்கியிருப்பாள். அந்தப் பாழும் புத்தகம் ஒழியாதா என்று அர்த்தமற்ற பல பிரார்த்தனைகள் செய்து கொண்டபோதிலும் தெய்வம் அவற்றை ஏற்றுக்கொண்ட தாகத் தெரியவில்லை. ஆகவே, வாசகர்களும் அதைப்பற்றி மேற்கொண்டு சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை.

அவன் கவனிக்காமல் இருக்கவே, வேதனையில் ஆழ்ந்த அந்தச் சிறுமி இரண்டொரு நாள் கழித்துத் தன் ஆசிரியனிடம் பாடங் கற்க வருவதை நிறுத்திவிட்டாள். தான் வராதிருப்பதனால் சசிபூஷணன் கவலைப்படுகிறானு என்பதை அறிவதற்குப் பாதையோரமாக மறைவில் நின்று கவனிப்பாள். சசிபூஷணன் அந்தப் பயங்கரமான புத்தகத்தை எறிந்துவிட்டுத் தனியாக நின்றுகொண்டு கைகளை ஆட்டி ஆட்டி அந்நிய மொழியான ஆங்கிலத்தில் சன்னல் கம்பிகளைப் பார்த்து ஏதோ பிரசங்கம் செய்துகொண் டிருப்பான். நீதிபதியின் மனத்தை வசப் படுத்த அவன் கையாளும் முறை இதுவே போலும்! வாழ்க்கை யில் அநுபவம் பெறாத புத்தக உலகில் திரியும் சசிபூஷணன் எண்ணம், 'அந்தக் காலத்தில் டெமாஸ்தனீஸ், ஸிஸிரோ, பர்க், ஷெரிடன் போன்ற மேதாவிகள் தம் நாவன்மையால் அசாமானியமான காரியங்களைக்கூட நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் எதிரியின் வாதங்களைச் சொல்லம்பினால் சின்ன பின்னம் ஆக்கிப் பல கொடூரங்களை வெளிப்படுத்தி, அகம்பாவம் கொண்டவர்களைத் தரையோடு தரையாகக் கவிழச் செய்து வெற்றி வாகை சூடியிருக்கும்போது, வியாபாரமே உயிர்நிலை யாக இருக்கும் இந்தக் காலத்தில் அப்படிச் செய்வது அசாத்தியமன்று' என்பதே. 'அதிகாரத் திமிர் ஏறிய ஆங்கிலேயர் களை உலகோர் முன்பு பணியச் செய்வது எப்படி?' என்பதைக் குறித்துத் திலகுசிக் கிராமத்தில் இடிந்து போன ஒரு சிறு வீட்டில் நின்றுகொண்டு சசிபூஷணன் யோசித்துக்கொண் டிருந்தான். இதைப் பார்த்து விண்ணவர் அழுதார்களா, சிரித்தார் களா என்று எவ்விதம் சொல்வது?

அன்று முழுவதும் கிரிபாலா அவன் கண்ணிலேயே படவில்லை. அன்று அவள் மடியில் நாவற்பழமும் இல்லை. முன் போல் அந்தப் பழத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ளவும் அவள் ஆசைப்படவில்லை. என்றாவது ஒரு நாள், சசிபூஷணன் அவளை நோக்கிச் சகஜமாக, ''கிரி, நாவற்பழம் இல்லையா?'' என்று கேட்பான். அப்போது குறும்பாகக் கேட்கிறான் என்று எண்ணி, ''போ! உனக்கென்ன வேலை?'' என்று எரிந்து விழுந்து அவ்விடத்தை விட்டு அகல்வாள். சசிபூஷணனுடைய கவனத்தைக் கவர முன்போல் நாவற்கொட்டையை உபயோகிக்காமல் தொலைவில் எதையோ பார்த்து அச்சிறுமி,

''சுவர்ணு! இரடி, போகாதே! இதோ நானும் வந்துவிடு கிறேன்'' என்று கூக்குரலிடுவாள்.

ஆண் வாசகர்கள், 'சுவர்ணலதா' என்ற ஏதோ ஒரு பெண்ணை நோக்கி அவள் இவ்வாறு பேசினாள் என்று நினைக்க லாம். ஆனால் இதை வாசிக்கும் பெண்மணிகள், 'அது யாரையும் குறிப்பிடவில்லை; சமீபத்தில் இருக்கும் ஆசாமியின் சிந்தனை யைக் கலைக்கத்தான்' என்று எளிதில் ஊகிப்பார்கள். ஆனால் பாவம்! குருடன்முன்பு அவள் செய்த இந்த ஜாலமெல்லாம் பலிக்கவில்லை. அவள் கூவியது சசிபூஷணன் காதில் விழாமல் இல்லை; சிறுமி விளையாட்டின்மேல் உற்சாகமாக இருக்கிறாள் என்று நினைத்தான். அதன் நடுவே அவளைப் பாடம் படிக்க அழைப்பது உசிதமல்ல என்று எண்ணினான். அதோடு அவ னுக்கு அலுவல் இருந்தது. யார்மீதோ சொல்லம்பு எய்யப் பழகிக்கொண் டிருந்தான். அவனுடைய சிந்தனையைக் கலைக்க அவள், சிறு பிராயத்தில் விட்டெறிந்த கொட்டைகள் குறி தப்பியது போலவே, இப்போது படிக்கத் தெரிந்த பின்பு ஒரு மகத்தான லட்சியத்தைக் கைப்பற்ற அவள் வகுத்த உபாயமும் வீணாயிற்று. வாசகர்களுக்கு இது ஏற்கனவே தெரிந்த விஷயந் தான்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், நாவற் பழக் கொட்டையாவது, நாலு ஐந்து குறி தவறினாலும், ஒன்றாவது இலக்கைப் போய்த் தாக்கும் என்ற நிச்சயம் உண்டு. ஆனால் சுவர்ணு, ஆயிரந்தான் கற்பனைப் பெண்ணாக இருந்தாலும் 'இதோ வருகிறேன்' என்று சொன்னால்மட்டும் அதிக நேரம் நிற்பாளா? அப்படி நிற்கும்பட்சத்தில் சுவர்ணு உண்மை யானவளா என்பதைப்பற்றி இயல்பாகவே எல்லோருக்கும் சந்தேகம் பிறந்துவிடும். இந்த உபாயம் பயனற்றுப் போகவே, கிரிபாலா அவ்விடத்தை விட்டு விரைவில் அகலவேண்டியதா யிருந்தது. தொலைவில் நிற்கும் 'சுவர்ணு' என்ற தோழியோடு சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவளுக்கு உள்ளூற ஆசை இருந்தால் அவள் பறந்தல்லவோ சென்றிருப்பாள்? ஆனால் கிரிபாலாவின் நடையில் அந்தப் பரபரப்புத் தென்படவில்லை. அவள் போகும்போது யாராவது தன்னைப் பின் தொடர்கிறார் களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்தாள். யாரும் வர வில்லை என்று தெரிந்ததும் அவளுக்கு இருந்த சிறு நம்பிக்கை யும் மங்கிவிட்டது. நைந்திருக்கும் தன் பாடப் புத்தகங்களைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து வழியோரத்தில் சிதற அடித்தாள். சசிபூஷணன் கற்றுக் கொடுத்த வித்தையைத் திருப்பித் தரக்கூடிய சக்தி தனக்கு இருந்தால், சப்பி உமிழ்ந்த நாவற்கொட்டையைப்போல், அதையும் அவன் வாயிற்படி

யண்டையே கக்கிவிட்டு வந்திருப்பாள். 'இன்னும் ஒருமுறை சசிபூஷணனைப் பார்ப்பதற்குள் கற்றதையெல்லாம் மறந்துவிட வேண்டும்; அவன் ஏதாவது கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியாதபடி இருக்கவேண்டும்-ஒரு கேள்விக்குக்கூட; அப்போதுதான் அவன் கர்வம் அடங்கும்.' - இதுவே அவள் கொண்ட தீர்மானம்.

கிரிபாலாவின் இரு கண்களிலும் நீர் நிறைந்தது. கற்ற கல்வியைத் தான் மறந்துவிட்டால் சசிபூஷணனுக்கு அது வருத்தத்தையே அளிக்கும் என்று நினைக்கும்போது வேதனையுறும் அவள் உள்ளம் சிறிது சாந்தம் அடைந்தது. அவன் செய்த ஒரு பிழையினால் படிப்பை அறவே மறந்து பெரியவளாகும் கிரிபாலாவைக் கற்பனைக் கண்ணால் காணும்போது தன் பெயரிலேயே அவளுக்கு, உலகத்தில் இல்லாத அனுதாபம் பொங்கி வழிந்தது - அந்தக் கார் காலத்து வானில் தினந்தோறும் மேகம் திரண்டெழுகிறதே அதுபோலவே. கிரிபாலா வழியோரமாக ஒரு மரத்தின் மறைவில் நின்றவண்ணம் ரோஷம் தாளாமல் விம்மி விம்மி அழுதுகொண் டிருந்தாள். காரணமின்றி அவளைப்போல் தினந்தோறும் எத்தனையோ பெண்கள் அழுவதைப் பார்க்கிறோம்; நின்று கவனிக்க அதில் என்ன விசேஷம் இருக்கிறது?

6

சசிபூஷணனுடைய சட்டசம்பந்தமான ஆராய்ச்சியும் பேச்சுத் திறமையும் பயனற்றுப் போனதன் காரணம் வாசகர்களுக்குத் தெரிந்தே இருக்கும். மாஜிஸ்டிரேட்மீது தொடுத்த வழக்கு எதிர்பாராத விதமாய் வாபஸ் வாங்கப் பட்டது. ஹரகுமார் தம் பர்க்கணுவில் கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டார். அழுக்கடைந்த ஜிப்பாவையும் தலைப் பாகையையும் போட்டுக்கொண்டு, அவர் இப்போதெல்லாம் ஜில்லா அதிகாரிகளைப் பேட்டி கண்டு தம் வணக்கத்தைச் செலுத்தத் தவறுவதில்லை.

சசிபூஷணனுடைய அந்தக் கருநிறச் சட்டப் புத்தகம் கிரிபாலாவின் சாபத்தினாலோ என்னவோ இருளடைந்த மூலை ஒன்றில் சீந்துவாரின்றிப் புழுதியில் கிடந்தது. அது அப்படி ஆதரவற்று விழுந்து கிடப்பதைப் பார்த்து மகிழக்கூடிய அந்தக் கிரிபாலா இப்போது எங்கே?

சட்டப் புத்தகத்தைக் கட்டி வைத்த அன்றுதான் கிரிபாலா ஏன் வரவில்லை என்று சசிபூஷணனுக்குத் திடீரெனத் தோன்றியது. ஒவ்வொன்றுக் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்து நினைவுகள் அப்போதுதான் மனத்தின்கண் எழுந்தன.

ஒரு நாள், ஒளி நிரம்பிய காலை நேரத்தில் கிரிபாலா மடி நிறைய அன்றலர்ந்த மகிழ மலர்களைக் கொண்டுவந்து தன் முன் நின்ற காட்சி அவன் நினைவிற்கு அப்போது வந்தது. அவள் வந்தது தெரிந்தும் அவன் புத்தகத்தை விட்டு முகத்தைத் திருப்பாமல் இருந்தபோது அந்தப் பூவின் நறு மணம் அவனை என்னவோ செய்துவிட்டது. கிரிபாலா தன் தலைப்பில் செருகியிருந்த ஊசியை எடுத்துத் தலை குனிந்த படியே ஒவ்வொரு மலராகக் கோத்து மாலை கட்டலானாள்; மாலையை நிதானமாகவே புனைந்தாள். அதை முடிக்க வெகு நாழிகையாயிற்று. பொழுதோ ஏறிக்கொண்டிருந்தது. கிரி பாலா வீட்டிற்குத் திரும்பும் நேரமும் ஆகிவிட்டது. ஆனால் சசிபூஷணனின் படிப்புக்குமட்டும் ஒரு முடிவு ஏற்படவில்லை. கிரிபாலா மகிழ மாலையை மேடைமீது வைத்துவிட்டு வாடிய முகத்துடன் போய்விட்டாள். அன்று அவள் உள்ளத்தில் குமு றிய ரோஷம் இப்போது திரண்டு வருவது போன்ற பிரமை மூண்டது அவனுக்கு. 'அவள் இப்போதெல்லாம் ஏன் முன் போல் என் அறையினுள் வராமல் வெளியிலேயே நின்று பார்த்துவிட்டுப் போய்விடுகிறாள்? எதற்காக அவள் இங்கு வருவதை நிறுத்திவிட்டாள்? என்மேல் கிரிபாலாவுக்குக் கோபம் இத்தனை நாள் நீடித்திராதே!' - இவ்வாறெல்லாம் எண்ணிப் பெருமூச்செறிந்து மருள் கொண்டவன்போல் சுவ ரில் சாய்ந்து உட்கார்ந்துவிட்டான். தன் சிறு மாணவி வராது போகவே புத்தகம் படிப்பதில் அவனுக்கு விருப்பம் ஏற்பட வில்லை. இரண்டொரு புத்தகத்தின் ஏடுகளை அவன் புரட்டிப் பார்த்ததுதான் மிச்சம். அவற்றையும் ஒருபுறமாக எறிந்து விட்டான். ஏதோ எழுத உட்கார்ந்தான். சற்றைக்கு ஒருதரம் பாதையிலேயே அவன் கண் பதிந்திருந்தது, கிரிபாலாவுக்காக.

'கிரிபாலாவுக்கு ஒரு வேளை உடம்பு அசௌக்கியமோ? அதனால்தான் அவள் வரவில்லையோ?' என்று அவன் மனம் அல்லற் பட்டது. விசாரித்ததில் அவன் கவலை கொண்டது வீண் எனத் தெரிந்தது. கிரிபாலா இப்போதெல்லாம் வீட்டுப் படியைத் தாண்டுவதில்லை. அவளுக்குக் கல்யாண வயசாகி விட்டது; ஒரு வரனும் அகப்பட்டுவிட்டான்.

கிரிபாலா தன் பாடப் புத்தகங்களைக் கிராம வீதியில் கிழித் தெறிந்ததற்கு மறு நாள் அதிகாலையில் தன் மடியில் எதையோ மறைத்துக்கொண்டு வேகமாக வீட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். கோடைக்காலமானதால் இரவெல்லாம் தூக்கமின்றிக் கழித்த ஹரகுமாரர் பொழுது விடியுமுன்பே வாசல் திண்ணையில் திறந்த உடம்புடன் புகையிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். கிரி விரைவாகச் செல்வதைப்

பார்த்து, ''எங்கே போகிறாய்?'' என்று கேட்டார். ''சசி அண்ண அண்ணு அகத்திற்கு'' என்றாள் கிரி. ஹரகுமாரர் அவளை அதட்டி, ''சசியின் அகத்திலே உனக்கு என்ன வேலை? போ உள்ளே! கல்யாணம் ஆகிற வயசாயிற்று; நாளைக்கே மாமியார் வீடு போக வேண்டியவள்; வெட்கம், மானம் இல்லை?'' என்று திட்டினார். அன்று தொட்டு அவள் வீட்டிலேயே அடை பட்டுக் கிடந்தாள். ஆகவே, அவளுடைய ரோஷத்தைத் தணிக் கச் சந்தர்ப்பம் கிடைக்காமற் போய்விட்டது சசிபூஷண னுக்கு. மாம்பழச் சத்து, கார் அரிசிப் பிட்டு, எலுமிச்சங்காய் ஊறுகாய் - இவை இப்போதெல்லாம் அவனுக்குக் கிடைப்ப தில்லை. மழை தன் பாட்டிற்குப் பெய்துகொண் டிருந்தது. மகிழம் பூ உதிர்வது நிற்கவில்லை. மரம் முழுவதும் பேரிக்கனி பழுத்திருந்தது. கிளிகள் கொத்தி நழுவி விழும் கனிந்த கரு நாவற்பழங்கள் மரத்தடியில் சிதறிக் கிடந்தன. ஐயோ, என்ன கொடுமை! அந்தக் கிழிந்த பாடப்புத்தகங்கள் மட்டும் அங்கே காணவில்லையே!

அன்று கிரிபாலாவுக்குக் கல்யாணம்; கல்யாண வீட்டில் மேள ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. விவாகத்திற்கு அழைக் கப்படாத சசிபூஷணன் அன்றே படகேறிக் கல்கத்தாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டதிலிருந்து ஹரகுமா ரர் சசியை விஷக்கண்ணால் பார்த்தார். அவன் தன்னை அலட்சி யம் செய்கிறான் என்றே அவருக்குப் பட்டுவிட்டது. அவன் நடவடிக்கைகளில், அதன் அறிகுறியைத் தாம் காண்பதாக எண்ணிக்கொண்டார். கிராமத்தவர்கள் எல்லாரும் தாம் அவமானப்பட்டதை மறந்துவிட்டிருக்கும்போது, சசி ஒருவன் மட்டும் அதை ஞாபக மூட்டுவதுபோல் தோன்றவே, அவர் அவன் முகத்தில்கூட விழிக்காமல் இருந்தார். தற்செயலாக அவனைப் பார்க்க நேரிடும்போது அவர் இருதயத்தில் என் னவோ ஒன்று உறுத்தும். ஆத்திரத்தில் அவருக்குத் தலைகால் தெரியாமல் போய்விடும். சசியை எப்படியாவது ஊரைவிட்டே தொலைத்துவிடவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டார்.

சசிபூஷணனைப் போன்றவர்களை ஊரை விட்டு அப்புறப் படுத்துவது அப்படி ஒன்றும் கடினமான காரியம் அல்ல. கார்யஸ்தருடைய கோரிக்கையும் சீக்கிரத்திலேயே நிறைவேறி விட்டது. ஒரு நாள் விடியற்காலையில் பெரிய புத்தக மூட்டை, இரண்டு மூன்று தகரப் பெட்டிகள் இவற்றுடன் சசி படகில் ஏறிவிட்டான். கிராமத்தோடு தன்னைப் பிணைத்திருந்த ஒரே அன்புத் தளை அன்றே, ஆடம்பரமான விவாகத்திடையே விண் டது. இந்த அன்புத் தளை தன் உள்ளத்தை இவ்வளவு திட

மாகப் பற்றிக்கொள்ளும் என்பதை இதற்கு முன்னால் அவன் அறிந்துகொள்ளவில்லை. படகு விலகிச் செல்லச் செல்ல, கிராமம் தூரத்தில் மெல்ல மறைய மறைய, மணவிழாவின் இன்னிய யத்து மெல்லொலி காதில் விழும்போதெல்லாம் அவன் கண்களில் நீர், திரை இடும். அவன் உள்ளம் துடிக்கும்; நெஞ்சு அடைத்துக்கொள்ளும். நெற்றி நரம்புகளெல்லாம் ரத்த வேகத்தினால் படபடக்கும்.

உலகத்துக் காட்சிகளெல்லாம், நிழலைக்கொண்டு நிருமித்த பேய்த்தேர்போல், நிலையற்றே தோற்றின.

காற்று, கடுவிசையுடன் எதிராக வீசிக்கொண் டிருந்தது. ஆற்று நீர் அநுகூலமாகச் சென்றபோதிலும் படகு மெல்லவே முன்பு ஏகியது. அதே சமயம் நதியில் நடந்த ஒரு விபரீதம் சசிபூஷணனுடைய பிரயாணத்திற்குத் தடையாக நின்றது; 'ஸ்டேஷன் காட்'டிலிருந்து பட்டணத்திற்குப் புதிய நீராவிக் கப்பல் போக்குவரத்து ஏற்பட்டிருந்தது. ஒரு ஸ்டீம்-லாஞ்சு இரைச்சலுடன் நீரைக் குழப்பிக்கொண்டே எதிர்முகமாக வந்துகொண்டிருந்தது. கப்பல் நிர்வாகி இளம் பிராயமுள்ள துரை. அதில் பிரயாணிகள் மிகச் சிலரே இருந்தனர். சசிபூஷணனுடைய கிராமத்தவர்களும் அதில் இருந்தனர். ஒரு பெரிய வியாபாரத் தோணி, சற்றுத் தொலைவிலிருந்தே அந்த ஸ்டீம் லாஞ்சுடன் போட்டி போட்டுக்கொண்டு வந்தது. ஒவ்வொரு சமயம் ஸ்டீமரைப் பிடிப்பதும் பின் தங்குவதுமாய் இருந்தது. தோணிக்காரனுக்குக் குஷி பிறந்துவிட்டது. அவன் முதலில் கீழ்ப் பாய்மரச் சீலையை அவிழ்த்துவிட்டான்; பிறகு அதற்குமேல் இருக்கும் பாய்மரச் சீலையையும் பிரித்துவிட்டான். ஸ்டீமரோடு போட்டி போடுவதற்காகத் தோணியினது கூம்பின் உச்சியில் இருக்கும் குட்டிச் சீலையும் காற்றில் ஊதியது. காற்றின் பளுத் தாங்காமல் பாய்மரம் முன்னே சரிந்தது. கலம் போழ்ந்த நீர்த்திரள் கோலாகலத்துடன் தோணியின் இரு மருங்கிலும் 'தை தை' என்று கொந்தளித்தது. தோணி அப்போது கடிவாளம் அறுந்த குதிரைபோல் தலை தெறிக்கச் சென்றுகொண்டிருந்தது. நதியின் ஒரு வளைவில் துரிதமாகச் சென்று தோணி ஸ்டீமரையும் கடந்தது. ஸ்டீமர் நிர்வாகி கிராதிமேல் சாய்ந்தவண்ணம் தோணி போட்டி போடுவதைக் குதூகலத்துடன் பார்த்துக்கொண் டிருந்தான். மரக்கலம் தன் முழு வேகத்துடன் ஸ்டீமரைத் தாண்டி இரண்டொரு கஜம் சென்றபிறகு அந்த வெள்ளைக்காரன் துப்பாக்கியை எடுத்துக் காற்றில் வீங்கும் சீலையைக் குறி வைத்துச் சுட்டான். அக் கணமே சீலை கிழிந்துவிட்டது.

அந்த வெள்ளைக்காரன் எதற்காக இவ்வாறு செய்தான்

என்று சொல்வது சற்றுக் கடினம். அந்த ஆங்கில மகனின் மனப்பான்மையை வங்காளிகளாகிய நாம் சரியாகப் புரிந்து கொள்ளவே முடியாது. ஒருவேளை சுதேசிப் பாய்மரக் கலம் ஒன்று போட்டியிடுவது அவனுக்குச் சகிக்கவில்லையோ என்னவோ? காற்றில் அழகாக ஊதி விளங்கும் ஒரு பொருளைத் துப்பாக்கியால் சுட்டால் என்ன கதியாகும் என்று பார்க்கும் குரூர ஆவலாகவும் இருக்கலாம், ஒரு வேளை. கர்வமாகச் செல்லும் அந்தத் தோணியின் சீலையில் துளை செய்து அதை நீருள் அழுத்துவதில் என்ன வேடிக்கை வேண்டியிருந்ததோ அவனுக்கு; அதன் உண்மை நமக்கு என்ன தெரியும்? ஆனால் இதுமட்டும் நிச்சயம்; விளையாட்டு என்று எண்ணிச் செய்யும் விபரீதத்தினால் தமக்கு யாதொரு தண்டனையும் ஏற்படாது என்று திடநம்பிக்கை கொள்வது ஆங்கிலேயருடைய மனப்பான்மை; படகோடு மூழ்கி இறக்கும் மனிதர்களை அவர்கள் ஜீவகோடியைச் சேர்ந்தவர்களாகவே எண்ணமாட்டார்கள். துப்பாக்கியை நீட்டி வெள்ளைக்காரன் சுட்டபோது படகு மூழ்கிவிட்டது. அதே சமயம் சசிபூஷணனுடைய படகு இந்த அட்டூழியம் நடந்த இடத்தை அணுகியது. இந்தக் கண்ணராவியைச் சசிபூஷணன் நேரிலேயே பார்க்க நேர்ந்தது; சரசரவென்று தன் படகை அவ்விடத்திற்குச் செலுத்தித் தோணியில் உள்ளவர்களை மீட்க முயன்றான். உள்ளே 'மசாலா' அரைத்துக்கொண்டிருந்த ஓர் ஆளை மட்டும் காணவில்லை. மழைக்காலமானதால் நதியில் நீர் புரண்டு சென்றது.

சசிபூஷணனுடைய இருதயத்துள் இரத்தம் குபீரெனக் கொதித்தெழுந்தது. சட்டம் ஒரு கழுதை; அது ஒரு பெரிய சிக்கலான இரும்புத் துளை போன்றது. கோல் தாழாது பட்சபாதமின்றித் தண்டனை விதிக்கும்போது, அதில் மனிதவுள்ளம் குழுறுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் பசிக்கும்போது உணவு தராமலும், விருப்பம் உண்டாகும்போது அநுபவிக்க விடாமலும், ஆத்திரம் கொள்ளும்போது தண்டனை விதிக்காமலும் இருப்பது சசிபூஷணன் வரைக்கும் இயற்கைக்கு விரோதமானதென்றே தோற்றியது. உலகத்தில் எவ்வளவோ அநீதங்கள் ஏற்படுகின்றன; பார்த்த மாத்திரம் அவற்றுக்குரிய தண்டனையை நம் கையாலேயே விதிக்க முடியாமற் போய்விடுகிறது. கடவுள் இவற்றையெல்லாம் பார்ப்பவனது உள்ளத்தைத்தான் சுட்டெரிக்கிறார். அப்போது சட்டத்தை நினைத்துக்கொண்டு ஆறுதல் கொள்வது நம் மனசுக்கே வெட்கமாக இருக்கிறது; ஆனால் யந்திரம்போற் சுழலும் சட்டமும், யந்திரத்தால் இயங்கும் கப்பலும் சசிபூஷணனிடமிருந்து அந்த

வெள்ளைக்காரனைத் தொலைவாக வைத்துவிட்டன. இவற்றால் உலகத்துக்கு என்ன நன்மைகள் விளைந்தன என்று சொல்வது? ஒன்றுமட்டும் ஐயமறக் கூறலாம்: சசிபூஷணன் இந்தியனுக்குரிய ஆத்திரம் கொண்டதுதான் மிச்சம்.

மூழ்கிய தோணியிலிருந்து மீண்டவர்களுடன் சசி, தன்னுடைய கிராமத்திற்கே திரும்பி வந்தான். அந்தத் தோணியில் ஏராளமாகச் சணல் இருந்தது. அதை எடுப்பதற்காக ஆட்களை அமர்த்திவிட்டு, ஸ்டீமர் நிர்வாகிமேல் உடனே போலீசில் பிராது கொடுக்கும்படி தோணியைச் சேர்ந்தவர்களுக்கு யோசனை கூறினான்.

இதற்கு அவர்கள் சற்றும் சம்மதிக்கவில்லை. ''தோணியைத்தான் பறிகொடுத்தோம். இந்த வம்பில் சிக்கிப் பணத்தையும் பறி கொடுக்க வேண்டுமா? முதலில் போலீசார் எதிரில் ஆஜராகவேண்டும்; அப்புறம் காரியத்தைவிட்டுச் சோறு, தண்ணீர், தூக்கம் இராமல் ஒவ்வொரு கோர்ட்டாக ஏற வேண்டுமே! அதோடு வெள்ளைக்காரத் துரையாயிற்றே! அவன்மேல் புகார் தெய்தால் கடைசியில் வழக்கு எந்தவிதமாக முடியுமோ? கடவுளுக்குத்தானே தெரியும்!'' என்றனர் அவர்களில் ஒருவன். சசிபூஷணன் தான் வக்கீல் என்றும் வழக்கைத் தன் செலவிலேயே நடத்துவதாகவும் சொன்னதன் பேரில் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஸ்டீமரில் சென்ற சசிபூஷணனின் கிராமத்தவர் எவரும் சாட்சி சொல்ல அறவே மறுத்துவிட்டனர்; ''ஐயா! நாங்கள் எதையும் பார்க்கவில்லை; ஸ்டீமரின் பின்பாகத்தில் கிடந்தோம். எஞ்சின் போடும் இரைச்சலுக்கும் நீரின் சலசலப்பிற்கும் இடையே வெடிச் சத்தம் எப்படிக் காதில் விழும்?'' என்றார்கள்.

ஊரார்மேல் வெறுப்புற்றவனாய் அவர்களை உள்ளூறச் சபித்துவிட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு நடத்தத் தொடங்கிவிட்டான் சசிபூஷணன்.

சாட்சியத்திற்கே அவசியம் ஏற்படவில்லை. அந்த ஸ்டீமர் நிர்வாகியே தான் துப்பாக்கியால் சுட்டதாக ஒப்புக்கொண்டான். மேலும் அவன், ''ஆகாயத்தில் நாரைக்கூட்டம் ஒன்று பறந்து சென்றது. அதைப் பார்த்துத்தான் சுட்டேன். அப்போது எங்கள் ஸ்டீமர் வீசையுடன் சென்றுகொண்டிருந்தது. நதி வளைவாகத் திரும்பும் இடம்; நான் சுட்டதால் காக்கைதான் விழுந்ததோ, நாரைதான் விழுந்ததோ, தோணிதான் மூழ்கியதோ? எனக்கு எப்படித் தெரியும்? பூமியிலும் ஆகாயத்திலும் வேட்டையாடுவதற்குச் சௌகரியங்கள் இருக்கும்போது தம்படி தாளாத அழுக்குப் பிடித்த கந்தல் மேலாகுண்டை வீணுக்குவேன்!'' என்றான்.

'குற்றவாளியல்ல' என்று விடுவிக்கப்பட்டவுடன் அந்த வெள்ளைக்கார நிர்வாகி சுருட்டை வாயில் பற்றவைத்துக் கொண்டே நிச்சலமாய் 'உவிஸ்ட்' (Whist) விளையாடக் 'கிளப்'பை நோக்கிச் சென்றான். தோணியில் மசாலா அரைத் துக்கொண் டிருந்த ஆளின் பிரேதம் அவ்வூருக்கு ஒன்பது மைலுக்கு அப்பால் கரையில் ஒதுங்கிக் கிடந்தது. சசிபூஷணன் புண்பட்ட உள்ளத்துடன் தன் கிராமத்திற்குத் திரும்பினான்.

அந்தத் தினமே படகை அலங்கரித்துக் கிரிபாலாவை அவள் புக்ககத்திற்கு அழைத்துப் போனார்கள். தன்னை யாரும் அழைக்காது போனாலும் சசிபூஷணன் நதிக்கரையோரமாக வந்து நின்றான். படித்துறையில் கூட்டமாக இருக்கவே சற் றுத் தொலைவாகவே இருந்தான். படகு நகர்ந்து அவன் எதிரே செல்லும்போது சட்டென ஒரு தரம் நிமிர்ந்து நோக் கினாள். தலையில் முக்காட்டை இழுத்துக்கொண்டு மண மகள் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்தாள். கிராமத்தை விட்டு நீங்குமுன் ஒரு தரமாவது சசி அண்ணனைப் பார்க்க வேண்டுமென்று ஏங்கினாள் கிரிபாலா. இன்று தன்னுடைய குரு இவ்வளவு அருகில் கரையில் நின்றிருப்பது அவளுக்குத் தெரியாமற் போய்விட்டது! அவள் நிமிர்ந்துகூடப் பார்க்க வில்லை. மறைவாக விடும் கண்ணீர், அவள் இரு கன்னங்களி லும் வழிந்தோடியது.

படகும் சிறிது சிறிதாகக் கண்ணுக்கு மறையலாயிற்று. ஆற்று நீரின்மேல் இளம் வெயில் படிந்து பளபளத்தது. அரு கில் இருந்த ஒரு மாமரத்தின் கிளையில் வரிக்குயில் ஒன்று தங்குரல் எடுத்துச் சலிக்காமல் பாடிக்கொண் டிருந்தது. கூலிப் படகுகள் இக்கரைக்கும் அக்கரைக்குமாகச் சென்றுகொண் டிருந்தன. நீர் மொள்ள வரும் கிராமப் பெண்டுகளின் வாயில் கிரிபாலா புக்ககம் போகும் விமரிசையைப்பற்றிய பேச்சுத் தான். சசிபூஷணன் மூக்குக் கண்ணுடியைக் கழற்றிக் கண் ணைத் துடைத்துவிட்டுப் பாட்டை ஒரத்தில் இருக்கும் தனக் குச் சொந்தமான அச்சிறு அறையிலேயே அடைக்கலம் புகுந் தான். திடீரென, 'சசி அண்ணா' என்று கிரிபாலாவின் குரல் கேட்டது போன்ற மருள் ஏற்பட்டது அவனுக்கு. எங்கே அவள்? எங்கே அவள்? எங்கேயும் இல்லை! அவள் வீட்டிலும் இல்லை; வழியோரத்திலும் இல்லை; அவள் கிராமத்திலேயே இல்லை. கண்ணீர் மல்கும் அவன் இதயத்துள் வீற்றிருந்தாள்!

8

சசிபூஷணன் மறுபடியும் மூட்டை முடிச்சுக்களுடன் கல்கத்தாவிற்குப் பயணமானான். கல்கத்தா போவதற்கு அவ

னுக்கு முக்கியமான வேலை எதுவும் இல்லை. ஆகவே, ரெயில் வழியாகச் செல்லாமல் நதி வழியாகவே புறப்பட்டான்.

அப்போது நல்ல மழைக் காலம். வங்காள தேச முழுதும், வளைந்து வளைந்து குறுக்கும் நெடுக்கும் நீர்நிலைகள் பின்னிக் கிடந்தன; பசுமை போர்த்த வங்க நாட்டின் ஜீவநாடிகளான நதிகளெங்கும் நிறைபுனல் ஓடிற்று; மரங்களும் புதல்களும் சணலும் கரும்பும் செழித்தோங்கிப் புதுமை அழகு எங்கும் வழிந்தோடுவதுபோல் தோன்றிற்று.

சசிபூஷணன் ஏறிச் செல்லும் படகு குறுகி வளைந்து ஓடும் பல நீரோட்டங்களில் புகுந்து சென்றது. கரை புரண்டு சென்றது புனல். நாணற் புதர்களும், சில இடங்களில் பயிர் நிலங்களும் நீரில் மூழ்கிக் கிடந்தன. கிராமத்து எல்லையிலும் மனைகளின் மூங்கில் வேலிக்கு அருகிலும் மாந்தோப்பினுள்ளும் நீர்ப்பெருக்குப் பரவி இருந்தது. எங்கும் எதிர்க்கும் படியாக வானவர், மாரி பொழிந்து வங்க பூமியை வெள்ளக் காடாக்கினர்.

பயணம் தொடங்குமுன் மழையில் குளித்த இயற்கை, கதிரவனின் ஒளியைப் பருகிப் புன்னகை பூத்தது. சில நாழிகைக்கெல்லாம் ஆகாயம் இருண்டு வந்து மழை பொழிய ஆரம்பித்தது. அப்போது எந்தத் திசையைப் பார்த்தாலும் காட்சி மனசுக்குப் பிடிக்காதபடி இருந்தது. பெருவெள்ளம் ஊரெங்கும் பொங்கி வரும்போது ஆநிரை, நீரும் சேறும் குழம்பிய முற்றத்தில் ஒன்றோடொன்று இடிபட்டுக்கொண்டு கொட்டும் மழையிலேயே பரிதாபமுறும்படி நேர்வதுபோல், சேறும் சதுப்பும் புதல்களும் நிரம்பிய வங்கதேசம் அந்த ஓயா மழைத் தாரையை மௌனமாகத் தாங்கிக்கொண் டிருந்தது. உழவர்கள் சம்பங்குடையை போட்டுக்கொண்டு கழனிகளுக்குச் சென்றனர். பெண்டுகள் தெப்பமாக நனைந்து மழையிலும் வாடைக்காற்றிலும் உடலைக் கூசிக்கொண்டே தம் அலுவலாக ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போவதும் வருவதுமாக இருந்தனர். சறுக்கும் படித்துறையில் ஜாக்கிரதையாகக் கால்களை வைத்துச் சிலர் தண்ணீர் மொண்டு சென்றனர். வீட்டுத் திண்ணைகளில் குடியானவர் சிலர், புகையிலை மென்று கொண்டே கும்மென உட்கார்ந்திருந்தனர். அவசியமான வேலையுள்ளவர்கள் வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு கையில் செருப்பும், தலையில் குடையுமாகத் தெருவில் போய்க் கொண்டிருந்தனர். மண்டை வெடிக்கும்படியான வெயிலாக இருந்தாலும், கொட்டு மழையாயிருந்தாலும் நம் நாட்டுப் பழைய புனிதமான சம்பிரதாயப்படி, பெண்கள் குடை பிடித்துத்தான் செல்வதில்லையே!

மழை ஓயாது பொழியவே ஓர் இடத்தில் ஒதுங்கி இருக்கும் படகினுள் அடைபட்டுக் கிடக்கப் பிடிக்காமல் சசிபூஷணன் ரெயில் மார்க்கமாகப் போவதென்று உறுதி கொண்டான். இரண்டு ஆறுகள் சேரும் மணல் திடர் ஒன்றில் சசிபூஷணனுடைய படகைக் கட்டிவிட்டு அதிலுள்ளவர்கள் ஆகாரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாயினர். 'பல்லியை எத்தனை தரம் எடுத்துப் போட்டாலும் அது திரும்பத் திரும்பப் பழங் காடிப் பானையிலேயே போய் விழும்' என்று ஒரு வசனம் உண்டு. சசிபூஷணன் அன்று இதை நிரூபித்து விட்டான்.

இரண்டு நதிகள் கூடும் அந்த இடத்திற்கு அருகே பெரிய வலைகளைப் பரப்பிச் செம்படவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர்; படகு போவதற்கும் வருவதற்கும்மட்டும் ஓர் ஓரமாக இடம் விட்டிருந்தனர். நெடுநாளாக இந்தத் தொழிலில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இதற்காகச் சர்க்காருக்கு மீன் மாசூல் செலுத்தி வந்தனர். அவர்களுடைய துரதிருஷ்டவசமாய் இந்த ஆண்டு அந்தப் பக்கமாகத் திடீரென ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டெண்டு விஜயம் செய்தான். அவனுடைய படகு தொலைவில் தென்பட்டவுடனேயே முன்ஜாக்கிரதையுடன் படகு செல்வதற்கான வழியை அவர்கள் காட்டினார்கள். ஆனால், 'கேவலம் இந்தச் செம்படவப் பயல்களின் வார்த்தையையா கேட்பது?' என்ற மண்டைக் கொழுப்பினால் வலைகள் மேலேயே படகைச் செலுத்தும்படி ஆட்களுக்கு உத்தரவிட்டான். வலையின் சட்டம் நீரில் படியவே படகு செல்வதற்கு வழி ஏற்பட்டுவிட்டது. ஆனால், படகு, சட்டத்தின்மேல் மோதியதால் அதன் சுக்கான் மாட்டிக்கொண்டது. அதைச் சரிப்படுத்தச் சிறிது நாழிகை ஆயிற்று.

அந்தப் போலீஸ் துரையின் முகம் கோபத்தால் இரத்தம் போல் சிவந்துவிட்டது. உடனே படகை அந்த இடத்திலேயே நிறுத்தினான். அவனுடைய தோற்றத்தைப் பார்த்து அங்கே இருந்த செம்படவர்களெல்லாம் மேல் மூச்சு வாங்க மூலைக்கு ஒருவராக ஓடிவிட்டனர். துரை தன் படகோட்டிகளைக் கூப்பிட்டு வலை முழுவதையும் அறுத்தெறியும்படி கட்டளையிட்டான். அவர்களும் கை கூசாமல் எழுநூறு எண்ணூறு ரூபாய் பெறுமான அந்தப் பெரிய வலைக்கோவையைத் துண்டு துண்டாகச் சிதைத்தெறிந்தனர். அவர்கள் அவைகளை யெல்லாம் ஒரு போராகக் குவித்த பிறகு செம்படவர்களை இழுத்து வரும்படி துரை உத்தரவிட்டான். ஓடிப் போனவர்கள் அகப்படாமற் போகவே அக்கம் பக்கத்தில் இருந்த - இதில் சம்பந்தப்

கொண்டு வந்தான். ''நாங்கள் ஒரு பாவத்தையும் அறியோமே!'' என்று அந்த நிரபராதிகள் கெஞ்சி மன்றாடினார்கள். அவர்களைப் பிடித்துக் கட்டும்படி அந்தப் போலீஸ் புலி ஆக்ஞை இடும்போது, மூக்குக் கண்ணாடி அணிந்த சசிபூஷணன் சொக்காய்ப் பித்தானைச் சரியாகக் கூடப் போட்டுக்கொள்ளாமல் ஜோடு 'சடக் சடக்' என்று அடித்துக்கொள்ளத் தலைதெறிக்கப் போலீஸ் உத்தியோகஸ்தன் இருக்கும் படகெதிரே வந்து நின்றான்.

சினத்தினால் குரல் குலைக்க, ''ஏழைச் செம்படவர்களின் வலையைப் பிய்த்தெறியவும், ஒன்றும் அறியாத இந்த ஜனங்களைத் துன்புறுத்தவும் உமக்கு என்ன அதிகாரம் ஐயா இருக்கிறது?'' என்றான்.

போலீஸ் அதிகாரி, ஹிந்துஸ்தானியில் அவனை ஏதோ வித்தியாசமாகச் சொல்லவே, கரைமேல் இருந்த சசிபூஷணன் இமைப்பொழுதில் படகினுள் தாவி அந்த உத்தியோகஸ்தனின்மேல் போய் விழுந்தான்; சிறு பிள்ளைகள் அடிப்பதுபோல் வெறிபிடித்துத் துரையைத் தாக்கினான்.

அதற்கப்புறம் என்ன நடந்ததோ அவனுக்கே தெரியாது. போலீஸ் தாளவில் கண் விழித்தபோதுதான் தன் நிலை அவனுக்குப் புரிந்தது. அது, மனசுக்குத் திருப்தியையோ உடலுக்குச் சுகத்தையோ தரக்கூடியதாய் இல்லை.

9

சசிபூஷணனுடைய தந்தை, பாரிஸ்டரைக் கொண்டு அவனை ஜாமீனில் விடுவித்துக்கொண்டு வந்தார். அப்புறம் வழக்கு விசாரணை தொடங்கிற்று. வலைஞர் யாவரும் சசிபூஷணன் இருக்கும் பர்க்கணவைச் சேர்ந்த ஜமீன் குடிகளே. சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டபோதெல்லாம் சசியினிடமே யோசனை கேட்க அவர்கள் வருவது வழக்கம். போலீஸ் சூபரிண்டெண்டெண்டு பிடித்துக்கொண்டு வந்த அந்த நிராபராதிகள் நால்வரும் சசிபூஷணனுக்குத் தெரிந்தவர்களே. தன் பக்கம் சாட்சிகளாக வரும்படி அவர்களையெல்லாம் சசிபூஷணன் அழைத்து வந்தான். ஆனால், அவர்களுக்கு உள்ளுக்குள் நடுக்கந்தான். 'குழந்தையும் குட்டியுமாக இருக்கும் நாம் போலீஸ் வம்பில் மாட்டிக்கொண்டால் என்ன நேரிடுமோ?' என்ற திகில் அவர்களுக்கு. அதோடு அவர்களுக்குத்தான் அந்த வெள்ளைக்காரத் துரையின் எதிரே நின்று போராடுவதற்கு என்ன சக்தி இருக்கிறது? நஷ்டம் என்னவோ ஆகிவிட்டது! 'இப்போது இந்தச் சாட்சி சம்மனை ஏற்றுக்கொள்ள வேண்டுமே!' என்று சங்கடத்தில் ஆழ்ந்தார்

கள். ''சாமி! நீங்கள் ஏஜெ எங்களை இந்த வம்பில் மாட்டி விடுகிறீர்கள்?'' என்று எல்லோரும் ஒரு முகமாய்க் கூறினர்.

நிதானமாகப் புத்திமதி சொன்னதன் பேரில் அவர்கள் நடந்ததை நடந்தவாறே சொல்ல ஒப்புக்கொண்டார்கள்.

இதற்குள் ஹரகுமாரர் ஒரு சமயம் தம் காரியமாய் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் சென்றிருந்தபோது அங்கே மேற் சொன்ன போலீஸ் அதிகாரி அவரைப் பார்த்து, ''ஏன் ஐயா காரியஸ்தரே, உம்முடைய குடிகள் சிலர் போலீஸ்மேல் அக் கப்போரெல்லாம் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்களே!'' என் ரூன். ஹரகுமாரர் திடுக்கிட்டவராய், ''என்ன, அப்படி ஒரு போதும் நடக்காதே! அந்த ஈனசாதிப் பயல்கள் உடம்பில் அவ்வளவு திமிர் ஏது?'' என்ரூர்.

வழக்கு, சசிபூஷணன் பக்கம் வெற்றி அடையவில்லை என் பது பத்திரிகை படிக்கும் நண்பர்களுக்குத் தெரிந்திருக்கும்.

வக்கீலர் ஒவ்வொருவராக வந்து சாட்சிக் கூண்டில் ஏறித் துரை தங்களுடைய வக்கீலை அறுக்கவில்லை யென்றும், தங்களைப் படகண்டை வரச்சொல்லிப் பெயரை மட்டும் குறித்துக்கொண்டாரென்றும் சொன்னார்கள்.

அதோடு நில்லாமல் சசிபூஷணன் ஊரைச் சேர்ந்த இரண் டொருவர், தாம், பிரஸ்தாப சம்பவம் நடந்த இடத்தில் ஏதோ கல்யாணத்திற்குப் புறப்படக் கரையில் காத்திருந்த தாகவும், அப்போது சசிபூஷணன் அகாரணமாக ஓடிவந்து போலீஸ்காரரை வலுச் சண்டைக்கு இழுத்ததைத் தாமே நேரில் பார்த்ததாகவும் கலப்பற்ற பொய்யை நீதி மன்றத்தின் நடுவே வாய் கூசாமல் சொன்னார்கள்.

அந்தப் போலீஸ் அதிகாரி தன்னைத் திட்டியதால்தான் அவனை அடித்ததாக ஒப்புக்கொண்டான் சசி. தனக்கு ஆத் திரம் மூண்டதற்கு மூல காரணம் அதிகாரி வக்கீலை அறுத்து அந்த நால்வரையும் துன்புறுத்தியதுதான் என்று வெளிப்படை யாகக் கூறிவிட்டான்.

இந்த மாதிரி ஒரு வழக்கில் சசிபூஷணனுக்குக் கிடைத்த தண்டனை சட்டப்படி அநியாயம் என்று சொல்ல முடியாது. ஆனால், தண்டனைமட்டும் சற்றுக் கடுமைதான். அவன்மேல் மூன்று நான்கு குற்றச்சாட்டுகள் - அடித்த குற்றம், அத்து மீறி வந்தது, போலீஸ் வேலைக்குத் தடை விளைவித்தது முத லியவை. இதில் ஒவ்வொரு குற்றமும், அவன் செய்ததாகவே ருஜு ஆயிற்று.

சசிபூஷணன் தனிமையாக இருந்த தன் சிறு அறையையும் பொழுது போக்குவதற்கு உதவியாக இருந்த புத்தகங்களையும் விட்டுவிட்டுச் சிறையில் ஐந்து ஆண்டுகள் உழல வேண்டிய

தாயிற்று: அவனுடைய தந்தை அப்பீல் செய்வதாகச் சொன்ன போது சசிபூஷணன் அவரைத் தடுத்து, ''சிறைவாசமே மேலானது. இரும்புக் கிராதிகள் ஒருபோதும் பொய் சொல்லா. ஆனால் இந்த இருட்டறைக்கு வெளியே நடத்தும் சுதந்திர வாழ்க்கை என்னை ஆபத்தில்தான் சிக்கவைக்கும். நல்ல மனிதர்களின் தொடர்பு இல்லையே என்று நீங்கள் சொல்வதாயிருந்தால் சிறையில்தான் பொய்யர், துரோகிகள், பேடிகள் இவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள்; ஏனென்றால், இடம் குறுகியது. வெளி உலகமோ மிகவும் பரந்தது'' என்றான்.

10

சசிபூஷணன் சிறைக்குச் சென்ற சில தினங்களுக்கெல்லாம் அவன் தந்தை இறந்துவிட்டார். அவனுக்கு நெருங்கிய உறவு வேறு யாரும் இல்லை. ஓர் அண்ணன்மட்டும் நெடுநாளைக்கு முன்பே மத்திய மாகாணத்தில் ஏதோ வேலையில் அமர்ந்து அங்கேயே தங்கிவிட்டான்; அவன் இந்தப் பக்கம் வருவதேயில்லை. ஊரில் இருந்த கொஞ்சநஞ்சம் சொத்துக்களையும் காரியஸ்தர் ஹரகுமாரர் சூது மார்க்கமாய்க் கபளீகரம் பண்ணிவிட்டார்.

சிறைக் கூடத்தில் கைதிகள் சாதாரணமாகப் படும் துன்பத்தைவிட அதிகமாகவே படவேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருந்தது: அப்படி இருந்தும் அந்த ஐந்து நீண்ட ஆண்டுகள் எவ்விதமோ கழிந்துவிட்டன.

மீண்டும் முன்போலவே ஒரு மழைநாளில் உடல் நலிந்து உள்ளம் உடைந்தவனாய்ச் சசிபூஷணன் விடுதலையாகிச் சிறைக்கு வெளியே வந்து நின்றான். சுதந்திர மனிதன் ஆகிவிட்டானும் இந்த விரிவான உலகில் தமர் என்று சொல்லிக்கொள்ள அவனுக்கு யாருமில்லையே! தலைசாய்க்க இடந்தான் ஏது? வீடு வாயிலின்றி, உறவினர் இன்றி, சமூகத்தில் இடமின்றித் தான் ஒன்றியாக நிற்பது அவனுக்கே வருத்தத்தை அளித்தது.

மீண்டும் வாழ்க்கையை எப்படித் தொடங்குவது என அவன் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கும்போது ஒரு கோச்சு வண்டி அவன் எதிரில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வேலையாள் இறங்கி, ''நீங்கள்தானே சசிபூஷண் பாபு?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றான் சசிபூஷணன்.

அந்த ஆள் அக்கணமே வண்டிக் கதவைத் திறந்து, அதில் சசிபூஷணன் ஏறுவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

சசிபூஷணன் வியப்படைந்து, ''எங்கே வரவேண்டும் நான்?'' என்றான்.

வேலையாள், ''எங்கள் எசமானர் உங்களை அழைத்து வரச் சொன்னார்'' என்றான்.

வழியில் போவோர் வருவோர் இதைக் கவனிப்பதைக் கண்டு, அது பிடிக்காமல் மேலே பேச்சின்றி வண்டியில் ஏறிக் கொண்டான் சசி. 'உண்மையில் இதில் ஏதோ பிசகு ஏற் பட்டிருக்கிறது; எப்படியிருந்தால் என்ன? நான் எங்கோ ஓர் இடத்திற்குப் போய்த்தானே ஆகவேண்டும்? ஒரு வேளை இந்த அதிசயத்திலிருந்து எனக்குப் புது வாழ்வு தொடங்குகிறதோ என்னவோ' என்று தன்னுள் எண்ணிக்கொண்டான்.

அன்றுகூடக் காரும் கதிரும் வானவெளி எங்கும் ஒன்றை யொன்று துரத்திக்கொண்டு திரிந்தன. வழியோரத்தில் மழைநீர் தேங்கிய பசுநிற வயல்கள் ஒளியும் நிழலும் கலந்து விசித்திரமாகத் தோற்றின. வழியில் சந்தைக்கடை கூடும் இடத்தில் பெரிய தேர் ஒன்று நின்றது. அதற்குச் சிறிது தொலைவில் உள்ள ஒரு மளிகைக் கடையில் தாசரிக் கூட்டத் தினர் தம்புராவை மீட்டித் தாளம் போட்டுக்கொண்டே பாடினர் :

'வருக வருக நாதனே வருக!
வருக விரைவிலென் வேட்கையைப் போக்க!
வருகஎன் உளம்கவர் கள்வனே வருக!'

சசிபூஷணனுடைய வண்டி போய்க்கொண்டே இருந்தது. அவர் களைக் கடந்து சென்றதும் பாட்டின் மற்ற அடிகள் தெளிவாகக் காதில் விழுந்தன:

'வருக நோய்மிகச் செய்திடும் அன்பனே!
வருக கருணைக் குழகனே வருக!
வருக கார்முகில் வண்ணனே வருக!'

பாட்டின் அடிகள் வரவர மங்கிக்கொண்டே வந்தன; தெளி வாகக் கேட்கவில்லை. ஆனால் அதனுடைய சந்தம்மட்டும் சசிபூஷணன் மனத்தில் ஓர் அலையை எழுப்பிவிட்டது. அவன் தனக்குத் தானே பாடிக்கொண்டு பாட்டின் எஞ்சிய அடிகளைத் தானே இயற்றிப் பாடினான்:

''வருகஎன் ஆனந்த வாழ்வே மீண்டு.
வருகஎன் நெடுநாள் துயரமே மீண்டு.
வருகஎன் இன்ப துன்பில்வாழ் நிதியே!
வருக வருகஎன் ஆசைக் கொழுந்தே!
வருக வருகஎன் அன்பின் பிழம்பே!
வருக வருகஎன் மனச்சஞ் சலமே!

வருக வருகஎன் தோள்மீ தணைவாய்.
வருக வருகஎன் அழியாப் பேறே!
வருக வருகஎன் அகத்துள் உறைவாய்,
வருக வருகஎன் கண்ணினுள் மணியே!
வருக வருகஎன் கனவிலும் நனவிலும்.
வருகஎன் உயிரிலும் உடலிலும் உலகிலும்.
வருக வருகஎன் முகத்தொளிர் முறுவலில்.
வருக வருகஎன் கண்பனி யதனில்.
வருக வருகஎன் நிழலிலும் மயலிலும்.
வருக வருகஎன் ஊடலில் உவந்து.
வருக வருகஎன் ஏண்ணம் அனைத்திலும்.
வருக வருகஎன் பொறுப்புக ளனைத்திலும்.
வருக வருகஎன் அறமே! வினையே!
வருக வருகஎன் நிறைவே! வாழ்வே!
வருக வருகஎன் மரணத் திலுமே.''

மதில் சூழ்ந்த ஓர் இரண்டடுக்கு மாளிகைக் கெதிரே வண்டி வந்து நின்றபோதுதான் சசிபூஷணன் செய்யுள் இயற்று வதும் நின்றது. அவன் கேள்வி எதுவும் கேட்காமல் வேலைக் காரன் காட்டிய வழியே வீட்டினுள் நுழைந்தான். அவன் போய் உட்கார்ந்த இடம் ஒரு பெரிய கூடம். அங்கே பெரிய பெரிய கண்ணாடிப் பீரோக்களில் பல விசித்திர வர்ண அட்டை களையுடைய புத்தகங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருப் பதைப் பார்த்தான். அந்தக் காட்சியைக் கண்டவுடன் பழைய வாழ்வின் நினைவுகள் மீண்டும் ஒரு முறை சிறையிலிருந்து வெளிப்படுவனபோல் வந்தன. பொன் எழுத்துக்கள் பொறிக் கப்பெற்ற அழகிய கோப்புடைய அந்தப் புத்தகங்கள் யாவும் ஓர் இன்ப உலகத்திற்குச் செல்லும் மணிகள் பதித்த தோரண வாயிலாகவே தோற்றின.

மேஜையின் மேலும் என்ன என்னவோ பொருள்கள் கிடந்தன. சசிபூஷணன் மங்கிய பார்வையுடன் அவை என்னவென்று நோக்கினான். ஓர் உடைந்த பலகை. அதன் மேல் அழுக்குப் படிந்த பழைய பாடப் புத்தகம் இரண்டு, கிழியும் தறுவாயில் இருக்கும் ஒரு வாய்பாடு, 'கதாமாலை', காசி ராமதாஸரின் மகாபாரதம் ஒன்று, இவைதாம். பலகை யின் சட்டத்தின்மேல் அன்றொரு நாள் சசிபூஷணன் கறுப்பு மசிகொண்டு பட்டையாக எழுதிய 'கிரிபாலா தேவி' என்ற எழுத்துக்கள் இன்னும் அழியவில்லை. நோட்டுப் புத்தகங்களி லும் தான் எழுதிய எழுத்துக்கள் அழியாமல் இருப்பதைக் கவனித்தான்.

எந்த இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை அவன்

அறிந்துகொண்டான். அவன் இதயத்துள் இரத்தம் வேக மாய்த் துள்ளி ஓடியது. திறந்த பெரிய சாளரத்தின் வழியாக வெளியே நோக்கினான். அவன் கண்களில் அப்போது தென் பட்டது என்ன?—கிராதியிட்ட அந்தப் பழைய அறை; மேடும் பள்ளமுமாகச் செல்லும் கிராமப் பாதை; 'டோரியா' சிற் றுடை கட்டிக்கொண் டிருக்கும் அதே பூம்பாவை; அன்று தான் தனிமையில் நுகர்ந்த அவ்வின்ப வாழ்வு!

அந்த நாளில் இன்பத்தில் ஊர்ந்துசென்ற வாழ்வு அவ னுக்கு ஏற்றதாகவே இருந்தது. ஒவ்வொரு நாளும், சின்னஞ் சிறு காரியங்களிடையே போவது தெரியாமல் நாட்கள் கழியும். தன் சொந்த அலுவலுக்கு நடுவில் ஒரு சிறுமி தன் னிடம் பாடங் கற்றுக்கொள்ள வருவது ஓர் அற்ப நிகழ்ச்சி யாகவே அப்போது தோன்றிற்று. இன்றோ அந்தக் கிராமத்தின் ஒரு மூலையில் ஏகாந்தமாகக் கழியும் அந்நாட்கள்-அவன் அநு பவித்த அந்தச் சிறு அமைதி-அவன் பெற்ற அத்துளி இன்பம்-அந்தப் பெண்ணின் சின்னஞ்சிறு முகம்- இவை எல்லாம் சொர்க்கக் காட்சிபோல் தேச கால வர்த்தமானங்களை மீறி அவன் கற்பனையில் நிழல்களெனத் தோன்றின. அன்றைய வாழ்க்கைச் சித்திரங்களும் நினைவுகளும் மழையினுல் மங்கிய இந்தக் காலை ஒளியுடன் கூடி, அவன் மனத்துள் எழுந்த இன்னிசையோடு கலந்து அபூர்வமான உருவம் கொண்டன. புதல்கள் சூழச் சேறு படிந்த குறுகிய கிராம வீதியில், தான் அலட்சியம் செய்த அப்பேதையின் துயருற்ற வதனம் அவன் மனத்திரையில் ஆழ்ந்து பதிந்திருந்தது. இந்தச் சிந்தனைக ளுடன் அந்தப் பிச்சைக்காரர் பாட்டும் சேர்ந்து அவனுக்குத் தீராத ஏக்கத்தை உண்டாக்கியது. அந்த நாட்டுப்புறப் பாவை யின் முகத்தில் உலகத்துத் துயரனைத்தும் திரண்டிருப்பது போல் அவனுக்குப் பட்டது. சசிபூஷணன் தன் இரு கரங்க ளுக்கிடையே முகத்தை மறைத்து, மேஜைமேல் இருக்கும் அந்தப் பலகை புத்தகங்களோடு பதித்தவண்ணம், கடந்து சென்ற அந்நாட்களைப்பற்றிக் கனவு கண்டுகொண்டிருந் தான்.

நெடுநேரம் இவ்வாறு இருந்த பின்பு பக்கத்தில் மெல் லொலி கேட்கவே நிமிர்ந்து பார்த்தான். அவன் எதிரே வெள்ளித் தட்டில் கனிகளும் தின்பண்டங்களும் ஏந்திக் கிரி பாலா மௌனமாகக் காத்திருந்தாள். அவன் தலை தூக்கிய துமே அணிகலம் இழந்து விதவைக்குரிய வெள்ளாடை தரித் திருக்கும் கிரிபாலா தரையில் படிந்து அவனை வணங்கினாள். எழுந்ததும், முகம் சோர்ந்து நிறம் மங்கி உடல் நலம் குன்றிய சசிபூஷணனைக் கருணை நிரம்பிய கண்களால் நோக்கினாள்.

தாரை தாரையாக விழிநீர் அவள் கன்னங்களில் பெருகியது.

உடல்நலம் விசாரிக்க வாயெடுக்கும்போது நெஞ்சில் அடைத்து வரும் அழுகை, சசிபூஷணனைப் பேசவிடாமல் தடுத்துவிட்டது. வேதனை அவன் உள்ளத்திலேயே கட்டுண்டு சுழன்றது. அப்போது அந்தத் தாசரிகள் பிச்சையெடுத்துக் கொண்டே அவ்வீட்டெதிரே வந்து நின்று திரும்பத் திரும்ப அதே பாட்டின் அடியைப் பாடினர்கள்.

'வருக வருக நாதனே வருக.....'

நள்ளிரவில்

''டாக்டர்! டாக்டர்!''

யாரோ எரிச்சல் உண்டாக்க வந்துவிட்டார்கள், இந்த நடுராத்திரியும் அதுவுமாய். எழுந்து கண்ணைத் திறந்து பார்த்தேன். எங்கள் ஜமீன்தார் தட்சிணைசரண் பாபு! வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன். முதுகுப்புறம் உடைசலான நாற்காலியை இழுத்துப் போட்டு அவரை உட்காரச் சொல்லி, அவர் முகத்தையே உற்று நோக்கினேன். அப்போது கடிகாரம் இரவு இரண்டரை மணியைக் காட்டியது.

தட்சிணைசரண் பாபு முகம் வெளுத்து மருண்ட கண்களுடன், ''இன்று இரவு மறுபடி அதே போல் தொந்தரவு வந்துவிட்டது; உன்னுடைய மருந்து ஒரு வேலையும் செய்யவில்லை'' என்றார்.

நான் சற்றுத் தயங்கி, ''ஒருவேளை நீங்கள் சற்று அளவுக்கு மீறி மதுபானம் செய்தீர்களோ?'' என்றேன்.

தட்சிணைசரண் பாபு வெறுப்புத் தோன்ற, ''நீ சொல்வது தவறு. மதுபானம் அன்று; முதலே பிடித்துச் சமாசாரத்தைச் சொல்லாது போனால் அசல் காரணத்தை நீ புரிந்துகொள்ள முடியாது'' என்றார்.

சுவரிலுள்ள புரையில் சின்னத் தகர மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அதன் திரியை நான் தூண்டினேன். வெளிச்சம் அதிகமாயிற்று; அத்துடன் புகையும் தோன்றியது. எனது வேட்டிக் கொசுவத்தை எடுத்து என் உடம்பில் வளைத்து, தினசரித்தாள் ஒட்டிய மரப்பெட்டியின்மீது அமர்ந்தேன். தட்சிணைசரண் பாபு சொல்லத் தொடங்கினார்:

''என்னுடைய முதல் தாரத்தைப் போல் குடும்பத்துக்கு ஏற்ற பெண்ணைக் காண்பது அரிதென்றே சொல்லவேண்டும். இயல்பாகவே எதையும் ரசிகக் கண்ணுடன் நோக்குபவன் நான்; அதோடு காவியங்களில் திளைத்து அவற்றின் சுவையைப் பருகியிருந்தேன். அப்பட்டமான இல்லறத்தில் என் மனம் நிலைக்கவில்லை. காளிதாசனுடைய கவிதை என் நினைவுக்கு வரும்:

'க்ருஹிணீ ஸசிவ: ஸகீ மித:

ப்ரியசிஷ்யா லலிதே கலாவிதௌ.'

(இல்லக் கிழத்தியும், மந்திரியும், உற்ற பாங்கியும், இனியாளும், அன்புறு மாணவியும், கலைப்பண்பு மிக்கவளும் அவளேதான்.)

''ஆனால் என் வாழ்க்கைத் துணைவியுடன் சுவையுள்ள விஷயங்களைப் பேசப் போனாலும், உள்ளம் ஒன்றிய பாங்கியென்று காதலுரையாடத் தொடங்கினாலும் ஏளனச் சிரிப்பாய், இந்திரனுடைய யானையைக் கங்கை வெள்ளம் அடித்துச் சென்றது போல், என்னுடைய சிங்காரக் கவிதைகளையும், நான் அவளுடன் அளவளாவ நினைத்த அருமை நேரங்களையும் இருந்த இடம் தெரியாமல் ஊதி எறிந்து விடுவாள். அவளுக்குத்தான் அப்படிச் சிரிக்கத் தெரியும்.

''அதன் பிறகு, நாலு ஆண்டுகள் ஆகின்றன. நான் நோயுற்றேன். வாய்ப் புண்ணிலிருந்து எனக்குக் காய்ச்சல் அதிகரித்துச் சாவளவுக்கும் வந்தேனா? பிழைப்பேன் என்ற நம்பிக்கையும் இல்லை. இப்படி ஒரு நாள் டாக்டரும் முடிவு கட்டிவிட்டார் எனக்கு. அச்சமயம், என் உறவினன் ஒருவன், பிரம்மசாரி ஒருவரை அழைத்து வந்தான். அவர் என் உடம்பைப் பரிசோதித்து ஏதோ காட்டுமரத்து வேரை அரைத்துப் பசு நெய்யில் கலந்து சாப்பிட எனக்குக் கொடுத்தார். அந்த மருந்தின் குணத்தாலோ, என் அதிருஷ்ட வசத்தாலோ, அந்தத் தடவை நான் பிழைத்துவிட்டேன்.

''நோய்வாய்ப்பட்ட டிருக்கையில், என் மனைவி இரவு பகலாய் ஓய்வின்றி எனக்குத் தொண்டு புரிவாள். அந்தச் சில நாட்கள் அபலையான பெண், மனிதருக்கு இயல்பான அற்ப பலத்தைக் கொண்டு, கவலையும் வேதனையும் ஒரு புறம் அழுத்த, வாசற்படியில் வந்து நின்று யமனுடன் போராடினாள். தன் அன்பு, தன் உள்ளம், தன் முயற்சி யாவையும் கொண்டு ஒரு தகுதியுமே இராத இந்தப் பிராணனை, மார்போடு அணைத்துக்கொள்ளும் பச்சிளங் குழந்தைபோலக் காத்து நின்றாள். உண்ண மாட்டாள்; உறங்காள்; உலகில் எதிலும் அவளுக்கு அக்கறை இல்லை.

''யமன், தோற்றுப்போன புலியெனத் தன் பிடியிலிருந்து என்னைப் போட்டுவிட்டு ஓடினான். ஆனால் போகும்போது என் மனைவியை வலிவுடன் தாக்கிவிட்டுச் சென்றான்.

''அச்சமயம், அவள் கருவுற்றிருந்தாள். சில நாட்களுக்கெல்லாம் மரித்த சிசுவை ஈன்றாள். அதன் பின்னரே, சிக்கல் நிரம்பிய பல நோய்களுக்கு ஆளானாள். அவளுக்குத் தொண்டு செய்ய முனைந்தேன். அவ்வாறு செய்வதை அவள் தடுத்து, 'இதென்ன? உலகம் தூற்றுமே! இப்படி நீங்கள்

என் தலைமாட்டில் இரவும் பகலும் இருக்க வேண்டாம்' என்றாள்.

''இறுக்கத்தைப் போக்க எனக்கு நானே விசிறிக்கொள்வது போல் நடித்து அவள் பக்கமாக வீசும்பொழுது, அவள் என் கையைப் பிடித்து நிறுத்துவாள். ஒரு நாள் அவளுக்குச் செய்ய வேண்டிய உபசாரத்தை முடித்துவிட்டு உணவுகொள்ளச் சற்று நேரமாகிவிடவே, என்னவெல்லாம் சொல்லி வருத்தப்பட்டாள் தெரியுமோ? நான் இப்படி ஏதாவது என்னால் முடிந்ததை அவளுக்குச் செய்யப்போனால் பெரிய அதிர்ச்சிக்கு ஆளாவாள். 'ஆண்களாகப் பிறந்தவர் இப்படிப் பிடிவாதம் பிடிப்பது அழகன்று' என்பாள்.

''என்னுடைய பராநகர் மாளிகையை நீ பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். அந்த மாளிகைக்கு முன்புறம் பெரிய தோட்டம். தோட்டத்தைத் தாண்டியதும் கங்கையாறு. மாடியில் எங்கள் பள்ளியறைக்கு நேர்க் கீழே, தென்புறமாக உள்ள நிலத்தில், மருதோன்றிச் செடியை வேலியாக வைத்துச் சின்னத் தோட்டம் போட்டிருந்தாள். தோட்டத்தில் இந்தச் சிறு பகுதியே ஆடம்பரமின்றி நம் நாட்டுப் பண்புக்கு ஏற்ப அமைந்திருந்தது. அதாவது அதில் வண்ண வண்ணமான வெளிநாட்டு மலர்களோ, விசித்திரத் தளிர்கள் வாய்ந்த பச்சிலைச் செடிகளோ காண்பதரிது. மண்தொட்டிகளில் இன்ன செடி என்பதைச் சுட்டும் 'லத்தீன்' பெயர்கள் ஒட்டிய காகிதம் இராது. மல்லிகை, முல்லை, ரோஜா, அலரி, நில சம்பங்கி போன்று எங்கும் இரைபடும் செடிகளே அதிகமாக இருந்தன. பெரியதொரு மகிழமரத்தின் கீழ், வெண்மைச் சலவைக் கல்லாலான ஒரு மேடை இருந்தது. அவள் ஆரோக்கியமாக இருந்த சமயத்தில் தானே அந்த மேடையைத் துடைத்துத் தூசியின்றி வைப்பாள். கோடையில் வேலையெல்லாம் ஆனபிறகு மாலை நேரங்களில் அங்கேதான் ஓய்வுக்கு வந்து அமருவாள். அந்த இடத்திலிருந்து கங்கையாறு கண்ணுக்குப் புலப்படும். ஆனால் படகில் செல்வோர் இங்குள்ளவரைப் பார்க்க முடியாது.

''இப்படிப் பல நாட்கள் படுக்கையாகக் கிடந்து ஒரு பங்குனி நாள், சுக்கில பட்சத்து அந்திப் பொழுதில் அவள், 'அறைக் கதவுச் சாளரங்களை மூடிக்கொண்டு இங்கேயே இருந்தால் எனக்குப் பிராணன் எகிறுவது போல் இருக்கிறது, அந்தத் தோட்டத்தில் சற்றுப் போய் உட்காருகிறேன்' என்றாள்.

''மெல்ல அவளை அணைத்துக்கொண்டே அழைத்து வந்து அந்த மகிழ மரத்தடியில் உள்ள சலவைக்கல் மேடையின் மேல் படுக்க வைத்தேன். என் மடியிலேயே அவள் தலையை

நான் வைத்துக்கொண் டிருப்பேன். ஆனல் அவள் விரும்ப மாட்டாள் என்று மெல்லணையை அவள் கழுத்துப்புறம் பரப் பினேன்.

''நன்கு அலர்ந்த மகிழமலர்கள் கீழே உதிர்ந்தன. மரக்கிளைகளின் இடுக்கு வழியாக நிழலுடன் பின்னிய நில வொளி வாடி உலர்ந்த அவள் முகத்தில் படர்ந்தது. நாற் புறமும் ஒலியடங்கி இருந்தது. மணம் மல்கும் அவ்விரு ளிடையே ஒருபுறம் வீற்றிருந்த நான் அவள் முகத்தை நோக் கியபடி பேசாமல் இருந்தேன். என் கண்கள் கலங்கின.

''நான் அவள் பக்கமாக மெல்ல நெருங்கி வந்து, மேலிந் திருந்த அவள் கையை எடுத்து அணைத்துக்கொண்டேன். அவள் தடுக்கவில்லை. சிறிது நேரம் இவ்வாறு மௌனத்தில் கடந்த தும், என் உள்ளம் எதனலோ பொங்கி எழ, 'உன் காதலை நான் என்றும் மறவேன்' என்றேன்.

''உடனே எனக்கு, இதை நான் கூறவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியது. என் மனைவி மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் நாணம் கலந்திருந்தது; இன்பம் துள்ளி யது; மொத்தத்தில் அதில் ஏளனமே குடிகொண் டிருந்தது. சற்று அவநம்பிக்கையும் ஒலித்தது. எனக்குப் பதில் சொல்ல அவள் வாய் திறக்கவே இல்லை. அந்தச் சிரிப்பின் மூலமே, 'மறவாமல் இருப்பது என்பது நடக்காததொன்று; அதற் காக நான் காத்துக்கொண் டிருக்கவும் இல்லை' என்ற உட் கருத்தை வெளிப்படுத்தினுள்.

''ஊடுருவும் இந்தக் கூரிய சிரிப்புக்கு அஞ்சியே நான் என் மனைவியுடன் காதல் கனியும் பேச்சை எடுக்கவில்லை. அவள் இராத சமயம் என் மனத்துள் பல எண்ணங்கள்; அவள் எதிரே வந்ததும் அவை வெறும் வறட்டு விஷயங்களாகவே தோன்றும். அவற்றையெல்லாம் அச்செழுத்தில் காண்பாரா யின் கண்ணீர் அல்லவோ பெருக்குவார்கள்? அதையெல்லாம் வாயால் சொன்னல் எவ்வளவு சிரிப்புக்கு இடம் தருமென் பதை இதுவரை நான் உணராமல் இருந்தேன்.

''பேச்சில் வாதப் பிரதிவாதத்துக்கு இடம் உண்டு; ஆனல் அத்தகைய சிரிப்பு எந்தத் தருக்கத்துக்கும் மசியாது என்று அறிந்து நான் சும்மா இருக்க வேண்டியதாயிற்று. நில வொளி பெருகியது. 'குஹு குஹு' என்று ஆண் குயிலொன்று வாயோயாமல் அரற்றியது. 'இதென்ன? இதுபோன்ற மகிழ் பூக்கும் நிலா விரியும்போதுகூட ஆண் விளிப்பது செவியில் படாமல் குயிற்பேடு செவிடாகிவிட்டதா, என்ன?' என்று நினைத்துக்கொண்டேன் அச்சமயம்.

''என்ன என்னவோ சிகிச்சை செய்தும் என் மனைவிக்கு

மூண்ட நோய் தீருவதாகவே தெரியவில்லை. 'இடம் மாறினால் ஒரு வேளை குணமாகலாம்' என்றார் டாக்டர்: என் மனைவியை அலாகாபாதுக்கு அழைத்துச் சென்றேன்.''

இந்த இடத்தில் தட்சிணு பாபு சட்டென்று நின்றுவிட்டார். என்னையே சில நாழிகை சந்தேகத்துடன் நோக்கினார். அப்புறம், தம் இரு கைக்குள் தலையைப் பதித்து என்னவோ சிந்தனையில் ஆழ்ந்தார். நான் சும்மா இருந்தேன். புரையில் மண்ணெண்ணெய்த் தீபம் எரிந்துகொண்டிருந்தது. சந்தடி அடங்கிய அவ்வறையில் கொசுவின் ரீங்காரம் தெளிவாகக் கேட்டது. சட்டென்று மௌனம் கலைந்து தட்சிணு சரண் பாபு தொடர்ந்தார்:

''அங்கே ஹாராண் டாக்டர் என் மனைவிக்குச் சிகிச்சை செய்யத் தொடங்கினார்.

''கடைசியில் பல நாட்கள் இவ்வாறு கழிந்ததும் டாக்டர், 'இந்த நோய் குணமாகாது போல் தோன்றுகிறது' என்றார். என் மனைவியும் இதை அறிவாள். அவள் படுத்த படுக்கையாகவே கிடக்க வேண்டியதாயிற்று.

''ஒரு நாள் என் மனைவி என்னுடன், 'இந்த நோய் தீரப் போவதும் இல்லை; நானும் கொஞ்சத்தில் சாவப்போவதும் இல்லை. எத்தனை நாள் இந்த அரைப் பிணத்தைக் கட்டிக் கொண்டு அழுவீர்கள்? நீங்கள் வேறு ஒருத்தியை மணந்து கொள்ளுங்கள்' என்று வற்புறுத்தினாள்.

''அவள் இப்படிக் கூறியது நல்ல யோசனைதான். ஆனால் இதில் அவள் பெருமிதம் கொண்டதாகவோ தியாக உணர்வைக் காட்டியதாகவோ நினைப்பதற்கில்லை.

''இப்போது நான் சிரிக்க வேண்டிய கட்டம் வந்தது. ஆனால் அவளைப்போல் என்னால் சிரிக்க எப்படி ஆகும்? நாவலில் வரும் தலைவனைப் போல அழுத்தமாகவே, உயர்ந்த பண்புடன், 'இந்த உடலில் உயிர் இருக்கும் வரை—' என்று கூறியபோது அவள் என்னைத் தடுத்து, 'அப்படிப் பேச வேண்டாம், வேண்டாம். உங்கள் பேச்சைக் கேட்டு நான் இனி உயிருடன் இருக்க விரும்பவில்லை' என்றாள். நான் என் தோல்வியை ஏற்றுக்கொள்ளாமலே, 'இந்த வாழ்வில் இனி எவர்மீதும் காதல் கொள்ளவே மாட்டேன்' என்றேன்.

''அதைக் கேட்டு என் இல்லாள் உரக்கச் சிரித்தாள். நான் அடங்கிப் போக வேண்டியதாயிற்று.

''எனக்கே புரியவில்லை; நான் அப்போது உணராமல் என் இருந்தேன் என்பதே தெரியவில்லை. அவள் நோய் தீராது, நம்பிக்கை இல்லை என்று அறிந்த பிறகு, அவளுக்குத் தொண்டாற்றுவதில் எனக்குச் சலிப்புத் தட்டத்தான் தட்டியது.

இந்தப் பணியில் நான் பின் அடைவேன் என்பதைக் கற்பனை கூடச் செய்யவில்லை. வாழ்வு முழுவதையும் இந்த நோயாளியுடனேயே கழிப்பது எனக்குப் பெரு வெறுப்பை மூட்டியது. அந்தோ! எனது யௌவன தசையில் என் கண்முன் விரிந்த அந்தக் காதலின் மாயக் கவர்ச்சி, நம்பிக்கை, அழகு யாவும் கானல் நீரென, என் வருங்கால வாழ்வு இன்பத்தின் பசுமையைக் காட்டி ஏமாற்றின. இன்று பார்க்கையில், அது நம்பிக்கை அவிந்த வேட்கைத் தழலில் பொரியும் பாலையாக மாறியதே!

''நான் புரியும் தொண்டினுல் அவள் உள்ளூற அமைதியுற்றுள். அப்போது எனக்குத் தெரியவில்லை; இப்போது சந்தேகமின்றி அவள் என் மனப்போக்கைக் குழந்தைகள் பயிலும் எளிய பாடத்தைப் போல் புரிந்து கொண்டுவிட்டாள். அதை நினைத்து நான் நாவலில் வரும் கதாநாயகனைப்போல் நடித்துக் காவியப் பாணியில் பேசியபோது அவள் ஆழ்ந்த அன்பினுலும், தடுத்தற்கரிய அவாவினுலும் சிரித்து ஏளனம் செய்தாள். எனக்கே விளங்காத எனது மனப்போக்கை, கடவுளைப்போல் அறிந்து கொண்டுவிட்டாள். இதை நினைக்கும் போது இன்றும் எனக்கு அவமானம் தலைதூக்க முடியாமல் இருக்கிறது.

''ஹாராண் டாக்டர் எங்கள் இனத்தவர். அவர் வீட்டில் நான் அடிக்கடி விருந்து உண்பது உண்டு. இப்படிச் சில நாட்கள் சென்று வந்ததால் டாக்டர் தம் மகளை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவளுக்கு மணமாகவில்லை. வயசு பதினறு இருக்கும். தக்க வரன் கிடைக்காததால் இன்னும் அவளுக்கு விவாகம் ஆகவில்லை என்று டாக்டர் சொன்னர். ஆனல் வெளியிலிருந்து நான் கேட்ட தகவலிலிருந்து அந்தப் பெண்ணிடம் ஏதோ குறை இருப்பதாகத் தெரிந்தது.

''குறை வேறு ஒன்றும் இல்லை. அழகுக்கு ஏற்ற படிப்பு இருந்தது. சில நாட்களில் அவளுடன் பேச்சுச் சுவாரசியத்தில் ஈடுபட்டு என் வீட்டுக்குத் தாமதமாகக்கூடத் திரும்புவேன். என் மனைவிக்கு மருந்து கொடுக்கும் வேளையும் கடந்துவிடும். நான் ஹாராண் டாக்டர் வீட்டுக்குச் செல்வதை என் மனைவி அறிவாள்; ஆனல் ஒரு நாளாவது அவள் ஏன் இத்தனை நேரம் என்று என்னைக் கேட்டதே இல்லை.

''வெவ்விய பாலியின் இடையே மீண்டும் கானல்நீரின் மாயப் பசுமையைக் கண்டேன். எனக்கு மூண்ட வேட்கை அளவு மீறிச் செல்லவே, என் கண்முன் தெள்ளிய நீர்த்திரள் குளுகுளுவென்று இரு கரையும் வழிந்தோடியது. என்

மனத்தை அந்த விசையிலிருந்து திருப்ப என்னால் ஆக வில்லை.

''நோயாளியின் அருகில் இருப்பது எனக்கு இருமடங்கு வெறுப்பையே தந்தது. இப்போதெல்லாம் அவளுக்குத் தொண்டு புரிவதிலும், அவளுக்கு வேளைக்கு மருந்து தருவதி லும் அக்கறை இழந்து வந்தேன்.

''ஹாராண் டாக்டரும் நடுநடுவே, 'இந்த நோய் தீரு வதற்கு ஒரு வழியும் இல்லை; எத்தனை நாள் அநுபவிப்பது? இறந்து போகலாம்' என்பார். என் மனைவி இப்படி உயிரை நீடித்து வைத்திருப்பது அவளுக்கும், மற்றோர் ஆளுக்கும் இன்னலாக இருந்தது. இதை அவர் பொதுப்படையாகச் சொல்லி இருக்கலாம். ஆனால் அவர் என் மனைவியைக் குறிப் பிட்டுச் சொன்னதுதான் உசிதமாக இல்லை. ஆனால் மனிதரின் சாவு வாழ்வைப் பற்றி டாக்டர்களுக்கு என்ன தலைவலி? அவர்களுக்கு நம் மனநிலையைப் புரிந்துகொள்ள வேண்டிய அக்கறை என்ன இருக்கிறது?

''திடுமென ஒரு நாள், பக்கத்து அறையில் இருந்தபடி கேட்டேன். டாக்டரிடம் என் மனைவி, 'டாக்டர்! எதற்காக இந்த மருந்துகள்? எனக்கென்னவோ இவற்றால் குணமாகாது. வீண் செலவுதான். நான் உயிரை வைத்திருப்பதே ஒரு நோயாகும். நான் சீக்கிரம் மரணமடைவதற்கு ஏதாவது மருந்து தந்து முடித்து விடுங்கள் என் வேதனையை' என்று சொல்லிக்கொண் டிருந்தாள். 'இந்த மாதிரி நீங்கள் பேசக் கூடாது, அம்மா' என்றார் டாக்டர். அவள் சொன்ன வார்த்தை என் நெஞ்சைப் பிளந்தது. டாக்டர் போனதும், என் மனைவி இருக்கும் அறைக்குச் சென்று அவள் படுக்கை யோரமாக உட்கார்ந்தேன். அவள் நெற்றியை மெல்லத் தடவினேன். 'இங்கே ரொம்பப் புழுங்கிப்போகிறது. வெளியே போய் இருங்கள். எங்கேயாவது நல்ல காற்றில் உலாவிவிட்டு வாருங்கள். இராது போனால் இரவில் நல்ல பசியே எடுக்காது' என்றாள்.

''வெளியே உலாவப்போதல் என்றால் டாக்டர் வீட்டுக்குப் போவதென்று பொருள். நான் ஒரு சமயம், 'உலாவிவிட்டு வந்தால் உனக்கு நல்ல பசி எடுக்கும்' என்று அவளுக்குச் சொன்னதையே இன்று எனக்குத் திருப்பிவிட்டாள். இதி லிருந்து என்னுடைய நடிப்பையெல்லாம் அவள் நன்றாகப் புரிந்துகொண்டுவிட்டாள் என்று தெரிந்தது. நான்தான் முட் டாள்; அவளே முட்டாள் என்று இதுவரை நினைத்தேனே!''

இதைக் கூறியதும் தட்சிணாமூர்த்தி பாபு வெகு நேரம், தம் இரு கைக்குள் தலையைத் தாங்கி வாளா இருந்தார்.

கடைசியில் அவர், ''குடிக்கத் தண்ணீர் வேண்டும்'' என்றார். நான் கொடுத்த நீரைப் பருகிக்கொண்டே தொடர்ந்தார், தம் பேச்சை:

''ஒரு நாள் டாக்டரின் மகள் மனோரமா என் மனைவியை வந்து பார்க்க வேண்டுமென்று தெரிவித்தாள். எதனாலோ அறியேன். அவள் இப்படி விரும்புவது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவள் வந்து பார்ப்பதைத் தடுப்பதற்குத் தகுந்த காரணமும் இல்லை. ஒரு நாள் மாலை நேரம் என் வீட்டுக்கு அவள் வந்தாள்.

''அன்று என் மனைவிக்கு மற்ற நாட்களை விட நோயின் வேதனை சற்று அதிகமாகி இருந்தது. இதுபோல நோய் மும்முரமாகும்போதெல்லாம் அவள் அலட்டிக்கொள்ளாமலேயே படுத்திருப்பாள். கைவிரல்களை அழுத்திக்கொள்வதிலிருந்தும், முகம் நீலம் பாரித்துப் போவதிலிருந்தும் அவளுடைய நோயின் தீவிரம் வெளிக்குத் தெரியும். அறை நிச்சப்தமாகவே இருந்தது. அவள் படுக்கையோரமாக நான் உட்கார்ந்திருந்தேன். 'வெளியே உலாவிவிட்டு வாருங்கள்' என்று அவள் அன்று சொல்லவே இல்லை. இது போன்ற நெருக்கடியான சமயங்களில் தன் பக்கத்தில் நான் இருப்பது அவளுக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. கண்ணைக் கூசுமோ என்று விளக்கைக் கதவோரமாக வைத்தேன். அறையில் இருள், நிச்சப்தம். நடுநடுவே நோய் செய்யும் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் என் மனைவி பெருமூச்சு விடுவது கேட்டது.

''அச்சமயம் மனோரமா அறை வாசற்படியிலே தோன்றினாள். கதவோரமாக உள்ள விளக்கின் ஒளி அவள் முகத்தில் பளிச்சென்று விழுந்தது. இருளில் அறையில் இருப்பவர்கள் தன் கண்ணுக்கு உடனே புலப்படாது போகவே, 'சற்றுத் தயங்கினாள் உள்ளே நுழைவதற்கு.

''என்னுடைய மனைவி விதிர்த்து, என் கைகளைப் பற்றி, 'அது யார், பாருங்கள்' என்றாள். பலவீனமான அவள் உடல்நிலையில் மனோரமாவின் உருவம் சட்டென்று தோன்றவே, அவளுக்குச் சற்று அதிர்ச்சியே ஏற்பட்டது. அவள் இரண்டு மூன்று தடவை தாழ்ந்த குரலில், 'அது யார்? அது யார் வந்து நிற்பது?' என்று கேட்டாள். ஏனோ அப்போது எனக்கு ஒரு துர்ப்புத்தி தோன்றியது. சட்டென்று, 'யாரோ தெரியாது எனக்கு' என்று சொன்னதுமே யாரோ எனக்குக் கசையடி கொடுத்தது போன்ற வேதனை மூண்டது. அடுத்த கணமே நான், 'ஓ! நம் டாக்டரின் மகள்தான்' என்றேன்.

''என் முகத்தையே ஊடுருவி நோக்கினாள் என் மனைவி.

அவள் முகத்தைப் பார்க்க எனக்குத் துணிவே இல்லை. பலவீனமான குரலில், வந்தவளை அவள், 'வாருங்கள், உட்காருங்கள்' என்றதும் என்னைச் சுட்டி, 'விளக்கை இந்தப் பக்கம் திருப்புங்கள்' என்றாள் அவள்.

''மனோரமா அறையினுள் வந்து அமர்ந்தாள். அவளுடன் நோயாளி இரண்டொரு வார்த்தை பேசினாள். அச்சமயம் டாக்டரும் உள்ளே வந்தார்.

''தம்முடன் அவர் மருந்துப் புட்டிகள் இரண்டு கொண்டு வந்திருந்தார். அவற்றை வெளியே எடுத்து என் மனைவியைப் பார்த்து, 'இந்த நீலச் சீசாவிலுள்ளது உடம்பில் தடவுவதற்கு. மற்றது உள்ளே சாப்பிடுவதற்கு. ஜாக்கிரதை; மாறுட்டமாகப் போகிறது! அந்த நீலச் சீசாவிலுள்ளது சுடுமையான விஷம்' என்று எச்சரிக்கை செய்தார்.

''என்னிடமும் ஒரு முறை அதுபற்றி எச்சரிக்கை செய்து விட்டு மருந்துச் சீசாக்களை மேஜைமேல் வைத்தார். விடை பெற்றுச் செல்லும்பொழுது தம் மகளை உடன் வர அழைத்தார். 'நான் இங்கே இருக்கிறேனே, அப்பா. துணைக்கு வேறு பெண் எவரும் இல்லையே!' என்றாள்.

''என்னுடைய மனைவி, 'எதற்கம்மா உனக்குத் துன்பம் என்னால்? வேலைக்காரி இருக்கிறாள்; அம்மாவுக்கும் மேலாக என்னைக் கவனித்துக்கொள்வாள்' என்றாள். டாக்டர் சிரித்தவாறு, 'அந்த அம்மாள் பிறருக்குச் சேவை செய்வதிலேயே காலம் போக்கினாள். இப்போது பிறர் தனக்குத் தொண்டு செய்வதை அவள் சகிக்க மாட்டாள்' என்றார்.

''மகளை அழைத்துக்கொண்டு டாக்டர் வெளியே செல்ல முற்பட்டபோது என் மனைவி, 'டாக்டர் பாபு, இவரும் ரொம்ப நேரமாக இந்தப் புழுக்கமான அறையிலேயே விழுந்து கிடக்கிறார். இவரையும் உங்களுடன் வெளியே உலாவி வர அழைத்துச் செல்லுங்கள்' என்றாள். டாக்டர் என்னை நோக்கி, 'வாருங்கள். இப்படியே ஆற்றங்கரையோரமாக உலாவிவிட்டு வரலாம்' என்றார்.

''முதலில் இதற்கு இணங்காமல், சிறிது நேரத்துக்கெல்லாம் வர ஒப்புக்கொண்டேன். டாக்டர் போகுமுன்னர் அந்த மருந்துகளைப்பற்றி மீண்டும் ஒரு முறை என் மனைவிக்கு எச்சரிக்கை செய்தார்.

''அன்று டாக்டர் வீட்டிலேயே உணவு கொண்டேன். திரும்பி வர இரவு நெடுநேரமாகிவிட்டது. வந்து பார்க்கையில் என் மனைவி படுக்கையில் புரண்டு புரண்டு துடித்தாள். வேதனை வெடித்து வர நான், 'என்ன உனக்கு? வலி தாள முடியவில்லையா?' என்றேன்.

''அவளால் பதில் சொல்லமுடியவில்லை. என் முகத்தையே மௌனமாக நோக்கினாள். அவளுக்கு நெஞ்சு அடைத்து விட்டது.

''நான் அக்கணமே டாக்டரை அழைத்துவர விரைந் தோடினேன். டாக்டர் வந்தார். அவருக்கு ஒன்றுமே புரிய வில்லை. கடைசியில், 'மறுபடியும் அந்த வலி அதிகமாகி விட்டதா? நான் கொடுத்த மருந்தைத் தடவினீர்களா?' என்று கேட்டார்.

''அவர் மேஜையில் இருந்த நீலச் சீசாவைக் கையில் எடுத்துப் பார்த்தார். அது காலியாக இருந்தது. என் மனைவி யைப் பார்த்து, 'தவறுக இந்த மருந்தை உள்ளுக்குச் சாப்பிட் டீர்களா என்ன?' என்றார். என் மனைவி தலையசைத்து, 'ஆம்' என்று தெரிவித்தாள்.

''டாக்டர் சற்றும் தாமதிக்காமல், தம் வண்டியில் ஏறிப் 'பம்ப்' எடுத்துவரத் தம் வீட்டுக்கு விரைந்தார். மயக்கம் வரவே நான் என் மனைவியின் படுக்கையிலேயே சாய்ந்தேன்.

''தாய், நோயால் வாதைப்படும் தன் குழந்தைக்கு ஆறு தல் தருவது போல் என் தலையைத் தன் மார்போடு அணைத்து, என் உடலை மெல்லத் தன் இரு கைகளாலும் தடவித் தன் மனத்தில் உள்ளதை வெளியே சொல்லத் துடித்தாள். 'வருத் தப்படாதீர்கள். நல்லதாய்ப் போயிற்று; நீங்கள் சுகமாக இருக்க வேண்டுமென்பதே என் ஆசையெல்லாம். நானும் இன்பத்துடனேயே சாகிறேன்' என்றாள்.

''டாக்டர் திரும்பி வந்தபோது, என் மனைவி பட்ட வேதனைக்கெல்லாம் முடிவு ஏற்பட்டது. அவள் போய்விட் டாள்.''

இதைக் கூறியதும் தட்சிணாசரண் பாபு தொண்டை வறண்டு போகவே தண்ணீர் அருந்தியதும், ''நிரம்பப் புழுக்க மாக இல்லை?'' என்று, வெளி வராந்தாவில் சற்று உலாவி விட்டு, உள்ளே தம் இடத்தில் வந்து அமர்ந்ததும், மீதிக் கதையைக் கூறத் தொடங்கினார்:

''மனோரமாவை மணந்துகொண்டு ஊருக்குத் திரும்பி னேன். மனோரமா தன் தந்தையின் விருப்பத்துக்கிணங்கி என்னை விவாகம் செய்துகொண்டாள். ஆனால் நான் அவ ளுடன் இனிய காதலுரைகள் பேசி அவள் மனத்தைக் கவர முற்படுகையில் அவள் சிரித்து இன்முகம் காட்டவே மாட்டாள். சிந்தனையில் ஆழ்ந்திருப்பாள். அவள் மனத்தை உறுத்தும் அந்த முள் இன்னது என்பது எனக்குத் தெரியாது.

''அச்சமயம் மதுபானம் செய்யும் வழக்கம் எனக்கு அதிக மாயிற்று. ஒரு சமயம், ஒரு சரத்கால மாலைப்பொழுதில் மனோர

மாவை என்னுடன் அழைத்துச் சென்று என்னுடைய பராநகர் மாளிகைத் தோட்டத்தில் உலாவிக்கொண் டிருந்தேன். அச்சம் தரும் இருள் சூழ்ந்து வந்தது. பறவைகள் கூடுகளில் சிறகு உதறிக்கொள்ளும் அரவங்கூடக் கேட்கவில்லை. நாங்கள் உலாவிய பாதை இரு மருங்கில்மட்டும் இருண்ட நிழல் கவிந்த சவுக்கு மரங்களின் ஊசி இலைகள் காற்றுத் தாக்கவே கடல் அலையென ஒலி எழுப்பின.

''கூளப்புற்று மஞ்சரமா அந்த மகிழமரத்தடியில் வெண்ணிறச் சலவைக் கல் மேடையின்மீது தன் இரு கைகளையும் தலைப்பக்கம் தூக்கி வைத்தபடியே படுத்தாள். நான் அவள் பக்கத்திலே உட்கார்ந்தேன். அங்கே கவிந்திருந்த இருள் பின்னும் கனத்து விளங்கியது. கண்ணுக்குப் புலனாகும் அளவுள்ள வானவெளியில் தாரகைக் கூட்டம் மொய்த்திருந்தன. மரத்தடியில் சில்வண்டின் அரவம் வானின்று இழியும் மௌனப்படாத்துக்கு ஒலியாகிய மெல்லிய கரை இட்டது போல் இருந்தது.

''அன்று பிற்பகல் நான் மது அருந்தியிருந்ததால் என் மனத்தில் இலேசான ஒரு கலக்கம் இருந்தது. இருட்படலம் என் கண்களில் ஊற ஊற, அந்த மரத்தின் கீழ் இருட்குவையில், ஆடை நிலைகுலைந்து இளைப்பாறும் அந்த மடந்தையின் மங்கலான உருவம், என் உள்ளத்துள் ஓர் ஆவேசத்தைப் புகுத்திவிட்டது. அவள் ஓர் நிழல் வடிவம் போலவும், என் கை கொண்டு அவளைத் தொட முடியாது போலவும் மருள் எழுந்தது.

''அச்சமயம், இருள் படர்ந்த சவுக்கு மரத்தின் மோட்டுக் கிளையில் நெருப்புப் பற்றியது போல் வெளிச்சம் தெரிந்தது. கிருஷ்ணபட்சத்துச் சந்திரனின் தேய்ந்த வட்டம் மெல்ல உயரக் கிளம்புவதைக் கவனித்தேன். வெள்ளைப்பாறைமீது, வெண்ணிறச் சேலையுடன் படுத்திருக்கும் மெல்லியலாள்மீது நிலாப் படிந்தது. என்னால் இருக்க முடியவில்லை. அவள் அருகில் வந்து அவள் மெல்லிய கைகளை எடுத்து என்னுடைய கரத்துடன் கோத்து, 'மஞ்சரமா, நான் சொல்வதை நீ நம்புவாயோ இல்லையோ? உன்மீது எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? உன்னை என்றென்றும் மறக்கமாட்டேன்' என்று அன்பு கனியக் கூறினேன்.

''இதைப் பேசியுடன் எனக்கே தூக்கி வாரிப்போட்டது. இதே போல் முன் ஒரு சமயம் நான் வேறொருத்தியுடன் பேசியிருக்கிறேன்! அதே சமயம், மகிழமரத்தின் கிளையை விட்டு, சவுக்கு மரத்து உச்சிக்கு மேல் நிலாவின் பசலை பூத்த வான வழியாகக் கங்கையாற்றின் ஒரு கரையிலிருந்து மற்றக் கரை

வரைக்கும் பரவிய, 'அச்சோ...சோ' என்ற ஒரு பெருஞ் சிரிப்பொலி விரைந்து சென்றது. நெஞ்சை அசைக்கும் அந்தச் சிரிப்பு, வான மண்டலத்தையும் எதிரொலிக்கச் செய்யும் அந்த நகைப்பு, இதுவரை நான் கேட்டறியாதது! அந்த விநாடியே பாறை மேடையில் நான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன்.

''மயக்கம் தெளிந்தபொழுது என் வீட்டு அறையில் நான் படுத்திருப்பதை உணர்ந்தேன். 'என்ன இப்படித் திடீரென்று உங்களுக்கு?' என்று என் மனைவி கேட்டாள். நான் நடுக்கத் துடனே, 'உன் காதில் விழவில்லையா? வானம் எங்கும் எதிரொலிக்க யாரோ ஹா ஹா என்று சிரித்தமாதிரி இருந்தது எனக்கு' என்றேன்.

''என் மனைவி, 'அது சிரிப்பொலியா என்ன? மாலை கோத்தாற்போல் பறவைக் கூட்டம் ஒன்று போயிற்று; அதன் இறகொலிதான் அப்படிக் கேட்டது. இதற்கா நடுநடுங்கிப் போய்விட்டீர்கள்?' என்றாள்.

''பகல் வேளையில் எனக்குத் தெளிவாகப் புரிந்தது, இது பறவைகள் கும்பலாகப் பறந்து செல்லும் ஓசை என்பது. எங்கிருந்தோ கொக்குக் கூட்டம் ஆற்று மணற்படுகையில் வந்து சேருமென்பது எனக்குத் தெரிந்தாலும், அந்தி வேளை நெருங்க நெருங்க இந்த உறுதி மறைந்து அச்சமே கொள்வேன். இருட்ட இருட்ட என்னைச் சுற்றிலும் ஹோ என்று யாரோ உரத்துச் சிரிப்பதுபோலவும், அயர்ப்பில் அந்தச் சிரிப்பு வானத்தைப் பிளக்கும் அளவுக்குத் தொனிப்பது போலவும் தோன்றும். கடைசியில் மாலை நேரத்துக்குப் பின்பு, மனோரமாவை நெருங்கி இரண்டு வார்த்தை பேசுவதற்குக் கூட எனக்குத் துணிவே பிறக்காது; நடுநடுங்கிப் போவேன்.

''அந்தப் பராநகர் மாளிகையைத் துறந்து மனோரமாவை அழைத்துக்கொண்டு வெளியேறினேன். கார்த்திகை மாதம் நிரம்பி ஓடும் ஆற்றின் சீதக்காற்றை உட்கொண்டதும் எனக்கு இருந்த பயம் விலகியது. சில நாட்கள் இன்பத்தில் ஆழ்ந்தேன். நாற்புறமும் உள்ள காட்சிகள் என் கண்ணுக்குக் கவினுடன் தோன்றின. மனோரமா தன் இதயக் கதவை எனக்கு மெல்ல மெல்லத் திறந்துவிட்டாள்.

''கங்கை ஆற்றைக் கடந்து, பல ஆற்றுக் கால்களைக் கடந்து, பத்மா நதிக்கு வந்து சேர்ந்தோம். பெருவெள்ளம் பாய்ந்தோடும் அந்தப் பயங்கரமான ஆறு, பனிக்காலத்தில் புற்றுக்குள் பாம்பு மெலிந்து ஒடுங்கி உறங்குவது போல் காட்சி தந்தது. எதிர்க்கரை வரையில் மனிதச் சந்தடியற்ற, புல்பூடு இல்லாத அதன் மணற்பரப்பு வெறிச்சோடியிருந்தது.

தென்புறமாக மேட்டில் கிராமத்து மாந்தோப்புக்கள், அந்த ஆற்று அரக்கி தங்களை ஒரு நாள் விழுங்கிவிடுவாளோ என்ற விதிர்ப்புடன் நின்றிருந்தன. இந்தப் பத்மா நதி ஒவ்வொரு சமயம் துயில் மயக்கத்தில் திரும்பிப் படுக்கும்பொழுது மேட்டு மட்கரை தும்துமீல் என்று சரிந்து விழும். இந்த வற்றிய ஆற்றுத் திடலில் திரிவதற்கு வாய்ப்பு இருப்பதைக் கண்டு எங்கள் படகை நிறுத்திக் கட்டிவிட்டோம்.

''ஒரு நாள் நாங்கள் இருவரும் உலாவியவண்ணம் வெகு தொலைவு சென்றுவிட்டோம். எல்லையற்ற அந்த மணல் திட்டின்மீது கட்டுக்கு அடங்காத நிலாக்கதிர் படிந்து, தொடுவான் வரையில் பெருகி வழிந்தது. மனிதரே இராத ஓர் ஒள்ளிய உலகில் நாங்கள் இருவர் மட்டுமே சஞ்சரிப்பது போன்ற இன்பச் சிலிர்ப்பு மூண்டது. செந்நிறப் போர்வை மனோரமாவின் அழகிய முகத்தை வலைத்து அவள் உடலை மறைத்துக்கொண் டிருந்தது. நிச்சப்தம் வலுக்க வலுக்க திசை வரம்பிலா ஒரு வெண்மையும் வெற்றுவெளியும் தவிர வேறென்றுமே இல்லை. மனோரமா மெல்லத் தன் தளிர்க் கையை நீட்டி என் கைக்குள் பதித்தாள். என் உடலோடு ஒட்ட, தன் மெய் மனம். இளமை யாவையும் எனக்கே தந்து நின்றாள். இந்தத் தெவிட்டா இன்பம் வீட்டினுள் கிடைக்காதது ஏனோ என்று புளகமுறும் என் நெஞ்சம் வினவியது. இத்தகைய வெட்ட வெளியில் விரிந்த வானத்தின் கீழ், இரு மனித உள்ளமும் உடலும் களிப்பெய்த இடம் போதுமா? வீடில்லை; வாசல் இல்லை; போய்ச் சேர்வதற்குக் குறிக்கோள் எதுவுமில்லை; கை கோத்துக் காதலர் இருவர் எந்நோக்கு மின்றி, நிலவு நிரப்பும் வெற்றுவெளியில் திரும்பிப் பாராமல் போய்க்கொண்டே இருப்பார்கள். இந்தச் சித்திரமே என் மனத்துள் எழுந்தது.

''இப்படிப் போய்க்கொண் டிருக்கையில் ஓர் இடத்துக்கு வந்தோம். மணலை அகழ்ந்து ஆக்கிய ஒரு நீர்நிலைபோல் தோன்றியது. பத்மாவின் நீர்க்கால் ஒதுங்கிச் சென்றதும் மடுவென அது தனியே நின்றது போலும்! அதன் பளிங்குநீரில் நிலவொளி அசையாமல் படிந்திருந்தது. அந்த மடுவின் கரையில் நாங்கள் இருவரும் நின்றோம். என்னவோ நினைத்துக்கொண்டு மனோரமா என் முகத்தையே ஊடுருவி நோக்கினாள். அவள் தலைமீது இருந்த போர்வை முசுக்கு நழுவிக் கீழே புரண்டது. நிலவின் அமுதச் செவ்வி பூசிய அவளை உடல் சேரத் தழுவி வாயிதழில் முத்தம் தந்தேன். அதே சமயம் மனிதர் நடமாடாத அந்த மணல் வெளியைக் குலுக்கிப் போடும், 'யார் அவள்? யார் அவள்? யார் அவள்?' என்ற பெருங்குரல் ஒலித்தது.

''நான் திடுக்குற்றேன். என் இனியாளும் நடுங்கிப் போனாள். ஆனால் மறு கணமே 'இது மனிதக்குரல் அன்று; பேய் ஒலியுமன்று; ஆற்றிடை வதியும் பறவைத் தொகுதியின் குரலே' என்று தெரிந்துகொண்டோம். இந்த நடுநிசியில் திடுமென யாரும் வராத இடத்தில் மனிதர் வருவதைக் கண்டு வெருவி அவை கூச்சலிட்டன போலும்!

''எங்களுக்கும் சற்று அருவருப்பாகத்தான் இருந்தது அந்தத் தனிமை. படகு இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். படுக்கையில் படுத்தேன். மனோரமாவும் அலுத்துப் போய்ப் படுத்ததுமே கண் அயர்ந்துவிட்டாள்.

''அப்போது இருளில் யாரோ ஒருத்தி என்னுடைய கொசுவலைக்கு அருகில் நின்றுகொண்டு அயர்ந்து தூங்கும் மனோரமாவைத் தன் மெலிந்த அன்புக் கோவையான விரலை நீட்டிச் சுட்டி என் காதில் படும்படி மந்தமான குரலில் 'யார் இவள்? யார் இவள்?' என்று கேட்டாள்.

''வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன். வர்த்தியைக் கொளுத்தினேன். அந்த நிழலுருவம் சட்டென உணர்ந்து என் கொசுவலையை உலுக்கி என் படகை அசைத்து வேர்த்த என் உடலில் ஓடும் இரத்தம் உறைந்துபோகும்படி ஹா ஹா என்ற விகாரச் சிரிப்புடன் இருளோடு இருளாக மறைந்தது. அந்தப் பேய்ச் சிரிப்பு பத்மாவின் அக்கரைக்கு விரைந்தது; அதற்கு அப்பால் துயிலில் ஆழ்ந்த ஊர்களைக் கடந்து எத்தனையோ காடுவெளி எல்லாம் ஒலிக்க, மெல்ல மெல்ல அடங்கி மறைந்தது. அதன் ஓசை மெல்லக் குறைந்தாலும், என் மூளைக்குள் திகழும் ஓர் பரந்த வெளியின் எல்லையை விட்டு அந்தக் குரல் மறையவே இல்லை. என்னை என்னவோ செய்து விட்டது. விளக்கை அவிக்காது போனால் தூங்க முடியாது போல் தோன்றியது. விளக்கை அணைத்து நான் படுத்த பொழுது, மீண்டும் அதே அடைத்த தொண்டையில், 'யார் அவள்? யார் அவள்?' என்று கேட்பது என் செவியில் விழுந்தது.

''அந்த நள்ளிரவில், என்னுடைய படகு அறைக்குள் இருந்த வட்ட வடிவமான கடிகாரம் திடுமென உயிருடைய பொருள் போல் தன் இரு கைகளை மனோரமாவின் பக்கம் காட்டி, 'ஷெல்ப்' மீது விசித்திரத் தாளம் கொட்டி, 'யார் அவள்? யார் அவள்?' என்று கேட்டுக்கொண்டே இருந்தது.''

இதைக் கூறும்போது தட்சிணாசரண் பாபுவின் முகம் பேயடித்ததுபோல் வெளுத்து வந்தது; அவருடைய குரலும் அடைத்து வந்தது. அவரைத் தொட்டு நான், ''தண்ணீர் பருகுங்கள்'' என்றேன். அதே சமயம் புரையில் சுடர்விட்ட

மண்ணெண்ணெய் விளக்கும் பட்டென அணைந்து போயிற்று. வெளியே எட்டிப் பார்த்தபோது கிழக்கு வெளுத்து வந்தது. காக்கையின் குரல் கேட்டது. கருங்குருவிகள் ஒலித்தன. என் வீட்டுக்கு முன்னால் செல்லும் பாதையில், எருமைக்கடாப் பூட்டிய வண்டி ஒன்று கீங் கொய்ங்கென்று இருசு தேயும் ஒலியுடன் சென்றது. தட்சிணாசரண் பாபுவின் முகத்தில் இருந்த அந்தப் பேய்க்களையும் மாறியது. பயத்தின் குறி துளியேனும் அதில் இல்லை. இரவு நேரத்தில் தோன்றும் ஒரு மயக்கினால், கற்பனையில் கண்ட பயங்கர அநுபவத்தைத் தாம் இப்படி வெளியிட்டதற்காக அவர் வெட்கப்பட்டது இவ்வளவு அவ்வளவன்று; என்மீது சற்றுக் கோபங்கூட. போய் வருகிறேன் என்று மரியாதைக்குக்கூடச் சொல்லாமல் எழுந்து விரைவாகப் போய்விட்டார்.

அன்று இரவே, பாதி ராத்திரி இருக்கும்; என் வாசற் கதவைத் தட்டி அவர் கூப்பிட்டார்: ''டாக்டர், டாக்டர்!''

பாட்டனார்

நயன்ஜோரின் ஜமீன்தார்கள் ஒரு காலத்தில் செல்வச் சீமான்கள் என்ற புகழ் வாய்ந்தவர்கள். அக்காலத்துக் கனவான்களின் நாகரிகப் பகட்டு, சாதாரண வகையைச் சேர்ந்ததன்று. ராஜா, ராய்பகதூர் என்ற பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு, இப்போதெல்லாம் பெரியவிருந்து, நாட்டியக் கச்சேரி, குதிரைப்பந்தயம், துரைமாரின் சிபாரிசு இவற்றிற்குத் தண்ணீர்பட்டபாடாகப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்திலோ பொது மக்களிடமிருந்து 'பாபு' என்ற பட்டம் பெறுவதற்குக் கடுந்தவம் புரிந்தால்தான் லட்சியம் கைகூடும்.

நம்முடைய நயன்ஜோர் பாபுக்கள் கரையைக் கிழித்துவிட்டு டாக்கா மஸ்லினையே அணிவார்கள். காரணம், அதன் சரிகைக் கரை அவர்களுடைய மென்மையான நாகரிகப் பண்பை உறுத்தும் என்பதேயாம். லட்சக்கணக்கில் பணம் கொட்டித் தாம் வளர்க்கும் பூனைக் குட்டிக்குத் திருமண விழா நடத்துவார்கள். ஒரு விழாவை முன்னிட்டு இரவைப் பகலாக்க உறுதி கொண்டு எண்ணற்ற லஸ்தர் விளக்குகளை ஏற்றிக் கதிரவனின் பொன்னிறத்தைப் போலத் தோன்ற அசல் வெள்ளி சரிகையை மேலேயிருந்து பொழியச் செய்தனராம். இப்படிச் சொல்லக் கேள்வி.

இதிலிருந்து விளங்குவதென்ன? அக்காலத்துப் பாபுக்களின் நாகரிகப் பகட்டு வமிசக்கிரமமாய் நிலைத்திருப்பதில்லை. பல திரியிட்ட விளக்கு விரைவிலேயே எரிந்து போய்ப் புகையுடன் அவிந்துதான் போகும்.

நம்முடைய கைலாச சந்திர ராய்சௌதுரி இத்தகைய கீர்த்தி வாய்ந்த நயன்ஜோரின் அணைந்து போன சுடர்களில் ஒருவர். இவர் பிறந்த சமயம் அக்குடும்ப விளக்கில் எண்ணெய் குறைந்து அடிமட்டத்தில் இருந்தது. அவருடைய தந்தையின் மரணத்திற்குப் பிறகு நயன்ஜோர் பாபுக்களின் செல்வச் செருக்கு இரண்டொரு சிராத்த சாந்தி விழாக்களுடன் கடைசியாகப் பிரகாசமாக எரிந்து அணைந்தே போயிற்று. சொத்து உடைமை யாவும் கடனில் மூழ்கிப்போயின. எஞ்சி நின்றதைக் கொண்டு முன்னோர்கள் சம்பாதித்த புகழை நிலைநிறுத்துவது எளிதே அன்று.

கல்கத்தாவில் நாங்கள் இவர்களுடைய அண்டை வீட்டுக் காரர்கள். எங்கள் வரலாறு முற்றும், இவர்களுடைய வழிக்கு மாறுனது. என் தந்தை தம் முயற்சியாலேயே செல்வம் திரட்டினர். அவர் கணுக்காலுக்குக் கீழே புரளப்புரள வேட்டி கட்டவே மாட்டார். கணக்கில் சின்னக் காசுகூடத் தப்பக் கூடாது. 'பாபு' என்று பெயர் எடுக்கவும் அவருக்கு விருப்பம் இல்லை. அவருடைய ஒரே மகனுன நான், அவருக்கு மிகவும் கடமைப்பட்டவனுவேன். நான் நன்முகப் படித்துக் கௌரவ மாக வாழ்வதற்கான பணமும் வேண்டிய அளவு ஈட்டி யுள்ளேன். பெருமிதத்திற்குரியதாய் இதை நான் மதிக்கிறேன். தலைமுறை தலைமுறையாக வரும் பொக்கிஷத்தைக் காலி செய்து நாகரிக ஒளியில் மிக்கதான ஒரு வரலாற்றைவிட, இரும்புப் பேழையில் குவிந்துவரும் பிதுரார்ஜிதமான ரொக்கப் பணம் என் வரைக்கும் மதிப்புள்ளதாகவே தோன்றியது.

இந்தக் காரணத்தினுலேயே, கைலாச பாபு தம் பழைய வமிச கௌரவமென்ற திவாலாகிவிட்ட நிதியத்தின் பேரில் நீளச் 'செக்' கிழிக்கும்போது எனக்கு எரிச்சலாக இருக்கும். என் தந்தை தம் கையாலேயே பணம் சேர்த்திருப்பதால் இப்படிக் கைலாச பாபு எங்களைச் சற்றுத் தாழ்வாக நினைத் தார் என்றே எனக்குத் தோன்றும்; கோபம் வரும்; இதற்கு நாங்கள்தாம் கிடைத்தோமா? தம் வாழ்வெல்லாம் எத் தனையோ இன்னல்களைத் தாங்கி, எத்தனையோ பசப்புப் பேச்சுகளுக்குக் காது கொடுக்காமல், உலகத்தவர் தம்மைப் புகழ்வதற்கு ஏங்கி இராமல், சலிப்பின்றி, கண்ணுங் கருத்து மாக நுண்ணறிவைக் கொண்டு, கோபுரம் போலப் பொன்னும் வெள்ளியும் குவித்தார் என் தந்தை. அத்தகையவர் வேட்டியைக் கணுக்காலுக்குக் கீழே உடுத்தாததனுல் மட்ட ரகமான ஆளாகிவிடுவாரா என்ன?

அப்போது இள வயது எனக்கு. இதுபோல் நான் விவா திப்பேன், கோபம் கொள்வேன். இப்போது வயதாகிவிட்ட தால், 'அப்படி நினைத்தால்தான் என்ன? குறைந்து போய் விட மாட்டோம்' என்று தோன்றுகிறது. நமக்கோ ஏராள மான பணம் இருக்கிறது. எதற்காகக் குறைப்படவேண்டும்? யாருக்கு ஒன்றுமே இல்லையோ, அவர்கள் மமதையால் இறு மாந்திருப்பின், அதனுல் லவலேசமும் நஷ்டமில்லை எனக்கு. அந்த ஆறுதலாவது அவர்கள் அடையட்டுமே!

என்னைத் தவிர வேறு எவரும் கைலாச பாபுவிடம் கோபம் கொள்வதில்லை என்பது தெரிந்தது. காரணம், அவரைப் போன்ற ஒரு சாதுப் பிரகிருதியை இவ்வுலகிலேயே காண்பதரிது. தம் அண்டை அயலாருடன் இன்ப துன்பத்தில்,

காரியம் கடமைகளில் அவருக்கு முழுத்தொடர்பு உண்டு. வாலிபர் தொட்டு வயோதிகர் வரை எவரிடமும் அவர் சிரித்த முகமாகவே அன்புகனிய அளவளாவுவார். யார் எங்கிருப் பினும் அவர்களுடைய நலன்பற்றி விசாரிக்காமலே இருக்க மாட்டார். இதனால் யாரைச் சந்திக்க நேரிட்டாலும் அவர் கேள்வி மாலையைத் தொடுப்பார்: 'நலந்தானே?—சசி எப்படி இருக்கிறான்? - பெரியவருக்கு உடம்பு சற்றுக் குணந்தானே? பையன் மதுருக்குக் காய்ச்சலென்று கேள்விப்பட்டேன்; இப்போது தேவலைதானே? ஹரிசரண பாபுவைப் பார்த்து நிரம்ப நாளாகிறது. சௌக்கியமாகத்தானே இருக்கிறார்? உங்க ளுடைய ராகாலனைப் பற்றிய தகவல் என்ன? வீட்டுப் பெண்டு கள் எல்லாம் உடல்நலத்துடன் இருக்கின்றனரா?'—இப்படிக் கேள்விகள் கிளம்பும்.

ஆள் மிகத் துரய - உடுப்பிலும், உள்ளத்திலும். அப்படி அதிகமான துணி மணிகள் இல்லை. சொக்காய், மேர்ஜாய் (நீள அங்கி) சால்வை, இன்னும் படுக்கைமேல் விரிக்கும் பழைய துப்பட்டி, தலையணையின் உறை, சவுக்கம் யாவையும் தம் கையாலேயே வெயிலில் போட்டு உலர்த்தி, உதறி ஒழுங்காக மடித்துக் கயிற்றுக் கோடியில் தொங்கவிடுவார். அவரைப் பார்க்கும்போதெல்லாம் ஒழுங்காக உடை அணிந்து எங்கோ புறப்படுவதற்குத் தயாராக இருப்பவர்போலவே தோன்றும். அவருக்குள்ளவை அற்பம் எனினும் அவற்றுல் வீடு நிரம் பியது போல் இருக்கும். இன்னும் அவருக்கு ஏராளமாக இருப்பது போலவே காட்டும்.

இவ்வகையில் கைலாச பாபு நம்மைப்போல் மண்ணில் பிறந்தவராயினும், பேச்சில் குலகர்வம் தொனிக்கும். அது தம் முன்னோருக்கு அவர் செய்யும் கடமைபோலும்! எல்லோரும் அவருடன் சேர்ந்து அதை ஆமோதிக்கவேண்டும்; சந்தோஷப் படவும் வேண்டும்.

அந்தத் தெருவிலுள்ளவர் அவரை 'டாகுர்தா' (தாத்தா) என்றே அழைப்பர். அவருடைய வீட்டிற்கு வருவதும் போவதுமாய் இருப்பர். இல்லாத கொடுமையினால், வீண் கௌரவத்துக்குப் பாடுபட்டு, அவர் தாம் உபயோகிக்கும் புகையிலைக்காகக் காசு செலவு செய்யப்போகிறாரே என்று அவரைக் காண வருவோர் இரண்டொரு சேர் இலையை வாங்கி வந்து, 'டாகுர்தா, இதை உபயோகித்துப் பாருங்கள். உயர்ந்த கயாப் புகையிலை கிடைத்தது' என்பார்கள்.

டாகுர்தா அதைத் தம் ஹுக்காவில் திணித்து இரண்டு இழுப்பு இழுத்ததும், 'அற்புதம், பேஷான சரக்கு!' என்ற தும், சேர் அறுபது ரூபாய் மதிப்புள்ள புகையிலையையே

தாம் உபயோகிக்கும் கட்டுக்கதையை அவிழ்த்துவிடுவார், ''யாருக்காவது அதைப் பரீட்சை செய்யவேண்டுமென்று ஆசை இருந்தால் சொல்லுங்கள்'' என்ற அளவிற்கு வந்து விடுவார்.

எல்லோருக்கும் தெரியும், அப்படி யாராவது என்னதான் பார்த்துவிடுவதென்று கேட்பதாயிருந்தால் பெட்டிச்சாவியை எங்கோ வைத்துவிட்டவர் போல் தேடுவார். ''வேலைக்காரன் கணேசன் எதைத்தான் சரியாக வைக்கிறான்?'' என்று அவனைத் திட்டுவார் பாவம்! அந்தப் பழைய வேலையாள் அந்தப் பழியை ஏற்றுக்கொள்வான். அப்போது எல்லோரும் ஒரே குரலாய், ''இப்போது எதற்கு, தாத்தா? அந்தப் புகையிலை எங்களைப் போன்றவருக்கல்ல; இதுவே நன்றாக இருக்கிறது'' என்று மழுப்பிவிடுவார்கள்.

இதைக் கேட்டு டாகுர்தாவும் குறுக்கே பேசாமல், மெல்லச் சிரித்துவிடுவார். எல்லோரும் விடை பெற்றுக் கிளம்பும்பொழுது, ''அது சரிதான், என்றைக்கு நீங்கள் எல்லாம் நம் வீட்டில் விருந்து சாப்பிட வரப்போகிறீர்கள்?'' என்று சொல்லாமல் இருக்கவே மாட்டார். அப்போது எல்லோரும் சேர்ந்து, ''அதற்கென்ன, ஒருநாள் குறிப்பிடு வோம்'' என்பார்கள்.

டாகுர்தா, ''அப்படியே, இரண்டு தூற்றல் விழட்டும். பூமி குளிரட்டும். இந்தக் கோடை இறுக்கத்தில் விருந்து வைப்பது அவ்வளவு உசிதமும் அல்ல'' என்பார்.

மழை பெய்து வெம்மை அடங்கிய தினங்களில் இந்த விருந்து நடத்துவதைக் குறித்து யாருமே டாகுர்தாவுக்கு நினைவுறுத்த மாட்டார்கள். அப்படி அந்தப் பேச்சு எழுந்தா லும், ''இந்த மழையெல்லாம் போகட்டும்; அப்புறம் வைத் துக்கொண்டால் போகிறது'' என்பார்கள். அவர் இருக்கும் வீடு மிகவும் சிறியது; வசிப்பதற்குத் தாராளமாக இல்லை என்று அவருடைய நண்பர்கள் அவர் முன்பே ஒப்புக்கொள்வார்கள். கல்கத்தாவில் அவருடைய அந்தஸ்துக்கு ஏற்ற வீடு எவ்வளவு விலை கொடுத்தாலும் அகப்படவில்லை என்று அவர் சொல்வதை எவரும் சந்தேகிக்கவில்லை. ''அது போகட்டும்; உங்கள் பக்கத்திலேயே இருப்பதில்தான் எனக்குத் தெம்பு; நயன் ஜோரின் கடல்போல் அவ்வளவு பெரிய வீடு இருக்கிறது. அங்கே இருக்க மனம் ஒப்பவில்லையே!'' என்பார்.

தம் வறுமைநிலை எல்லோருக்கும் தெரியும் என்று டாகுர்தாவே உணர்வாரென்பது எனது எண்ணம். பழைய நயன்ஜோர் ஆடம்பரங்கள் இப்போது உள்ளனவாகப் பாவித்து எல்லோரும் அதை நம்பவேண்டும் என்ற எண்ணம்

அவருக்கு உண்டு. இரு சாராரும் இதன் உள்மருமம் தெரிந்தாலும் பரஸ்பர நட்புணர்வினுல் இதையெல்லாம் நம்புபவர் போல் நடிப்பார்கள்.

ஆனுல் எனக்கு எரிச்சலையே தந்தது. சிறிய வயதிலேயே பிறர் வீண் அகம்பாவம் கொள்வதைக் குலைக்கவேண்டுமென்று எனக்குப் பதைபதைப்பு உண்டாகும். ஆயிரம் பெரிய தவறுகளோடு ஒப்புநோக்கின் இதுபோன்ற மடமையை என்னுல் சகிக்க முடியவில்லை. கைலாச பாபு அப்படி முட்டாளல்ல. அவரிடம் யோசனைகள் கேட்க விரும்பியே பலர் வருவார்கள். ஆனுல் இந்த நயன்ஜோரின் பெருமையைப் பேசும்போது அவருடைய அறிவு வரம்பை மீறிவிடுகிறது. எல்லோரும் அவர்மீது அன்பினுல், அவர் சொல்வதை அப்படியே நம்புவதுபோல் தலையாட்டுவதைப் படம் பிடித்து அவர் மிகைப்படுத்தியே எதையும் கூறிவந்தார். அப்படி யாராவது தமாஷுக்கு அவருடைய அகந்தைக்குப் பூட்டுப் போட, நயன்ஜோரின் புகழ்மிக்க சரிதையில் ஏதாவது குற்றம் குறை இருப்பதைச் சுட்டிக் காட்டினுல் அவர் வாயை மூடிக்கொண்டு கேட்பார். இப்படி அந்த விஷயத்தில் அவநம்பிக்கை உள்ளவர் இருப்பாரென்று அவர் கனவிலும் கண்டிருக்க மாட்டார்.

இந்தக் கிழம் ஒரு பொய்யான கோட்டையை எழுப்பி அதற்குள் வாழ்கிறது. இது தகர்க்க முடியாததென்று நினைக்கிறது. இரண்டே குண்டு போட்டு அதைப் பறக்கடிக்கலாமென்றும் எனக்கு ஆத்திரம் வரும். ஒரு மரக்கிளையில் வாகாக ஒரு பறவை அமர்ந்திருப்பதைக் கண்டால் அதைச் சுட்டு வீழ்த்தவேண்டும் என்றுதான் வேட்டுவனுக்குத் தோன்றும். மலைச்சரிவில், ஒரு குண்டுக்கல் இருந்தால் அதைக் கழியால் தள்ளி உருட்ட வேண்டுமென்று எந்தச் சிறுவனுக்கும் தோன்றும். இப்படி ஒருவிதக் கொடிய விருப்பம் யாருக்குமே எழுவது உண்டு, சில வேலைகளில். கைலாச பாபு அளக்கும் பொய் குற்றமற்றதாயினும், அது உறுதியான பீடத்தில் நிற்கவில்லை. துப்பாக்கி முனைக்கு எதிரே ஒருவன் மார்பைக் காட்டி நடனம் புரிந்தால் அவனைச் சுட்டுக் கொல்லத்தான் கையில் தினவு எடுக்கும். எனக்குள்ள அலட்சியத்தினுலும் எல்லோருக்கும் பிடித்த வழியில் நான் சென்றதாலும், இப்படி ஒரு காரியத்தைச் செய்யாமல் இருந்தேன்.

என்னுடைய இந்தப் பழைய மனப்போக்கை ஆராயப் புகின், கைலாச பாபுமீது எனக்குள்ள மறைமுகமான இந்த வெறுப்புக்கு வேறொரு காரணமும் இருந்தது. இதை இங்குச் சற்று விரிவாகக் கூறவேண்டும்.

நான் பெரியவீட்டுப் பிள்ளையாகி எம்.ஏ., பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றேன். எனக்கு இளமை வயதானலும், எந்த விதமான கெட்ட பழக்கமோ, சகவாசமோ கிடையாது. என்னுடைய தந்தை இறந்த பின்னர் நான் என்னுடைய எஜமானனுகியும், எனது குணத்தில் யாதொரு மாறுதலும் தென்படவில்லை. என் தோற்றத்தைக் குறித்து நானே புகழ்ந்துகொள்வது நன்முக இராது. என் முகம் வசீகரக் களையுடன் இருக்குமென்றுல் அது பொய்யன்று.

அதனுலேயே, வங்க நாட்டில் பெண்களுக்கு வரன் வேட்டையாடும் சந்தையில் எனக்குச் சற்றுக் கிராக்கி. எனக்குள்ள மதிப்பை நான் முழுவதும் பெறுவதென்ற உறுதி பூண்டிருக்கிறேன். பெரிய பணக்காரனின் ஒரே மகளாயும், அதிரூபவதியுமான பெண்ணே என்னுடைய இலக்கு.

பத்தாயிரத்துக்குமேல் வரதட்சிணை கொடுப்பதாகக்கூட எனக்குப் பல இடங்களிலிருந்து பெண்ணைப் பெற்றவர்கள் வந்தனர். நான் சிறிதும் அசைந்து கொடுக்காமல், அவர்களுக் குள்ள யோக்கியதையைத் தராசில் இடுவதுபோல் அளந்தேன். ஓர் இடமாவது என் மதிப்பில் தேறவில்லை. கடைசியில் கவி பவபூதியைப்போல் நானும், 'எனக்கு ஏற்றவள் பிறந்து வர இன்னும் காலமாகும்போலிருக்கிறது, இவ்வியனுலகிலே' என்று திடப்படுத்திக்கொண்டேன். ஆனுல், இக்காலத்தில், அதுவும் வங்க நாட்டில் எனது லட்சியப் பொருள் பிறவி எடுக்குமென்பது சந்தேகந்தான்.

பெண்ணைப் பெற்றவர்கள் என்னை வானளாவத் துதிப் பதும், பலவிதமாக வழிபடுவதும் ஓயவில்லை. பெண் எனக்குப் பிடித்தவளோ இல்லையோ, இவர்கள் இப்படி வழிபடுவது எனக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. நல்ல மாதிரியான பிள்ளை என்ற எண்ணத்தில் அவர்கள் என்னைச்சுற்றி வட்ட மிட்டனர். தெய்வம் மனம் குளிர்ந்து வரன் தருகிறதோ இல்லையோ, அதற்குரிய படையலை அதற்குப் போடாது போனுல் அது கோபித்துக்கொண்டு விடுமென்று சாத்திரங் களில் படித்திருக்கிறேம். இப்படி நியாயமாக எனக்கு இவர் கள் இடும் பூஜை, ஒரு தெய்வீக பாவத்தை என் உள்ளத்தில் புகுத்திவிட்டது.

முன்னரே கூறியுள்ளேன், டாகுர்தாவுக்கு ஒரு பேத்தி இருந்தாள் என்று. அவளை நான் பலமுறை பார்த்திருக் கிறேன்; அப்படிப் பெரிய கட்டழகி என்ற மருள் எனக்கு ஏற்படவில்லை. அதனுல் அவளை மணந்துகொள்ள வேண்டு மென்ற எண்ணமும் எனக்கு எழவே இல்லை. கைலாச பாபு யார் மூலமாகவோ, அல்லது தாமே நேராகவோ இந்தப்

பேத்தியை என்னிடம் தள்ளிவிடும் எண்ணத்துடன் எனக்கு ஏதாவது தூபம் போடுவதாக இருந்தால் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தேன்; காரணம், நான் நல்லமாதிரியான பிள்ளையல்லவா? ஆனால் நான் எதிர் பார்த்தபடி அவர் அப்படி எதுவும் செய்யவில்லை.

என் நண்பர் ஒருவரிடம் அவர் சொன்னதாகத் தெரிந்தது: நயன்ஜோர் பாபுக்கள் ஒருகாலும் வலிய வந்து தம் வீட்டுப் பெண்களை மணந்துகொள்ளுமாறு எவரையும் கெஞ்ச மாட்டார்களாம்! வரன் கிடைக்காமல் போனால் கடைசி வரையில் கன்னிப் பெண்ணைய் இருப்பார்களே தவிரத் தங்கள் குல வழக்கத்தை மீறிச் செல்லவே மாட்டார்களாம்!

இதைக் கேட்டதும் எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது. இற்றச் சினம் வெகு நாட்களாக என்னுள் புகைந்துகொண் டிருந்தது. நல்ல பிள்ளை என்றதால் நான் இதை அடக்கிக் கொண்டு கம்மென்றிருந்தேன்.

இடியுடன் மின்னல் கலந்து இருப்பதுபோல், எனக்குள்ள சினத்துடன் ஒருவகை ஆவலும் இணைந்திருந்தது. அந்தக் கிழவரை அழ வைப்பது என் ஒருவனால் முடியாத காரியம். ஆனால், ஒரு நாள் எனக்கு ஒரு விந்தையான யோசனை மூளையில் முளைத்தது. அதைச் செய்துகாட்ட எழுந்த நசையை என்னால் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

முன்பே கூறியுள்ளேன், இந்தக் கிழவரை மகிழ்விக்கப் பலர் பல வகையான பொய்க் கதைகளைத் திரிப்பார்கள் என்று. அதே தெருவில் இருந்த, ஓய்வுபெற்றுப் பென்ஷன் வாங்கும் டெபுடி மாஜிஸ்டிரேட் ஒருவர், டாகுர்தாவைத் தூக்கிவிடச் சொல்லுவார்: ''டாகுர்தா, போனதடவை கவர்னரைச் சந்தித்தபோது நயன்ஜோர் பாபுக்களை எப்படிப் புகழ்ந்தார் தெரியுமோ? கவர்னர் துரை, 'வங்காளத்தில் இரண்டே வமிசத்தவரே புகழ் எய்தினர். ஒருவர் வர்த்தமான் ராஜா, மற்றவர் இந்த நயன்ஜோர் பாபு' என்று பெருமை யாகச் சொன்னார் கவர்னர்!''

டாகுர்தாவுக்கு ஒரே ஆனந்தம், இதைக் கேட்டு. இந்த டெபுடி மாஜிஸ்டிரேட்டைக் காணும்போதெல்லாம், மற்ற க்ஷேமச் செய்திகளுடன், 'கவர்னர் பிரபு எப்படி இருக்கிறார்? அவருடைய 'மதாம்' சௌக்கியந்தானா? அவருடைய குழந்தைகள் நன்றாக இருக்கின்றனரா?' என்று விசாரிக்கா மல் இருக்கமாட்டார். கவர்னரை ஒரு நாள் பேட்டி கண்டு விட்டு வரவேண்டுமென்ற தம் விருப்பத்தையும் டாகுர்தா வெளியிட்டார். ஆனால் நம் டெபுடி மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரியும், நம் நயன்ஜோர் டாகுர்தா போய்ப் பேட்டி

காண்பதற்குள் அந்தக் கவர்னர் மாற்றலாகி வேறு கவர்னர் கூட வந்துவிடுவாரென்று.

ஒரு நாள் விடிகாலையில் நான் கைலாச பாபுவிடம் சென்று அவரை மறைவாக அழைத்துக் காதோடு சொன் னேன்: ''டாகுர்தா, நேற்று லெப்டினென்ட் கவர்னரைப் பேட்டி கண்டேன். அவர் நயன்ஜோர் பாபுக்களின் பேச்சை எடுக்கையில், துரை அவர்களே, கைலாச பாபு கல்கத்தாவில் தான் இருக்கிறார் என்றேன். அப்போது கவர்னர் வருத்தப் பட்டார், நீங்கள் வந்து அவரைப் பார்க்காதது குறித்து. என்னிடம், இன்று மாலை வேளையில் தாம் யாருக்கும் தெரியாமல் உங்களைப் பார்க்க வரப்போவதாகவும் சொன்னார்.''

வேறு யாராயிருந்தாலும் இது நடக்கிற விஷயமன்றெனத் தெரிந்துகொண் டிருப்பார்கள். வேறு ஒருவரைக் குறித்து இப்படி யாராவது பேசியிருந்தால், அதைக் கைலாச பாபுவும் நம்பியே இருக்கமாட்டார். தம்மைப்பற்றி இருக்கவே அவர் எல்லையில்லாத மகிழ்ச்சியும் பரபரப்பும் கொண்டார். கவர்னர் வந்தால் எந்த இடத்தில் உட்காரச் சொல்வது, எப்படி வரவேற்பது, நயன்ஜோர் குடும்ப கௌரவத்திற்கு ஏற்றபடி அவருக்கு எந்த வகையில் உபசரணை செய்வது, இவையெல்லாம் குறித்து அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. போதாக்குறைக்கு அவருக்கு ஆங்கிலம் பேச வராது - எப்படி இந்தக் கவர்னர் துரையுடன் உரையாடுவது? இது அவருக்குப் பெரிய பிரச்னை யாகிவிட்டது.

''அதற்காகக் கவலைப்பட வேண்டாம். அவருடன் இரு மொழி பேசுபவர் ஒருவர் வருவார்; ஆனால் கவர்னர் துரை யின் விருப்பம் என்னவோ, உம்முடன் தனியாக அளவளாவ வேண்டுமென்பதுதான்'' என்றேன் நான்.

பகற்பொழுது அந்தத் தெருவிலுள்ளவர்களுள் பெரும் பாலோர் தத்தம் அலுவல்களைக் கவனிக்க வெளியே சென்ற தும், மற்றவர்கள் கதவை மூடிக்கொண்டு பகல் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த சமயம், கைலாச பாபுவின் வீட்டு வாயில்முன் ஒரு கோச்சு வண்டி வந்து நின்றது. பில்லை அணிந்த டவாலி ஒருவன், கவர்னர் துரை வந்திருக்கிறார் என்று அறிவித்தான். டாகுர்தா முன் எச்சரிக்கையுடன் தம் பழங்கால வமிச வழக்கப்படி துல்லிய வெளுப்பு உடையும், பாகையும் அணிந்து காத்துக்கொண் டிருந்தார். தம் பழைய வேலை யாளான கணேசனுக்கும் தம் வேஷ்டி அங்கவஸ்திரத்தைக் கொடுத்து உடுக்கச் செய்து ஒழுங்காக நிற்கச் சொன்னார். கவர்னர் வந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன்,

கைகால் நடுங்க இரைக்க இரைக்க ஓடிவந்தார் பாவம்! தள்ளாடும் தம் உடலைப் பன்முறை வளைத்து வணக்கம் செலுத்திக்கொண்டே, ஆங்கில உடை அணிந்து கவர்னராக நடிக்கும் என் நண்பனை உள்ளே அழைத்துச் சென்றார்.

உட்புறம் நாற்காலிமீது விலைமதிப்புள்ள தம் பட்டுச் சால்வையைப் பிரித்து வைத்திருந்தார். அதன்மீது இந்த நடிப்புக் கவர்னரை அமரச் செய்து உர்து மொழியில் அடக்கம் தொனிக்கும் நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். தம் காணிக்கையாக ஒரு தங்கத் தட்டில் அவர் போற்றி இத்தனை நாள் காத்துவந்த 'ஆஸ்ரபி' (மொகல் பொற்காசு), காசு மாலையை வைத்து நீட்டினர். பக்கத்திலேயே கணேசன் பன்னீர்ச் செம்பு, அத்தர் குப்பியுடன் நின்றான்.

நயன்ஜோரில் இப்படிக் கவர்னர் துரையவர்கள் நம் பாத தூளியை வைத்திருந்தால் எந்தமாதிரியான வரவேற்பு உபசாரம் நடந்திருக்கும்! இப்போது கல்கத்தாவில் சில நாட்களாகத் தங்கியிருப்பதால் அவ்வளவு தம்மால் செய்ய முடியவில்லையே என்று நீருக்கு வெளியே மீன் துடிப்பதுபோல் தாம் துடிப்பதாயும் சொன்னர்.

என்னுடைய நண்பன் தலையில் நீள 'ஹாட்'டுடன் தலையை மட்டும் அசைத்துக்கொண்டே இருந்தான். ஆங்கில வழக்கப்படி இதுபோன்ற சமயத்தில் தலையில் 'ஹாட்' இருக்கக் கூடாது. தன் ரகசியம் வெளிப்பட்டுவிடப் போகிறதே யென்று என் நண்பன் இந்த 'ஹாட்'டை எடுக்கவே இல்லை தலையிலிருந்து. கைலாச பாபு, செருக்கு மிகுந்த அவருடைய வேலையாள் இருவரைத் தவிர மற்றவர் இந்த வேஷதாரியான வங்காளியைப் புரிந்துகொண்டிருப்பவர்கள். பத்துநிமிட நேரம் கழுத்தை அசைத்து என் நண்பன் எழுந்திருந்தான். முன் ஏற்பாட்டின்படி, கவர்னரின் சிப்பந்திகளாக நடிக்கவந்த ஆட்கள் 'ஆஸ்ரபி' காசு உள்ள தங்கத் தட்டு, நாற்காலி மீதிருந்த பட்டுப் போர்வை, வேலையாள் கையிலிருந்த பன்னீர்ச் செம்பு, அத்தர் குப்பி உள்படச் சேகரித்துக் கொண்டு தோச்சு வண்டியில் கொண்டுபோய் வைத்தனர். இது கவர்னர் வழக்கம் போலுமென்று அப்பாவியான டாகுர்தா நினைத்துக்கொண்டார். நான் பக்கத்து அறையில் மறைந்துகொண்டு இவற்றை யெல்லாம் கவனித்தேன். எனக்கு வந்த சிரிப்பை அடக்கப் பார்த்து என் விலாவே முறிந்து விடும்போல் ஆயிற்று.

முடியாமல் போகவே, சட்டென்று வேறூர் அறைக்குள் அடைக்கலம் புகுந்தேன். அங்கே எனக்குள் பொங்கிவரும் சிரிப்பை வெளியே கொட்டியபோது ஓர் இளம் பெண்

படுக்கையில் குப்புறக் கிடந்தபடி விக்கி விக்கி அழுதுகொண் டிருப்பதைக் கண்ணுற்றேன்.

திடுமென நான் அறைக்குள் நுழைந்து சிரிப்பதைப் பார்த்து அவள் படுக்கையிலிருந்து எழுந்தாள். குரல் தழு தழுக்க, ரோஷம் சீறி வர, என்மீது இரு பெரிய விழிகளைக் கொண்டு மின்னலைப் பாய்ச்சி, ''என்னுடைய தாத்தாவை இப்படியெல்லாம் ஏன் ஆட்டி அழவைத்து வேடிக்கை பார்க்கிறீர்கள்? அவரை ஏமாற்ற நீங்கள் ஏன் இங்கு வந்தீர் கள்?'' என்று கூறுவதற்குள் அவளுக்கு மேற்கொண்டு வார்த்தையே எழவில்லை வாயில். முகத்தை முன்தானையால் மறைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

என்னுடைய சிரிப்பெல்லாம் எங்கே மறைந்துவிட்டதோ! நான் வேடிக்கையாகச் செய்த இந்தக் காரியம் இப்படி ஒரு மெல்லிய மனத்தை நோவச் செய்யும் என்பதை உணரவே இல்லை நான். எனக்கே என் வேலை மிக இழிவாகத் தோற் றியது. வெட்கமும் இரக்கமும் சேர உதைத்துத் தள்ளப் பட்ட நாயைப்போல் நான் அறையைவிட்டு வெளியே சென்றேன். அந்தக் கிழவர் எனக்கு ஒரு தீங்கும் செய்ய வில்லை. அவருடைய பிகுவினாலும் குலச் செருக்கினாலும், பிறர் மனம் புண்படுவதற்கான அவசியமே எழவில்லை, என்னுடைய அகந்தை ஏனோ இப்படி ஒரு கொடிய உருவம் கொண்டது.

இன்னொரு விஷயமும் என் கண்ணை நன்றாகத் திறந்து விட்டது. இதுவரை குஸுமாவை (டாகுர்தாவின் பேத்தி) வரனாக வரப்போகும் ஒருவனுடைய கிருபைக்குக் காத்திருக்க வேண்டிய பொருளாகவே நினைத்தேன். இன்றோ வேறு விதமாக நோக்குகிறேன் அவளை. வீட்டு மூலையில் ஒடுங்கிக் கிடக்கும் இந்தக் கன்யாரத்தினத்திற்கும் ஒரு மனித உள்ளம் இருப்பதை உணர்ந்தேன். இன்ப துன்பம், விருப்பு வெறுப்பு யாவும் கலந்த ஓர் இதயம் இதுகாறும் யார் கண்ணிலும் படாமல், நிலையற்ற தன் எதிர்காலத்தை நம்பிப் படர்கிறது. இந்த உள்ளத்தைத் தனதாக்கிக்கொள்ளும் ஆள், வெறும் பணத்தையோ, கண் மூக்கு இவற்றின் அழகையோ பார்த்தா அவளை மதிப்பிடுவான்?

எனக்கு இரவெல்லாம் தூக்கமே இல்லை. மறு நாளே கிழவரிடமிருந்து கவர்ந்து சென்ற பொருள்களை எடுத்துவந்து திருடனைப்போல் மெல்ல அவர் வீட்டினுள் நுழைந்தேன். இரகசியமாக இவற்றையெல்லாம் வேலையாளிடம் சேர்ப்பித்து விடவேண்டுமென்பது என் எண்ணம்.

வேலையாள் எவரும் என் கண்ணில் படாததால் நான்

தயங்கிக்கொண் டிருந்தேன். அச்சமயம், அருகிலேயே அறை யொன்றில் கிழவரும் அவருடைய பேத்தியும் பேசிக்கொள் வது என் செவியில் விழுந்தது. அன்பு கலந்த குரலில் பேத்தி, ''தாத்தா, நேற்றுக் கவர்னர் வந்தாரே, அவர் உங்களிடம் என்ன பேசினார்?'' என்றாள். தம் பழம் பெருமையைக் கவர்னரிடம் வருணித்ததாக டாகுர்தா சொன்னார். பேத்தி அதைக் கேட்டு உவகை பூத்தாள்.

அந்தக் கிழவர்பால் அந்தக் கன்னிகைக்கு உள்ள தாய் அன்பு போன்ற உணர்வினைக் கண்டு என் கண்கள் கலங்கின. வெகு நேரம் நான் அப்படியே நின்றேன். கடைசியில் டாகுர்தா தம் பேத்தியுடன் பேசிவிட்டு வெளியே வரும்போது, கவர்ந்துசென்ற பொருள்களை அவர்முன் வைத்தேன்.

இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வழக்கப்படி, கிழவரைக் கண்டதும் நான் எப்போதுமே வணக்கம் செலுத்துவதில்லை. ஆனால் அன்று அவரை வணங்கினேன். நேற்று இவ்வளவு தூரம் கவர்னர் துரை தம் வீட்டுக்கு விஜயம் செய்ததால், என்மீது அளவிலா மதிப்பு ஏற்பட்டுவிட்டது. அவர் மகிழ்ச்சி பொங்கக் கவர்னரைப்பற்றிப் புகழ்ந்தார். நானும் அதற்கு எதிர் ஒன்றும் பேசாமல் பல்லவி பாடினேன். என்னுடன் வந்து வெளியே காத்துக்கொண்டிருப்பவருக்கு இது ஒரு வேடிக்கை என்று தெரியும். ஆனாலும் கிழவரின் ஆர்வத்தைக் குலைக்க எவரும் விரும்பவில்லை; அவருடன் ஒத்துப் பாடினர்.

எல்லோரும் சென்றதும் நான் மிகவும் நாணத்துடன் அடக்கமாகவே கிழவரை அணுகினேன். ''நயன்ஜோர் வம்சத்துடன் எங்கள் வம்சமும் சம்பந்தம் செய்துகொள்ள உங்களுக்கு விருப்பம்..'' என்று இழுத்தேன்.

இதைச் சொல்லி நிறுத்துவதற்குள் டாகுர்தா என்னை அணைத்துக்கொண்டு, சந்தோஷம் கரை புரள, ''அப்பனே, நாங்கள் ஏழைகளாகிவிட்டோம். இப்படியும் ஒரு நற்காலம் பிறக்குமா எங்களுக்கு! அதற்கு நாங்கள் கொடுத்துவைத்த வர்களாய் இருக்கவேண்டுமே....என் குஸுமா அதிர்ஷ்டசாலி யான பெண். அவளுக்கு நீ அகப்பட்டது பெரிய பாக்கிய மப்பா—'' என்றதும் கண்ணீர் உகுத்துவிட்டார்.

கிழவர் தம் பழைய கௌரவப் பேச்சையெல்லாம் மறந்து தம் வறுமை நிலையை ஒப்புக்கொண்டது இதுவே முதல் தடவையாகும். என்னை வரனாகப் பெற்றதால் அந்த நயன் ஜோர் வம்சத்தின் கௌரவம் பாழாகி விடவில்லை. நான் அந்தக் கிழவரை அவமானம் செய்யக் கருதி ஒரு சூழ்ச்சியைச் செய்தபோது, அவர் என்னை ஒரு யோக்கியனாகக் கருதினாரே, அதுதான் வியப்பைத் தருகிறது எனக்கு!

கல்லின் வேட்கை

பூஜை விடுமுறையின்போது நானும் என் உறவினனும் யாத்திரையாகப் போயிருந்தோம். ஊரெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுக் கல்கத்தாவை நோக்கி வந்துகொண்டிருந்தோம். வழியில் ரெயில் வண்டியில் ஒரு பாபு எங்களுக்கு நண்பரானார். அவருடைய உடையைப் பார்த்து, மேற்குத் தேசத்து முஸ்லிமாக இருப்பார் என்று ஐயம் கொண்டோம். அவர் பேசும் வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் பின்னும் திகைத்துப் போனோம். அவர் பேசாத விஷயமே உலகத்தில் இல்லையென்றே தோன்றியது. ஒருவேளை, உலகைப் படைத்த கடவுள்கூட அவரைக் கேட்டுக்கொண்டுதான் எந்தக் காரியத்தையும் செய்கிறாரோ என்ற ஐயம் பிறந்தது. இதற்கு முன் அறிந்திராத பல இரகசியமான விஷயங்கள், ருஷியர்கள் சண்டையில் முன்னேறி இருக்கும் அளவு, ஆங்கிலேயரின் மூடு மந்திரங்கள், உள்நாட்டு ராஜ்யங்களில் நடக்கும் ஊழல்கள் இவைகளைப்பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாதிருந்த வரையில் மனநிம்மதியுடன் இருந்தேன். எங்களுக்குக் கிடைத்த அந்தப் புது வாயளப்புக்காரர் மெல்லச் சிரித்து, "There happen more things in heaven and earth, Horatio, than are reported in your newspapers. (பத்திரிகைகளில் வெளிப்படாத பல அதிசயச் செய்திகள் வையகத்திலும் வானகத்திலும் நிகழ்கின்றன, நண்பா)" என்று பேச ஆரம்பித்தார். நான் வீட்டைவிட்டு வெளிதேசம் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டது அதுவே முதல் தடவை. ஆகவே, அந்தப் புது விதமான மனிதரின் நடையுடை பாவனையைப் பார்த்து வியப்பினால் திகைத்துப் போனேன். அந்த நண்பர், திடும்திடுமென விஞ்ஞான சம்பந்தமாக ஏதாவது சொல்லுவார்; வேதத்திற்குப் புதுவிதமான வியாக்கியானம் எடுப்பார். சில சமயம் பார்ஸி மொழியிலுள்ள இன்கவிதைகளைப் பொழிவார். விஞ்ஞானம், வேதம், பார்ஸி மொழி இவற்றில் எங்களுக்கு யாதொரு சுவையும் இராததால் அவரிடத்தில் விசேஷமான சிரத்தையும் பக்தியும் கொண்டோம். என்னுடைய தியாஸொபிஸ்ட் (பிரம்மஞானி) உறவினன்கூட அந்த மனிதரிடத்தில் அபூர்வமான சக்தி ஏதாவது இருக்கவேண்டு

மென்று திடமாக நம்பும்போது, வேறு என்ன சொல்வது? ஆகர்ஷண சக்தியோ தெய்விகத்தன்மையோ அல்லது நுட்பமான சரீரமோ ஏதாவது ஒன்று அவருக்கு இருக்கவேண்டும். பார்ப்பதற்குச் சாதாரணமாக இருந்த அந்த மனிதர் சொல்லும் ஒவ்வொரு செய்தியையும் மிக்க ஊக்கத்துடன் கேட்டுக் கொண்டு, மறைவாக அவற்றையெல்லாம் குறித்துக்கொண்டிருந்தான், என்னுடைய தியாஸொபிஸ்ட் உறவினன். மேதாவியான அவன்கூட இதையெல்லாம் கேட்டுப் பிரமித்துப் போனானே என்று எனக்கு ஒரு திருப்தி.

வண்டி ஒரு ஜங்ஷனில் வந்து நின்றது. அடுத்த வண்டிக்காக நாங்கள் பிரயாணிகள் தங்கும் அறையில் காத்திருந்தோம். அப்பொழுது ராத்திரி பத்து மணி. எங்கேயோ தண்டவாளத்தில் பிசகு ஏற்பட்டதால் வண்டி வர அதிக நேரமாகுமென்று சொன்னார்கள். மேஜையின்மீது படுக்கையைப் பிரித்துப் போட்டுக்கொண்டு ஒரு தூக்கம் போட நான் எழுந்த சமயம், எங்களுடன் வந்த அந்த அதிசயப் பேர்வழி பின்வரும் கதையைச் சொல்ல உட்கார்ந்துவிட்டார்.

* * * *

அரசாங்க விஷயமாய் மனத்தாங்கல் ஏற்படவே நான் ஜூனாகட் சம்ஸ்தானத்தில் பார்த்து வந்த வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டு ஹைதராபாதுக்கு வந்தேன். நிஜாம் அரசாங்கத்தை அண்டியபோது, என் இளவயதையும், ஆற்றலையும் பார்த்து அவர்கள் முதலில் பரீச் என்ற இடத்தில், பருத்தி வரி வசூலிக்கும் பகுதியில் என்னை நியமித்தார்கள்.

பரீச் வெகு மனோரம்மியமான இடம். மலைச்சாரலில் உள்ள காடுகளின் ஊடே சுஸ்தா என்னும் நதி நாட்டியக் கலை ராணியைப்போல வளைந்து வளைந்து ஒயிலுடன் குலுங்கி ஓடும் அற்புதக் காட்சி. அந்த ஆற்றின் கரையோரமாகவே நூற்றுக்கு மேல் கற்படிகள் உடைய உயரமான படித்துறை. அதன்மேல் பால் போன்ற சலவைக் கல்லால் கட்டிய பெரிய மாளிகை ஒன்று அடிவாரத்திலேயே தன்னந்தனியே நிற்கிறது. அதன் அருகில் மனிதர்கள் வாழும் இடம் என்பதே கிடையாது. பரீச்சின் பருத்திச் சந்தையும், கிராமமும் அந்த இடத்திலிருந்து தொலைவில் இருந்தன.

ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன், இரண்டாவது ஷா மாமூத் இன்பக் கேளிக்கைக்கென்றே அந்த விசித்திர மாளிகையை மனிதர் நடமாட்டம் இராத அந்த ஏகாந்தத்தில் நிருமித்தான். அந்தக் காலத்தில் அம்மாளிகை

---

*ஸ்வச்சதோயா என்பதன் திரிபு. தெள்ளிய நீர் என்று பொருள்.

யின் அந்தப்புரத்தில் ஊற்றுக் குழாய்கள் பன்னீர் மணம் மல்கும் நீர்த்திவலையைப் பொழியுமாம். சுற்றிலும் அதன் குளிர்பூம்புனலின் மணம் வீசும். அந்தரங்க அறைகளில் வர்ணச் சிப்பிகள் பாவிய கல்லாசனங்களின் மீது சாய்ந்த வண்ணம் பாரசீக நாட்டு அரம்பையர் நளிர்மென் பாதங்களை, வழிந்தோடும் நீர்த் திரளில் தோய்த்துக்கொண்டே, அமிழ்ந்து நீராடுவதன் பொருட்டுக் குழற்பங்கியை அவிழ்த்து விட்டு, ஸிதாரோடு இழைந்து காதல் ஊறும் திராட்சை வனத்தின் 'கஜல்'களைப் பாடுவார்கள்.

இப்போது அங்கே ஊற்று வாய்கள் மண நீரைத் தூவ வில்லை. குயில்மொழி மடந்தையரின் இசை எங்கேயோ! தூய மலரடிகள் அந்தச் சலவைக் கல் தரையைத் தீண்டி எத்தனையோ நாட்களாயின. தற்சமயம் அது என்னைப்போல் தனிமையில் வருந்தும், துணையற்ற, மாசூல் திரட்டும் உத்தியோகஸ்தன் வாழும் வெறும் வீடாகவே இருந்தது. என் அலுவலகத்தைச் சேர்ந்த கிழக் குமாஸ்தா கரீம்கான் மட்டும், ''அங்கேயா இடம் பார்த்தீர்கள், போயும் போயும்!'' என்று ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்தான். ''வேண்டுமானால் பகலில் அங்கே இருங்கள். ஆனால் ஓர் இரவுகூட அங்கே தங்க வேண்டாம்'' என்று சொல்வான். நான் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு அலட்சியமாகவே இருந்தேன். என்னுடைய வேலையாட்கள் ஒவ்வொருவராக முணுமுணுக்க ஆரம்பித்தனர். கதிரவன் மறையும் வரைதான் இங்கே இருந்து வேலை செய்ய முடியும்; இரவுவேளையில் தங்கமுடியாது என்று கண்டிப்புடன் கூறினர். 'ததாஸ்து' என்றேன் நானும். அந்த மாளிகை பூதங் காத்த இடமென்று திருடர்கள்கூட அங்கே நுழையத் துணிவு கொள்வதில்லை.

வந்த புதிதில், அந்தப் பாழும் மாளிகையின் தனிமையைக் கண்டபோது உள்ளுக்குள் எனக்கு நடுக்கந்தான். முடிந்த வரைக்கும் பகற்பொழுதெல்லாம் என் வேலைகளை வெளியி லேயே முடித்துவிட்டு, இரவில் அந்த இடத்தில்தான் ஒய்ந்து போய்த் தூங்குவேன்.

ஆனால் இரண்டொரு வாரம் சென்றதுமே, அந்த மாளிகையின்மேல் எனக்கு ஒரு பற்று ஏற்பட்டது. அந்த நிலையை வர்ணிப்பது மிகவும் கடினம். அதைச் சொன்னாலும் யாரும் எளிதில் நம்பமாட்டார்கள். அந்தப் பெரிய வீடு, உயிருள்ள பொருளைப்போல் என்னை ஒரு மோகத்துள் ஆழ்த்திக் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைத்துக்கொண்டே வந்தது.

அந்த இடத்தில் கால் வைத்ததுமே இந்த நோய் ஒட்டிக் கொள்ளும்போல் இருக்கிறது! முதலில் சில நாட்கள். இந்த

அபூர்வமான உணர்ச்சியை நல்ல நினைவிலேயே நுகர்ந்தேன், அது இன்னும் என் மனத்தில் தெளிவாக நிற்கிறது.

வேனிற் காலம். பஜாரில் வியாபாரம் சூடாக இல்லை. எனக்கு ஒரு வேலையும் இல்லை. கதிரவன் மறைவதற்குச் சற்று முன் ஆற்றங்கரையோரமாயுள்ள அந்தப் படித்துறையின் ஒரு கல்லின்மீது சுகாசனத்தைப் போட்டுக்கொண்டு வீற்றிருந்தேன். சுஸ்தா நதியில் நீரோட்டம் வறண்டு கிடந்தது. அதன் மணற்பரப்பு, அந்த வேளையில் தங்கச் சாயலாகவே தோற்றியது. படித்துறைக்குக் கீழே பளிங்கு போன்ற ஆற்றுநீர்; ஆழமே இல்லை. அதன் அடியில் கூழாங்கற்கள் பல வண்ணத்துடன் பளபளத்தன. காற்று, துளிக்கூட வீசக் காரணம் இல்லை. மலைச்சரிவில் வளரும் காட்டுத் துளசி, புதினா, தும்பை இவற்றின் நெடியான கந்தம் அந்த இடமெங்கும் கனத்து இருந்தது.

வெய்யோன் மலைவாயில் இறங்கிவிட்டான். பகற்பொழுதின் ஆடரங்கில் மெல்ல நிழல் திரை விழுந்தது. மலை குறுக்கே நிற்பதால் இருளுடன் ஒளி அணையும் மாலை நேரம் நெடுநேரம் நீடிப்பதில்லை. குதிரைமேல் சவாரி செய்து எங்கேயாவது சற்று உலாவி வரலாமென்று எழுந்திருந்தேன். அதே நேரத்தில் படிக்கட்டில் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை.

பிரமையோ என்று திரும்பி உட்கார்ந்ததுமே, பலபேர் வரும் காலடி அரவம் என் செவியில் விழுந்தது - எத்தனையோ பேர் ஒன்றுகூடி வேகமாகக் கீழே இறங்கி வருவதுபோல். சற்றுத் திகில்தான் எனக்கு. ஆனாலும் சொல்ல முடியாத ஒரு மகிழ்ச்சியும் இருந்தது. என் உடலெல்லாம் சிலிர்த்தது. என் கண்ணுக்கு எந்த உருவமும் தென்படவில்லை. ஆனால் எதிரே இருப்பது போலவும் மனசில் பட்டது. வேனிற் காலமானதால், குளிர்ந்த சுஸ்தா நதியின் நீரில் சிறிது நேரம் துளைந்து ஆடுவதற்காக மடந்தையர் சிலர் கும்பல் கூடி இறங்கிவரும் மெல்லொலி. வெளிச்சம் மறையும் அவ்வந்தி வேளையில், மலைச் சரிவிலாவது நதிக் கரையிலாவது சந்தடியற்ற அந்த மாளிகையிலாவது எந்தவிதமான அரவமும் கேட்கவில்லை. இருந்தும் என் காதுக்கு மாத்திரம், அருவியின் ஓட்டம் போன்ற கலகலச் சிரிப்புடன் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து என் பக்கமாக ஓடி வரும் ஒலி கேட்டது. என்னை அவர்கள் கவனிக்கவில்லை போலும்! என் கண்களுக்கு அவர்கள் எவ்வாறு புலப்படவில்லையோ, அவ்வாறுதானே அவர்கள் கண்ணுக்கு நானும்? நதியில் நீர் அசையவோ சிதறவோ இல்லை. ஆனால் எனக்கு அருகில் உள்ள ஆழம் இராத அந்த ஆற்று நீரில்

தொடி ஆர்க்கும் கைகள் பல துழாவுவது போல் சலனம் மூண்டது. அந்தப் புனல் விளையாட்டில் சிரிப்பும் மகிழ்ச்சியும் மேலிட்டு அவர்கள் தத்தம் தோழியர்மீது நீரை வாரி இறைப் பதையும், அவர்கள் நீந்துவதால் கால்கள் தாக்கும் நீர்த்திரள் முத்துச் சிதறுவது போல் தெறித்து வீழ்வதையும் என் அகத்துள் உணர்ந்தேன்.

இதயத்துள் ஒரு குலைப்பு. அது அச்சத்தினாலா அல்லது களிப்பினாலா, இல்லை ஆவலினாலா எதனாலென்று சரியாகச் சொல்ல முடியாது.

இந்த அதிசயத்தைக் கண்ணாரப் பார்க்கவேண்டும் என்ற அடங்கா ஆவல்மட்டும் இருந்தது. ஆனால் என் கண்முன் எதுவும் தோன்றவில்லையே! ஊன்றிக் கவனித்தால் இந்த மாய உருவங்கள் பேசிக்கொள்வது ஏதாவது கேட்குமோ என்று காதைத் தீட்டிக்கொண்டேன். ஆனால் காட்டிலிருந்து வரும் சில்வண்டினத்தின் ஒசையைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை.

இருநூற்று ஐம்பது வருஷத்திய கருநிறத்திரை அந்த இரகசியத்தை மறைத்துக்கொண்டு என் எதிரே நிற்பதுபோல் தோன்றியது. நடுக்கத்துடன் அதன் ஒரு மூலையை மெல்லத் தூக்கி உள்ளே இருப்பதைப் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய கூட்டம் இருப்பதுமட்டும் தெரிந்தது. ஆனால் அந்த நகர இருளில் வேறு எதுவுமே புலப்படவில்லை.

திடீரெனப் புழுக்கம் விலகி 'உச்' என்று ஒரு காற்று வீசியது. நிலைத்திருக்கும் சுஸ்தா நதி நீரின் கீழுள்ள மணல் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அப்ஸரஸின் கூந்தல் அலைபோல் விளங்கியது. அந்நதியின் நிழல் கவியும் அந்தக் காட்டுப் பரப்பு ஒரு நிமிஷத்தில் சலசலப்புக் கொண்டது, ஏதோ பயங்கரக் கனவிலிருந்து விழித்தெழுந்ததுபோல்! அது கனவோ உண்மையோ, இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு மறந்துபோன ஓர் உலகு பேய்த்தேர்போல் என் முன் நொடிப்பொழுது தோன்றி மறைந்துவிட்டது. என்மேல் உராய்ந்தவண்ணம் கண்ணுக்குத் தெரியாமல் உரத்த சிரிப் புடன் நதியில் குதித்துக் குடைந்தாடிய அந்த மாய வடிவினர் நனைந்த ஆடைகளைப் பிழிந்துகொண்டு என் பக்கமாகத் திரும்பிப் போகும் சத்தமே வரவில்லை. நறுமணம் காற்றில் கலந்து கரைவதுபோல், வேனில் விடும் ஒரு சிறு மூச்சில் அவர்கள் மறைந்தே போயினர்.

எனக்குப் பெருந் திகில் வந்துவிட்டது. ஏகாந்தமாய் நான் இருப்பதைப் பார்த்துக் கவிதாதேவி என்மேல் சோங்கி விட்டாளோ என்னவோ? தெய்வமேயென்று வரி வசூலிக்கும்

உத்தியோகமாக வந்திருக்கும் என்னை, அந்த நாசக்காரி பிடித்துக்கொண்டு விட்டாள்! 'உணவுக் குறைவினாலேயே இந்தமாதிரி புதுவிதமான நோய் நம்மைப் பற்றுகிறதோ? இனிமேல் வயிறார உண்ணவேண்டும்' என்று ஒரு முடிவுக்கு வந்தேன். மசாலா தீட்டி நெய்யிலேயே தின்பண்டங்களை அமோகமாய்ச் செய்யும்படி என் சமையற்காரனுக்கு உத்தர விட்டேன் உடனே.

அடுத்த நாள் காலை, நடந்தவற்றை யெல்லாம் நினைத்துக் கொள்ளும்போது எனக்கே சிரிப்பு வந்தது. தெம்புடன் துரைமாதிரி 'ஸோலார்'த் தொப்பியைத் தலையில் மாட்டிக் கொண்டு, வண்டியை நானே ஓட்டி அலுவலைக் கவனிக்கச் சென்றேன்.

அன்று மும்மாதாந்த 'ரிப்போர்ட்டு' எழுதி முடிக்க வேண்டி யிருந்ததால், வீட்டிற்குச் சற்றுத் தாமதமாகவே திரும்புவதாக இருந்தேன். ஆனால் மாலை வந்ததோ இல்லையோ என்னை ஏதோ ஒன்று வீட்டை நோக்கி இழுத்தது. இனிமேல் தயங்குவது உசிதமல்ல என்று எனக்குப் பட்டது. எவ்வளவோ பேர் எனக்காகக் கச்சேரியில் காத்திருந்தனர். அரைகுறையாகவே காரியத்தைப் போட்டுவிட்டுத் தொப்பியை மாட்டிக்கொண்டு, மரநிழல் அடர்ந்த அந்த மாலை மங்கலில் வண்டியைச் செலுத்தினேன். கடகடவென்ற அதனுடைய சத்தம் காட்டகத்தின் துயிலைக் கலைத்தது. இருட்டு வேளையில் அந்தப் பயங்கர மாளிகைக்குள் அடைக் கலம் புகுந்தேன்.

படிக்கட்டுகளில் ஏறியதுமே விசாலமான அறை. மூன்று வரிசைகள் உடைய பெரிய தூண்கள், சிற்ப வேலைப்பாடு அமைந்த மேல் கூரையைத் தாங்கி நின்றன. நெஞ்சம் திடுக் கிடும்படி அந்த அறை எப்போதுமே வெறிச்சென்று இருக்கும். அன்று பொழுது போயும் அந்த இடத்தில் யாருமே விளக்கே ஏற்றவில்லை. கதவைத் திறந்து நான் உள்ளே நுழைந்தது தான்; என் உள்ளம் விதிர்த்தது. அறையில் அப்போதுதான் ஒரு பெரிய கோலாகலம் நடந்து ஓய்ந்தமாதிரி இருந்தது. பலபேர் 'மருண்டு நாலு பக்கத்துக் கதவுகள் வழியாகவும், சாளரங்கள் மூலமாகவும் ஓடி மறைந்துகொள்வது போன்ற அமானுஷ்யமான பரபரப்பு! என் கண்ணுக்கு ஒன்றுமே புலப் படாது போகவே நான் வியப்பினால் வாய் பிளந்து நின்றேன். மயிர்க்கூச்செறிந்தது எனக்கு. பல நாள் மூடி வைத்திருந்த அத்தரின் மென்மணம் கும்மென்று என் நாசியை ஊடுருவிச் சென்றது. விளக்கே இராத அந்தப் பயங்கர அறையில் நெடிய தூண்களுக்கிடையே அப்படியே என் இரு கால்களும் நிலைத்து

விட்டன. ஊற்றுக் குழாய்கள் உமிழும் நீர்த்தாரை சலசல வென்று பளிங்குத் தரையில் வழியும் ஓசை, ஸிதார் எழுப்பும் அபூர்வமான ஸ்வரஜங்காரம், எங்கேயோ ஒரு பக்கம் பொற் சிலம்பு கொஞ்சும் நாதம், வேறொரு புறம் கலீரென நூபுரத் தின் சதங்கை ஒலி, தொலைவில் ஓர் இடத்தில் நாழிகை அறி விக்கும் மணியின் வெண்கலக் குரல், இன்னும் தூரத்தில் 'நஹபத்காஞ'வில் முழங்கும் மேளங்களின் சத்தம், காற்றில் ஊசலாடும் பெரிய விளக்குகளில் படிக ஜாலர்களின் டிங்டினிங் என்ற அரவம், வராந்தாவில் எங்கோ கூட்டினுள் கிடக்கும் புல்புல் பறவையின் தீங்குரல், பூஞ்சோலையில் வாழும் மயிலினம் அகவுவது-யாவும் ஒன்று சேர்ந்து என் செவியுள் பூத உலகின் இசையாகவே ஒலித்தன.

என் புலன் ஐந்தும் அவசமாயின. கண்ணுக்கு எட்டாத அந்த மாயா விநோதம் ஒன்றே மெய், மற்றவை யெல்லாம் வெறும் பொய்யென்றே எனக்குத் தோன்றிவிட்டது. நான் நான்தானே? நான் ஸ்ரீமான் இன்னருடைய மூத்த பிள்ளை, பஞ்சு வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தன், நானூற்று ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கும் பேர்வழி, 'ஹாட் ஸூட்'டுடன் 'டாக்-கார்ட்'டில் அலுவலகம் போகிற பெரிய மனிதன் - இந்த விஷயமெல்லாம் பனிமூட்டத்தில் காணும் புதுமைகள், அவ்வளவும் பொய் என்றே பாவிக்கலானேன். அந்த விசால மான அறையில், பேயிருள் இடையே நின்றுகொண்டு பைத்தி யத்தைப்போல் ஓவென்று சிரித்தேன்.

அந்தச் சமயம் என்னுடைய முசல்மான் ஆள்காரன் பிர காசமாக எரியும் கெரோலின் விளக்கொன்றை எடுத்துக் கொண்டு அறையினுள்ளே நுழைந்தான். எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று அவன் நினைத்தானோ என்னவோ! வெளிச்சம் தெரிந்ததும் எனக்கு நினைவு வந்தது. நான், இன்னருடைய மூத்த பிள்ளை ஸ்ரீமான் இன்னன் என்று கவனம் வந்தது.

நறுநீர் தூவும் ஓர் ஊற்றை, மெல் விரல்கள் தடவும் ஒரு யாழின் இசையைக் கண்டோ கேட்டோ அநுபவித்தது இந்த லோகத்திலா, வேறு ஏதோ மாய உலகிலா என்ற ஐயம் என்னைச் சுற்றிக்கொண்டது. மகாகவிகள்தாம் இதன் இரகசியத்தை உணர்வார்கள். நான் பரீச்சில் வேலை பார்க்கும் ஓர் உத்தியோகஸ்தன் என்பது மட்டும் உண்மை. சற்றுமுன் நான் மயலாகி நின்றிருந்ததை ஒருதரம் நினைத்துப் பார்த்துக் கொண்டபொழுது எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. விளக்கண்டை இருந்த பத்திரிகையைப் பிரித்துப் பார்த்த வண்ணம் அசடுமாதிரி சிரித்தேன்.

பத்திரிகையைப் படித்ததும் மொகலாய மோஸ்தரான சாப்பாட்டை முடித்துக்கொண்டு சிறிய அறையொன்றில் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் படுத்தேன். எனக்கு எதிரே உள்ள சாளரத்தின் வழியாக, இருண்ட காடுகள் சூழ்ந்த ஆராலி மலையின் உருவு தெரிந்தது. அதன் சிகரத்தின் மேல் சுடருகின்ற விண்மீன் ஒன்று பல கோடி யோஜனை தூரத்தில் இருக்கும் வானகத்திலிருந்து 'காம்ப்' கட்டிலில் நீட்டிக்கொண்டிருக்கிற வரி வசூலிக்கும் இந்தத் துரையைக் கண்கொட்டாமல் பார்த்தது. வியப்பைத் தரும் இந்தக் காட்சியில் ஈடுபட்டு, நான் எப்போது தூங்கிப் போய் விட்டேனோ எனக்கே தெரியாது. திடீரென ஒரு சமயம் எனக்குத் தூக்கிப் போடும். விழித்துக்கொள்வேன். அறையில் எந்தவிதமான சத்தமும் வருவதற்குக் காரணம் இல்லை. எந்த உருவத்தையும் நான் காணவில்லை. வெளியே தெரிந்த அந்தத் தாரகை, மறைந்துவிட்டது. கிருஷ்ண பட்சத்துத் தேயும் நிலா வெளிச்சம், சற்றுத் தயக்கத்துடனேயே என் அறையுள் எட்டிப் பார்த்தது.

ஓர் ஆளும் என் கண்ணுக்குத் தென்படவில்லை. ஆனால் என் மனசுக்கு மாத்திரம் யாரோ என்னை உலுக்கி உலுக்கி எழுப்பினாற்போல் இருந்தது. நான் எழுந்து உட்கார்ந்தேன். அந்த உருவம் ஒன்றுமே பேசவில்லை. மோதிரம் அணிந்த தன் ஐந்து விரல்களாலும் ஒரு திசையைக் காட்டி என்னைப் பின் தொடரும்படி கட்டளையிட்டது.

நான் சந்தடி பண்ணுமலே சென்றேன். எத்தனையோ அறைகள் உடைய அந்தச் சூனிய மாளிகையில் வேறு அரவம் எதுவுமே கேட்கவில்லை. நானும், எதிரொலி செய்யும் பெரிய சுவர்களுமே. அங்கே வேறு எந்தப் பிராணியும் இல்லை. போகப் போக எனக்கு அச்சம் தட்டியது; பூதபிசாசங்கள் விழித்துக்கொண்டால்? மாளிகையில் நான் பார்க்காத அறைகள் இன்னும் எத்தனையோ இருந்தன. அங்கே என்ன இருக்குமோ? அந்த நடுநிசியில், சத்தம் செய்யாமல் காலடி வைத்து மூச்சை அடக்கிக்கொண்டு, கண்ணுக்குப் புலப்படாத ஒரு மாயாரூபிணியைப் பின்தொடர்ந்து எங்கே சென்றேனென்பது இன்றளவும் எனக்கே தெளிவாகத் தெரியவில்லை. எத்தனையோ குறுகிய இருண்ட வழிகள், எண்ணற்ற வராந்தாக்கள். அகல நீளமான பல கொலு மண்டபங்கள், காற்றே உட்புகாத பல இரகசிய அறைகள் இவற்றையெல்லாம் கடந்து சென்றேன்.

என்னை அழைத்துச் செல்பவள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும் அவளுடைய உருவம் என் மனக் கண்ணுக்கு

மட்டும் பளிச்சென தென்பட்டது. அவள் அராபிய நங்கை. மெல்லிய பட்டுப் புடைவைமூலம் சலவைக் கல்லால் செதுக்கியது போன்ற அவளது கட்டழகு வெளிப்பட்டது. முகத்தை மெல்லிய 'புர்கா' மறைத்துக்கொண்டிருந்தது. அரைக் கச்சில் ஒரு பிச்சுவா.

ஆயிரத்து ஓராவது இரவென்னும் அற்புத அராபிக் கற்பனை ராஜ்யத்திலிருந்து பறந்து வந்தாளோ என்று சந்தேகப்பட்டேன். கும்மிருட்டில், விளக்கெல்லாம் அணைந்து போன பாக்தாத் நகரின் குறுகிய வீதிகளில் ஒருத்தி பின்னல் நான் பித்துக் கொண்டு அல்லல் படுவதுபோலவே பிரமை மூண்டது.

கடைசியில் அந்த அருவம் கருநீலத் திரை ஒன்று தொங்கும் இட்த்தண்டை வந்து பட்டென்று நின்றது. கீழே எதையோ சுட்டிக் காட்டியது; அங்கே நோக்கினேன். அங்கே ஒன்றுமே இல்லை. ஆனால் என் உடலுள் இரத்தம் ஓடாமல் உறைந்துவிட்டது. அப்புறம் மெதுவாக உணர்ந்தேன். அந்தப் படுதாவுக்கு அருகில் தரைமீது வட்டுடை பூண்டு பீதிதரும் காபிரிக் கோஜா ஒருவன். அவன் மடியில் கூரிய வாள் பலபலத்தது. கால்கள் இரண்டையும் நீட்டி உட்கார்ந்தபடியே தூங்கி விழுந்துகொண்டிருந்தான் அவன். அருவம் அவன் காலைத் தாண்டிப் படுதாவின் ஒரு புறத்தை தூக்கியது.

உட்புறம் தரையில் விரித்திருக்கும் பாரசீக நாட்டு இரத்தினக் கம்பளத்தின் ஒரு நுனி சற்றே வெளியில் வந்திருந்தது. அதன்மேல் வீற்றிருந்த ஆள் இன்னாரென்று தெரியவில்லை. குங்கும நிறத்தில் பாயிஜாமா போட்டுக்கொண்டு சரிகை தைத்த 'சடா' அணிந்த இரண்டு அழகிய சீறடிகள் ரோஜாவர்ண மக்மல் (வெல்வெட்) பஞ்சணைமீது சுக பாவத்துடன் படிந்திருப்பதைக் கண்ணுற்றேன். தரையின் ஒரு பக்கத்தில் நீலமான பளிங்குத் தட்டில் ஆப்பிள், நாச்பாதி, ஆரஞ்சு, திராட்சைக்கொத்து முதலிய கனிவகைகள். அதன் அருகே ஒரு சிறு பீங்கான் தாலத்திலும் கண்ணுடிக் கோப்பையிலும் உருக்கிய பொன்போல் உயர்ந்த மதுரசம் அதிதிக்கென வைக்கப்பட்டிருந்தது. அறையிலிருந்து ஒருவித அற்புத தூபம் மெல்லிய சுருளாகப் பரவிக்கொண்டிருந்தது. மயக்கத்தை உண்டாக்கியது அதன் மணம்.

மார்பு படபடக்க நான் எப்படியோ அந்தக் கோஜாவைத் தாண்டி வந்ததுதான் தாமதம்; சட்டென அவன் விழித்துக் கொண்டான். மடியிலிருந்த வாள் தட்டென்று தரையில் ஓசையுடன் விழுந்தது;

உடனே ஓர் அலறல் கேட்டது. தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்தேன். 'காம்ப்' கட்டிலின்மீது பயத்தினால் வேர்க்க நான் உட்கார்ந்திருந்தேன். கீழ்வானில் வைகறை ஒளி. தேய்பிறை, தூக்கம் கெட்டுப்போன நோயாளியைப் போல் பசலை நிறம் கொண்டது. என் மாளிகையைச் சுற்றி நாள்தோறும் அலையும் அந்தப் பைத்தியக்காரன் மேஹேர் ஆலி, வழக்கம்போல் விடிகாலையிலேயே, ''விலகிப் போ'', ''விலகிப் போ'' என்று கூவிக்கொண்டே இருந்தான். இவ்வாறு அந்த விசித்திரக் கதையின் ஓர் இரவு முடிவடைந்தது. இன்னும் ஆயிரம் இராத்திரி பாக்கி இருக்கின்றனவே!

பகலில் நான் நடத்திய வாழ்க்கைக்கும் இரவில் நடத்தியதற்கும் இடையே பெருத்த முரண்பாடு ஏற்பட்டு விட்டது. ஒய்ந்துபோய் நான் அதிகாலையிலேயே என் அலுவலைக் கவனிக்கச் சென்றுவிடுவேன். பயங்கரக் கனவுகளை எழுப்பும் இராக்காலங்களைச் சபிப்பேன். சாயங்காலம் திரும்பி வந்ததும் பகற்பொழுது நான் செய்ததெல்லாம் உபயோகமற்ற காரியமாகவே தோன்றும். பொழுதை வீணுகப் போக்கினேமே என்று எண்ணிக்கொள்வேன்.

பொழுது சாய்ந்ததுமே ஒருவித வெறி என்னைத் தன் வலைக்குள் போட்டுக்கொள்ளும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன், வெளி வாராத சரித்திர உலகின் ஒரு மனிதனாக மாறிவிடுவேன். அப்போது துரைகள் அணியும் இந்தக் 'கோட்'டும் 'ஹாட்'டும் எனக்கு ஒவ்வாமலே இருக்கும். அந்த இருண்ட யுகத்தில் நான் தலையில் சிவப்பு மக்மல் பெஸ் போட்டுக்கொண் டிருப்பேன். தளர்த்தியான பாயிஜாமா. ஆகாபாணிச் சொக்காய்; பட்டு அங்கி அணிந்து, வர்ண உருமாலில் அத்தர் தெளித்துக்கொண்டு அலங்காரமெல்லாம் செய்துகொள்வேன். சிகரெட்டை எறிந்துவிட்டுப் பன்னீர் தும்பும் ஹுக்காவின் பாம்பென நீண்ட குழலை வாயில் வைத்து உயர்ந்த அணைமீது வீற்றிருப்பேன். இனியாளுடன் கூடி மகிழ, இராவேளைக்காக ஆவலுடன் காத்திருப்பேன்.

இருட்ட இருட்ட, பல அதிசயமான காட்சிகள் தோன்றும் - வர்ணிக்கவொண்ணுத அதிசயங்கள்! விநோதக் கதையிலிருந்து சிதறுண்ட பல பகுதிகளைத் தென்றலின் ஒரு மூச்சு அம்மாளிகையின் அறை ஒவ்வொன்றிலும் புகுத்தியது போலவே இருக்கும். அங்கே நடக்கும் இரகசியம் சிறிதளவே புத்திக்கு எட்டுமே தவிர முழுவதும் வெளிப்படாது. நானும் அந்த இந்திரஜாலத்தின் அடிநுனி காணுமல் இரவெல்லாம் அறைதோறும் சுற்றி அலைவேன். சிதைவுறும் இந்தக் கனவு நிலையில், நடுநடுவே சிற்சில சமயம் மருதோன்றியின் மென்

மணம் வீசும்; சிலவேளை ஸிதாரின் இன்னிசை ஒலிக்கும்; தென்றலின் அசைவில் மின் சுடரென இனியாள் எவளாவது முறுவல் செய்வாள். விம்மிப் புடைத்த அவளது மார்பை, சரிகை ஜொலிக்கும் கச்சு மறைத்துக்கொள்ளும். சிவந்த அடிகளுக்கு அணியாக நுனி வளைவுள்ள பாதரட்சைகள்; செந்நிறப் பட்டுக் குல்லாய் தலையில். அதன் தங்கக்குச்சு அவளது பிறை நுதலிலும் கன்னத்தின்மீதும் படிந்திலங்கும்.

அவள்மேல் மயலானேன்—இரவுக் குறியிடத்தில் அவளுடன் புல்ல ஒவ்வொரு நாளும் விழைவேன். துயிலில் தோன்றும் இந்தக் கனவு - நகரில் ஒவ்வொரு சந்திலும் சதுக்கத்திலும் அவளுக்காக ஏங்கித் திரிவேன்.

ஒவ்வொரு நாள் பெரிய நீலக்கண்ணுடியின் எதிரே நின்றவண்ணம், இரு பக்கமும் விளக்கை ஏற்றிவிட்டு அடி முதல் முடிவரையில் ஷாஹாஜாதா (அரசகுமாரன்) போல் சிங்காரம் செய்துகொள்ளும் சமயம், கண்ணுடியில் என்னுடைய உருவத்திற்குப் பக்கத்தில் நொடிப்பொழுது இளம் ஈரானி (பாரசீக) அழகியின் சாயை விழும்; கண்ணிமைக்கும் நேரம் மோவாயை வளைத்து, கலகலவேல் விழியைச் சுழற்றிக் காதற்கனலை எழுப்பிச் செல்வாள், இளமை வழியும் அக் கொடியிடையாள். நிருத்திய பாணியில் கடைக்கண் செலுத்தி, சிரித்தணுகி, கருத்திலுல் விரக மூட்டிவிட்டுக் கண்ணுடியிலேயே மறைந்து போவாள். மலையகத்தின் நறுமணத்தைக் கொள்ளை கொண்டுவரும் ஒரு கடுவளி விளக்கை அணைத்து விடும். நான் உடைகளையெல்லாம் கழற்றிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு இன்ப நினைவுகளில் ஆழ்ந்து பஞ்சணைமீது படித்திருப்பேன். என்னைச்சுற்றி வீசும் அந்தக் காற்றை நுகருகையில் ஆராலி மலைச் சோலையிலிருந்து வரும் அக் காற்றை அநுபவிக்கும்போது யாருடைய இதழ்களையோ பருகுவது போன்ற உவகை பிறக்கும்; யாருடைய மெல் விரல்களையோ தொட்டது போன்ற சிலிர்ப்பு எழும். என் செவிக்குப் பலபேர் புட்குரல் போல் மிழற்றும் சொற்கள் கேட்கும். என் முகத்துக்கு நேரே தாம்பூல மணம் கலந்து யாருடைய மூக்கோ படும். என் நெற்றிக் கட்டுமேல் எந்த மெல்லியலாளுடைய பூந்துகிலோ வந்து படியும். அடிக்கடி மெல்ல மெல்ல ஒரு மோகினி தன் உடல் வளைவுக்குள் என்னை அணைத்துக்கொண்டு விடுவாள். நான் திணறிப் பெருமூச்செறிவேன். அப்புறம் கலவியில் அவசமாகி இன்துயிலில் ஆழ்வேன்.

ஒரு நாள் பிற்பகல் குதிரையின்மேல் ஏறி வெளியே செல்ல எண்ணியிருந்தேன். என்னை ஏதோ ஒன்று போக

விடாமல் தடுத்தது. ஆனால் நான் அதற்கு அடங்கிப் போக வில்லை அன்று. கொக்கியில் என்னுடைய 'ஹாட்'டும், அரை நிஜாரும், சட்டையும் தொங்கிக்கொண் டிருந்தன. அவற்றை எடுக்கலாமென்று போன சமயம், சுஸ்தா நதியிலிருந்து ஒரு சுழல் காற்று மணலையும், ஆராலி மலைக் காட்டில் இருக்கும் சருகுகளையும் கிளப்பிக்கொண்டு என்னுடைய 'ஹாட்'டையும், 'கோட்'டையும் அடித்துக்கொண்டே போயிற்று. அந்தக் காற்றின் ஓலத்தோடு பெண்கள் பலர் கை கொட்டிச் சிரிப் பதுபோன்ற ஓசை படிப்படியாக உயர்ந்துகொண்டே உச்ச ஸ்தாயியில் நின்று சூரிய அஸ்தமனத்துடன் கலந்துவிட்டது.

அன்று குதிரையின்மேல் சவாரி போவது நின்றுவிட்டது. அதற்கு மறு நாள் தொட்டே 'ஹாட்'டும், 'கோட்'டும் போடுவதை விட்டொழித்தேன்.

மீண்டும் அன்று நடுநிசியில், படுக்கையில் திடீரென விழித்துக்கொண்டு கூர்ந்து கவனிக்கையில் யாரோ நெஞ்சு விரிய விம்மி விம்மி அழும் ஓசை கேட்டது. என் கட்டிலுக்கு நேர் கீழே, அந்தப் பெரிய அறையின் தரைக்கு அடியில், ஈரம் கசியும் கல்லறையிலிருந்து ஒரு குரல், கண்ணீரும் கம்பலையு மாக, ''என்னை இந்த இடத்திலிருந்து மீட்டுக்கொள்ளேன் - இந்தக் கொடிய மாயாஜாலத்திலிருந்து, நிராசை குடி கொண்ட இந்தக் கனவு வாழ்விலிருந்து என்னைக் கரையேற்றி, உன் குதிரைமேல் வைத்துக்கொண்டு மார்புறத் தழுவி, வன வனந்தரங்களைத் தாண்டி, ஒளிமயமான ஓர் இடத்திற்கு எடுத்துச் செல்வாய். என்னை மீட்பாய், இந்த நரகத்தி லிருந்து'' என்றது.

நான் யாரோ! அவளை எப்படி மீட்பது? நிலையின்றிச் சுழலும் அந்தக் கனவு வெள்ளத்தில் மூழ்கிக் கதறும் அந்தக் கற்பனை அழகியை நான் எப்படிக் கரையேற்றுவது? ஏ, அணங்கே, நீ இருப்பது உண்மையா? இதுவரை எங்கே இருந் தாய்? எரிபரந்த பாலையின் நடுவே, தண்கயம் பாயும் ஈச்சந் தோப்பு நிழலில், எந்த நாடோடியின் பெண்ணை தெரிய வில்லையே நீ? ஆறலைக் கள்வன் எவனுவது கொடியிலிருந்து மலரைச் சிதைப்பதுபோல் உன்னைத் தாயின் மடியிலிருந்து கவர்ந்து, மின்விசைப் புரவிமேல் ஏற்றி மணற் காட்டைக் கடந்து இராசதானியிலுள்ள அடிமைச் சந்தையில் விற்று விட்டானு? பாதுஷாவின் ஏவலாளன் உன் மலர்ச்சியைக் கண்ணுற்றுப் பொற் காசு ஈந்து, கடல் கடந்து, தங்கச் சிவிகை யில் வைத்து உன்னைத் தன் தலைவனின் காணிக்கையாக அந்தப் புரத்தினுள் அனுப்பிவிட்டானு என்ன? ஆ! அங்கே என்ன என்ன இரகசியங்கள் புதைந்து கிடந்தன! சாரங்கியின் கமகம்

மெல்ல எழும். சதங்கையின் கிண்கிணி ஒலிக்கும். ஷிராஜின் திராட்சை ரசம் கிண்ணங்களில் வழிந்தோடும். வஞ்சம் கனலும் உடை வாட்கள் இருளில் மின்னும். விஷஜ்வாலையினால் உயிர்கள் துடிக்கும். மான் விழிகள் மருண்டு துவளும். அங்கே என்ன ஆடம்பரம்! என்ன செல்வவளம்! என்ன கோரமான சிறையின் வேதனை! இரு புறமும் இரு பாவையர், மின்னல் வேலைக் கை தூக்கிச் சாமரம் வீசும் அழகே அழகு! ஷாஹேன்ஷா பாதுஷாவே தம் அடியாளின் பாதகமலங்களுக்குக் கீழே மணியும் முத்தும் பதித்த பாதுகையின் பக்கத்தில் அமர்ந்திருப்பார். வெளியே வாசலில் யமதூதனைப்போல் ஹாப்ஸி காவலாளி, திவ்வியமான உடை தரித்து உருவிய வாளுடன் நிற்பான். கொலையும், இரத்தக் களரியும், இதயத்துள் நுரைக்கும் அழுக்காறும், சதியாலோசனையின் சிக்கலும் ஒன்றுக்குழம்பிய அந்தப் பயங்கர ஐசுவரியப் பெருக்கில் அலைபட்டுப் பாலியின் வெம்மையில் வாடும் மலர்போல் வதங்கி எங்கு மறைந்தாயோ? ஒரு வேளை, பின்னும் கொடுமையான படுகுழியில் தள்ளித் துவைக்கப்பட்டாயோ?

அதே கணம், திடுமென அந்தப் பைத்தியக்கார மேஹேர் ஆலி, "விலகிப் போ! விலகிப் போ! எல்லாம் பொய், பொய்!" என்று கூச்சலிட ஆரம்பித்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன்; பொழுது புலர்ந்துவிட்டது. ஒரு வேலையாள் தபாலில் வந்த கடிதங்களைக் கொண்டு வந்து என் கையில் கொடுத்தான். சமையற்காரன் எனக்கு ஒரு சலாம் வைத்து, "இன்றைக்கு என்ன சமையல் செய்ய வேண்டும்?" என்று என்னைக் கேட்டான்.

"இனிமேல் இந்த இடத்தில் இருப்பது உசிதமல்ல" என்று அன்றே என்னுடைய உடைமைகளையெல்லாம் ஏறக் கட்டிக்கொண்டு என்னுடைய அலுவலகம் இருக்கும் விடுதிக்கு வந்துவிட்டேன். அந்தக் கிழக் குமாஸ்தா கரீம்கான் என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் ரோஷங் கொண்டு என் வேலையைக் கவனிக்கச் சென்றேன்.

சாயங்காலம் ஆக ஆக என் மனம் எதையோ நாடிச் சென்றது. வரி வசூல் கணக்கைப் பரிசோதிக்கும் வேலை இருந்தும், எனக்கு அது முக்கியமாகப் படவில்லை. எங்கேயோ போகவேண்டும் போகவேண்டுமென்று என் மனம் அடித்துக் கொண்டது. நிஜாமின் கீழ்ப் பார்க்கும் அந்தப் பெரிய உத்தியோகங்கூட எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. என்னைச் சுற்றிலும் திகழும் ஒவ்வொன்றும் - ஏன், நான் உண்பது, உறங்குவது, திரிவது, வேலை பார்ப்பது எல்லாம் -

சுவையற்றனவாகவே இருந்தன. வாழ்க்கையில் எதுவுமே துச்சமாகத் தோன்றியது.

பேனாவையும் வீசி எறிந்துவிட்டு, பேரேட்டைத் தொப் பென்று மூடி ஒரு மூலையில் தள்ளியதுமே வண்டியில் ஏறிக் கொண்டு மனம் போன வழியே சென்றேன். அந்தி வேளைக்குச் சரியாக வண்டியும் அந்த விசித்திர மாளிகையின் வாயிலை அணுகி நின்றுவிட்டது. விரைவாகப் படிகளின்மீது ஏறி ஒரே தாண்டில் என் அறையினுள் நுழைந்தேன்.

அன்று எல்லாம் சந்தடியற்று இருந்தது. இருள் கவிந்த அறைகள் என்மேல் கோபத்தினால் முகத்தைக் கோணிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சி என் மனத்தை இளகச் செய்தது. யாரிடம் என் இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்வது, யாரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதென்று தெரியவில்லை. வெற்று மனசுடன் ஒவ்வோர் இருட்டறையாக நான் சுற்றித் திரிந்தேன். ஏதாவது வாத்தியத்தை எடுத்து வைத்துக்கொண்டு, 'என்னை உருக்கும் கனலே! உன்னை விட்டுப் பறந்து போக முயன்ற அந்தப் பூச்சி உன் அழகைப் பருகிச் சாவதற்கு மீண்டும் வருகிறது. இந்தத் தடவை மன்னித்து விடு. செய்த பிழைக்காக அதன் சிறகிரண்டையும் பொசுக்கிவிடு. சுட்டுச் சாம்பராக்கு' என்று உரக்கப் பாட வேண்டுமென்று ஆசை பொங்கியது.

திடீரென மேலேயிருந்து என் நெற்றிமேல் இரு துளிக் கண்ணீர் விழுந்தது. அன்று ஆராலியின் மலைமுகட்டில் இடியும் புடையுமாக மேகம் திரண்டிருந்தது. அந்தக் கார் இருளில் வளரும் சுஸ்தாவின் நீரோட்டமும் கறுத்து விளங்கின; ஏதோ ஓர் உற்பாதத்தை எதிர்நோக்குவதுபோல் அவை தம்பித்திருந்தன. வானம் சினந்தது. கூர் உகிர் போன்ற மின்னல் இருளைக் கிழித்து விளையாடியது. கட்டுக்கு அடங்காத வெறியன் போல, காட்டகத்தினுள்ளிருந்து ஒரு சூறை பேரிரைச்சலுடன் எழுந்து கண்மண் தெரியாமல் ஆடியது. மாளிகையிலுள்ள பெரிய அறைகளின் கதவு சாளரங்களெல்லாம் 'சடேல்' என்று காற்றில் அறைபட்டன. இலைக் கதவுகள் மூலம் வரும் காற்றின் ஊதல் யாரோ அழுவது போன்ற பிரமையை மூட்டியது.

அன்று வேலையாட்களெல்லாம் அலுவலக விடுதியிலேயே தங்கிவிட்டனர்; என்னுடன் யாருமே வரவில்லை. விளக்கு ஏற்றுவதற்குக்கூட ஓர் ஆள் இல்லை. மேகாந்தகாரம்; அதோடு அமாவாசைக் கறுக்கல். உள்ளே மை இருட்டு.

இதனிடையே, ஒரு பெண்மணி கட்டிலின் கீழே இரத்தினக் கம்பளத்தின்மேல் கவிழ்ந்து படுத்தவண்ணம், இரண்டு

கைகளாலும் தன் விரி கூந்தலைப் பிய்த்துக்கொண்டிருந்தாள். பசலை பாய்ந்த அவளது நெற்றியில் மெல்லிய கீறுக இரத்தம் பொசிந்தது! நடு நடுவே வெறிச் சிரிப்புச் சிரித்தாள். சில சமயம் விக்கி விக்கி அழுதாள். மார்புக் கச்சையைக் கிழித்தெறிந்துவிட்டு அறைந்துகொண்டாள். திறந்த சாளரத்தின் மூலம் காற்று, குபு குபுவென்று உள்ளே பாய்ந்துகொண்டிருந்தது. மழை பெருந்தூற்றலாகப் பெய்தது. அதன் சாரல் அவளது உடம்பை நனைத்துவிட்டது.

அன்று இரவெல்லாம் ஓயாமல் அடித்தது புயல். அந்தப் பெண்மணியின் துயர் நிரம்பிய அழுகையும் ஓயவில்லை. இரக்கம் மேலிட்டு, வேறு எதுவும் செய்யச் சக்தியற்றவனாய் அறைதோறும் அலைந்தேன். யாருமே இல்லை! ஆறுதல் கூறுவதற்கு யாராவது இருந்தால்தானே? ஆனால் நெஞ்சை இளகச்செய்யும் அந்த அழுகைமட்டும் எங்கிருந்து வந்தது?

''விலகிப் போ! போ விலகி! எல்லாம் பொய் - பொய்!'' - பைத்தியக்காரனுடைய கூச்சல் கேட்டது.

வானம் வெளுத்து வந்தது. அந்தப் பயங்கரப் புயல் காற்றையும் பாராமல் மேஹேர் ஆலி, வழக்கப்படி மாளிகையை வலம் வந்துகொண்டே இருந்தான், வழக்கமான கூச்சலுடன். 'ஒரு வேளை இந்த மேஹேர் ஆலியும் என்னைப் போல் இந்த மாளிகையில் வசித்தானோ? அதனால்தான் பைத்தியம் பிடித்துப்போய் இப்பாழும் கல்லின் வேட்கைக்கு ஆளாகி ஒவ்வொரு நாளும் விடிகாலையில் சுற்றி அலைகிறானோ?' என்று எனக்குள் ஓர் எண்ணம் உதித்தது.

நான் உடனே, கொட்டுகிற அந்த மழையில் நனைந்து கொண்டே போய் மேஹேர் ஆலியை அணுகி, ''மேஹேர், எது பொய்?'' என்று வினவினேன்.

என் வார்த்தைக்கு அவன் மறுமொழி தரவே இல்லை. என்னைத் தள்ளிக்கொண்டு, மலைப்பாம்பிடம் சிக்கிய பறவை போல் விகாரமாகக் கூவிக்கொண்டே மாளிகையைச் சுற்றிச் சுற்றி ஓடினான். ஏதோ ஒரு மோக வலையிலிருந்து தான் தப்புவதற்கு, ''விலகிப் போ! போ விலகி'' என்று எச்சரிக்கை செய்துகொண்டிருந்தான்.

அந்தப் பெருமழையில், நானும் அந்த உன்மத்தனைப் போலவே, என் அலுவலகத்தை நோக்கி ஓடினேன். குமாஸ்தா கரீம்காஜி அழைத்து, ''இதன் அர்த்தமென்ன? எனக்கு எல்லாம் தெளிவாகச் சொல்லு'' என்றேன்:

கிழவன் சொன்னதன் சாராம்சம் இது: ஒரு சமயம் எத்தனையோ ஆன்மாக்கள் தம் ஆசை நிறைவேறாமல் வட்டமிடும் இடமாம், இம்மாளிகை. எல்லையிலா இன்ப விளையாடல்

களும் சிங்கார ஆட்டங்களும் அந்த இடத்தில் நிகழ்ந்தனவாம். அந்தக் காமவேட்கையே - வியர்த்த மனோரதமே - பெருஞ்சாபத்தீடாக இந்த மாளிகையின் ஒவ்வொரு கல்லிலும் ஊறி இருக்கிறதாம்! மனிதன் எவனுவது தெரியாமல் அகப்பட்டுக்கொண்டால் அந்தப் பிசாசங்கள், அவனைத் துளித் துளியாக உறிஞ்சிவிடுமாம். மூன்று இரவுக்குமேல் இந்த வீடுதியில் தங்கினவர்களில் மேஹேர் ஆலி ஒருவனே உயிருடன் மீண்டு வந்தான். மற்றப் பேர் அதில் நுழைந்த பிறகு வெளியேறியதை யாருமே பார்க்கவில்லையாம்.

''ஆலல், நான் மீள்வதற்கு வழி ஒன்றும் இல்லையா?'' என்று அவனைக் கேட்டேன் திகிலுற்று.

கிழவன் அதற்கு, ''ஒரே வழிதான் இருக்கிறது. சற்றுத் தொல்லைதான். அதைச் சொல்லுகிறேன். ஆனல் அதற்கு முன் இந்தக் குல்பாகில் வாழ்ந்த ஓர் ஈரானி (பார்ஸி) அடிமைப் பெண்ணின் வரலாற்றைக் கூற வேண்டியது அவசியம். அந்த மாதிரி அதிசயமான, இதயம் திடுக்கிடும் படியான நிகழ்ச்சி உலகத்திலேயே முன்பின் நடந்திராது'' என்ருன்.

* * *

அப்போது கூலிகள் வந்து, ''வண்டி வருது, ஐயா'' என்றனர். இவ்வளவு சீக்கிரத்திலா? மடமடவென்று பெட்டி படுக்கைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டு வெளியே வந்ததுதான், வண்டியும் வந்து நின்றது. முதல் வகுப்பில், அப்போதுதான் இன்பத்துயிலிருந்து எழுந்த வெள்ளைக்காரன் ஒருவன், முகத்தை வெளியே நீட்டி, எந்த ஸ்டேஷனென்று கவனிக்கும்போது எங்களுடைய புதிய நண்பரைப் பார்த்து விட்டு, ''ஹல்லோ!'' என்று கூப்பிட்டான். நண்பருக்குத் தன் வண்டியிலேயே இடம் அளித்தான். நாங்கள் இருவரும் இரண்டாம் வகுப்பில் ஏறிக்கொண்டோம். அந்தப் பாபுவின் பூர்வோத்தரம் எங்களுக்குத் தெரியாது. கதை முடிந்த பிறகும் அவர் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

''பேர்வழி, நம்மை முட்டாள்கள் என்று எண்ணிக் கொண்டு இந்தக் கதையைச் சொன்னுன். கதை அவ்வளவும் பொய்; பூராவும் அவன் கட்டிய சரக்கே'' என்றேன்.

இது விஷயமாக மூண்ட தர்க்கத்தால் எனக்கும் என்னுடைய தியாஸொபிஸ்ட் உறவினனுக்கும் அதுமுதல் மனத் தாங்கல் மூண்டுவிட்டது.

அதிதி

காண்டாலியா கிராமத்து ஜமீன்தார் மதிலால் பாபு குடும்பத்துடன் படகில் தம் ஊருக்குச் சென்றுகொண் டிருந்தார். வழியில், மத்தியான்னம் ஆற்றங்கரை ஓரமாக் இருந்த ஓர் ஊரில் படகை நிறுத்திக் கட்டச் சொல்லிச் சமைய லுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தார். அப்போது ஒரு பிராம்மணச் சிறுவன் அங்கே வந்து, ''பாபு, நீங்களெல்லாம் எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டான். பையனுக்கு வயது பதினைந்து அல்லது பதினாறுக்கு மேல் இராது.

மதிலால் பாபு, ''காண்டாலுக்கு'' என்று பதில் அளித்தார்.

பிராம்மணச் சிறுவன், ''என்னைத் தயை செய்து ஏற்றிக் கொண்டு வழியில் நந்திக்கிராமத்தில் இறக்கிவிட முடியுமா?'' என்றான்.

பாபுவும் அதற்குச் சம்மதித்து, ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

''என் பெயர் தாராபதன்.''

பையன் நல்ல சிவப்பு; கண்ணுக்கு நன்றாக இருந்தான். பெரிய பெரிய விழிகள்; சிரித்த முகம்; மெல்லிய அழகான அதரம். அரையில் அழுக்கடைந்த ஒரு வேட்டி. மேலே ஒன்றுமில்லை. வெகு ஜாக்கிரதையாகக் கடைசல் பிடித்தது போன்ற தேகக்கட்டு. 'முன் பிறவியில் யாரோ முனிவ னுடைய புத்திரனாய் இருந்திருக்க வேண்டும்; அந்த நிர்மல மான தவச்சிறப்பால் உடம்பு முழுவதும் பிரம்ம தேஜஸ் சுடர்கிறது என்றுதான் சொல்லத் தோன்றும்.

மதிலால் பாபு அவனை ஆதரவுடன் அழைத்து, ''அப்பா! நீராடிவிட்டு வா. இங்கேயே சாப்பிடலாம் எங்களோடு'' என்றார்.

* * * *

தாராபதன், ''அப்படியே'' என்று சொல்லிவிட்டு, சங்கோசப்படாமல் உடனே சமையல் காரியத்தில் தானும் பங்கெடுத்துக்கொண்டான். மதிலால் பாபுவின் பரிசாரகன் ஹிந்துஸ்தானிக்காரன். மீன் கீன் நறுக்கி அவ்வளவாகப் பழக்க

மில்லை அவனுக்கு. தாராபதன் இதையெல்லாம் தானே சொற்ப நேரத்திற்குள் நன்முகச் செய்து முடித்தான்; இரண்டொரு கறிகாய்கூடப் பக்குவமாகச் சித்தம் செய்திருந்தான். சமையல் வேலை முடிந்ததும் தாராபதன் ஆற்றில் நீராடி விட்டுத் தன் மூட்டையை அவிழ்த்துத் தூய ஆடை ஒன்றை எடுத்து உடுத்தான். ஒரு சின்ன மரச்சீப்பை எடுத்து முன் பக்கம் தொங்கிக்கொண் டிருந்த மயிரைக் கழுத்துப் பக்கம் தள்ளி வாரிக்கொண்டான். பூணூலைக் கசக்கி, அலசிப் போட்டுக்கொண்டு, படகில் காத்திருந்த மதிலால் பாபுவினிடம் வந்து நின்முன்.

மதி பாபு அவனைப் படகினுள் அழைத்துச் சென்முர். அங்கே அவர் மனைவி அன்னபூர்ணுவும், ஒன்பது வயதான அவருடைய ஒரே பெண்ணும் உட்கார்ந்திருந்தார்கள். அன்ன பூர்ணு அந்த அழகிய இளைஞனைப் பார்த்ததும் பூரித்துப் போனுள். 'யார் பிள்ளையோ, பாவம்! எங்கிருந்து வருகிறனே? இவன் தாய் எப்படித்தான் இவனை விட்டுவிட்டு இருக்கிறளோ?' என்றெல்லாம் எண்ணினுள்.

மதி பாபுவுக்கும் அந்தச் சிறுவனுக்கும் பக்கத்தில் பக்கத்தில் இலை போட்டுப் பரிமாறினுர்கள். பையன் அப்படி ஒன்றும் சாப்பாட்டு ராமனுகக் காணவில்லை. அவன் கொஞ்சமாக உண்பதைப் பார்த்து அன்னபூர்ணு, 'சங்கோசம், பாவம்!' என்று எண்ணிக்கொண்டு, ''அது வேண்டுமா? இது வேண்டுமா?'' என்று பரிவுடன் கேட்டாள். ஆனுல் ஓர் அளவுக்கு மேல் அவன் போட்டுக்கொள்ளாமல் எழுந்துவிட்டான். பையன் தன் விருப்பப்படி நடப்பவன், ஏதோ உண்ணவேண்டியது கடமை என்று இருப்பவன் எனத் தெரியவந்தது. எதையும் கூச்சப்பட்டுக்கொண்டு செய்பவனுகவே தோன்றவில்லை.

எல்லோரும் சாப்பிட்டானதும், அன்னபூர்ணு அவனை அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டு அவனுடைய பூர்வோத்தரமெல்லாம் விசாரிக்கத் தொடங்கினுள். அப்படி விவரமாக ஒன்றும் தெரியவில்லை. பையன் ஏழு எட்டு வயதில், தானே தன் மனம்போன போக்கில் வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டதாகச் சொன்னுன்.

அன்னபூர்ணு, ''உனக்கு அம்மா இல்லையா?'' என்று கேட்டாள்.

தாராபதன்: இருக்கிறுள்.

அன்னபூர்ணு: உன்பேரில் ஆசை இல்லையா என்ன அவளுக்கு?

தாராபதன் இந்தக் கேள்விக்கு மிகவும் சாமர்த்தியமாக,

''ஏன் இல்லாமல்?'' என்று சிரித்துக்கொண்டே பதில் தந்தான்.

அன் : பின்னே ஏன் அவளே விட்டுவிட்டு வந்தாய்?

தாரா : அவளுக்குத்தான் இன்னும் நாலு பிள்ளைகளும் மூன்று பெண்களும் இருக்கிறார்களே!

இந்த அதிசயமான பதிலைக் கேட்டதும் அன்னபூர்ணு மனம் நொந்தவளாய், ''அம்மாடி!..அப்படியெல்லாம் சொல்லாதே! கையில்தான் ஐந்து விரல் இருக்கின்றனவே என்று ஒன்றை வெட்டி எறிந்துவிட முடியுமா? என்றாள்.''

அறியாத பையன்தானே? அப்படி வயது ஒன்றும் அதிகமாகிவிடவில்லையே! அவன் வரலாறும் அதற்கேற்பச் சுருக்கமாய்இருந்தது. ஆனால், பையன் என்னவோ புதுமாதிரி தான். பெற்றோர்களுக்கு நாலாவது பிள்ளை; அவன் குழந்தையாய் இருக்கும்போதே தந்தை இறந்துவிட்டார். பிள்ளை குட்டிகள் நிறைந்த வீடாக இருந்தாலும் தாராபதியை மட்டும் எல்லோரையும்விட ஆதரவோடு கவனித்து வந்தார்கள். அம்மா, அண்ணு, அக்கா, அக்கம்பக்கத்து வீட்டார் எல்லாரும் அவனிடம் அன்பாய் இருந்தார்கள். அடித்தால் எல்லாருக்கும் வருத்தமாக இருக்குமென்று வாத்தியார்கூட அவனைத் தொடுவதில்லை. வீட்டைவிட்டுப் போவதற்கு ஒரு காரணமும் இல்லை. கவனிப்பார் இல்லாமல் தத்தாரியாய், எப்போதும் பிறத்தியார் வீட்டுத் தோட்டத்தில் புகுந்து பழம் திருடி அவர்களிடம் உதை வாங்கிக்கொண்டு திரிந்தான் ஒரு நோஞ்சல் பையன்; அவன் தாயோ நாளடைவில் ஏதோ ஓர் இடத்தில் அவனை நினைத்துக்கொண்டு வேதனைப்படுவாள்; அந்தப் பையன்கூட ஓய்ந்துபோய்க் கடைசியில் அம்மா மடியில் தான் வந்து சாய்ந்தான். ஆனால் எல்லோரும் கண்ணுக்குக் கண்ணைகப் பாதுகாத்து வந்த இந்தப் பையனை மனசில் கொஞ்சங்கூட ஈரம் இல்லாமல், வெளியிலிருந்து வந்த ஒரு நாடகக் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு கிராமத்தைவிட்டு ஓடிவிட்டான். எல்லோரும் போய் அவனைத் தேடி அழைத்து வந்தார்கள். அவன் தாய் மார்போடு அவனை அணைத்துக் கொண்டு பொல பொலவென்று கண்ணீர் சொரிந்தாள். அவன் சகோதரிகளும் அழுதுவிட்டார்கள். அவன் தமையன் பெரியவன் என்ற முறையில் பையனைச் சற்றுக் கண்டித்தான். ஆனாலும் உடனே மனசு இளகிப்போய் நிறைய வேடிக்கை விளையாட்டுச் சாமான், தின்பண்டம் எல்லாம் வாங்கித் தந்தான். அக்கம்பக்கத்து வீட்டாரெல்லாம் பையனைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துவந்து இன்னும் அதிக ஆதரவு காட்டிக் கேட்டதையெல்லாம் கொடுத்தனர். ஆனால் என்ன

தான் அவர்கள் அன்போடு இருக்கட்டும், ஓர் இடத்தில் கட்டுண்டு கிடப்பது அவனுக்குச் சகிக்கவில்லை. அவன் பிறந்த வேளை, இப்படி வீடு வாசல் இல்லாமல் அலைய வேண்டியிருந்தது. ஆற்றில் புதுப் படகொன்று போனாலோ, கிராமத்தில் இருக்கும் பெரிய அரசமரத்தின் கீழ்ப் பரதேசி எவனாவது வந்து தங்கினாலோ, ஆற்றங்கரையோரப் பொட்டல்களில் குறவர்கள் சின்னச் சின்னதாகப் பனம்பாய் பின்னி, மூங்கிலைப் பத்தை பத்தையாய்ச் சீவிக் கூடை முடைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாலோ, ஆதரவும் அன்பும் இல்லாவிட்டாலும் வெளியில் மனம் போனபடி திரியலாமே என்று மனம் அலைபாயும் அவனுக்கு. அப்புறமும் இரண்டு மூன்று தரம் இப்படி ஓடிப் போய்க்கொண்டிருக்கவே, உறவினர்களும் ஊராரும் 'தொலையட்டும்' என்று பையனைக் கை கழுவி விட்டார்கள்.

முதலில் ஒரு நாடகக் கூட்டத்தில் சேர்ந்தான். அதன் முதலாளி பையனைத் தன் பிள்ளையைப்போலவே ஆதரவோடு கவனித்து வந்தான். அந்தக் கோஷ்டியில் இருந்த சிறுவர் பெரியவர் எல்லாருக்கும் அவனைக் கண்டால் பிரியம். ஒரு சமயம் அவர்கள் தங்கியிருந்த வீட்டு எசமானரும் அங்கிருந்த பெண்களும் பையனைத் தனியே வரவழைத்து அவனுக்கு வெகுமானம் எல்லாம் கொடுத்தார்கள். இப்படி இருக்கும்போது திடீரென்று ஒரு நாள் யாரோடும் ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் எங்கோ மறைந்துவிட்டான்; அவர்கள் எவ்வளவுதான் தேடியும் அவன் போன இடமே தெரியவில்லை.

தாராபதனை மான்குட்டிக்கு நிகர் எனலாம். எந்தப் பந்தத்துக்கும் உட்பட மாட்டான். மான்குட்டி போலவே சங்கீதமென்றால் அவனுக்குப் பிரியம். நாடக கோஷ்டியில் பாட்டுப் பாடுவதைக் கேட்டுத்தான் முதல் முதலாக வீட்டை விட்டு ஓடி வந்தான். அவன் இன்னிசையைக் கேட்டுத் தலையை ஆட்ட ஆரம்பித்துவிடுவான். தாளத்தைக் கேட்டதும் துள்ளிக் குதிப்பான். அவன் மிகவும் சிறிய பையனாக இருந்தபோதுகூட, சங்கீத சபைகளில் தேர்ந்த ரசிகனைப்போல் தன்னை மறந்து தலையை ஆட்டுவான்; இதைப் பார்த்துப் பெரியவர்களெல்லாம் கூடச் சிரிப்பார்கள். சங்கீதம் என்ன? ஆவணி, புரட்டாசி மாதங்களில் இலை அடர்ந்த மரத்தின்மேல் தாரை தாரையாக மழை பொழிந்தாலோ, வானத்தில் மேகம் திரண்டு இடியும் புடையுமாக வந்தாலோ, காட்டில் தாயை இழந்து தவிக்கும் ராட்சசக் குழந்தைபோல் காற்று அலறினாலோ, எல்லாப் பந்தத்தையும் உதறி எறிந்துவிட்டு விருப்பம்போல் அலையவேண்டும் என்ற ஒரு வெறி மூளும்

அவன் மனத்தில். பகற்பொழுது நிச்சந்தடியாக இருக்கையில் ஆகாயத்தில் வெகு தூரத்திலிருந்து வரும் பருந்தின் குரல், மழைக் காலத்தில் அந்தி வேளையில் தவளைகள் போடும் சத்தம், நள்ளிரவில் நரியின் ஊளை - இவையெல்லாம் அவனுக்கு மனக் கலக்கத்தை உண்டுபண்ணும். இப்படிச் சங்கீதப் பித்துப் பிடித்துவிடவே ஒரு கூத்துக்காரக் கோஷ்டியில் சேர்ந்து கொண்டான். அந்தக் கூத்து நடத்துபவன் சிரத்தையோடு பையனுக்கு நன்முகப் பாட்டுக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தான். சிந்து முதலியவற்றை மனப்பாடம் பண்ணச் சொன்னான். பையனைத் தன் உயிருக்குயிராய்க் கருதி அவனுக்கு அறிவூட்டி அன்போடு கவனித்து வந்தான். கூட்டில் அடைபட்டுக் கிடந்த அந்தக் கிளிப்பிள்ளை கொஞ்சம் பாடத் தெரிந்ததும் ஒரு நாள் விடியற்காலை பறந்தோடிப் போய்விட்டது.

* * * *

கடைசியாகச் 'சர்க்கஸ்' கோஷ்டி ஒன்றில் சேர்ந்தான். ஆனி மாதக் கடைசியிலிருந்து ஆடி மாதம் முடியும் வரை அந்தப் பக்கத்தில் தொடர்ந்தாற்போல் ஒவ்வோர் ஊரிலும் தேர்த் திருவிழாவின்போது சந்தை கூடும். அப்போது இரண்டு மூன்று நாடகக் கோஷ்டியார், கூத்துக்காரர், பாடகர், நாட்டியக்காரி எல்லோரும் வருவார்கள். சாமான்களை யெல்லாம் படகில் ஏற்றிக்கொண்டு, சிற்றூற்றையும் கிளையாற்றையும் கடந்து, ஓர் இடத்தில் விழா முடிந்ததும் மற்றோர் இடத்திற்குப் போனவண்ணம் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். இதற்கு முந்திய ஆண்டு முதல் கல்கத்தாவிலிருந்து ஒரு சிறு 'சர்க்கஸ்' கோஷ்டி இந்த உற்சவத்திற்கு வருவது உண்டு. தாராபதன் முதலில் படகில் ஏறிக்கொண்டு கடைக்காரர் கூடவே சுற்றினான்; அப்போது பீடா விற்றுக் கொண்டிருந்தான். அப்புறம், சிறுவருக்கு இயற்கையாக உள்ள ஆவலினால் இந்தச் 'சர்க்கஸ்' கோஷ்டியில் உள்ள பயல்கள் செய்துகாட்டும் வித்தைகளைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான்; அந்தக் கோஷ்டியில் சேரவும் சேர்ந்தான். தாராபதன் தானே நன்முகப் புல்லாங்குழல் வாசித்துப் பழகியிருந்தான். 'சர்க்கஸ்' நடக்கும்போது துருத கதியில் குழல் இசைக்கவேண்டும்; இதுதான் அவன் வேலை.

இந்தக் கோஷ்டியை விட்டுத்தான் இப்போது ஓடி வந்து விட்டான். நந்திக் கிராமத்து ஜமீன்தார் ஆதரவில் பெரிய நாடகக் கொட்டகை ஒன்று திறக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டான். உடனே தன் சின்னஞ்சிறு மூட்டையை எடுத்துக்கொண்டு அங்கே போகப் புறப்பட்டான்; அப்போது தான் மதிபாபுவைக் காண நேரிட்டது.

தாராபதன் இப்படி ஒவ்வொரு கோஷ்டியில் சேர்ந்து பழகியபோதிலும் முன் போலவே மெய்ம்மறந்து கற்பனையில் ஈடுபட்டிருப்பான். இந்த இயல்புதான் அவனை எந்தக் கோஷ்டியிலும் முன்னுக்கு வரவொட்டாமல் செய்துவிட்டது. அவன் உள்ளம் யதேச்சையாகத் திரியும் பறவை போன்றது. எவ்வளவோ இடத்தில் என்ன என்னவோ வசவெல்லாம் கேட்டிருக்கிறான்; எத்தனையோ ஆபாசமான காட்சிகளையும் கண்டிருக்கிறான். ஆனால் அவையெல்லாம் அவன் மனத்தில் கண நேரங்கூட நிலைக்கவில்லை. எதன் பேரிலும் அவனுக்குப் பற்றுதல் இல்லை. அதுதான் இல்லையென்றால், எந்த விதமான பழக்கத்திற்கும் ஆளாகவில்லை. சேறு படிந்து குழம்பிய நீரில் மூழ்கி விளையாடியும் அழுக்கடையாமல் தூய வெண் சிறகுடன் திகழும் அன்னப் பறவைபோல் இருந்து வந்தான். அதனாலேயே பால் வடியும் அவன் முகம் வாடாமல் ஒளிர்ந்தது. மதிலால் பாபுவும் இதனால்தான் பூர்வோத்தரம் ஒன்றும் விசாரியாமல் அவனை ஆதரவோடு அழைத்து வந்தார்.

2

சாப்பாடானதும் படகு புறப்பட்டது. அன்னபூர்ணி பரிவுடன் அவன் வீட்டுச் சமாசாரம், உறவினர்களைப்பற்றிய செய்தி எல்லாவற்றையும் விசாரித்தாள். தாராபதன் சுருக்கமாக அதற்கெல்லாம் பதில் கூறிவிட்டு வெளியில் வந்து 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான். மழைக் காலமானதால் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடியது. அந்த மயக்கத்தில் இயற்கையன்னையை அறை கூவி அழைப்பதுபோல் இருந்தது அக்காட்சி. வானத்தில் மேகமே இல்லை. ஆற்றங் கரையோரம் பாதி மூழ்கியிருக்கும் நாணற்புதர்; அதற்குமேல் அடர்ந்து வளர்ந்த தீஞ்சுவைக் கரும்புத் தோட்டம்; அதன் எதிர்க் கரையில் அடிவானத்தை முத்தமிடும் வானத்தின் கரிய ரேகை. பழங் கதைகளில், பொன்னால் ஆன மந்திரக்கோல் பட்டு உயிர் பெற்று எழுவதுபோல் இவை யாவும் வெயில் எரிக்கும் நிச்சலமான அவ்வகண்ட வானவெளியிடையே புதிய எழிலுடன் திகழ்ந்தன. உலகமே உணர்வும், துடிப்பும், செருக்கும், ஒளியும், புதுமையும், நிறைவும் கொண்டு விளங்கியது.

தாராபதன் படகின் மேல்தட்டில் போய்ப் பாய் மரத்தின் நிழலில் அமர்ந்தான். ஆற்றங்கரை ஓரம் பசுமையாகத் தோன்றும் பொட்டல் நிலம், வெள்ளத்தில் மூழ்கிய சணல் வயல்கள், பச்சைப்பசேல் என்று கார்ப் பயிர் ஆடுவது, படித்துறையிலிருந்து கிராமத்திற்குப் போகும் பாதை, மரங்கள்

நெருங்கி வளர்ந்து நிழலடர்ந்த கிராமம் எல்லாம் ஒவ்வொன்றுக அவன் கண்முன் வந்துகொண்டே இருந்தன. இந்த நீரும், நிலமும், வானும், நாற்புறமும் காணும் அசைவும் உணர்வும், ஒலியும், நிலம் வானம் இவற்றின் பரப்பும், விசித்திர விநோதங்களும், கணக்கற்ற தூரமும் - அளவில் அடங்காது அழிவற்றதாய்க் கண்கொட்டாமல் மௌனமாய்ச் சுழலும் இப் பேருலகமே அவ்வாலிபனுக்குப் பிடித்திருந்தன. சஞ்சல சுபாவமுடையை அந்தப் பையனை அணைத்து ஆதரவு காட்டி எந்தப் பந்தத்திற்கும் உட்படுத்தவில்லை அவை. ஆற்றங்கரையில் பசுங்கன்று ஒன்று வாலைக் கிளப்பிக்கொண்டு ஓடியது. நாட்டுப்புறத்துக் குதிரைக் குட்டி ஒன்று முன்னங் காலில் கட்டியிருக்கும் கட்டை தடுக்க எகிறி எகிறிப் புல் மேய்ந்துகொண்டிருந்தது. செம்படவர்கள் வலை கட்டுவதற்காக நட்டிருக்கும் மூங்கில் கழிமேல் மீன்கொத்திப் பறவை உட்கார்ந்து சமயம் பார்த்துக் 'குப்' என்று புனலில் மூழ்கி மீன்களை கௌவிப் பிடித்துக்கொண்டிருந்தது. சிறுவர்கள் நீரில் குதித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண் டிருந்தார்கள்; பெண்டுகள் ஓவென்று உரக்கச் சிரித்து வம்பளந்துகொண்டே மார்பளவு தண்ணீரில் நின்று தலைப்பைப் பிரித்து இரண்டு கையாலும் துவைத்து அலசியவண்ணம் இருந்தார்கள். மீன்காரிகள் புடைவைக் கொசுவத்தைத் தூக்கி இடுப்பில் செருகிக்கொண்டு கையில் கூடையுடன் செம்படவர்களிடமிருந்து மீன் வாங்கிக்கொண் டிருந்தார்கள். அப்போதுதான் பார்ப்பதுபோல் சலிப்பில்லாமல் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தான். அப்படியும் அவன் ஆவல் தீரவில்லை. படகின் மேல் தட்டிலுள்ள துடுப்புச் செலுத்துபவன், படகோட்டி முதலியவர்களுடன் பேச்சுக் கொடுத்தான். நடுநடுவே அவசியமாயிருந்தால் தானும் அவர்களுக்கு ஒத்தாசையாகக் கழியை வாங்கித் தள்ளுவான்; படகோட்டி புகையிலை போடப் போனால், தானே சுக்கானைப் பிடித்துக்கொள்வான்; எந்த எந்தப் பக்கம் திரும்ப வேண்டும் என்று பார்த்து அப்படியெல்லாம் சாமர்த்தியமாகத் திருப்புவான்.

சாயங்காலம் ஆனதும் அன்னபூர்ணை அவனைக் கூப்பிட்டு, ''இராத்திரி நீ என்ன சாப்பிடுகிற வழக்கம்?'' என்று கேட்டாள்.

தாராபதன், ''கிடைத்ததைச் சாப்பிடுவேன்; இல்லாவிட்டால் சும்மா இருப்பேன்'' என்றான்.

இந்த அழகிய பிராம்மணச் சிறுவன் இப்படி அசிரத்தையாக இருந்தது அன்னபூர்ணைக்குச் சுறுக்கென்று பட்டது. வீட்டை வீட்டு ஓடி வந்துவிட்ட இந்தப் பையனை எப்படியா

வது சாதம் போட்டு நன்றாக உடுத்துத் திருப்தி பண்ண வேண்டும் என்று அவளுக்கு உள்ளூற ஆசை. ஆனால் என்ன செய்தால் பையனுக்குப் பிடித்திருக்கும் என்று அவளுக்குப் புரியவில்லை. அன்னபூர்ணு பரிசாரகரை அனுப்பி, அண்டையி லுள்ள கிராமத்திலிருந்து பாலும் தித்திப்புப் பண்டங்களும் வாங்கிவரச் சொன்னாள். தாராபதன் சாப்பிடவேண்டிய அளவுக்கு உண்டான். ஆனால் பால்மட்டும் குடிக்கவில்லை. மதிலால் பாபு அதிகமாகப் பேசும் இயல்பு உடையவரல்ல. அவர்கூட, ''பால் குடியேன், அப்பா'' என்று கேட்டுக்கொண் டார். பையன், ''எனக்குப் பிடிக்காதே'' என்று சுருக்கமாகப் பதில் கூறிவிட்டான்.

* * * *

இப்படி ஆற்றிலேயே இரண்டு மூன்று நாட்கள் கழிந் தன. சமையல், கடை கண்ணிக்குப் போவது, படகோட்டு வது முதலிய எல்லாக் காரியங்களிலும் தானே வலுவில் வந்து உதவி, திறமையோடு நடந்துகொள்வான். எதுவாய் இருந்தா லும் சரி குதூகலத்துடன் பார்ப்பான்; எந்தக் காரியமாய் இருந்தாலும் அதிலேயே மனம் ஒன்றிச் செய்வான். கண், கை, மனம் எல்லாம் சுறுசுறுப்பாக இருந்தன. நித்திய சஞ்சல முடைய இயற்கையைப்போல், அவன் நிச்சிந்தையாகவும் அலட்சியமாகவும் இருந்தும் எப்போதும் காரியத்தில் கருத்து உடையவனாகத்தான் இருந்தான். தன்னுடையது என்று சொல்லிக்கொள்ள மனிதனுக்கு இந்தப் பூமி ஒன்று இருக் கிறது. ஆனால் தாராபதன் அப்படியல்ல; ஆதி அந்தமற்றுப் பெருகியோடும் பெரு வெள்ளத்தினிடையே ஆனந்தத்தால் துள்ளும் ஓர் அலை அவன். வருங்காலத்தையோ எதிர் காலத்தையோ பற்றி அதற்கென்ன அக்கறை? முன்னேக்கிச் செல்வது ஒன்றே அதன் நோக்கம்.

பல நாள் இப்படிப் பல பேரோடு பழகினதால் எத்தனையோ அற்புதமான வேலைகளையெல்லாம் கற்றுக்கொண் டான். எந்த விதமான கவலையும் இராமல் நிர்மலமாய் இருந் தது அவன் உள்ளம். அதனால் எல்லோரும் ஆச்சரியப்படும் படி ஒவ்வொரு விஷயமும் தெளிவாக அவன் கவனத்தில் இருந்து வந்தது - சிந்து, துக்கடா பாடுவது, கதா காலட் சேபம், கீர்த்தனம், நாடக அபிநயம் எதெது உண்டோ அதெல்லாம்! மதிலால் பாபு வழக்கம்போல் ஒரு நாள் மாலை இராமாயணம் வாசித்துக்கொண் டிருந்தார். அவர் மனைவி யும் பெண்ணும் கேட்டுக்கொண் டிருந்தார்கள். குச லவர் கதைப்பற்றி அதில் படிக்கும்போது தாராபதன் உற்சாகத்தை அடக்க முடியாமல் படகின் மேல் தட்டிலிருந்து இறங்கி வந்து,

''புத்தகத்தைக் கொஞ்சம் மூடி வையுங்கள். நான் குசலவர் சிந்து பாடுகிறேன். கேளுங்கள்'' என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டு அவன் அதைப் பாடத் தொடங்கினான். குழலிசைப்பதுபோல் இனிமையான குரல். தாசுராய் பாடியதை மோனே எதுகை பிசகாமல் அப்படியே மடமடவென்று பொழிந்து தள்ளினான். துடுப்பைச் செலுத்துபவன், படகோட்டி எல்லோரும் அறை வாயிலண்டை வந்து எட்டிப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். நகைச்சுவையும், அவலச் சுவையும் கலந்த அந்த இன்னிசை வெள்ளம் ஆற்றங்கரை, அந்தி வானம் எங்கும் பெருக்கெடுத்து ஓடியது. இரு கரைகளிலும் எல்லோரும் ஆவலுடன் மௌனமாய் அதைக் கேட்டு இன்புற்றனர். அக்கம்பக்கத்தில் படகிலே சென்றுகொண்டிருந்தவர்கள் கொஞ்ச நேரம் மனமுருகிச் செவி கொடுத்துக் கேட்டனர். பாட்டு நின்றதும் எல்லோரும் பெருமூச்சு விட்டு, ''இதற்குள்ளேயா நிறுத்திவிட்டான்?'' என்று ஏங்கினர்.

அன்னபூர்ணாவின் கண்களில் நீர் துளும்பியது. அந்தப் பையனை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு மார்போடு அணைத்து உச்சி மோக்கவேண்டும்போல் இருந்தது அவளுக்கு. 'இந்தச் சிறுவனை எப்படியாவது நம்மிடத்தில் வைத்துக் கொண்டால் நமக்குப் பிள்ளை இல்லாக் குறை நீங்கும்' என்று எண்ணினாள் மதிபாபு. ஆனால் அந்தச் சிறுமிக்கு - அவர் பெண் சாருசசிக்கு மட்டும் - உள்ளுக்குள்ளே பொறுமையும் எரிச்சலும் குமுறின.

3

சாருசசி, அவள் பெற்றோருக்கு ஒரே குழந்தை. ஆகவே, அவர்கள் பூரண அன்புக்கும் உரியவளாய் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இன்னதன் பேரில்தான் ஆசை என்பது கிடையாது; பிடிவாதத்துக்கும் ஓர் எல்லை இல்லை. உணவு, உடை, தலை பின்னிக்கொள்வது முதலிய எல்லா விஷயங்களிலும் அவளுக்கு ஆசைதான். ஆனாலும் எதிலும் நிலை இல்லை. யாராவது அழைத்திருப்பார்கள்; அன்று, ''இதுதான் உடுத்துவேன்; இந்த நகைதான் போட்டுக்கொள்வேன்' என்று தன் பெண் வீண் பிடிவாதம் பிடிக்கப் போகிறாளே என்று அவள் தாயாருக்குத் திகிலாய் இருக்கும். தலை பின்னினது தனக்குப் பிடித்திராவிட்டால், அன்று முழுவதும் எத்தனை தடவைதான் அதைப் பின்னினாலும் அவளுக்குச் சரிப்படாது. பிரமாதமாக அழுது ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துவிடுவாள். இதைப் போலவேதான் எல்லா விஷயத்திலும். ஒவ்வொரு சமயம் புத்தி தெளிந்தும் இருக்கும். அப்போதெல்லாம் இந்தப்

பிடிவாதம் தலை காட்டாது. தாய்மீது அன்பு பெருகி ஓடும். 'போதும், போதும்' என்னும்படி மேலே விழுந்து அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டுச் சிரித்துக் கொஞ்சுவாள். அந்தப் பெண்ணை யாராலும் அறிந்துகொள்ள முடியாது; அவளே ஒரு புதிர்!

இப்படி இரண்டுங் கெட்டானாக இருந்த அந்தப் பெண்ணுக்குத் தாராபதனைக் கண்டால் ஆகவில்லை; உள்ளூற ஒரு வெறுப்பு. பெற்றோரையும் சும்மா விடவில்லை; வாட்டி யெடுத்தாள். சாப்பாட்டு வேளையில் அழ உட்கார்ந்து விடுவாள்; தாலத்தை விட்டெறிவாள்; சமையலே நன்றா யில்லை என்பாள்; வேலைக்காரியை அடிப்பாள். இவ்வித மெல்லாம் அகாரணமாகக் கோபித்துக்கொள்வாள். தாராபதன் செய்கிற காரியமெல்லாம் மற்றவர்களுக்குப் பிடித்திருந்தது ஒருபுறம் இருக்கட்டும்; அவளுக்குப் பிடித்திருந்தாலும், ஏனோ அவன்மேல் ஆத்திரமே அதிகமாக வந்தது. தாராபதன் எவ்வளவுதான் புத்திசாலியாக இருந்து என்ன? அவள் அதை ஒப்புக்கொள்வாளா? வரவர அவளுக்கு அவன் மேல் வெறுப்புத்தான் வளர்ந்தது. தாராபதன் குசலவர் சிந்து பாடின அன்று அன்னபூர்ணா, 'பசு பட்சிகளெல்லாங் கூடச் சங்கீதம் என்றால் மயங்கி நிற்கின்றனவே; நம் பெண்ணுக்கும் இதைக் கேட்டு மனசு மாறியிருக்கும்' என்று எண்ணி, "சாரு! எப்படி இருந்தது?" என்று கேட்டாள். அந்தப் பெண் பதில் ஒன்றும் சொல்லாமல் தலையைமட்டும் வேகமாக அசைத்தாள். அதற்கு, 'கொஞ்சங்கூட நன்றாகவே இல்லை; எப்போது கேட்டாலும் பிடிக்கவில்லை என்றுதான் சொல்வேன்' என்று அர்த்தம்.

* * *

சாருவுக்குப் பையன்மேல் பொறுமை என்று கண்டு கொண்டாள் அவள் தாய். அதற்குமேல் பெண்ணெதிரில் அவனைப்பற்றி ஒரு வார்த்தையும் எடுப்பதில்லை. சாயங்காலம் பொழுதோடு சாப்பிட்டுவிட்டுச் சாரு படுத்துக்கொள்வாள். அன்னபூர்ணா படகின் அறை வாயிற்படியருகில் உட்கார்ந்து கொள்வாள். அவனும் ஆரம்பிப்பான். அந்த இருள் செறிந்த அந்தி நேரத்தில் ஆற்றங்கரையோரமுள்ள கிராமம் அழகும் அமைதியும் திகழ மௌனமாய் அந்த இசை வெள்ளத்தில் மூழ்கியிருக்கும். உள்ளத்தில் அன்பு கனிய, பாட்டின் நயத்தில் மெய்ம்மறந்து இருப்பாள் அன்னபூர்ணா. அப்போது திடீரென்று சாரு படுக்கையை விட்டு எழுந்து அவசரமாக வெளியில் வந்து ரோஷங் குமுற அழுதுகொண்டே, "அம்மா, என்னடி இது? பெரிய இரைச்சலாய் இருக்கிறதே! எனக்குத்

தூக்கமே வரவில்லை'' என்பாள். அப்பாவும், அம்மாவும் இப்படித் தன்னைத் தனியே தூங்கவிட்டுத் தாராபதனண்டை உட்கார்ந்து பாட்டுக் கேட்டுக்கொண்டிருப்பது அவளுக்குச் சகிக்கவில்லை. பளபளக்கும் கருவிழிகள் கொண்ட அந்தப் பெண்ணின் சுபாவமே தாராபதனுக்கு வேடிக்கையாய் இருந்தது. அவளுக்குக் கதை சொல்லிப் பார்த்தான்; பாட்டுப் பாடிக் காண்பித்தான்; குழல் இசைத்தான்; எதுதான் பண்ணி என்ன? அவளை வசப்படுத்த முடிந்தால்தானே? ஆனால் ஒன்று; பகல் வேளைகளில் தாராபதன் நீராட ஆற்றில் இறங்குவான். முழுவெள்ளத்தில் ஒல்லியான அந்தச் சிவந்த தேகத்தை மிகவும் இயற்கையாக வளைத்துத் திரித்து அவன் பலவிதமாக நீந்தி விளையாடும்போது ஒரு ஜலதேவதை போல் காணுவான். இதுமட்டும் அவள் மனசைக் கவர்ந்தது. அவன் எப்போது குளிக்க வருவான் என்று காத்துக்கொண்டே இருப்பாள். ஆனாலும் தன் ஆவலை வெளியில் காட்ட மாட்டாள். கம்பளிக்குட்டை போட்டுக்கொண்டே மிக்க சாமர்த்தியமாக நடுநடுவே, அவன் நீந்தி விளையாடுவதை அலட்சியமாகக் கவனிப்பாள்.

4

நந்திக் கிராமம் எப்போது போயிற்றோ தாராபதனுக்கு அது நினைவே இல்லை. எப்போதாவது பாய் விரித்துக் கொண்டும், எங்கேயாவது நங்கூரம் போட்டுக்கொண்டும், இப்படி நதி வழியாகவும் கிளைநதி வழியாகவும் மிகவும் நிதானமாக அந்தப் பெரும் படகு போய்க்கொண்டிருந்தது. அந்நதிகளைப் போலவே நாட்களும் அமைதியும் எழிலும் விசித்திரமும் இனிமையும் நிறைந்து மெல்ல ஊர்ந்து சென்றன. படகில் செல்வோர் எவருக்கும் எந்த அவசர வேலையும் இல்லை. பகலில் நீராடி விட்டுச் சாப்பிட அதிக நேரம் ஆகும். சாயங்காலமாயிற்றோ இல்லையோ, பெரிய கிராமமாகத் தோன்றினால், அங்கே காட்டின் ஓரம் படித்துறை யருகில் படகைக் கட்டிவிடுவார்கள். சில்வண்டுகளின் ரீங்காரம் எங்கும் கேட்கும்; மின்மினிப் பூச்சிகள் மரத்தில் ஒளி விடும்.

இப்படியே காண்டாலியா போய்ச் சேரப் பத்து நாட்கள் ஆகிவிட்டன. ஜமீன்தாரின் வரவை அறிந்து அவர் மாளிகையி லிருந்து பல்லக்கும், குதிரை வண்டியும் வந்து காத்துக்கொண் டிருந்தன. மூங்கில் தடியேந்திய ஜவான்கள் வேட்டுப் போட்டார்கள்; கிராமத்திலுள்ள காக்கைக் கூட்டம் கலவரம் அடைந்து என்றும் இராதபடி 'காகூ' என்று இரைச்சலிட்டது.

அந்தத் தடபுடலில் வெகு நேரம் கழிந்தது; இதற்குள் தாராபதன் படகைவிட்டு வேகமாக இறங்கி ஒரு முறை கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டான். இரண்டு மூன்று மணி காலத்துக்குள் சிலரை அண்ணு என்றும், பெண்டுகளை அக்கா என்றும், மாமியென்றும் இப்படியெல்லாம் அழைத்துக் கிராமத்தில் இருந்த எல்லாரோடும் உறவு கொண்டாட ஆரம்பித்துவிட்டான். இவ்வளவு விரைவில் எல்லோரையும் சிநேகம் பிடித்துக்கொண்டதற்குக் காரணம், அவனுக்கு ஒரு பிக்கலும் இல்லை. வந்த சில நாட்களுக்குள்ளேயே அவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டான் அச்சிறுவன்.

பையன் தன்னைப் போலவே பிறத்தியாரையும் எண்ணி ஒட்டிப் பழகியதே இதற்குக் காரணம். பந்தம் ஒன்றும் இராவிடினும், தானே வலியப் போய் எந்தக் காரியமாக இருந்தாலும் அக்கறையோடு செய்வான். தனக்கு ஈடான சிறுவர்களிடத்தில் பையனைப் போலவேதான் நடந்துகொள்வான்; ஆனாலும், அவர்களைவிட ஒரு படி மேலே இருப்பான். யாருக்கும் அடங்கிப் போகமாட்டான். முதியவர்களிடம் சிறு பிள்ளை போலவும் இருக்கமாட்டான்; மிகவும் பெரியவர்களைப் போலவும் காட்டிக்கொள்ள மாட்டான். இடையனோடு பழகும்போது அவன் மாதிரியே எல்லாம் செய்தாலும், தான் பிராம்மணன் என்று தெரிந்துகொள்ளும்படி நடந்து கொள்வான். இப்படி எல்லாருக்கும் அவரவர் காரியத்தில் ஒத்தாசை பண்ணி வெகு நாள் அவர்களோடு பழகினவன்போல் ஆகிவிட்டான். மிட்டாய்க் கடையில் வம்பளந்துகொண்டே இருக்கையில், ''சாமி! சற்றே இப்படி உட்கார்ந்திருங்கள். நான் இதோ வந்துவிட்டேன்'' என்பான் கடைக்காரன். தாராபதனும் முகம் சிணுங்காமல் அங்கே உட்கார்ந்து கொண்டு *ஸந்தேசின் மேல் ஈ வராதபடி ஓட்டுவான். பட்சணங்களெல்லாங்கூட நன்றாகச் செய்வான். தறி போடவும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் அவனுக்கு. அது மட்டுமா? குயவனைப் போல் சக்கரத்தைச் சுழற்றிச் சட்டிபானையெல்லாம் கூடப் பண்ணுவான்.

இப்படி ஊராரெல்லாரையும் வசப்படுத்திவிட்டான். ஆனால் அந்தப் பெண்ணின் பொறுமையை மட்டும் அகற்ற முடியவில்லை. 'அவன் வேறு எங்கேயாவது போய்த் தொலைந்தால் தேவலை' என்று அவனை உள்ளூறச் சபித்தாள் அவள். இதனால்தானோ என்னவோ தாராபதனும் பிடிவாதமாக அந்த ஊரை விட்டுப் போகாமல் இருந்தான். ஆனால் சிறு பெண்

*ஒரு தின்பண்டம்

களின் மனோபாவத்தை அறிவது லேசான காரியமல்ல; சாருவின் சுபாவத்திலிருந்து இது தெரியவந்தது.

அவர்கள் வீட்டுப் புரோகிதர் பெண் ஸோனுமணி ஐந்து வயதிலேயே விதவை யாகிவிட்டாள். அவள் சாருவுக்கு ஈடு; அவள் தோழியுங்கூட. ஸோனுமணிக்கு உடம்பு சரியாய் இராததால் திரும்பிவந்த தன் சிநேகிதியைக் கொஞ்ச நாள் பார்க்க முடியவில்லை. உடம்பு, நலம் பெற்றுச் சாருவைக் காண வந்த அன்று, ஒரு காரணமும் இல்லாமலேயே இரு வருக்கும் மனத்தாங்கல் ஏற்படும்போல் ஆகிவிட்டது.

* * * *

சாரு நீட்டி வளர்த்துக் கதையளக்க ஆரம்பித்தாள். தாராபதன், அவள் புதிதாகக் கண்டெடுத்த மாணிக்கம் அல்லவா? அவன் இங்கே வந்த வரலாற்றை விரிவாகச் சொல்லித் தன் தோழியைப் பிரமிக்கச் செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தாள். ஆனால், 'தாராபதன் ஏற்கனவே ஸோனுமணிக்குத் தெரிந்தவன்தான்; புரோகிதர் மனைவியைச் சித்தி என்று அவள் கூப்பிட, ஸோனுமணி அவனை அண்ணா என்று அழைக்கிறாள்; அம்மாவுக்கும் பெண்ணுக்கும் இனிமையாகப் புல்லாங்குழலில் கீர்த்தனங்கள் வாசித்துக் காட்டுகிறான்; அதுவும் போதாதென்று ஸோனுமணி கேட்டாள் என்று தானே ஒரு புல்லாங்குழலும் பண்ணித் தந்திருக்கிறான். உச்சாணிக் கிளைகளிலிருந்து பழமும், முட்செடிகளிலிருந்து பூவும் பறித்துக்கொடுக்கிறான்' என்ற விவரங்களையெல்லாம் அறிந்ததும் பழுக்கக் காய்ச்சிய ஈட்டியால் குத்தினதுபோல் ஒரு வேதனை மூண்டது, சாருவின் உள்ளத்தில். 'தாராபதன் எங்களுக்குத்தானே சொந்தம்? நாங்கள்தானே பத்திரமாக வளர்க்கிறோம் அவனை? மற்றவர்கள் அவனை எப்போதாவது சற்றுப் பார்க்கலாமே யொழிய, அவனோடு பேசிப் பழகக்கூடாது! தூரத்திலிருந்தே அவன் அழகையும் குணத்தையும் மெச்சி எங்களைப் புகழவேண்டும்.' - இதுதான் சாருவின் கருத்து. 'இந்த மாதிரி அபூர்வமான பையன் கிடைப்பதென்றால் இலேசா? ஏதோ தெய்வச் செயலாய் நாங்கள் கண்டெடுத்த இந்தப் பிராம்மணப் பையன் இவளோடு எப்படிப் பழகலாம்? நாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு இவனை அழைத்து இங்கே வைத்துக்கொண்டிரா விட்டால், இந்த ஸோனுமணி, இவனைப் பார்த்திருக்க முடியுமா? இவளுக்கு அண்ணாவாம்!' என்று எண்ணியதும் சாருவுக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது.

தாராபதன் மேல்தான் அவளுக்குப் பொறுமையாயிற்றே?

அவனே வெட்டிப் போடவேண்டும் போல் இருக்கிறதே; பின்னே ஏன் அவன் தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறாள்?—அதுதான் யாருக்கும் புரியவில்லை! அது முதல் ஸோனுமணியைக் கண்டால் சாருவுக்கு உள்ளூற ஒரு வெறுப்பு. அவள் உடனே தாராபதன் அறைக்குச் சென்று, பாவம், அவனுடைய புல்லாங்குழலை எடுத்துக் கொஞ்சமும் ஈவு இரக்கம் இல்லாமல் மிதித்து நசுக்கி உடைத்தாள்.

சாரு இப்படி உக்கிரமாக அதை முறித்துப் பாழாக்கிக் கொண் டிருக்கும்போது தாராபதன் அறையில் நுழைந்தான்; அவளுடைய ஆத்திரத்தைக் கண்டு வியப்புற்று நின்றான். ''சாரு ஏன் என் புல்லாங்குழலை இப்படி உடைக்கிறாய்?'' என்றான். சாரு மூஞ்சியில் கொள்ளும் எள்ளும் வெடிக்க, கண் சிவந்து, ''அப்படித்தான் உடைப்பேன்! இன்னுங்கூட நன்றாக நசுக்கு வேன்!'' என்று கத்தினாள். முறிந்துபோன அந்தக் குழலைப் பின்னும் இரண்டு மூன்று தடவை அநாவசியமாக மிதித்து விட்டு விம்மி அழுதுகொண்டே அறையை விட்டு வெளியே சென்றாள். தாராபதன் அந்தக் குழலை எடுத்து அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தான்; இனிமேல் அது எதற்கும் உபயோகப்படாது என்று தெரிந்துகொண்டான். ஒரு குற்ற மும் செய்யாத அவள் புல்லாங்குழலுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்? சிறிதுச் சிரித்து அவனுக்கு வயிறு புண்ணாகி விட்டது. ஒவ்வொரு நாளும் இப்படித்தான் ஏதாவது செய்வாள் சாருசசி. இவள் விஷயமே மிகவும் விநோதமாக இருந்தது அவனுக்கு.

வேடிக்கையாய்ப் பொழுதுபோக்க இன்னும் ஓர் இடம் இருந்தது. மதிலால் பாபுவின் புத்தகசாலையில் போய் இங்கிலீஷ் புத்தகங்களை எடுத்துப் படம் பார்த்துக்கொண் டிருப்பான். சாதாரண உலக அநுபவம் இருந்தாலும், இந்தப் புத்தக உலகத்தோடு அவ்வளவாகச் சம்பந்தம் இல்லை. அவனுக்குக் கற்பனையைக் கொண்டு விஷயத்தை ஒருவாறு புரிந்துகொண்டாலும் மனசுக்கு என்னவோ திருப்தி ஏற்பட வில்லை.

தாராபதனுடைய ஆவலைப் பார்த்து, ஒரு நாள் மதிலால் பாபு, ''இங்கிலீஷ் கற்றுக்கொண்டாயானால் உனக்கு இதெல்லாம் புரியும். கற்றுக்கொள்கிறாயா?'' என்று கேட்டார். தாராபதன் உடனே, ''கற்றுக்கொள்கிறேன்'' என்றான்.

மதி பாபுவும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, கிராமத்தில் இருந்த ஆரம்பப் பள்ளியின் தலைமை உபாத்தியாயரான ராம ரதன் பாபுவைத் தினந்தோறும் சாயங்கால வேளைகளில் பைய னுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

5

தாராபதன் இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்தான். அவனுக்கு ஏற்கனவே நல்ல ஞாபக சக்தியும் ஊக்கமும் இருந்தன. ஏதோ ஒரு புதிய உலகத்தில் உலாவுவது போல் அவனுக்குத் தோன்றியது. இப்போது அவன் முன்போல் யாரோடும் பழகுவதில்லை. அந்த ஊரார் அவனைக் காண்பதே அரிதாகிவிட்டது. மாலை வேளைகளில் மனித சந்தடியற்ற ஆற்றங்கரையோரமாக வேகமாக உலாவிக்கொண்டே பாடத்தை நெட்டுருப் போட்டுக் கொண்டிருப்பான். முன்பெல்லாம் அவனைச் சுற்றிக்கொண்டிருந்த சிறுவர்கள் இப்போது அவன் தங்களோடு சேராததால் உற்சாகம் இழந்து தூரத்திலிருந்து அவனைக் கவனிப்பார்கள்; நடுவில் வந்து அவன் படிப்பைக் கலைக்க அவ்வளவு தைரியமில்லை அவர்களுக்கு.

சாருகூட இப்போதெல்லாம் அவனை அதிகமாகப் பார்க்க முடிவதில்லை. முன்னே, பின்கட்டுக்குப் போய் அன்னபூர்ணு அன்போடு பரிமாற, உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு வருவான். சில சமயங்களில் அங்கிருந்து வரச் சற்று நேரமாகிவிடும். இதை மதிலால் பாப்விடம் சொல்லி அவர் அநுமதியின் பேரில் வெளியிலேயே உணவுக்கு ஏற்பாடு செய்துகொண்டான். அன்னபூர்ணுவுக்கு இதனால் மிகவும் வருத்தம்; அவள் ''கூடாது'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால் பையனுக்குப் படிப்பின்மேல் இருந்த ஊக்கத்தைக் கண்டு மதி பாபு மகிழ்ச்சி அடைந்து, ''அவன் விருப்பப்படியே இருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டார்.

இப்படி இருக்கையில், திடீரென்று சாரு, ''நானும் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளப் போகிறேன்'' என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தாள். செல்வக் குழந்தையல்லவா? அவள் பெற்றோர் முதலில் இதை விளையாட்டாக எண்ணி நகைத்தனர். ஆனால் அவள் அழுது அமர்க்களம் பண்ணவே, அவர்களும், 'உண்மைதானுக்கும்' என்று வேறு வழியின்றி, அவள் விருப்பத்திற்கு இணங்க வேண்டியதாயிற்று. அவளையும் தாராபதனோடு வாத்தியாரிடம் படிக்க விட்டார்கள்.

புத்தி ஒரு நிலையில் இருந்தால்தானே அவளுக்குப் படிப்பு ஏறும்? அவள் தானும் ஒன்றும் கற்பதில்லை; தாராபதனையும் படிக்க விடுவதில்லை. பின் தங்கிவிடுவாள்; மனப்பாடம் பண்ணமாட்டாள்; ஆனாலும், அவனுக்குப் பின்னால் இருக்கச் சகியாள். தாராபதன் அதை முடித்துவிட்டுப் புதிய பாடம் படிக்கத் தொடங்கிவிட்டானோ, அவளுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிடும். அழுது அனர்த்தம் பண்ணியே தீருவாள்.

அவன் பழைய புத்தகத்தை முடித்துவிட்டுப் புதுப் புத்தகம் வாங்குவான். அப்போது அவளுக்கும் அதுமாதிரி புதிதாக ஒன்று வாங்கியாக வேண்டும். தாராபதன் ஒழிந்த நேரத்தில் தனியாக அறையில் உட்கார்ந்துகொண்டு எழுதுவான்; மனப் பாடம் செய்வான். இது, அந்தப் பொறுமைக்காரிக்குச் சகிக் காது. அவள் இராத சமயம் பார்த்து அவன் நோட்டுப் புத்தகத்தில் மசியைக் கொட்டிவிட்டு வந்துவிடுவாள். அவன் பேனுவைத் திருடுவாள்; அவன் படிக்க வேண்டிய பாடத்தைப் புத்தகத்திலிருந்து கிழித்துவிடுவாள். அவள் பண்ணுகிற சேஷ்டைகளையெல்லாம் விளையாட்டாக எண்ணிச் சும்மா இருப்பான் தாராபதன். அவனுக்கும் பொறுக்காவிட்டால் அவளைப் போட்டு அடிப்பான். ஆனால் அவளை அடக்க முடிந் தால்தானே?

தற்செயலாக இதற்கு அவன் ஓர் உபாயம் கண்டுபிடித் தான். ஒரு நாள் 'சீ' என்று வெறுத்துப் போய் மசிக்கறை பட்ட அந்த நோட்டுப் புத்தகத்தைக் கிழித்தெறிந்துவிட்டு ஒன்றும் தோன்றாமல் முகம் வாடி உட்கார்ந்தான். சாரு அறை வாயிற் படியண்டை வந்து நின்றாள். 'இன்றைக்குக் கட்டா யம் நல்ல உதைதான் நமக்கு' என்று எண்ணி யிருந்தாள். ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. தாராபதன் அவளோடு ஒரு வார்த்தையும் பேசாமல் சும்மா இருந்தான். உள்ளுக்கும் வெளிக்குமாக அலைய ஆரம்பித்தாள் சாரு. அவன் மனசு வைத்திருந்தானானால் அவள் முதுகில் பேய் அறைகிற மாதிரி ஓர் அறை கொடுத்துக்கூட இருக்கலாம்; அவ்வளவு அருகில் வந்து வந்து போனாள். ஆனால் அவன் ஒன்றும் செய்யாமல் மூஞ்சியை ஒரு மாதிரி வைத்துக்கொண் டிருந்தான். அவ ளுக்கு என்ன பண்ணுவதென்று தோன்றவில்லை. எப்படி அவனிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதென்று அவ ளுக்குப் புரியவில்லை; முன்பின் கேட்டுக்கொண் டிருந்தால் தானே தெரியப்போகிறது? ஆனாலும் அவள் சின்னஞ் சிறு உள்ளம், 'அவன் மன்னித்தால் போதும்' என்று துடியாய்த் துடித்தது. வேறு வழி இல்லாமல், அந்தக் கிழிந்த நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு துண்டு எடுத்துத் தாராபதன் அருகில் உட்கார்ந்து, ''நான் இனிமேல் நோட்டுப் புத்தகத்தில் மசியைக் கொட்டமாட்டேன்'' என்று பெரிது பெரிதாக எழுதினாள். எழுதிவிட்டு அதைத் தாராபதன் பார்க்க வேண்டுமென்று தன்னால் ஆனதை யெல்லாம் செய்தாள். தாராபதனும் அதைக் கவனித்தான். அதற்குமேல் அடக்க முடியாமல் 'பக்' என்று சிரித்துவிட்டான். அவளுக்கு ஒரே அவமான மாகிவிட்டது; கோபம் வேறே. வெறிபிடித்தவள் மாதிரி

அவ்வறையை விட்டுத் தலைதெறிக்க ஓடினாள் வெளியே. அந்தக் காகிதத் துண்டை யார் கையிலும் அகப்படவிடாமல் பொசுக்கினால்தான் அவளுக்கு நிம்மதி ஏற்படும்போல் இருந்தது.

* * *

இவள் சங்கதி இப்படி இருந்தது. ஸோணுமணியோ மகா சங்கோசி. அவள் இரண்டொரு நாள் அவன் அறைக்கு வெளியே எட்டி எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போய் விடுவாள். சாருசசியும் அவளும் எல்லா விதத்திலும் அந்நியோந்நியமாகத்தான் இருந்தார்கள். ஆனால் தாராபதன் விஷயமாகத்தான் அவளுக்குச் சாருவிடம் மிகவும் பயம்; மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்வாள். சாரு பின் கட்டில் இருக்கும் சமயம் பார்த்து ஸோணுமணி தயங்கிக் கொண்டே தாராபதனுடைய அறை வாயிற் படியண்டை வந்து நிற்பாள். அவள் புத்தகம் படிப்பதை விட்டு முகம் நிமிர்ந்து, ''என்ன ஸோணு! என்ன விசேஷம்? சித்தி எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்பான் அன்போடு.

ஸோணுமணி, ''நீதான் அங்கே வந்து நாளாயிற்றே! அம்மா உன்னை வந்துவிட்டுப் போகச் சொன்னாள். அவளுக்கு ஒரே இடுப்பு வலி. அதனால்தான் உன்னை வந்து பார்க்க முடியவில்லை'' என்பாள்.

அந்தச் சமயத்தில்தான் எங்கிருந்தோ திடீரென்று சாரு அங்கே வந்து சேருவாள். ஸோணுமணி பாடு திண்டாட்டம். தன் சொத்தை அவள் திருட வந்துவிட்டதாகத்தான் சாருவுக்கு எண்ணம். மூஞ்சியையும் கண்ணையும் ஓர் ஆட்டு ஆட்டி, ''என்னடி ஸோணு, ஏனடி படிக்கச்சே வந்து தொந்தரவு பண்ணறே? நான் இதோ அப்பாகிட்டப் போய்ச் சொல்றேன், பார்'' என்று கீச்சுக் கீச்சென கத்துவாள். தாராபதனைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புத் தன்னுடையதுதான் என்பது அவள் எண்ணம். அதனாலேயே இப்படிப் பெருந்தனமாக அவன் படிப்புக் கெடாதபடி பார்த்துக் கொண்டாள்! அப்படியானால் அவள் மட்டும் அகாலத்தில் ஏன் அவன் படிக்கும் இடத்திற்கு வரவேண்டும்? அது அவள் மனசுக்குத் தெரியாது போகவில்லை; தாராபதனுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் ஸோணுமணி பாவம், பயந்து போய் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவாள். சாரு அருவருப்போடு, ''புளுகுண்ணி'' என்று அவளைத் திட்டுவாள். ஸோணுமணிக்கு ஒரே அவமானமாய் இருக்கும். வாய்திறக்க வழியின்றித் தயங்கித் தயங்கி வருத்தமுற்றுத் திரும்பிச் செல்வாள். தாராபதனுக்கு, 'ஐயோ பாவம்!' என்று இருக்கும்;

அவன், ''ஸோனு, இதோ சாயங்காலம் உங்கள் அகத்துக்கு வருகிறேன்'' என்பாள். சாரு நாகம் போல் சீறி, ''போவே! நன்னுப் போவே! படிக்க வேண்டாமா? நான் வாத்தியார் கிட்டச் சொல்ல மாட்டேன்னு பார்க்கிறூயா?'' என்பாள்.

சாருவின் மிரட்டலுக்குப் பயப்படாமல் தாராபதன் இரண்டொரு நாள் சாயங்காலம் ஆனதும், அந்தப் புரோகிதர் வீட்டுக்குப் போய் வந்தான். மூன்றும் தடவையோ, நாலாந் தடவையோ சாரு வீண் மிரட்டல் உருட்டல் செய்யாமல் மெதுவாக வந்து அவன் அறையில் இருக்கும்போது வெளிப்பக்கம் கதவைத் தாழிட்டுத் தாயின் அஞ்சறைப் பெட்டியிலிருந்து பூட்டும் சாவியும் எடுத்துவந்து பூட்டிவிட்டாள். சாயங்காலம் முழுதும் அவனை இப்படியே கைதிபோல் அடைத்துச் சாப்பாட்டு வேளையில் கதவைத் திறந்துவிட்டாள். தாராபதன் அவள்மேல் கோபித்துக்கொண்டு சாப்பிடாமல் வெளியே போகப் புறப்பட்டான். உடனே தான் செய்த பிழையை உணர்ந்து வருந்தினாள் சாரு. கைகூப்பிப் பலமுறை, ''உன் காலில் விழுகிறேன். இனிமேல் இந்த மாதிரி பண்ண மாட்டேன்; உன் இரண்டு காலையும் பிடித்துக்கொள்கிறேன்; சாப்பிட்டுவிட்டுப் போயேன்'' என்று கெஞ்சினாள். தாராபதன் எதற்கும் அசையாது போகவே அவள் அழ ஆரம்பித்து விட்டாள். அவன், ''இது என்னடா சங்கடம்?'' என்று திரும்பி வந்து சாப்பிட உட்கார்ந்தான்.

சாரு பல தடவை தனியாக உட்கார்ந்திருக்கும்போது, 'இனிமேல் தாராபதனிடத்தில் நல்லதனமாக நடந்துகொள்ள வேண்டும்; அவனுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது' என்று எண்ணிக்கொள்வாள். ஆனால், ஸோனுமணியைப் போல யாராவது நாலு பேர் வந்துவிட்டால் அவள் மனசு மாறி விடும்; தன்னைச் சமாளித்துக்கொள்ளவும் அவளால் முடியாது. கொஞ்ச நாள் அப்படி ஒருகால் சரியாக நடந்துகொண்டால், மறுபடியும் ஏதோ பிரமாதம் நேரப் போகிறதென்று தாராபதனும் அதற்குத் தயாராகவே இருப்பான். அது எப்படி, எந்தக் காரணத்தை உத்தேசித்து நேரும் என்று சொல்ல முடியாது. புயல் வீசிக் கண்ணீர் மாரி பொழிந்ததும் பேரமைதி நிலவும்.

6

இப்படி இரண்டு ஆண்டுகள் கழிந்தன. தாராபதன் எப்போதும் இவ்வளவு நாள் யாரிடத்திலும் சிக்கிக்கொண்டதில்லை. படிப்பின் மேல் இருந்த ஊக்கமே இதற்குக் காரண

மாக இருக்கலாம்; வயது ஏற ஏறச் சுபாவம் மாறும் அல்லவா? ஒரே இடத்தில் நிலைத்து நிம்மதியாக இருக்கலாம் என்றும் எண்ணியிருக்கலாம். அல்லது, அவனுடைய தோழியின் சேஷ்டைகளில் ஓர் இனிமையும், அவனே அறியாமலே ஒருவிதக் கவர்ச்சியும் ஏற்பட்டு, அதனாலும் இப்படிக் கட்டுண்டு கிடக்கலாம்.

சாருவுக்கும் இதற்குள்ளாக வயது பதினொன்று ஆகி விட்டது. மதி பாபு அவளுக்கு வரன் தேடிக்கொண் டிருந் தார். இரண்டு மூன்று நல்ல சம்பந்தமும் கிடைத்தன. பெண் ணுக்கு விவாக வயதானதால், இங்கிலீஷ் படிப்பை அதோடு நிறுத்திவிட்டார். வெளியில் போகக்கூடாது என்று கட்டுத் திட்டம் செய்தார். இப்படித் திடீரென்று தடை ஏற்பட்டவே சாரு வீட்டில் அமர்க்களம் பண்ண ஆரம்பித்துவிட்டாள்.

ஒரு நாள் அன்னபூர்ணு மதிபாபுவை அழைத்து, ''வர னுக்காக இப்படி அலைவானேன்? தாராபதனுக்கு என்ன குறைச்சல்? உங்கள் பெண்ணுக்கும் அவன்தான் பிடித்திருக் கிறனும்'' என்றாள்.

மதி பாபு இதை எதிர்பார்க்கவே இல்லை; அவர் வியப் புற்று, ''அது நடக்குமா என்ன? தாராபதன் குலம் கோத் திரமே நமக்குத் தெரியாது; இருப்பது ஒரே பெண்; நல்ல இடமாகப் பார்த்துக் கொடுப்பதால்தான் எனக்குத் திருப்தி ஏற்படும்'' என்றார்.

ஒரு நாள் ராய்டாஙாவிலிருந்து சிலர் பெண்ணைப் பார்க்க வந்திருந்தார்கள். அலங்காரமெல்லாம் பண்ணிச் சாருவை அவர்களெதிரே அழைத்து வரவேண்டுமே! ஆனால் அவள் படுக்கையறையை விட்டு வருவதாகக் காணவில்லை. கதவைத் தாழிட்டுக்கொண்டு அங்கேயே இருந்தாள். அவளை வெளியில் வரும்படி முதலில் நயமாகச் சொல்லிப் பார்த்தார் மதிபாபு; அப்புறம் மிரட்டினார். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் வெளிப்பக்கம் போய், வந்தவர்களிடம், ''பெண் ணுக்குத் திடீரென்று உடம்பு சரியாயில்லை. இன்று பார்க்கச் சந்தர்ப்பப் படாது'' என்று ஒரு பொய்ச் சாக்குச் சொன்னார். 'பெண்ணிடத்தில் ஏதோ குறை இருக்கிறது. அதுதான் இப்படித் தட்டிக் கழிக்கிறார்கள்' என்று அவர்கள் ஒருவாறு ஊகித்துக்கொண்டார்கள்.

அப்போதுதான் மதி பாபுவுக்கும், 'தாராபதனே எல்லா விஷயத்துக்கும் மேல்; பையன் பார்வைக்கும் நன்றாக இருக் கிறான்; புத்திசாலியுங்கூட. அவனே வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம்; நம் பெண்ணையும் வேறிடத்துக்கு அனுப்பா மல் இருக்கலாம். இந்த இரண்டுங்கெட்டான் பெண் செய்

கிற துஷ்டத்தனத்தை நம் குழந்தை என்று பொறுத்துக் கொண்டு போகிறோம்; மாமியார் வீட்டிலே சும்மா இருப்பார் களா?' என்ற யோசனை உதித்தது.

அப்புறம் அவரும் அவர் மனைவியும் கூடித் தீர ஆலோசித்துத் தாராபதன் ஊருக்கு ஆள் அனுப்பி அவன் குலம் கோத்திரம் எல்லாம் அறிந்துகொண்டுவரச் சொன்னார்கள். 'நல்ல குடும்பந்தான்; ஆனாலும் ஏழைகள்' என்று தெரிந்தது. மதி பாபு பையனுடைய தாய் தமையன்மாருக்கு விவாக விஷயமாகத் தகவல் அனுப்பினார். அவர்களும் மகிழ்ச்சி யடைந்து உடனே அதற்கு உடன்பட்டனர்.

மதி பாபுவும் அன்னபூர்ணாவும் முகூர்த்தம் என்றைக்கு வைக்கலாம் என்று யோசித்தார்கள்; எதுவுமே காதோடு காது வைத்தாற்போல் நடக்க வேண்டும் என்று எண்ணுபவர் மதி பாபு. அதனால் விஷயத்தை வெளியே சொல்லாமல் இரகசிய மாகவே வைத்திருந்தார்.

சாருவைப் பிடிக்க முடியவில்லை. அவள் அடிக்கடி தாராபதன் அறையில் புகுந்து அட்டகாசம் பண்ண ஆரம் பித்து விடுவாள். சில சமயம் அவன்மேல் கோபித்துக் கொள்வாள்; சில வேளை அவனிடத்தில் அளவுக்கு மிஞ்சி அன்பு காட்டுவாள்; திடீரென்று அசிரத்தையும் ஏற்பட்டு விடும். தனிமையில் அவன் படிப்பில் ஆழ்ந்திருக்கும்போது எங்கிருந்தோ, இப்படித் திடீரென்று வந்து அதைக் கலைப் பாள். இதுவரை எதன்பேரிலும் பற்று இல்லாமல் யதேச்சை யாகத் திரிந்த அந்த வாலிபனது உள்ளத்தில் இப்போது அடிக்கடி மின்சாரம் தீண்டியதுபோல் ஓர் அபூர்வ உணர்ச்சி பரவலாயிற்று. மனசில் ஒரு கவலையும் இல்லாமல், இத்தனை நாள் எந்தத் தடைக்கும் அஞ்சாமல், கால வெள்ளத்தில் மிதந்து முன்னேக்கிச் சென்ற அதே பையன், இப்போது ஒவ்வொரு சமயம் வேறு ஏதோ கவனமாக இருப்பான்; என்ன வெல்லாமோ பகற்கனவுகளில் ஈடுபட்டிருப்பான். பாடம் படிப்பதை விட்டுச் சில நாள் மதி பாபுவின் புத்தகசாலைக்குள் சென்று, புத்தகங்களைப் புரட்டிப் பொம்மை பார்த்துக்கொண் டிருப்பான். முன்னே அவைகளைப்பற்றிக் கற்பனை செய்து கொண்டதற்கும் இப்போதைக்கும் எவ்வளவு வித்தியாசம்! விசித்திர வர்ணம் திகழ, அவன் கற்பனை கரை புரண் டோடியது. சாருவின் நடத்தை முன்போல் அவனுக்கு வேடிக்கையாகத் தோன்றவில்லை. அவள் குறும்பு செய்தாலும் அடிக்க மனம் வருவதில்லை. இப்படித் தன்னை அறியாமல் தான் மாறி ஒரே இடத்தில் கட்டுண்டு கிடப்பது அவனுக்கே ஓர் அற்புதக் கனவு போல் ஆச்சரியத்தை விளைவித்தது.

ஆவணி மாதத்தில் ஒரு முகூர்த்தம் நிச்சயித்து மதி பாபு பையனுடைய தாயையும் தமையன்மாரையும் அழைத்து வர ஆள் அனுப்பினார். தாராபதனுக்கு மட்டும் அதைத் தெரிவிக்கவில்லை. 'கோட்டைப் பாண்டு'க்கு ஏற்பாடு செய்யும்படி கல்கத்தாவிலிருந்து தம் குமாஸ்தாவுக்கு உத்தரவிட்டிருந்தார்; கல்யாணத்துக்கு வேண்டிய சாமான் பட்டியலும் அனுப்பினார்.

நிறை எழிலுடன் கார் மேகங்கள் எழுந்தன, வானவெளியில். ஆறெல்லாம் முக்கால் வாசி வற்றிப்போயிருந்தது. நடுநடுவே சில இடங்களில் மட்டும் ஓர் ஆள் ஆழத்துக்கு நீர் தேங்கி இருந்தது. சின்னச் சின்னத் தோணிகள் அங்கங்கே சேற்றில் அழுந்திக் கிடந்தன. வறண்டு போன அந்த ஆற்றின் வழியாக மாட்டு வண்டிகள் போய் வருவதால், சக்கரத்தின் சுவடு நன்றாகப் பதிந்திருந்தது. இப்படி இருக்கும்போது ஒரு நாள் சலசலவென்று புதுவெள்ளம் ஆற்றிடையே நொடியில் வந்து பெருக ஆரம்பித்தது, நெடுநாள் பிரிவுக்குப் பிறகு பிறந்தகம் வந்து சேரும் மகிமைகள் போல். சிறுவர்களும் சிறுமிகளும் உடம்பில் ஒன்றும் இல்லாமல் ஆற்றங்கரையோரம் வந்து 'ஓ' என்று கூவிக் கொம்மாளம் அடித்தனர். மட்டற்ற மகிழ்ச்சியுடன் திரும்பத் திரும்ப நீரில் குதித்து ஆற்றையே வாரி அணைப்பதுபோல் நீந்தி விளையாடினர். குடிசைகளில் வசிக்கும் ஏழைப் பெண்கள் தங்கள் தோழியரைக் காண வெளியில் வந்தனர். இத்தனை நாள் வற்றிக் கிடந்த அந்த இடத்தில் இப்போது உயிரும் உணர்வும் எங்கிருந்து வந்தனவோ? மற்ற ஊர்களிலிருந்து சின்னதும் பெரிதுமான பல படகுகள் பண்டங்களைச் சுமந்துவர ஆரம்பித்தன. கடைத் தெருவோரம் இருந்த படித்துறையில் சாயங்கால வேளைகளில் வெளியூர்ப் படகோட்டிகள் பாடுவது கேட்கும். இத்தனை நாள், தங்கள் குடிசை மூலையிலேயே தன்னந்தனியாக விழுந்து கிடக்கும் ஏழைப் பெண்களைப் போல் இருந்தன, ஆற்றங்கரையோரத்து ஊர்கள். மழைக் காலத்தில் வெளியூர்களிலிருந்து இப்படிப் பல விசித்திரமான பண்டங்களைச் சுமந்துகொண்டு படகுகள், சிவந்த ஆற்று நீரிலே செல்வது நேரே பூமிதேவியே கிராமப் பெண்களை விசாரிக்க இரதத்தில் ஊர்ந்து வருவதுபோல் இருந்தது. எங்கும் ஆனந்தம் குடிகொண்டிருந்தது. இத்தனை நாள் நிச்சப்தம் நிலவிய அந்தக் கிராமம் இப்போது வெளியூரார் வருவதும் போவதுமாய்க் கலகலப்புடன் விளங்கியது.

* * * *

இந்த மாதிரி சமயங்களில் தான் குடுல்காடா என்ற

ஊரில் பெரிய தேர்விழா நடைபெறுவது வழக்கம். நாக குடும்பத்தைச் சேர்ந்த பாபுக்களுடையது அந்த ஊர். திரு விழாவின்போது பெரிய சந்தை கூடும். நிலவு எழுந்த அவ் வந்தி வேளையில், தாராபதன் படித்துறையருகில் வந்து நின் றான். ஒரு படகில் ரங்க ராட்டினமும், மற்றொன்றில் ஒரு நாட்க கோஷ்டியும், வேறொன்றில் விற்பனைச் சாமானும் இருந் தன. அவை புது வெள்ளத்திற்கு எதிராக வேகமாய்ச் சந்தை கூடும் இடத்திற்குச் சென்றுகொண் டிருந்தன. துரித கதியில் தாளம் போட்டு வாசித்தார்கள், கல்கத்தாவிலிருந்து புறப்பட்டுச் செல்லும் பாண்டுக்காரர். அந்தக் கோஷம் பலமாய்க் கேட்டது. பக்க வாத்தியத்துக்குப் பிடில் வைத்துக் கொண்டு பாடினர்கள் நாடக கோஷ்டியார். இரண்டும் இழையும்போது, ''ஆஹா! ஆஹா!'' என்று ஆர்ப்பரித் தார்கள். மேற்குப் பிராந்தியங்களிலிருந்து வரும் படகோட்டி கள் மத்தளமும் தாளமும்மட்டும் ஒலித்துக்கொண்டு வெறி பிடித்தவர்கள் போல் தலைகால் ஒன்றும் புரியாமல் 'ஆ ஓ' என்று அலறும் ஒலி வானைப் பிளந்தது. எங்கும் ஒரே குதூகலமாய் இருந்தது. பார்த்துக்கொண்டே இருக்கையில் கிழக்கு மூலையிலிருந்து கறேலென இருண்ட மேகங்கள், ஆற்றில் பாய் விரித்துச் செல்லும் படகுகள் போல், ஆகா யத்தில் பரவின. சந்திரன் மறைந்து போனான். கீழ்த்திசைக் காற்று வேகமாக வீசியது. ஒன்றன்பின் ஒன்றாக மேகங்கள் திரண்டன. ஆற்று நீர் கலகலவென நகைப்பதுபோல் கொந் தளித்தெழுந்தது. கரையோரம் மரங்கள் ஆடி அசைந்து கொண்டிருந்த காடுகளில் இருள் பரவ ஆரம்பித்தது. தவளை கள் கத்தத் தொடங்கின. இருளைத் துளைத்துக்கொண்டு வந்தது, சிள் வண்டுகளின் ரீங்காரம். பிரம்மாண்டமான ஒரு தேர்விழா அவன் கண்முன் காட்சி அளித்தது. சர்வலோகமும் அங்கே திரண்டிருக்கிறது; ராட்டினம் சுழல்கிறது; கொடி பறக்கிறது; பூமி அதிர்கிறது; கருமுகில்கள் பறந்தன; காற்று வீசியது; ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது; படகுகள் சென்றுகொண் டிருந்தன; இசையின் ஒலி எங்கும் எழுந்தது. திடீரென்று கிடுகிடுவென இடியோசை கேட்டது. வானகத்தைப் பிளப்பதுபோல், பளிச்சுப் பளிச்சென மின்னல் அவ்விருட்டில் தொலைவில் எங்கிருந்தோ பெரு மழைத்துளி யின் மணம் வந்தது. ஆற்றின் ஒரு கரையில் ஏதோ ஒரு மூலையில் இருந்த அந்தக் காண்டாலியா கிராமம் முழுதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது; கதவெல்லாம் மூடியிருந்தன; விளக்கு வெளிச்சமே இல்லை.

மறு நாள் தாராபதனுடைய தாயும், சகோதரர்களும்

காண்டாலியாவுக்கு வந்து இறங்கினார்கள். கல்கத்தாவி லிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டு மூன்று பெரிய படகுகள் ஜமீன் கச்சேரிக்கு அருகிலுள்ள படித்துறையில் வந்து நின் றன; விடியற்காலை ஸோனுமணி காகிதத்தில் கொஞ்சம் மாம் பழச் சாறும், ஒரு பொட்டலத்தில் ஊறுகாயும் எடுத்துக் கொண்டு பயந்து பயந்து தாராபதன் அறை வாயிற் படி யண்டை வந்து மௌனமாக நின்றாள்; ஆனால் தாராபதனைக் காணவில்லை. வாஞ்சை, பிரேமை, நட்பு மூன்றும் கூடிச் சதி செய்து அவனை நாற்புறமும் சூழ்ந்து பிணைக்கப் பார்த்தன. ஆனால் அதற்கு முன்னடியே அந்தப் பிராம்மணச் சிறுவன் எல்லோர் உள்ளத்தையும் கொள்ளைகொண்டு, காரிருள் செறிந்த ஓர் இரவில், அன்பும் ஆதரவும் மீறிய பரந்த உலகினிடையே எங்கோ மறைந்து போனான்.

துராசை

தார்ஜிலிங் சென்றிருந்தேன்; அங்கே நாற்றிசையும் மேக மூட்டமும் மழைத்திரையும் சூழ்ந்திருந்தன. தங்கியிருந்த இடத்தைவிட்டு வெளியே வரவே விருப்பம் இல்லை; அங்கேயே உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை.

ஹோட்டலில் காலை உணவை முடித்துக்கொண்டு, காலில் கனத்த பூட்ஸும், தலையே பிடித்துக் கால் வரைக்கும் 'மாக்கின் டாஷ்' (ஒரு வகை உடுப்பு) அணிந்து உலாவக் கிளம்பினேன். ஒவ்வொரு கணமும் பொட்டு பொட்டென்று மழைத் தூற்றல் விழுந்துகொண்டே இருந்தது. மழை முகில்கள் எங்கும் படர்ந்திருப்பது, இமயமலைக் காட்சிகளை ரப்பரால் கடவுள் அழித்துவிடுவது போலவே தோன்றியது.

மனிதர் நடமாட்டமிராத கல்கத்தா நெடுஞ்சாலையில் தனியே நடந்தவண்ணம் நான் நினைக்கலானேன் - அந்தரமாக நிற்கும் மேகாடம்பரமான காட்சி சற்றும் பிடிக்கவில்லை; ஒளி ஊறு ஓசை நிரம்பிய விசித்திரமான மண்ணகத் தாயை மீண்டும் ஐம்புலனைக் கொண்டு கெட்டியாகப் பற்றிக்கொள்ளப் பிராணன் துடிதுடிக்கிறது.

அச்சமயம், அருகிலேயே பெண்குரல் ஒன்று மனத்தை உருக்கும் வகையில் அழுவது கேட்டது. நோயும் துன்பமும் மலிந்த இந்த வாழ்க்கையில் அழுகைக் குரல் வருவது அப்படி வியப்பைத் தருவதன்று. வேறு சமயமாக இருந்தால் நான் திரும்பிக் கவனித்தே இருக்கமாட்டேன். ஆனால் திக்குத் திசை தெரியாமல் மழை இருள் கவிந்த இந்த நாட்டில் அத்தகைய அழுகுரல், உலகில் மறைந்துள்ள ஒரு துயர்க் குரலெனவே என் செவியில் பாய்ந்தது; அதை என்னால் பொருட்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

குரல் வரும் திசையே சென்று கவனித்தேன். காவி ஆடை உடுத்த ஒரு பெண்; பொன்னிறம் பாய்ந்த அவளுடைய செம்பட்டையான சடைக்கற்றை தலையில் கோபுரம் போல் சுற்றப்பட்டிருந்தது. வழியோரமாக உள்ள ஒரு பாறைமீது அமர்ந்து மெல்லிய குரலில் அழுதுகொண்டிருந்தாள். அப்போதுதான் ஏற்பட்ட சோக அழுகையன்று; வெகு நாட்களாகத் தேங்கியிருந்த கூப்பும் அவலமும், அன்று அந்த

மேக இருள் சூழ்ந்த தனிமையையும் தாளாமல் பொங்கி வரும் புலம்பலே அது.

இது ஒரு விந்தைக் கதையின் தொடக்கம் போலவே இருந்தது. மலைச் சிகரத்தில் ஒரு தவமகள் அமர்ந்து இப்படிக் கண்ணீர் விட்டு அழுவதை பார்ப்பேனென்று நினைக்கவே இல்லை.

அந்தப் பெண் எந்தச் சாதியைச் சேர்ந்தவளென்று தெரியவில்லை. ஹிந்தி மொழியிலேயே அவளை விளித்து, ''யார் நீ? உனக்கு நேர்ந்த இன்னல் என்ன?'' என்று கேட்டேன்.

முதலில் அவள் மறுமொழியே தரவில்லை. மேக இருளிலிருந்து நீர் தோய்ந்த விழிகளால் என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

மீண்டும் கூறினேன்: ''என்னைக் கண்டு பயப்படவேண்டாம். நான் நல்ல மாதிரியான ஆள்.''

இதைக் கேட்டு அவள் சிரித்து, அப்பட்டமான ஹிந்தியில் ''பாபுஜி, நான் யாருக்கும், எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. லஜ்ஜை, மானம் எப்போதோ போய்விட்டன. நான் ஒரு சமயம் ஜெனனுவை (அந்தப்புரம்) விட்டு வெளியிலேயே வராதவள். அதனுள் என் உடன் பிறந்தவன் வருவதாயிருந்தால் கூட உத்தரவு பெற வேண்டும். ஆனால் இந்தப் பரந்த உலகில் இன்று எனக்கு மறைவு என்பதே இல்லை'' என்றாள்.

முதலில் எனக்குச் சற்றுக் கோபமே வந்தது. என்னுடைய நடை உடை பாவனை யாவும் ஆங்கிலேய துரைகளின் ரீதியில் அமைந்திருந்தன. ஆனால் இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்தவள் சற்றும் தயங்காமல் என்னைப் பாபூஜி என்று அழைத்த காரணம் என்ன? சட்டென என்னுடைய நாவலை இந்தக் கட்டத்தில் முடித்துவிட்டுச் சிகரெட் புகையை விட்டுக்கொண்டே மூக்கை நெறித்து வெள்ளையனைப் போல் தரையைக் காலால் உதைத்துவிட்டுப் போய்விட நான் நினைத்தேன். கடைசியில் விஷயத்தை ஆராயும் அவாவே வெற்றி பெற்றது. மிடுக்காக மோவாயைத் தூக்கி நான், ''என்னால் உனக்கு ஏதாவது உதவி தேவையா? ஏதாவது வேண்டுகோள் இருந்தால் சொல்'' என்றேன்.

அவள் என்னையே நிலைத்து நோக்கியதும் சில நாழிகைக் கெல்லாம், ''நான் பத்ரவான் நவாப் கொலாம் காதர்கானின் மகள்'' என்று சுருக்கமாகப் பதில் அளித்தாள்.

உடனேயே நான் ஆழ்ந்த முகத்துடன் நீண்டதொரு சலாம் வைத்து, ''பிபிஸாஹிபா, மன்னித்து விடுங்கள், உங்களை நான் தெரிந்துகொள்ளாதது குறித்து'' என்றேன்.

அவளைத் தெரிந்துகொள்ளாததற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. அவற்றுள் முக்கியமானது: அவளை நான்

இதற்குமுன் பார்த்தது கிடையாது. இது போன்ற மழை இருட்டில் நம்முடைய கையே நம் கண்ணுக்குப் புலப்படுவதே கஷ்டமாயிருக்கிறது.

பிபிஸாஹிபாவும் என்னுடைய குற்றத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. மகிழ்ச்சி ஒலிக்கும் குரலுடன், தன் பக்கமாக இருக்கும் ஒரு பாறையைச் சுட்டி, ''உட்காருங்கள்'' என்று சொன்னாள்.

இதுபோல் கட்டளை இடுவதற்கான திறமை அந்தப் பெண் மணியிடம் இருப்பதைக் கண்டேன். அவள் பக்கத்திலேயே சற்று விலகி ஈரம் தோய்ந்த அந்தக் கடினப் பாறைமீது அமருவதற்குக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பெரியதொரு கௌரவமாகவே பாவித்தேன். பத்ரவானின் நவாப் கொலாம் காதர் கானின் மகள் நூர் உன்னீஸா—அதாவது, மேஹேர் உன்னீஸா—அதாவது உல்முல்க், இந்தத் தார்ஜிலிங்கில் கல்கத்தா சாலை ஓரமாகத் தனக்கு அருகிலேயே உட்கார இடம் தந்திருக்கிறாள். மாக்கின்டாஷ் அணிந்து நான் ஹோட்டலிலிருந்து வெளியே வந்தபோது இப்படி ஒரு மகத்தான வாய்ப்பு எனக்குக் கிட்டுமென்று நான் கனவில்கூட நினைக்கவில்லை.

இமயமலைச் சரிவில் ஒரு கற் பாறையின்மீது தனிமையில் தற்செயலாகச் சந்தித்த ஓர் ஆடவனும், பெண்ணும் இரகசியப் பேச்சில் ஈடுபடும் ஒரு கதையானது, இப்பொழுதுதான் எழுதி முடித்த, சூடுகூட இன்னும் ஆறுத காவியக் கதை போலவே கேட்பதற்குத் தோன்றும். படிப்பவர் உள்ளத்தில் மலையருவியின் ஓசையுடன் ஒன்றிக் காளிதாசன் இயற்றிய மேகதூத, குமாரசம்பவ காவியத்தின் விசித்திர இன்னிசைக் கவிகள்தாம் அமுதூறலை எழுப்பும். இருப்பினும், இதை யாவரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். பூட்ஸும் மாகின்டாஷும் அணிந்து கல்கத்தா சாலையோரமாக ஈரம் கசியும் இடத்தில் எளிய உடை பூண்ட ஓர் ஹிந்துஸ்தானி மடந்தை அருகில் வீற்றிருப்பதைப் பெரிய கௌரவமாக நினைக்கும் புதுமை இளைஞரை வங்கத்தில் காண்பது அரிது. அன்று, எத்திசையிலும் இருண்ட முகிற்கூட்டம். வாழ்வில் நம் கண்ணுக்கு நாணத்தை எழுப்பும் விஷயம் இவ்வுலகில் எதுவுமே இருக்க முடியாது. அந்த மழை இருளிடையே பத்ரவான் நவாபின் மகளும் புதுமை மோகம் கொண்ட வங்காளி துரையான நானும் பாறைமீது இவ்வியனுலகின் கடைசி ஜீவிக் கூத்தென இருந்தோம். இப்படியொரு முரண்பாடான இணக்கம் என் வரைக்கும் ஒரு கேலிக் கூத்தாகவே இருந்தது.

நவாப் மகளைக் கேட்டேன்: ''பிபிஸாஹிபா, இப்படி உங்களைக் கோலம் செய்தவர் யார்?''

பத்ரவான் நவாப் மகள் நெற்றியில் அறைந்துகொண்டு ''இதையெல்லாம் யார் செய்தார் என்பது எனக்கு எப்படித் தெரியும்? பாறை இதயம் படைத்த இந்த இமயமலையை யார் இப்படி மழைத்திரையால் மூடினார்கள்?'' என்றாள்.

நான் இதுபற்றித் தத்துவ ரீதியில் வாதம் எதையும் தொடுக்காமல், ''ஆமாம், விதி இயற்றும் இந்த மருமத்தை யார் அறிவார்? நாம் அதன் பிடிக்குள் சிக்கிய வெறும் புழுக்களே!'' என்றேன்.

நான் வாதம் செய்திருப்பேன். பிபிஸாஹிபாவை அவ்வளவு இலேசில் விடுபவனன்று நான். ஆனால் எனக்கு அவளுடைய மொழியில் (ஹிந்தியில்) பேசும் பயிற்சி போதவில்லை. வேலைக்காரர்களுடன் பழகும்பொழுது உபயோகிக்கும் ஹிந்தி மொழியை, இந்தக் கல்கத்தா நெடுஞ்சாலை யோரத்தில் அமர்ந்து, ஒரு நவாப் மகளுடன், விதியைப்பற்றியோ மற்ற எந்தப் பிரச்னையைக் குறித்தோ தெளிவாக ஆராயப் புகுவது சாத்தியமாகவில்லை.

''என் வாழ்வைப்பற்றிய இந்த அதிசயக் கதை இன்றே முடிவடைகிறது. நீங்கள் அநுமதி தந்தால் கூறுகிறேன்'' என்றாள் நவாப் மகள். ''அழகாய் இருக்கிறது, என் அநுமதி எதற்கு ? நான் அதைக் கேட்கக் கொடுத்து வைக்க வேண்டுமே!'' என்றேன்.

வேறு விதமாக நினைத்துக்கொள்ளாதீர்கள். இதையெல்லாம் ஹிந்தி மொழியிலேயே சொல்ல வேண்டுமென்ற ஆவல்தான். ஆனால் அதற்கான ஆற்றல் எனக்கு இல்லையே! பிபிஸாஹிபா பேசும்பொழுது அம்மொழி, பனிதோய்ந்து பொன்னிறமாக மாறிவரும் பைங்கதிர் வயல்மீது காலை இளங்காற்று அலைமேல் அலையாக வீசிச் செல்வது போலவே இருந்தது. என்ன அழகு, என்ன நெளிவு! தங்கு தடையிராத ஓட்டம் அம்மொழிக்குத்தான்! நானே விட்டு விட்டு, பட்டிக்காட்டான் மாதிரி அவளுக்கு மறுமொழி தந்து வந்தேன். நிறைவுடனும், இயல்பான இனிமையுடனும் பேச நான் எந்நாளும் கற்றதில்லை. பீபிஸாஹிபாவிடம் நான் உரையாடும்பொழுதுதான், எனக்குள்ள பெருங் குறையை உணரலானேன்.

''என்னுடைய தந்தை வமிசத்தவர் இரத்தத்தில் தில்லி பாதுஷாக்களின் இரத்தம் ஓடிற்று. அந்த வமிச கௌரவத்தைக் காப்பதற்கு ஒத்த குலத்தைச் சேர்ந்தீ ஒருவருக்கு என்னை மணம் செய்து கொடுப்பது மிகவும் சிரமமாக இருந்தது. சம்பந்தம் வைத்துக்கொள்ள லக்நௌ நவாபிடமிருந்து பேச்சு வந்தது. தந்தை இதற்குச் சற்றுத் தயங்கியபொழுது வெள்ளையருக்கும் சிப்பாய்களுக்கும் இடையே தோட்டாக்களைப்

பற்களால் கடிப்பது குறித்துப் பெருங் கலகம் விளைந்தது. பீரங்கிப் புகையால் ஹிந்துஸ்தானமே இருண்டு விளங்கியது.''

பெண் குரலில், அதுவும் உயர்குலத்து மடந்தையின் வாயில், இதுவரை நான் ஹிந்துஸ்தானிப் பேச்சைக் கேட்டதே இல்லை. தெளிவாகப் புரிந்தது எனக்கு; இம்மொழி ஆமிர்கள் (ராஜகுலத்தவர்) பேசுவது; இன்று காணும் பாஷையே அன்று அது. இன்று ரெயில்வே, தந்தி போன்ற பல்வேறு அலுவற்கூட்டங்களால் ஹிந்திமொழி அதன் உயர்ந்த பண்பை இழந்து வெறும் குறிலும் நெடிலும் தொனிக்கும் அலங்கார மற்ற மொழியாகிவிட்டது. இந்த நவாப் மகள் பேசும் மொழியைக் கேட்டதுமே, ஆங்கிலேயர் உருவாக்கிய இன்றைய மலிவாசமான தார்ஜிலிங் நகரம் மழைத்திரைக்குள் மழுங்கி இருப்பினும், என் மனக்கண்ணெதிரே ஒரு மாயாசக்தியினால் மொகலாய சக்கரவர்த்திகளின் அணியார் புரியாகவே மாறி விட்டது. வெண்ணிறச் சலவைக் கல்லால் வானளாவும் மாளிகை வரிசைகள்; தெருக்கள் எங்கணும் கொய்சுவற் புரவிகளின்மீது அமர்ந்து செல்கின்றனர் வீரர்கள்; மலைபோன்ற குஞ்சரங்களின்மீது தங்கஜாலர் வேய்ந்த அம்பாரிகள்; விசித்திரவண்ணமான தலைப்பாகை யணிந்த நாகரிகர்கள்; பட்டு, நுண்ணிய மஸ்லின் இவற்றால் ஆன அங்கியும் கால் சட்டையும் பூண்டு, அரைக் கச்சையில் செருகிய வாளுடன், கால் முனைப்பகுதியில் வளையும் காலணியுடன், கம்பீர நடை போட்டுச் செல்லும் ராஜபுருஷர்கள்-இவைபோன்ற காட்சிகள் எழுந்தன.

''என்னுடைய கோட்டை யமுனைக் கரையோரமாக இருந்தது. எங்களுடைய படையினரின் தலைவர் ஒரு ஹிந்துப் பிராம்மணர். அவர் பெயர் கேசர்லால்'' என்றாள்.

இந்தக் கேசர்லால் என்ற சொல் அந்த மடந்தையின் குரலிலிருந்து எழும்போது இன்னிசைத் தேனை அப்படியே கவிழ்த்துவிட்டதுபோல் தோன்றியது. நான் என் கைப்பிரம்பைத் தரையில் கிடத்தி, ஆவல் உந்த நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

''கேசர்லால் அசல் ஹிந்து. அன்றுடம் நான் வைகறையில் எழுந்து, எனது அந்தப்புரச் சாளர வாயிலாகக் காண்பேன்; யமுனை நீரில் கேசர்லால் மார்பளவு இறங்கி, சிவந்தெழும் கதிரவனை நோக்கிக் கைகூப்பி அருக்கியம் விடுவார். பின்னர், அரையில் ஈரத்துணியுடன் ஒரே நினைவாக ஜபத்தை முடித்துக் கொண்டு, இனிய சாரீரத்தில் பைரவ ராகத்தில் தோத்திரப் பாடல்களைப் பாடிக்கொண்டே தம் வீடு திரும்புவார்.

''நான் முஸ்லிம் சிறுமி; எனது மதத்தைப்பற்றியோ,

வழிபாடு குறித்தோ ஒன்றுமே தெரியாது எனக்கு. அந்த நாளில் கேளிக்கை, மதுபானம், யதேச்சையான வாழ்வு இவற்றில் திளைத்து எங்கள் ஆடவர் சமயப்பற்று இழந்து நின்றனர். சிற்றின்பமே திகழும் அந்தப்புரத்தில் நல்நெறி இருப்பதற்குக் காரணமில்லை.

''கடவுள் என் மனத்தில் இயல்பாகவே ஒரு சமயப் பற்றை உண்டாக்கி இருந்தார். இதற்கு வேறொரு மறைமுகமான காரணம் இருந்ததா என்பதைச் சொல்ல என்னால் ஆகாது. அன்றொடம் இளங்காலையில் அருணோதயமாகும்பொழுது அலையடங்கிய யமுனையின் வெண்ணிறப் படித்துறையில் கேசர்லால் அருச்சனை செய்யும் காட்சி, மொட்டவிழும் எனது உள்ளத்தில் சொல்ல முடியாத ஒரு பக்தியின் இன்சுவையைப் பாய்ச்சும்.

''நியமம் தவறாமல், அடக்கமும், தூய நெறியும் கொண்ட அந்தணர் கேசர்லால் பொன்மேனி புகையிராச் சுடர்ப்பிழம்பெனத் தோன்றும். ஒரு பிராம்மணனின் நல்வினையின் மகத்துவம், ஒரு முஸ்லிம் பெண்ணின் மூட இதயத்துள் சிரத்தையைப் புகுத்திப் பணியச் செய்தது.

''என்னிடம் ஓர் ஹிந்துப் பணிப்பெண் இருந்தாள். அவள் ஒவ்வொரு நாளும் கேசர்லாலை வணங்கி அவருடைய பாத தூளியைச் சிரமேற்கொள்வாள். இதைப் பார்த்து எனக்கு ஆனந்தமும் பொங்கும்; பொறுமையும் குமுறும். இந்தப் பணிப்பெண் பண்டிகை பருவ நாட்களில் அந்தணருக்கு அமுது இட்டுத் தட்சிணையும் தருவாள். இவற்றை நடத்த நானே அவளுக்கு உதவி புரிவேன். 'நீ கேசர்லாலை ஒரு நாளும் அழைக்க மாட்டாயா இது போன்ற விரதங்களுக்கு?' என்று அவளைக் கேட்டேன். அவள் நாக்கை நீட்டி, 'கேசர்லால் யாருடைய அன்னதானத்தையோ, அழைப்பையோ ஏற்க மாட்டார், அம்மா' என்றாள்.

''இவ்வாறு நேரிடையாகவும், மறைமுகமாகவும் எனக்குள்ள ஆழ்ந்த பக்தி சிரத்தையைக் கேசர்லாலுக்குக் காட்ட முடியாதது குறித்து என் மனம் ஏங்கித் துடித்தது.

''என்னுடைய மூதாதையரில் யாரோ ஒருவர் ஒரு பிராம்மணப் பெண்ணைப் பலவந்தமாக மணம் புரிந்துகொண்டாராம். அவளுடைய புனித இரத்தம் என் உடலுள் ஓடுவதாகவே தோன்றும். இந்த இரத்த சம்பந்தத்தால் கேசர்லாலுடன் நான் இணைவதாகக் கற்பனை செய்து சிறிதளவு ஆறுதல் கொள்வேன்.

''என்னுடைய ஹிந்துப் பணிப்பெண்ணிடமிருந்து ஹிந்து தருமத்தின் ஆசாரம், கோட்பாடு, தேவதைகளைப்பற்றிய விந்

தைக் கதைகள், இராமாயண மகாபாரத வரலாறுகள் யாவும் கேட்டுக் கேட்டு, அந்தப்புரத்தின் ஒரு மூலையில் இருந்தபடியே ஹிந்துக்கள் வாழும் ஓர் அபூர்வமான உலகை என் மனக்கண் முன் காண்பேன்-அவர்களுடைய தேவாலயங்கள்; அங்கே உள்ள மூர்த்தங்கள்; மேள ஓசை, சங்கொலி, வெண்கல மணியோசை; கோபுரத்தின் தங்கத் தூபிகள்; அகில் சந்தனம் கமழும் தூபப் புகை; அருச்சனை மலர்களின் திவ்விய மணம்; யோகி சந்நியாசிகளின் அதிசயச் செயல்கள்; பிராம்மணர்களிடம் தென்படும் அமானுஷிகமான மகத்துவம்; மனித உருவில் தேவதைகள் உலகில் வந்து புரியும் திருவிளையாடல்கள் இவையெல்லாம் சேர்ந்து மிகத் தொன்மையானதும் பரந்ததுமான ஓர் மாய உலகினைப் படைத்து என்னைப் பிரமிக்கச் செய்தன. என்னுடைய உள்ளம் கூடிழந்த பறவையென, அந்தி வேளையில் தென்படும் ஒரு பழைய மாளிகையின் அறைதோறும் சிறகடித்துத் திரியும். ஹிந்துக்களின் சம்சார சித்திரம் என் இளம் உள்ளத்தில் இன்பம் தரும் ஓர் அழகிய கதை போலவே படிந்து விடும்.

''அதே காலத்தில் வெள்ளையரான கம்பெனியாருக்கும் நாட்டுச் சிப்பாய்களுக்குமிடையே போர் மூண்டது. எங்கள் பத்ரவானின் சிறிய கோட்டைக்குள்ளும் இந்தப் புரட்சி அலை எழுந்தது. கேசர்லால் சீறி எழுந்து, 'பசுகாதகர்களான இந்த வெள்ளையரை ஆரியாவர்த்தத்திலிருந்தே துரத்தி மீண்டும் ஹிந்துஸ்தானத்தில் ஹிந்து-முஸ்லிம் அரசுகளைத் தலை தூக்கச் செய்யும் சதுரங்கம் ஆடவேண்டும்' என்றார்.

''என்னுடைய தந்தை கோலாம் காதர்கான் உஷாரான மனிதர். அவர், ஒரு சமயம் குடும்பத்தவருடன் பேசும்போது ஆங்கிலேயரைத் குறிப்பிட்டு, 'அவர்கள் அசாத்தியமான காரியம் செய்யக்கூடியவர்கள். அவர்களை ஹிந்துஸ்தானவாசிகள் வீழ்த்துவது எளிதான செயலல்ல. நிச்சயமிராத இந்த நிலையில் என்னுடைய சிறிய கோட்டையை இழக்க நான் சித்தமாக இல்லை. நான் இந்தக் கம்பெனியாருடன் போர் தொடுக்கப் போவதில்லை' என்றார்.

''ஹிந்துஸ்தானமெங்கும் வெள்ளையருக்கு எதிராக ஹிந்து-முஸ்லிம்களின் இரத்தம் கொதித்தெழும்போது என் தந்தை மட்டும் வணிகனுக்குரிய இந்த மனப்பான்மையைக் காட்டுவது வெட்கக் கேடாக இருந்தது. என் தாய்மார்கூட இதனால் பரபரப்புற்றனர்.

''அச்சமயம், படை திரட்டி ஆயுதம் பூண்டு கேசர்லால் என் தந்தையை அணுகி, 'நவாப் ஸாஹேப், நீங்கள் என்னுடன் சேராத வரைக்கும், இந்த யுத்தம் முடியும்வரைக்கும் உங்க

ளைச் சிறையில் வைத்து இந்தக் கோட்டையை என் அதிகாரத்திற்கு உடபடுத்திக்கொள்வேன்' என்றூர்.

''அதற்கு என் தந்தை, 'இந்தத் தொந்தரையெல்லாம் ஏன்? நான் உன் பக்கமே இருப்பேன்' என்றூர்.

''கேசர்லால், 'பொக்கிஷத்திலிருந்து கொஞ்சம் பணம் எடுக்க வேண்டும்' என்றூர்.

''அதற்கு என் தந்தை, 'அவசியம் வரும்போது நான் தருவேன்' என்றூர். ஆனல் அந்தச் சமயம் பணம் தரவில்லை.

''தலையே பிடித்துக் கால்வரை நான் அணியும் நகைகளைக் கழற்றித் துணியில் சுற்றி மறைத்து என் ஹிந்துப் பணிப்பெண் மூலம் கேசர்லாவிடம் அனுப்பினேன். அவரும் ஏற்றுக்கொண்டார். அணிகலம் இழந்த என் அங்கங்கள் இன்ப மிகுதியால் புளகித்தன.

''கேசர்லால், துருப்பிடித்த துப்பாக்கி, பீரங்கி, பழைய வாள், ஈட்டி யாவையும் பழுது பார்த்துக்கொண்டு ஆயத்தமானூர். அதே சமயம், ஒரு நாள் பகற்பொழுது ஜில்லாக் கமிஷனர் துரையான, சிவப்பு அங்கி அணிந்த வெள்ளைக்காரன் செந்தூளி எழ எங்கள் கோட்டைக்குள் நுழைந்தான். என்னுடைய தந்தை இரகசியமாக அவனுக்குப் புரட்சியைப் பற்றிய செய்தியை எட்டவிட்டிருந்தார்.

கேசர்லாலுக்குப் பத்ரவான் துருப்புகளின் மீது அசைக்க முடியாத ஆதிக்கியம் இருந்தது. அவர் ஏவல் இட்டால் போதும், உடைந்து போன துப்பாக்கியையும், மழுங்கிய கத்தி ஈட்டிகளையும் தாங்கித் தம் உயிரையே துறக்கக் காத்திருந்தனர் படையினர்.

''நம்பிக்கைத் துரோகம் செய்த தந்தையின் வீட்டில் இருப்பது எனக்கு நரகவேதனை தந்தது. வெறுப்பு, துயர், அவமானம், கோபம் இவற்றுல் என் இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. ஆனல் கண்ணிலிருந்து எனக்கு ஒரு பொட்டு நீர் வரவில்லை. கோழையான என் தமையனின் உடுப்பை அணிந்து நான் அந்தப்புரத்தை விட்டு வெளியேறினேன். யாருமே இதைக் கவனிக்கவில்லை.

''இதற்குள் செம்புழுதி, வெடிமருந்தின் புகை, படையினரின் முழக்கம், துப்பாக்கியின் ஒலி, யாவும் அடங்கி மரணத்தின் பயங்கரமான அமைதி வான், வையம், நீரெங்கும் கவிந்திருந்தது. யமுனையின் நீரை இரத்தச் சிவப்பாக்கிச் சூரியனும் தாழ்ந்தான். அந்திப் பொழுது; சுக்கில பட்சத்து மதிவட்டம் தோன்றியது.

''சமர் அரங்கில் மரணத்தின் விகாரக் காட்சிகள். வேறு சமயமாக இருப்பின் என் இதயம் இளகி வேதனைப்பட்

டிருக்கும். ஆனால் அன்று கனவு காண்பவன் போல் நான் சுற்றிச் சுற்றி அலைந்தேன். கேசர்லால் எங்கே என்று தேடினேன். அந்த ஒரு குறிக்கோளைத் தவிர மற்றவை எனக்குப் பொய்யாகவே தோற்றின.

இரவெல்லாம் தேடி அலைந்தேன். ஒளிர்ந்த நிலவில், போர்க் களத்தின் அருகிலேயே யமுனைக் கரையில் மாந்தோப்பின் நிழலிடையே கேசர்லாலும் அவருடைய உண்மை வேலையாளான தேவகிநந்தனனும் சவமாகிக் கிடந்தனர். உடனேயே புரிந்துகொண்டேன்: படுகாயமுற்ற நிலையில் எஜமானனை வேலையாளோ, அல்லது வேலையாளை எஜமானனே போர்முனையிலிருந்து ஆபத்து இராத இந்த இடத்திற்கு எடுத்து வந்து இருவரும் அமைதியுடன் மரணமுற்று இருக்க வேண்டும்.

''இதுவரை பல நாட்களாக என் இதயத்துள் வளர்ந்து வந்த ஒரு பக்தியின் வேட்கை தணிவதற்கான காலம் வந்தது. கேசர்லாலின் காலடியில் விழுந்து புரண்டு, என்னுடைய நீண்ட கூந்தலை விரித்து, அதனால் அவருடைய பாதங்களைத் துடைக்க லானேன். கொதிக்கும் எனது நெற்றியில் குளிர்ச்சியுற்ற அவருடைய அடிமலர்களை எடுத்து ஒற்றிக்கொண்டேன். அவருடைய பாதங்களை முத்தமிட்டதுமே வெகு நாளாகத் தேங்கியிருந்த எனது கண்ணீர் வெள்ளம் பொங்கி எழுந்தது.

''அச்சமயம் கேசர்லாலின் உடல் மெல்ல அசைவுற்றது. உடனேயே அவருடைய வாயிலிருந்து தெளிவற்றதான வேதனைக் குரல் வருவதைக் கேட்டு அவருடைய கால்மாட்டிலிருந்து துணுக்குற்று எழுந்தேன். கண்களை மூடியபடி வறண்ட தொண்டையுடன், 'தண்ணீர்' என்றார்.

''சட்டென நான் என்னுடைய மேல் போர்வையை யமுனை நீரில் தோய்த்தெடுத்து அவரிடம் ஓடிவந்தேன். அதைப் பிழிந்து கேசர்லாலின் ஒட்டிக்கொண்டிருந்த உதடுகள் வழியே நீரை வார்த்தேன். இடக் கண்ணை அடியோடு பாழாக்கிக் கன்னத்தில் ஆழமான காயம் அவருக்கு. என்னுடைய ஈரத் துணியின் ஒரு மூலையைக் கிழித்து அந்தப் புண்ணின்மேல் கட்டிவிட்டேன்.

''இப்படி நாலைந்து தடவை யமுனையின் நீரைக் கொணர்ந்து அவர் முகத்தில் தெளித்த பிறகே அவருக்குச் சிறிது சிறிதாக நினைவு உண்டாயிற்று. 'இன்னும் நீர் வேண்டுமா?' என்று கேட்டேன். 'நீ யார்?' என்றார் கேசர்லால். அதற்குமேல் என்னால் இருக்க முடியவில்லை. 'ஏவல் செய்யக் காத்திருக்கும் தங்களிடம் பக்தி பூண்டுள்ள சேவிகை; நவாப் கோலாம் காதர்கானின் மகள் நான்' என்றேன். மரணத்தறுவாயிலாவது கேசர்லால் தம் பக்தையை அறிமுகம் செய்து

கொள்வார்; இந்த இன்பத்திலிருந்து என்னை யாராலும் வஞ்சிக்க முடியாதென்றே நான் நினைத்திருந்தேன்.

''நான் யாரென்பது தெரிந்த மாத்திரம் கேசர்லால் மடங்கல்போல் உறுமி எழுந்து, 'அடி கோழை! வேற்று மதத்தினளே, மரணத்தறுவாயில் என் வாயில் மிலேச்ச நீரை ஊற்றி எனது புனித தருமத்தைப் பாழாக்கிவிட்டாயே!' என்றார் இதைக் கூறியதும் கடுவிசையுடன் என் கன்னத்தில் தம் வலக்கையால் அறைந்தார். தலை கிறுகிறுக்கக் கண்கள் இருட்டி வர, நான் மயக்கம் போட்டு விழுந்தேன்.

''அப்போது எனக்கு வயது பதினைலு. அந்தப்புரத்தை விட்டு வெளியேறிய முதல் நாள். வெளிக் காற்றும், வெய்யவன் கதிரும் எனது பூமென் கன்னத்தின் அழகினை இன்னும் வாடச் செய்யவில்லை. வெளியுலகில் கால் வைத்ததும், என் வாழ்வின் தேவதையிடம் அன்றே நான் முதன் முதலாகப் பேசினேன்.''

என் கையிலிருந்த சிகரெட் அவிந்து எத்தனையோ நாழிகை ஆகிறது; நான் ஒரு மோகத்துள் கட்டுண்டு கிடந்தேன். கதையைக் கேட்டேன். அவள் பேசியது மொழியா, அல்லது இசையின் மூச்சா? என் வாயிலிருந்து பேச்சே எழவில்லை. இதுவரை இருந்தேன்; இனி இருக்க முடியவில்லை. சட்டென எழுந்து, 'அட மிருகமே' என்றேன்.

நவாப் மகள், ''மிருகம் யாரோ! மிருகம் எங்கேயாவது மரணமுற்றபோது அதன் உதடுகளில் சொட்டவிடும் நீர்த்துளியை உதறித் தள்ளுமா?'' என்றாள். நான் திகைத்து, ''ஆமாம். ஆனல் அது தேவதையே'' என்றேன். நவாப் மகள், ''அது என்ன தேவதையோ! தெய்வம் எங்கேயாவது ஒரே நினைவாக ஒருத்தி புரியும் சேவையை உதறித் தள்ளுமா?'' என்றாள். அதற்கு ''அப்படியா'' என்றதும் வாளா இருந்தேன்.

''நவாப் மகள் தொடர்ந்தாள்: 'முதலில் இது எனக்கு வெறுப்பையே தந்தது. திடுமென இவ்வுலகனைத்தும் என் தலைக்குமேல் பொடி சூர்ணமாக இற்றுப் போனதுபோல் தோன்றியது. சில நாழிகைக்குள் நினைவு வந்ததும் அந்தக் கடுமை மிகுந்த, விகாரமற்ற, நெஞ்சுரம் மலிந்த, தூய அந்தணர் பாதங்களைத் தொலைவிலிருந்தபடியே வணங்கினேன். எனக்குள், 'அந்தணர் ஏறே, நீர் ஈனர்களின் தொண்டு, பிறருடைய அன்னம், வள்ளல்களின் கொடை, பாவையரின் இளமைச் செவ்வி, காதல் எதையுமே ஏற்காதவர். நீரே தனிப் பட்ட பண்புடையவர்; நீர் நிகரற்றவர்; எதிலும் தோயாதவர்; எவர் பற்றுதலுக்கும் சிக்காமல் தொலைவில் நிற்பவர்; உமக்கு

எனது உயிரை அர்ப்பணம் செய்யக்கூட எனக்கு உரிமை இல்லை என்று சொல்லிக்கொண்டேன்.

''நவாப் மடந்தை தரையில் படியத் தன் தலையால் வணங்குவதைக் கண்டு கேசர்லால் என்ன நினைத்துக்கொண்டாரென்று தெரியாது. ஆனால் அவருடைய முகத்தில் வியப்போ அல்லது வேறு உணர்ச்சியைப் புலப்படுத்தும் குறியோ எதுவும் தோன்றவில்லை. என் முகத்தையே அமைதியுடன் நோக்கினார். அதன் பிறகு மெல்ல எழுந்தார். நான் சட்டென அவருக்குத் துணைபுரிய என் கையை நீட்டினேன். அதை அவர் தொட்டவில்லை. கஷ்டப்பட்டு யமுனைத்துறையில் இறங்கினார். அங்கே ஒரு படகு கட்டப்பட்டு இருந்தது. அதை அக்கரை செலுத்த எவரும் இல்லை. மெல்ல அந்தப் படகுமீது ஏறி உட்கார்ந்து அதை அவிழ்த்துவிட்டார். யமுனை நீரோட்டத்தில் படகு மெல்ல நகர்ந்து போய்த் தொலைவில் மறைந்துவிட்டது. எனது இதயத்தை அழுத்தும் சுமையை, என் நிறை இளமையின் வேதனையை, புறக்கணிக்கப்பட்ட எனது பக்தியின் அழுத்தத்தை யெல்லாம், மறைந்து போகும் அந்தப் படகை நோக்கி இரு கை கூப்பியவண்ணம், ஒலி அடங்கிய இரவில், நிலவொளி பளபளக்க, அலையின்றி நகரும் யமுனையின் நீரில், முற்றும் மலர்வதற்குள் காம்பின் பூங்கொத்தென வீண்போன இந்த வாழ்க்கையுடன் அமிழ்த்திவிட வேண்டுமென்றே துடி துடித்தேன்.

''ஆனால் என்னால் முடியவில்லை. வானூரும் அம்புலி, யமுனைக் கரையிலுள்ள இருள் போர்த்த காடு, அசைவிரா அதன் கருநிறப் புனல், தொலைவில் மாந்தோப்புக்கு அப்பால் நிலவொளியில் தோய்ந்து நிற்கும் எங்கள் கோட்டையின் சிகர முகப்பு இவை யாவும் மோனத்தில் ஒலிக்கும் பல்லியம் போல் மரணத்தின் வெற்றியைப் பாடின. அன்றிரவே, தாரகைகள் பொதுளி, அகண்டமாய் விளங்கும் இம்மூவுலகும் ஒரே குரலில் மரித்தொழியும்படி என்னை அழைத்தன. அலையிராத பரந்த யமுனையின் மார்பிடை நகர்ந்து கண்ணுக்கு மறைந்த அந்தப் படகு ஒன்றே, நிலவு எறிக்கும் அவ்விரவில் அழகும் அமைதியும் குடிகொண்டு மயக்கி வந்த அந்த மறலியின் இணைப்பிலிருந்து என்னை வேறுகப் பிரித்து வாழ்வின் வழியே இழுத்துச் சென்றது. மயலாகி நான் யமுனைக் கரையோரமே, நாணற் புதர்களைக் கடந்து, வறண்ட மணல்மேடுகளைத் தாண்டி, பிளவுண்ட செங்குத்தான கரைமீது தாவி, முள் படர்ந்த காடுகளிலிருந்து தப்பிச் சென்றுகொண்டிருந்தேன்.''

இந்த இடத்தில் கதை சொல்லும் அவ்வதிசய மடந்தை நின்றாள். நானும் எதுவும் பேசவில்லை.

வெகு நாழிகை பொறுத்தே நவாப் மகள் தொடர்ந்தாள்: ''இதன் பின் நடந்தவை மிகச் சிக்கலானவை. அவற்றை எங்ங னம் தெளிவாகச் சொல்வ தென்பது தெரியவில்லை. ஓர் அடர்ந்த காட்டினூடே நான் சென்றுகொண்டிருந்தேன். எந்த வழி செல்கிறேமென்று எனக்கு விளங்கவில்லை. இதன் தொடக்கம் எங்கே, முடிவெங்கே, எதை விடுவது, எதை ஏற்பது - இப்படி இந்தக் கதை தெளிவாகக் கூறுவது முடியாத காரியம்போல் தோற்றுகிறது.

''ஆனால், எனது வாழ்வில் அந்தச் சில தினங்களில், நடக்கக்கூடாதென எதுவுமே இல்லையென்பேன். நவாப் அந்தப் புரத்தில் வளர்ந்த ஒரு பெண்ணுக்கு வெளியுலகம் ஆராய்ந்து அறிவதற்குக் கடினம் நிரம்பியதானாலும் அது வெறும் கற் பனை எழுப்பும் மருளே. ஒரு தரம் வெளியே வந்துவிட்டால் செல்வதற்குப் பாதை தானாகவே அமைகிறது. அது நவாபு கள் செல்லும் பூமலிந்த வழியல்ல; சாதாரண மக்கள் என் றென்றும் பயணம் போகும் நீள்பாதை; எல்லையற்ற நெடுவழி; விசித்திரம் மல்கிய பெரு வீதி; கடுமை பரவிய கல்லாறு; எத்த னையோ கிளைகளாய்ப் பிரிவது. அதனுள் காணும் இன்ப துன் பம், இன்னல் இடையூறு பல. ஆனால் அது ஒன்றே வழி, மாளாத தும் மீளாததும்.

''சாதாரண மாந்தர் செல்லும் இவ்வழியில் தனியளாய் ஒரு நவாப் மகள் மேற்கொண்ட பயண வரலாறு கேட்கச் சுவையாக இராது. அந்தக் கதையைக் கூற எனக்கு உற்சாக மும் இல்லை. சுருங்கக் கூறின், எத்தனையோ ஆபத்துக்கள், அவமானங்கள் இவற்றை ஏற்றும் வாழ்க்கை எனக்குச் கசந்து விடவில்லை. வான வேடிக்கை காட்டுபவன் போல், கொளுத் தக் கொளுத்தத்தான் ஒரு வெறி, ஒரு வேகம் வருகிறது. வேகமாகச் செல்லச் செல்ல நான் பொலிவிழந்து போவதை உணரவே இல்லை. இன்று திடுமென அந்தப் பெருந் துய ரான என் கடைசி இன்பம் சுடர்விட்டுப் பட்டென்று அணைந்து இந்த வழியோரத்தில் புழுதிமீது ஒரு ஜடப்பொருளெனக் கிடக்கின்றேன். இன்று எனது யாத்திரை முடிவுற்றது. இத் துடன் என் கதையும் முற்றும்.''

இவ்வாறு இயம்பியதும் நவாப் மகள் நின்றாள். எனக்கு நானே தலையசைத்து இந்த இடத்தில், இது இப்படி முற்றுப் பெறவே கூடாது என்று சொல்லிக்கொண்டேன். சற்று நேரம் கம்மென்றிருந்து அரைகுறையான ஹிந்தியில் நான், ''என்னை மன்னிக்க வேண்டும். கதையின் கடைசிக் கட்டத் தைச் சற்று மனம் விட்டுத் திறந்து கூறினால் இவ்வடிமையின் மனச் சஞ்சலம் சற்றுக் குறையும்'' என்றேன்.

நவாப் மடந்தை சிரித்தாள். என்னுடைய அரைகுறையான ஹிந்திக்கும் மதிப்பு இருக்கிறது! நான்மட்டும் அசல் ஹிந்தியில் பேசியிருந்தால் அவள் நாணத்தை விட்டு என்னிடம் இவ்வளவு கூறியிருப்பாளா? அதனால் அவளுடைய தாய் மொழியில் எனக்குப் பழக்கமின்மையே, ஒரு விதத்தில் எங்கள் இருவரிடையே ஒரு திரையின் மறைவு போல இருந்தது.

அவள் மீண்டும் தொடங்கினாள்: ''கேசர்லாலைப் பற்றிய செய்தி எனக்கு அவ்வப்பொழுது தெரியவந்தது. ஆனால் அவரை நான் காணக் கொடுத்து வைக்கவில்லை. அவர் தாந்தியா டோபியின் கூட்டத்தில் சேர்ந்து புரட்சி கவிந்த ஹிந்துஸ்தானில் சில சமயம் மேற்கிலும், சிலசமயம் கிழக்கிலும், எப்போதாவது தென்கிழக்கிலும் இடிபோல் இறங்கிச் சட்டென மறைந்துவிடுவார்.

''நான் அப்பொழுது ஒரு தவமகள் போல் வேடம் புனைந்து காசியில் சிவானந்த சுவாமியை என் குருநாதனாக ஏற்று அவரிடம் சம்ஸ்கிருதம் கற்றுச் சாஸ்திரங்கள் பயின்று வந்தேன். பாரத நாட்டினைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அவர் இணையடிக் கீழ் அமர்ந்தே அறியலானேன். பக்திச் செறிவுடன் சாத்திரம் கற்றேன். உளமார்ந்த ஊக்கத்துடன் போர்ச் செய்தியையும் திரட்டிக்கொண்டேன்.

''பிரிட்டிஷார் ஹிந்துஸ்தானத்தில் மூண்ட புரட்சியைத் தம் காலின் கீழ்த் துவைத்து நசுக்கிவிட்டனர். அப்புறம் கேசர்லாலைப்பற்றிய செய்தியே இல்லை. ஊழிக்காலம் தோன்றும் குருதிச் செம்மையொளியிடையே இங்குமங்கும் தலை தூக்கிய வீரமணிகள் திடுமெனப் பேர் அந்தகாரத்தினுள் மறைந்தே போயினர்.

''அதற்குமேல் எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை. என் குருவின் நிழலைத் துறந்து பைரவியின் கோலத்தில் மீண்டும் வெளியே வந்தேன். மூர்த்தி, தலம், தீர்த்தம் யாவும் முறையாக வழிபட்டு ஓரிடத்திலும் நிற்காமல் சென்றேன்; ஆனால் கேசர்லாலைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவருடைய பெயரையும் பிரதாபத்தையும் அறிந்த ஓரிருவர், 'அவர் போர்முனையில் மரிக்கவில்லை. அரச தண்டனைக்கு ஆளாகி மாண்டார்' என்றார். ஆனால் என்னுடைய அந்தராத்மா மாத்திரம், 'இது ஒரு போதும் நடக்காது, கேசர்லாலுக்கு மரணமே சம்பவிக்காது. அந்த அந்தணர் திலகம், அவியாத அவ்வேள்விக் கனல், ஒரு போதும் மறையாது. எனது ஆன்ம ஆவுதியைப் பெறுவதற்கே அவர் இன்னும் எங்கேயாவது மனிதர் நெருங்க முடியாத இடத்தில்தான்

வேள்விக்கூடத்தில் பெரும் பிழம்பெனச் சுடர் விட்டுக்கொண் டிருப்பார்' என்று உறுதியாக நம்பியது.

''ஹிந்து சாத்திரங்கள் கூறுகின்றன, ஞான மார்க்கத்தா லும், தவ நெறியாலும் நான்காம் வருணத்தவர் பிராம்மண ராக முடியுமென்று. முஸ்லிம் பிராம்மணராக முடியுமா என் பது அவற்றில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. அதற்கு ஒரே காரணம், அவற்றை ரிஷிகள் வகுத்தபொழுது உலகில் முஸ் லிம்களே இல்லை. கேசர்லாலும் நானும் கூடுவதற்கு எத்த னையோ தடங்கல் உள்ளன. முதலில் நான் பிராம்மண இனத் தைச் சேர்ந்தவளாக வேண்டும். இப்படியே முப்பது ஆண்டு கள் ஓடிவிட்டன. எனது உள்புற ஒழுக்கம், நடை உடை பாவனை, மனம் மெய் மொழி யாவும் என்னை அந்தண்மை உடையவளாகச் செய்தன. என் உடலில் ஊறும் அந்தப் பிராம் மணப் பாட்டியின் இரத்தம் என்னைப் புனிதவதியாக்கிவிட் டது. இளமையிலும் நான் பிராம்மணி. எனது இளமை முடிவிலும் நான் பார்ப்பனியே. எனது மூவுலகும் ஒரு பிராம்மணனின் சரண தாமரையில் கூச்சமின்றி அர்ப்பணம் செய்துகொண்டு திவ்விய சோதியுடன் திகழ்கிறது.

''மூண்ட பெரும் புரட்சிப் போரில் கேசர்லாலின் தீரச் செயல்களைப்பற்றிப் பல செய்திகள் கேள்விப்பட்டேன். ஆனால் அவை என் இதயத்தில் பதியவே இல்லை.

''நிலவு பொழியும் இரவில் ஒலியடங்கிய யமுனை ஓட்டத் திற்கிடையே சின்னப்படகு ஒன்று கேசர்லாலைத் தனியே ஏற் றிச் சென்றதே, அந்தச் சித்திரமே என் மனத்திரையில் அழியாமல் நிற்கிறது; எப்போதும் என்முன் காண்கின்றேன். ஓர் அந்தணர் திலகம் இரவு பகலாய்க் குறிப்பிலாப் பயணம் செய்து பெரிய இரகசியத்தை நோக்கி விரைகிறார். அவருக்குத் துணை எவருமில்லை, தொண்டாற்றுவோரில்லை; யாரைக் குறித் தும் அவருக்கு அக்கறையில்லை. அந்த நின்மலர், தம்முள் ளேயே தாம் மூழ்கித் தம் நிறைவிலேயே திளைத்திருக்கிறார். வானிடைச் சுழலும் நாளும் கோளும் அவரையே கண்கொட் டாமல் நோக்குகின்றன.

''இதே சமயம் ஒரு செய்தி வந்தது; கேசர்லால் தண்டனை யிலிருந்து தப்பி ஓடி நேபாளத்தில் மறைந்திருக்கிறாராம். நேபாளத்திற்குச் சென்றேன். அங்கே நீண்ட நாள் தங்கி யிருந்தபோது, கேசர்லால் நேபாலம்விட்டு வேறு எங்கோ போய் விட்டதாகத் தகவல் கிடைத்தது. அதற்குப் பிறகு குன்று தோறும் அவரைத் தேடி அலைகிறேன். இது ஹிந்துக்களின் நாடன்று. லேப்சா மிலேச்சர்கள் இதில் உள்ளவர்; இவர்களுக்கு விதி விலக்கு எதுவுமே கிடையாது.

இவர்களுடைய வழிபாட்டு முறை தெய்வங்கள் யாவும் தனிப் பட்டவை. எத்தனையோ நாட்கள் புரிந்த கடின சாதனையால் நான் அடைந்த தூய்மைக்குப் பங்கம் நேரிடுமோ என்று என்னை அழுக்காடையால் மூடிக்கொண்டு மாறுவேடத்தில் செல்கின்றேன். எனது லட்சியப் பட்சு துறைக்கு அணித்தாக வந்துவிட்டது என் வாழ்வின் இறுதியான புனிதத்தலம் அதோ அருகில்தான்.

''இதற்குமேல் என்ன சொல்வது? கடைசி விஷயம் என்னவோ மிக அற்பமானது. விளக்கு அணையும் தறுவாயில் அது சுடர்விட்டு எரிந்து அடங்கும். இதை நான் நீட்டித்து விளக்கம் தரவேண்டுமா?

''முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தார்ஜி லிங்கில் இன்று நான் இளங்காலையில் கேசர்லாலைக் காணக் கொடுத்துவைத்தேன்.''

இவ்வதிசய கதையைச் சொன்னவள் திடுமென நிற்பதைக் கண்டு நான் ஆவல் உந்த, ''எங்கே பார்த்தீர்கள்?'' என்றேன்.

''நவாப் மகள், ''முதிய கேசர்லால் பூடியாக்களின் ஊர் ஒன்றில் தம் பூடியா மனைவி மக்கள், பேரன் பேத்தியுடன், அழுக்கு உடையுடன் அழுக்கடைந்த வீட்டு முன்றிலில் சோளக் கதிரிலிருந்து மணிகளைப் பிசைந்து எடுத்துக்கொண்டிருப்ப தைக் கண்டேன்'' என்றாள்.

கதை முடிந்தது. அவளுக்கு ஆறுதல் தர ஏதாவது சொல்லவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. ''முப்பத் தெட்டு ஆண்டுகள் உயிருக்காகப் பயந்து வேற்றுச் சாதிய ரிடையே காலம் கழித்தால் எப்படி ஒரு மனிதனால் தன் ஆசார சீலமெல்லாம் காத்துக்கொள்ள முடியும்?'' என்றேன்.

நவாப் மகள், ''அது எனக்குப் புரியவில்லையா என்ன? ஆனால் இதுவரை எந்த மயக்கில் சிக்கி அலைந்தேன்? என் பாவை உள்ளத்தைக் கவர்ந்த அந்தப் பார்ப்பனீயம் வெறும் பழக்கத்தின் மேல் நிற்பது; கொள்கையைப்பற்றி இருக்க வில்லை. அதுவே தர்மமும் அநாதியும் அனந்தமும். அவ்வாறு உணர்ந்துதான் நான் நிலவு தோய்ந்த இரவில் மலரும் எனது கன்னி உள்ளத்தைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வரும்போது பிராம்மணனின் வலக்கையால் அடியுண்ணும் பெருத்த அவ மானத்தைப் பொறுத்தேன். என் குரு தரும் மந்திர உபதேச மென - தீட்சை என - அதை என் சிரமேற்கொண்டேன். அந்தோ! அந்தணனே, உன் ஆசாரத்தை விட்டு வேறொரு பழக்கத்தை மேற்கொண்டாய். ஆனால் என் இளமையும் என் வாழ்வும் போனபிறகு அவற்றைத் திரும்பிப் பெற என்னால் முடியுமா?''

இதைக் கூறியதும் அப்பெண்மணி எழுந்து நின்று, ''வணக்கம், பாபுஜி'' என்றதும் சட்டெனத் திருத்திக் கொண்டு, ''ஸலாம் பாபுஸாஹிப்'' என்றாள்.

இவ்வாறு முஸ்லிம் ரீதியான வணக்கத்தின் மூலம், தன் வாழ்வையே குட்டிச் சுவராக்கிய பார்ப்பனீயத்திடம் கடைசியாக விடை பெற்றுக்கொண்டாள். நான் ஏதோ பேச வாயெடுக்கும்பொழுது இமயமலைச் சரிவில் தோன்றும் மூடுபனித் திரைக்குள் மறைந்தே போனாள்.

நான் சில கணம் கண் மூடியவாறு நடந்தவற்றை என் மனத்திரையில் ஓவியமெனக் கண்டேன். மெல்லிய தூவி அணை மீது அமர்ந்து யமுனைக் கரையிலுள்ள மாளிகையான சாலேக வாயிலில் பதினறு வயதான நவாபின் இளமகளைக் கண்டேன்; ஆலயத்துள் அந்திவேளைப் பூஜையின்போது ஒரு தவமகள் பக்தியால் உள்ளம் நெக்குருகத் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டேன், பின்னர் தார்ஜிலிங் கல்கத்தா சாலையோரத்தில் பூவினும் மெல்லிய மேனியள், பிராம்மண முஸ்லிம் இரத்தக் கலப்பினால் மூண்ட பெரிய மனப் போராட்டத்தால் சித்தம் மயங்கித் தன் துன்பக் கதையை இசையின் சந்தம் போல் ஒலிக்கும் உர்து மொழியில் புகல்வது என் மூளைக்குள் விசித்திரத் துடிப்பை எழுப்பியது.

கண்ணைத் திறந்து நோக்கினேன். மேக மூட்டம் விலகிப் போய் ஒளிவெயில் தூய வானில் எங்கும் பரவியது. தள்ளு வண்டிகளில் ஆங்கிலேய மாதரும், குதிரைமேல் ஆங்கில ஆடவர்களும் காற்று வாங்கக் கிளம்பிவிட்டனர். இவர்களுக் கிடையே வங்காளிகள் ஓரிருவர் அழுத்தி மூடிக்கொண்டிருக்கும் தம் கம்பளிப் போர்வையிலிருந்து முகத்தை நீட்டி என் மீது கண்ணைச் செலுத்தினர்.

வேகமாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தேன். கதிரவனின் கிரணங்கள் புகுந்து விளையாடும் இவ்வுலகக் காட்சியிடை மேக இருள்போல் தோன்றும் அந்த விசித்திரக் கதை உண்மையாகவே என் மனத்திற்குப் படவில்லை. இந்த மலைப்பனியும், என்னுடைய சிகரெட்டிலிருந்து வந்த தூமப்படலமும் சேர்ந்து ஒரு விசித்திரக் கற்பனையைப் புனைந்தன போலும்! அந்த முஸ்லிம் பிராம்மண மெல்லியள், அந்த அந்தணர்திலகம், அந்த யமுனைக் கரைக் கோட்டை இவை யாவும் உண்மையே அல்ல!

கண் கொடை

இந்தக் காலத்தில் வங்காளிப் பெண்கள் தங்களுக்கேற்ற கணவன்மாரைச் சொந்த முயற்சியாலேயே தேடிக் கொள்கிறார்கள். ஆனால் நான் தெய்வத்தின் உதவியைக் கொண்டு என் கணவரை வரித்தேன். சிறு வயது முதற்கொண்டு இதற்காக நான் நோற்ற நோன்புகள் எத்தனையோ; பண்ணிய சிவ பூஜைகளுக்குக் கணக்கே இல்லை.

எனக்கு எட்டு வயது நிரம்பியதும் மணமாகிவிட்டது. ஆனால் முன் செய்த பாவ வினையினால் கணவரைப் பெற்றும் அவரைப் பூரணமாக அடையும் பேற்றைப் பெறவில்லை. முக்கண் படைத்த உலகத் தாய் என் இரு கண்களையும் கொள்ளை கொண்டாள். வாழ்வின் கடைசி நிமிடம் வரையில் கணவரைக் கண்ணாரக் காணும் இன்பத்தை அவள் அளிக்கவில்லை.

இளம்பிராயத்திலேயே என்னுடைய அக்கினி பரீட்சை ஆரம்பமாகிவிட்டது. பதினாறு வயது கடந்ததும் நான் ஒரு செத்த பிள்ளையைப் பெற்றெடுத்தேன். நானும் சாகும் அளவுக்கு வந்துவிட்டேன். பின்னால் எவ்வளவோ துயரை அநுபவிக்க வேண்டியிருக்கிறதே; நான் எப்படிச் சாவேன்? எண்ணெய் இட்ட விளக்கு, கடைசிவரைக்கும் எரிந்துதானே அவியும்? பிழைத்து எழுந்தேனே தவிர, பலவீனத்தினாலோ, தீவிர மனவேதனையினாலோ என் கண்ணுக்கு ஊனம் ஏற்பட்டது.

அந்தச் சமயம் என் கணவர் டாக்டர் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். வித்தை கற்ற புதிதில் அவர் யாருக்கு வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானாலும், சிகிச்சை செய்ய ஆவல் கொண்டிருந்தார். முதலில் தாமே எனக்கு வைத்தியம் செய்யத் தொடங்கினர்.

அண்ணா அந்த ஆண்டில் பி. எல்., முடிக்கக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் என் கணவரைப் பார்த்து, ''என்ன விளையாட்டு இது? குழவின் கண்களைப் பாழாக்குகிறாயே! தெரிந்த டாக்டர் யாரிடமாவது காட்டக் கூடாதா?'' என்றான்.

''அவன்மட்டும் என்ன புதிதாகக் கிழித்துவிடப் போகிறான்! மருந்து என்னவோ எல்லோருக்கும் தெரிந்ததுதான்'' என்றார் என் கணவர்.

அண்ணு சற்றுக் கோபத்துடன், ''அப்புறம் உனக்கும் உன் காலேஜ் பெரிய புரொபசருக்கும் ஒரு வித்தியாசமும் இல்லே!'' என்றான்.

''உனக்கென்ன புரியும்? சட்டப் பரீட்சைக்குப் படிக்கிறாய். நீ விவாகம் செய்துகொள்கிறாய் என்று வைத்துக்கொள். உன் பெண்டாட்டிக்குச் சேர வேண்டிய சொத்தைக் குறித்து ஏதாவது வழக்கு ஏற்பட்டால் நீ என் யோசனையைக் கேட்பாயோ?''

மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி. என் கணவருக்கும் தமையனுக்கும் இடையே மூண்ட இந்தச் சச்சரவு என்னைத்தான் மிகவும் பாதித்தது. 'அண்ணுதான் என்னை ஒருவருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டாரே. என்னைப்பற்றிய பொறுப்பு அவருக்கு எதற்கு? இன்பமோ, துன்பமோ, நலக்குறைவோ, எல்லாம் என் கணவர் பார்த்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள்' என்று எனக்குத் தோன்றியது.

அன்று என்னுடைய இந்த அற்பக் கண் சிகிச்சையைக் குறித்து அண்ணுவுக்கும் என் கணவருக்கும் சற்று மனத்தாங்கல் ஏற்பட்டது. இயல்பாகவே என் கண்களிலிருந்து நீர் கொட்டிக்கொண்டிருக்கும். அந்தக் கண்ணீர்ப் பெருக்கு இன்னும் அதிகரித்தது. அதன் உண்மைக் காரணம் என் கணவருக்கும் தெரியாது.

என் கணவர் கல்லூரிக்குச் சென்ற சமயம் பார்த்து அண்ணு ஒரு டாக்டரை அழைத்து வந்தான். அவர் என் கண்களை நன்றாகச் சோதித்துவிட்டு, ''இன்னும் இப்படியே விட்டு வைத்தால், இந்த நோய் விருத்தி அடையும்'' என்று ஒரு மருந்துப் பட்டியலை எழுதித் தந்தார். அதை வாங்கி வர அண்ணு உடனே ஆளை ஏவினான்.

டாக்டர் போனவுடன் நான் அண்ணுவைப் பார்த்து, ''அண்ணு, உன் காலில் விழுகிறேன். அவர் எனக்குச் செய்யும் சிகிச்சைக்கு இடைஞ்சல் செய்ய வேண்டாம்'' என்றேன்.

குழந்தை முதல் அண்ணுவிடம் எனக்குப் பயமே. அவன் எதிரே நான் இந்த வார்த்தையை எப்படிச் சொல்லத் துணிந்தேன் என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. என் கணவருக்குத் தெரியாமல் அண்ணு நடத்தும் இந்தச் சிகிச்சையால் எனக்குக் கெடுதலே ஒழிய நன்மை இல்லை. இதை நான் அறிவேன். எனக்கு வாய் வளர்ந்திருப்பதைக் கண்டு அண்ணு சற்றுத் திகைத்தான். மௌனமாகச் சற்றுச் சிந்தனை செய்துவிட்டு, ''சரி; இனிமேல் நான் டாக்டரை அழைத்துவர மாட்டேன். ஆனால் அவர் கொடுத்துள்ள மருந்தை மட்டும் தவறாமல் கண்ணுக்குப் போட்டுக்கொண்டு வா'' என்றான். வந்த

தும் அதை உபயோகிக்கும் விதத்தை எனக்கு விளக்கிவிட்டு அண்ணு போய்விட்டான். கணவர் கல்லூரியிலிருந்து திரும்புவதற்கு முன்பே அந்த மருந்துக் குப்பி, சலாகை எல்லாவற்றையும் பத்திரமாக வீட்டுப் பின்புறத்திலிருந்த பாழுங் கிணற்றில் எறிந்துவிட்டேன்.

அண்ணுவுக்குப் போட்டியாக என் கணவர் இருமடங்கு ஆர்வத்துடன் என் கண்ணைக் குணப்படுத்த முயன்றார். வேளைக்கு வேளை, மருந்தை மாற்றி என் கண்ணை என்ன வெல்லாமோ செய்தார். கண்ணுக்கு ஒரு மூடியை அணிந்தேன். அப்புறம் கண்ணுடி போட்டுக்கொண்டேன். பொட்டு மருந்து விட்டுக்கொண்டேன். சூர்ணத்தைக் கண்களில் அரக்கிக்கொண்டேன். குடரைக் குழப்பும் மீன் எண்ணெயையும் உள்ளுக்குச் சாப்பிட்டேன்; ஒக்காளம் வரும்; ஆனால் அடக்கிக்கொண்டேன். என் கணவர், ''எப்படி இருக்கிறது?'' என்று விசாரிப்பார்.

''பரவாயில்லை, சுமாராக இருக்கிறது'' என்றேன். வியாதி நீங்கிவருவதாக எண்ணிக்கொள்வேன். கண்ணிலிருந்து மேன் மேலும் நீர் வடிந்தால் கெட்ட நீரெல்லாம் வந்து விடுவது நல்லதுதானே என்று எண்ணுவேன். நீர் வராமல் நின்றுவிட்டால், குணமாவதன் குறி என்றே நினைப்பேன்.

அப்புறம் சில நாளைக்கெல்லாம் கண்வலி தாங்க முடியாத அளவுக்கு வந்துவிட்டது. பார்வை மங்கியது. மூளையில் ஒரு வேதனை; என்னை என்னவோ செய்தது. என் கணவர் முகத்தில் திகில் மூண்டிருப்பதைக் கண்டேன். கண் இவ்வளவு தூரம் கெட்ட பிறகு எப்படி வேறு டாக்டரை அழைப்பது என்று அவர் தயங்கினார்.

நானும், ''யாராவது டாக்டரை அழைத்து வந்து காட்டுங்களேன். அண்ணுவுக்கும் திருப்தியாக இருக்கும். ஏற்கனவே அவனுக்கு என்மேல் கோபம், நான் கண்ணைச் சரியாகக் கவனித்துக்கொள்ளவில்லை என்று. அதனால் என் மனத்துக்கு வருத்தந்தான். நீங்களே சிகிச்சை செய்யுங்கள். எதற்கும் இன்னொரு டாக்டரின் யோசனையைக் கேட்பது நல்லது தானே?'' என்றேன்.

''நீ சொல்லுவது சரி'' என்று என் கணவர் அன்றைத் தினமே ஓர் இங்கிலீஷ் டாக்டரை அழைத்து வந்தார். அவர்கள் என்ன பேசிக்கொண்டார்களோ தெரியாது; ஆனால் அவர் என் கணவரை ஏதோ கடிந்து பேசியதாக மட்டும் தெரிந்தது. என் கணவர் தலை இறங்கிப் போய் மௌனமாக நின்றார்.

டாக்டர் சென்றதும் நான் என் கணவரின் கையைப்

பிடித்துக்கொண்டு, ''எங்கிருந்தோ இந்த முரட்டு வெள்ளைக் காரக் கழுதையைப் பிடித்துவந்தீர்கள். நம் தேசத்து டாக்டர் கள் யாரும் அகப்படவில்லையா? என் கண் நோயைப்பற்றி உங்களைக் காட்டிலும் வேறு யாருக்குத் தெரியும்?'' என்றேன்.

என் கணவர் தயங்கிக்கொண்டே, ''கண்ணை ஆபரேஷன் செய்ய வேண்டிவரும்போல் இருக்கிறது'' என்றார்.

நான் கோபங்கொள்வது போல், ''ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா? ஆனால் ஏன் இதை முதலிலேயே சொல்லாமல் ஒளித்துவிட்டீர்கள்? நான் பயப் படுவேன் என்றுதானே எண்ணுகிறீர்கள்?'' என்றேன்.

''ஆபரேஷன் என்றால் எத்தனை ஆடவர்கள் இடி விழுந்து போகிறார்கள், தெரியுமா?''

''ஆடவர்களுடைய வீரப்பெல்லாம் பெண்களிடத்தில் தான்'' என்றேன் நான் குத்தலாக.

உடனே என் கணவரின் முகம் வாடிப் போய்விட்டது. தாழ்ந்த குரலில், ''நீ சொல்வதில் தப்பே இல்லை; ஆண்கள் அகம்பாவமே உருவெடுத்தவர்கள்'' என்றார்.

''அகம்பாவத்தில் உங்களால் பெண்களோடு போட்டியிட முடியுமா? அதிலும் எங்களுக்கேதான் வெற்றி'' என்றேன்.

இதற்கிடையே ஒரு நாள் அண்ணா வந்தான். நான் அவனைத் தனிமையில் அழைத்துச் சென்று, ''அண்ணா, நீ அழைத்து வந்த டாக்டர் சொன்னபடியே தவறாமல் மருந் தைப் போட்டுக்கொண்டேன். எவ்வளவோ இலகுவாயிற்று. ஒரு நாள் கவனப்பிசகில் உள்ளுக்குச் சாப்பிடும் மருந்தைக் கண்ணில் போட்டுக்கொண்டு விட்டேன். அதற்கப்புறம் என் கண் இந்த நிலைக்கு வந்துவிட்டது. அவர் சொல்லுகிறார், ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று'' என்றேன்.

''உன் கணவனே உனக்கு வைத்தியம் செய்கிறான் என்று நினைத்துக்கொண்டுதான் நான் இத்தனை நாள் வரவில்லை'' என்றான் அண்ணா.

''என் கணவருக்குத் தெரிந்தால் கோபிப்பார் என்று நான் மறைவாகவே டாக்டர் சொன்னபடி செய்து வந்தேன்'' என்றேன்.

பெண்ணைப் பிறந்துவிட்டால் இத்தனை பொய் சொல்ல வேண்டி யிருக்கிறது! அண்ணா மனத்துக்கும் கஷ்டம் கொடுக் கக் கூடாது; கட்டிய கணவருடைய பேருக்கும் குறைவு வரக் கூடாது. தாயாகிச் சில சமயம் குழந்தையை ஏமாற்றவேண்டி வருகிறது; மனைவியாகிக் குழந்தையின் தகப்பனை ஏமாற்ற வேண்டி வருகிறது. பெண்கள் இவ்வளவு நடிப்பைக் காட்ட வேண்டியிருக்கிறது!

அந்த நடிப்பின் விளைவாக என் கண்கள் அவிந்து போகு முன் அண்ணுவும் என் கணவரும் ஒருமித்ததைப் பார்க்கக் கொடுத்து வைத்தேன். மறைவாகச் சிகிச்சை செய்ததனாலோ என்னவோ இந்தக் கெடுதல் நேர்ந்தது என்று அண்ணு எண்ணினான். ஆரம்பத்திலேயே அண்ணுவின் யோசனைப்படி செய்திருந்தால் கண் கூடி விட்டிருக்குமே என்று என் கணவர் நினைத்தார். இரக்கத்தால் துடிக்கும் இருவரின் உள்ளங்களி னுள்ளே சென்று அவர்களுக்கு நான் மிகவும் நெருங்கியவள் ஆகிவிட்டேன். இப்போது என் கணவர் அண்ணுவின் யோசனைப்படி நடக்கலானார். அண்ணுவும் இறங்கி எல்லா விஷயத்துக்கும் என் கணவரின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினான்.

கடைசியில் இருவரின் யோசனையின்பேரில் இங்கிலீஷ் டாக்டர் வந்தான். என் இடக் கண்ணில் கருவியை வைத் தான். நொந்து கிடந்த என் விழிக்கு அது தாளவில்லை. கொஞ்ச நஞ்சம் இருந்த பார்வையும் பட்டென்று அணைந்து விட்டது. மிகுந்திருந்த ஒரு கண்ணும் நாளடைவில் பார்வை மங்கி அவிந்து வந்தது. சிறு வயதில் ஒரு சுப வேளையில் சந்தனம் பூசிய அந்த இளமை உருவம் என் கண்முன் நின்றது; இப்போது திரைபோல் இருட்டு அதை மறைத்துக்கொண்டு விட்டது.

ஒரு நாள் என் கணவர் படுக்கையின் அருகில் வந்து என்னை நோக்கி, ''யார்பேரிலும் குற்றம் சொல்வதற்கில்லை; உன் கண்களை நானேதான் பாழாக்கினேன்'' என்றார்.

அவர் குரலில் அழுகை நிரம்பியிருந்தது. என் இரு கை களாலும் அவரது வலக் கரத்தை அழுத்தினேன்; ''ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நீங்கள் செய்தது நல்லதுதான். உங் களுக்குச் சொந்தமானதை நீங்களே எடுத்துக்கொண்டீர்கள். வேறு டாக்டர் என் கண்ணைக் கெடுத்துவிட்டிருந்தால் எனக்கு ஆறுதல் ஏற்பட்டிருக்குமா? நீங்களே சொல்லுங்கள். என் விதி, கண் போக வேண்டும் என்று இருக்கிறது. யார் கை வைத்தால்தான் என்ன? என் கண் இருட்டிவிட்டதில் ஒரு நிம்மதி; என்ன தெரியுமா? உங்கள் கையாலேயே அது போய் விட்டதுதான். பூசைக்கு உரிய மலர்கள் எண்ணிக்கையில் குறைந்தபோது இராமபிரான் தம் இரு கண் மலர்களையும் பெயர்த்துத் தரப் போனார். என்னுடைய தெய்வத்துக்கு என் கண்ணை நான் கொடுத்தேன். நீங்கள் பார்த்து மகிழ்ந்து என்னிடம் சொல்வதே போதும். அதுவே நான் பார்ப்பது போலாகும்.''—இவ்வளவும் நான் பேசவில்லை. அப்போது சொன்னதாக நான் பாவித்துக்கொண்டேன். மனம்

வாட்டம் அடைந்தபொழுதும், என் அசையாத உறுதி சற்று நிலை தடுமாறிய சமயமும், ஏமாற்றம், துயர் இவற்றுள் அழுந்திக் கிடக்கும் தருணமும் இவ்வாறெல்லாம் சொல்லிக் கொண்டு சாந்தம் அடைவேன். இந்தப் பக்தியின் மூலம் துயரை வென்று ஓர் உயர்வான நிலையில் திரிவேன்.

அன்று என் மனத்துள் சென்றதை ஒரு விதமாக என் மௌனத்தின் மூலமாகத் தெரியப்படுத்தினேன். அப்போது அவர், ''குமு, மூடத்தனமாக நான் உனக்குப் பெருத்த நஷ்டத்தை உண்டாக்கிவிட்டேன். அதைத் திருப்புவது என்னவோ முடியாத காரியம். ஆனால் என்னால் கூடிய வரையில் கண்ணில்லாத குறையை அகற்ற முயல்வேன். நான் எப்போதும் உன் பக்கத்திலேயே இருப்பேன்'' என்றார்.

''இதனால் என்ன பலன்? இந்தக் குருட்டைக் கட்டிக் கொண்டு வாழ்நாள் முழுவதும் நீங்கள் அழுவானேன்? வேறு விவாகம் பண்ணிக்கொள்ளுங்கள். அப்போதுதான் என் மனம் திருப்தி அடையும்.''

மணம் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றி நான் விவரிப்பதற்கு முன் என் நெஞ்சு விம்மத் தொடங்கியது. கனத்து என்னைத் திடப்படுத்திக்கொண்டு நான் பேச ஆரம்பித்தேன். என் கணவர் உணர்வு மூண்டு, ''நான் முட்டாள், அகங்காரி, எதுவாக இருந்தாலும் கல்நெஞ்சன் அல்ல. என் கையாலேயே உன்னைக் குருடாக்கிவிட்டேன். அந்தக் குற்றம் போதாமல் உன்னைத் தள்ளிவிட்டு வேறு விவாகம் நான் செய்துகொள்வேனேயானால் இதோ என் வழிபடு தெய்வம் கோபிநாதன்மேல் ஆணையாகச் சொல்கிறேன்: நான் பிரம்மஹத்தி, பித்ருஹத்தி செய்த பாபத்தில் போவேன்'' என்றார்.

இவ்வளவு பெரிய சபதத்தை நான் தடுத்திருப்பேன். ஆனால் பொங்கிவரும் கண்ணீர் என் நெஞ்சை அடைத்தது; என் மார்பை விம்மச் செய்தது. கண்களில் நீராக வழியத் தொடங்கியது. அதை அடக்கிக்கொண்டு என்னால் எதுவும் பேச முடியவில்லை. அவர் சொன்னதைக் கேட்டு இன்பத்தில் ஆழ்ந்து தலையணையில் முகத்தை அழுத்தி அழலானேன்: நானே குருடி! இருந்தும் அவர் என்னை விடமாட்டார். என்னைத் தம் உள்ளத்தின் அருகே அணைத்துக்கொள்வார். இவ்வளவு சௌபாக்கியத்தை நான் கோரவில்லை. ஆனால் இந்த மனம் கேட்கிறதா?

கடைசியில் கண்மாரியின் முதல் வேகம் தணிந்ததும் அவரது முகத்தை என் மார்பில் அணைத்துக்கொண்டு, ''இவ்வளவு பயங்கரமான சபதம் ஏன் செய்துகொண்டீர்கள்? நான் உங்கள் சுகத்திற்காகவா மறு விவாகம் செய்துகொள்ளச்

சொன்னேன்? இவையாள் மூலம் என் கடமைகளை ஆற்றுவேன். கண் இராத குறையை நீக்கிக்கொண்டு சேவை புரிவேன்'' என்றேன்.

''இந்த வேலையை ஒரு பணிப்பெண் செய்வாளே! என் காரியத்துக்காக ஒருத்தியை மணந்து என் தெய்வமான உனக்குச் சமமாக வைத்துக்கொள்வேனா?'' என்றதும் என் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தம் தந்தார். அந்த முத்தத்தின் மகிமையினால் எனக்கு மூன்றாம் கண் திறந்தது. அதே சமயம் நான் அவரது மனப்பீடத்தில் தேவதையாக அமர்ந்தேன். நான் குருடானதே நல்லதாகப் போயிற்று. நான் வெளி ஸம்ஸாரத்தின் தொடர்பு அற்றவள். இப்போது நான் தேவியின் உயர்ந்த இடத்தில் இருக்கிறேன். என் கணவருடைய நன்மையின் பேரில்தான் எனக்குக் கண். சூது வாது, ஸம்ஸாரத்திலுள்ள பெண்களிடம் தோன்றும் சிறுமை, கள்ளம் இவற்றை எல்லாம் மீறி இருப்பவள் நான்.

அன்று முழுவதும் எனக்குள்ளேயே போராட்டம். கணவர் மறுமணம் செய்துகொள்வதில்லை என்று சபதம் செய்த விஷயம் என் மனத்துள் பூரிப்பை உண்டாக்கிக்கொண்டே இருந்தது. என்னுள் அடங்கியிருக்கும் அந்தத் தேவியின் அம்சம்மட்டும் சொல்லியது: 'ஒரு நாள் வரும்; அன்று இந்தச் சபதத்தைப் பரிபாலனம் செய்வதைக் காட்டிலும் உன் கணவன் மணம் புரிந்துகொள்வதே நலம் என்று உனக்கே தோன்றும்'. ஆனால் என் பழமையான பெண் தன்மை, 'எப்போது சபதம் செய்துகொண்டாயிற்றோ, கல்யாணம் பண்ணிக்கொள்வது அழகல்ல' என்றது. தேவியின் அம்சம் அதற்கு, 'அதில் நீ இன்பம் அடைவதற்கு ஒரு காரணமும் இல்லையே!' என்று சொல்லியது. என் மனித இயற்கை, 'அதெல்லாம் தெரிகிறது; ஆனால் அவர் சபதத்தை எப்படி மீறுவார்?' என்றது. அடிக்கடி இதே கேள்வி. தேவியின் அம்சம் அப்போது பதில் தராமல் புருவத்தைச் சுளித்தது. ஒரு பெருந் திகில், இருள்போல் என் மனத்தை மெல்லச் சூழ்ந்துகொண்டது.

என்மேல் இரக்கம் கொண்டிருக்கும் என் கணவர் வேலைக்காரர்களை அடக்கிவிட்டுத் தாமே என்னுடைய காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினார். சிறிய விஷயங்களுக்குக்கூடக் கணவரை எதிர்பார்ப்பது முதலில் எனக்குப் பிடித்திருந்தது. காரணம், இவ்வாறு செய்வதனால் அவர் என்னை விட்டுச் சற்றேனும் அகலமாட்டார். கண்ணால் அவரைப் பார்க்க முடியாததனால், அவரை என் அருகிலேயே வைத்துக்கொள்ளும் ஆசை மேலிட்டது. கண்களுக்கு மங்கலாகத் தெரிந்த கணவ

ரின் முகத்தை என் ஐம்புலன்களும் பங்கிட்டுக்கொண்டு தம் வழியே அநுபவித்தன. இப்போதெல்லாம் என் கணவர் வெளியே காரியமாகப் போனால் அந்தச் சற்றுநேரத் தனிமை என்னை என்னவோ செய்யும்; எல்லாவற்றையும் இழந்து விட்டதுபோல் தோன்றும். முன்பெல்லாம் அவர் கல்லூரி யிலிருந்து வரச் சற்றுத் தாமதமானால் சன்னல் வழியாக நான் கண்கொட்டாமல் அவர் வரும் வழியை நோக்கியிருப்பேன். அவர் சுற்றிவந்த ஓர் உலகை என் உலகாகவே எண்ணிக் கொள்வேன். இன்றோ கண் அவிந்த என் உறுப்புக்களனைத்தும் அவரைத் தேடி அலைந்தன. அவர் வாழ்ந்த உலகையும் என் உலகையும் இணைத்த பாலம் இன்று உடைந்துவிட்டது. இன்று இவருக்கும் எனக்கும் இடையே ஒரு பயங்கர இருட்டுத் தான் நிற்கிறது. இப்போது நான் கதியற்று வேதனையிலேயே காலங் கழிக்கவேண்டி யிருக்கிறது. அவர் என்னண்டை எப்போது வருவாரோ என்ற ஏக்கமே எக்காலமும். இதன் பொருட்டே அவர் நிமிட நேரங்கூட என்னை விட்டுப் பிரிவ தில்லை. என் குருட்டு உடல் அவரைப் பிடித்துக்கொள்ள அலை பாயும்; அவரோடு நெருங்கி இருக்க விம்மி அழும். ஆனால் இவ்வளவு ஆசை - இவ்வளவு ஆதரவு - பார்ப்பதற்கு நன்றி கத்தான் இல்லை. நான் அவருக்கு மனைவியாக ஏற்கனவே ஒரு கால் கட்டாயிருக்கிறேன். இது போதாதென்று இந்தக் குருடி யைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பையும் அவர்மேல் சுமத்த எனக்கு விருப்பமில்லை. என் இருண்ட வாழ்வை நானே சுமந்து செல்வேன். இந்த முடிவில்லாத இருளில் என் கணவரை ஆழ்த்தக் கூடாதென்று நிலையானதோர் உறுதி செய்துகொண்டேன்.

சில நாட்களுக்குள் ஓசை, மணம், பரிசம் இவற்றின் மூலம் வழக்கப்படி என் காரியங்களைச் செய்யும் திறமை உண்டாயிற்று. வீட்டுக் காரியங்களை முன்னைவிடத் திறமை யாக நடத்தலானேன். ஒரு பெரிய உண்மை எனக்குப் புல னாயிற்று. கண் பார்வை நம் காரியங்களைச் செய்ய எவ்வளவு உதவியாக இருந்தாலும் அது பல விஷயங்களில் பாய்ந்து நம் காரியங்களை எல்லாம் சிதற அடிக்கிறது. கண், பாரா கொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது காது மங்கியே கிடக்கிறது; விஷயங்களைக் கேட்க வேண்டிய அளவைவிடக் குறைவாகவே கேட்டுக்கொள்கிறது. கண்ணோ அப்படியல்ல; பார்க்கவேண்டியதைவிட அதிகமாகவே பார்க்கிறது. சஞ்சல மான கண் பார்வை மறைந்துபோகவே என்னுடைய மற்றப் புலன்கள் தம் வேலையை அமைதியாகவும் சரியாகவும் செய்யத் தொடங்கின.

இப்போதெல்லாம் நான் என் கணவரை எந்தக் காரியமும் செய்ய விடுவதில்லை. முன்போல் அவருடைய வேலைகளை யெல்லாம் நானே எடுத்துப் போட்டுக்கொண்டு செய்தேன். என் கணவர், ''கடைசியில் என் பிராயச்சித்தத்தைக் கெடுக்கவா பார்க்கிறாய்?'' என்று சொல்வார்.

''எதற்காக இந்தப் பிராயச்சித்தம் நீங்கள் செய்து கொள்ள வேண்டும்? எனக்குள்ள இந்தப் பாபச் சுமை போதாதென்று?'' என்பேன் நான்.

அவர் எவ்வளவோ தடுத்தும் என் காரியங்களைச் செய்வ திலிருந்து அவரை விலக்கிவிட்டேன். அவருக்கும் நிம்மதி ஏற்பட்டது. குருட்டு மனிவிக்கு வாழ்நாள் முழுவதும் சேவை புரியும் விரதம் கணவர்களுக்கு ஏற்றதல்ல.

என் கணவர் டாக்டர் பரீட்சையில் தேர்ந்ததும் நாட்டுப் புறத்துக்கு என்னை அழைத்துப் போனார். நாட்டுப்புறத்துக்கு வந்தது தாயின் மடியை அடைந்ததுபோல இருந்தது எனக்கு. எட்டு வயதிலேயே நான் கிராமத்தை விட்டு நகரத்துக்கு வரவேண்டியதாயிற்று. இதற்கிடையே கழிந்து போன பத்து ஆண்டுகளில் பிறந்த ஊர் வெறும் நிழல் போல் என் மனத்துள் மங்கி வந்தது. கண் இருந்த சமயம் கல்கத்தா நகரம் என்னைச் சுற்றி வளைத்து அந்தப் பழைய நினைவுகளை மறைத்துக் கொண் டிருந்தது. கண் அவிந்த பிறகு கல்கத்தா வெறும் கண்ணைக் கவரும் அழகிய காட்சியே தவிர மனமார இன் பத்தைக் கொடுக்கும் இடமல்ல என்று பட்டது. பார்வை கெட்ட பிறகு இள வயதில் கண்ட அந்த நாட்டுப்புறத்தின் அழகு, இருள் மாலையில் தோன்றும் தாரகை உலகினைப் போல் என் உள்ளத்துள் ஒளிர்ந்தது.

மார்கழிக் கடைசியில் நாங்கள் ஹாஸிம்புருக்குச் சென் றோம். புதிய இடத்தில் நாற்புறமும் புலப்பட்ட அந்த ரம்மியமான இன்பத்தை என்னவென்று வருணிப்பது! என் சிறுவயதில் நான் உட்கொண்ட அதே இனிய மணமும் நான் பெற்ற அநுபவங்களும், என் ஒவ்வோர் அங்கத்திலும் ஆழப் பதிந்திருந்தன. பனி தோய்ந்த வயல்களிலிருந்து வீசும் மெல்லிய காற்றும், பொன் இழைத்த கடுகுப்புனங்களின் வான் நிரம்பிய மென்மணமும், இடையர்கள் பாடும் பண்ணும், மேடும் பள்ளமுமான கிராமப் பாட்டையில் அசைந்து செல்லும் மாட்டு வண்டியின் ஒலியும், ஒரு சமயம் இவ்வுடலைச் சிலிர்க்கச் செய்தன. அந்தப் பழைய நினைவுகள், வருணிக்க இயலாத அவ்வினிய ஓசை, மணம் எல்லாம் இன்றள வும் என்னைச் சுற்றிக்கொண் டிருக்கின்றன. இந்தக் குருட்டுக் கண்களுக்கு அவை இன்னும் மறையவில்லை. என் மனம் அந்த

இளம் பிராயத்தினுள் புகுந்து பார்த்தது. அம்மாவின் உருவம் மட்டும் தெளிவாகப் புலப்படவில்லை. பாட்டி தன் வெளுத்த மயிரை விரித்து விட்டுக்கொண்டு வெயிலில் முற்றத்தில் வடகம் பிழிகிறாள்; இதோ என் மனக் கண்ணில் தெரிகிறது. ஆனால் அவள் முதுமையால் நடுங்கும் குரலில் எங்கள் ஊர்க் கவி பஜன்தாஸர் தேக தத்துவ சம்பந்தமாக எழுதிய சிந்து களைப் பாடியது என் நினைவை விட்டு இப்போதும் நீங்கவில்லை. அறுவடை ஆனதும் தானியங்கள் வீட்டுக்கு வந்து சேரும். குளிர் காலமானதால் காலையில் பனி மூட்டமாக இருக்கும். எங்கே பார்த்தாலும் குதூகலமும், ஆனந்தமும். நெல் குற்றும் இடத்தில் நான் கிராமத்துச் சிறுமிகளுடன் தோழமை கொண்டு இன்புற்ற அந்த நாட்களெல்லாம் எங்கேயோ! மாலை நேரங்களில் மந்தை வெளியில் பசுக்கள் 'அம்மா' என்று கன்றுகளை நினைத்துக்கொண்டு கத்தும். அப்போது அம்மா அகல் விளக்கை எடுத்துக்கொண்டு தொழுவத்தில் வைக்க வருவாள். அது இன்னும் கவனம் இருக்கிறது. அந்த வரகுத் தட்டின் இனிய மணமும், நெகிழித் தீயின் புகையும் கலந்து இன்றும் என் மனத்துக்குள் படிந்திருக்கின்றன. இதோ என் செவியில் கேட்கிறது, குளத்தங்கரையில் வித்தியாலங்காரருடைய பூசை அறையில் அடிக்கும் மணி ஓசை. இளவயதில் அந்த எட்டு வருடத்திய அநுபவங்களின் இன்மணமும் இன்சுவையும் இன்றளவும் என்னைச் சுற்றிலும் குவிந்துள்ளன.

இன்னும் கவனத்திற்கு வருகின்றன; என்னுடைய வாலிப வயதில் அநுஷ்டித்த விரதங்கள், விடியற்காலையில் பனிமலர் பறித்துச் சிவபூசை செய்தது யாவும். கல்கத்தாவுக்கு வந்த துமே அங்கே நடக்கும் வம்பளப்பும், மனிதர் நடமாட்டமும், பலவித இரைச்சலும் என்னுடைய தெளிவான மூளையைக் கலக்கின. இதை இப்போது நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பக்தி, சிரத்தை, தூய எளிய வாழ்க்கை, இவற்றுக்கு இந்த நகரம் தக்கதல்ல. அன்று நடந்த ஒரு விஷயம் இப்போது நினைவுக்கு வருகிறது. கண் அவிந்த பிற்பாடு என் ஊரைச் சேர்ந்த தோழி ஒருத்தி, ''அடி குமு! நீதான் இப்படி இருக்கிறாய்? நானாக இருந்தால் அந்தக் கணவன் முகத்திலேயே விழித்திருக்க மாட்டேன்'' என்றாள். நான் அதற்கு ''என் கண் என்னவோ கெட்டுவிட்டது. அதற்காகக் கணவர் மேலே சீறி விழுவானேன்!'' என்றேன். நல்ல டாக்டரைக் கூப்பிட்டுப் பார்க்கவில்லையே என்று லாவண்யாவுக்கு என் கணவர் மேல் கோபம்: நான் அவளுக்கு, ''ஸம்ஸாரத்தில் எவ்வளவோ துன்பங்கள், புத்திப் பிசகாலும் முன் ஜாக்கிரதை இல்லாமையாலும்

நேரிடுகின்றன. அதற்கு என்ன செய்வது? ஆனால் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு பக்தியில் கவனம் செலுத்தினால் இந்தத் துன்பத்திலும் அமோகமான சாந்தி ஏற்படலாம். அநாவசியமாகச் சண்டையிட்டு மனத்தாங்கல் கொள்வதில் என்ன பலன்? நான் குருடானதே பெரிய துக்கம். இது போதாமல் கணவனே வெறுத்து இந்தச் சுமையை அதிகப் படுத்திக் கொள்வானேன்?'' என்று என் கருத்தை எடுத்துரைத்தேன். இன்னும் இளமை மாறாத என் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கோபங் கொண்டு லாவண்யா போய்விட்டாள். போகும்போது அவள் சொன்ன இரண்டு வார்த்தைகள் உள்ளத்துள் சென்று என்னை நெருப்புப் பொறி போல் சுட்டன. நான் அதைச் சட்டென்று நசுக்கி அணைத்து விட்டேன். ஆனால் அது பட்ட இடம் மட்டும் என் மனத்துள் ஆறவில்லை. 'கல்கத்தாவில் வீண் வம்பளப்புத்தான்; அந்த இடத்தில் கொஞ்ச நாள் இருந்தாலே புத்தி அகாலத்தில் முற்றிப் போய்க் கடினமாகி விடுகிறது' என்று இதற்காகத் தான் சொல்லுகிறேன்.

நாட்டுப்புறத்துக்கு வந்ததும் நான் சிவபூசையின்போது அருச்சித்த குளிர்ந்த பவளமல்லிகையும் அதன் பரிமளமும், என் உள்ளத்தில் கவிந்திருந்ததோர் ஆசையும் நம்பிக்கையும், அந்த இளம் பிராயத்தைப் போலவே பொலிவு கொண்டவையாக இருந்தன. என் உள்ளமும் என் வாழ்வும் அந்தத் தெய்வத்தின் இருப்பிடம். நான் தரையோடு தரையாக வணங்கி அக்கடவுளை வழிபட்டு, 'ஏ தேவனே! என் கண் போனது நல்லதே. நீ என் அருகில் இருப்பதே எனக்குப் போதும்' என்றேன்.

'ஐயோ! நான் பிசகாகச் சொல்லிவிட்டேன்; நீ எனக்கு இருக்கிறாய் என்பது வீண் பேச்சு. 'நான் உனக்கு இருக்கிறேன்' என்று சொல்லத்தான் எனக்கு உரிமை உண்டு. ஓ! ஒரு நாள் என் தெய்வம் என் மென்னியைப் பிடித்து இதைத் தான் சொல்லத் தூண்டும். எது இராது போனாலும் நான் மட்டும் இருந்துதானே தீர வேண்டும்? என் அதிகாரம் யார் பேரில் செல்லும்? என் பேரிலேதான்!'

சில நாள் இன்பமாகவே கழிந்தது. வைத்தியத்தில் என் கணவருக்கு நல்ல பேர் கிடைத்தது. கையில் காசு சேர்ந்தது. ஆனால் இந்தப் பணம் ஒரு பாழும் பேய். இது எவர் மனத்தையும் திருப்பிவிடுகிறது. மனம் தன் விருப்பப்படி ஆட்சி செலுத்தும்போது தூய இன்பத்தையே உண்டாக்கிக் கொள்ளுகிறது. ஆனால் பணம் இந்த இன்பத்தைப் பங்கிட்டுக்கொள்ள வரும்போது மனம் அதன் பொறுப்பை

மறந்துவிடுகிறது. வெறும் இன்பத்தையே நாடியிருந்த மனம் இப்போது வெறும் பொருள்களின் மேலேயே பற்று வைக்கிறது.

விசேஷமான நிகழ்ச்சி எதையும் நான் இங்கே குறிப்பிட வில்லை. ஆனால் குருடர்களுக்கு ஊகம் அதிகமாக இருப்பதனாலோ என்னவோ என் கணவர் மாறுவதை உணரலானேன். இளமையில் அவருக்கு நியாயம் அநியாயம், தர்மம் அதர்மம் இவற்றைக் குறித்துத் தெளிவானதோர் கொள்கை இருந்தது. அது வரவரக் குறையத் தலைப்பட்டது. அவர் ஒரு நாள் சொன்னது என் கவனத்துக்கு வருகிறது. 'வயிற்றுப் பிழைப்புக்காக நான் டாக்டர் தொழில் செய்யவில்லை; ஏழைகளுக்கு உதவி செய்வதே இதன் முக்கிய நோக்கம். நோயாளி வறுமையில் உழல்வதைப் பார்த்தும் சிலர் பணத்தைக் கண்ட பிறகுதான் மருந்து வழங்குவார்கள்: இவர்களை நான் வெறுக்கிறேன். - இப்படிச் சொன்ன வார்த்தைகள் இன்று காற்றில் பறந்து போயின. ஓர் ஏழைப் பெண் தன் ஒரே மகனின் உயிரைக் காப்பாற்றும்படி ஒரு நாள் காலைப் பிடித்துக் கேட்கும் போது அவர் உதறித் தள்ளிவிட்டார். அப்புறம் நான் வற்புறுத்தியதன்பேரில் சிகிச்சை செய்தார். ஆனால் மனமார அல்ல. பணம் கையில் குறைவாக இருந்த காலத்தில் என் கணவர் அநியாய வழியில் ஈட்டுவதைத் துளிகூட விரும்பாதவர். ஆனால் இப்போதோ பாங்கில் பணம் குவியக் குவிய, வேறு திக்காகச் சென்றது அவர் மனம். அன்று ஒரு பெரிய பணக்காரரின் மானேஜர், அவருடன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தான். இரகசியத்தில் அவரும் அவனும் என்ன வெல்லாமோ கலந்து பேசினர். இதெல்லாம் எனக்குத் தெரியாது. அப்புறம் என் அருகில் வந்து உள்ளம் பொங்கப் பலவித விஷயங்களை எடுத்துச் சொன்னர். ஆனால் என் அந்தரங்கத்தில் உள்ள ஒருவிதப் பரிச சக்தியினால் அவர் மனத்தில் மாசு படிவதை அறிந்தேன்.

என் கண் கெடுவதற்குமுன் கடைசி முறையாகக் கண்ட அந்தக் கணவரா இவர்? அணைந்துபோன என் இரு விழிகளிலும் முத்தம் தந்து தேவியின் பதவியில் அப்போது என்னை அமர்த்தினர். இப்போது நான் எந்த மாதிரி ஆகிவிட்டேன்! திடீரென்று ஒரு நாள் பகை என்னும் கடும் புயலில் சிக்கி ஓர் உள்ளம் கீழே விழுந்தாலும் மற்றொரு சமயம் உணர்வுடன் அது எழுந்திருக்க முடியும். ஆனால் நாளுக்கு நாள் ஒவ்வொரு நிமிடமும் எலும்பு வரையில் இந்தப் பகையின் வயிரம் பாய்ந்துவிட்டால் புறத்தே அது வீறிப் படர்ந்து துளி துளியாக அகத்தை நசுக்கிவிடுகிறது. இதைத் தடுக்க எவ்வளவு யோசித்தும் வழி புலப்படவில்லை.

கண்ணுர என் கணவரைப் பார்க்க முடியாமல் இருந்தது பெரிய விஷயமல்ல. ஆனல் அவர் என் அந்தரங்கத்தில் முன்போல் அணுகியிராமல் விலகிச் செல்வதை நினைக்கும்போது என் உள்ளம் திணறுகிறது. நானே கண்ணை இழந்தவள்; ஒளியற்ற என் இதயத்துள் இளமையில் நான் அநுபவித்த புதுநலன், அசையாத பக்தி, நீங்காத நம்பிக்கை யாவும் இன்றும் திகழ்கின்றன. வாழ்க்கையின் ஆரம்பத்தில் என் கடவுளைத் தொழ நான் ஏந்திய அந்தக் கையளவு மலர் இன்றும் வாடாத பனிமலராகவே இருக்கிறது. என் கணவர், இன்னிழல் தரும் அந்த இளமையின் நாட்டைத் துறந்து பொருள்மேல் மோகம் கொண்டு ஒரு பெரிய பாலியினுள் என்னைப் பிரிந்து போகிறாரே! என்னுடைய அசட்டு நம்பிக் கையை - கொள்கைகளைப் பொருளைவிடப் பெரிதாகப் போற் றும் ஒரு பாக்கியத்தை - அவர் தொலைவில் நின்றுகொண்டு பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறார். இந்தப் பிணக்கம் ஒரு சமயத்தில் எங்களிடையே தோன்றவில்லை. நாங்கள் இருவரும் ஒரே ஸம்ஸாரப் பாதையில் இணைந்தே சென்றோம். அப்புறம் இந்தப் பாதை எந்த இடத்தில் பிரிந்ததோ அது அவருக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது! கடைசியில் நான் இன்று அவரை மனத்தை விட்டுக் கூப்பிடுவதுதான் மிச்சம்; பதிலைக் காணவில்லை.

ஒவ்வொரு சமயம், 'கண் அவிந்ததனலோ, என்னவோ அற்ப விஷயங்களைக்கூட நான் விபரீதமாக எண்ணிக்கொள் கிறேன்' என்று எனக்குப் படும். கண் இருந்திருந்தால் ஸம்ஸாரம் எனக்குச் சாதாரணமாகவே தோன்றியிருக்கும்.

என் கணவர் ஒரு நாள் இதையே எனக்குப் புரியும்படி எடுத்துச் சொன்னர். அன்று காலையில் ஒரு முஸ்லிம் கிழவர் தம் பேத்திக்கு வாந்திபேதி கண்டிருப்பதால் சிகிச்சை செய் யும்படி அவரை அழைத்துக்கொண்டு போக வந்தார். கிழவர் ''நான் ஏழை, ஐயா! ஆனல் அல்லா உங்களுக்கு நல்லது செய்வார்!'' என்று வேண்டிக்கொண்டபோதிலும் என் கண வர், ''அல்லா செய்வதெல்லாம் அப்புறம் ஆகட்டும். இப் போது என்ன தரப் போகிறாய்?'' என்றார் இரக்கமின்றி. அதைக் கேட்டதும், 'கடவுள் என் கண்ணைத்தான் அவித்து விட்டார்; என்னைச் செவிடாகவும் செய்திருக்கக்கூடாதா?' என்று நினைத்துக்கொண்டேன். கிழவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, ''ஏ அல்லா!'' என்று வருத்தத்துடன் திரும்பிப் போய்விட்டார். நான் உடனேயே வேலைக்காரியை ஏவி அந்தக் கிழவரை உட்புறம் அழைத்துவரச் சொன்னேன். ''இந்தா ரும், ஐயா! இதை வைத்துக்கொண்டு உம் பேத்திக்கு

வைத்தியம் பார்த்துக்கொள்ளும். என் கணவருடைய நன்மையைக் கோரிப் பக்கத்தில் இருக்கும் ஹரிஷ் டாக்டரிடம் போய்ப் பார்த்துக்கொள்ளும்'' என்றேன்.

அன்று முழுவதும் எனக்கு உணவே பிடிக்கவில்லை. என் கணவர் பகல் தூக்கத்திலிருந்து எழுந்ததும் என்னைப் பார்த்து, ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்று விசாரித்தார். பழைய வழக்கப்படி, ''இல்லை; ஒன்றும் இல்லை'' என்ற ஒரு பதில் என் வாயில் காத்துக்கொண்டிருந்தது; ஆனால் பாசாங்கு செய்த காலமெல்லாம்தான் போய்விட்டதே!

நான் உடைத்தே கூறினேன்: 'வெகு நாளாக உங்களிடம் சொல்ல வேண்டுமென்று இருந்தேன். ஆனால் எப்படி இதை எடுப்பதென்று நான் தயங்கினேன். என் உள்ளத்தில் செல்லும் விஷயங்களை என்னால் தெளிவாக உங்களுக்குச் சொல்ல முடியுமோ; முடியாதோ! ஆனால் நிச்சயமாக உங்கள் மனசுக்கு மட்டும் புரிந்திருக்கும். நாம் இருவரும் சேர்ந்து வாழ்க்கையை ஆரம்பத்தில் நடத்தியது போல் இப்போது நடத்தவில்லை. ஒருவரை விட்டு ஒருவர், மனத்தைப் பொறுத்த வரையிலும் அகன்றே இருக்கிறோம்.''

அதற்கு என் கணவர் சிரித்துக்கொண்டே, ''குடும்ப வாழ்க்கையில் மாறுதல் தோன்றுவது இயல்புதானே?'' என்றார்.

''பணம் பாக்கியம், அழகு இளமை எல்லாம் மாறினாலும் மாறலாம். ஆனால் நித்தியமான பொருள் ஒன்று இல்லையா?'' என்றேன்.

அப்பொழுது அவர், ''குமு, பெண்கள் எப்போதும் ஏதாவது குறை இருந்தால்தான் வேதனைப்படுவார்கள். சிலர் கணவன் நிறையச் சம்பாதிக்கவில்லையே என்றும், சிலர் தம் மீது அன்பு வைக்கவில்லையே என்றும் வேதனைப்படுவர். நீயோ அநாவசியமாகத் துயரை வருந்தி அழைக்கிறாய்'' என்றார்.

அந்தக் கணமே எனக்கு எல்லாம் புரிந்தது; இந்தக் குருட்டு நிலை என் கண்களில் ஓர் விசித்திர மையைத் தீட்டி, மாறிக்கொண்டே போகும் இந்த ஸம்ஸாரத்துக்கு வெளியே நிற்கும் ஓர் உலகை எனக்குக் காட்டியது. நான் வேறு பெண்களைப்போல் அல்லவே; என்னை என் கணவர் புரிந்து கொள்ளவே மாட்டார்!

இதற்கிடையே என் கணவருடைய அத்தை எங்களைப் பார்க்க வந்திருந்தாள். நாங்கள் இருவரும் அவளை வணங்கினோம். அவள் தந்த முதல் ஆசீர்வாதம், ''ஏண்டியம்மா, உன் தலை எழுத்துத்தான் இரண்டு கண்ணையும் அவித்துக் கொண்டாய். நம் அவிநாசன் எப்படித்தான் சம்சாரத்தை

நடத்துகிறானே! அவனுக்கு எங்கேயாவது ஒரு பெண் பார்த்து நீயே கட்டிக் கொடுக்கக் கூடாதா?'' என்பது.

''நல்லது அத்தை. நீங்கள்தாம் எங்கேயாவது ஒரு பெண்ணைப் பார்த்து முடித்துவிடுகிறதுதானே?'' என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டிருந்தால் எல்லாம் தீர்ந்து போயிருக்கும். ஆனால் அவர் எதனாலோ கூசிக்கொண்டு, ''என்ன அத்தை, இதென்ன பேச்சு?'' என்றார்.

அதற்கு அத்தைக்காரி, ''நான் என்னடா தப்பாகச் சொல்லிவிட்டேன்? அடி குமுதம், நீயே சொல்லு'' என்றாள்.

நான் சிரித்துக்கொண்டே, ''சரியான ஆளைத்தான் பிடித்தீர்கள், யோசனை கேட்க! இந்த முடியை அறுப்பதற்கு ஒருத்தருடைய சம்மதந்தான் எதற்கு?'' என்றேன்.

அதற்கு அத்தையம்மாள், ''சரியாகச் சொன்னாய். நீயும் நானும் இதைப்பற்றிக் கலந்து யோசிக்கலாம். நீ என்ன சொல்கிறாய், அவினாசா? நல்ல குலீனப் பெண்கள் சக்களத்திகளாக வருவதனால் கணவனுக்கு உள்ள கௌரவம் அதிகரிக்கிறது. நம் பையன் டாக்டர் தொழிலே செய்யாமல் இந்த மாதிரி விவாகம் செய்துகொண்டால், வரும்படியைப் பற்றிய கவலையே இல்லை. டாக்டர் என்றால் கைராசி இராமல்கூட இருக்கலாம். அதனால் அவனுக்குப் பெயரும் கெடும்; வரும்படியும் குறையும். ஆனால் கடவுள் யத்தனத்தால் குலப் பெண்கள் சீக்கிரம் இறந்துவிடுவதில்லை. அவர்கள் உயிருடன் இருக்கும் வரைக்கும் கணவனுக்கு எந்தவிதமான குறைவும் இல்லை'' என்றாள்.

இரண்டு நாள் பொறுத்து என் கணவர் என் எதிரிலேயே அத்தையைப் பார்த்து, ''அத்தை தன் சொந்தச் சகோதரியைப் போல் பாவித்து இவளுக்கு உதவி புரியக்கூடிய நல்ல இடத்துப் பெண் யாராவது இருந்தால் பாரேன். இவளுக்கோ கண் தெரியாது. இவளுக்குப் பக்கத்தில் துணைக்கு யாராவது இருந்துவிட்டால் நான் கவலையின்றி என் வேலையைச் செய்வேன்'' என்றார்.

நான் குருடானபோது இந்த வார்த்தையைச் சொல்லியிருந்தால் ஒரு விதமாகப் போயிருக்கும். இத்தனை நாள் என்னுடன் இருந்துவிட்டு அவருக்குத் திடீரென்று என்ன அசௌகரியம் ஏற்பட்டதோ? என்னால் அவருடைய அலுவலுக்கு என்ன தடங்கல் ஏற்படுகிறதோ, தெரியவில்லை! ஆனால் இந்த வார்த்தையில் நான் குறுக்கிடாமல் கம்மென்று இருந்தேன். ''பெண்களுக்கு என்ன குறை? இதோ என் பெரியமைத்துனன் பெண் இருக்கிறாள். நல்ல அழகி, லட்சுமிகரமான முகம். வயதான பெண்தான். நல்ல இடம் வரவில்லை என்று

தான் இன்னும் கல்யாணம் ஆகவில்லை. உன்னைப்போல்க் குலீனன் அகப்பட்டால் அவளைக் கொடுக்க அவர்களுக்கு என்ன தடை?'' என்றாள்.

என் கணவர் விதிர்த்து, ''நான் விவாகத்தைப்பற்றிப் பேசவில்லையே, அத்தை!'' என்றார்.

அதற்கு அத்தை, ''நல்ல இடத்துப் பெண் பின் எப்படி உன் வீட்டுக்கு வருவாள்? ரொம்ப அழகுதான்!'' என்றாள். கொடுத்த சூடு சரியான சூடுதான்; என் கணவருடைய வாய் அடைத்துவிட்டது!

கண் இழந்து பயங்கர இருளில் தனியாக அலையும் நான் கடவுளே என் துணைக்கு அழைத்தேன்; ''பகவானே, என் கணவரைக் காப்பாற்று'' என்றேன்.

இது நடந்த சில நாட்களுக்கு அப்புறம், ஒரு நாள் காலையில் என் பூசை யாவும் முடிந்த பிறகு அத்தை என்னிடம் வந்து, ''அம்மா குமுதம், என் மச்சினன் பெண் ஹேமாங்கினி இதோ ஊரிலிருந்து வந்திருக்கிறாள். அடி ஹிமு, இவள்தான் உன் அக்கா, நமஸ்காரம் பண்ணு'' என்றாள்.

இதே சமயம் என் கணவர் திடீரென அங்கே வந்தார். முன் பின் தெரியாத அந்தப் பெண்ணைப் பார்த்ததும் திரும்பிப் போகப் பார்த்தார். அத்தை அப்பொழுது, ''எங்கே நழுவுகிறாய், அவிநாசா?'' என்றாள்.

''இந்தப் பெண் யார்?'' என்று அவர் கேட்டார்.

அத்தை அதற்கு, ''அன்றைக்குச் சொன்னேனே, என் மச்சினன் பெண் இவள் - ஹேமாங்கினி'' என்றாள்.

இவள் எப்போது வந்தாள், யார் அழைத்து வந்தது, என்ன விஷயம் என்றெல்லாம் என் கணவர் விசாரித்து அநாவசியமாகத் தம் வியப்பை வெளிப்படுத்தினார்.

எனக்குள்ளேயே, 'நடக்கிறதெல்லாம் நடக்கட்டும்; இப்பொழுது எல்லாம் புரிகிறது. இதற்காக இவ்வளவு ஒளிவு மறைவு ஏன்? பொய் எதற்கு? அதர்ம வழியில் நடப்பதாக இருந்தால் தைரியமாக நடக்கிறதுதானே? எனக்குப் பயந்து இந்த மாதிரி ஈனமாக நடந்துகொள்வானேன்? என்னை ஏமாற்றக் கபட நாடகமெல்லாம் எதற்கு?' என்று சொல்லிக்கொண்டேன்.

ஹேமாங்கினியின் கையைப் பற்றி அவளை என் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றேன். அவள் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தேன். 'பால் வடிகிற முகந்தான்; வயது பதினைந்துக்கு மேல் இராது' என்று எனக்குள்ளேயே திருப்தி அடைந்தேன்.

அவள் இடிஇடியென்று சிரித்து, ''என்ன செய்கிறீர்கள்?

அக்கா, என் உடம்பிலிருந்து ஏதாவது பேயை ஓட்டுகிறீர்களா என்ன?'' என்றாள்.

கபடமற்ற அவளுடைய சிரிப்பின் மெல்லொலி என் மனத்துள் கவிந்திருந்த இருட்டைக் கணப்பொழுது விலக்கியது. என் வலது கையினால் அவளுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''எனக்குக் கண் இராதபோதிலும் உன்னை நன்றாகப் பார்க்கிறேன்'' என்றேன். மறுபடியும் அவள் அழகிய முகத்தைத் தடவிப் பார்த்தேன்.

''தெரிகிறதா?'' என்றவுடன் அவள் மீண்டும் சிரித்தாள். ''நான் உங்கள் தோட்டத்தில் காய்த்திருக்கும் கத்திரிக்காயா என்ன, அப்படித் தடவிப் பார்க்கிறீர்களே!'' என்றாள்.

நான் குருடி என்பது ஹேமாவுக்குத் தெரியாது என்று அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. ''அடி அம்மா! எனக்குக் கண் இல்லையடி, நான் குருடி'' என்றேன். இதைக் கேட்டதும் அவள் சற்று நேரம் வியப்பில் ஆழ்ந்து மறு கணமே திடுக்கிட்டுப் போனாள். அவளுடைய விசாலமான கண்கள் என்னையே உற்று நோக்குவதை உணர்ந்தேன். அப்புறம் அவள் ''ஓகோ, இதற்குத்தானா சித்தி இங்கே வந்திருக்கிறாள், சகாயத்திற்கு'' என்றாள்.

''இல்லையே! நான் அவளை வரவழைக்கவில்லையே? அவளே தான் வந்தாள்'' என்றேன் நான்.

மறுபடியும் அவள் சிரித்து, ''பாவம், ரொம்ப இரக்கப்படுகிறவள், அவள் நகருகிற வழியாகக் காணோமே! ஆனால் அப்பா இங்கே ஏன் என்னை அனுப்பினார்?'' என்றாள்.

அதே சமயம் அத்தையம்மாள் அறையினுள் வந்தாள். வருவதற்கு முன் என் கணவருடன் பேசிக்கொண்டிருந்தாள். அவள் நுழைந்ததுமே ஹேமாங்கினி, ''சித்தி, நாம் எப்போது ஊருக்குப் போவது?'' என்றாள்.

''வந்து எத்தனை நாளாச்சு? இதற்குள்ளே போகவேணும் போகவேணுமென்று பறக்கிறாயே! இந்தமாதிரி ஒரு பெண்ணை நான் பார்த்ததே இல்லை'' என்றாள் அத்தை.

ஹேமாங்கினி, ''சித்தி, நீ இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் கிளம்புவதாகத் தெரியவில்லையே! இவர்கள் உனக்கு நெருங்கிய உறவினர்கள். நீ எத்தனை நாள் வேண்டுமானாலும் தாராளமாய் இரு. நான் போக வேண்டும்'' என்றதும் என் கையைத் தொட்டு, ''என்ன அக்கா, நான் சொல்வது? நீங்கள் எனக்கு அவ்வளவாகப் பழக்கமில்லை அல்லவா?'' என்றாள்.

அவளுடைய கள்ளமற்ற இந்தக் கேள்விக்கு நான் பதில் பேசாமல் அவளை என் மார்போடு அணைத்துக்கொண்டேன். அத்தையம்மாள் எவ்வளவு கெட்டிக்காரியாக இருந்தாலும்

அவளுடைய ஜபம் இந்தத் துளியுண்டு பெண்ணிடத்தில் சாய வில்லை. வெளிப்படையாகத் தன் கோபத்தைக் காட்டிக் கொள்ளாமல் ஹேமாங்கினியை நல்லதனமாகத் தன் டக்கம் திருப்பப் பார்த்தாள். ஆனால் ஹேமாங்கினி சட்டை செய்யா மல் அவளுடைய வார்த்தைகளைத் துடைத்துப் போட்டுவிட் டாள். அசட்டுப் பெண், விளையாட்டுத்தனமா யிருக்கிறாளென்று ஹேமாவின் பேச்சைப் பொருட்படுத்தாமல் அத்தைக்காரி சிரித் துக்கொண்டே வெளியே போக எழுந்தாள். சட்டென்று என்னவோ நினைத்துக்கொண்டு ஹேமாங்கினியைப் பார்த்து. ''ஹிமு, நாழிகை யாகிவிட்டது. குளிக்க வாயேன்'' என்றாள்.

ஹேமா என் அருகில் வந்து, ''அக்கா, நாம் இரண்டு பேருமாகப் போகலாமா படித்துறைக்கு?'' என்றாள்.

இது அத்தைக்காரிக்குப் பிடிக்கவில்லை. இருந்தும் தடுக்க வில்லை. அதிகமாக இழுத்தால் ஹேமாங்கினியே அறுத்துக் கொண்டு போய்விடுவாள், அதனால் வந்த காரியம் கை கூடாமல் போய்விடும் என்று அஞ்சினாள்.

புழைக்கடையின் வழியாகத் துறைக்குச் செல்லும் வழி யில் ஹேமா என்னைப் பார்த்து, ''உனக்குக் குழந்தை குட்டி ஏனே இல்லை?'' என்றாள்.

நான் மெல்லச் சிரித்து, ''எனக்கென்ன தெரியும்? கடவுள் கொடுக்கவில்லை; அவ்வளவுதான்'' என்றேன்.

ஹேமாங்கினி, ''அப்படியானால் நீ ஏதோ பாவம் செய் திருக்க வேண்டும்'' என்றாள்.

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பகவானுக்குத் தான் தெரியும்'' என்றேன். அத்தாட்சியாக அந்தப் பெண், ''எங்கள் சித்தியைப் பாரேன். மனசில் அவ்வளவும் கெட்ட எண்ணங்கள். அதனாலேயே குழந்தை குட்டி பிறக்கவில்லை'' என்றாள்.

பாபம் புண்ணியம், சுகம் துக்கம், வினைப்பயன் இதைப் பற்றி எல்லாம் எனக்கே ஒன்றும் விளங்காமல் இருக்கும்போது அவளுக்கு எப்படி விவரிப்பது! பெருமூச்சு விட்டு எனக்குள் ளேயே, ''எல்லாம் அவனுக்குத் தெரியும்'' என்று சொல்லிக் கொண்டேன்.

ஹேமாங்கினி என்னைக் கட்டிக்கொண்டு, ''நான் சொன் னதைக் கேட்டா பெருமூச்சு விடுகிறாய், அக்கா? என் பேச் சைக்கூட லட்சியம் செய்பவர்கள் இருக்கிறார்களா?'' என்றாள்.

என் கணவர் நடத்தும் டாக்டர் தொழிலுக்கும் தடங்கல் ஏற்பட்டதை அறிந்தேன். யாராவது வந்து கூப்பிட்டால் அவர் போவதில்லை. அருகிலேயே எங்கேயாவது போனால்

உடனே திரும்பி வந்துவிடுகிறார். முன்னே எல்லாம் வெளிப் பக்கத்து அறையில் தம் காரியமாக இருப்பார். சாப்பிடும் பொழுதும், தூங்கப் போகும் வேளையில்தான் உள்ளே வருவது வழக்கம். இப்பொழுதோ அத்தைக்காரி குரல் கொடுத்த வுடன் உள்ளே வந்துவிடுகிறார். அத்தை உரக்கவே, ''அடி ஹிமு, வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு வா'' என்பாள். ஓகோ, என் கணவர் வந்திருக்கிறார்போல் இருக்கிறது என்று எண்ணிக்கொள்வேன். முதலில் சில நாட்கள் ஹேமாங்கினி வெற்றிலைப் பேழை, எண்ணெய் இதெல்லாம் அத்தையின் சொல்படி எடுத்து வந்தாள். அதற்குமேல் எவ்வளவு குரல் கொடுத்தாலும் அவள் திரும்பி வருவதில்லை. கேட்ட சாமான வேலைக்காரியின் மூலமாக அனுப்புவாள். அத்தைக்காரி மட் டும், ''அடி ஹேமாங்கினி, அடி ஹிமு, அடிஹிமு'' என்று கத்திக்கொண்டே இருப்பாள்.

அப்பொழுதெல்லாம் ஹேமாங்கினி என்னை விட்டுப் பிரியாமல் என் அருகிலேயே உட்கார்ந்திருப்பாள்; என்னவோ ஒரு திகில் அவள் மனத்தைப் பிடுங்கி எடுத்தது. இதற்கப் புறம் அவள் என் கணவரைப்பற்றித் தப்பித் தவறிகூடக் குறிப்பிட்டதில்லை.

இதற்கிடையே அண்ணு ஒருதரம் என்னைப் பார்க்க வந் திருந்தான். அண்ணுவுக்குக் கண் கூர்மை, எதையும் ஊடுருவிப் பார்ப்பான் என்று எனக்குத் தெரியும். விஷயத்தை அவ னுக்குத் தெரியாமல் மூடிவைப்பது என்னவோ முடியாத காரி யம். எதையும் கடினமாக விசாரிப்பவன். அநீதத்தைத் துளிகூடப் பொறுக்கமாட்டான். என் கணவருடைய குற்றம் அவனுக்குத் தெரிந்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு. நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பது போலவே காட்டிக்கொண் டேன். ஆனால் முழுவதும் நடிக்க என்னால் முடியவில்லை. அதிக நடிப்பு, விஷயத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது? ஆனால் வெகு நாள் காத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. என் கணவர் காட்டிய எரிமுகம் ஒருவாறு உண்மையை வெளிச்சமாக்கிவிட்டது. அண்ணு போய்விட்டார். போகுமுன், என் தலையை ஆதரவுடன் அவர் தொடும்பொழுது கை நடுங்குவதை உணர்ந்தேன். மனத் துள்ளேயே எனக்கு என்ன ஆசீர்வாதம் செய்தாரோ தெரி யாது. அவர் உகுத்த கண்ணீர்த்துளி என் கன்னத்தின்மேல் விழுந்தது.

பங்குனி மாதம் அன்று மாலை சந்தைக்கடையிலிருந்து ஜனங்கள் திரும்பி வந்துகொண் டிருந்தார்கள். தொலைவில் காற்றும் மழையும் கலந்து நெருங்கிக்கொண்டு வந்தன. ஈர

மண் வாசனையுடன் குளிர்ந்த காற்று வீசியது. வழி தப்பியவர் கள் அந்த இருளடைந்த வெளியில் ஒருவரை ஒருவர் கூப்பிடும் உருக்கமான குரல் கேட்டது. நான் தனியாக என் படுக்கையில் படுத்திருப்பேன். இன்னும் விளக்குக்கூட ஏற்றவில்லை. முன் தாழ்வில் மூடிக்கொண்டு விளக்கை ஏற்ற எனக்குப் பயம்; ஒரு வேளை ஏதாவது நடந்துவிட்டால்? அந்தத் தனி அறை யில் உட்கார்ந்தபடி இரு கைகளையும் கூப்பி, இருண்ட என் வாழ்வின் அதிதேவதையை நோக்கி முறையிடு வேன்; 'பிரபு, உன் திருவுள்ளம் எனக்குப் புலப்படவில்லையே; உனது அளவற்ற கருணை எத்தன்மையதோ? இந்த இதயம் இரண்டாகப் பிளந்து போயும் அதை நான் வைத்துக்கொண் டிருக்கிறேன். இனி என்னால் தாங்க முடியாது. எத்தனை நாள் இந்தச் சோதனையோ? போராட என் உடலில்தான் பலம் ஏது?' - இவ்வாறெல்லாம் சொல்லிக்கொள்ளும்போது கண்ணீர் பீறிட்டு வரும் எனக்கு. கட்டிலின்மேல் தலையை இருத்தி அழுவேன். இதற்கிடையே வீட்டுக் காரியங்களைக் கவனித்தாகவேண்டும். ஹேமாங்கினி நிழல்போல என்னிடம் ஒன்றி இருப்பாள். மனம் விட்டு என் துக்கத்தைச் சொல்லி அழுவதற்கு எனக்கு வாய்ப்பு ஏது? கொஞ்ச நாளைக்குப் பிறகு இந்தக் கண்ணீர் தங்கு தடையின்றிப் பெருகியது. அச்சமயம் கட்டில் அசைவதும், யாரோ செல்லும் அரவமும் கேட்கும். சற்று நாழிகைக்கெல்லாம் ஹேமாங்கினி அங்கே வந்து என் கழுத்தை அணைத்துக்கொண்டு, மௌனமாகவே தன் புடவைத் தலைப்பால் என் கண்களைத் துடைப்பாள். அவள் வந்தது, படுக்கையில் படுத்தது எல்லாம் எனக்குத் தெரியாது. அவள் எதுவுமே என்னைக் கேட்பதில்லை. நானும் அவளுடன் எதையும் சொல்வதில்லை. மெல்ல அவள் தன் மெல்லிய கையால் என் நெற்றியைத் தடவினாள். இதற்கிடையே இடி யும் புடையுமாக மழை கொட்டியது. ஒன்றுமே என் நினைவில் இல்லை. வெகு நாளைக்கப்புறம் தண்மையும் அமைதியும் எரிந்துபோன என் உள்ளத்திற்கு ஆறுதலைத் தந்தன.

மறு நாள் ஹேமாங்கினி, ''சித்தி, நீ கிளம்பாவிட்டால், யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிவிடுகிறேன். இதோ சொல்லிவிட்டேன்'' என்றாள்.

அதற்கு அத்தை, ''அவ்வளவு தூரம் எதற்கடி? நாளைக்கு நானும் கிளம்பிவிடுகிறேன் உன்னோடு; இதைப் பார், ஹிமு. அவினாசன் உனக்காக இந்த நல்முத்து மோதிரம் வாங்கி யிருக்கிறானடி'' என்று பெருமையுடன் மோதிரத்தை ஹேமா வின் கையில் கொடுத்தாள்.

ஹேமாங்கினி, ''சித்தி, நான் எவ்வளவு அழகி என்று

எனக்கு நன்றாகத் தெரியுமே'' என்றதும் சன்னலின் வழியாய் மோதிரத்தைப் புழைக்கடைப் பக்கமாகவுள்ள பாழுங்குட்டையில் வீசி எறிந்தாள். அத்தைக்காரிக்குக் கோபம், துக்கம், வியப்பு எல்லாம் கலந்து வந்தன.

என்னைத் தொட்டுத் தொட்டு அவள், ''இந்த அசடு செய்த காரியம் அவிநாசன் வரைக்கும் எட்டப் போகிறது; தெரிந்தால் அவன் மனசு கஷ்டப்படும். சொன்னால், என்னை அறுத்துத் தின்றது போல'' என்றாள்.

நான், ''நான் ஏன் சொல்லப்போகிறேன், அத்தை, இதையெல்லாம்?'' என்றேன்.

அடுத்த நாள் ஊருக்குப் புறப்படும்பொழுது ஹேமாங்கினி என்னைத் தழுவிக்கொண்டு, ''அக்கா, என்னை மறந்து விடாதே'' என்றாள்.

நான் என் இரு கைகளாலும் அவள் முகத்தை அடிக்கடி வருடி, ''குருடர்கள் எதையுமே மறக்க மாட்டார்கள். என் உலகமோ இருளடைந்திருக்கிறது. மனத்தை வைத்துக் கொண்டுதான் உயிர் வாழ்கிறேன்'' என்று உச்சி மோந்து அவள் நெற்றியில் முத்தம் கொடுத்தேன். அவளுடைய அடர்ந்த கூந்தல்மீது மழையென என் கண்ணீர் சிந்தியது.

ஹேமாங்கினியைப் பிரிந்ததும் எனக்கு உலகமே வெற்றிடமாக ஆகிவிட்டது. என் வறண்ட வாழ்வு மீண்டும் தளிர்க்க அழகு, இசை, மணம், ஒளி, இளமை யாவும் அவள் கொண்டு வந்திருந்தாள். அவள் போனதுமே எத்திசையிலும் கையை நீட்டித் தடவிப் பார்த்ததும், பாழே நிலவியது. எனக்கென்ன இருக்கிறது இந்த வாழ்வில்? என் கணவர் வந்தார். எனக்குத் தெம்பை உண்டாக்க, ''அவர்கள் போனதே நல்லதாகப் போயிற்று. இனிமேல் என் காரியத்தைக் கருத்துடன் செய்வேன்'' என்றார். அடி பைத்தியக்காரி என்று என்னையே நொந்துகொண்டேன். எனக்காகவா இந்தப் பாசாங்கெல்லாம்? நான் உண்மையைக் கண்டு நடுங்குகிறேனா? எவ்வளவோ அதிர்ச்சிகளைத் தாங்கி இருக்கிறேனே; இது எம்மாத்திரம்? கண் இரண்டையும் கொடுத்து நிரந்தர இருள் கவிந்த இந்த வாழ்வின் அமைதியுடன் நான் ஏற்றிருப்பது எதனால்? இது என் கணவருக்குத் தெரியவில்லையே!

இத்தனை நாள் வரை என் கணவருக்கும் எனக்கும் இடையே இருளின் திரைமட்டும் இருந்தது. இன்று தொட்டு மற்றொன்றும் எங்களுக்குக் குறுக்கே நிற்க ஆரம்பித்துவிட்டது. கவனப்பிசகாகக்கூட என் கணவர் ஹேமாங்கினியின் பெயரை என் எதிரே எடுத்தது கிடையாது. எங்கள் குடும்பத்தில் அவள் சில தினங்கள் இருந்த சுவடே தெரியாதது

போல நடந்துகொண்டார். ஆனால் அவர் கடிதங்கள் மூலமாக அவளைப்பற்றி விசாரிப்பது எனக்குத் தெரியாமல் போகவில்லை. புது வெள்ளம் குளத்தை நிரப்ப நிரப்ப அல்லிக்கொடி உயர்வது போல, அவர் மனத்துள் இன்பம் பொங்கும்பொழுதெல்லாம், அது என் இதயத்தின் உட்புரையைத் தொடும். கடிதம் அவர் போடுவதும், பதில் கடிதம் வருவதும் எனக்குத் தெரியாத செய்தியல்ல. நான் இதைப்பற்றி யெல்லாம் அவரிடம் கேட்பதில்லை. என் இருண்ட இதயத்துள் கண நேரம் உதயமாகியிருந்தது, ஒளிமயமான ஓர் அழகிய தாரகை. அதைப்பற்றித் தெரிந்துகொள்ள என் மனம் அலை பாய்ந்தது. ஆனால் அதன் பெயரை என் கணவர் முன்னிலையில் எடுக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? எங்கள் இருவருக்கும் நடுவில்தான் விலகாததோர் மௌனம் நிற்கிறதே!

சித்திரை மாதத்தின் நடுவில் ஒரு நாள் வேலைக்காரி என்னிடம் வந்து, ''அம்மா, துறையில் படகு நிறையச் சீர் வகைகள் ஏற்றிக்கொண்டு ஐயா எங்கேயோ புறப்படுகிறாற்போல் இருக்கிறது'' என்று அறிவித்தாள். ஓகோ! என்னவோ சூழ்ச்சி நடக்கிறது என்று எண்ணிக்கொண்டேன். இதுவரை என் பாக்கிய வானில் திகழ்ந்த நிச்சலம் புயலுக்குமுன் தோன்றும் அமைதியேதான். இப்போது ஊழி மேகங்கள் நாலுபக்கமும் அதைச் சூழ்ந்துவிட்டன. நாசமூர்த்தியான சிவன் தன் சக்தி கணங்களை ஒன்றுகத் திரட்டி என்னை அழிக்கத்தான் முனைந்து விட்டான் என்று அறிந்தேன். வேலைக்காரியிடம், ''எங்கேயடி, என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே அவர்?'' என்றேன். அதற்குமேல் பேச அஞ்சி அவள் பெருமூச்செறிந்து அகன்றாள்.

இரவு வெகு நேரம் இருக்கும். என் கணவர் அறைக்குள் வந்து, ''நான் தொலைவில் அவசியமாகப் போக வேண்டிய காரியம் இருக்கிறது. நாளைப் பொழுது விடிவதற்குள் நான் அங்கே இருக்கவேண்டும். திரும்பிவர இரண்டு மூன்று தினங்கள் செல்லும்'' என்றார்.

படுக்கையை விட்டு எழுந்து நின்றேன். ''என்னிடம் ஏன் இந்தப் பொய் புரட்டெல்லாம்?'' என்றேன்.

என் கணவர் குரல் தடுமாற, ''நான் என்ன பொய் சொல்லிவிட்டேன்?'' என்றார்.

''தெரியுமே! நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்'' என்றேன்.

அவர் ஒன்றும் பேசவில்லை. நானும் நிலைத்து நின்றேன். வெகு நேரம் வரையில் ஒருவரும் பேசவில்லை. கடைசியாக, ''ஆமாம், மணம் செய்துகொள்ளத்தான் போகிறேன் என்று சொல்வதற்கென்ன?'' என்றேன்.

எனக்கு எதிரொலி தருவதுபோல, ''ஆமாம், விவாகம் செய்துகொள்ளத்தான் போகிறேன்'' என்றார்.

''உங்களை நான் போக விடமாட்டேன். இந்தப் பெரிய பாபத்திலிருந்து உங்களைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. இதைச் செய்யாதுபோனால் நான் உங்களுக்கு மனைவி யாக இருப்பது எதற்காக? நான் சிவபூஜை பண்ணிய தெல்லாம் வீணே!'' என்றேன்.

மீண்டும் வெகு நேரம் மௌனத்தில் கழிந்தது. நான் தரையில் விழுந்து கணவரின் பாதங்களைப் பற்றிக்கொண்டு, ''நான் என்ன தவறு செய்துவிட்டேன், இப்படி என்னை விட்டு நீங்கள் வேறு விவாகம் செய்துகொள்வதற்கு? என் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்!'' என்றேன்.

அப்போது என் கணவர் மெதுவாகவே, ''உண்மையைச் சொல்கிறேன். உன்னிடம் எனக்குப் பயமே! உன்னுடைய இந்தக் குருட்டு நிலை என்னை விட்டுப் பிரித்து உன்னை ஒரு தனி உலகில் மூடி வைத்திருக்கிறது. அங்கே நுழைய எனக்கு இடமில்லை. உன்னை ஒரு தெய்வம்போல் அஞ்சுகிறேன். உன்னை வைத்துக்கொண்டு வீட்டுக் காரியங்களைச் செய்ய என்னால் இயலவில்லை. எரிந்து விழுவதற்கும், உடனே கட்டியணைப்ப தற்கும், அழுதபோது கண்ணீரைத் துடைப்பதற்கும், ஒரு சாதாரண உலகத்துப் பெண் எனக்கு இப்பொழுது தேவை யாக இருக்கிறாள்'' என்றார்.

''என் நெஞ்சைப் பிளந்து பாருங்கள். நான் சாதாரணப் பெண் அல்லவா? நீங்கள் மணந்த புதிதில் கண்ட அதே இளம் பாவைதான் இன்னும்; இன்னும் உங்களையே நம்பியிருக்கி றேன்; உங்களையே நாடி வழிபடுகிறேன். ஏனோ உங்களுடைய உயர்ந்த தன்மைக்கு இழிவு தேடிக்கொள்கிறீர்கள்? என் மனத்தைப் புண்படுத்தி இப்படி ஏன் என்னை உயர்த்திவிட்டு அகற்றி வைக்கிறீர்கள்? ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவளல்லவா நான்?'' என்றேன்.

நான் என்ன என்ன வார்த்தைகள் சொன்னேனோ அதெல்லாம் கவனத்தில் இருக்கிறதா என்ன? பொங்கும் கடலுக்கு அதன் ஓலம் செவியில் படுமா என்ன? இந்த வார்த்தைமட்டும் கவனம் இருக்கிறது: ''நான் மட்டும் உத்தமபத்தினியாக இருந்தால் இதோ கடவுளுக்குப் பொது வாகச் சொல்லுகிறேன்; நீங்கள் ஒருகாலும் எனக்குத் தந்த வாக்கை மீறி நடக்கக் கூடாது. அப்படி மீறுவதாக இருந்தால், நானுவது ஒன்று விதவை ஆகிவிடவேண்டும், ஹேமாங் கினியாவது இறந்து போய்விடவேண்டும்.'' இதைக் கூறியதும் நான் மூர்ச்சை அடைந்தேன்.

நினைவு வந்தபொழுது, இரவு கழிந்து பொழுது விடியும் சமயம்; பறவைகளின் குரல்மட்டும் கேட்கவில்லை. பக்கத்தில் என் கணவர் இல்லை. அவர் போய்விட்டார்.

நான் பூசை அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்துவிட்டேன். அன்று முழுவதும் நான் வெளியிலேயே வரவில்லை. மாலை நேரம் ஒரு பலத்த சூருவளி வீடு வாசலையெல்லாம் குலுக்கிப் போட்டது. ஆனல் நான் மட்டும், 'பகவானே! என் கணவர் இந்தச் சமயத்தில் படகில் சென்றுகொண்டிருப்பார். அவரைக் காப்பாற்று'' என்று வேண்டிக்கொள்ளவில்லை. ஆனல் மனத்துள் மட்டும், ''பகவானே, என் தலை எழுத்து எப்படி வேண்டுமானலும் ஆகட்டும். ஆனல் இந்தப் பெரும் பாவத்திலிருந்து என் கணவரை மீட்பாய்'' என்று பிரார்த்தனை செய்துகொண்டேன். இரவெல்லாம் இப்படியே கழிந்தது. அடுத்த நாளும் என் இடத்தை விட்டு நான் எழுந்திருக்கவில்லை. தூக்கமில்லை; வயிற்றுக்கோ உணவில்லை. இந்த நிலையில் எனக்கு யார் இந்த அமோக பலம் தந்தார்களோ! அந்தச் சிலாவிக்கிரகத்தின் முன்பு நானும் ஒரு சிலைபோல உட்கார்ந்திருந்தேன்.

அந்தி நேரம்; கதவை அசைக்கும் ஓசை கேட்டது. யாரோ உடைத்துக்கொண்டு உள்ளே வந்து நான் நினைவற்றுக் கிடப்பதைப் பார்த்தார்கள்.

மூர்ச்சை தெளிந்தபொழுது, ''அக்கா'' என்ற குரல் என் செவியில் வீழ்ந்தது. விழித்துக்கொண்டபொழுது ஹேமாகினியின் மடிமீது நான் சாய்ந்திருப்பதை உணர்ந்தேன். அவள் உடம்பு அசையும்பொழுதெல்லாம் புதுக் கூறைச் சேலை விசுவிசுத்தது. - ''ஐயோ தெய்வமே! என் பிரார்த்தனை உன் செவியில் ஏறவில்லையா? கடைசியில் என் கணவர் பெரும் பாவத்திற்குள்ளானரே'' என்று எனக்குள் சொல்லிப் புலம்பினேன். ஹேமாங்கினி என்மேல் கவிந்து மெதுவான குரலில், ''அக்கா, உன் ஆசீர்வாதம் பெறவே இங்கு வந்தேன்'' என்றாள்.

என் உடம்பு மரத்துவிட்டது. ஆனல் மறு கணமே, எழுந்து உட்கார்ந்தேன். ''உன் மேலென்ன தவறம்மா? நான் ஆசீர்வாதம் செய்கிறேன்'' என்றேன்.

ஹேமாங்கினி அருவிச் சிரிப்புடன், ''தவரு, அக்கா? நீ விவாகம் செய்துகொள்வது தவறில்லை; நான் செய்துகொண்டால் தவரு?'' என்றாள்.

ஹேமாவை அணைத்துக்கொண்டு நானும் சிரித்தேன். இந்த உலகில் என் ஒருத்தியின் வேண்டுகோள்தான் பிரதானமா என்ன? எல்லாம் இறைவனுடைய விருப்பமே! அடி

எவ்வளவு வேண்டுமானாலும் என் தலையில் விழட்டும். ஆனால் ஒரு தர்மத்தைக் கடைபிடிக்கும், ஓர் உண்மையை நம்பும் இந்த இதயத்துள் அது விழ நான் இடந் தரமாட்டேன். எப்படி இருந்தேனோ அப்படியே இருப்பேன். ஹேமாங்கினி என் காலடியில் விழுந்து என் பாததூளிகளை ஏற்றுக் கொண்டாள். ''அம்மா, நீ நல்ல பாக்கியத்துடன் இருக்க வேண்டும். நீடித்த சுகம் உனக்கு ஏற்படவேண்டும்'' என்று ஆசி கூறினேன். ''இந்த ஆசீர்வாதம்மட்டும் போதாது. உத்தமியான உன் கையால் என்னையும், உன் தங்கையின் கணவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரைமட்டும் நீ ஒதுக்கி விடுவது நல்லதல்ல. உத்தரவு கொடுத்தால் உள்ளே அழைத்து வருகிறேன்.''

''அழைத்து வா'' என்றேன்.

கொஞ்ச நாழிக்கைக்கெல்லாம் என் அறையில் புதிய காலடியின் சத்தம் கேட்டது. ''குமு, சௌக்கியமா?'' என்ற ஒரு குரல் கேட்டது; ஆதரவுடன் விசாரித்தது. நான் வாரிப் போட்டுக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்து, உடனே வணங்கி, ''அண்ணா'' என்றேன்.

''அண்ணா யாரது? உன் தங்கையின் கணவன் அல்லவா!''

எல்லாம் எனக்குப் புரிந்தன; விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்பது அண்ணாவின் பிரதிக்ஞை. பண்ணிக் கொள் என்று உறுத்திச் சொல்வதற்கு அம்மாவோ, வேறு பெரியவர்களோ யாரும் இல்லை. இப்பொழுது என்னாலேயே இந்த விவாகம் ஆகிவிட்டது. என் கண்களிலிருந்து ஆறுப்பெருகியது கண்ணீர், சற்றும் நில்லாமல். அண்ணா என் தலைமயிரை நீவிக் கொடுத்தான். ஹேமாங்கினி என்னைக் கட்டிக்கொண்டு கலகலவென்று சிரித்தாள்.

இரவு தூக்கமே வரவில்லை. கணவரை எதிர்பார்த்து என் உள்ளம் ஏங்கி இருந்தது. அவர் எப்படித்தான் அவமானத்தையும் ஏமாற்றத்தையும் சகித்துக்கொள்வாரோ என்ற வேதனையே எனக்கு.

இரவு வெகு நேரம் இருக்கும். என் அறைக் கதவு மெல்லத் திறந்தது. திக்கென்றது என் உள்ளம். என் கணவரின் காலடிதான். என் மார்பு படபடத்தது.

அவர் படுக்கையண்டை வந்து என் கையைப் பிடித்துக் கொண்டு, ''உன் அண்ணன்தான் என்னைக் காப்பாற்றினான். மோகத்தில் சிக்கி நான் அழிந்து போகப் போனேனே! படகில் ஏறும்போது என் உள்ளத்துள் ஏதோ ஒன்று கனமாக அழுத்தியது. அது கடவுளுக்குத் தெரியும். நடு ஆற்றில் பெரும் புயலில் சிக்கியபோது என் பிராணன் துடிதுடித்தது. மூழ்கி

இறந்துபோனலே இந்தப் பெரும் பாபத்திலிருந்து மீண்டது போல் ஆகும் என்று எண்ணிக்கொண்டேன். மதுர்கஞ்சை அடைந்தபொழுது கேள்விப்பட்டேன்: முந்திய தினமே உன் அண்ணுவுக்கும் ஹேமாவுக்கும் கல்யாணம் நடந்தேறிவிட்ட தாம். ஒரு பக்கம் தலைதூக்க முடியாதபடி அவமானம்; ஒரு பக்கம் மகிழ்ச்சி. வந்த படகிலேயே திரும்பிவிட்டேன். இப் போதுதான் எனக்கு வெளிச்சமாயிற்று; உன்னைவிட்டு அரை நிமிஷமாயினும் பிரிந்திருந்தால் எனக்குச் சுகமேது? நீதான் என்னுடைய தேவி'' என்ருர்.

நான் சிரித்துக்கொண்டே, ''என்னை ஏன் தேவியாக ஆக்குகிறீர்கள்? நான் உங்கள் வீட்டுக்காரி; சாமானியமான பெண்'' என்றேன்.

''என் வார்த்தையை நீயும் கேட்கவேண்டும்; என்னைத் தெய்வமாகக் கொள்ளாமல், உலகத்திலுள்ள ஒரு மனிதனு கவே பாவிக்கவேண்டும்.''

மறு நாள் மங்கள சங்க வாத்தியங்களும் பெண்களின் இன்னிசைக் குரலும் அந்த இடத்தைக் கலகலப்பாக்கின. ஹேமாங்கினி, என் கணவரைச் சாப்பிடும்போதும் போகும் போதும் விடாமல் ஏதாவது பரிகாசம் செய்துகொண்டே இருந்தாள். அவள் செய்த தொந்தரவுக்கு ஓர் அளவே இல்லை. ஆனல் என் கணவர் எங்கேயோ போனது, அங்கே நடந்த சமாசாரம் இவற்றையெல்லாம் யாருக்குமே நான் எட்டவிட வில்லை.

மாஸ்டர் மஷாய்

பீடிகை

அப்பொழுது இரவு மணி இரண்டு. அடங்கியிருந்த கல்கத்தாவின் ஓசைக் கடலில் சற்றே அலையை எழுப்பி ஒரு பெரிய கோச்சு வண்டி பவானிபுர்த் திசையிலிருந்து வந்து பிர்ஜிதலா முனைக்கு அருகில் நின்றது. அங்கே ஒரு வாடகை வண்டியைப் பார்த்து, கோச்சில் ஏறிவந்தபாபு அதைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தார். அவர் பக்கலில் கோட், ஹாட் அணிந்து, சீமை சென்று திரும்பிய ஒரு வங்க இளைஞன் முன் புறமுள்ள ஆசனத்தின்மீது இரு கால்களையும் தூக்கி வைத்தவண்ணம் மது அருந்திய மயக்க நிலையில் கழுத்துத் தொங்கத் தூங்கிக் கொண்டிருந்தான். இந்த இளைஞன் சீமையிலிருந்து திரும்பி வந்த புதிது. இவனை வரவேற்கும் பொருட்டு நண்பர் குழாத்தினர் ஒரு விருந்து நடத்தினர். அந்த விருந்திலிருந்து திரும்பி வரும் வழியில் ஒரு நண்பர் அவனைச் சிறிது தூரம் கொண்டு விடுவதற்குத் தம் கோச்சு வண்டியில் அவனை ஏற்றிக்கொண்டார். குடி மயக்கத்தில் இருக்கும் அவனை இரண்டு மூன்று முறை அசைத்து எழுப்பி, ''மஜும்தார், இதோ வண்டி கிடைத்துவிட்டது, வீட்டுக்குப் போ''என்றார். மஜும்தார் திடுக்கிட்டு எழுந்து சீமைத் துரைபோல் வாயில் வந்த ஒரு வசவுடன் வாடகை வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டி செல்ல வேண்டிய இடத்தை வண்டிக்காரனுக்குத் தெளிவாகக் கூறிவிட்டு, புருஹாம் வண்டியில் வந்தவர் தம் இடத்துக்குப் போய்விட்டார். வாடகை வண்டி சற்றுத் தொலைவில் 'பார்க்' தெரு எதிரேயுள்ள மைதானத்து வழியே சென்றது.

மஜும்தார் ஆங்கிலத்தில் ஏதோ திட்டித் தனக்குள்ளேயே, 'இதென்ன, இது நான் போகும் வழி இல்லையே?' என்று கூறித் தூக்கக் கலக்கத்தில், 'ஒரு வேளை சரியான வழிதான் போல் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டான். மைதானத்துள் நுழைந்தபொழுது மஜும்தாருக்கு உடல் சிலிர்த்தது. தன் பக்கத்தில் எவரும் உட்காராதபோதிலும் யாரோ அந்த இடத்தில் இருப்பது போலவே ஒரு மருள் மூண்டது. தன் பக்கத்தில் உள்ள அந்த வெற்றிடம் தன்னை இறுக்குவது போல் தோன்றியது. 'இது என்ன சமாசாரம்? இந்த வண்டி

இப்படி ஏன் செய்கிறது?' என்று மஜும்தார் நினைத்துக் கொண்டான்.

''ஏ வண்டிக்காரா, உன்னைத்தான்'' என்று அழைத்தான். வண்டிக்காரனிடமிருந்து பதிலே வரவில்லை. பின் புறமுள்ள இலைக் கதவைத் திறந்து அங்கே இருக்கும் 'ஸஹிஸை'த் (குரல் கொடுப்பவன்) தொட்டு, ''உள்ளே வந்து உட்காரடா'' என்றான். அந்த ஸஹிஸ் குரலில் நடுக்கம் தோன்ற, ''இல்லீங்க துரே, உள்ளே எடம் ஏது?'' என்றான்.

அதைக் கேட்டதும் மஜும்தாருக்கு உடல் கூசியது. ஸஹிஸின் கையை வலுவாக அழுத்தி, ''சீக்கிரமாக உள்ளே வாடா'' என்றான்.

ஸஹிஸ் தன் கையை வெடுக்கென வாங்கிக்கொண்டு கீழே குதித்து ஓட்டம் பிடித்தான். அப்போழுது மஜும்தார் தன் பக்கத்தில் உள்ள இடத்தை அச்சத்துடனே நோக்கினான். கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை; இருந்தும் பக்கத்தில் ஏதோ ஒரு பொருள் அழுத்தமாக உட்கார்ந்திருப்பது போல இருந்தது.

ஒருவாறு, தொண்டையில் ஈரம் தோன்ற மஜும்தார், ''ஏய் வண்டிக்காரா, வண்டியை நிறுத்தடா'' என்றான். வண்டிக்காரன் லகானை இழுத்துக் குதிரைகளை நிறுத்தப் பாடுபடுவது போல் தோன்றியது. குதிரைகளோ நிற்காது ஓடிக்கொண்டே இருந்தன. ரெட் ரோட் வழியாக வந்து மீண்டும் தென் புற முனைக்கே வந்தது வண்டி.

மஜும்தார் பரபரப்புடன், ''எங்கே ஓட்டுகிறாய் வண்டியை?'' என்றான். பதிலே வரவில்லை. தன் அருகிலுள்ள வெற்றிடத்தில் கண் விழும்போதெல்லாம் மஜும்தாருக்கு வியர்க்கத் தொடங்கியது. முடிந்தமட்டும் தன் உடலை ஒரு மூலையில் ஒடுக்கிக்கொண்டான். அவன் இவ்வாறு இடம் விட விடக் கண்காணாதது ஒன்று அதை நிரப்பிக்கொள்வதுபோல் தோன்றியது. மஜும்தார் தன்னுள் எண்ணலானான்: 'ஓர் ஐரோப்பிய அறிஞர், (Nature abhors vacuum) இயற்கையில் வெற்றிடம் காணமுடியாது என்று கூறியுள்ளார். எவ்வளவு உண்மை இது! என் பக்க இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் இப்பொருள் எந்த இயல்பை உடையதோ? என்னிடம் சொல்லாமலே என்னை இப்படி ஒதுக்கித் தள்ளுகிறதே; வண்டியிலிருந்து நான் குதித்து விடட்டுமா? ஆனால் அப்படிச் செய்யத் துணிவு வரவில்லை. பின்புறமாக வந்து என்னை எனக்கும் தெரியாமல் ஏதாவது செய்துவிட்டதானால்?'..''போலீஸ்'' என்று கூப்பிட முயன்றான்; ஆனால் அவன் வாயிலிருந்து வெளி வந்த ஓசை மெலிந்தே ஒலித்தது. அந்தனை அச்சத்திலும்

இதை நினைக்கும்பொழுது அவனுக்குச் சிரிப்பு வந்தது. மைதானத்திலுள்ள மரங்கள் அவ்விருளில் பேய்கள் நடத்தும் பார்லிமெண்டின் உறுப்பினர்போல் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டு நின்றன. எல்லா விஷயமும் தெரிந்தும் அதை வாய் விட்டுச் சொல்லாமல் இருக்கும் பாவனையில் கம்பங்களில் இருக்கும் 'கியாஸ்' விளக்குகள் மங்கி எரிந்தன.

சட்டெனக் குதித்து எதிர்ப்புறமாக உள்ள ஆசனத்தில் உட்கார்ந்துவிடவேண்டும் என்று மஜும்தாருக்குத் தோன்றியது. இவ்வாறு அவன் எண்ணும்பொழுதே எதிர்ப்புறமான ஆசனத்திலிருந்து ஏதோ ஒன்று தன்னை ஊடுருவ நோக்குவதுபோல் அவன் மனத்துள் திகில் தோன்றியது. மஜும்தார் இரு கண்களையும் அழுத்தி மூடிக்கொள்ளப் பார்த்தான். ஆனால் பயம் அவனைத் தடுத்தது. தன்னையே நோக்கும் ஓர் அருவத்தின் கண்களின்மீது அவனுடைய பார்வை நிலைத்தபோது அவை இமைக்கவும் மறுத்தன. இந்தப் பக்கம் வண்டி மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டே இருந்தது. அதை இழுத்துச் செல்லும் குதிரைகளின் வேகமும் வலுத்தது. அதனால் கதவும், சாளரமும் கடகடவென்று ஒலிக்கத் தொடங்கின.

சட்டென்று வண்டி எதன்மீதோ மோதி நின்றுவிட்டது. மஜும்தார் திடுக்குற்றுப் பார்த்தபொழுது, தான் போக வேண்டிய சாலையிலேயே வண்டி நின்றுகொண்டிருந்தது தெரிந்தது. ''தொரே, எங்கே போக வேண்டும் நீங்கள்?'' என்று வண்டிக்காரன் தன்னை உலுக்கிக் கேட்பதையும் உணர்ந்தான்.

மஜும்தார் கோபம் பொங்க, ''இத்தனை நேரம் என்னை இந்த மைதானத்தில் ஏன் சுற்றச் செய்தாய்?'' என்றான். வண்டிக்காரன் வியப்புற்று, ''நான் அந்த மாதிரி சுற்ற உங்களை வைக்கவில்லையே!'' என்றான். மஜும்தார் அவனை நம்பாமல், ''பின், என்ன இது? வெறும் கனவா?'' என்றான்.

வண்டிக்காரன் தயங்கித் திகிலுடன், ''பாபு! இது கனவு அல்ல; இந்த மூன்று வருஷங்களாக இது போன்ற சம்பவம் இந்த வண்டியில் நடந்து வருகிறது, ஐயா!'' என்றான்.

மஜும்தாருக்கு, அச்சமயம் குடியின் மயக்கமும் தூக்கக் கலக்கமும் அடியோடு கலைந்துவிடவே, வண்டிக்காரன் கூறும் கதைக்குச் செவி சாய்க்காமல் அவனுக்குச் சேரவேண்டிய வாடகையைத் தீர்த்துக் கொடுத்ததும் போய்விட்டான். ஆனால், அன்று இரவு எல்லாம், 'அந்தக் கண்கள் யாருடையன?' என்று சிந்திக்கத் தொடங்கினான்.

1

அதர் மஜும்தாரின் தந்தை ஒரு சாதாரணக் குமாஸ்தா

விலிருந்து பெரிய கம்பெனி ஒன்றில் மானேஜர் பதவிக்கு வந்தவர். அதர் பாபுவின் தந்தை சேர்த்துவைத்த ரொக்கப் பணத்துக்கு வட்டியே ஏராளமாக வந்தது. ரொக்கத்தைத் தொடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை அவருக்கு. வெறும் வெளுப்பு ஆடை அணிந்து அவர் சிவிகையில் ஏறித்தான் தம் அலுவலக கவனிக்கச் செல்வார். எத்தனையோ தான தருமங் மங்களுக்குப் பணம் தருவார். ஓர் ஆபத்து, நெருக்கடி, சங்கடம் இது போன்ற சமயங்களில் பலர் அவருடைய உதவியை நாடி உதவியும் பெறுவர். இதை அவர் சொல்லிப் பெருமைப்படுவார்.

அதர் பாபுவுக்கு மாளிகை போன்ற பெரிய வீடு உண்டு. வண்டி, குதிரை, ஆட்கள் எல்லாம் உண்டு; ஆனால் மக்களுடன் அதிகமாகத் தொடர்பு கொள்ளாதவர். கடன்தொகை வாங்குவதற்காகத் தரகர்கள் வந்து இரண்டு பேசிவிட்டு ஹுக்கா புகை உட்கொண்டுவிட்டுப் போவார்கள். அட்டர்னி ஆபீசைச் சேர்ந்தவர்களுடன் ஸ்டாம்பு விஷயமாக ஏதாவது பேச்சு நடத்துவார்; இவ்வளவுதான். குடும்பச் செலவுக் கணக்கிலும் மிகக் கண்டிப்பாக இருப்பார். அந்தப் பேட்டைக்கால் பந்தாட்டக் குழுவின் தலைவன் எவரையும் பேச்சால் வசியம் செய்து பணம் சம்பாதிக்கக் கூடியவன். இவரிடம் தோற்றுப் போனான்.

இந்தச் சமயம், அவருடைய குடும்பத்தில் புதிய விருந்தினன் தோன்றினான். குழந்தை இல்லையே, இல்லையே என்று ஏங்கி வெகு நாட்களுக்குப் பிறகு அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தை தன் தாயின் சாயலையே கொண்டிருந்தது. பெரிய பெரிய விழிகள், நீண்ட கூரிய மூக்கு, நிலச் சம்பங்கிப் பூ இதழ் போன்ற மென்மையான மேனி. குழந்தையைக் கண்டவர்கள் அனைவரும், ''ஆகா, என்ன அழகு! அசல் கார்த்திகேயக் கடவுளே'' என்று பாராட்டினர். அதர் பாபுவின் தோழனான ரதிகாந்தன், ''பெரிய இடத்துப் பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே பிறந்திருக்கிறான்'' என்றான்.

பையனுக்குப் பெயர் வைத்தனர், வேணுகோபாலன் என்று. இதற்கு முன்பு அதர் பாபுவின் மனைவி நளினபாலா, குடும்பச் செலவு விஷயத்தில் தன் கணவனுக்கு எதிரிடையாக எதையும் வற்புறுத்திக் கேட்டதில்லை. அவளுக்குப் பிடித்த இரண்டொரு காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளும் விஷயத்தில் எப்போதாவது சச்சரவு ஏற்படும். இறுதியில் கணவனின் உலோப குணத்தைக் கண்டு, வெறுப்புற்றுத் தோல்வியை ஏற்று அடங்கிப் போவாள்.

இந்தத் தடவை நந்பாலாவை அதரினால் கட்டிப்பிடிக்க முடியவில்லை. குழந்தை வேணுகோபாலனுக்கு ஆகும் செலவு படிப்படியாக ஏறத் தலைப்பட்டது. அதை அவரால் தடுக்கவே முடியவில்லை. குழந்தையின் கால்களுக்குக் கொலுசு, கைகளுக்குக் காப்பு, கழுத்துக்கு ஆரம், தலைக்கு ஜரிகைக் குல்லாய், நாட்டு ரீதியாகவும், சீமை மோஸ்தராகவும் எத்தனையோ வகையான சட்டைகள். இவற்றிற்கு ஆகும் பணச் செலவைக் கண்டு அவர் சில சமயம் கண்ணீர் விட்டும், சில சமயம் திட்டியும் ஒருவாறு சமாளித்து வந்தார். குழந்தை வேணுவுக்கு, எது அவசியம், எது அவசியமில்லை என்பதுபற்றி அவர் மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டியதாயிற்று.

2

வேணுகோபாலன் வளரலானான். அவனுக்குச் செலவு செய்வது இப்போது, அதர்லாலுக்குப் பழகிப் போய்விட்டது. அவன் பொருட்டு, அதிகச் சம்பளம் தந்து நிரம்பப் பரீட்சைகளில் தேர்ச்சிபெற்ற ஒரு கிழ மாஸ்டரையும் (டியூஷன் ஆசிரியர்) நியமித்தார். இந்த மாஸ்டர், இனிமையாகப் பேசியும், நல்லதனமாகப் பழகியும் வேணுவை வசம் செய்து கொள்ள எவ்வளவோ முயன்றார். ஆனால் இத்தனை நாள் அவர் பையன்களைக் கடுமையான கட்டுக் காய்தாவுக்கு உட்படுத்தி, ஆசிரியரென்ற தம் கௌரவத்தைக் காப்பாற்றி வந்திருப்பதால் அவருடைய பேச்சில் இனிமையோ, நடத்தும் விதத்தில் நயமோ தென்படவில்லை. இதனால் பையனுக்கு அவரிடத்தில் பிடித்தம் ஏற்படவில்லை. நந்பாலா, அதர்லாலைப் பார்த்து, "என்ன மாஸ்டரோ இவன்? எங்கிருந்து பார்த்துப் பிடித்தீர்கள் இவனை? இவனைக் கண்டதும் குழந்தை வெலவெலத்துப் போகிறான்; முன்னால் இவனுக்குச் சீட்டுக் கொடுங்கள்" என்றாள்.

கிழ மாஸ்டருக்கு விடை தந்து அனுப்பிவிட்டார் அதர்பாபு. முன்காலத்தில் பெண்கள் சுயம்வரத்தைக் கைக்கொண்டதுபோல் நந்பாலாவின் மகனும் சுயமாசாரியனைகிவிட்டான்.

அச்சமயம், தோள்மீது அழுக்குச் சால்வையும், கால்களில் கிழிந்த கான்வாஸ் ஜோடும் அணிந்து மாஸ்டர் என்ற வகையில் ஹரலால் வந்து சேர்ந்தான். அவனுடைய விதவைத் தாய் பிறர் வீட்டில் சமையல் வேலை செய்து எப்டியோ பிரவேசப் பரீட்சை வரைக்கும் தன் மகனைப் படிக்க வைத்தாள். அவனும் தேர்ச்சி பெற்றுவிட்டான். கல்கத்தாவுக்கு வந்து கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டுமென்ற துணி

வுடன் ஹரலால் கிளம்பி வந்துவிட்டான். போதிய உணவு இராமல், அவனுடைய முகத்தின் கீழ்ப்பகுதி சுண்டிச் சுருங்கி பாரதநாட்டின் கன்யாகுமரி முனைபோல் மெலிந்தும், அவனது மண்டை மட்டும் இமயமலைபோல் பருத்தும் காட்சி தந்தன. மணற் காட்டில் படியும் சூரியன் ஒளி கண்ணைச் சிதற அடிக்கும் வகையில் பளபளப்பதுபோல் அவனுடைய கண்களில் ஓர் ஏக்கத்தின் சுடர் வெளிப்பட்டது.

ஹரலால் வந்தபொழுது, காவற்காரன், ''யார் நீ? என்ன வேண்டும்? யாரைப் பார்க்க வந்தாய்?'' என்று கேட்டான்.

''இந்த வீட்டுச் சொந்தக்காரரைப் பார்க்கவேண்டும்'' என்றான் ஹரலால்.

''அதுதான் முடியாது'' என்றான் காவல்காரன்.

இதற்கு என்ன மறுமொழி தருவதென்று தெரியாமல் ஹரலால் தயங்கும்பொழுது ஏழு வயது நிரம்பிய வேணு கோபாலன் விளையாடத் தோட்டத்திற்குச் செல்ல வாயிற் படியில் வந்து நின்றான். காவல்காரன், ஹரலால் அங்கேயே தயங்குவதைக் கண்டு மீண்டும், ''வெளியே போ, அப்பேன்'' என்றான்.

சட்டென வேணுவுக்குப் பிடிவாதம் வந்துவிட்டது. ''போகாதே நீ'' என்றதும் ஹரலாலின் கையைப் பற்றி அவனை மாடிக்கு அழைத்துச் சென்று தன் தந்தையின் முன்பு நிறுத்தினான்.

அப்போதுதான் பகல்தூக்கம் போட்டுவிட்டுச் சோம்பல் முறித்ததும் அதர் வராந்தாவுக்கு வந்து பிரம்பு நாற்காலியில் கம்மென்று அமர்ந்து கால்களை ஆட்டிக் கொண்டிருந்தார். கிழ ரதிகாந்தன் ஒரு மர நாற்காலிமீது உட்கார்ந்து மெள்ளப் புகை குடித்துக்கொண் டிருந்தான். அன்று, அந்தச் சமயத்தில், அந்நிலையில் தெய்வாதீனமாக ஹரலாலுக்கு 'மாஸ்டர்' வேலை ஊர்ஜிதமாகிவிட்டது.

''நீங்கள் எதுவரைக்கும் படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் ரதிகாந்தன்.

ஹரலால் முகத்தைத் தாழ்த்தியபடி, ''பிரவேசப் பரீட்சையில் தேர்ந்துவிட்டேன்'' என்றான்.

ரதிகாந்தன் புருவத்தைத் தூக்கி, ''பிரவேசப் பரீட்சை தானே? நான் பார்த்தேன், காலேஜில் படித்திருப்பீர்களென்று. வயசைப் பார்த்தால் கம்மியாகத் தோன்றவில்லை உங்களுக்கு'' என்றான்.

ஹரலால் ஒன்றும் பேசாமல் வாளா இருந்தான். சரண் புகுந்தவர், சரண்புக விழைவோர் இவர்களைக் கிண்டித் துன் புறுத்துவதில் ஓர் இன்பம் இந்த ரதிகாந்தனுக்கு.

ரதிகாந்தன் வேணுவை ஆதரவாகத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, 'எத்தனையோ எம். ஏக்கள், பி. ஏக்கள் வந்து போயினர்; யாருமே சரிப்படவில்லை. போயும் போயும் இந்தத் தங்கச் செல்வன் பிரவேசப் பரீட்சையில் தேறிய ஒருவனிடமா பாடம் கேட்பது?'' என்றான்.

வேணு, ரதிகாந்தனின் அன்பு அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, ''நீ போ! உன்னை யார் கேட்டார்கள்?'' என்றான். இந்த ரதிகாந்தன் என்றால் வேணுவுக்குப் பிடிக்கவே பிடிக்காது. ரதிகாந்தனே, இப்படி அந்தச் சிறுவன் தன்னை வெறுப்பது, இளங் குழந்தைகளுக்குரிய ஓர் இனிய தன்மை யென நினைத்துப் பூரித்துப் போவான். மேலும், வேணுவைப் பலவிதமாகச் செல்வப் பெயரிட்டு அழைத்து அவனுக்கு எரிச்சலை மூட்டுவான்.

ஹரலாலுக்கு அந்த இடம் உறுதியாவது மிகக் கடினமென்று பட்டது. அந்த இடத்தை விட்டு வெளியே போய் விட்டால் தேவலை என்று தோன்றியது. அதே சமயம், அதர்லாலுக்கு ஒரு யோசனை உதித்தது; சொற்பச் சம்பளம் தந்தாலே ஹரலால் போன்றவன் ஒப்புக்கொள்வான். அவனை அமர்த்தினார் மாஸ்டராக. அதர்லால் வீட்டிலேயே இரண்டு வேளை சாப்பாடு, மாதச் சம்பளம் ஐந்து ரூபாய் என்று ஏற்பாடாயிற்று. வீட்டில் வைத்துக்கொண்டால் தாட்சிண்யம் காட்டவேண்டி வரும்; அதற்காக அவனிடமிருந்து மேற்கொண்டு ஏதாவது வேலையையும் வாங்கிக்கொள்ளவும் வசதி இருக்கிறதே.

3

ஹரலாலுக்குக் கிடைத்த வேலை உறுதியாகிவிட்டது. தொடக்கத்திலேயே ஹரலாலிடம் வேணுவுக்குப் பிடித்தம் ஏற்பட்டுவிட்டது. உடன்பிறந்தவர்களைப்போல் பழகினர்.

ஹரலாலுக்கு உறவினர் எவருமே கல்கத்தாவில் இல்லை. அந்த அழகிய சிறுவன் வேணு அவனுக்கு நெஞ்சு நிரம்பியவனாகிவிட்டான். நிர்ப்பாக்கியனான ஹரலால் இதற்குமுன் எவரையுமே இவ்வளவு ஆழ்ந்து நேசித்ததில்லை. எவ்வாறு நடந்துகொண்டால் தன் நிலை உயருமென்ற நினைப்பில் மிக்க உழைப்புடன் புத்தகங்களைத் திரட்டிப் படிக்கலானான். தாய் ஓர் இடத்தில் அடிமையாக வேலை செய்கிறாள் என்ற வேதனையிலேயே இளம்பிராயத்தைக் கூசிக் குறுகியே கழித்தான். கட்டுப்பாட்டிற்கு மீறி வெளியே வந்து மற்றப் பிள்ளைகளைப் போல் குறும்புகள் புரிந்து வெற்றிப் பெயர் எடுக்க அவனுக்கு

வாய்ப்பே ஏற்படவில்லை. அவன் எவருடைய கட்சியிலும் சேர மாட்டான். ஏடு கிழிந்த புத்தகத்தையும் உடைந்த பலகையையும் வைத்துக்கொண்டு தனியாகவே இருப்பான். உலகிடைப் பிறவி எடுத்து இளம் வயதிலேயே சாதுவாகவும், தாயின் துயரையும், தன் நிலையையும் உணர்ந்து நடக்க வேண்டியவனாகவும், மற்றவர்களுக்கு அஞ்சிப் பிறருக்கு எரிச்சல் தருமே என்று வேடிக்கை விளையாட்டுக்களில் சந்தோஷம் காணுதவனையும், வெந்துயரிலும் கண்ணீர் சிந்த நடுங்குபவனையும், சிறுபிள்ளைக்குரிய ஆர்வம், சக்தி யாவையும் அடக்கிக் கொண்டவனையும் ஒருவன் இவ்வுலகில் இருப்பின் அவன் இரங்கத் தக்கவன்!

எல்லோருக்கும் கடையனாகிக் காலின்கீழ் துவைக்கப்படும் ஹரலாலுக்கே தெரியாது, அன்பின் சுவை யொன்று தன் மனத்துள் தேங்கியிருப்பது. வேணுவுடன் விளையாடுவதும், அவனுக்குப் பாடம் சொல்லித் தருவதும், நோயுற்ற பொழுது அவனுக்குத் தொண்டு புரிவதுமாய் தன் நிலையின் உயர்வைவிட மனிதனுக்கு வேறொன்று உள்ளதை அவன் உணர்ந்தான். இதில் அவன் இன்பம் பெற்றபோது அவன் வேறு எதிலும் நாட்டம் செலுத்தவில்லை.

வேணுவும் ஹரலாலைப் போன்ற ஒரு நண்பன் கிடைக்கவே மகிழ்ச்சியுற்றான். காரணம், வீட்டில் அவன் ஒரே பிள்ளை. கூட விளையாடுவதற்கு ஏற்ற வயதுள்ளவர் இல்லை. அவனுடைய தங்கையோ சின்னக் குழந்தை. அந்தத் தெருவில் அவனுக்கு ஈடான பையன்களுக்குக் குறைவே இல்லை. ஆனால் அதர்லால் தன்னை உயரிடத்து மனிதனாக நினைத்துக்கொண்டதால் மற்றவர்களுடன் தன் மகனைச் சேர விடுவதில்லை. இதனால் வேணுவை எவரும் நெருங்குவதில்லை. ஆகவே, ஹரலால் அவனுக்குத் தகுந்த துணைவனானான். வேணுவின் குறும்புச் சேஷ்டைகளை மற்றச் சிறுவர்கள் சகித்துக்கொள்ள வேண்டியதுபோய், ஹரலால் ஒருவனே அவற்றைச் சமாளித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி அச்சிறுவன் தரும் தொல்லைகளைப் பொறுத்துப் பொறுத்து ஹரலாலுக்கு அவன் மீது படர்ந்த அன்பு இன்னும் வலுப்பட்டது. ரதிகாந்தன் மட்டும், ''தங்கமான குழந்தையை இவன் குட்டிச்சுவராக்குகிறான்'' என்று சொல்லிக்கொண்டே இருப்பான். இந்த மாஸ்டருடன் தன் மகனுக்குள்ள தொடர்பு தகுந்த வழியில் செல்லவில்லை என்பது அதர்லாலுக்கும் நடுநடுவே தோன்றும். ஆனால் வேணுவிடமிருந்து ஹரலாலைப் பிரித்து வைப்பது இப்போது யாராலும் முடியாது.

4

வேணுவுக்கு வயது பதிஞ்ஞென்ருகியது. ஹரலால் எப். ஏ., தேறி, உதவிச் சம்பளம் பெற்றுக் கல்லூரியில் மூன்ரும் ஆண்டில் படித்துக்கொண் டிருந்தான். இதற்கிடையே அவனுக்கு இரண்டொரு நண்பர் கல்லூரியில் கிடைக்காமல் போகவில்லே. இருப்பினும் அந்தப் பதிஞ்ரு வயதுச் சிறுவனே அவனுக்கு எல்லாமாகி இருந்தான். கல்லூரிக்குச் சென்றுவிட்டுத் திரும்பியதும் வேணுவைக் கூட்டிக் கொண்டு, 'கோல்தீகி' (வட்டக்குளம்), 'ஈடென் கார்டென்' இங்கெல்லாம் சுற்றப் போவான். சிறுவனுக்குக் கிரேக்க வரலாற்றில் வரும் வீரர்களின் கதைகள் எல்லாம் சொல்லுவான். ஸ்காட், விக்டர் ஹியூகோ ஆகியவர்கள் எழுதிய கதைகளே ஒவ்வொன்ருக வங்க மொழியில் ஆக்கிச் சொல்லுவான். உரத்த குரலில் அச்சிறுவனுக்கு ஆங்கிலக் கவிதைகளேப் படித்து அவற்றின் கருத்தை விளக்கம் செய்வான். ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் ஸீஸரி'லிருந்து ஆந்தனியின் சொற்பொழிவை உருப் போடச் சொல்லித் தருவான். ஹரலாலின் இதய கவாடம் திறப்பதற்கு அச்சிறுவன் பொன் மந்திரக் கோலாகவே பயன்பட்டான். வேணுவுக்கு ஆர்வம் மூட்டும் நோக்கிலேயே, இலக்கியம், விஞ்ஞானம் போன்ற விஷயங்களில் அவன் சுவையான பகுதிகளேக் கவனமாகப் படிப்பான். வேணு இவற்றைத் தன்னிடம் அறிந்துகொண்டால் என்ன குதுகுதுப்படைவான் என்று நினேக்குந்தோறும் மகிழ்ச்சி பன்மடங்கு பொங்கும் அவனுக்கு.

வேணு பள்ளிக்கூடத்திலிருந்து வந்து சரசரவென்று சிற்றுண்டி அருந்தியதும் ஹரலாலுடன் வெளியே சென்று வரப் பரபரப்பான். எந்தச் சாக்குப் போக்குச் சொல்லியாவது அவனே வீட்டிலேயே இருத்தி வைக்க அவன் தாய் பாடுபட்டாலும், அது வீணுகும். நதீபாலாவுக்கு இந்தப் போக்குப் பிடிக்கவில்லே. ஹரலால் இங்குப் பார்க்கும் தன் வேலேயை நிலேக்கச் செய்வதற்கே பையனேத் தன் வசமாக்கிக் கொள்கிருன் என்றே அவள் நினேத்துவிட்டாள். அவள் ஹரலாலே ஒரு நாள் அழைத்துத் திரை மறைவிலிருந்தவாறு, "நீ மாஸ்டர்; ஏதோ காலே ஒரு மணிநேரம், மாலே ஒரு மணி நேரம் என் பையனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டியவன். இப்படி இரவும் பகலும் அவனேடேயே இருக்கிருயே! இதனுல் அவன் தாய் தந்தையைக்கூட மதிப்பதில்லே... நீ கற்றுக் கொடுக்கும் வித்தை ரொம்ப அழகுதான்! முன்னெல்லாம் 'அம்மா' என்று என்ன ஆசையாகக் குதித்துக்கொண்டு வருவான், இப்போது

எத்தனை தரம் கூப்பிட்டாலும் லட்சியம் செய்வதில்லை. வேணு பெரிய இடத்துப் பிள்ளை. அவனோடு நீ இப்படி ஒட்டிக் கொண்டு திரிவதன் காரணம் என்னவோ?'' என்றாள்.

அன்று ரதிகாந்தன் அதர் பாபுவிடம், ''எனக்குத் தெரிந்த இரண்டு மூன்று பெரிய மனிதர் வீடுகளில், டியூஷன் சொல்லித் தருவதாக வேலையில் அமர்ந்த மாஸ்டர் கள் அந்த வீட்டுப் பிள்ளைகளின் மனத்தையே கவர்ந்து விட்டனர். முடிவில் அந்தப் பிள்ளைகள் உரிய வயதில் சொத் துக்கு அதிகாரிகளானதும், இந்த மாஸ்டர்கள் தம் விருப்பம் போல் ஆட்டிவைத்தனர். உனக்கு எச்சரிக்கை செய்கிறேன் இப்போதே. அவ்வளவு தூரம் அநுமதிக்காதே'' என்றான்.

இந்த எச்சரிக்கை எவனைக் குறித்தது என்பது சொல்லத் தேவையில்லை. ஹரலாலைத்தான். இதையெல்லாம் சகித்துக் கொண்டு ஹரலால் சும்மாத்தான் இருந்தான். ஆனால் அன்று வேணுவின் தாய் சொன்னதைக் கேட்டதும் அவனுக்கு நெஞ்சு வெடித்தது. பெரிய மனிதர் வீட்டில் ஒரு மாஸ்டருக்குள்ள மதிப்பு என்ன என்பதை உணர்ந்தான். இடையன் தன் வீட்டில் மகனுக்குப் பால் தரவே மாட்டைக் காப்பாற்று கிறான். அதே போலத்தான் இவர்கள் மகனுக்குக் கல்வி புகட்ட 'மாஸ்டர்'களை அமர்த்துகின்றனர். மாணாக்கனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டு அன்புடனும் நட்புடனும் ஒழுகுவது இவர்களுக்குப் பிடிக்கவில்லை போலும்! தன்னலம் கருதியே இந்தச் சூழ்நிலையைச் செய்கிறான் என்று தன்னை வீட்டு வேலையாட்கள்கூட நினைப்பதுதான் அவனை வருத்தியது.

ஹரலால் குரலில் நடுக்கம் தோன்ற, ''அம்மா. வேணு வுக்குப் படிப்புச் சொல்லித் தருவதைவிட வேறு எந்தவித மான ஜோலியும் வைத்துக்கொள்ள மாட்டேன் இனி'' என்றான்.

அன்று சாயங்காலம், வழக்கம்போல வேணுவுடன் விளை யாட ஹரலால் கல்லூரியிலிருந்து திரும்பவே இல்லை. அந்தப் பொழுதை எப்படியோ ஒவ்வொரு தெருவாகச் சுற்றி அலைந்தே கழித்த அந்த மனவேதனை அவனுக்குத்தான் தெரியும்! இருட் டியதும் அவன் வீட்டுக்குத் திரும்பி வேணுவுக்குப் பாடம் சொல்லித் தர வருகையில், வேணுவின் முகம் தொங்கிக் கிடந்தது. தான் வராததைக் குறித்து அவனுக்குக் காரணம் எதுவுமே பகராமல் அவனுக்குப் பாடம் சொல்ல முனைந் தான். அன்றைய பாடம் அவ்வளவு சுவை பட அமைய வில்லை.

ஹரலால் ஒவ்வொரு நாளும் இருட்டுப் பிரியுமுன்னரே எழுந்து தன் அறையில் படிக்க உட்காருவது வழக்கம். வேணு

வும் விடியும் நேரத்திலேயே விழித்து, முகம் கழுவிக்கொண்டு ஹரலாலிடம் ஓடி வருவான். தோட்டத்தில் சதுரமான கல் தொட்டியில் மீன் நீரில் உலவும். அதற்குப் பொரியும் கடலையும் உணவாக இறைப்பது இவர்களது அன்றாட வேலை களில் ஒன்றாகும். தோட்டத்தின் ஒரு மூலையில் பாறைத் துண்டுகளை அடுக்கிச் சின்னஞ்சிறு கிளை வழிகளை அமைத்து, சிறு வாயில்களை வைத்துக் குள்ளர்களின் உலகில் காணும் சிறு பூங்காவை உருவாக்கி இருந்தனர். காலையில் இந்தப் பூங்கா வில் சிறிது பொழுது போக்குவது இவர்களுடைய இரண்டா வது வேலையாகும். அப்புறம் வெயில் ஏறி வீட்டுக்குத் திரும்பியதும் வேணு, ஹரலாலிடம் பாடம் கேட்பான்.

முன்னாள் மாலை சொல்லிக் குறையாக நின்ற கதையின் மிகுதிப் பகுதியைக் கேட்க வேணு, அதிகாலையிலேயே எழுந்து ஹரலாலிடம் ஓடிவந்தான். 'மாஸ்டர்' தன்னை ஏமாற்ற முடி யாதென்று நம்பினான். அறையினுள் வந்து பார்த்தபொழுது மாஸ்டரைக் காணவில்லை. காவற்காரனைக் கேட்டதற்கு அவர் வெளியே போய்விட்டாரென்றான்.

அன்று மாலை படிக்கும் நேரம் வந்ததும் வேணு வின் குட்டி உள்ளம் வேதனையால் உழல அவனுடைய முகம் வாடியிருந்தது. அவ்வளவு இளங்காலையில் ஹரலால் வெளியே போகக் காரணம் என்ன என்பதை அவன் கேட்டறிய விரும்ப வில்லை. வேணுவின் முகத்தை நேராக நோக்காமல், புத்தகத் தின்மேல் கண்ணைச் செலுத்தி ஹரலால் பாடம் சொல்லத் தொடங்கினான். வேணு வீட்டினுள் சென்று உணவுகொள்ள உட்கார்ந்தபொழுது அவனுடைய அன்னை, ''நேற்றுச் சாயங் காலமே பிடித்து ஏன் இப்படி உன் முகத்தைத் தோண்டி போல் வைத்துக்கொண்டிருக்கிறாய்? நன்றாகச் சாப்பிடவும் இல்லை. என்ன நடந்தது?'' என்று விசாரித்தாள்.

வேணு பதில் ஏதும் பேசவில்லை. அதன்பின் தாய் அவனை அருகில் இழுத்து உடம்பைத் தடவிக் கொடுத்து, ஆதரவெல் லாம் காட்டி மெல்லக் கிளறிக் கேட்கவே, அவனால் தாங்க முடியவில்லை. விம்மி விம்மி அழுதுவிட்டான்.

''மாஸ்டர் மஷாய்-''

''மாஸ்டர் மஷாய்க்கு என்ன?'' என்றாள் அவள்.

மாஸ்டர் மஷாய் செய்ததை என்னவென்று விவரிக்க அவனுக்குத் தெரியவில்லை. அவன் மனத்தை வருத்திய அந் தப் புண்ணை மொழிமூலம் வெளிப்படுத்துவது மிகவும் கடினம். ''மாஸ்டர்மஷாய் ஒரு வேளை உன் அம்மாவைக் குறித்து ஏதாவது உன்னிடம் சொல்லியிருப்பார்! அதுதானே?'' என் றாள் அவள். அவள் சொற்களில் அடங்கிய கருத்துப் புரியா

மல் போகவே, சிறுவன் பதில் ஏதும் சொல்லாமல் போய் விட்டான்.

5

இதற்குள், வீட்டில் அதர் பாபுவின் சில துணிமணிகள் களவு போயின. போலீசில் பிராது செய்தனர். போலீசார் சோதனை போடும்போது ஹரலாலின் பெட்டியை விட்டு வைக்கவில்லை. ரதிகாந்தன், ஒன்றுமே அறியாதவன்போல், ''திருடியவன் எங்கேயாவது திருட்டுச் சாமானைத் தன் பெட்டிக்குள் மறைத்து வைப்பானா?'' என்றான்.

சாமான் போன வழியே தெரியவில்லை. இது போன்ற தொரு நஷ்டத்தை அதர்பாபு பொறுக்கவே மாட்டார். உலகத்திலுள்ள அத்தனை பேர்மீதும் எரிந்து விழுந்தான். ''வீட்டில் அத்தனைபேர் இருக்கின்றனர். யார்மீது குற்றம் கூறுவது? யார்மேல் சந்தேகம் கொள்வது? இங்கே நினைத்தவர் எல்லாம் வருகின்றனர், போகின்றனர். கேட்பார் யார்?'' என்றான் ரதிகாந்தன்.

அதர்லால் மாஸ்டரை அழைத்து, ''இதோ பார், ஹரலால்! இந்த வீட்டில் யார் இருந்தாலும் எனக்கு இடைஞ்சலாகும். இன்றுதொட்டு நீ தனி இடம் பார்த்துக்கொண்டு உரிய வேளையில் வந்து வேணுவுக்குப் பாடம் சொல்லித் தந்துவிட்டுப் போ. அப்படி இருப்பதுதான் நல்லது. வேண்டுமானால் உன் சம்பளத்தில் மேலும் இரண்டு ரூபாய் போட்டுத் தரவும் நான் சம்மதிக்கிறேன்'' என்றார்.

ரதிகாந்தன் புகையை உட்கொண்டே, ''இதுதான் நல்லது. இரண்டு பேருக்குமே நன்மையானது'' என்றான்.

ஹரலால் இதையெல்லாம் முகம் தாழ்த்திக் கேட்டுக் கொண்டான். அப்பொழுது அவனால் எதுவும் பேச முடியவில்லை. அறைக்கு வந்து, அதர் பாபுவுக்கு ஒரு கடிதம் எழுதினான்: பல காரணங்களை உத்தேசித்து வேணுவுக்குப் பாடம் சொல்லித் தருவது தனக்குச் சௌகரியப்படாதென்றும், ஆகையால் அன்றே தான் விடை பெற்றுச் செல்லத் தயாராக இருப்பதாகவும் அக்கடித வாயிலாக அறிவித்தான்.

அன்று பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து பார்க்கையில் மாஸ்டரின் அறை காலியாக இருந்தது. அவன் அமைத்த அந்த உடைந்த தகரப் பேழையைக்கூடக் காணவில்லை. கயிற்றுக் கொடிமீது தொங்கும் அவனுடைய மேல் சவுக்கம், சால்வை எதுவும் காணவில்லை. மேஜைமீது புத்தகங்களும் நோட்டும் தாறுமாறுமாக இறைந்து கிடக்கும். இப்போது

அவற்றிற்குப் பதிலாகப் பெரிய கண்ணுடிச் சீசாக்குள் பொன்மீன்கள் பளபளத்துத் திரிந்துகொண் டிருந்தன. அந்தச் சீசாவின்மேல் மாஸ்டர் மஷாயின் கை எழுத்தில் வேணுவின் பெயர் தாங்கிய காகிதவில்லை ஒட்டப்பட்டிருந்தது. புதிதும், அழகிய கட்டுக் கோப்புடைய படங்கள் அடங்கியதுமான ஆங்கிலப் புத்தகத்தின் உட்புறத் தாளில் வேணுவின் பெயரும், அதன்கீழ் அன்றைய தேதியும் இட்டிருந்தன.

வேணு ஓட்டமாக ஓடித் தன் தந்தையிடம் சென்று, ''அப்பா, மாஸ்டர் மஷாய் எங்கே போய் விட்டார், அப்பா?'' என்றான்.

தந்தை அவனை அருகில் இழுத்து, ''அவர் வேலையை விட்டுவிட்டுப் போய்விட்டார்'' என்றார்.

வேணு தந்தையின் கையை உதறித் தள்ளிவிட்டு, தன் படுக்கையில் வந்து விழுந்து குப்புறப் படுத்து அழத் தொடங்கினான். அதர் பாபுவுக்கு வேதனை; என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்.

மறு நாள், பத்தரை மணி இருக்கும்; ஹரலால் 'மெஸ்' ஸுக்கு வந்திருந்தான். கல்லூரிக்குப் போவதா வேண்டாமா என்று யோசித்துக்கொண் டிருக்கையில் முதலில் அதர் பாபுவின் காவல்காரன் உள்ளே நுழைவதைக் கண்டான். அவன் பின்னல் வேணு நுழைந்ததும் ஹரலாலின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். ஹரலாலுக்கு நெஞ்சு விம்மியது. பேசப் போனல், கண்ணீர் வெடித்து வருமே என்று அஞ்சிப் பேசாமலே இருந்தான். வேணு, ''மாஸ்டர் மஷாய்! எழுந்து வாருங்கள் வீட்டுக்கு'' என்று அழைத்தான்.

கிழக்காவற்காரனை சந்திரபானை, சிறுவன் எப்படியாவது மாஸ்டரை வீட்டுக்கு அழைத்து வருமாறு வேண்டிக் கொண்டான். மூட்டை தூக்கும் ஆள் ஒருவன் மூலம் சந்திரபான் ஹரலால் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டு, பள்ளிக்கூடம் செல்லும்பொழுது வேணுவை அந்த இடத்திற்கு அழைத்து வந்தான்.

வேணுவின் வீட்டிற்கு இனிமேல் திரும்பிச் செல்வது தன்னல் முடியாதென்பதற்குக் காரணம் கூற ஹரலாலுக்குத் தெரியவில்லை. வேணு தன் கழுத்தைக் கட்டிக்கொண்டு ''வீட்டுக்கு வாருங்கள்'' என்று கூப்பிட்டபொழுது அந்த மென்மையான பரிசம் பழைய நினைவுகளையெல்லாம் கிளப்பி, இரவெல்லாம் அவனைப் பெருமூச்சு விடச் செய்தது. ஆனல், நாள் ஆக ஆக, இந்த வேதனை இருவர்பாலும் மட்டுப் பட்டே வந்து மறையலாயிற்று. ஊடுருவி வாட்டிய இந்த வேதனை உள்ளத்தில் வலைய வருவது மெல்ல நின்றது.

6

எவ்வளவு முயன்றும் ஹரலாலுக்குப் பாடங்களின்மேல் மனம் ஊன்றவில்லை. நிலைத்து அவனுல் கவனம் செலுத்த முடியவில்லை. சற்று நேரம் படிக்க உட்கார்ந்ததும் டபக்கென்று புத்தகத்தை மூடிவிட்டுக் காரணமின்றி வேகமாகத் தெருவில் சுற்றிவிட்டு வருவான். கல்லூரி வகுப்பில் 'லெக்சர்' குறித்துக்கொள்ளும் நோட்டுக்களில் வெற்றுத் தாளில் அவன் வரையும் எழுத்துக்கள் புரிபடாத புராதன எகிப்துச் சித்திர லிபிகளை ஒத்திருக்கும்.

இதெல்லாம் நல்லதற்கு அறிகுறியன்றென உணர்ந்தான் ஹரலால். பரீட்சையில் தேறினுலும் உதவிச் சலுகை பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. இந்தச் சலுகையைப் பெறுது போனுல் கல்கத்தாவில் ஒரு நாள் காலம் கடத்துவதுகூட அவனுல் ஆகாது. தாய்க்கு வேறு நாலைந்து ரூபாயாவது அனுப்ப வேண்டி யிருக்கிறது. இவ்வாறு பலவிதச் சிந்தனைகள் மனத்திடையே சுழல அவன் வேலை தேட வெளியே சென்றான். வேலை செய்வது மிகவும் கடினந்தான்; ஆனுல் வேலை இராமல் இருப்பது அவன் வரைக்கும் இன்னும் சிரமமாகவே இருந்தது. இதனுல் பெரும்பாலும் நம்பிக்கையை இழந்தபோதிலும், கிடைக்குமோ என்று சிறிதளவு நம்பிக்கையும் கொண்டிருந்தான்.

ஹரலாலின் நல்ல காலமோ என்னவோ, ஒரு பெரிய ஆங்கிலக் கம்பெனியில் வேலைக்கு மனுப் போட்ட சமயம், அக்கம்பெனியின் பெரிய துரையின் கண்ணில் அது பட்டது. நேராக ஆளைப் பார்த்தால் அவனுக்குள்ள தகுதி தெரிந்து விடும் என்று துரை, ஹரலாலை வரவழைத்து இரண்டொரு கேள்விகள் கேட்டதும், ''பரவாயில்லை, ஒரளவுக்குத் தகுதியுள்ளவனுகத் தெரிகிறது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, ''இந்த வேலையெல்லாம் உனக்குப் பழக்கமா?'' என்றான். அதற்கு ஹரலால், ''இல்லை'' என்றான்.

''யாராவது ஒரு பெரிய மனிதரிடமிருந்து ஒரு நற்சாட்சித் தாள் கொண்டுவர முடியுமா?'' என்றான்.

''எனக்கு அப்படிப் பெரிய மனிதர் யாருமே தெரியாது'' என்றான் ஹரலால்.

அதைக் கேட்டுத் துரை பின்னும் மகிழ்வுற்று, ''சரி, இருபத்தைந்து ரூபாய் சம்பளம் தருவேன்; வேலையை நன்றுகக் கற்றுக்கொண்டதும் மேலும் உயர்வு தருகிறேன்'' என்றதும், ஹரலால் அணிந்துள்ள உடைகளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''இப்போது பதினைந்து ரூபாய் முன்பணம்

தருகிறேன். ஆபீசுக்கு ஏற்ற உடைகளைத் தைத்துக் கொள்'' என்றான்.

உடைகளைத் தைத்து அணிந்துகொண்டு ஆபீசுக்குச் சென்று வந்தான். பெரிய துரை பூதத்திற்கு வேலை தருவது போல் அவனை வாட்டி எடுத்தான். மற்றக் குமாஸ்தாக்கள் வேலை முடிந்து வீடு திரும்புவார்கள். ஆனால் ஹரலாலுக்கு ஓய்வென்பதே கிடையாது. சில நாட்கள், பெரிய துரையின் வீட்டிற்கு வேறு சென்று அவன் இடும் வேலையைச் செய்து விட்டு வரவேண்டியிருந்தது.

இவ்வாறு வேலையில் தேர்ந்தவனுவதற்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை ஹரலாலுக்கு. அவனுடன் வேலை செய்யும் மற்றக் குமாஸ்தாக்கள் அவனுக்கு எவ்வளவோ முட்டுக் கட்டை போட்டும் அவனுக்கு விரோதமாக பேபிடத்தில் கலகம் செய்தும் பார்த்தார்கள். ஆனால் அவற்றால் எல்லாம் அப்பாவியான ஹரலாலுக்குள்ள டதிப்புக் குறைந்து போய் விடவில்லை.

அவனுக்கு ஊதியம் நாற்பதுக்கு உயர்ந்ததும், ஊரிலிருந்து தன் தாயை அழைத்து வந்து சிறிய சந்து ஒன்றில் உள்ள வாடகை வீட்டில் இடம் வைத்துக்கொண்டான். இத்தனை நாட்களுக்குப் பிறகு அவனுடைய தாயின் துயரம் நீங்கியது. ''அப்பனே, இனி ஒரு பெண்ணை மணந்துகொள்ளடா'' என்றாள் அவள்.

அவளுக்கு இன்னும் ஓர் ஆசையும் இருந்தது. ''இரவும் பகலும் உன்னிடம் படித்த மாணவனுன வேணுகோபாலனைப் பற்றிக் கூறுகிறாயே, அவனை ஒரு நாள் அழைத்து விருந்துச் சாப்பாடு போடலாமே; அவனைக் காண வேணுமென்று எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது'' என்றாள்.

''அம்மா, இந்தக் குறுகிய இடத்தில் அவனை எப்படி அம்மா உட்கார வைத்து விருந்து செய்வது? வேறு பெரிய இடம் பார்த்துக்கொண்டு போனபின்பு அவனை அழைக்கிறேன்'' என்றான் ஹரலால்.

7

ஹரலாலுக்கு ஊதிய உயர்வு கிடைத்ததும் சந்துவீட்டிலிருந்து பெரிய வீடொன்றில் குடி புகுந்தான். அப்படி வந்தும் அவனுக்கு என்ன தோன்றியதோ தெரியாது; அதர்லாலின் வீட்டிலிருந்து வேணுவைத் தன் இடத்திற்கு அழைத்து வர அவன் மனம் உடன்படவில்லை.

அவனுக்குள்ள இந்தச் சங்கோசம் என்றுமே மறையப்

போவதில்லை. அதே சமயம் அவனுக்கு வேணுவின் தாய் இறந்து போய்விட்டதாகச் செய்தி வந்தது. இதைக் கேட்ட துமே சற்றும் தாமதம் செய்யாமல் அதர்லாலின் வீட்டுக்குச் சென்றான்.

வயதில் ஏற்றத் தாழ்வுடைய இரு நண்பர்களும் வெகு நாட்களுக்குப் பிறகு அன்று ஒன்று கூடினர். சாவுத் தீட்டான காலம் நீங்கியதும், அவர்கள் வீட்டுக்கு ஹரலால் போவதும் வருவதுமாய் இருந்தான். ஆனால் முன்போல் இல்லை வேணு. இப்போது பெரியவனாகிவிட்டான்; அரும்பு விடும் மீசையை விரலால் தடவிக்கொள்ளும் பிராயம். நடை உடையில் நாகரிகம் தென்பட்டது. இப்போது அவ னுக்கு ஏற்ற நண்பர்களுக்கோ தோழர்களுக்கோ குறை வில்லை. போனேக்ராப் தியேட்டரில் நடிகைகளுக்குப் பின் னணி இசை வாசித்து, தன் நண்பர்களுடன் இன்பப் பொழுது போக்கி வந்தான். அவனுடைய படிப்பறையில் அந்தப் பழைய மோஸ்தர் நாற்காலியும் கறை படிந்த மேஜையும் இப்போது காணவில்லை. அலங்கார அறையில் எங்கும் நீலக் கண்ணாடிகளும், சித்திரப்படங்களும் மலிந்திருந்தன. வேணு இப்போது கல்லூரி மாணவன்; ஆனால் இரண்டாம் ஆண்டுப் படிப்புக்குமேல் அவன் புத்தி ஓடவில்லை. பெயருக்காவது அவன் 'பாஸ்' செய்ததும், திருமணச் சந்தையில் அவனுக்கு நல்ல கிராக்கி ஏற்படுமென்பது அவனுடைய தந்தையின் எண்ணம். ஆனால் பையனுடைய தாய்க்குத் தன் மகனின் லட்சணம் தெரியாதா? அவள் பளிச்சென சொல்லுவாள்: ''என்னுடைய மகன் வேறு சாதாரணப் பிள்ளைகளைப்போல் கௌரவமாகப் 'பாஸ்' செய்ய வேண்டிய அவசியமே இல்லை. இரும்புப் பெட்டியில்தான் நோட்டுக் கற்றையாகக் குவிந்து இருக்கிறதே...அது போதாதா?'' என்பாள். அவள் மகனும் தாயின் இந்தப் பாராட்டுதலை உள்ளூறப் புரிந்துகொண்டவ னாகவே விளங்கினான்.

எப்படி இருப்பினும் இப்போதெல்லாம் தன்னைக் குறித்து வேணுவுக்கு அக்கறை இருக்க வேண்டிய அவசியமே இல்லை என்பதை ஹரலால் நன்கு உணர்ந்தான். ஆனால் அந்தப் பழைய சித்திரம் - அதாவது, ஒரு நாள் காலை வேணு ஓடி வந்து தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''வீட்டுக்கு வாருங் கள், மாஸ்டர்'' என்று அழுது அழைத்து, அடிக்கடி ஹரலாலின் மனத்தை அசைத்த அந்த வேணு இல்லை இன்று, அந்த வீடுமில்லை. இனிமேல் அந்த மாஸ்டர் மஷாயைப் பற்றி யார் நினைக்கப் போகிறார்கள்?

வேணுவை அடிக்கடி தன் வீட்டிற்கு அழைத்து வர

வேண்டுமென்று ஹரலாலுக்குத் தோன்றும். ஆனால் அவனை அழைக்கத் துணிவுதான் இல்லை. ஒரு சமயம், அவனை வரச் சொல்ல வேண்டுமென்று எண்ணுவான்; மறு சமயம் அதனால் என்ன லாபம் என்று தோன்றும். 'கூப்பிட்டால் வேணு விருந்துக்கு வராமல் போகான். ஆனால், இருக்கட்டும், பார்த்துக் கொள்ளலாம்' - இப்படி அவன் மனம் ஊசலாடியது.

ஹரலாலின் தாய்மட்டும் விடவே இல்லை. அடிக்கடி, ''நானே அவனுக்குச் சுவையான விருந்து உண்ணத் தருவேன். ஐயோ பாவம்! அம்மாவும் இல்லை அவனுக்கு'' என்பாள்.

கடைசியாக ஒரு நாள் ஹரலால் வேணுவை அழைக்கச் சென்றான். ''அதர் பாபுவிடம் நான் அநுமதி பெற்று வருகிறேன்'' என்றான் ஹரலால்.

அதற்கு வேணு, ''அநுமதி தேவை இல்லை; நான் இன்னும் அந்தப் பழைய குழந்தை என்று நினைக்கிறீர்களா?'' என்றான்.

ஹரலால் வீட்டில் வேணு விருந்துண்ண வந்தான். கார்த்திகேயக் கடவுளைப் போல் கண் நிறைந்த அழகுள்ள அவ்வினோதனை வரவேற்று, உபசரித்து உண்பித்தாள் அவன் தாய். அவள் மனம் அடிக்கடி துடித்தது: 'ஆகா! இந்த வயதில் இவன் தன் தாயைப் பறிகொடுத்து நிற்கவேண்டுமா? அவளுக்குத்தான் எப்படி இருந்ததோ, இவனைப் பிரிந்து செல்லும் போது?' என்று எண்ணினாள்.

விருந்து உண்ட பிறகு வேணு, ''மாஸ்டர் மஷாய், நான் இன்று சீக்கிரமாகப் போக வேண்டும். என்னுடைய நண்பர்கள் இருவர் என் வீட்டிற்கு வருவதாகச் சொன்னார்கள்'' என்றதும் சட்டை ஜேபியிலிருந்து தங்கக் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தான். அதன்பின் சுருக்கமாக விடை பெற்றுத் தன் கோச்சில் ஏறிக்கொண்டான். ஹரலால் தனி வீட்டுவாயில் அருகில் நின்றுகொண்டிருந்தான். அந்தச் சிறு சந்தையே குலுக்கிப்போடும் அளவுக்கு ஓசையை எழுப்பிக் கோச்சு வண்டி கணத்தில் கண்ணுக்கு மறைந்தது.

''ஹரலால், அவனை அடிக்கடி அழைத்து வாடா! இந்த வயதில் அவனை விட்டு அவனுடைய தாய் இறந்துபோனது என் மனசை என்னவோ பண்ணுகிறது'' என்றாள் தாய்.

ஹரலால் பேசவேயில்லை. தாயை இழந்த அவ்வினோதனுக்கு ஆறுதல் கூறுவதற்கு அவசியம் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. நெடுமூச்செறிந்து, 'போதும், இதனுடன் நிறுத்திக்கொள்ளலாம். இனிமேல் அழைக்கமாட்டேன்! ஒரு நாள் ஐந்தே ரூபாய்க்கு 'ட்யூஷன்' சொல்லிக்

கொடுத்தது என்னவோ உண்மை. நான் என்ன சாதரண ஹரலால்தானே?' என்று தன்னுள் எண்ணிக்கொண்டான்.

8

ஒரு நாள் மாலை நேரத்திற்குப் பின்பு, ஹரலால் அலுவல கத்திலிருந்து திரும்பி வந்தபொழுது, கீழே உள்ள அறையில் யாரோ உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான். அங்கே இருப் பவர் யார் என்பதைக் கவனியாது மாடிக்குச் செல்லக் கால் வைத்தான். கும்மென்று ஒரு நறுமணம் எங்கும் பரவி யிருப்பதை உணர்ந்து அறையின் கதவருகில் வந்து, ''யார்?'' என்றான். வேணு எழுந்து, ''மாஸ்டர் மஷாய், நான்தான்'' என்றான்.

''இதென்னப்பா? எப்போது வந்தாய்?'' என்று ஹரலால் கேட்டான்.

''வந்து நாழிகை ஆகிறது. இவ்வளவு நேரங் கழித்து ஆபீசிலிருந்து நீங்கள் வருவீர்களென்பது எனக்குத் தெரி யாது'' என்றான் வேணு.

வேணு, அந்த வீட்டுக்கு வந்து விருந்து உண்டு சென்ற பிறகு எத்தனையோ நாட்களாகின்றன. முன்னறிவிப்பு ஏது மின்றித் திடுமென அவன் மாலைநேரம், இந்த இருட்டறை யில் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டதும் ஹரலாலுக்கு மனத்தில் ஒருவித ஐயம் தோன்றியது.

மாடி அறைக்கு வந்தனர் இருவரும். ஹரலால் விளக்கு ஏற்றியதும், ''எல்லாம் நல்ல சமாசாரந்தானே? என்ன விசேஷமோ, இவ்வளவு தொலைவு நீ வந்தது?'' என்றான்.

''எனக்குப் படிப்புமீதே புத்தி ஓடவில்லை; வெறுப்பாக இருக்கிறது. எத்தனை ஆண்டுகள் நான் இந்த வகுப்பிலேயே இருப்பது? வயதில் என்னைவிடச் சிறியவர்களுடன் எப்படிச் சேர்ந்து படிப்பது? வெட்கமாக இருக்கிறது. அப்பா இதை உணரவே இல்லை'' என்றான் வேணு.

''உன் விருப்பந்தான் என்ன?'' என்று கேட்டான் ஹரலால்.

தன் விருப்பம் சீமைக்குச் சென்று பாரிஸ்டராகி வர வேண்டும் என்பதே என்று வேணு கூறினான்; தன்னைவிட வயதில் சிறியவனும், தன்னைப் போலவே சுமாராகப் படிப்ப பவனுமாகிய ஓர் இளைஞன் சீமைக்குச் செல்ல உறுதி பூண் டிருப்பதையும் வெளியிட்டான்.

''இந்த எண்ணத்தை உன் தந்தையிடம் கூறினையா?'' என்றான் ஹரலால்.

''சொன்னேன். 'பாஸ்' பண்ணுது போனுல் சீமைக்குச் செல்லும் பேச்சையே காதில் போடாதே என்று கூறிவிட்டார். இதனுல் என் மனம் இடிந்து போய்விட்டது. இங்கே இருந்தால் நான் ஒருபொழுதும் தேறப் போவதே இல்லே'' என்ருன் வேணு.

ஹரலால் பதில் பேசாமல் யோசனேயில் ஆழ்ந்தான்.

''இன்று அப்பா என்னே வாய்க்கு வந்தபடி திட்டி விட்டார். அதனுல்தான் நான் வீட்டைவிட்டு வந்துவிட்டேன். அம்மா மட்டும் உயிருடன் இருந்தால் இப்படியெல்லாம் நேரிட்டிருக்குமா?'' என்று கூறும்பொழுதே வேணு அழுது விட்டான்.

''வா, நாம் இருவரும் உன் அப்பாவிடம் போவோம். அவருக்கு எடுத்துச் சொல்லி இதற்கு ஒரு வழி தேடுவோம்'' என்ருன் ஹரலால்.

''முடியாது; நான் அங்கே வரமாட்டேன்'' என்ருன் வேணு.

தந்தைமீது கோபங் கொண்டு வேணு தன் வீட்டில் இருப்பது ஹரலாலுக்கு அவ்வளவு நல்லதாகப் படவில்லே. இந்த வீட்டில் தங்கக்கூடாதென்று அவனேச் சொல்லத்தான் முடியுமா? சற்றுப் பொறுத்தால், மனம் அமைதியுற்றதும் ஆறுதல் சொல்லி அவனே மெல்ல அவன் வீட்டிற்குக் கொண்டு விடுவதென்று நினேத்தான் ஹரலால். ''வேணு, நீ சாப்பிட்டாயா இல்லேயா?'' என்ருன்.

''எனக்குப் பசி இல்லே. இன்று நான் சாப்பிடப் போவதில்லே'' என்ருன் வேணு.

''அது எப்படி?'' என்றதும் ஹரலால் தாயிடம் சென்று, ''அம்மா, வேணு வந்திருக்கிருன். அவன் சாப்பிடவே இல்லே. ஏதாவது பண்ணு'' என்ருன்.

இதைக் கேட்டதும் அவள், மகிழ்ச்சியுடன் உணவு ஆக்க முற்பட்டாள். ஹரலால் அலுவலக உடையைக் களேந்து விட்டு முகம் கை கழுவிக்கொண்டு வேணுவிடம் வந்து உட்கார்ந்தான். சற்று இருமியதும், இப்படியும் அப்படியும் சிறிது நடந்துவிட்டு வேணுவின் தோள்மீது கை வைத்து, ''வேணு, நீ செய்த காரியம் அழகாயில்லே. அப்பாவுடன் சண்டை போட்டுவிட்டு வீட்டைத் துறந்து வந்தது உன் போன்றவனுக்கு ஏற்றதே யன்று'' என்ருன்.

இதைக் கேட்டதும் வேணு படுக்கையை விட்டெழுந்து, ''இங்கே நான் தங்குவது உங்களுக்கு அசௌகரியமாக இருந்தால், நான் ஜதீஷ் வீட்டிற்குப் போகிறேன்..'' என்றதும் போக நகர்ந்தான்.

ஹரலால் அவனைப் பற்றி, ''பொறு. வயிற்றுக்கு ஏதாவது சாப்பிடு, முன்னால்'' என்றான்.

வேணு கோபத்துடன், ''வேண்டியதில்லை. நான் சாப்பிட மாட்டேன்'' என்று விடுவித்துக்கொண்டு வெளியே போய்விட்டான்.

அதே சமயம், ஹரலாலுக்கென்று செய்த சிற்றுண்டியை ஒரு தட்டில் எடுத்து வைத்துக்கொண்டு ஹரலாலின் தாய் உள்ளே வந்தாள். ''எங்கே போகிறாய், அப்பா?'' என்று கேட்டாள் வேணுவை.

''எனக்கு வேலை இருக்கிறது; போகிறேன்''. என்றான் வேணு.

''இதென்னடாப்பா, சாப்பிடாமல் போகிறாயே?'' என்றதும் அவள் வராந்தாவில் ஓர் இலையைப் பரப்பி அதில் சிற்றுணவைப் பரிமாறி, வேணுவின் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள்.

வேணு கோபித்துக்கொண்டு தின்னவே இல்லை. இலையில் உள்ளதைக் கையால் தொட்டுக்கொண் டிருந்தான். அதே சமயம் வாயிலில் ஒரு வண்டி வந்து நின்ற ஓசை கேட்டது. முதலில் ஒரு வேலையாளும், அவன் பின்னால் அதர் பாபுவும் கட்கட் என்று படிகள் ஏறி உள்ளே நுழைந்தனர். வேணுவின் முகம் வெளுத்துவிட்டது.

ஹரலாலின் தாய் உட்புறம் நழுவிவிட்டாள். அதர் பாபு குரல் கோபத்தால் நடுங்க ஹரலாலை விளித்து, ''இப்போது புரிகிறது: ரதிகாந்தன் சொன்னது உண்மைதான். உனக்கு இந்த மாதிரி ஒரு கெட்ட எண்ணம் உண்டென்பதை நான் ஒரு சமயம் மறுத்தேன். வேணுவை வசம் செய்து கொண்டு அவனை அழிக்கப் பார்க்கிறாயா? அவ்வளவு தூரம் நான் விடமாட்டேன். என் பையனையா களவாடப் பார்க்கிறாய்? போலீசுக்குப் பிராது கொடுத்து உன்னைச் சிறைக்கு அனுப்பாமல் இருப்பேனா, பார்—'' என்றதும் வேணுவை நோக்கி, ''வாடா எழுந்து!'' என்றார்.

வேணு மூச்சு விடாமல் தன் தந்தையின் பின்னாலேயே போய்விட்டான். அன்று ஹரலாலின் சாப்பாட்டு வாயில் மண் விழுந்தது!

9

ஹரலாலின் கம்பெனியார் என்ன காரணத்தினாலோ ஊர்ப்புறங்களிலிருந்து ஏராளமாக அரிசியும் பருப்பும் வாங்கத் தலைப்பட்டனர். இதை வைத்து, ஹரலால் ஒவ்வொரு வார இறுதியிலும் சனிக்கிழமையன்று எண்ணூயிரம் ரூபாய்

தன்னுடன் எடுத்துக்கொண்டு வண்டியேறி ஊர்களுக்குப் போவது வழக்கம். முன்பு வாங்கிய சரக்குகளுக்குப் பணத்தைத் தீர்த்துக் கொடுத்துவிட்டு, நாட்டுப்புறத்தில் ஓரிடத்தில் தான் தங்கும் அலுவலக விடுதியில் அடுத்த வாரம் கொள்வினைக்காகப் பணத்தை வைப்பது வழக்கம். அவன் கூடவே அலுவலகத்தைச் சேர்ந்த காவலாட்கள் இருவர் செல்வார்கள். ''இவ்வளவு பெரிய தொகையாயிற்றே! ஹரலாலிடமிருந்து ஏதாவது ஜாமீன் வாங்க வேண்டாமா?'' என்ற கேள்வி அலுவலகத்தில் எழுந்தது. உடனே பெரிய துரை தாம் அதற்குப் பொறுப்பு ஏற்பதாகவும், ஹரலாலைக் கேட்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறிவிட்டார்.

மாசி மாதம் தொடங்கி இவ்வாறு வேலை நடந்து வந்தது. இது சித்திரை வரைக்கும் நடக்கும்போல் இருந்தது. இந்தக் கார்பாரில் அதிக ஊக்கம் செலுத்தினன் ஹரலால். கணக்கு வழக்குகளைச் சரி பார்க்க அலுவலகத்தில் இரவில் வெகு நேரம் வேலை செய்துவிட்டு வீடு திரும்புவான்.

இப்படி ஒரு நாள் அவன் திரும்பியபொழுது வேணு வந்திருப்பதைக் கண்டான். அவனுடைய தாய் வேணுவுக்குப் பரிந்து உண்பித்தாள். அன்று பல விஷயங்களைப்பற்றிப் பேசினன் வேணு. அவனிடம் ஹரலாலுக்கு அன்பின் வேகம் பன்மடங்காகியது.

இதுபோல் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. ''வீட்டில் அம்மா இல்லை, பாவம்; அதனால் அவன் மனசு அங்கே நிற்கவில்லை. வேணுவை உன் தம்பியாகவே நினைத்துவிட்டேனடா. என் வயிற்றுப் பிள்ளையாகவே அவனைப் பாவிக்கிறேன். அவனும் என்னை அன்புடன், 'அம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டே வருகிறான்...'' இவ்வாறு கூறி ஹரலாலின் தாய் முன்தானையால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

ஹரலால் ஒரு நாள் வேணுவைப் பார்க்க நேர்ந்தது. அன்று அவனை எதிர்நோக்கியே இருந்தான். இரவு வெகு நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். ''வர வர அப்பாவின் குணமே மாறிவிட்டது. எனக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. யாரையோ அவர் மணம் செய்து கொள்ளப் போவதாகக் கேள்விப்பட்டேன். ரதிகாந்தன் ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்திருப்பதாகத் தெரிகிறது. அவனுடன்தான் எந்த நேரமும் யோசனை கேட்கிறார். முன்னெல்லாம் நான் எங்கேயாவது போய்த் திரும்பி வர நேரமாகிவிட்டால், அப்பா திகில்படுவார்; இப்பொழுது நான் சேர்ந்தாற்போல் நாலைந்து நாட்கள் வராதிருந்தால்கூட அவ

ருக்கு நிம்மதியாக இருக்கும் போல் தோன்றுகிறது. நான் வீட்டிலேயே இருந்தால் இந்த மணப் பேச்சுக்கு இடையூருக நிற்பதாக நினைக்கிறார். நான் வெளியே சென்றால் ஆறுதல் மூச்சு விடுகிறார். இந்த விவாகம் நடந்தால் நான் அந்த வீட்டில் நிற்கவே மாட்டேன். இதிலிருந்து மீள்வதற்கு எனக்கு ஏதாவது வழி காட்டுங்கள். நான் யதேச்சையாக இருக்கவே விரும்புகிறேன்'' என்றான் வேணு.

அன்பும் வேதனையும் ஹரலாலின் இதயத்தை நிரப்பிக் கொண்டன. இடுக்கண் உற்றபொழுது மற்றவர்களை நம்பாமல் ஆசை மாணவன் தன்னை அண்டுவதைப் பார்த்து ஹரலால் மனத்துள் வருந்தினாலும் இன்பமே கொண்டான். ஆனால் ஒரு மாஸ்டர் மஷாயால் என்ன ஆகும்?

''எப்படியாவது நான் சீமைக்குச் சென்றால் போதும். இந்தத் துன்பத்திலிருந்து மீண்டவனாவேன்'' என்றான் வேணு.

''அதர் பாபு உன்னைப் போகவிடுவாரா?'' என்றான் ஹரலால்.

''நான் ஒழிந்து போனாலே அவர் மனம் குளிர்ந்து போகுமே; ஆனால் பணம் என்றால் ஆள் மிகவும் அழுத்தம்; தம்படி பெயராது. ஏதாவது சூழ்ச்சி செய்ய வேண்டும் இதற்கு'' என்றான் வேணு.

ஹரலால் வேணுவை நோக்கிச் சிரித்து, ''என்ன சூழ்ச்சியோ?'' என்றான்.

''நான் வெண்ணிலையாகக் கடன் வாங்குவேன். கடன் கொடுத்தவன் தொகையை வசூலிக்க வருகையில் அப்பா அதைக் கொடுத்துத் தீர்த்துவிடுவார். அந்தப் பணத்தைக் கொண்டு சீமைக்கு விட்டடிப்பேன். நான் அங்கே போய் விட்டால் மாதம் என் பெயருக்கு ஏதாவது தொகையை அனுப்பாமல் போக மாட்டார்'' என்றான் வேணு.

''உனக்குக் கடன் கொடுப்பவர் யார்?'' என்றான் ஹரலால்.

''உங்களால் முடியாதா இந்தச் சகாயம் செய்ய?'' என்றான் வேணு.

''நானா!''—அதற்குமேல் வார்த்தை எழவில்லை ஹரலாலிடமிருந்து.

''ஏன், உங்களுடைய ஆபீசு வேலையாள் ஒரு பை நிறைய ரூபாய் கொண்டு வைத்தானே!'' என்றான் வேணு.

ஹரலால் சிரித்து, ''அந்த வேலையாள் எனக்கு எவ்வளவு சொந்தமோ, அந்தப் பணமும் அவ்வளவு சொந்தம்'' என்றதும், தான் வைத்திருக்கும் பணத்தைப்பற்றிய விஷயத்தை வேணுவுக்கு விளக்கினான். ஓர் இரவு நேரம்வரை அது

வறியவன் வீட்டில் அடைக்கலம் புகுந்துள்ளது; பொழுது விடிந்ததுமே பல திசையிலும் பரவிச் சென்றுவிடும்!

''உங்களுடைய துரை எனக்குக் கடனுகப் பணம் தர மாட்டாரா? வேண்டுமானுல் நான் அவர் கேட்கும் வட்டி போட்டுத் தருகிறேன்'' என்ருன் வேணு.

''உன் தகப்பனுர் உத்தரவாதம் தந்தால் ஒரு வேளை, என் வேண்டுகோளுக்கு இணங்கித் தரக்கூடும்'' என்ருன் ஹரலால்.

''உத்தரவாதம் கொடுக்கும் அளவுக்கு அவர் இருந்தால், பணமே கொடுத்துவிடுவாரே எனக்கு'' என்ருன் வேணு.

வாதம் இத்துடன் முடிவாகியது. 'எனக்குமட்டும் ஏதாவது சொத்து இருந்தால் அதை விற்று இவனுக்கு உதவு வேன். ஆனுல் இல்லையே!' என்று தனக்குள் வேதனைப் பட்டான் ஹரலால்.

10

ஒரு வெள்ளிக்கிழமை இரவு ஹரலாலின் வீட்டு வாயி லில் கோச்சு வண்டி வந்து நின்றது. வேணு வண்டியிலிருந்து இறங்கியதுமே ஹரலாலின் அலுவலக வேலையாள் அவனுக்குச் சலாம் செய்து, மாடியில் காரியத்தில் கவனமாக இருக்கும் ஹரலாலுக்கு அறிவித்தான். அப்போது ஹரலால் தன் படுக்கையறையில் கணக்குப் பார்த்துப் பணத்தை எண்ணி வைத்துக்கொண் டிருந்தான். வேணு உள்ளே நுழைந்தான். அன்று அவன் பூண்டிருந்த உடை புது வகையாக இருந்தது. வெள்ளைத் துணியும், சாதருக்குப் பதிலாகப் 'பார்' கோட் டும், 'பான்ட்'டும் தலையில் தொப்பியுமாகக் காட்சி அளித்தான். அவன் இரு கைவிரல்களிலும் வயிர மோதிரங்கள் பளபளத் தன. கழுத்தைச் சுற்றி வளைத்துத் தொங்கும் தங்கச் சங்கிலியில் பிணைத்த கடிகாரம் ஜேபிக்குள் இருந்தது. சட்டையில் வயிரப் பித்தான்கள் ஜொலித்தன. ஹரலால் பணம் எண்ணுவதை நிறுத்தி வேணுவையே வியப்புற நோக்கி, ''என்ன சமாசாரம்? இந்த இரவில் இப்படித் தடபுடலாகக் காட்சி தருகிறுயே?'' என்ருன்.

''நாளைக்கு மறு நாள் அப்பாவுக்கு விவாகம். என்னிடம் அதை மறைத்து வைத்திருந்தார். ஆனுல் எனக்கு விஷயம் தெரிந்துவிட்டது. சில நாட்களுக்கு நான் பாராக்புரிலுள்ள எங்கள் மாளிகையில் இருக்க விரும்புவதாக அப்பாவிடம் கூறினேன். அதைக் கேட்டு அவர் நிரம்ப மகிழ்ச்சி அடைந் தார். அதுதான் கிளம்பிவிட்டேன். திரும்பி வரவே கூடா தென்ற உறுதி கொண்டு விட்டேன். கங்கையில் விழுந்து

மூழ்கிப் போய்விடலாமா என்றுகூட எனக்குத் தோன்றுகிறது'' இதைக் கூறும்பொழுதே வேணு கோவென்று அழுதுவிட்டான். ஹரலாலின் இதயத்துள் கத்தியால் குத்தியதுபோல் இருந்தது. திடுமென முன்பின் தெரியாத ஒருத்தி வீட்டினுள் வந்து, தன் தாயின் இடத்தைப் பிடித்துக்கொண்டு, அவள் படுத்திருந்த கட்டிலில் படுத்தால் வேணுவுக்கு எப்படி இருக்கும்! இதுவரை அன்பின் நினைவுகள் பின்னியிருந்த அந்த வீடு முன்போலவே அவன் இதயத்தை உறுத்தும் அல்லவா?— இப்படி ஹரலாலின் உள்ளம் தாபத்தால் துடித்தது. உலகில் செல்வம் நிரம்பிய குடியில் பிறப்பினும் துன்பம் எவரையும் விடாது போலும்! வேணுவை எவ்வழியில் சமாதானப் படுத்துவது என்பது தெரியாமல் தவித்தான் ஹரலால்.

அவனுடைய கையைத் தன் கைக்குள் அடக்கிக்கொண்டான் ஹரலால். இதைச் செய்யும்போது அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது. இத்தனை வேதனையை அநுபவிக்கும் பொழுது வேணு தடபுடலாக உடை அணியக் காரணமென்ன?

ஹரலால் வேணுவின் விரலில் உள்ள மோதிரத்தைப் பார்த்தபோது வேணு அவன் உள்ளத்தில் செல்வதைப் புரிந்துகொண்டு, ''இந்த மோதிரங்கள் என் அன்னைக்குச் சொந்தமானவை'' என்றான்.

கண்ணில் ஊறும் நீரைத் தடுத்துக்கொண்டான் ஹரலால். சிறிது நேரம் பொறுத்து, ''நீ சாப்பிட்டாயா இல்லையா, வேணு?'' என்றான்.

''ஆகிவிட்டது; நீங்கள் சாப்பிட்டீர்களா?'' என்று கேட்டான் வேணு.

''இந்தப் பணத்தை எண்ணி இரும்புப் பெட்டியில் சேர்க்கும் வரையில் நான் வெளியே வர முடியாதே!'' என்றான் ஹரலால்.

''நீங்கள் சாப்பிட்டுவிட்டு நிதானமாக வாருங்கள். உங்களுடன் எவ்வளவோ பேச வேண்டியது இருக்கிறது. நான் இங்கேயே இருக்கிறேன். அம்மா உங்களுக்காகச் சாப்பாட்டை வைத்துக்கொண்டு காத்திருக்கிறாள்'' என்றான் வேணு.

ஹரலால் இப்படியும் அப்படியும் சென்று, ''இதோ சாப்பிட்டுவிட்டு நொடிப் பொழுதில் வந்துவிடுகிறேன்'' என்றான்.

ஹரலால், இரண்டு வாயாக அள்ளிச் சாப்பிட்டானதும் தன் அன்னையுடன் அறையினுள் வந்தான். வேணு அவள் காலடியில் வணங்கினான். அவன் மோவாயைத் தொட்டு அவள் முத்தமிட்டாள். ஹரலாலிடமிருந்து சமாசாரத்தையெல்லாம் கேட்டதும் அவள் இதயம் விண்டுவிடுவது போல்

ஆயிற்று. தன் அன்பையெல்லாம் வேணுவுக்குத் தந்து அவன் தாய் விட்ட குறையைப் பூர்த்தி செய்யத் தன்னால் முடிய வில்லையே என்பதுதான் அவள் மனத்துயர்.

நாற்புறமும் சிதறிக் கிடக்கும் பணக் குவியலுக்கிடையே மூன்று பேரும் அமர்ந்து வேணுவின் சிறுபிராயத்து விஷயம் பற்றிப் பேசிக்கொண் டிருந்தனர் - மாஸ்டர் மஷாயுடன் இணைந்த எத்தனையோ நிகழ்ச்சிகள்; அவற்றிற்கிடையே எல்லையற்ற அன்பின் களஞ்சியமான அவனுடைய அன்னையின் விஷயமும் நுழைந்துவிடும்.

இவ்வாறு இரவு வெகு நேரமாகிவிட்டது. சட்டென வேணு தன் கடிகாரத்தில் மணி பார்த்து, ''நேரமாகிறது. கடைசியில் வண்டி தப்பிவிடும்'' என்றான்.

ஹரலாலின் தாய், ''அப்பனே, இன்று இரவுப் பொழுது இங்கேயே இருந்துவிட்டுப் போயேன். காலையில் ஹரலாலும் உன்னுடன் வருவான்'' என்றாள்.

வேணு கெஞ்சும் குரலில் ''எதற்கம்மா? இன்றிரவே நான் போயாக வேண்டும்'' என்றான். ஹரலாலைப் பார்த்து அவன், ''மாஸ்டர் மஷாய், போகிற இடம் எப்படி இருக்குமோ! இந்த மோதிரம், கடிகாரம் யாவும் உங்களிடமே விட்டுச் செல்கிறேன். திரும்பியதும் வாங்கிக்கொள்கிறேன். வேலையாளை அனுப்பி, வண்டியில் இருக்கும் என்னுடைய தோல் பையை எடுத்து வரச் சொல்லும். அதனுள் இவற்றை வைத்து விடுகிறேன்'' என்றான்.

அலுவலக வேலையாள் வண்டியிலிருந்து தோற்பையை எடுத்து வந்தான். வேணு, தங்கச் சங்கிலி, கடிகாரம், மோதிரம், வயிரப் பித்தான் இவற்றையெல்லாம் கழற்றி அந்தப் பையில் வைத்துவிட்டான். அதிக ஜாக்கிரதையுள்ள ஹரலால் அந்தப் பையை உடனே இரும்புப் பெட்டியில் பத்திரப்படுத்திவிட்டான்.

வேணு. ஹரலால் அன்னையின் பாததூளியை ஏற்றுக் கொண்டான். அவளும் குரல் தழுதழுக்க ஆசி கூறி, ''ஜக தம்பிகை உனக்குத் துணை புரிவாள், அப்பனே'' என்றாள்.

ஹரலாலின் காலைத் தொட்டு ஒற்றிக்கொண்டான் வேணு. இதுபோல் அவன் என்றுமே ஹரலாலை வணங்கியதில்லை. ஹரலால் எதுவுமே பேசாமல் வேணுவின் முதுகில் கை வைத்து வழியனுப்ப அவனுடன் கீழே இறங்கி வந்தான். வாயிலில் நின்ற கோச்சு வண்டியின் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. குதிரைகள் கிளம்பக் குளம்பைத் தரையில் தேய்த்தன. அந்த இருளிடையே வேணுவை ஏற்றிக்கொண்டு அந்த வண்டி மறைந்தே விட்டது.

தன் அறைக்கு வந்து ஹரலால் வெகு நேரம் வரை பேசாமல் இருந்தான். பின்பு, ஒரு பெருமூச்சு எறிந்ததும், கீழே கிடக்கும் பணத்தை எண்ணிப் பைக்குள் நிரப்பலானான். முன்பே நோட்டுக்களை எண்ணிக் கற்றையாகக் கட்டி இரும்புப் பெட்டியிலுள்ள சிறிய அறைக்குள் அடக்கிவிட்டான்.

11

இரும்புப் பெட்டியின் சாவியைத் தன் தலையணையின் கீழ் வைத்துப் பணம் உள்ள அந்த அறையிலேயே ஹரலால் அன்றிரவு படுத்துக்கொண்டான். நன்றாகத் தூக்கம் வரவில்லை அவனுக்கு. ஒரு கனவு கண்டான்; வேணுவின் தாய், திரை மறைவிலிருந்து தன்னை உரத்த குரலில் திட்டுகிறாள்; அவள் சொல்லுவது எதுவுமே தெளிவாகக் கேட்கவில்லை. அவளுடைய குரலுடன் அந்த வயிரம், பச்சைக் கற்களால் ஆன மோதிரங்கள் விடும் வண்ண ஒளி, மெல்லிய ஊசிகளைப் போல் அந்த இருண்ட திரையைக் குத்தி அசைக்கிறது. ஹரலால் தன் பலம் கொண்ட மட்டும் குரலை உயர்த்தி வேணுவை அழைக்கப் பார்க்கிறான். ஆனால் ஓசை அவன் தொண்டையிலிருந்து வெளியே வரவில்லை. அச்சமயம் பயங்கர சத்தத்துடன் என்னவோ விந்தூது திரையைக் கிழித்துவிடுகிறது. திடுக்கிட்டு எழுந்தான் ஹரலால். இருட் படலமே அவன்முன் தோன்றியது. திடுமென ஒரு வெறிக் காற்று கதவு சாளரமெல்லாம் உலுக்கிச் சென்றது. பட்டென விளக்கு அணைந்துவிட்டது. ஹரலாலுக்கு வியர்த்துக் கொட்டியது. அவன் சரேலென எழுந்து வர்த்திக் குச்சியைக் கொளுத்தினான். அந்த ஒளியில் கடிகாரத்தில் மணி நாலு என்பது தெரிந்தது. இனிமேல் தூக்கம் வருமா? பணத்தை எடுத்துக்கொண்டு தன் அலுவலை நோக்கிச் செல்லத் தயாரானான்.

ஹரலால் முகம் கழுவிக்கொண்டு வந்தபோது அவன் அன்னை, ''எழுந்துவிட்டாயா என்ன?'' என்றாள்.

விடியற்காலையில் கண் விழித்ததுமே அன்னையின் முகத்தில் அவன் முதல்முதல் விழிப்பது வழக்கம். அவளும் அவனுக்கு ஆசி கூறி, ''இப்போதுதான் கனவு கண்டேனடா, புது மருமகளை அழைத்துவரப் போகிறாய் நீ....விடிகாலையில் கண்ட சொப்பனம் பொய்யாகாது'' என்றாள்.

ஹரலால் சிரித்துக்கொண்டே தன் அறையில் நுழைந்தான். ரூபாயும் நோட்டுகளும் அடங்கிய பைகளை இரும்புப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்துத் தன் கைப் பெட்டியில் அடக்கி வைத்தபோது, அவனுக்குத் திக்கென்று வாரிப்போட்

டது. மூன்று பைகளில் அடக்கியிருந்த நோட்டுக்கற்றை களைக் காணவில்லை. கனவுதான் காண்கிறோமா என்று அவனுக்குத் தோன்றியது. அந்தப் பைகளை இரும்புப் பெட்டி மீது இரண்டு மூன்று முறை தட்டிப் பார்த்தான். அவை காலி என்பதற்கு அத்தாட்சி கூறின. அசட்டுப் புத்தி விடுகிறதா, இரண்டு மூன்று தரம் பைகளைக் கவிழ்த்து, உதறிப் பார்த்தான். அதனுள் கிடந்த இரண்டு கடிதங்கள் கீழே பொட்டென விழுந்தன. வேணுவின் கையெழுத்துத் தான் - ஒன்று அவன் தந்தைக்கு எழுதியது; மற்றொன்று ஹரலாலுக்கு.

பரபரவென்று அவற்றைப் பிரித்துப் படித்தான். வெளிச்சம் போதாததால் எழுத்துக்கள் தெளிவாகப் புரியவில்லை. விளக்கின் திரியைத் தூண்டினான். அவற்றில் உள்ளவை அவனுக்குச் சற்றும் புரியவில்லை. வங்க மொழியையே மறந்து விட்டதுபோல் தோன்றியது அவனுக்கு.

விஷயம் இதுதான்: வேணு மூன்று ஆயிரம் அளவிற்குப் பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துக்கொண்டு சீமைக்குப் பயணமாகிவிட்டான். அன்று காலையில் அவன் செல்லும் கப்பல் புறப்படுகிறது. ஹரலால் சாப்பிடச் சென்ற சமயம் பார்த்து வேணு இந்த வேலையைச் செய்துவிட்டான். கடிதத்தில் தன் தந்தைக்கு ஒரு கடிதம் வைத்திருப்பதாகவும், அவர் அந்தக் கடனைத் தீர்த்துவிடுவார் என்றும் அவன் ஹரலாலின் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். மேலும், தோல் பையைத் திறந்து பார்த்தால் தன் அன்னையின் நகைகள் கிடைக்கும்; அவற்றின் மதிப்புத் தனக்கு தெரியாது; மூன்றாயிரத்துக்கு மேல் மதிப்புள்ளனவாக இருக்கலாம்; அம்மா உயிருடன் இருந்தால் இப்படி விட்டிருக்க மாட்டாள்; தந்தை அனுப்ப மறுத்தாலும் தன்னை அவள் இந்த நகைகளை விற்றாவது சீமைக்கு அனுப்பி இருப்பாள்; தன் அன்னையின் நகைகளை வேறொருத்தி அணிவதைத் தன்னால் சகிக்க முடியாது; தந்தை கடனைத் தீர்க்கத் தவறினால் அந்த நகைகளை விற்றே அடகு வைத்தோ பணம் பார்த்தி செய்யலாம் - இப்படியெல்லாம், இன்னும் சம்பந்தமற்ற விஷயங்கள் அந்தக் கடித வாயிலாக வெளியாயின.

ஹரலால் அறைக் கதவைப் பூட்டிவிட்டு ஒரு வண்டியை அமர்த்தி அதில் ஏறிக் கப்பல் துறையை நோக்கி விரைந்தான். வேணு செல்லும் கப்பலின் பெயர்கூட அவனுக்குத் தெரியாது. மேடியாபுருஜ் என்ற இடம்வரை ஓடி விசாரித்த போது அதிகாலையிலேயே இரண்டு கப்பல்கள் கிளம்பிப் போன சமாசாரம் கிடைத்தது. அவை இரண்டும் சீமைக்குச் செல்

வன. அவற்றில் எதில் வேணு சென்ரூன் என்பது மனித ஊகத்துக்குப் புறம்பானது. கப்பலைப் பிடிக்க வழியிராமல் போகவே, ஹரலாலுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை.

மேடியாபுருஜிலிருந்து அவன் வண்டியில் தன் வீட்டிற்குத் திரும்பியபொழுது வெயில் ஏறிக் கல்கத்தா நகரம் கலகலப் பாக விளங்கியது. ஹரலாலின் கண்ணுக்கு எதுவுமே தெளி வாக இல்லை. திசை தப்பியவன், மூளை கலங்கியவன், தன்னை எதிர்த்து நிற்கும் ஒரு விபரீதத்தைத் தள்ளிக் கரையேறத் தவிப்பவனைப் போலவே இருந்தான். ஆனால் கால் ஊன்றுவதற்கு எள்ளளவும் இடம் கிடைத்தால்தானே? வீட்டுக்குத் திரும்பியபோது அன்னையைக் கண்டதும், அவ னுடைய சோர்வு யாவும் விலகிப் போகும்; பெரிய பெரிய தொல்லைகளை மறந்து போவான். இன்று வீட்டெதிரே வண்டி வந்து நின்றதும், வாடகையைத் தீர்த்துவிட்டு, அவன் உள்ளே புகுந்தபோது, நிராசையும், நடுக்கமுமே கொண்டான்.

தாய் மனவேதனையுடன் அவன் வரவை வராந்தாவில் இருந்தபடியே எதிர்நோக்கி யிருந்தாள். ''அப்பா, சொல்லா மல் எங்கே போய்விட்டாய்?'' என்றாள்.

''போயிருந்தேன், உனக்கு ஒரு நாட்டுப் பெண்ணைக் கொண்டுவர'' என்றதும் வறண்ட சிரிப்புச் சிரித்து, நின்ற இடத்திலேயே மயக்கம் போட்டுச் சாய்ந்தான்.

''என்னடா அப்பனே உனக்கு? ஐயோ!'' என்று அவள் கதறி, சட்டெனக் குளிர்ந்த நீரை எடுத்து வந்து அவன் முகத்தில் தெளித்தாள்.

சற்றுப் பொறுத்து ஹரலால் விழித்துத் தன்னைச் சுற்றி லும் ஒரு சூனியம் நிலவுவதையே பார்த்தான். ''அம்மா, திகில்படாதே. என்னைச் சற்றுத் தனிமையாக இருக்க விடு'' என்றான். அவன் தன் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டான்.

அவனுடைய தாய், அறையின் வாயிற்படியிலேயே தலையை வைத்து, ''அப்பா, ஹரலால், அப்பா ஹரலால்!'' என்று மகனை அழைத்துக்கொண்டே இருந்தாள்.

''அம்மா, சற்றுப் பொறுத்தே நான் வெளியே வருவேன்; நீ போயேன்'' என்றான் ஹரலால்.

அவனுடைய தாய் வெயிலில் அந்த இடத்தில் உட் கார்ந்து ஜபம் செய்யத் தொடங்கினாள்.

ஆலுவலக வேலையாள் வந்து கதவைத் தட்டி, ''பாபு, இப்போதே கிளம்பாது போனால், வண்டி கிடைக்காது'' என்றான்.

ஹரலால் அறையிலுள்ளிருந்து, ''ஏழு மணி வண்டியைப் பிடிக்க முடியாது'' என்றான்.

வேலியாள், ''ஆனால் எப்போது புறப்படவேண்டும்?'' என்றான்.

ஹரலால், ''அதை அப்புறம் சொல்லுகிறேன்'' என்றான்.

வேலியாள் தலையசைத்துக் கையை உருட்டிக் கீழே இறங்கிச் சென்றான்.

'இதை யாரிடம் சொல்லுவது? இது களவன்றே? வேணுவைப் பிடித்துச் சிறையில் வைப்பதா?' என்றெல்லாம் ஹரலால் எண்ணமிட்டான்.

சட்டென்று அந்த நகைகளின் கவனம் வந்தது அவனுக்கு. அந்த விஷயத்தை அவன் மறந்தே போய்விட்டான். ஒளி கிடைத்துவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. தோற்பையைத் திறந்து பார்த்தான். அதனுள் வெறும் மோதிரமோ, கடிகாரமோ பித்தானோ, சங்கிலியோ மட்டும் இல்லை - வங்கி, முத்துமாலை, வயிர ராக்கொடி இன்னும் விலை மதிப்புள்ள பல அணிகலங்கள் இருந்தன. அவற்றின் மதிப்பு மூவாயிர ரூபாய்க்கு மேலும் இருக்கும். 'ஆனால் இவையும் திருட்டுச் சொத்தோ என்னவோ? இவை வேணுவுக்குச் சொந்தமானவையோ? இந்தத் தோற்பை வீட்டில் இருந்தால் இதனால் வேறு தொல்லை ஏற்படுமோ?—' இப்படியெல்லாம் அவன் மனம் அலை பாய்ந்தது.

அதற்குமேல் நேரத்தை வீணுக்காமல் அதர் பாபுவுக்கு வேணு எழுதிவைத்த கடிதத்தையும், அந்தத் தோற்பையையும் எடுத்துக்கொண்டு ஹரலால் அறையிலிருந்து வெளியே சென்றான்.

''எங்கே அப்பனே போகிறாய்?'' என்றாள் அவன் தாய்.

''அதர் பாபு வீட்டுக்கு அம்மா—'' என்றான் ஹரலால்.

அவனுடைய அன்னையின் நெஞ்சை அழுத்திய ஒரு பயச் சுமை அப்போதுதான் இறங்கியது. வேணுவின் தந்தை, மறுபடியும் மணம் செய்துகொள்ளும் செய்தியைக் கேட்டுத்தான் தன் மகனின் மனம் இப்படி இடிந்து போக நேரிட்டது. ஆகா, வேணுவிடம் அவனுக்குத்தான் என்ன அன்பு - இவ்வாறு அவள் நினைத்தாள்.

'இன்று நீ வெளியூருக்குப் போகமாட்டாயே?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை'' என்றதும் ஹரலால் விரைவாக வெளியே சென்றான்.

அதர் பாபுவின் வீட்டை அடைவதற்கு முன்பே மேள

தாளங்களின் ஆர்ப்பாட்டம் காதைப் பிளந்தது. ஆனல் ஹரலால் உள்ளே சென்றபொழுது, விவாக விழாக் கோலத் துடன் ஓர் அமைதியின்மையும் கலந்து இருந்தது. வாயிலில் பலத்த பாரா. வெளியே எவருமே வரமுடியாமல் இருந்தனர். எவர் முகத்திலும் ஒரு பயக் குறியும், வாட்டமும் தென்பட் டன. முன்னுள் இரவு வீட்டில் பல ஆயிரம் ரூபாய் மதிப் புள்ள நகைகள் களவாடப்பட்டன என்று ஹரலாலுக்குத் தெரிந்தது. இரண்டு மூன்று வேலையாட்கள்மீது ஐயம் ஏற் பட்டு அவர்களைப் போலீஸ் வசம் ஒப்படைக்க இருந்தனர்.

ஹரலால் அவ்வீட்டு மாடி வராந்தாவுக்கு வந்தான். அங்கே அதர் பாபு கண்டவர் பேரில் எரிந்து விழுவதைப் பார்த்தான். பக்கத்தில் ரதிகாந்தன் ஹுக்காவிலிருந்து புகை குடித்துக்கொண்டிருந்தான். ஹரலால், அதர்பாபுவை நோக்கி, ''உங்களுடன் ஒரு முக்கிய விஷயம் பேசவேண்டும்'' என்ருன்.

அதர்பாபு சள்ளென்று, ''இப்போது உன்னுடன் பேச அவகாசமில்லை. ஏதாவது உண்டானுல் சட்பட்டெனக் கூறி விட்டுப் போ'' என்ருர். தம்மிடம் ஏதாவது உதவியைக் கோரித்தான் அவன் வந்தானென்று நினைத்தார் அதர்பாபு.

ரதிகாந்தன், ''என் முன்னுல் பாபுவுடன் உங்கள் குறை யைச் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டால், நான் எழுந்து போகிறேன்'' என்ருன்.

அதர் பாபு அப்போது, ''நீ உட்காரப்பா'' என்ருர்.

''நேற்று இரவு வேணு என் வீட்டுக்கு வந்து இந்தத் தோற் பையை வைத்துச் சென்ருன்'' என்று ஹரலால் பேச்சை எடுத்தான்.

அதர், ''பையில் என்ன இருக்கிறது?'' என்ருர்.

ஹரலால் பையைத் திறந்து அவரிடம் தந்தான்.

அதர், ''மாஸ்டரும் மாணவனும் சேர்ந்துகொண்டு வியா பாரம் ஆரம்பித்துவிட்டீர்கள் போல் தெரிகிறது. இந்தக் கள்ளச் சொத்தை வெளியே விற்கச் சென்ருல் பிடித்துவிடு வார்கள் என்று பயந்துகொண்டு வந்திருக்கிருய். போன சொத்துத் திரும்பியதற்கு என்னிடம் இனும் ஏதாவது கேட்க வந்தாயா?'' என்ருர்.

அப்பொழுது ஹரலால் அதர்பாபுவிடம் ஒரு கடிதத் தைத் தந்தான். அதைப் படித்ததும் அவர் கோபாவேசம் கொண்டு, ''போலீசுக்கு இப்போதே தெரிவிக்கப் போகிறேன். என் பிள்ளை இன்னும் வயது வந்தவன் அல்ல - அவனை வசியம் செய்துகொண்டு சீமைக்குக்கூட அனுப்பிவிட்டாயா? உன்னி டம் ஐந்நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு மூன்று ஆயிரத்துக்

குக் கையெழுத்து இட்டிருப்பான். இந்தக் கடனை நான் தீர்க்கமாட்டேன்'' என்றூர்.

''நான் கடன் கொடுக்கவில்லை'' என்றூன் ஹரலால்.

''பின் எங்கிருந்து அவனுக்குப் பணம் கிடைத்தது? உன் இரும்புப் பெட்டியில் கை வைத்தானு?'' என்றூர் அதர்லால்.

அந்தக் கேள்விக்கு ஹரலால் மறுமொழியே பகரவில்லை. ரதிகாந்தன் குத்தலாக, ''இதெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? மூன்று ஆயிரத்துக்குப் போவானேன்? இவர் தம் வாழ்நாளில் அவ்வளவு தொகையை எங்கே பார்த்திருக்கிறூர்'' என்றூன்.

நகை களவுபோனதை யொட்டி, வேணு சீமைக்குப் போய் விட்ட செய்தி வீட்டில் இன்னும் குழப்பத்தை உண்டாக்கி யது. ஹரலால் எல்லாப் பிழைகளையும் தன் தலைமேல் போட் டுக்கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியே வந்தான்.

தெருவில் வந்து நின்றபொழுது சிந்திக்கும் சக்திகூடத் தனக்குப் போய்விட்டதுபோல் தோன்றியது அவனுக்கு. இதன் விளைவு என்னவாகுமென்பதைப்பற்றி நினைக்கவே அவ னுல் இயலவில்லை. தன் சந்து வீட்டை அணுகியபோது வாச லில் ஒரு வண்டி நிற்பதைக் கண்டான். திடுக்கிட்டான். வேணுதான் திரும்பி வந்துவிட்டானே.....கட்டாயம் வேணுதான்! தனக்கு நேர்ந்த இன்னல் இப்படித் தீரு மென்று, இவ்வளவு தூரத்துக்குப் போய்விடுமென்று அவன் நம்பவே இல்லை.

வண்டியருகில் வந்தான். அதனுள் தன் அலுவலகத் தைச் சேர்ந்த துரை ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண் டான். ஹரலாலைப் பார்த்ததும் அந்தத் துரை கீழே இறங்கி அவன் கையைப் பற்றி வீட்டினுள் சென்றூன். ''இன்று ஏன் நீ வெளியூருக்குப் போகவில்லை?'' என்று கேட்டான்.

அலுவலக வேலையாள் ஏதோ சந்தேகம் தோன்றவே, பெரிய துரையிடம் சமாசாரத்தை அறிவித்துவிட்டான். அவர்தாம் இந்த ஆளை அனுப்பியது.

''மூன்று ஆயிரத்துக்கு நோட்டுக்கள் காணவில்லை'' என் றூன் ஹரலால்.

''எங்கே போயின?'' என்றூன் வந்தவன்.

''தெரியவில்லை'' என்றதும் அதற்குமேல் பேசாமல் கம் மென்று இருந்தான் ஹரலால்.

''பணத்தை எங்கே வைப்பது வழக்கம்?'' என்று கேட் டான் வந்த ஆள்.

ஹரலால் அவனை மாடி அறைக்கு அழைத்துச் சென்றூன். இரும்புப் பெட்டியிலிருந்த பணத்தை மீண்டும் கீழேகொட்டி வந்தவன் கவனமாக எண்ணிப் பார்த்தான். ஒவ்வொரு

மூலை முடுக்கும் தடவிப் பார்த்தான். இப்படி ஒரு விஷயம் வீட்டில் நடப்பதைக் கண்டு ஹரலாலின் தாய், வந்தவன் முன்னிலேயே, ''என்னடா அப்பனே ஹரலால்? இதெல் லாம் என்ன?'' என்றாள்.

''அம்மா, பணம் களவு போய்விட்டது'' என்றான் ஹர லால்.

''எப்படிக் களவு போகும்? இந்த அநியாயம் யார் செய்தார்களடா!'' என்றாள் அவள்.

''அம்மா, நீ வாயை மூடேன்'' என்றான் ஹரலால்.

ஓரிடம் பாக்கிவிடாமல் தேடியானதும் வந்தவன், ''இந்த அறையில் இரவு உன்னிடம் வேறு யாராவது இருந்தார்களா? என்று கேட்டான்.

''கதவை மூடிக்கொண்டு நான் ஒருவனே படுத்திருந் தேன். வேறு யாரும் இல்லையே!'' என்றான் ஹரலால்.

வந்தவன் மிகுந்து இருந்த பணத்தைத் தன்னுடன் எடுத் துக்கொண்டு ஹரலாலைப் பார்த்து, ''சரி, வா, பெரிய துரை யிடம்'' என்றான்.

வந்தவனுடன் ஹரலால் செல்வதைப் பார்த்து அவன் தாய், வழிமறித்து, ''துரையே, என் பிள்ளையை எங்கே கொண்டுபோகிறீர்? என் வயிற்றை யொடுக்கி, இவனை வளர்த் துப் பெரியவனுக்கினேன். என் மகன் இப்படி எவர் சொத் துக்கும் ஆசைப்பட்டவன் அல்லவே!'' என்று அழுதாள்.

வந்தவன் இங்கிலீஷ் துரையானதால், அவளுடைய மொழியைப் புரிந்துகொள்ளாமல், ''சரி, சரி'' என்றான்.

''எதற்காக அம்மா இப்படித் திகில் படுகிறாய், பெரிய துரையைப் பார்க்கவே நான் செல்கிறேன்'' என்றான் ஹரலால்.

தாய்க்கு இருப்புக் கொள்ளவில்லை, ''நீ காலையே பிடித்து எதுவும் சாப்பிடாமல் இருக்கிறாயே?'' என்றாள்.

ஹரலால் வண்டியில் ஏறிக்கொண்டு போய்விட்டான். தாய் தரைமீது விழுந்து புரண்டு கதறினாள்.

பெரிய துரை ஹரலாலைப் பார்த்து, ''உண்மையைச் சொல், நடந்த விஷயம் என்ன?'' என்றார்.

''நான் பணத்தை எடுக்கவில்லை'' என்றான் ஹரலால்.

பெரிய துரை, ''அதை நான் பரிபூர்ணமாக நம்புகிறேன், ஆனால் இது யார் செய்ததென்று உனக்குக் கட்டாயம் தெரி யும்; என்ன?'' என்றார்.

ஹரலால் தலை குனிந்தவாறு நின்றான். துரை, ''உனக் குத் தெரிந்து யாராவது எடுத்தார்களா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரிந்து இதை யாராலும் செய்திருக்க முடியாது'' என்றான் ஹரலால்.

''இதோ பார், ஹரலால், உன்னை நம்பி, உன்னிடம் ஜாமீன் எதுவும் கேட்காமல் இந்தப் பொறுப்பைத் தந்தேன். ஆபீசில் எல்லோரும் இதை ஆட்சேபித்தனர். இந்த மூவாயிரம் ரூபாய் எனக்கு ஒரு வரவு செலவில்லை. ஆனால் என்னைப் பெரிய அவமானத்துக்கு உள்ளாக்கிவிட்டாயே! இன்று முழுவதும் உனக்கு அவகாசம் தருகிறேன். எப்படியாவது அந்த ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்துப் பழையபடியே நீ இங்கு வேலையும் செய்யலாம்'' என்றார்.

துரை அவனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போனார். அப்போது மணி பதினென்றுக்குமேல் ஆகிவிட்டது. முகம் தொங்கிப் போய் ஹரலால் அலுவலகத்திலிருந்து வெளியே வரும்போது மற்றக் குமாஸ்தாக்கள் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து அவனது வீழ்ச்சியில் குதூகலம் கொண்டனர்.

ஒரே நாள்தான் அவகாசம்! நாள் முழுவதும் இந்தச் சேற்றைக் கலக்கிப் பார்த்தாலும் வெறும் குழப்பந்தானே தவிர வேறு இல்லை. இதற்கென்ன வழி, என்ன வழி, என்ன வழி? - இவ்வாறு எண்ணமிட்டவண்ணம் பதைபதைக்கும் வெயிலில் ஹரலால் சுற்றி அலைந்தான். வழியைக் காணும் அவன் சிந்தனை ஓய்ந்ததும், அவன் சுற்றித் திரிவதுமட்டும் நிற்கவில்லை. கல்கத்தாவில் அவனுக்கு அறிமுகமான எத்தனையோ இடங்கள், கண நேரத்தில் அவனுக்குப் பிரம்மாண்டமான இயந்திரப் பொறிபோலவே மாறின: அதிலிருந்து மீள்வதற்கே வழி இல்லை. நகரத்திலுள்ள அத்தனை பேரும் அவனைச் சூழ்ந்துகொண்டது போன்ற ஒரு மருள். ஒவ்வொருவரும் தனக்கு இடைஞ்சல் செய்யும் பகைவராகவே அவன் கண்ணுக்குத் தோன்றினர். அத்தனை பேர் அவனைக் கடந்து சென்றதும், ஒருவராவது நின்று அவனைக் கவனிக்கவே இல்லை. மைதானத்தில் புல் தரையில் நடந்து ஓய்ந்து போன ஒரு வழிப்போக்கன் தலைமாட்டில் கை வைத்து, நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். தனக்கும் அவனுக்கும் எத்தனை வித்தியாசம் என்று ஹரலால் எண்ணிக்கொண்டான்.

அலுவலகம் மூடும் வேளையும் ஆகிவிட்டது. குமாஸ்தாக்கள் டிராம்களில் ஏறி, தியேட்டர் விளம்பரங்களைப் படித்தவாறு தத்தம் இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். அன்று தொடங்கி ஹரலாலுக்கு அலுவலகமும் இல்லை; ஓய்வுமில்லை; வீட்டுக்குத் திரும்பிச் செல்ல டிராம் பிடிக்கவேண்டுமே என்ற தொல்லையுமில்லை. நகரில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும், வீடு வாசல்கள், வண்டி காடிகள் யாவும் அவன் வரைக்கும் பொருளற்ற கனவுக் காட்சிகளாகவே மாறி

அவனை நோக்கி இளித்தன. உணவில்லை, ஒய்வில்லை, தங்க நிழல் இல்லை. இவ்வாறு ஹரலால் அன்றெல்லாம் எங்கே போகிறோமென்று தெரியாமல் திரிந்தான். தெருக்களில் 'கியாஸ்' விளக்குகள் ஒளிர்ந்தன. இருட்டின் மூலை முடுக்கி லிருந்து கொடிய கண்கள் எத்தனையோ தன்னை விழுங்கக் காத்திருப்பதுபோல் தோன்றும் அவனுக்கு. இரவு எந் நேரமிருக்கும் என்பது அவனுக்கு நினைவே இல்லை. அவ னுடைய நெற்றியிலுள்ள நரம்புகள் விண் விண் என்று அடித்துக்கொண்டன. மண்டை வெடிக்கும் போல் ஒரு வேதனை. உடம்பில் எங்கும் எரிச்சல்; கால்கள் தள்ளாடின. இத்தனை சோர்வுக்கும் அயர்வுக்கும் இடையே ஒரே ஒரு சொல் மட்டும் அவன் நினைவில் வந்து போய்க்கொண் டிருந் தது. கல்கத்தாவின் கணக்கிலா மனிதர் அரவத்தையும் மீறி அந்த வறண்ட சொல் எழுந்தது: 'அம்மா, அம்மா, அம்மா!' வேறு யாரை அவன் கூப்பிடுவான்! இரவு வளர வளர, இப்படிச் செய்யாத குற்றத்திற்காக ஹரலாலை ஏளனத்திற்கு உட்படுத்த மனிதர் எவரும் சஞ்சரிக்கமாட் டார்கள். கம்மென்று அன்னையின் மடியில் அடைக்கலம் புகுந்து வேதனையை மறப்பான். அந்த இன்பத் துயிலி லிருந்து அப்புறம் விழிப்பே இல்லை. போலீசார் தன்னைத் தொடர்வார்களோ என்ற அச்சத்திலை வீட்டுப் பக்கமே போகவில்லை அவன். உடலைச் சுமக்க முடியாத அளவு அவன் களைத்துப் போகவே ஒரு வாடகை வண்டியைச் அழைத்தான்.

வண்டிக்காரன், ''எங்கே போகவேண்டும், பாபு!'' என் றான்.

''எங்கேயுமில்லை; இந்த மைதானத்தைச் சுற்றிக் கொஞ்ச நேரம் நல்ல காற்று வாங்கவேண்டும்'' என்றான் ஹரலால்.

வண்டிக்காரன் ஹரலாலைச் சந்தேகத்துடன் பார்க்கவே ஹரலால் அவன் கையில் முன்னதாகவே வாடகைப் பணமாக ஒரு ரூபாய் தந்தான். அவனை ஏற்றிக்கொண்டு அந்த வண்டி மைதானத்தைச் சுற்றி சுற்றிச் சென்றது.

மிகவும் அலுப்புற்ற ஹரலால் கொதிக்கும் தன் தலையை வண்டிச் சாளரத்தின் விளம்பில் வைத்துக் குளிர்ந்த காற்றை ஏற்றுக் கண்ணை மூடிக்கொண்டான். அவனைத் துன்புறுத்திய வேதனைகள் ஒவ்வொன்றாக விலகிச் சென்றன. அவனுடைய உடல் குளிர்ச்சி அடைந்து வந்தது. மனத்துள் ஆழ்ந்த தெம்பும், அமைதியும் நிரம்பி வந்தன. பெரியதொரு விடு தலை அவனை நாற்புறத்திலிருந்தும் கட்டி அணைப்பதுபோல் இருந்தது. தனக்கு ஓர் வழி இல்லை; உதவி இல்லை; விடுதலை இல்லை; தனக்குற்ற துன்பத்திற்கு ஓர் எல்லை இல்லை;

முடிவில்லை என்றெல்லாம் நெக்குருகுகிறான் அல்லவா அவன்? இப்போது யாவும் பொய்யாகவே மாறிப் போயின. அவன் உள்ளத்தில் பதுங்கியிருந்த அந்த அச்சம், இப்போது மெய்யே அன்று; தன் வாழ்வைக் கசக்கிப் பிடித்ததே ஓர் இரும்புப் பிடி - இப்போது அது என்ன செய்யும் என்று ஹரலாலுக்குத் தோன்றியது. அவனுடைய விடுதலை வானெங்கும் பரவிவிட்டது. அதற்குத் தடையே இல்லை. சாமானியமான இந்த ஹரலாலை, எவனுலும், ஏன் அவன் மன்னனுக இருப்பினும், சந்தேகம் கொண்டோ, அநீதிமாகவோ சிறைப் பிடித்து வைக்க முடியாது! விடுதலை பெற்ற தன் இதயத்தைச் சூழ்ந்து அனந்தமான பெருவெளி இருப்பதை உணர்ந்தான். வறுமையில் உழலும் தன் அன்னை வீட்டில் இருளில் ஒங்கி நிற்பதுபோலவும், ஓரிடத்தில் அவளை அடக்க முடியாது போலவும் தோன்றியது அவனுக்கு. கல்கத்தாவின் வழி, துறைகள், கடைகள், வீடுகள் யாவும் ஒவ்வொன்றுக அப்பேரிருளிடை மறையத் தொடங்கின. காற்றினுள்ளும் ஊடுருவியது, வானத்திலும் பரவியது ஒவ்வொரு நட்சத்திரத்திலும் புகுந்து மறையத் தொடங்கியது, இப்பேரிருள். ஹரலாலின் உடலின் வேதனை-சிந்தாகுலம் - இதற்குள் சிறிது சிறிதாக ஒடுங்கி அடங்கிப் போயின: அதோ பிரிந்துவிட்டது; வெம்மையான ஒரு குமிழி வெடித்துப் போயிற்று. இனி இருள் இல்லை; ஒளி இல்லை; நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்த போதமே.

கிறிஸ்துவ ஆலயத்தில் மணி ஒன்று அடித்தது. வண்டிக்காரன் இருள் கவிந்த மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வண்டியை ஓட்டி வெறுத்துப் போய்க் கடைசியில், ''பாபு, குதிரை ரொம்ப ஓய்ந்துவிட்டதுங்க. இனிமேல் போவாது; நீங்கள் எங்கே செல்ல வேண்டும்?'' என்று கேட்டான்.

பதிலே வரவில்லை. வண்டியை நிறுத்திக் கீழே இறங்கி வந்து உள்ளே இருக்கும் ஹரலாலை அசைத்து, ''எங்கே போகவேண்டும், பாபு?'' என்று கேட்டான். பதிலே இல்லை. பயந்து போய் வண்டிக்காரன், ஹரலாலை நன்முகக் கவனித்த பொழுது உடம்பு விறைத்துக் கிடந்தது. மூச்சே இல்லை.

''எங்கே போகவேண்டும், பாபு?'' என்ற கேள்விக்கு ஹரலாலிடமிருந்து இனிமேல் பதிலே வராது!

புதையல்

1

அமாவாசைக் கருக்கல். மிருத்யுஞ்சயன் தாந்திரிக முறைப்படி, நீண்ட காலமாக வழிபடும் தங்கள் குலதெய்வ மான ஜயகாளியை வழிபட உட்கார்ந்தான். பூசை முடிந்து எழுந்தபோது, பக்கத்திலிருந்த மாந்தோப்பில் விடிவேளைக் காகம் கரைவது கேட்டது.

மிருத்யுஞ்சயன் பின்னல் திரும்பிப் பார்த்தான். கோயி லின் கதவு மூடிக் கிடந்தது. அவன், தேவியின் திருவடிகளில் தலைபடிய ஒரு முறை வணங்கிய பின் பீடத்தை நகர்த்தினான். அதன் அடியிலிருந்து பலாமரப் பெட்டி யொன்றை வெளியே எடுத்தான். பூணூலில் சாவி இருந்தது. அந்தச் சாவியைப் போட்டு மிருத்யுஞ்சயன் பெட்டியைத் திறந்தான். திறந்த தும் திடுக்கிட்டுத் தலைமேல் கை வைத்துக்கொண்டான்.

மிருத்யுஞ்சயனுடைய வீட்டுப் புழைக்கடைத் தோட் டத்தைச் சுற்றி நாலு பக்கமும் சுவர். ஒரு மூலையில் பெரிய மரத்தின் நிழலில் இருந்தது, இச்சிறு கோயில். கோயிலில் ஜயகாளியின் உருவச் சிலையைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. உள்ளே நுழைய வாயில் கதவு ஒன்றுதான். மிருத்யுஞ்சயன் பேழையை இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பார்த்தான். பெட்டியைத் திறப்பதற்குமுன் அது பூட்டியே இருந்தது. அதையாரும் உடைக்கவில்லை. மிருத்யுஞ்சயன் பத்துத் தடவை களுக்குமேல் சிலையைச் சுற்றித் தடவிப் பார்த்துவிட்டான். ஒன்றும் அகப்படவில்லை. பைத்தியக்காரன்போல் ஆகிக் கோயி லின் கதவைத் திறந்தான். பொழுது விடிந்து வெளிச்சமாகி விட்டது. அப்போது கோயிலைச்சுற்றி வீணுசையுடன் தேடித் திரிந்தான்.

நன்றாக வெளிச்சமானதும், வெளியே சண்டமண்டபத் தில் வந்து உட்கார்ந்து, தலைமேல் கை வைத்துக்கொண்டு யோசிக்கலானான். இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் உடற் சோர்வினால் மயக்கம் வந்தது. அதே சமயத்தில் சட்டென்று, ''வெற்றி உண்டாகட்டுமப்பா'' என்ற குரல் கேட்டுத் திடுக் கிட்டான்.

எதிரே முற்றத்தில், விரிசடைக் கோலமாக ஒரு சந்நியாசி. மிருத்யுஞ்சயன் பயபக்தியுடன் அவரை வணங்கினான். அவர், அவன் தலைமேல் கைவைத்து ஆசி செப்பியபின், ''நீ வீணுக்குத்தான் கவலைப்படுகிறாய், அப்பா'' என்றார்.

மிருத்யுஞ்சயனுக்கு ஒரே வியப்பாக இருந்தது. ''நீங்கள் எல்லாம் அறிந்தவர். இல்லாவிட்டால் என் கவலை உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லையே!'' என்றான்.

''குழந்தாய்! தொலைந்து போனதற்காக நீ ஆனந்தப்படவேண்டுமே தவிரக் கவலைப் படக்கூடாது'' என்றார் அவர்.

மிருத்யுஞ்சயன் அவர் கால்கள் இரண்டையும் பிடித்துக் கொண்டு, ''அப்படியானால் உங்களுக்கு எல்லாம் தெரியும். எப்படித் தொலைத்தேன், எங்கே போனால் திரும்பக் கிடைக்கும் என்று சொல்லாவிட்டால் உங்கள் கால்களை விடமாட்டேன்'' என்றான்.

அவர், ''உனக்குத் தீங்கு நினைப்பவனானால் சொல்லி விடுவேன். ஆனால் பகவதி உன்மேல் தயை மூண்டு அதைக் வர்ந்துகொண்டாள். போனதற்காக நீ துயரப்படாதே'' என்றார்.

மிருத்யுஞ்சயன் அவரைத் திருப்தி பண்ணப் பலவாறாக உபசாரம் செய்தான்; பணிவிடை ஆற்றினான். மறு நாள் அதிகாலையில் தன் சொந்தத் தொழுவத்திலிருந்து நுரை வழிய ஒரு தம்ளரில் பாலை எடுத்துக்கொண்டு போய்ப் பார்த்த போது சந்நியாசி அங்கே இல்லை.

2

மிருத்யுஞ்சயன் குழந்தையாக இருந்தபோது அவனுடைய பாட்டனார் ஹரிஹரர் ஒரு நாள் இதே சண்டமண்டபத்தில் உட்கார்ந்து புகையிலை குதப்பிக்கொண்டிருந்தார். அப்போது இதேபோல் ஒரு சந்நியாசி, ''வெற்றி பெறுவாய், அப்பா'' என்றவாறு முற்றத்தில் வந்து நின்றார். ஹரிஹரர் அவரைத் தம் வீட்டில் சில நாட்கள் இருக்கச் சொல்லி, முறைப்படி தொண்டுகள் ஆற்றித் திருப்தி செய்தார்.

போகும்போது சந்நியாசி, ''குழந்தாய், உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். ஹரிஹரர், ''சுவாமிகள் திருச்செவி சாய்த்தால் என் நிலையைச் சொல்லுகிறேன். ஒரு காலத்தில் நாங்கள் இந்த ஊரில் செல்வாக்குடன் இருந்தோம். என் கொள்ளுப் பாட்டனார் தொலைவிலிருந்து ஒரு நற்குலத்தவனை அழைத்து வந்து, ஒரு பெண்ணை அவனுக்கு மணம் செய்து தந்தார். அவளுடைய வமிசத்தார் எங்களை

ஏமாற்றிவிட்டு இன்று இந்த ஊரில் பெரிய மனிதர்களாகி விட்டார்கள். நாங்கள் இப்போது மிகத் தாழ்வு நிலையில் இருக்கிறோம். ஆகவேதான் அவர்களுடைய அகம்பாவத்தை எல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுவும் இனி மேல் என்னால் முடியாது. என்ன செய்தால் என் வம்சம் மறுபடியும் தழைக்கும்? சொல்லுங்கள். என் குடும்பம் நிலைத்தோங்க ஆசி புரியுங்கள்'' என்றார்.

சந்நியாசி சற்றுச் சிரித்து, ''அப்பா, ஏழையாகவே சுகமாக இரு. பணக்காரனாக முயல்வதில் நன்மை வருமென்று எனக்குத் தோன்றவில்லை'' என்றார்.

ஆனால் ஹரிஹரர் விட்ட பாடாக இல்லை. வம்சம் தழைக்க என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாரென்று சொன்னார்.

அப்போது சந்நியாசி, தம் பையிலிருந்து துணியில் முடித்திருந்த ஒரு பழுப்புக் காகிதத்தை எடுத்தார்; நீளமான காகிதம்; சுவடிபோல் சுருட்டியிருந்தது. சந்நியாசி அதைப் பிரித்துத் தரைமீது வைத்தார். அதில் பலவிதமான சக்கரங்களும் அடையாளங்களும் போட்டிருந்தன. அடியில் ஒரு பெரிய பாட்டு எழுதியிருந்தது. அதன் ஆரம்பம் இதுதான்:

பாயே தரே ஸாதா
ரா நாஹி தேய் ராதா
சேஷே திலே ரா
பாகோல் சாடோ பா
தேந்துல் வடோர் கோலே
தக்ஷிணே ஜாஓ சலே
ஈசான கோணே ஈசானி
கஹே திலாம் நிசானி—

ஹரிஹரர், ''சுவாமி, ஒன்றுமே புரியவில்லையே'' என்றார்.

சந்நியாசி, ''இதை உன்னிடமே வைத்துக்கொள். தேவியைப் பூசைசெய். அவள் அருளால் உன் வமிசத்தில் யாராவது ஒருவன் இதில் கண்ட நிதியத்தைப் பெறுவான். உலகத்தில் இதற்கு ஈடு எதுவுமே இல்லை'' என்றார்.

ஹரிஹரர் பலவாறாக வேண்டி, ''சுவாமி, நீங்களே சொல்லிக் கொடுங்களேன்'' என்றார்.

''அதெல்லாம் நடக்காது. சாதனையின் மூலந்தான் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் சந்நியாசி.

அதே சமயத்தில் ஹரிஹரன் தம்பி சங்கரன் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் ஹரிஹரர் காகிதத்தை மறைத்துக்கொள்ளப் பார்த்தார். சந்நியாசி சிரித்து,

''பெரியவனுக முயல்கிறுயே! வழியில் இப்போதே கஷ்டங்கள் வரத் தொடங்கிவிட்டன. ஆனுல் மறைத்து வைக்க வேண்டிய அவசியமே இல்லே. இதன் இரகசியத்தை ஒருவன் மட்டுந் தான் வெளிப்படுத்த முடியும். பல தடவை முயன்றுல்கூட மற்றவர்களால் ஆகாது. உங்களுள் அந்த ஆள் யார் என்று யாருக்குமே தெரியாது. ஆகவே, இதை எல்லாருடைய எதிரி லும் பயமில்லாமல் திறந்து வைத்துக்கொள்ளலாம்'' என்ருர்.

அவர் போய்விட்டார். ஆனுல் ஹரிஹர் காகிதத்தை மறைத்தே வைத்துக்கொண்டார். வேறு யாராவது இதைப் புரிந்துகொண்டு ஜயம் அடைந்துவிட்டால்? தம் தம்பி சங்கரன்கூட இதன் பலனே அநுபவிக்கலாமல்லவா? அவர் சந்தேகத்துடன் அந்தக் காகிதத்தைப் பலாமரப் பெட்டியில் வைத்துப் பூட்டி, தம் குலதெய்வமான ஜயகாளியின் பீடத் தின் கீழ் வைத்தார். ஒவ்வோர் அமாவாசை அன்றும் நடுநிசி யில் தேவியின் பூசை முடிந்ததும் அந்தக் காகிதத்தைப் பிரித் துப் பார்ப்பார். தேவி அருள் கூர்ந்து அதைப் பு ரி ந் து கொள்ளும் சக்தி அளித்தாளா என்று பார்ப்பதற்குத்தான்.

சில நாள் கழித்துச் சங்கரன் ஹரிஹரரிடம் வந்து, ''அண்ணு, அந்தக் காகிதத்தை எனக்குக் காட்டேன். ஒரு தடவை நன்ருகப் பார்க்கிறேன்'' என்று வணக்கமாகக் கேட் டுக் கொண்டான்.

''போடா பைத்தியம்! அந்தக் காகிதத்தில் என்ன இருக்கிறது. அந்தப் போலிச் சாமியார் காகிதத்தில் கைக்கு வந்ததையெல்லாம் கிறுக்கி என்னே ஏமாற்றிவிட்டுப் போய் விட்டான். அதை என்றைக்கோ கொளுத்திப் போட் டாயிற்று'' என்ருர் ஹரிஹரர்.

சங்கரன் கம்மென்று இருந்துவிட்டான். திடும் என்று ஒரு நாள் சங்கரனே வீட்டில் காணவில்லே. அதற் கப்புறம் அவன் வரவேயில்லே.

ஹரிஹரரின் மற்ற வேலேகள் கெட்டன. புதையலின் எண்ணமே அவருக்கு. ஒரு கணமும் அதை அவர் மறக்கவில்லே.

மரணத் தறுவாயில், அவர் தம் மூத்த பிள்ளேயான சியாமாபதனேக் கூப்பிட்டு, சந்நியாசி அளித்த காகிதத்தைக் கொடுத்தார்.

காகிதம் கிடைத்ததும் சியாமாபதன் வேலேயை விட் டான். ஜயகாளியின் பூசையிலும், முழு மனத்துடன் தனிமை யில் இந்தக் காகிதத்தைப் படிப்பதிலுமே அவன் வாழ்க்கை கழிந்துவிட்டது.

மிருத்யுஞ்சயன் சியாமாபதனுடைய மூத்த பிள்ளே. தந்தை இறந்தபின் சந்நியாசி தந்த ரகசியக் காகிதம் அவன்

கைக்கு வந்தது. நிலைமை மோசமாகிக்கொண்டே வரவர, ஆவல் மேலிடத் தன் மனத்தை அந்தக் காகிதத்தின் மேல் செலுத்தினான். ஓர் அமாவாசை இரவு பூசை செய்தபின், பார்த்தபோது காகிதத்தைக் காணவில்லை; சந்நியாசியும் எங்கோ மறைந்துவிட்டார்.

அந்தச் சந்நியாசியை விட்டால் முடியாது. எல்லா விஷயங்களையும் அவரைக் கொண்டு கண்டுபிடிக்கலாமென்று மிருத்யுஞ்சயனுக்குத் தெரிந்துவிட்டது.

இந்த நம்பிக்கையுடன், மிருத்யுஞ்சயன் வீட்டை விட்டுச் சந்நியாசியைத் தேடப் புறப்பட்டான். ஓர் ஆண்டு வழியிலேயே கழிந்தது.

3

கிராமத்தின் பெயர் தாராகோல். அங்கே மிருத்யுஞ்சயன் பலசரக்குக் கடை ஒன்றில் வெற்றிலை குதப்பிக் கொண்டே உட்கார்ந்திருந்தான். சிறிது தூரத்தில் வரப்பு வழியாக ஒரு சந்நியாசி போனார். முதலில் மிருத்யுஞ்சயன் தான் தேடுவது அவரைத்தான் என்று எண்ணவில்லை. கொஞ்ச நேரம் கழித்தே தான் தேடும் ஆள் அந்தச் சந்நியாசிதானே என்று தோன்றியது. பரபரவென்று ஹுக்காவை வைத்து விட்டுக் கடைக்காரன் வியப்புற்று நிற்க, ஒரே ஓட்டத்தில் கடையை விட்டு வெளிப்பறினான். ஆனால் சந்நியாசியைக் காணவில்லை.

அப்போது இருட்டிவிட்டது. முன் பின் தெரியாத இடத்தில் எங்கே போய் அவரைத் தேடுவது என்று தெரியவில்லை அவனுக்கு. கடைக்குத் திரும்பிவந்து கடைக்காரனைப் பார்த்து, ''அதோ ஒரு பெரிய காடு தெரிகிறதே, அங்கே என்ன இருக்கிறது?'' என்று கேட்டான்.

''அங்கே ஒரு காலத்தில் பெரிய பட்டணம் இருந்ததாம். அகத்திய முனிவர் சாபத்தால் அங்கே ஆண்ட அரசன், மக்கள் எல்லாரும் வைரூரி கண்டு செத்துப் போய்விட்டார்களாம். தேடினால், இப்போதுகூட அளவற்ற புதையல் அகப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் பகல் வேளையில்கூட எவனும் துணிந்து அந்தக் காட்டுக்குள்ளே போனதில்லை. போனவன் திரும்பினதும் இல்லை'' என்றான் கடைக்காரன்.

மிருத்யுஞ்சயனின் மனம் அலை பாய்ந்தது. இரவையெல்லாம் மளிகைக் கடையில் கட்டிலின்மேல் படுத்து, கொசுக் கடி தாளாமல் உடம்பைச் சொறிந்துகொண்டு, காடு, சந்நியாசி, தொலைந்துபோன காகிதம் இவைகளைப்பற்றிய நினை

வாகவே இருந்தான். அடிக்கடி படித்ததில் அதில் இருந்த பாட்டு அவனுக்கு மனப்பாடமாகியிருந்தது. தூக்கம் வராமல் போகவே, இரவெல்லாம் அந்தப் பாட்டே, அவன் மனத்தில் சுழன்றுகொண் டிருந்தது.

'பாயே தரே ஸாதா
ரா நாஹி தேய் ராதா
சேஷே திலே ரா
பாகோல் சாடோ பா'.

தலை சுற்ற ஆரம்பித்தது. இந்த வரிகளை அவனால் மறக்க முடியவில்லை. கடைசியில் விடியற்காலையில் அவனுக்குத் தூக்கக் கலக்கம் வந்தபோது இந்த நாலு வரிகளின் பொருள் கனவில் தெளிவாகப் புரிந்தது. 'ரா நாஹி தேய் ராதா' அதில் 'ரா' வை விட்டால் 'தா' மீதி; 'சேஷே திலே ரா' கடைசியில் 'ரா'வைச் சேர்த்தால் 'தாரா' ஆயிற்றே; 'பாகோல்' சாடோ பா'-பாகோல் என்பதில் 'பா' போனால் 'கோல்' மிஞ்சியது; ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்தால் ''தாராகோல்''. இந்த ஊரின் பெயரும் 'தாராகோல்'தானே?

கனவு கலைந்தது. மிருத்யுஞ்சயன் துள்ளி எழுந்தான்.

4

பகலெல்லாம் காட்டில் திரிந்துவிட்டு மாலை நேரத்தில் வெகு கஷ்டப்பட்டு வழி தேடிக்கொண்டு சோறுகூட இல்லாமல் சாகும் நிலையில் ஊருக்கு வந்து சேர்ந்தான் மிருத்யுஞ்சயன். மறு நாள் மேல் துணியில் அவலை முடிந்துகொண்டு மறுபடியும் காட்டை நோக்கி நடந்து பகலில் ஒரு குளத்தங்கரையை அடைந்தான். குளத்தில் தெளிவான நீர். அதில் கணக்கற்ற அல்லிப் பூக்கள். நாற்புறமும் காடு; கல்லால் கட்டிய துறை இடிந்து கிடந்தது. அங்கே உட்கார்ந்து அவலைத் தின்றுவிட்டுக் குளத்தங்கரையைச் சுற்றிப் பார்க்கலானான்.

குளத்தின் மேலண்டைக்கரையில் சட்டென்று நின்றான் மிருத்யுஞ்சயன். ஒரு பெரிய புளிய மரத்தைச் சுற்றிக் கொண்டு ஆலமரம் ஒன்று வளர்ந்திருந்தது. உடனே அவனுக்குக் கீழ்க்கண்ட வரிகள் நினைவுக்கு வந்தன:

'தேந்துல் வடோர் கோலே
தக்ஷிணே ஜாஓ சலே'

தெற்கே சற்றுத் தூரம் சென்றதும் அடர்ந்த காடு. அங்கே மூங்கில் புதர்களைத் தாண்டிக்கொண்டு போவது

முடியாது. இந்த மரத்தை எப்படியாவது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான்.

அந்த மரத்தின் பக்கமாகத் திரும்பி வரும்போது மரத்தின் மறைவில் அருகிலேயே ஒரு கோயிலின் கோபுரம் தெரிந்தது. அதைக் குறியாக்கிக்கொண்டு மிருத்யுஞ்சயன் ஒரு பாழடைந்த கோயிலுக்கு வந்து சேர்ந்தான். பக்கத்தில் கல் அடுப்பும், எரிந்த விறகும் சாம்பலும் கிடந்தன. மெதுவாக மிருத்யுஞ்சயன் கதவு உடைந்திருந்த அந்தக் கோயிலின் உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இல்லை. சிலையும் காணவில்லை. ஒரு கம்பளி, கமண்டலம், காவி உடை இம்மூன்றும் கிடந்தன.

இருட்டிக்கொண்டு வரத் தொடங்கியது; கிராமமோ வெகு தொலைவில் இருந்தது. இருளில், காட்டின் நடுவே வழி தேடிக்கொண்டு போக முடியுமோ, முடியாதோ? ஆகவே, கோயிலுள் ஆள் இருப்பதன் சின்னங்களைக் கண்டு மிருத்யுஞ்சயன் திடங்கொண்டான். கோயிலின் சுவரிலிருந்து பெரிய கல்துண்டு ஒன்று உடைந்து வாசலருகே விழுந்து கிடந்தது. அந்தக் கல்லின்மேல் உட்கார்ந்து தலை குனிந்து யோசித்துக் கொண்டிருந்த சமயம் அதன்மேல் ஏதோ எழுதியிருந்ததைக் கவனித்தான். உற்றுப் பார்க்கையில் ஒரு யந்திரம் தெரிந்தது. அவன் நடுவே சில தெளிவாகவும், சில அழிந்தும், பீஜாட்சரங்கள் இருந்தன.

இந்த யந்திரம் மிருத்யுஞ்சயனுக்கு ஏற்கனவே அறிமுகமானது. எத்தனை அமாவாசை இரவுகளில் பூசை அறையில் தூபப் புகையின் இன்மணத்தில், நெய் விளக்கின் ஒளியில் பழுப்புக் காகிதத்தில் இருந்த அந்தச் சக்கரத்தைக் குனிந்து பார்த்துப் படித்து அதன் மர்மத்தை அறிய ஒரே நினைவாக அவன் தேவியின் அருளை வேண்டியிருக்கிறான்! தன் விருப்பம் நிறைவேறும் சமயம் கிட்டுவது கண்டு அவன் உடலில் ஓர் அதிர்ச்சி மூண்டது. கரைக்கு அருகில் வரும்போது கலம் கவிழ்ந்துவிட்டால்....! சிறு தவறு ஒன்றினால் எல்லாம் வீணாகப் போய்விட்டால்! அந்தச் சந்நியாசி முன்பே வந்து எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போயிருந்தால்! - இப்படியெல்லாம் அவனுக்கு ஐயங்கள் பிறந்தன. என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்றவில்லை. அந்தப் புதையலின் மேலேயே உட்கார்ந்துகொண்டு ஒன்றும் தெரியாமல் விழிக்கிறோமோ என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

அவன் உட்கார்ந்தவாறே காளியின் திருநாமத்தைச் செபிக்கலானான். மாலை மங்கல் பின்னும் இருட்டாகியது. விட்டில்களின் அரவம் காடெங்கும் எதிரொலித்தது.

5

இந்தச் சமயத்தில் அடர்ந்த காட்டின் நடுவே சற்றுத் தொலைவில் நெருப்புத் தெரிந்தது. மிருத்யுஞ்சயன் கல் மேலிருந்து எழுந்து அந்த ஒளியை நோக்கி நடக்கலானான்.

கஷ்டத்துடன் கொஞ்ச தூரம் சென்று, ஓர் அரச மரத்தின் மறைவிலிருந்து பார்க்கையில், அந்தப் பழைய சந்நியாசி, நெருப்பின் வெளிச்சத்தில், அதே பழுப்புக் காகிதத்தைத் திறந்து வைத்துக்கொண்டு ஒரு கட்டையால் சாம்பலின்மேல் ஒரே நிலைவாகக் கணக்கிட்டுக்கொண்டிருந்தார்.

மிருத்யுஞ்சயனின் வீட்டிலிருந்த அதே பிதுரார்ஜிதமான காகிதம்! 'அடே திருட்டுச் சந்நியாசி! போலிச் சாமியாரே! இதற்காகத்தான் மிருத்யுஞ்சயனைக் கவலைப் படாதே என்றாயோ?'

சந்நியாசி ஒரு முறை கணக்கிட்டு, அளவுகோலைக் கொண்டு அளக்கிறார்; கொஞ்ச தூரம் அளந்த பின் ஏமாற்றத்துடன் தலையை ஆட்டிக்கொண்டே மறுபடியும் கணக்கிட உட்காருகிறார்.

பின், பொழுது புலரும் தறுவாயில், குளிர்ந்த காற்றில் இலைகள் அசைந்து ஒலிக்கும்போது, சந்நியாசி அந்தக் காகிதத்தைச் சுருட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

என்ன செய்வதென்று மிருத்யுஞ்சயனுக்குத் தோன்றவில்லை. சந்நியாசியின் உதவி இல்லாவிட்டால் காகிதத்தின் மர்மத்தை அறிய முடியாதென்று அவனுக்குத் தெரிந்தது. அந்தப் பேராசை பிடித்த சாமியார் மிருத்யுஞ்சயனுக்கு உதவி செய்யமாட்டார்; அதுவும் உண்மைதான். ஆகவே, இரகசியமாகச் சந்நியாசியின்மேல் கண் வைத்திருப்பதைத் தவிர வேறு வழி இல்லை. ஆனால் பகல் வேளைகளில் ஊருக்குப் போகாவிட்டால் உணவு கிடைக்காது. நாளைக்குக் காலை ஒரு தடவை ஊருக்குச் செல்ல வேண்டும்.

அதிகாலையில் வானம் வெளுக்கத் தொடங்கியதும் அந்த மரத்தின் மேலிருந்து இறங்கினான். சாம்பலின்மேல் சந்நியாசி கணக்கிட்டுக்கொண்டிருந்த இடத்தை நன்றாகப் பார்த்தான். ஒன்றும் புரிபடவில்லை. நாலு பக்கமும் சுற்றி நோக்கினான்; காட்டின் மற்றப் பகுதிகளைப் போலவே இருந்தது. வித்தியாசமாக ஒன்றும் தெரியவில்லை.

காட்டினிடையே இருள் பிரியப் பிரிய, மிருத்யுஞ்சயன் விழிப்புடன் நாலு பக்கமும் பார்த்துக்கொண்டு ஊரை நோக்கி நடந்தான். சந்நியாசி எங்கேயாவது தன்னைப் பார்த்துவிடப் போகிறாரே என்ற பயம்.

மிருத்யுஞ்சயன் இருந்த கடைக்குப் பக்கத்தில், காயஸ்தப் பெண் ஒருத்தி நோன்பை முடித்து, அன்று பிராம்மண போஜனம் செய்வித்தாள். அங்கே மிருத்யுஞ்சயனுக்கு அன்று சாப்பாடு கிடைத்துவிட்டது. சில நாட்கள் உணவின்றி வருந்தியபின் அன்று வயிறுரப் புசித்தான். அது முடிந்ததும் ஹுக்காவில் இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு, ஜமுக்காளத்தில் புரண்டு முன் நாள் இரவெல்லாம் கண் விழித்ததனால், ஒரேயடியாக அயர்ந்து தூங்கிவிட்டான்.

அன்று விரைவாகச் சாப்பாட்டை யெல்லாம் முடித்துக் கொண்டு, புற்ப்பட்டுவிடுவது என்று எண்ணியிருந்தான்; அதற்கு நேர்மாறுகவே காரியம் நடந்தது. அவன் எழுந்தபோது கதிரவன் அத்தமித்துவிட்டது. மிருத்யுஞ்சயன் நிற்கவில்லை. இருளிலேயே காட்டுக்குள் நுழைந்தான்.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் கனத்தது. மரங்களினிடையே இருள் கவிந்திருந்ததால் வழி தெரியவில்லை; வழி தவறியது. பொழுது விடியும்போது தான் இரவெல்லாம் ஒரிடத்திலேயே சுற்றிச் சுற்றி அலைவதை உணர்ந்தான்.

காக்கைக் கூட்டம் காகா என்று கரைந்தவாறு ஊரை நோக்கிப் பறந்தது; அது தன்னை ஏளனம் செய்து இகழ்வது போலத் தோன்றியது மிருத்யுஞ்சயனுக்கு.

6

கணக்கில் அடிக்கடி தவறு ஏற்பட அதைத் திருத்திக் கொண்டே சந்நியாசி கடைசியில் சுரங்கத்தின் வழியைக் கண்டுபிடித்தார்; கையில் தீப்பந்தத்துடன் சுரங்கத்தினுள் புகுந்தார். சுவரெங்கும் பாசி. நடுநடுவே ஒவ்வோரிடத்தில் நீர் கசிந்தது. சில இடங்களில் தவளைகள் ஒன்றன்மேல் ஒன்றுகக் கோபுரம்போல் குவிந்திருந்தன. வழுவழுப்பான இந்தப் பாதையோடு கொஞ்ச தூரம் சென்றபின் எதிரே சுவர் ஒன்று முட்டியது. அப்புறம் வழி தென்படவில்லை. சுவரெங்கும் இரும்புத் தடியால் பலமாக அடித்துப் பார்த்தார். பிளவு இருப்பதாகத் தெரியவில்லை; துவாரத்தையும் காணவில்லை. இதோடு வழி முடிகிறது என்பதில் ஐயமே இல்லை.

மறுபடி அந்தக் காகிதத்தைத் திறந்து, தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். இவ்வாறு அன்றை இரவு கழிந்தது.

மறு நாள் இன்னும் ஒரு முறை கணக்கை முடித்துக் கொண்டு சுரங்கத்தினுள் புகுந்தார். அடையாளம் புரிந்து கொண்டு குறிப்பிட்ட இடத்தில் ஒரு கல்லை நகர்த்தியதும், ஒரு கிளைப்பாதையைக் கண்டுபிடித்தார். அந்த வழியி

னூடே சென்றதும் மற்றொரு புறம் முட்டி நின்றது அந்த வழி.

கடைசியில் ஐந்தாம் நாள் இரவு சுரங்கத்தின் உள்ளே நுழைந்ததும் சந்நியாசி களிக் கூச்சலிட்டார். ''இன்று எனக்கு வழி தெரிந்துவிட்டது. இனி எந்த விதத்திலும் தவறு நேராது'' என்றார்.

வழி ஒரே சிக்கலானது. பல கிளைகள்; சில இடங்களில் ஒரே குறுகல். அங்கே மண்டியிட்டுச் செல்ல வேண்டும். ஜாக்கிரதையாகத் தீவட்டியைப் பிடித்துக்கொண்டே சந்நியாசி வட்டமான அறைபோன்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார். அறையின் நடுவே பெரிய கிணறு ஒன்று. அதன் அடிமட்டம் தெரியவில்லை; தீவட்டியின் ஒளியில் அறையின் உத்தரத்திலிருந்து பருத்து நீண்ட இரும்புச் சங்கிலி ஒன்று கிணற்றினுள் இறங்கியது. தம்மால் ஆனமட்டும் பலத்துடன் சந்நியாசி அச்சங்கிலியை அசைத்ததும் டங் என்று ஓர் இசை கிணற்றிலிருந்து எழுந்து அறையெங்கும் எதிரொலித்தது. சந்நியாசி, ''கண்டுபிடித்தேன்'' என்று இரைந்தார்.

சொன்னதுதான் தாமதம், அறையின் இடிந்த சுவரிலிருந்து ஒரு கல் விழுந்தது. அத்துடன் இன்னேர் உயிருள்ள பொருளும் தொப்பென்று விழுந்து உரக்கக் கூவியது. எதிர்பாராது வந்த ஓசையைக் கேட்டுச் சந்நியாசி திடுக்கிடவே, அவர் கையிலிருந்த பந்தம் விழுந்து அணைந்தது.

7

அவர், ''யார் நீ?'' என்று கேட்டார். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இருட்டில் தடவிப் பார்த்தபோது மனித உடல் ஒன்று அகப்பட்டது. அதை அசைத்து, ''நீ யார்?'' என்று கேட்டார்.

பதில் இல்லை; ஆள் பிரக்ஞையற்று இருந்தான்.

சக்கிமுக்கியைத் தட்டிச் சந்நியாசி தீவட்டியைக் கொளுத்தினர். இதற்குள் அந்த ஆளுக்கு நினைவு வந்துவிட்டது. எழுந்திருக்க முயன்று, வேதனை தாளாமல் உரக்கக் கூச்சலிட்டான்.

''அட மிருத்யுஞ்சயனே! உனக்கு ஏன் இந்தப் புத்தி?'' என்றார் சந்நியாசி.

''சுவாமி, என்னை மன்னித்துவிடுங்கள். பகவான் எனக்குத் தண்டனை அளித்துவிட்டார். உங்கள்மேல் பாறையை எறிந்து கொல்லப் போனேன்! என்னால் சமாளித்துக்கொள்ள முடியவில்லை. வழுக்கிப் பாறையுடன் கூடவே விழுந்துவிட்டேன். கட்டாயம் கால் முறிந்திருக்கும்.''

''என்னைக் கொல்வதால் உனக்கு என்ன லாபம்?''

மிருத்யுஞ்சயனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''லாபம் என்னவென்று கேட்கிறாய்? எதற்காகப் பேராசையினால் என் பூஜை அறையிலிருந்து அந்தக் காகிதத்தைத் திருடிக்கொண்டு சுரங்கத்தினுள் அலைகிறாய்? நீ கொடியவன், திருடன்! என் பாட்டனாருக்கு இதைக் கொடுத்த சந்நியாசி, எங்கள் வம்சத்தில் ஒருவனுக்கே இதன் மர்மம் தெரியும் என்றார். இந்தப் புதையல் எங்கள் வம்சத்தாருக்கே சொந்தம். ஆகவே, இந்தச் சில தினங்களாக ஊண் உறக்கமில்லாமல் உன்னையே நிழல்போல் பின் தொடர்ந்தேன். இன்று நீ, 'கிடைத்துவிட்டது' என்று கூச்சலிட்ட போது என்னால் பொறுக்க முடியவில்லை. நான் உன் பின்னாலேயே வந்து இந்தப் பள்ளத்தினுள் ஒளிந்திருந்தேன். இங்கிருந்து ஒரு பாறையைத் தள்ளி உன்னைக் கொல்ல முயன்றேன். ஆனால் உடலில் வலுவில்லை. இடமும் சறுக்கலாக இருந்தது. வேண்டுமானால் இப்போதே என்னைக் கொன்று போட்டாலும் போடு. நான் பேயாகி இந்தப் புதையலைக் காப்பேன். ஆனால் உனக்கும் இது அகப்படாது. அப்படி நீ அடைந்துவிட்டால் நான் பிராம்மணன்; உன்னைச் சபித்து விட்டு இந்தக் கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன். இந்தச் செல்வம் பிராம்மணனின் இரத்தம்; பசுவைக் கொன்ற பாவம் உனக்கு வரும். இந்தப் புதையலைக் கொண்டு நீயும் சுகம் அனுபவிக்க முடியாது. என் தகப்பனாரும் பாட்டனாரும் இதன் மேலேயே நினைவாக மரித்தார்கள். இதை எண்ணியே நாங்கள் ஏழைகளானோம். இதைத் தேடியே வீட்டில் பெண்டு பிள்ளைகளை அநாதையாக விட்டுவிட்டு, நான் ஊண் உறக்கமின்றிக் காடு மேடெல்லாம் திரிந்தேன். என் கண் எதிரே இதை நீ எடுத்துக்கொள்ள முடியாது.''

8

''மிருத்யுஞ்சயா, அப்படியானால் கேள், சொல்லுகிறேன்'' என்றார் சந்நியாசி.

''உன் பாட்டனாருக்கு ஒரு தம்பி உண்டே; உனக்குத் தெரியுமா? அவன் பெயர் சங்கரன்.''

''ஆமாம், அவர் வீட்டை விட்டு எங்கேயோ போய் விட்டார்'' என்றான் மிருத்யுஞ்சயன்.

''நான்தான் அந்தச் சங்கரன்'' என்றார் சந்நியாசி. மிருத்யுஞ்சயன் நம்பிக்கையை இழந்து பெருமூச்சு விட்டான். புதையலின்மேல் தன் ஒருவனுக்குத்தான் உரிமை என்று எண்ணி

ஞன். தன் வமிசத்தவன் இன்ஞெருவனே போட்டிக்கு வந்து விட்டானே!

''சந்நியாசியினிடமிருந்த காகிதம் கிடைத்த நாள் முதல் அதை அண்ணு என்னிடம் மறைத்து வைக்கப் பார்த்தார். அவர் அதை ஒளிக்க ஒளிக்க எனக்கு ஆவல் அதிகமாயிற்று. அவர் தேவியின் பீடத்துக்குக் கீழே அந்தக் காகிதத்தை வைத்திருந்தார். அது தெரிந்து நான் திருட்டுச் சாவி போட்டு அதைத் திறந்து தினமும் கொஞ்சங் கொஞ்சமாக அதில் இருந்ததை நகல் செய்துகொண்டேன். அது முடிந்த அன்றைத் தினமே அந்தப் புதையலைத் தேடிக்கொண்டு புறப் பட்டேன். என் மனைவி மக்களை அநாதையாக விட்டுச் சென்றேன். இன்று ஒருவரும் உயிருடன் இல்லை.

''நான் சுற்றிப் பார்க்காத இடமே இல்லை. அதை யெல்லாம் விவரித்து என்ன ஆக வேண்டும்? சந்நியாசி தந்த அந்தக் காகிதத்தில் உள்ளதை எந்தக் காஷாயதாரியா வது எனக்குத் தெளிவாகச் சொல்வானே என்று எண்ணி எத்தனையோ சாதுக்களுக்குப் பணிவிடை செய்தேன். எத் தனையோ போலிச் சாமியார்கள் என் காகிதத்தைப்பற்றித் தெரிந்துகொண்டு அதைக் கைப்பற்றவும் முயன்றார்கள். இப் படிப் பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு கணமும் நிலையின்றி அலைந்தது என் மனம். அமைதியை இழந்தேன்.

''கடைசியில் முன்னைப் புண்ணியவசமாகக் குமாவுன் மலையில் பாபா சுவரூபானந்த சுவாமிகளைக் கண்டேன். அவர், 'அப்பா! ஆசையை ஒழி. அழியாச் செல்வம் தானுகவே உன் கையில் சிக்கும் பார்' என்றார்.

''என் மனத்தின் தாகத்தைப் போக்கினர். அவர் அருளால் வானின் ஒளியும் பூமியின் பசுமையுமே எனக்கு ராஜ ஐசுவரியமாகத் தோன்றின. ஒரு நாள் மலையின் கல் தரையில் அந்திவேளையில் பாபா பரமஹம்ஸரின் ஹோமக் குழியில் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருந்தது. அந் தக் காகிதத்தை நான் நெருப்பில் இட்டேன். பாபா சற்றுச் சிரித்தார்; அந்த முறுவலின் கருத்து அன்று எனக்கு விளங்க வில்லை. இன்று புரிகிறது எனக்கு: 'காகிதத்தை எரிப்பது எளிதுதான். ஆனல் அதன் நினைவு அவ்வளவு எளிதில் சாம்ப லாகிவிடுமா?' என்று அவர் கட்டாயமாக நினைத்திருப்பார்.

''காகிதம் முற்றும் சாம்பலானதும், என் உள்ளத்தைப் பிணைத்திருந்த நாகபாசம் அறுந்தது. விடுதலை பெற்றேம் என்று மட்டிலா உவகை எய்தினேன். 'இன்று முதல் எனக்கு ஓர் அச்சமும் இல்லை. எனக்கு உலகில் எதுவும் அவசியமில்லை' என்று எண்ணினேன்.

''கொஞ்ச நாட்களுக்கெல்லாம் பாபா பரமஹம்ஸரைப் பிரிந்தேன். எவ்வளவு தேடியும் அவரைக் காண முடியவில்லை.

''உடனே நான் துறவியாகிப் பற்றில்லாமல் ஊர் ஊராகத் திரிந்தேன். எத்தனையோ ஆண்டுகள் சென்றன. அந்தக் காகிதத்தைப்பற்றி மறந்துவிட்டேன் என்றே சொல்ல வேண்டும்.

''இந்தச் சமயத்தில் ஒரு நாள் தாராகோலின் காட்டில் நுழைந்து பாழடைந்த கோயில் ஒன்றில் தங்கினேன். இரண்டொரு நாட்கள் ஆனதும், கோயிலின் சுவரில் சில இடங்களில் சில அடையாளங்களைக் கண்ணுற்றேன். அவை எனக்கு முன்னால் அறிமுகமானவையே.

''எதைத் தேடி ஒரு காலத்தில் அலைந்தேனே, அது கிட்டும் என்பதில் ஐயம் எதுவும் எனக்குத் தோன்றவில்லை. 'இங்கே இனி இருக்கக் கூடாது; சென்றுவிடுவோம்' என்று எண்ணினேன்.

''ஆனால் இதைவிட்டுப் போக முடியவில்லை. என்ன இருக்கிறது என்றுதான் பார்க்கலாமே என்றது என் உள்ளம். ஆவலை அடக்கிக்கொண்டு சென்றிருந்தாலே நல்லது. அந்த அடையாளங்களை வைத்துக்கொண்டு ஆராய்ந்தேன். பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. அந்தக் காகிதத்தை ஏன் கொளுத்தினேம் என்று தோன்றியது. அதை வைத்திருந்தால் என்ன குறைந்துபோய்விடும்?

''உடனே நான் பிறந்த ஊருக்கு மறுபடியும் சென்றேன். என் பிதுரார்ஜிதமான நிலத்தின் நிலையைக் கண்டு, 'நானே துறந்தவன். செல்வம் எனக்கு அவசியமில்லை; ஆனால் இந்த ஏழைகள் எல்லாரும் சம்சாரிகள். அந்தப் புதையலை இவர்கள் பொருட்டுத் தேடுவதில் தவறு என்ன?' என்று நினைத்தேன்.

''அந்தக் காகிதம் இருந்த இடம் எனக்குத் தெரியும். ஆகவே, அதை எடுக்க எனக்கு யாதொரு கஷ்டமும் உண்டாகவில்லை.

''பின்னர் ஓர் ஆண்டுக்காலமாக அந்தக் காகிதத்தின் உதவியால் மனிதர் வராத இந்தக் காட்டில் கணக்குப் போட்டு ஆராய்கிறேன். இதோ கிடைத்தும் விட்டது. இனி யாதொரு கவலையும் இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு தடங்கல்கள் ஏற்பட்டனவோ அவ்வளவுக்கவ்வளவு ஆவலும் அதிகமாயிற்று. பித்தன்போல் பகல் இரவின்றி இந்த வேலையில் ஈடுபட்டிருந்தேன்.

''இதற்குள் எப்போது நீ என்னைத் தொடர ஆரம்பித்தாயோ எனக்குத் தெரியாது. சாதாரண நிலையில் இருந்தால்

நீ ஒளிந்திருக்க முடியாது. ஆனல் நான் என்னையே மறந் திருந்தேன்; வெளி விஷயங்களில் மனம் செல்லவில்லை.

''இவ்வளவு நாளாகத் தேடியதை இதோ இப்போது தான் கண்டுபிடித்தேன். இங்கே உள்ள அளவு மணிகளும், செல்வமும் எந்த அரசனின் கருவூலத்திலும் இல்லை. இன் னும் ஒரு சிக்கலை விடுவித்ததும் அந்தச் சொத்து அகப்பட்டு விடும். ஆனல் இதையும் நான் மனத்துக்குள்ளேயே விடு வித்துக்கொண்டுவிட்டேன். அதனல்தான் என்னையும் மறந்து, 'கிடைத்துவிட்டது' என்று கூச்சலிட்டேன். விரும்பினல் இன்னும் ஒரு மணி நேரத்தில் சங்கநிதி, பதுமநிதி இரண்டுக் கும் நான் அதிகாரி ஆக முடியும்'' என்று நிறுத்தினர்.

மிருத்யுஞ்சயன் சங்கரரின் காலகளைப் பற்றிக்கொண்டு, 'நீங்கள் துறவி; உங்களுக்குப் பணம் அவசியமில்லை; என்னை அந்தக் கருவூலத்துக்குள் அழைத்துச் செல்லுங்கள். ஏமாற்று தீர்கள்'' என்ருன்.

''இன்று என் கடைசி தளையும் இற்றுப் போய்விட்டது. இதோ கல்லை எறிந்து என்னைக் கொல்ல முயன்ருயே; அதன் அடி என்மேல் படவில்லை. ஆனல் என் உள்ளத்தைக் கவிந் திருந்த மாயையை அது அகற்றியது. ஆசையின் பயங்கர உருவைக் கண்டேன். என் குரு பரமஹம்ஸதேவரின் புன் முறுவலின் மர்மத்தை இவ்வளவு காலம் கழிந்த பின்பாவது உணர்ந்தேனே! இன்று என் உள்ளத்தில் மங்களமான விளக் கொளியை அது ஏற்றிவிட்டது'' என்ருர் சந்நியாசி.

மிருத்யுஞ்சயன் சங்கரரின் காலைத் தொட்டு மீண்டும், ''நீங்கள் பற்று அற்றவர். நான் துறந்தவன் அல்ல; எனக்கு விடுதலை வேண்டாம். புதையலைக் காட்டாமல் ஏமாற்ருதீர்கள்'' என்ருன்.

''குழந்தாய், இந்தா உன் காகிதம். உன்னல் முடிந்தால் தேடி எடுத்துக்கொள்'' என்று மூங்கில் தடியையும் காகி தத்தையும் மிருத்யுஞ்சயனிடம் கொடுத்துவிட்டு அப்பெரியார் போய்விட்டார். ''தயை செய்யுங்கள்; என்னை விட்டுப் போகாதீர்கள்; எனக்கு வழி காட்டுங்கள்'' என்ருன் மிருத் யுஞ்சயன்.

பதில் ஒன்றும் இல்லை.

மிருத்யுஞ்சயன் தடியை ஊன்றிக்கொண்டே சுரங்கத் திலிருந்து வெளியேற முயன்ருன். ஆனல் வழியோ ஒரே சிக்கலானது. அடிக்கு அடி தடைகள் ஏற்பட்டன. கடைசி யில் சுற்றிச் சுற்றிச் சோர்ந்துபோய் ஓரிடத்தில் படுத்ததுமே கண்ணயர்ந்தான்.

தூங்க ஆரம்பித்தபோது இரவா பகலா, என்ன

பொழுது என்றுகூடத் தெரிய வழி இல்லை. அதிகமாகப் பசி எடுக்கவே மேல் துணியில் முடிந்திருந்த அவலைத் தின்றான். பிறகு இன்னும் ஒரு முறை சுரங்கத்தை விட்டு வெளியேற வழி இருக்கிறதா என்று தடவிப் பார்க்கலானான். பல இடங்களில் தடை ஏற்படவே, உட்கார்ந்து உரக்கக் கூச்சல் போட்டான்: ''ஓய் சந்நியாசி! எங்கே இருக்கிறீர்கள்?''

அவன் குரல் சுரங்கத்தின் கிளைப்பாதைகளில் எல்லாம் புகுந்து எதிரொலி செய்தது. பக்கத்திலிருந்து பதில் வந்தது: ''இதோ, பக்கத்தில்தான் இருக்கிறேன். என்ன வேண்டும், சொல்?''

மிருத்யுஞ்சயன் வேண்டும் குரலில், ''எங்கே செல்வம் இருக்கிறது என்று காட்டுங்களேன், தயை செய்து'' என்றான்.

பதில் வரவில்லை. மிருத்யுஞ்சயன் மறுபடியும் கூப்பிட்டான். பதிலே இல்லை.

நாழிகை போவதே தெரியாத இந்தப் பாதாளத்தில், இருளில் இன்னும் ஒரு முறை தூங்கினான் மிருத்யுஞ்சயன். மறுபடியும் அந்த இருட்டிலேயே கண் விழித்தான். ''ஓய்! இருக்கிறீரா?'' என்று கூச்சலிட்டான்.

பக்கத்திலிருந்து பதில் வந்தது: ''இங்கேதான் இருக்கிறேன். என்ன வேண்டும்?''

மிருத்யுஞ்சயன், ''எனக்கு ஒன்றும் வேண்டாமே! இந்தச் சுரங்கத்திலிருந்து வெளியேற்றுங்கள்'' என்றான்.

''உனக்குப் பணம் வேண்டாமா?''

''வேண்டாம் எனக்கு.''

உடனே சக்கிமுக்கி உராயும் ஓசை கேட்டது. சில நிமிடங்களுக்கெல்லாம் வெளிச்சம் தெரிந்தது. ''அப்படியானால் வா, மிருத்யுஞ்சயா! வெளியே போகலாம்'' என்றார் சந்நியாசி.

மிருத்யுஞ்சயன் பரிதாபக் குரலில், ''சுவாமி, என் எண்ணங்கள் இப்படியெல்லாம் வீணாக வேண்டுமா? இவ்வளவு துயரம் அனுபவித்த பின்னும் செல்வம் கிடைக்காதா?'' என்றான்.

அந்தக் கணமே தீவட்டி அணைந்தது. ''என்ன கொடுமை!'' என்று மிருத்யுஞ்சயன் அங்கேயே உட்கார்ந்து யோசிக்கலானான். கால அளவு ஒன்றுமே தெரியவில்லை. இருளுக்கும் ஓர் எல்லை இல்லை. தன் உடல், மனம் இவற்றின் வன்மையால் அந்த இருளைத் தகர்த்து எறியலாமா என்று அவனுக்குத் தோன்றியது. விசித்திரமான வெளி உலகைக் காண அவன் மனம் துடித்தது. வெளிச்சத்துக்கும் காற்றுக்கும் அவன் மனம் ஏங்கியது. ''ஓய் சந்நியாசியே! எனக்குச்

செல்வம் வேண்டாம்; என்னை வெளியேற்றுங்கள்'' என்றான். ''பணம் வேண்டாமே! அப்படியானால் வா. என் கையைப் பிடித்துக்கொள். என்னுடன் வா'' என்றார் சந்நியாசி.

இம்முறை தீவட்டி எரியவில்லை. ஒரு கையில் தடியையும் மற்றொரு கையில் சந்நியாசியின் மேல் போர்வையையும் பிடித்துக்கொண்டு மிருத்யுஞ்சயன் மெல்ல நடந்தான். வெகு நேரம் வளைவான பாதைகளினூடே சுற்றிச் சுற்றி வந்ததும் சந்நியாசி ஓர் இடத்தில், ''நில்'' என்றார்.

மிருத்யுஞ்சயன் நின்றான். துருப்பிடித்த கதவு ஒன்று திறக்கும் ஓசை கேட்டது. சந்நியாசி மிருத்யுஞ்சயனின் கையைப் பற்றி, ''வா'' என்றார்.

மிருத்யுஞ்சயன் முன்னால் சென்று ஓர் அறையினுள் நுழைந்தான். அப்போது சக்கிமுக்கிக் கல் இழையும் ஒலி கேட்டது. சில கணங்களுக்கெல்லாம் வெளிச்சம் பரவியது. இதென்ன, அற்புதமான காட்சி! நாலு பக்கமும் சுவரை ஒட்டிப் பெரிய தங்கப் பாளங்கள், பூமிக்கடியில் புதைந்திருக்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள்போல் அடுக்கடுக்காக இருந்தன. மிருத்யுஞ்சயனின் கண்கள் இரண்டும் பூத்துவிட்டன. பித்தன்போல் கூச்சலிட்டான்: ''இந்தப் பொன் என்னுடையது. இதை விட்டு வரவே மாட்டேன்'' என்று கத்தினான்.

''சரி, இங்கேயே இரு; இதோ தீவட்டி. இங்கே ரொட்டி, அவல், பெரிய பானை ஒன்றில் குடிக்கத் தண்ணீர் எல்லாம் வைத்துவிட்டுப் போகிறேன்'' என்றார்.

பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவர் வெளியே சென்றார். பொற்களஞ்சியத்தின் இரும்புக் கதவு மூடிக்கொண்டது.

மிருத்யுஞ்சயன் அந்தப் பொற்பாளங்களை அடிக்கடி தொட்டுக்கொண்டே சுற்றிச் சுற்றி வந்தான். சிறு பொன் துண்டுகளை எடுத்துத் தரையின்மேல் போடுவதும், மடியில் எடுத்து வைத்துக்கொள்வதும், ஒன்றன்மேல் ஒன்றைத் தட்டி ஓசை உண்டாக்குவதும், தன் உடலெங்கும் தடவி அதன் பரிசத்தை அநுபவிப்பதுமாக இருந்தான். கடைசியில் சோர்ந்து போய்ப் பொற்பாளங்களைப் பரப்பி அவற்றின்மேல் படுத்துத் தூங்கினான்.

எழுந்து பார்த்தான், நாலு பக்கமும் பொன் தகதக வென்று சுடர் விடுகிறது. தங்கத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. 'உலகத்தில் இப்போது விடியும் நேரமாக இருக்கும். எல்லா உயிர்களும் களிப்புடன் விழித்தெழும். வீட்டுக் குளத்தின் ஓரமாக உள்ள தோட்டத்தில் இனிய மணம் இந்தக் காலை வேளையில் வீசுமல்லவா?' கற்பனையிலும் அதன் மணம் அவன் மூக்குக்கு எட்டியது. வாத்துக்கள் கூட்டங்

கூட்டமாக, அசைந்து அசைந்து கூச்சல் போட்டவாறு அவன் வீட்டுக் குளத்தில் வந்து குதிப்பது, வீட்டு வேலைக்காரி பாமா வலது கையில் சில தாம்பாளங்களை ஏந்தித் துறைக்கு வருவது யாவும் அவன் கண்முன் எழுந்தன.

மிருத்யுஞ்சயன் கதவைத் தட்டி, ''ஓய்! எங்கே இருக்கிறீர்?'' என்றான்.

கதவு திறந்தது. ''என்ன வேண்டும்?'' என்றார் சந்நியாசி.

''நான் வெளியேற வேண்டும். ஆனால் என்னுடன் இரண்டொரு பொன் தகட்டை எடுத்துச் செல்லக் கூடாதா?'' என்றான் மிருத்யுஞ்சயன்.

அவர் ஒன்றும் பேசாமல் தீவட்டியைக் கொளுத்தினார். நீர் நிரம்பிய கமண்டலுவையும் மேல் துணியிலிருந்து இரண்டொரு பிடி அவலையும் வைத்துவிட்டு வெளியேறினார். கதவு மூடிக்கொண்டது.

மிருத்யுஞ்சயன் மெல்லிய பொன் துண்டு ஒன்றை எடுத்து அதை மடித்துத் துகளாக்கினான். அவைகளை அறையின் நாலு பக்கமும் மண்கட்டிகளைப்போல் வீசி எறிந்தான். பல்லால் கடித்து அடையாளம் செய்தான். ஒரு தடவை காலால் அவைகளை உதைத்தான். 'என்னைப் போல் பொன்னை இப்படி எறிந்து விளையாடும் அரசன் எவன் இருக்கிறான்?' என்று எண்ணிக்கொண்டான். மிருத்யுஞ்சயனின் ஆவல் மங்கியது. இந்தப் பொன் துண்டங்களைப் பொடி செய்து காற்றில் பறக்கவிட்டுப் பொன்னுலகை பிடித்த மன்னர்களை ஏளனம் செய்யலாமா என்று எண்ணினான்.

இவ்வாறு முடிந்தவரையில் பொற்பாளங்களோடு விளையாடிவிட்டுக் கடைசியில் களைத்துப் போய்த் தூங்கிவிட்டான். உறங்கி விழித்தபின்பும் நாலு பக்கமும் தங்கக் குவியல்! வாயில் கதவைத் தட்டி உரக்கக் கூவினான்: ''ஓய் சந்நியாசி! எனக்குப் பொன் வேண்டாம். வேண்டாம்!''

ஆனால் கதவு திறக்கிற வழியாக இல்லை. கூவிக் கூவி மிருத்யுஞ்சயனின் தொண்டை வறண்டுவிட்டது. ஒவ்வொரு பொன் துண்டாகக் கதவின்மேல் மோதி அறைந்தான். பலன் இல்லை; மிருத்யுஞ்சயனின் மார்பு அடைத்தது. 'சந்நியாசி வரவே மாட்டாரா? இந்தப் பொன் கூட்டினுள் கிடந்து அணு அணுவாக வற்றி உலர்ந்து சாக வேண்டுமா?'

பொன் குவியலைக் கண்டதும் அவன் உள்ளம் மீண்டும் அலைந்தது. பயங்கரத்தின் கொடூரச் சிரிப்புப் போலத் தங்கப் பாளங்கள் அவனைப் பார்த்து இளித்தன. அவற்றுக்கு உயிர்த்துடிப்பு இல்லை; மாறுதல் இல்லை. மிருத்யுஞ்சயனின்

உள்ளம் நடுங்கியது; ஏங்கியது. அவனுக்கும் அவைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை; துயரப்பட வேண்டிய அவசியமும் இல்லை. அந்தத் தங்கக்கட்டிகளுக்கு வெளிச்சம் அவசியமில்லை; காற்றும் தேவை இல்லை; உயிரும் விடுதலையும் வேண்டியதில்லை; அவை இந்த இருளில் கடினம் பாய்ந்து பிரகாசமாக விளங்கின.

உலகில் அப்போது அந்தி வேளை. அந்தப் பொன்னிற ஒளி! அந்தச் செக்கர் வானம்!.. கணநேரம் கண்களை மயக்கிவிட்டு இருளோடு கலந்தவாறு மறைகிறது. தொழுவத்தில், அவன் மனைவி மாடத்தில் அகல் விளக்கு ஏற்றி வைப்பாள். கோயிலில் பூசைவேளை மணி ஒலிக்கும்.

ஊரிலும் வீட்டிலும் நடக்கும் சின்னஞ் சிறிய நிகழ்ச்சிகள்கூட இன்று அவனுக்குத் தெற்றெனத் தோன்றின. அவர்களுடைய தூங்குமூஞ்சி நாய் வாலையும் தலையையும் சுருட்டிக்கொண்டு முற்றத்தின் ஓரத்தில் தூங்கும் காட்சிகூட நினைவுக்கு வந்து அவன் மனத்தை அசைத்தது. ''தாராகோல் கிராமத்தில் மளிகைக் கடையில் இருந்தோமே; கடைக்காரன் இப்போது விளக்கை அணைத்துவிட்டுக் கடையைச் சாத்திக் கொண்டு மெல்ல வீட்டை நோக்கிச் சாப்பிடச் செல்வான். அந்தக் கடைக்காரன், கவலையோ விசனமோ இன்றி எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறான்! இன்று என்ன கிழமையோ? ஞாயிற்றுக்கிழமையானால் இப்போது சந்தையிலிருந்து ஜனங்கள் திரும்பிக்கொண்டிருப்பார்கள். பின்தங்கிய தோழனை உரத்துக் கூப்பிடுவார்கள். கூட்டங் கூடிப் படகுகளில் அக்கரை செல்வார்கள். மண்பாதையோடு, வரப்புகளைக் கடந்து சருகு உதிர்ந்த கிராமத்துச் சாலைவழியாகக் குடியானவர்கள் இரு கைகளிலும் மீனைத் தொங்க விட்டுக்கொண்டு தலையில் கூடையுடன், இருளில் தாரகை விடும் ஒளியில் வேற்றூர் சென்றுகொண்டிருப்பார்கள்' - இவ்வாறு பூமிக்கு மேல் நடமாடும் மாந்தருடைய வாழ்க்கையில் கலந்துகொள்ள உலகம் தன்னை அழைப்பதுபோல் இருந்தது அவனுக்கு.

அந்த வாழ்க்கை, அந்த வானம், அந்த வெளிச்சம் எல்லாம் இந்த மணி மாணிக்கங்களைவிட உயர்ந்தவை என்று அவனுக்குத் தெரிந்தது. ஒரு கணப் போதுமட்டும் வெளியேறிப் பசுமை போர்த்த மாநிலத் தாயின் புழுதி நிறைந்த மடியில் படுத்து, ஒளி திகழும் தூய நீல ஆகாயத்தின்கீழ்ப் புல்லின் நறுமணம் ஏந்திய காற்றை ஒரு முறை மனமார உட்கொண்டபின் செத்தால்தான் நிம்மதி ஏற்படும் என்று பட்டது அவனுக்கு.

அதே சமயத்தில் கதவு திறந்தது. சந்நியாசி உள்ளே

நுழைந்து, ''மிருத்யுஞ்சயா, என்ன வேண்டும்?'' என்றார்.

''எனக்கு ஒன்றுமே வேண்டாம். இந்தச் சுரங்கத்திலிருந்து, இந்த இருட்டிலிருந்து, இந்தப் புதிரிலிருந்து, இந்தப் பொன் சிறையிலிருந்து என்னை வெளியேற்றினால் போதும். எனக்கு ஒளி வேண்டும்; காற்று வேண்டும்; விடுதலை வேண்டும்.''

''இந்தத் தங்கக் குவியலைவிட விலை மதிப்புள்ள இரத்தினக் குவியல்கள் உள்ளன. ஒரு முறை பார்க்கிறாயா?''

''எனக்கு வேண்டாமே!''

''ஒருதரம் பாரேன்.''

''வேண்டவே வேண்டாம். விருப்பமே இல்லை. கோவணம் தரித்துப் பிச்சை எடுத்துத் திரிந்தாலும் சரி; இங்கே இனி ஒரு கணமும் நில்லேன்.''

''சரி, வா! அப்படியானால் வா.''

அவர் மிருத்யுஞ்சயனின் கையைப் பிடித்து அந்தக் கிணற்றின் அருகில் அழைத்துச் சென்றார். அவன் கையில் அந்தப் பழுப்புக் காகிதத்தைத் தந்து, ''இதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?'' என்றார்.

மிருத்யுஞ்சயன் அந்தக் காகிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்துப் பாழும் கிணற்றில் எறிந்தான்.

ராஸமணியின் பிள்ளை

1

காளிபதனுடைய தாய் ராஸமணி; ஆனால் அவள் அவனுடைய தந்தையின் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று. காரணம், தந்தை தாய் இருவர் பொறுப்பையும் தாயே ஏற்றால் பிள்ளைக்கு அது நன்மை தருவதாகாது. ராஸமணியின் கணவர் பவானிசரணரால் தம் மகனை அதட்டி வழிக்குக் கொண்டுவரவே முடியவில்லை.

எதற்காக அவர் இப்படிச் செல்லம் கொடுத்தார் என்று கேட்டால், அவர் தரும் விடையைப் புரிந்துகொள்ள முன் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

விஷயம் இதுதான்: சானியாடியின் பிரபலச் செல்வர் குடியில் பிறந்தவர் பவானிசரண பாபு. அவருடைய தந்தை அபயாசரணரின் முதல் தாரத்தின் புதல்வன் சியாமாசரணன். முதல் மனைவி இறந்த பிறகு தம் முதுமையில் மறு தாரம் கொண்டபோது அவருடைய புதிய மாமனார் தம் மகளின் பெயருக்கு அவரிடமிருந்து ஆலந்தி கிராமத்தை எழுதி வாங்கிக்கொண்டார். மாப்பிள்ளையின் வயசைக் கணக்கிட்டு, ஒரு வேளை தம் மகள் கைம்பெண்ணாகும்படி நேர்ந்தால் அவள் பிற்காலத்தில் மூத்த தாரத்தின் மகன் தரும் ஜீவனாம்சத்திற்குக் காத்திருக்க வேண்டியதில்லை அல்லவா?

அவர் நினைத்தபடியே முதல் அம்சம் உண்மையாவதற்கு அதிக நாட்கள் செல்லவில்லை. அவருடைய பேரன் பவானிசரணன் பிறந்த புதிதிலேயே மாப்பிள்ளை மரணமுற்றார். மகள், கணவன் எழுதி வைத்த சொத்தை ஏற்றுப் பரிபாலிப்பதைத் தம் கண்ணாலேயே பார்த்துவிட்டு அவரும் மன அமைதியுடன் காலமானார்.

சியாமாசரணன் அப்போது வயதுவந்த யுவகன். அவனுடைய மூத்தமகன் பவானிசரணனைவிட ஓர் ஆண்டு பெரியவன். தன் பிள்ளையுடன் பவானியையும் சியாமாசரணன் வளர்த்து வந்தான். பவானியின் அன்னைக்குச் சொந்தமான சொத்திலிருந்து ஒரு சல்லிக்காசுகூட அவன் தொட்டதில்லை. ஆண்டுதோறும் கணக்கு வழக்குகளைத் தன் சிறிய தாயிடம்

காட்டி இரசிது பெற்றுக்கொள்வான். இதனால் எல்லோரும் அவனை நல்ல மனிதனென்று பாராட்டத் தலைப்பட்டனர்.

ஆனால், உண்மையில் இந்த நேர்மை அறிவின்மையைத் தான் குறிக்குமென்று நினைத்தனர் அனைவரும். பிதுரார்ஜித மான பெரிய சொத்தின் ஒரு பகுதி இரண்டாம் மனைவியின் வசம் சென்றது, கிராமத்தில் எவருக்குமே பிடிக்கவில்லை. சியாமாசரணன் மட்டும், ஏதாவது சூழ்ச்சியால் அந்தப் பத்திரம் செல்லாதபடி, ஆக்கியிருந்தால் சரியான ஆண் மகன் என்று புகழ்வார்கள். இதுபோன்ற விஷயங்களில் அவனுக்கு யோசனை கூறிக் காரியத்தைச் சாமர்த்தியமாக நிறைவேற்றும் ஆட்கள் வேண்டியபோ் இருந்தனர். ஆனால் சியாமாசரணன் தன் குடும்பச் சொத்துக்குக் குறைவு ஏற்பட்டாலும் சிற்றன்னையின் உடைமைகளைத் தொடாமல் தனியாகவே வைத்தான்.

இந்தக் காரணத்தாலும், இயல்பாக உள்ள அன்புணர் வாலும் சிற்றன்னை விரஜசுந்தரி சியாமனைத் தன் வயிற்றுப் பிள்ளையாகவே பாவித்து, அவனிடம் நம்பிக்கை வைத்திருந்தாள். தன் சொத்தைச் சியாமாசரணன் தனித்து வைத்துப் பாதுகாப்பதைக் குறித்து அவள் பன்முறை அவனிடம் உறுத்திச் சொல்லி இருக்கிறாள்: ''ஏனப்பா, இந்தச் சொத்தை நான் போகும்போது என்னுடனா எடுத்துச் செல்லப் போகிறேன்? இது உங்களுடையதே. எனக்கு இந்தக் கணக்கு வழக்கெல்லாம் காட்டவேண்டிய அவசியம் என்னவோ?'' என்பாள். ஆனால் சியாமாசரணன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

சியாமாசரணன் தன் சொந்தப் பிள்ளைகளை அடக்கி ஆள்பவன். ஆனால் பவானிசரணன் விஷயத்தில் அவன் கண்டிப்பாக இல்லை. இதைக் கண்டு யாவரும் ஒரு முகமாய், தன் பிள்ளைகளைவிடப் பவானிமீதுதான் அவனுக்கு அன்பு, ஆசை என்று சொல்வார்கள். இப்படி அன்பின் பிணைப்பில் வளர்ந்த பவானி படிப்பில் முன்னேறவே இல்லை. சொத்து, உடைமைகளைக் கவனிக்கும் திறத்தில் எப்போதுமே சிறு பையனைப் போல் இருந்து தன் அண்ணனையே நம்பிக் காலங் கழித்து வந்தான். சொத்தைக் குறித்து அவன் ஒரு நாளேனும் சிந்தித்ததே இல்லை. எப்போதாவது ஒரு சமயம், ஏதாவது இரசீதில் கையெழுத்துப் போடுவான்; அவ்வளவுதான். எதற்காகக் கையெழுத்துப் போடுகிறோம் என்பதைப்பற்றி அவன் யோசனையே பண்ணமாட்டான்.

இந்தப் பக்கம் சியாமாசரணனின் பெரிய மகன் தாராபுதன் தன் தந்தைக்கு உறுதுணையாக எல்லா விவகாரங்களை

யும் கற்றுத் தேர்ந்தவனுகியிருந்தான். சியாமாசரணன் கால மான பிறகு தாராபதன் பவானியிடம், ''சிற்றப்பா, நாம் இனி ஒரே குடும்பமாக இருக்க முடியாது. என்றைக்காவது நமக் குள் ஓர் அற்ப விஷயத்தைப்பற்றி மனத்தாங்கல் ஏற்பட லாம். அப்போது இந்தக் குடும்பத்தில் பிளவு தோன்றும்'' என்ருன்.

தனியாகப் பிரிந்து போய், தன் சொந்த உரிமைகளைக் கவனித்துக்கொள்ளும் காலம் வரும் என்று பவானி கனவிலும் நினைக்கவில்லே. அவன். பிள்ளேப்பிராயம் தொட்டு வாழ்ந்து வரும் ஒரு குடும்பம் பிரியவே பிரியாதென்று நினைத்தான். திடுமென இப்படி ஒரு பிளவுக்கான செய்தியைக் கேட்டதும் அவன் மனம் ஆகுலத்தில் ஆழ்ந்தது.

வமிச கௌரவம் பாதிக்கப்படுமே, உற்ருர் உறவினருக்கு மனவருத்தத்தை உண்டாக்குமே என்றெல்லாம் நினைத்து, துளியேனும் அசைந்து கொடுப்பவனல்ல தாராபதன். பவானியோ எப்படி இந்த உரிமைகளேப் பிரித்துக்கொள்வது என்ற சிந்தைக்கு ஆளானன். அவன் இவ்வாறு வேதனைப் படுவதைக் கண்டு தாராபதன், ''சிற்றப்பா, எதற்காக இந்த வேதனை? நமக்குள் என்னவோ பாகப் பிரிவினை ஆகியிருக் கிறது. தாத்தா உயிருடன் இருந்தபோதே இதைச் செய்து விட்டார்'' என்ருன்.

பவானி புரிபடாதவனுய், ''உண்மையாகவா? எனக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாதே!'' என்ருன்.

''அழகுதான் போ! இதுகூடவா தெரியாது உனக்கு? ஊரில் அத்தனை பேரும் சொல்லுவார்களே; பின்னல் ஏதாவது சச்சரவு ஏற்படப் போகிறதே என்று தாத்தா உன் பாகத் திற்கு ஆலந்தி கிராமத்தையே தனியாக எழுதி வைத்து விட்டாரே! இத்தனை நாள் அதிலிருந்துதான் நடந்து வரு கிறது'' என்ருன்.

பவானிசரணன், 'இருக்கலாம்' என்று எண்ணி, ''இந்த வீடு?'' என்ருன்.

அதற்குத் தாராபதன், ''வேண்டுமானுல் இதை நீயே வைத்துக்கொள். இன்னெரு கல்வீடு இருக்கிறதே; அதுவே போதும் எங்களுக்கு'' என்ருன். தாராபதன் இவ்வளவு எளிதில் பிதுரார்ஜிதமான வீட்டையும் விட்டுத் தர முற் பட்டதைக் கண்டு அவனுக்குள்ள உதார குணத்தை வியந் தான் பவானி. மற்ருெரு வீடு எங்கிருக்கிறது, அது எந்த மாதிரி என்பதை அறிய அவன் ஆவல் கொள்ளவே இல்லே.

பவானி தன் அன்னேயிடம் வந்து, நடந்ததைத் தெரிவித்தான். அவள் நெற்றியில் அறைந்துகொண்டு,

''இதென்னடா பேச்சு? ஆலந்தி கிராமம் எனக்கே, என் ஜீவனும்சத்திற்காக எழுதி வைத்த சொத்தாயிற்றே! அதில் வரும்படியும் அதிகம் இல்லை. பிதுரார்ஜிதச் சொத்தில் உன் பங்கு உண்டே?'' என்றாள்.

பவானி, ''தாராபதன்தான் சொன்னான்; நமக்காக அப்பா அந்தக் கிராமத்தை எழுதி வைத்திருக்கிறாராம். வேறு சொத்து இல்லையாம்'' என்றான்.

விரஜாசுந்தரி, ''அது நடக்காத பேச்சு! எசமானர் தம் கையாலேயே உயில் இரண்டு காகிதங்களில் எழுதி வைத் திருக்கிறார். இரும்புப் பெட்டியில் இருக்கிறதே'' என்றாள்.

இரும்புப் பெட்டியைத் திறந்தார்கள். அதில் ஆலந்தி கிராமத்தின் தானபத்திரம் ஒன்றே இருந்தது. உயிலைக் காணவில்லை.

இவர்களுக்கு யோசனை கூறும் புரோகிதப் பிராம்மணரின் மகன் பகளாசரணனை அழைத்தனர். அவன் மிகவும் கூர்மை யான அறிவு படைத்தவனென்பது ஊராருடைய கருத்து. அவனுடைய தந்தை மந்திரத்தில் நிபுணர்; அவருடைய மகன் வழக்கு விவகாரங்களில் தந்திரம் மிக்கவன்.

இப்படித் தந்தையும் மகனும் கிராம சமுதாயத்தின் மறுமை இம்மை விஷயங்களைத் தமக்குள் பகிர்ந்துகொண் டிருந்தனர். பிறர் விஷயத்தில் இவர்கள் செய்யும் காரியம் என்ன பயன் தருமோ தெரியாது, இவர்கள் வரைக்கும் நற் பயனைத் தருவதாக இருந்தது!

''உயில் இராமல் போனால் என்ன? பிதுரார்ஜிதச் சொத் தில் சமபாகம் உண்டு'' என்றான் பகளாசரணன்.

அதே சமயம் எதிர்க் கட்சி ஓர் உயிலை வெளியிட்டது. அதில் பவானிசரணனுக்குப் பங்கு எதுவும் குறிப்பிடப்பட வில்லை. சொத்தைப் பேரப்பிள்ளைகளுக்கே எழுதி வைத்திருந்தது. அதை எழுதியபோது அபயாசரணருக்கு இந்தப் பவானி பிறக்கவே இல்லை.

பகளாவை நம்பிப் பவானி வழக்கெனும் ஆழ்கடலில் இறங்கிவிட்டான். அவன் அதைக் கடந்து கரையேறிய போது இரும்புப் பெட்டியைத் திறந்து பரிசோதிக்கையில் அந்தத் திருமகளின் கருவூலம் சூனியமாகி இருந்தது. இரண் டொரு சாதாரணமான பொன் நகைதான் மிச்சமாக நின்றது. பிதுரார்ஜிதச் சொத்து எதிரியின் கைக்குப் போயிற்று. ஆலந்தி கிராமத்தின் பெரும்பகுதி நிலபுலன்களை விற்றுக் கரைத்தாயிற்று, வழக்காடுவதற்காக. வமிச கௌரவத் திற்கு ஏதோ கொஞ்சம் மிஞ்சியது. அந்தப் பழைய வீடு நிலைத்தது. அதைப் பெரிய வெற்றியாக நினைத்தான் பவானி.

தாராபதனைச் சேர்ந்தவர்கள் வேறிடத்திற்குப் போய்விட்டனர். இரு தரத்தாருக்கும் முகாலாபமே இராமல் போய்விட்டது.

2

சியாமாசரணனின் வஞ்சகம் விரஜசுந்தரியை வேலெனத் துளைத்தது. அநீதமாக எசமானரின் உயிலைக் களவாடி அவன் தன் தம்பியை வஞ்சித்துத் தந்தைக்குத் துரோகம் புரிந்ததை அவளால் மறக்கவே முடியவில்லை. அவள் மூச்சு இருந்தவரை ஒவ்வொரு நாளும் வெய்துயிர்த்துச் சொல்லுவாள்; ''தருமம் இதை ஒருபோதும் பொறுக்காது'' என்பாள். பவானிசரணனுக்கு ஆறுதல் தர ஒரு நாள் விடாமல் அவள், ''எனக்குச் சட்டம், நியாயம் எதுவும் புரியாது போனாலும், இதோ சொல்லுகிறேன்: எசமானருடைய அந்த உயிலை மறைத்து வைக்கவே முடியாது. அது உனக்குக் கட்டாயம் கிடைத்தே தீரும்'' என்பாள்.

எப்போதும் இதுபோன்ற ஆறுதல் ஊட்டும் சொற்களைக் கேட்டுக் கேட்டுப் பவானியின் மனத்துள் அசையாத நம்பிக்கை வளர்ந்து வந்தது. குலமகளிரின் வார்த்தை பொய்யாகாது, தனக்குச் சேர வேண்டியது என்றாவது ஒரு நாள் தன்னை அடைந்தே தீருமென்பதை அவன் உள்ளூற உணரலானான். அன்னையின் மரணத்திற்குப் பிறகு இந்த நம்பிக்கை பின்னும் திடமாகியது. மரணத்தால் ஏற்பட்ட இந்தப் பிரிவின் மூலம் தன் அன்னைக்குள்ள பெருமை பன்மடங்கு உயர்ந்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. வறுமையினால் சூழும் அவலங்களை அவன் துளியேனும் பொருட்படுத்தவில்லை. சோற்றுக்கும் உடைக்கும் இன்னல் நேர்ந்தபோது இப்படி ஒரு நிலை வருவதும் ஒருவித மாறுதலே, நாடக அபிநயமே, இது உண்மையே அன்றென நினைப்பான். டாக்கா துணியை ஒரு சமயம் உடுத்தவன் சறுக்கும் காலம் வந்து மோட்டாத் துணியை வாங்குவதை எண்ணும்பொழுது அவனுக்குச் சிரிப்பே வரும். பூஜை விழாவில் முன்போல் தாம்தூம் பண்ணிச் செலவு செய்ய வழியில்லை. இரண்டு பூவைப் போட்டு மந்திரம் உச்சரிப்பதோடு திருப்தி அடைவான். அவனுக்குத் தெரிந்தவர் இந்த வறுமையைக் கண்ணுற்றுப் பெருமூச்செறிந்து அந்தப் பழைய வைபவத்தைப்பற்றிப் பேசுவார்கள். இவை யாவும் சில நாட்களே நீடிக்கும். அப்புறம் நல்ல காலம் வந்ததும் பூஜை விழாவை ஆரவாரமாக நடத்தும்பொழுது இவர்கள் திகைத்துப் போவார்கள். அந்த வருங்காலத்தில் அவனுக்கு நல்ல தசை அடிக்கக் காத்திருக்கை

யில், இப்போது இந்த வறுமையைச் சிறிதும் அவன் லட்சியம் செய்யவில்லை.

இதுபோன்ற விஷயங்களைக் குறித்து அவனுடன் ஆலோசனை நடத்துபவர்களில் முக்கியமானவன் வேலைக்காரன் நோடோ. எத்தனையோ தடவை வறுமை நிலையால் சுருங்கிப் போன பூஜை விழாக்களின்போது எசமானனும் சேவகனும் சேர்ந்து, வருங்காலத்தில் நல்ல காலம் பிறக்கும்பொழுது இதே விழாவை எப்படியெல்லாம் நடத்த வேண்டுமென்பதைப் பற்றி ஆழ்ந்து யோசனை செய்வார்கள். நடக்கப்போகும் அந்தச் சிறப்பான விழாவுக்கு யார் யாரை அழைப்பது? கல்கத்தாவிலிருந்து நாடகக் குழுவினரைத் தருவிப்பதா, வேண்டாமா? - இவை போன்ற வாதப் பிரதிவாதங்கள் அவர்களிடையே மூளும். இயல்பாகவே சிக்கனப் பேர்வழியான நடவிஹாரி (நோடோ) வரப்போகும் விழாச் செலவுப் பட்டியலில் ஏதாவது குறைத்துப் போட்டால் பவானியிடம் திட்டு வாங்கிக்கொள்வான் - இப்படி அவர்கள் பொற்கனவு கண்டனர்.

மொத்தத்தில் தன் சொத்துக்களைப்பற்றிப் பவானி யாதொரு கவலையும் மனத்தில் கொள்ளவில்லை. ஒரே ஒரு விஷயந்தான் அவனுக்குக் கவலை மூட்டக் காரணமாக இருந்தது; அது தன் சொத்து யாரை அடையும் என்பதேயாம். இதுவரை அவனுக்கு மக்கட்பேறு எதுவுமே இல்லை. பெண்ணைப் பெற்றவர்கள், இதமாக மற்றொரு விவாகம் செய்து கொள்ளத் தூண்டவே, ஒவ்வொரு சமயம் அவனுக்குச் சபலம் தட்டும். புதிய பெண்ணை மணப்பதில் அவனுக்கு விருப்பம் உண்டு. ஆனால் பழகிய பழைய சேவகனும், உணவையும் போல் முதலில் கட்டிக்கொண்ட பெண்ணை அவன் கௌரவப் பொருளாக மதிப்பவன். செல்வம் நிரம்ப உடையவர்களுக்கு எப்போதும் மக்கட்பேறு இருப்பதில்லை; இந்த முரண்பாட்டை அவன் நன்கு உணர்ந்தவன்.

அவனுக்கு ஒரு மகன் பிறந்தபோது, இனிமேல் பாக்கியம் அவனுக்குத் திரும்பும் என்று எல்லோரும் சொன்னார்கள். சொர்க்கவாசியான அந்த அயோசரணரே மறுபடியும் மண்ணகத்தில் தோன்றினாரோ என்று நினைப்பதற்கு, அந்தக் குழந்தை அவருடைய விசாலமான கண்களை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருந்தது. குழந்தையின் ஜாதகத்தை ஆராய்ந்தபொழுது, பாக்கிய ஸ்தானங்களில் சுபக்கிரகங்கள் கூடியிருந்ததால், கட்டாயம் போன சொத்துத் திரும்பக் கிடைத்துவிடுமென்பதை உறுதி செய்தன.

மகன் பிறந்த பின்னே பவானியின் போக்கில் சில மாறுதலை

கள் தென்பட்டன. இதுகாறும் வறுமையை அவன் விளையாட்டென்று நினைத்து அதைப் பொறுத்து வந்தான். ஆனால் மகனுடைய விஷயத்தில் அத்தகைய மனநோக்கை அவனால் கொள்ள முடியவில்லை. சானியாடியின் புகழ்வாய்ந்த சௌதுரி குலத்தின் விளக்கு அணையும் தறுவாயில் நல்ல காலும் நாளும் சேர்ந்த ஒரு பாக்கிய தசையால், சுடரென ஒரு குழந்தை இந்த உலகில் தோன்றியுள்ளதே; அதற்கு ஆற்ற வேண்டிய கடமை ஒன்று இருக்கின்றதல்லவா! இன்றுவரை அந்தக் குலத்தில் பரம்பரையாக வரும் ஆண்பிள்ளைகள் யாவரும் வாழ்நாள் முழுவதும் நல்ல நிலையிலேயே இருந்திருக்கிறார்கள்; ஆனால் தன் புதல்வன் இந்த நிலையில் இராதது பவானியின் உள்ளத்தை வருத்தியது. 'இந்தக் குடியில் நான் அநுபவித்த நலன்களை என் மகனுக்கு என்னால் தர முடியாமல் இருக்கிறதே! அவனை நானே ஏமாற்றி வருகிறேன்' என்று அவன் நினைக்கலானான். மகன் காளிபதனுக்குப் பொன்னாலும் பொருளாலும் அவன் செய்ய முடியாமற் போயினும், தன்னுடைய ஆதரவைத் தந்து அந்தக் குறையை நிரப்ப முனைந்தான். பவானியின் மனைவி ராஸமணியோ வேறு இயல்பு உடையவள். அவள், புகழ் மிக்க இந்தச் சானியாடி சௌதுரி குலத்தைப்பற்றிப் பெருமைப்படவே இல்லை. பவானிக்கும் இது தெரியும்; தனக்குள் சிரித்து, 'ஏழை வைணவக் குடும்பத்தில் வந்த அந்தப் பெண்ணுக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது? அவளை மன்னிப்பதுதான் உசிதம்' என்று நினைப்பான்.

ராஸமணியே அதை ஒப்புக்கொள்வாள். ''நான் ஏழைக் குடும்பத்துப் பெண்தான். எனக்கு உங்கள் மதிப்பைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு நியாயமே இல்லை. காளிபதன் உயிருடன் இருந்தால் போதும்; அதுவே எனக்குப் பெரிய செல்வம்'' என்பாள். உயில் மீண்டும் கிடைத்துவிடுமா, காளிபதனுடைய யோக ஜாதக வசத்தால் தூர்ந்துபோன குடும்ப ஆற்றில் வெள்ளம் வருமா என்பதைப்பற்றியெல்லாம் அவள் தன் மூளையைக் குழப்பிக்கொள்ளவில்லை. இரண்டொரு சமயம் தன் மனைவியுடன் அவன் அதிர்ஷ்டம் திரும்புவதைக் குறித்து ஆலோசனை செய்தபோது அதில் அவ்வளவாக அவள் சுவை காணவில்லை. பழைய மகிமை, வர இருக்கும் பாக்கியம் இவ்விரண்டிலும் அவனுடைய மனைவி கவனமே செலுத்தவில்லை. நடப்பதைக் குறித்துத்தான் அவள் நினைவு நிலைத்தது.

எவ்வளவு தொல்லைகளுக்கிடையே குடும்பத்தை நடத்த வேண்டும்! ஏனென்றால், திருமகள் போய்விட்டாலும் அவள்

விட்டுச் சென்றவை இரண்டொன்றினால் உதவியை விட இடையூறே அதிகமாக இருந்தது. இந்தக் குடும்பத்தவருக்குச் சமைக்கும் காலமானாலும் வந்துபோகும் உற்றார் உறவினரை எப்படித் துரத்திவிட முடியும்? பவானியும் அத்தகைய ஆளல்ல; தனக்கு இல்லாத குறை இருந்தாலும் பிறரைப் புரப்பது அவனிடத்திலுள்ள ஒரு நற்பண்பு.

இத்தகைய ஒரு குடும்பத்தைச் செவ்வனே செலுத்தும் பொறுப்பு ராஸமணியிடமே இருந்தது. எவரையும் நச்சி உதவியை நாடாதவள் அவள். காரணம், இந்தக் குடும்பம் நல்ல நிலையில் இருக்கையில் அதை அண்டி வந்தவர்கள் யாவரும், கவலையின்றிச் சோம்பித் தம் நாட்களைக் கழித்தனர். சௌதுரி குலவிருட்சம் இவர்கள் இன்துயில் கொள்ளத் தண்ணிய நிழலைப் பரப்பியது. இவர்கள் வருந்தாமலே உண்பதற்கு நற்கனிகளைப் பயந்தது; எவரும் எந்த விதமான சிரமமும் படவில்லை; உண்டு களித்து உறங்கினர். இத்தகையோரைத் தனக்கு உதவியாக வேலை செய்யச் சொன்னால் அவமதிப்பாக நினைப்பார்கள். சமையற் கட்டிலிருந்து வரும் புகையினால் இவர்களுக்குத் தலைவலி வந்துவிடும். சற்று நடந்து இரண்டு வேலை செய்தால் முதுகை வாயு பிடித்துக் கொள்ளும்; அப்புறம் வைத்தியனை வரவழைத்து ஏதாவது எண்ணெய் சாப்பிடத்தான் சொல்ல வேண்டி வரும். இந்த மாதிரி யாருக்காவது வேலை தருவது தாராளமான தன்மைக்கே புறம்பானது, சௌதுரி குலத்துக்கே அவமானம் தருவதாகு மென்று ஒரேயடியாய்ப் பவானி சொல்லிவிடக் கூடும்.

அதனாலேயே எல்லாப் பொறுப்பையும் தானே ஏற்றாள் ராஸமணி. இரவு பகல் இல்லை; எப்படி எப்படியோ அந்தக் குடும்பத்துக்கு வேண்டியதைக் குறைவின்றிச் செய்து வந்தாள். இவ்வாறு அன்றாடப் போராட்டத்தில் ஈடுபட ஈடுபட மனிதர் யாருமே கடினம் பாய்ந்தவராவர்; மென்மையே போய்விடும். ராஸமணி சமையலறையில் வெறும் சமையல் செய்வதுடன் நிற்கவில்லை; வேளையில் உபசரித்துப் பரிமாறுவதும் உண்டு. அவளது சோற்றை உண்டுவிட்டுப் பகல் தூக்கம் போடும் வீணர்கள் அவள் இட்ட அன்னத்தைத் தூஷிப்பர்; அந்த அன்னபூரணியையும் திட்டுவர்.

வீட்டு வேலையோடு நின்றுவிடவில்லை அவள்; கிராமத்திலுள்ள நிலபுலன்கள் இவற்றின் கணக்கு வழக்கு, குடியானவர்களிடமிருந்து வாரம் தண்டுவது இவற்றையும் ராஸமணி செய்தாக வேண்டும். பவானிசரணன் அபிமன்யுவின் முறைக்கு நேர்மாறான வழியில் இறங்குபவன். வியூகத்திலிருந்து (சிக்கல்) அவனுக்கு வெளியே வரத்தான் தெரியும்; உள்ளே

புகுந்து வேலை செய்யவே தெரியாது. பணம் யாருக்காவது தருவான்; போய்க் கேட்கமாட்டான். இந்த விஷயத்தில் ராஸமணி சற்றுக் கண்டிப்பான பேர்வழியானதால் குடியானவர்களிடத்தில் அவளுக்கு நல்ல பெயர் இல்லை. எங்கிருந்து அவளுக்குப் பெருந்தன்மையான இயல்பு வருமென்றெல்லாம் கணக்குப் பிள்ளைகள் புறங் கூறுவார்கள். நடுநடுவே அவளுடைய கணவனும், அவளைக் குத்திக் குத்திக் காட்டுவான், அற்ப புத்தி படைத்தவள் என்று. இந்த வசவுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணுயிருப்பாள். புயல் வேகத்துடன் வேலை செய்வாள்; அவளை எதிர்த்து நிற்க எவருக்கும் துணிவிராது.

எந்த வேலைக்கும் தன் கணவனை அழைப்பதில்லை அவள். தப்பித் தவறிப் பவானிசரணன் ஒன்றுக்கொன்று ஏறுமாறுகச் செய்துவிடப் போகிறானே என்ற திகிலே அவளுக்கு. ''நீங்கள் சும்மா இருங்கள்; நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்று கூறிக் கணவனைக் கையால் ஆகாதவனாய்ச் செய்துவிட்டுக் காரியங்களைச் சாதிப்பாள். கணவனும், பிறந்ததுதொட்டு இப்படி இருந்து இருந்து நன்றாகப் பழகிவிட்டதால் மனைவியின் பேச்சுக்கு மாறு சொல்லிக் காரியம் செய்ய முன்வருவதில்லை. ராஸமணிக்கு நெடுநாள் வரை பிள்ளைப் பேறே இல்லை. உழைப்பிற்குப் பின்வாங்கி, பிறரை நத்தி வாழும் தன் கணவனிடம் மனைவிக்குள்ள காதலையும், அன்னைக்குரிய அன்பையும் செலுத்தி வந்தாள். பவானியை வயதாகிய பிள்ளையாகவே அவள் நினைத்து வந்தாள். இதனாலேயே மாமியார் மறைந்ததும் அவளே வீட்டுக்குக் கர்த்தாவாகவும் எசமானியாகவும் விளங்கினாள். புரோகிதரின் மகன் பகளாவைப் போன்ற பல இச்சகம் பாடுவோரிடமிருந்து கணவனைக் காக்க மிகவும் கடுமையாகத் தன் ஆட்சியைச் செலுத்தி வந்தாள். இதனால், அவர்களுக்கு அவளைக் கண்டால் சிம்ம சொப்பனம். எரிச்சலை அடக்கிக்கொள்வது, கூரிய சொற்களை உபயோகித்தாலும் நயமாகச் சொல்வது, ஆடவர்களிடம் வணங்கிச் செல்வது இவை போன்ற பெண்பாலாருக்குரிய அரிய பண்புகள் அவளிடத்தில் இல்லை.

இதுவரை பவானிசரணன் அவளுக்குக் கட்டுப்பட்டே நடந்து வந்தான். ஆனால் காளிபதன் விஷயத்தில் அவளுக்கு அடங்கிப் போவது அவனுக்குச் சற்றுக் கடினமாகவே இருந்தது. அதற்குக் காரணம் இதுவே: ராஸமணி தன் மகனைப் பவானிசரணனின் நோக்கிலிருந்து பார்க்கவில்லை. தன் கணவனை, 'பாவம்! அவர் என்ன பண்ணுவார்? அவர்மீது குற்றமில்லை; பெரிய இடத்துப் பிள்ளையாகப் பிறந்தவர்'

என்று எண்ணினாள். தன் கணவன் சிரமம் எடுத்துக்கொள்வான் என்று எண்ணவே இல்லை. இல்லாமையோ பொல்லாமையோ, தன்னால் முடிந்தமட்டும் கணவனுக்கு வேண்டியதைச் செய்வாள். தன் வீட்டில் வெளியார் விஷயத்தில் கண்டிப்பாக இருந்தாலும் பவானியின் உணவு முதலிய சௌகரியங்களில் சிறிதேனும் குறைவு இருக்காது. திண்டாட்டமான நாட்களில்கூடக் கஷ்டத்தை அவன் கண்ணில் படும்படி காட்டவே மாட்டாள். என்றைக்காவது அவனுக்கு வாய்க்குச் சுவையாக இரண்டு தினுசு பண்ணிப் போட முடியாதுபோனால், சட்டென்று சாமர்த்தியத்துடன் அதை மூடி மறைக்க, ''ஐயோ, பாழும் நாய் உள்ளே நுழைந்து, பண்ணி வைத்ததையெல்லாம் வாயில் போட்டுக்கொண்டு போய் விட்டதே!'' என்பாள்; இப்படிப் பராக்காக இருந்ததற்குத் தன்னையே திட்டிக்கொள்வாள். எசமானர் புதிதாக வாங்கிய வேஷ்டி காணாமல் போய்விடும்; அந்தக் குற்றத்தை வேலையாள்மீது சுமத்துவாள். அப்போது பவானி தன் அன்பிற்குரிய நோடோ பக்கமாகப் பேசி எசமானியின் கோபத்துக்கு அவன் ஆளாகாமல் பார்த்துக்கொள்வான். அப்போது அவள் தன் கணவனையே, ''நீங்கள்தான் எங்கேயோ மறதியாக வைத்துவிட்டுத் தொலைந்து போயிருக்கும்!'' என்று குறை கூறுவாள்.

பவானி விஷயத்தில் இந்த முறையைக் கையாண்டாள். ஆனால் தன் மகனையோ, தன் கணவனுக்குச் சமமாக நடத்தவில்லை. அவன், அவள் பெற்றெடுத்த பிள்ளை. என்ன வேண்டியிருக்கிறது அவனுக்கு நாகரிகப் பகட்டு? அவள் எந்த இன்னலையும் பொறுத்துக்கொண்டு போகும் வன்மை உடையவள். துயர் ஒரு புறம் இருப்பினும், மறு புறம் சலிப்புத் தட்டாமல் உழைப்பாள். அது இருந்தால்தான் முடியும், இது இராது போனால் முடியாது என்பதெல்லாம் அவளிடத்தில் செல்லாது. காளிபதனது உணவு உடுப்பு விஷயத்தில் அவள் கண்டிப்பாகவே இருந்தாள். பொரி உருண்டை போன்ற ஏதாவது சிற்றுண்டியைத்தான் கொடுப்பாள் அவனுக்கு. குளிருக்குப் போர்த்துக்கொள்ள மட்டரக மோட்டாப் போர்வையையே அவனுக்குத் தருவாள். அவன் சரிவரப் பாடம் படிக்காது போனால் உபாத்தியாயரிடம் கூறி அவனை அதட்டி வழிக்குக் கொண்டு வருவாள்.

இங்கேதான் சங்கடம் இருந்தது. பெட்டிப் பாம்பாகிய பவானி நடுநடுவே எதிர்த்துக்கொள்வான். ஆனால் ராஸமணி கண்டும் காணாததுபோல் போய்விடுவாள். என்றுமே பவானி பலமுள்ள எதிரியிடம் தோல்வியுறுவான். அதேபோல்

இந்தச் சமயமும் அவன் தோல்வியடைய வேண்டியதாயிற்று; ஆனால் மனத்துள் புகைந்த இந்த எதிர்ப்புப் போகவே இல்லை. சௌதுரி குடும்பத்தில் பிறந்த ஒரு மகன் வெறும் வெல்லப் பொரி தின்பதுதான் அவனுக்குக் கண்ணராவியாக இருந்தது. ஒவ்வொரு நாளுமா இதை அவன் பார்த்துச் சகிப்பான்?

பூஜை விழாவின்போது, தந்தை இருந்த காலத்தில் புதுப் புது மோஸ்தரில் என்ன அழகான உடைகள் இருக்குமென்று பழைய நினைவுகளில் தோய்ந்து உவகை கொள்வான். இப் போது ராஸமணி தன் மகனுக்குத் தரும் மலிவான உடை களை அந்தக் காலத்தில் கீழ்த்தரமான வேலையாள்கூடச் சீந்த மாட்டான். ராஸமணி தன் கணவனுக்கு, ''இப்போது தனக் குள்ளதைக்கொண்டே காளிபதன் மகிழ்ச்சி அடைகிறான்; அந்தப் பழைய காலத்து டம்ப வாழ்வைப்பற்றி ஒன்றுமே அறியாதவன் அவன். எதற்காக நீங்கள் பரபரப்படைய வேண்டும்?'' என்று எடுத்துச் சொல்வாள். ஆனால் பவானி அதை மறக்கவே இல்லை; 'பாவம், காளிபதனுக்கு அந்தக் குலத்தின் கண்ணியம் பற்றியெல்லாம் தெரியாததனாலேயே அவள் இப்படி அவனை நடத்துகிறாள்' என்று குமுறினான். அற்பமான பொருள்களைப் பெற்று ஆனந்தம் பொங்க ஓடி யாடும் தன் மகனைப் பார்க்கப் பார்க்க அவன் மனம் பொருமி யது.

பவானி வழக்குத் தொடுத்த பின்பே அவனுடைய புரோ கிதர் வீட்டின் கஷ்ட காலம் சற்று விலகிவிட்டதென்றே சொல்லலாம். இது போதாமல், புரோகிதரின் மகன் ஒவ் வோர் ஆண்டும் பூஜை சமயத்தில் கல்கத்தாவிலிருந்து பல வகையான கண்ணைக் கவரும் மலிவுச் சாமான்களைக் கொண்டு வந்து நல்ல வியாபாரம் நடத்துவான். மாயமாக மறையும் காளிச் சித்திரங்கள், ஏலத்தில் எடுத்த மலிவான மல், ஸாடின் சேலைகள், கவிதை வரைந்த கரைபோட்ட புடைவைகள் - இப்படி எத்தனையோ சாமான்களைக் காட்டி நாட்டுப்புற மகளிரின் மனத்தைக் கவர்ந்து, காசு சம்பாதித்து விடுவான். கல்கத்தாவில் சாதாரணமானவர்கள் வீட்டில்கூட இந்த நாகரிகப் பொருள் இருக்கும்போது இந்தப் பட்டிக்காட்டுத் தனிமையைப் போக்கத் தாமும் ஏன் இவற்றை வாங்கக் கூடா தென்று கிராமத்தவர்கள் இப்பொருள்களில் பணத்தை வீணாக்குவர்.

ஒரு சமயம் பகளாசரணன் மிக விநோதமான துரை சானி பொம்மை ஒன்று கொண்டு வந்திருந்தான். அதன் ஒரு பகுதியில் சாவி போட்டுத் திருகினால் அந்தப் பதுமை எழுந்து மிக வேகமாகத் தனக்குத் தானே விசிறிக்கொள்ளும்.

கோடையைக் கண்டால் வெருவும் இந்தத் துரைசானிப் பொம்மை வேண்டுமென்று காளிபதனுக்கு ஆசை. தன் தாயின் குணம் அவனுக்குத் தெரியும்; அதனால் அப்பாவிடம் சென்று, மிகவும் உருக்கமான குரலில் ஆசையை வெளியிட்டான். உதார மனப்பாங்குடைய பவானியும் வாங்கித் தருவதாக வாயை விட்டுவிட்டான். ஆனால் விலையைக் கேட்ட போது அவன் முகம் வாடியே விட்டது.

பண விஷயங்கள் எல்லாம் ராஸமணியின் கையில்தான் இருந்தன. ஏதாவது தேவையானால் அவளைக் கேட்டு வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். பவானிசரணன் பிச்சைக்காரனைப் போல் தன் அன்னபூரணியின் வாயிலில் வந்து நின்றான். சம்பந்தம் இராத விஷயங்களைப்பற்றிச் சற்று நேரம் அவளிடம் அளந்துவிட்டு, சரேலெனத் தன் மனத்திலுள்ளதைச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டு ராஸமணி சுருக்கமாகவே, ''உங்களுக்கு என்ன, ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதா?'' என்றாள்.

பவானி சிலகணம் ஒன்றும் பேசாமல் யோசனை பண்ணலானான்; அப்புறம் தடாலென, ''இதோ பார், எனக்கு அன்றாடம் நெய்யும் பாயசமும் வார்க்கிறாயே, அவற்றிற்கு இனிமேல் அவசியம் இல்லை'' என்றான்.

ராஸமணி, ''அவசியம் இல்லையா?'' என்றாள்.

பவானி, ''இதனால் பித்தந்தான் அதிகமாகுமாம் என்று வைத்தியர் சொல்லுகிறார்'' என்றான்.

ராஸமணி தலையை வேகமாக ஆட்டி, ''அந்த வைத்தியனுக்கு ஏதோ மூளைக் கோளாறு போல் இருக்கிறது'' என்றாள்.

பவானி, ''இரவு இனிமேல் லுசி (பூரி)க்குப் பதிலாகச் சாதமே போட்டுவிடு. லுசி தின்னால் உப்புசமாக இருக்கிறது'' என்றான்.

ராஸமணி, ''வயிறு நிரம்பத் தின்று இதுவரை நீங்கள் உப்புசத்துடன் அவதிப்பட்டதாகத் தெரியவில்லையே! பிறந்ததே பிடித்து இந்த லுசி தின்றுதானே நீங்கள் வளர்ந்தது?'' என்றாள்.

பவானிசரணன் எந்த விதமான தியாகத்தையும் ஏற்கத் தயாராக இருந்தான். ஆனால் இந்த விஷயத்தில் மிகக் கண்டிப்பாக இருந்தான். நெய்யின் விலை ஏறுகிறது; ஆனால் லுசியின் எண்ணிக்கையோ குறையவில்லை. பகல் வேளைப் பாயசம் என்னவோ இருக்கிறது; தயிர் எதற்கு வேறு!— இவை யாவும் அளவுக்கு மீறிய செலவானாலும், அந்தச் சௌதுரி குலத்துப் பாபுக்கள் பாயசம், தயிர் நெய்யுடனேயே உணவு கொள்பவர்கள். என்றாவது ஒரு நாள் பவானி

சரணனுக்குத் தவறுமல் வார்க்கும் தயிருக்கு முடை ஏற் பட்டால் ராஸமணி சிறிதும் பொறுக்க மாட்டாள். ஆகையால், அவன் இப்படியெல்லாம் தயிர், நெய், பாயசம் எதுவும் வேண்டாமென்று பிகுப் பண்ணியும் அந்தத் துரைசானிப் பொம்மையை விலைக்கு வாங்க வழியில்லை!

பவானிசரணன் தன் புரோகிதரின் மகன் வீட்டிற்குத் திடுமென்று காரணமின்றிச் சென்றான். பல பேச்சுக்கிடையே அவன் அந்தப் பொம்மையைப்பற்றி விசாரித்தான். இப் போது பவானியின் பொருளாதார நிலை மிகவும் இறக்கத்தில் இருப்பது பகளாவுக்குத் தெரியும். தன் சங்கட நிலையைச் சொல்லிக்கொள்ளவோ பவானிக்குத் வெட்கமாக இருந்தது. அதை மீறிக்கொண்டு, தன் மேல் அங்கவஸ்திரத்தின் மறை விலிருந்து, காகிதத்தில் சுற்றியிருந்த விலை மதிப்புள்ள காஷ்மீர்ச் சால்வையை வெளியே எடுத்து, ''சந்தர்ப்பம் சரி யாக இல்லை இப்போது - கையில் ரொக்கப் பணம் இல்லை. அதனால் இதை அடகு வைத்து அந்தப் பொம்மையைக் காளி பதனுக்காக வாங்க வந்தேன்'' என்றான்.

மதிப்புள்ள ஒரு பொருளுக்குப் பதிலாக ஓர் அற்பமான சாமானைக் கொடுக்கப் பகளா தயங்காது போனாலும், இவ் வளவு விலை உயர்வான சாமானை எப்படி ஜீரணம் பண்ணுவது என்பதே அவனுடைய பிரச்னை. அவன் இதை அணிந்தால் ஊராரும் ஏசுவர்; அந்த நீண்ட நாக்குப் படைத்த ராஸமணி மானம் போகும்படி அல்லவோ தூற்றுவாள்? இதனால் பவானி அந்தச் சால்வையை மறுபடியும் சுருட்டி எடுத்துக்கொண்டு திரும்ப வேண்டியதாயிற்று.

காளிபதன், ஒரு பக்கம் அன்றாடம் உயிரை வாங்கினான்; ''அப்பா, அப்பா, அந்தப் பொம்மையை எப்போது வாங்கித் தரப் போகிறாய்?'' என்று நச்சரித்தான்: பவானியும் மலர்ந்த முகத்துடனே மகனிடம், ''அப்பனே, பொறுடா, சப்தமி பூஜைத் தினம் வரட்டும், பாரேன்'' என்று ஆறுதல் கூறி வந்தான். ஆனால் ஒவ்வொரு நாளும் இப்படி அவனுக்கு இன்முகம் காட்டி ஏமாற்றுவது முடியாத காரியம் அல்லவா?

அன்று சதுர்த்தி. பவானி, ஏதோ சாக்கின்பேரில் உட் புறம் வந்தான். பேச்சோடு பேச்சாக ராஸமணியிடம், ''கொஞ்ச நாளாகவே கவனித்து வருகிறேன்; குழந்தை காளி பதன் ஏன் இப்படி இளைத்துப் போகிறான்?'' என்றான்.

ராஸமணி: என்ன இழவு? திடுமென இளைப்பானேன்? அவனுக்கு உடம்பு ஒன்றுமில்லையே!

பவானி: நீ கவனிக்கவில்லை! குன்மம் பிடித்ததுபோல் ஒரே இடத்தில் இருக்கிறான்...என்னவோ வேதனை அவனுக்கு.

''அவன் அப்படி உட்கார்ந்தாலே தேவலை; என் வேலை கெடாமல் இருக்கும். விசனப்பட அவனுக்கு என்ன வந்து விட்டது? எங்கே என்ன விஷமம் பண்ணலாம் என்று ஏதாவது நினைத்துக்கொண் டிருப்பான்'' என்றாள்.

கோட்டை மதில் இந்த வழியிலும் இடங் கொடுப்பதாக இல்லை. அவனுடைய குண்டு வீச்சு அந்தப் பாறைச் சுவர் மீது எந்த வடுவையும் செய்யவில்லை. பெருமூச்செறிந்து, தலையைக் கையால் தடவிக்கொண்டே பவானி வெளியே வந்தான். தன் அறையில் தனியாகப் புகை குடிக்கலானான்.

பஞ்சமி தினத்தன்று அவன் இலையில் சற்று அதிகமாகவே தயிரும் பாயசமும் விழுந்தன. இரவு, இரண்டே சந்தேஷ்* தின்று தீர்த்தம் குடித்தான். லுசியைத் தொட்டே பார்க்க வில்லை. கேட்டதற்கு, ''பசியே இல்லை'' என்றான்.

இப்பொழுது அந்தப் பாறை மதில் சற்று விரிந்து கொடுத்தது. ஷஷ்டி திதியன்று ராஸமணி காளிபதனைத் தனியாக அழைத்து, ஆதரவு தோய்ந்த குரலுடன், ''அடே பேண்டு (செல்லப் பெயர்), நீயோ வயசு வந்த பையன்; இந்த வயசில் இந்தப் பிடிதவாதம் கூடாது! சீ, நமக்கு வாங்கச் சக்தியிராத ஒரு சாமானை விரும்புவது, பாதி திருடுவது போலாகும்; இது தெரியவில்லையே உனக்கு?'' என்றாள்.

காளிபதன், ''எனக்கு என்ன தெரியும் அம்மா. அப்பா தான் வாங்கித் தரேன் என்று சொன்னார்'' என மூக்கால் முனகினான்.

அப்போது அப்பா அப்படிச் சொன்னதன் காரணம் இன்னதென்று ராஸமணி தன் மகனுக்கு விளக்கப்படுத்திச் சொன்னாள். 'அவர் இப்படி வாங்கித் தருவதாகச் சொன்னதில் எவ்வளவு அன்பு, மனவேதனை தொனிக்கின்றன! குடும்பம் இருக்கும் கஷ்ட நிலையில் இது இன்னும் துயரத்துக்குத் தானே இடம் தரும்?' என்று புத்தி சொன்னாள். இதுபோல அவள் என்றுமே அவனுக்கு உறைக்கச் சொன்னதில்லை. இப்படி அவள் நிதானமாக, ஒவ்வொன்றாக எடுத்துக் கூறவே, காளிபதனுக்கே வியப்பு மேலிட்டது. அம்மாவின் மனத்தை நோவச் செய்யக்கூடாது என்று உணர்ந்தும், அந்தப் பொம்மைமீதுள்ள ஆசையை மாற்றிக்கொள்ள அவன் உள்ளம் என்ன சங்கடப்பட்டிருக்கும்? வயசான வாசகர்களுக்கு இதைப் புரிந்துகொள்வதில் சிரமம் இராது. ஆகவே, காளிபதனின் முகம் தொங்கிப் போய்விட்டது; தரையை ஒரு கழியால் அடித்துக்கொண்டே இருந்தான்.

---

*ஓர் இனிப்புப் பண்டம்

அப்போது ராஸமணி சற்று உக்கிரமாகவே, கடுமையான குரலில், ''நீ அழு; எரிந்து விழு; எது வேண்டுமானாலும் செய்! அந்தப் பொம்மையை வாங்குவது என்னவோ நட்க்காத காரியம்'' என்று சொல்லி, வீண் பொழுது போக்காமல் தன் வீட்டு வேலையைக் கவனிக்கப் போய்விட்டாள்.

காளிபதன் வெளியே போனான். அப்போது பவானி தனியாக உட்கார்ந்து புகை குடித்துக்கொண் டிருந்தான். என்னவோ அவசரமான காரியம் இருப்பதுபோன்ற பாவனையில் எழுந்து வந்தான். காளிபதன் ஓடிவந்து, ''அப்பா, அப்பா, அந்தப் பொம்மை—'' என்றான்.

அன்று பவானியின் முகத்தில் மலர்ச்சியே இல்லை. காளிபதனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''பொறு, அப்பனே; எனக்கு ஒரு வேலை இருக்கிறது. அதை முடித்துவிடுகிறேன். அப்புறம் பேசலாம்'' என்று அவன் வீட்டிலிருந்து வெளியே வந்தான். அப்பா தன் கண்களைத் துடைத்துக்கொள்வது போல் காளிபதனுக்குத் தோன்றியது.

அச்சமயம், அதே தெருவில் ஒரு வீட்டில் விழாவுக்கு வேய்ங்குழல் இசைக்கும் ஒத்திகை நடந்துகொண்டிருந்தது. அந்த உள்ளமுருக்கும் இசை அலை சரத்கால இளங்காலையின் இனிமையுடன் கலந்து மனத்தை என்னவோ செய்து கண்ணீர் துளிக்கச் செய்தது. காளிபதன் தன் வீட்டு வாயிலின் கதவோரமாக மௌனமாக நின்று தெருவை நோக்கிக்கொண் டிருந்தான். அவனுடைய தந்தை எந்த வேலையாகவும் போகவில்லை; அவனுடைய நடையிலிருந்தே அது தெரிந்தது. மனத்துள் ஏதோ துயரின் சுமை அழுத்துவது போன்றே அவன் நடந்து சென்றான். அதை வெளியிட இடங் கிடைக்கவில்லையென்று தோன்றியது.

காளிபதன் உட்புறம் வந்து தாயிடம், ''அம்மா, அந்தப் பொம்மை எனக்கு வேண்டாம்'' என்றான்.

தாய், அச்சமயம், பாக்கு வெட்டியால் பாக்கை வெட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய முகம் ஒளிர்ந்தது. தாயும் மகனும் என்ன பேசிக்கொண்டு என்ன முடிவுக்கு வந்தார்களோ தெரியாது. கையிலுள்ள வேலையைப் போட்டு விட்டு ராஸமணி உடனே பகளாசரணனின் வீட்டுக்குச் சென்றாள்.

அன்று பவானிசரண் வீடு திரும்ப வெகு நேரமாகியது. குளித்துவிட்டு அவன் சாப்பிட உட்கார்ந்தான். அவன் முகத்தைப் பார்த்தால், அவன் சரியாகவே தயிரும் பாயசமும் போட்டுக்கொள்ள மாட்டான் போல் தோன்றியது ராஸமணிக்கு. அவனுக்காகப் பண்ணி வைத்த அந்த மீன்

அவியலை அவன் தொடாது போனால் பூனைக்குத்தான் கொண்டாட்டம்!

அச்சமயம், காகிதத்தில் சுற்றிய ஓர் அட்டைப் பெட்டியைத் தன் கணவன் முன் வைத்தாள் ராஸமணி. சாப்பிட்டானதும் பவானி இலைப்பாறும்போது அதனுள் அடங்கியுள்ள இரகசியத்தை அவன் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது ராஸமணியின் விருப்பம். ஆனால், இலையில் பரிமாறிய தயிர், பாயசம், மீன் அவியல் எல்லாவற்றையும் அவன் சாப்பிட வேண்டும் என்ற ஆவலினால் உடனே பெட்டியைத் திறக்க வேண்டியதாயிற்று. பெட்டியிலிருந்து அந்தத் துரைசானிப் பொம்மை வெளியேறி வெயிலின் வெம்மை போகத் தனக்குத் தானே விசிறிக்கொள்ளத் தொடங்கியது. அன்று பூனை கொடுத்து வைக்கவில்லை.

பவானி தன் மனையாளை விளித்து, ''இன்று சமையல் ரொம்பப் பேஷ்! இந்த மாதிரி மீன் அவியல் உண்டு எத்தனை நாளாகிறது! தயிரும் வெகு நன்றாகத் தோய்ந்து ருசியாக இருக்கிறது'' என்றான்.

சப்தமி தினத்தன்று, காளிபதனுக்கு இத்தனை நாள் அவன் ஆசையோடு எதிர்பார்த்த அரும்பொருள் கிடைத்து விட்டது. அன்று முழுவதும் அந்தப் பொம்மை தானே விசிறிக்கொள்வதைப் பார்த்துப் பார்த்து அவன் இன்புற்றான்; தன் கூட்டாளிகளை அழைத்து அதைக் காட்டிப் பொறுமை கொள்ளச் செய்தான். வேறு நாளாக இருந்தால் அந்தப் பொம்மை இப்படி எந்நேரமும் விசிறிக்கொள்வது அவனுக்குச் சலிப்பையே மூட்டியிருக்கும். ஆனால் அஷ்டமி தினத்தன்று, இந்தப் பதுமையை 'விஸர்ஜனம்' (கழித்தல்) செய்து விடவேண்டுமென்பதை அறிந்ததும் அதன்மீது அவனுக்குக் கொள்ளை ஆசை ஏற்பட்டது. ராஸமணி பகளாவிடம் இரண்டு ரூபாய் தந்து இரண்டொரு நாட்களுக்கு அந்தப் பொம்மையை வாடகைக்கு வாங்கி வந்தாள். அஷ்டமியன்று காளிபதன் பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் கையாலேயே அந்தப் பொம்மையைப் பகளாசரணனிடமே திருப்பித் தந்துவிட்டு வந்தான். இந்த இரண்டொரு நாள் அத்துடன் பெற்ற இன்பம் அவன் நினைவிலேயே ஊன்றிவிட்டது. அவனுடைய கற்பனை உலகில் விசிறியைப் பொம்மை வீசிக்கொள்ளும் காட்சியே தென்பட்டது எந்நேரமும்.

அன்று தொட்டுக் காளிபதன் அன்னையின் காரியங்களுக்கு உதவியாகவே இருந்தான். ஒவ்வோர் ஆண்டும் தன் மகனுக்கு விலையுயர்வான பொருள் ஏதாவது பூஜையின்போது எளிதில் பரிசாக வருவதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்தான் பவானி.

உலகில் எதையுமே விலை கொடுத்துத்தான் வாங்க முடியும்; அப்படி வாங்குவதில் துயர் இருப்பதை உணர்ந்து தன் தாயிடம் உள்ளார்ந்த பற்றுடன் காளிபதன் உயர்ந்து வந்தான். இப்போது எந்த வேலையிலும் தாய்க்கு உறுதுணையாக வந்து நின்றான். குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டும், தொல்லையை அதிகரித்துக்கொள்ளக் கூடாது என்பனவெல்லாம் பிறர் உபதேசம் இல்லாமலே அவன் இரத்தத்தில் ஊறி விட்டன.

வாழ்க்கையின் பொறுப்பைத் தாங்குவதற்குத் தகுதி பெற வேண்டும் என்பதை உணர்ந்து காளிபதன் கஷ்டப் பட்டுப் படிக்கலானான். பரீட்சைகளில் தேறி உதவிச் சம்பளமும் பெற்றான். மேற்கொண்டு படிப்பதால் பயனில்லை, காளிபதன் தன் சொத்து உரிமைகளைக் கவனித்துக்கொண்டாலே போதுமென்று பவானிக்குத் தோன்றியது.

காளிபதன் அன்னையிடம் வந்து, ''கல்கத்தா சென்று நான் மேற்கொண்டு படித்தால்தான் வாழ்க்கையில் முன்னுக்கு வரமுடியும்'' என்றான்.

''நீ சொல்வது சரிதானடா, நீ கல்கத்தாவுக்குச் சென்று படிக்கத்தான் வேண்டும்'' என்றாள் ராஸமணியும்.

''எனக்காக ஒன்றும் செலவு செய்ய வேண்டியதில்லை. உதவிச் சம்பளத்தைக் கொண்டே சமாளிப்பேன். ஏதாவது வேலையும் தேடிக்கொள்வேன்'' என்றான் காளிபதன்.

பவானிசரணனை இந்த யோசனைக்கு இணங்க வைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டனர். அம்மாவும் பிள்ளையும் சொத்து உடைமைகளைக் கவனித்துக்கொள்வதற்கு அப்படி ஆஸ்தி புரண்டு போகவில்லை என்று சொன்னால் பவானி சரணன் மனவேதனை கொள்வானென்று அந்தக் காரணத்தை மறைத்து, ''காளிபதன் எல்லோரையும் போல் படித்து முன்னுக்கு வரவேண்டாமா?'' என்றாள் ராஸமணி. ஆனால் இதற்குமுன் அந்தக் குடும்பத்தில் எல்லாருமே ஊர் எல்லையைத் தாண்டாமல் வளர்ந்து மனிதர்கள் ஆனார்கள்! வெளியிடம் என்றால் யமலோகமோ என்றே நடுங்கினர். அதனாலேயே காளிபதன் போன்ற புத்தி அறியாத பையனை அவ்வளவு தூரம் அனுப்பும் யோசனை இவளுக்கு எப்படித்தான் தோன்றியதோ என்று வியந்தான் பவானி. கடைசியில் கிராமத்திலேயே மூலை படைத்த பகளா, ராஸமணியின் இந்த யோசனையை ஆதரித்தான். ''காளிபதன் நன்றாகப் படித்து வக்கீலாக வரட்டும்; கட்டாயம் களவுபோன அந்த உயில் விஷயத்தை அம்பலப்படுத்தி விடுவான். அவனுடைய அதிர்ஷ்ட ஜாதகத்தில் அப்படி இருக்கிறதே! ஆகவே, அவன் கல்கத்தா

சென்று படிப்பதைத் தடுக்கவே கூடாது'' என்று யோசனை கூறினான் பவானிக்கு.

இதைக் கேட்டுப் பவானி ஒருவாறு ஆறுதலுற்றான். சவுக்கத்தில் சுற்றிய பழைய தஸ்தாவேஜிகளை வெளியே எடுத்து உயில் களவு போனதைக் குறித்து அப்போதே காளிபதனிடம் யோசனை கேட்கத் தொடங்கினான். அன்னையுடன் அவள் காரியங்களில் அவன் சமமாக அடி வைத்துச் சென்றாலும், தந்தையின் விஷயத்தில் அவனால் அவ்வாறு நடந்துகொள்ள முடியவில்லை. சீதையை மீட்கும் பொருட்டு வீரர் திலகமான இராமன் இலங்கைக்கு யாத்திரை செய்தது போலவே, காளிபதன் கல்கத்தா செல்லும் யாத்திரையையும் பெரிதாக மதிப்பிட்டான் பவானி. வெறும் பரீட்சையில் தேறுவது மட்டுமன்று வீரவிஜயம்; பிரிந்துபோன வீட்டின் பாக்கியலட்சுமியைத் திருப்பி அழைத்து வருவதும் பெரிய சாதனையென்றே எண்ணினான்.

கல்கத்தாவுக்குக் காளிபதன் புறப்படுவதற்கு முன்னால் ராஸமணி அவன் கழுத்தில் கவசம் ஒன்றைக் கட்டினாள். அவன் கையில் எண்பத்தைந்து ரூபாய்க்கு நோட்டுக்களைத் தந்து, ''இது உன்னிடம் இருக்கட்டும், ஏதாவது சமய சந்தர்ப்பத்துக்குப் பயன்படும்'' என்றாள். அன்னை, வயிற்றை ஒடுக்கிச் சிரமப்பட்டுச் சேர்த்த பணமானதால் காளிபதன் அதைப் புனிதப் பொருளே போல் போற்றித் தன்னிடம் பத்திரப்படுத்திக்கொண்டான். அந்த நோட்டுக்களைத் தன் அன்னையின் ஆசியாக என்றென்றும் காப்பது என்றும், என்ன நேர்ந்தாலும் அதிலிருந்து செலவு செய்யவே கூடாதென்றும் காளிபதன் உறுதி பூண்டான்.

3

உயில் களவு போனதைக் குறித்துப் பவானிசரணன் இப்போதெல்லாம் அவ்வளவாகப் பேசுவதே இல்லை. இனிமேல் அவனுடைய யோசனை யாவும் காளிபதனைப்பற்றியே படர்ந்தன. தன் மகனைப்பற்றி உயர்வாகப் பேசித் திரிந்தான், ஊரில் ஓர் இடம் விடாமல். அவனிடமிருந்து கடிதம் வந்ததோ இல்லையோ, மூக்குக்கண்ணாடி மூக்கில் இறங்க இறங்க அதை ஆயிரம் தடவைக்குமேல் படிப்பான். முன்பெல்லாம் அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர் எவருமே கல்கத்தாவில் கால் வைத்ததே இல்லை. அந் நகரைப்பற்றி யாராவது புகழ்ந்தால் எரிச்சல் கொள்வார்கள். இப்போதோ காளிபதன் கல்கத்தாவில் படிப்பதால், கல்கத்தாவைப்பற்றிய செய்தி பவானியைவிட வேறு எவருக்கும் அவ்வளவு தெரிந்திரா

தென்றே கூறலாம். ஹுக்ளிக்கு அருகில் கங்கை நதியின் மீது பாலம் கட்டும் செய்தி முதலிய பெரிய விஷயங்கள் இப்போதெல்லாம் அவனுக்குச் சாதாரண வீட்டுச் சமாசாரம் போலத்தான்! யாரைக் காண நேரிட்டாலும் பவானி, ''என் பையன் எழுதியிருக்கிறான்; சமாசாரம் தெரியுமோ, பெரிய பாலம் கட்டுகிறார்களாம்'' என்றதும், தன் மூக்குக் கண்ணுடியை நன்றாகத் துடைத்துக்கொண்டு, ஓர் எழுத்து விடாமல் படித்துக் காட்டி, ''பார்த்தீர்களா, இப்படி ஒவ்வொன்றாக என்ன என்ன விந்தைகள் நடக்கப்போகின்றனவோ; கடைசியில் கங்கைக் கரையில் வாசம் செய்யும் நாய் நரியெல்லாங்கூட வெளியே போய்விடும் போல் இருக்கிறதே; கலிகாலம் அல்லவா? எது வேண்டுமானாலும் நடக்கும். உம், கங்கை நதி கூட இன்னும் நெடுநாள் இராது'' என்பான். இது போன்று நிகழுமாயின் அது முதல்முதல் காளிபதனுடைய கடிதத்திலிருந்துதான் வெளியாகி ஊருக்கெல்லாம் பரவும் என்பது அவனுடைய எண்ணம்.

இங்கே, காளிபதன் மிகச் சிரமத்துடன், பிறர் வீட்டில் ஒன்றிக்கொண்டு, 'டியூஷன்' சொல்லிக் கொடுத்தும், இரவு நேரங்களில் கடைகளில் கணக்கு எழுதியும் தன் படிப்பை நடத்தி வந்தான். பிரவேசப் பரீட்சையில் நன்கு தேறி உதவிச் சம்பளமும் கிடைத்தது. இந்த அதிசய நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கிராமத்தவர்களை அழைத்துத் தன் வீட்டில் ஒரு பெரிய விருந்து செய்யத் துடிதுடித்தான் பவானி. 'படகு கரைக்குக் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டது. இப்போது சற்றுத் தாராளமாகச் செலவு செய்வதில் தவறென்றுமில்லை' என்றே நினைத்தான். ஆனால் இந்த விஷயத்தில் ராஸமணி ஊக்கம் காட்டாது போகவே அந்த விருந்து நடக்கவில்லை.

காளிபதன் இப்போது கல்லூரிக்கு அருகிலே ஓர் உணவு விடுதியில் இடம் வைத்துக்கொண்டிருந்தான். அந்த விடுதியின் உரிமைக்காரன் கீழே யாரும் உபயோகிக்காத ஓர் அறையை இலவசமாக இவனுக்கு விட்டிருந்தான். அவனுடைய பிள்ளைக்குப் பாடம் கற்றுத் தந்ததால் சாப்பாடும் இலவசமாகக் கிடைத்தது. இவன் இருந்த அறையோ வெளிச்சமே இல்லாமல் ஈரம் கசியும் இடம். ஒரு சௌகரியம் என்னவென்றால், அங்கே இவனுடன் கூட்டாக எவரும் இல்லை. இதனால் இவன் படிப்பதற்கு வசதி இருந்தது. கஷ்டமோ சுகமோ, இவற்றையெல்லாம் துருவிப் பார்ப்பவன் அல்ல காளிபதன்.

இந்த விடுதியில் பணம் கொடுத்து அறை வைத்துக் கொண்டிருப்பவர்கள், - அதாவது, மாடியில் உள்ளவர்கள் -

உயர்வகையைச் சேர்ந்தவர்கள். அவர்களுடன் காளிபதனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. 'இல்லாவிட்டாலும், அவர்களிடமிருந்து வரும் அதிர்ச்சியிலிருந்து எப்படித் தப்ப முடியும்? மேலே அவர்கள் போடும் இடிமுழக்கம், 'கீழே உள்ளவர்களுக்கு எவ்வளவு தொல்லையாக இருக்குமென்று காளிபதன் விரைவில் உணர்ந்தான்.

அந்த விடுதியில் உயர்ந்த இந்திர பீடத்தில் அமர்ந்திருக்கும் ஒருவனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவனுடைய பெயர் சைலேந்திரன்; பெரிய இடத்துப் பிள்ளை; கல்லூரியில் படிப்பதற்கு அவன் அந்த விடுதியில் இருக்க வேண்டிய காரணமே இல்லை. ஆனால், அவன் அங்கே இருப்பதையே விரும்பினான்.

கல்கத்தாவிலேயே பெரிய வீடு எடுத்துக்கொண்டு தன் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்பாலார் பெண்பாலாரான சிலருடன் வசிக்குமாறு அவனுக்கு வேண்டுகோள் வந்தபோதிலும் அதற்கு அவன் இசையவே இல்லை. இதற்கு அவன் காட்டிய காரணம், 'வீட்டைச் சேர்ந்த மனிதர்களுடன் இருந்தால் படித்துத் தேறினாற் போலத்தான்!' என்பது. ஆனால் உண்மைக் காரணம் அதுவன்று. சைலேன் பல பேருடன் பழக ஆசைப்படுபவன். உறவினருடன் இருந்தால் என்ன கஷ்டமென்றால், அவர்களுடைய பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்ள நேரிடும். ஒருத்தரை அதிகமாகக் கவனிக்கிறான், இன்னொருத்தரை அலட்சியம் செய்கிறான் என்றெல்லாம் கெட்ட பெயர் வரும். இந்தத் தொல்லையெல்லாம் இல்லாத இடம் உணவு விடுதிதான் என்று சைலேன் நினைத்தான். இங்கே வருவோர் போவோர் நீடித்து நிற்பதில்லை. ஆற்று நீரோட்டம் போல் தங்காமல் எந்தக் கஷ்டத்தையும் தராமல் போய் விடுகின்றனர்; ஓட்டிக்கொள்ளவில்லை.

தோழன் என்று கூறப்படுபவனே நல்ல மனிதன் என்பது சைலேனின் கருத்து. இப்படிக் கருதுவதில் ஒரு சௌகரியம்; மனம்விட்டுப் பழகலாம். செருக்கு என்பது யானையோ குதிரையோ அன்று; அதிகச் செலவில்லாமலே தீனி போடாமலே அதைக் கொழுக்கச் செய்ய முடியும். ஆனால் சைலேந்திரன் நன்றாகச் செலவு செய்யக் கூடியவன்; அதில் கெட்டிக்காரனுங்கூட. அதனால் தன் செருக்கை அவன் பணச் செலவின்றி வளர்க்கவில்லை. அதிக வில்லையுள்ள தீனிபோட்டு அதை அழகாக வளர்த்து வந்தான்.

உண்மையில் சைலேன் தயை மிக்கவன். மனிதனின் துயரைத் துடைக்க வேண்டுமென்று உள்ளூற விரும்புபவன். அவன், எவன்மீது அன்பு கொள்கிறானோ, அவன் தனக்குத்

துன்பம் நேரிட்டபோது இவனிடம் அடைக்கலம் புக வராது போனால் அவனைத் துன்புறுத்தாமல் விடவே மாட்டான். அப்போது அவன் சற்றும் இரக்கமின்றிப் பயங்கர உருவைக் கொள்வான்.

உணவு விடுதியில் உள்ளவர்களை நாடகங்களுக்கு அழைத்துச் செல்வது, ஆட்டுக்கறி உண்பிப்பது, கடனுக்குப் பணம் தருவது-இப்படி யெல்லாம் அவன் செய்து வந்தான். புதிதாக மணமாகிய நண்பன் ஒருவனிடம் பூஜை விழாவிற்காக ஊருக்குக் கிளம்பும்போது கையிலே காசே இராது. தன் இள மனைவியின் மனத்தைக் கவர்வதற்கான வாசனைச் சோப்பு, ஸெண்டு, புது மோஸ்தரான சீமை ஜாக்கெட் துணி இவற்றை வாங்க அவன் திண்டாட வேண்டியதே இல்லை. சைலேனிடம் சொல்ல வேண்டியதுதான். சைலேன் இது போன்ற விஷயங்களில் நல்ல அநுபவம் வாய்ந்தவன். விலை அதிகமாகுமென்று பயந்து மலிவான பொருள்களை நண்பன் வாங்கும்பொழுது, ''சீ! என்ன லட்சணமாகச் சாமான்களை பொறுக்குகிறாய்!'' என்று சைலேன் உயர் வகையானவற்றையே எடுப்பான். நண்பன் பணத்தைக் கொடுக்கும்பொழுது முகத்தைச் சிணுங்கினால், அந்தத் தொகையைச் சைலேனே பொருட்படுத்தாமல் கொடுத்துவிடுவான். எவ்வளவு தடுத்தாலும் கேட்கவே மாட்டான்.

இப்படிச் சைலேனை அண்டிப் பல விதமான சௌகரியங்களைச் செய்துகொள்வார்கள் நண்பர்கள். அவனுடைய உதவியை ஏற்காதவர்கள் படும் அவதி சொல்லி முடியாது. உலகத்தவருக்கு உதவி செய்யவேண்டுமென்று அவ்வளவு தலைப்பொறி அவனுக்கு!

இங்கே அப்பாவி காளிபதன் அந்த ஈரம் கசியும் கீழ் அறையில், அழுக்குப் பாய்மீது அமர்ந்து, சீரழிந்த சட்டையை அணிந்துகொண்டு, புத்தகமும் கையுமாக இருப்பான். எப்படியாவது 'ஸ்காலர்ஷிப்' பெறவேண்டும் என்பது அவனுடைய அவா.

அவனுடைய தாய், அவன் கல்கத்தாவுக்குப் புறப்படுமுன் ஆணை வைத்துப் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து, ஆட்டம் பாட்டங்களில் ஈடுபடக்கூடாது என்று சொல்லியிருக்கிறாள். அம்மாவின் பேச்சைக் கடைப்பிடிப்பதோடல்லாமல், எளிய வாழ்வே தனக்குப் போதும் என்று நம்பும் காளிபதன், பெரிய இடத்துப் பிள்ளைகளுடன் சேருவது நடக்காத காரியம். என்றுமே அவன் இந்தச் சைலேனை அண்டியதில்லை. சைலேன் நினைத்தால் தனக்கு ஏற்படும் சில சிக்கல்களை எளிதில் போக்கிவிடுவான் என்பதும் அவனுக்குத் தெரி

யும். ஆனல் இதற்காக அவன் தயையை நாட விரும்பவில்லை; குறை இருந்தாலும், தன் வறுமையின் மறைவிலேயே, இருட்டிலேயே அவன் இருந்து வந்தான்.

ஏழைப்பயல் இவன், தன்னை லட்சியம் செய்யவே இல்லை என்ற அகம்பாவத்தால் சைலேன் இதைப் பொறுக்கவில்லை. காளிபதனின் நடையுடை யாவும் வறுமையை வெளிப்படுத்துவது இந்தச் சைலேனுக்குக் கண்ணெரிச்சலாக இருந்தது.

மாடிக்குச் செல்லும்பொழுது, அந்தக் கீழ் அறையில் காளிபதனின் அழுக்கு ஆடை, கிழிந்த கொசுவலை, படுக்கை யாவும் கண்ணில் படும்போது பெரிய குற்றமாகவே சைலேனுக்குப் படும். தாராபதன் கழுத்தில் தாயத்து அணிவது மற்றொரு பிடிக்காத விஷயம். இரண்டு வேளையும் அவன் சந்தியாவந்தனம் செய்வது போன்ற நாட்டுப்புறப் பழக்கங்கள் மாடியில் உள்ளவர்களுக்கு நகைப்பை மூட்டின. சைலேனின் ஒற்றர்களான இருவர், எவர் பேச்சுக்கும் போகாமல் தன் பாட்டில் இருக்கும் காளிபதனைப்பற்றிய இரகசியங்களை அறிய அவன் அறைக்கு வந்து கிண்டிப் பார்ப்பார்கள். ஆனல் நாணும் இயல்புள்ள காளிபதனின் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வராது. இனிமேல் அந்த இடத்தில் நிற்பது உசித மில்லை; மேலும், அந்த ஈரம் உடல்நலத்துக்கு ஏற்றதல்ல வென்று அவர்கள் போய்விடுவார்கள்.

ஒரு நாள் மாடியில் பெரிய விருந்து நடத்த ஏற்பாடாயிற்று. அன்று விருந்தில் முக்கிய உணவு ஆட்டுக்கறி. இந்த 'அற்பப் பயல்' காளிபதனை அதற்கு அழைத்திருந்தனர். தனக்கு அதெல்லாம் சாப்பிட்டுப் பழக்கமில்லை என்று காளிபதன் அறிவித்தான். இப்படி அவன் மறுத்துவிடவே சைலேனும் அவனுடைய குழுவினரும் பெருஞ் சினங் கொண்டனர்.

சில நாட்கள் வரையில் காளிபதன் இருக்கும் அறைக்கு நேர் மாடி அறையில் தப்புத் திப்பென்று ஓசைப்பட அவர்கள் நடப்பதும் உரத்துப் பாடுவதும், கொம்மாளம் கொட்டுவதுமாக இருந்தனர். காளிபதன் படிப்புக்கு அது இடையூறு செய்யவே, பகல் வேளைகளில் கோல்தீகியில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து படிப்பான். காலையில் சற்றுப் பொழுதோடேயே எழுந்து விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு பாடம் படிப்பதில் முனைவான்.

கல்கத்தாவில் கிடைக்கும் சாப்பாடும், இட நெருக்கமும், அதிக உழைப்பும் சேர்ந்து காளிபதனின் உடல் நலத்தைக் கெடுத்தன. தீராத தலைவலி கண்டது அவனுக்கு. சில சமயம் கீழே விழுந்து விடுவதுபோன்ற களைப்பு மேலிடும். இந்தச் சமாசாரம் தெரிந்தால் தந்தை தன்னை அரைக் கணங்கூடக்

கல்கத்தாவில் இருக்க விடமாட்டார், வேதனையுடன் தன்னைப் பார்க்க ஓடோடி வருவார் என்று அறிவான். பவானி சரணனே, காளிபதன் கல்கத்தாவில் எல்லா விதமான சௌகரியங்களுடனும் இருக்கிறானென்றே நினைத்துக்கொண்டிருந்தான். நாட்டுப்புறத்தில் மரஞ்செடிகள் தாமே முளைத்துத் தழைப்பதுபோல் கல்கத்தாவின் காற்று, நீர்ச் சிறப்பில் உடலுக்கு ஆரோக்கியமான யாவும் உள்ளன என்ற நம்பிக்கை அவனுக்கு. காளிபதனும், தன் தந்தை இத்தகைய கருத்துக் கொண்டிருப்பதை மாற்றவில்லை. மிகவும் பலவீனமாக இருந்தபோதுகூட அவன் தன் தந்தைக்குக் கடிதம் போடாமல் இருந்ததில்லை. துணைக்கு யாருமே இராத தன் அறையில் இப்படியும் அப்படியும் படுக்கையில் புரண்டு வேதனைப் படுவான்; அம்மாவைத் தனக்குள்ளேயே கூப்பிடுவான்; அப்பாவை நினைப்பான். வறுமையினால் ஏற்படும் அவமானத்தையும் துயரையும் தான் அநுபவித்தாலும், அதன் பிடியிலிருந்து தன் தாய் தந்தையரை விடுவிக்க வேண்டுமென்று அவன் கொண்ட உறுதி இன்னும் உறுதியாகியது.

காளிபதன் தன்னை எவ்வளவு ஒடுக்கிக்கொண்டாலும், பிறர் கண்ணில் படாமல் ஒதுங்கிச் சென்றாலும் அவனுக்கு ஏற்பட்ட உபத்திரவம் சற்றும் குறையவில்லை. ஒரு நாள் அவன் அறைக்கு வெளியே விட்டு வைக்கும் பழைய செருப்பில் ஒன்றைக் காணவில்லை; அதற்கு மாறாக வேறு காலுக்குச் சரியான புத்தம் புதிய இங்கிலீஷ் ஜோடு ஒன்று இருந்தது. இப்படி வித்தியாசமான காலணியுடன் கல்லூரிக்கு எப்படிச் செல்வான், பாவம்! இதற்காக அவன் யாரிடமும் முறையிட்டுக் கொள்ளவில்லை. சக்கிலியிடமிருந்து ஒரு ஜதை பழைய செருப்பை வாங்கிக்கொண்டான். திடுமென ஒரு நாள் மாடியில் உள்ள சைலேனின் ஆள் ஒருவன் காளிபதனின் அறையில் நுழைந்து, ''ஞாபக மறதியாக நீங்கள் மாடியில் என் அறையிலிருந்து சிகரெட் கேஸை எடுத்து வந்துவிட்டீர்களா என்ன? எங்கே தேடியும் அதைக் காணவில்லையே'' என்றான்.

காளிபதன் எரிச்சலுடன், ''நான் உங்கள் அறைக்கு வர வேண்டிய அவசியம் இல்லையே'' என்றான்.

''அதோ இருக்கிறதே'' என்று வந்தவன், காளிபதனின் அறையின் ஒரு மூலையிலிருந்து விலையுயர்ந்த 'சிகரெட் கேஸை' எடுத்துக்கொண்டு மாடிக்குப் போய்விட்டான்.

அப்போதே காளிபதன் எப்.ஏ., பரீட்சையில் தேர்ந்ததும் இந்த மெஸ்ஸை விட்டுச் சென்றுவிட வேண்டுமென்று உறுதி செய்துகொண்டான்.

உணவுச் சாலையில் இருக்கும் மாணவர்கள் ஒவ்வோர்

ஆண்டும் தடபுடலாகச் சரசுவதி பூஜை நடத்துவார்கள். அதற்காகும் செலவைச் சைலேனே ஏற்பான். எல்லாப் பிள்ளைகளும் தம் பங்குச் சந்தாவையும் தருவார்கள். முன் ஆண்டு, காளிபதனிடம் எவருமே வரவில்லை, சந்தா வசூல் செய்ய இந்த ஆண்டு அவனை அழ வைக்க வேண்டியே அவனிடம் சந்தாத் தொகைக்காக வந்தனர். காளிபதன் இதுவரை அவர்களுடைய உதவியை நாடாதவன்; அவர்களுடன் எந்த விஷயத்திலும் கலக்க மறுப்பவன்; யாசித்தவுடனே திடுமென்று ஐந்து ரூபாய் தந்தால் எப்படி இருக்கும் அவர்களுக்கு! சைலேனைச் சேர்ந்தவர்கள் எவருமே இதுவரை தம் சந்தாவைச் செலுத்தவில்லை.

எல்லோரும் காளிபதனை ஏழை என்றும் உலோபி என்றும் நினைத்து அலட்சியம் செய்தனர் இதுவரை. ஆனால் அன்று அவன் ஐந்து ரூபாய் நன்கொடை கொடுத்தபோது அவர்களுக்கெல்லாம், 'பார், எல்லார் முகத்திலும் கரி பூசிவிட்டானே இவன்' என்று எரிச்சலாக இருந்தது.

சரசுவதி பூஜை விமரிசையாக நடந்தேறியது. காளிபதன் அந்த ஐந்து ரூபாயைக் கொடுக்காமலே இருந்திருக்கலாம். அவர்களுக்கு அது ஒரு வரவு செலவில்லை. ஆனால் காளிபதனுக்கு அந்தப் பணம் அருமையானது. பிறர் போடும் சோற்றை அவன் உண்ண வேண்டியிருந்தது. ஒரு நாளாவது அவனுக்கு வேளையில் உணவு கிடைக்காது. சமையற்காரர்களின் தயையைப் பொறுத்தது இந்தச் சோற்றுப் படலம். இதுபற்றி அவன் குறை கூறுமல், சிற்றுண்டிக்காகக் கையில் கொஞ்சம் பணம் மிச்சப்படுத்தி வைத்திருந்தான். பாவம்! அந்த ஐந்து ரூபாய்தான் ஆற்றில் கரைக்கப்பட்ட தேவியின் பிரதிமையுடன் மறைந்து போயிற்று.

காளிபதனுக்குத் தலைவலி மும்முரமாகியது. இந்தத் தடவை அவன் பரீட்சையில் தேர்வு பெற்றும், உதவிச் சம்பளம் பெறவில்லை. இதனால் படிக்கும் நேரத்தைக் குறிக்க மற்றொரு டியூஷனும் வைத்துக்கொண்டான். பொறுக்க வொண்ணாத உபத்திரவம் இருப்பினும் வாடகை இராத அந்த விடுதியை அவனால் விட முடியவில்லை.

மாடியில் இருப்பவர்கள், விடுமுறைக்குப் பிறகு காளிபதன் இந்த விடுதிப் பக்கம் திரும்பவே மாட்டானென்று நம்பி இருந்தனர். ஆனால் உரிய சமயத்தில், அந்தக் கீழ் அறையின் கதவு திறந்தது. வேட்டிக்குமேல் என்றும் அணியும் கட்டம் போட்ட சீனக் கோட்டுடன் காளிபதன் தன் அறையில் நுழைந்தான். அழுக்குத் துணியில் கட்டிய மூட்டையையும் தகரப் பெட்டியையும் அங்கே இறக்கிவிட்டு, சியால்

தஹ்ஹின் கூலியாள் எத்தனையோ வாதங்கள் பேசித் தன் கூலியைப் பெற்றுக்கொண்டு சென்றான். அந்த மூட்டையினுள், பல பண்டங்களில் காளிபதனின் தாய் மாவடு ஊறுகாய் போன்ற நாக்கிற்குச் சுவையான பொருள்களை வைத்திருந்தாள். தான் இல்லாத சமயம் பார்த்து ஆவல் குடிகொண்ட மாடி வாசிகள் உள்ளே நுழைவதை அவன் அறிவான். அவனுக்கு வேறு எந்த வருத்தமும் இல்லை; தன் தாய் அனுப்பியுள்ள அந்த அரும்பொருள்கள் இவர்கள் கையில் சிக்கிவிடப் போகின்றனவே என்பதுதான். அவை அவன் வரைக்கும் அமிர்தம்; அவையாவும் வறுமை மிக்க அவன் கிராமத்து அரும் பொருள்கள்; அவற்றைத் தம்மிடத்தே கொண்டு இறுகலான மூடியை உடைய மட்பாண்டங்கள், நாகரிகத்தைக் காட்டுவன அல்ல; அவை பளிங்குப் பாத்திரங்கள் அல்ல; பீங்கானும் அல்ல. நகரத்தான் அலட்சியம் செய்யும் பொருள்கள். இவற்றை யெல்லாம் நினைத்துக்கொள்ளும்பொழுது அவனுக்கு வெட்கமாக இருந்தது. முன்பெல்லாம் இந்தப் பண்டங்களைத் தன் மேசையின்கீழ் வைப்பது வழக்கம். வெளியே போகும்போது கதவைத் தாழிட்டுப் பூட்டிக் கொண்டு போகலானான்.

இது மாடியில் உள்ளவர்களின் கண்களை உறுத்தியது. ''பெரிய பொக்கிஷம் போல் இருக்கிறது. திருடன் வந்து எடுத்துக்கொண்டால்....? அதனால்தான் பூட்டுப் போடுகிறான் போலிருக்கிறது. ஓகோ, இரண்டாவது பாங்க் ஆப் பெங்கால் நடத்துகிறான் போல் இருக்கிறது! எங்களிடம் அவனுக்கு நம்பிக்கை இல்லை....போட்டுக்கொண்டிருக்கிறானே, கட்டம் போட்ட அந்தச் சீனக் கோட்டை யாராவது அடித்துக்கொண்டு போய்விட்டால்..அடே ராது, அவனுக்கு ஒரு நாகரிகமான கோட்டு வாங்கித்தான் ஆகவேண்டும் - பாவம்! அந்தச் சீனக் கோட்டை எத்தனை நாள் அவன் போடுவான்! எனக்குச் சகிக்கவில்லையடா'' - இவ்வாறெல்லாம் சைலேன் பேசினான்.

சைலேன் இதுவரையில் உப்புப் பூத்துக் காரை உதிரும் அந்த இருட் குகைக்குள் நுழைந்ததே இல்லை. படிக்கட்டு ஏறி மாடிக்குச் செல்லும்பொழுது அது சற்று அவன் கண்ணில் படும்; அவன் அப்போது உடலைச் சிலிர்த்துக்கொள்வான். முக்கியமாக இரவு நேரத்தில் புழுங்கிப் போகும் அந்த அறையில் முணுக்கு முணுக்கென்று எரியும் விளக்கொளியில் வெறும் உடம்புடன் புத்தகத்தின்மீது கவிந்து காளிபதன் படிப்பதைப் பார்க்கும்போது சைலேனுக்கு மூச்சுத் திணறும். தன் தோழர்களிடம் அவன், ''காளிபதன் ஏதோ பெருநிதி கொண்டு வந்திருக்கிறான்; அதை என்னவென்று நான்

அறிய வேண்டும்'' என்று தன் கொடிய ஆவலை வெளிப் படுத்தினன்.

காளிபதன் உபயோகித்த பூட்டு, அப்படி உறுதியான தன்று. எந்தச் சாவியைப் போட்டாலும் திறந்துவிடலாம். ஒரு நாள் இரவு காளிபதன் டியூஷனுக்குச் சென்றிருந்தபோது மாடி ஆட்கள் மூன்று பேர் சிரித்துக்கொண்டே பூட்டைத் திறந்து கையில் லாந்தருடன் அவன் அறைக்குள் நுழைந் தனர். மேசையின் கீழ் ஊறுகாய் முதலிய பொருள்கள் இருப்பதைக் கண்டு பிடித்தனர். அப்படிக் கட்டிக் காப்பதற்கு ஏற்ற மதிப்புள்ள பொருள்களாகவே அவற்றை அவர்கள் நினைக்கவில்லை.

காளிபதனின் படுக்கையில் இருக்கும் தலையணையின் கீழ் வலையமிட்ட சாவி ஒன்றைக் கண்டனர். அந்தச் சாவியைக் கொண்டு தகரப் பெட்டியைத் திறந்தபோது அழுக்குத் துணி சில, புத்தகம், கத்தரிக்கோல், பேனா இவை வெளிப்பட்டன. பெட்டியை மூடிவிட்டு அவர்கள் கிளம்பிப் போகும் சமயம் பழைய துணிகளின்கீழ்த் துவாலையில் சுற்றிய ஏதோ ஒரு பொருள் தென்பட்டது. துவாலையை அவிழ்த்தபோது ஒரு காகிதப் பொட்டலம் இருந்தது. அந்தப் பொட்டலத்துள் எத்தனையோ குட்டிக் காகிதப் பொட்டலங்கள். அவற்றுள் ஒன்றைப் பிரித்தபோது எண்பத்தைந்து ரூபாய்க்கு நோட் டுக்கள் காணப்பட்டன.

அதைப் பார்த்ததும் அவர்களால் சிரிப்பை அடக்க முடிய வில்லை; உரத்த குரலில் நகைத்தனர்; 'இந்த நோட்டுக்க ளுக்காகவே காளிபதன் அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு போகிறான்! இந்த உலகில் அவன் யாரையும் நம்பவில்லை. என்ன ஜாக்கிரதையான பேர்வழி; பரமலோபி!' என்றெல் லாம் வியப்புற்றனர்.

திடீரென்று யாரோ குரல் கனைத்து வரும் ஓசை கேட் கவே சரசரவென்று பெட்டியை மூடிவிட்டு, நோட்டைக் கையில் இடுக்கிக்கொண்டு மாடிக்கு விரைந்தனர். ஒருவன் விரைவாகக் கதவைப் பூட்டிவிட்டான். சைலேன் நோட்டுக் களைக் கண்டதும் இடிஇடியென்று நகைத்தான். இந்த எண் பத்தைந்து ரூபாய் அவனுக்கு அற்பமான பொருள். ஆனால் இவ்வளவு தொகையிருந்தும் காளிபதன் வறுமையைத் தாங்கு வதன் காரணந்தான் அவனுக்குப் புரியவில்லை. 'இந்த நோட்டுக் களுக்கு இவ்வளவு பந்தோபஸ்தா! நோட்டைத் தேடுவான் அவன்; காணுதபோது என்ன செய்கிறான் பார்க்கலாம்' என்று காத்திருந்தனர்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் காளிபதன் திரும்பி

வந்தான், எங்கோ ஒரு பையனுக்குப் பாடம் சொல்லித் தந்து விட்டு. முதலில் அறை இருந்த நிலையை அவன் கவனிக்க வில்லை. அச்சமயம் அவனுக்குப் பொறுக்க முடியாத தலை வலி.

மறு நாள் துண்டு ஒன்றை எடுப்பதற்கு அவன் மேசையின் கீழிருந்த பெட்டியைத் திறக்கச் சென்றபோது, அது திறந்தே இருந்தது. ஒருவேளை தானே அதைப் பூட்ட மறந்திருக்க லாம் என்று நினைத்தான். ஏனென்றால், திருடன் வருவதற்குக் காரணமில்லை; அறைக் கதவுதான் வெளிப்பக்கம் பூட்டி யிருந்ததே.

பெட்டியினுள் சாமான்கள் எல்லாம் தாறுமாறாக இருந் தன. அவனுக்குப் பகீரென்றது. சரசரவென்று தான் வைத் திருந்த ஒவ்வொன்றையும் ஆராய்ந்தான். அவன் அன்னை தந்த அந்த ரூபாய் நோட்டுக்களைக் காணவில்லை. ஒவ்வொரு சாமானை யும் உதறிப் பார்த்தான். நோட்டு இருந்தால்தானே? இந்தச் சமயம், மாடி ஆட்கள் இருவர் அடிக்கடி படிக்கட்டில் நட மாடினர், உள்ளே நடப்பதை ஜாடையாகக் காண்பதற்கு. மாடியில் வெடிச் சிரிப்புக்குமேல் வெடிச் சிரிப்பு எழுந்தது.

நோட்டுக்கள் கிடைக்குமென்ற நம்பிக்கை போய்விடவே, உடலே வெலவெலத்துப் போய்க் காளிபதன் படுக்கையில் குப்புறப் படுத்துச் செத்த பிணம்போல் கிடந்தான். அந்த நோட்டுக்கள் அவனுடைய தாய் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேமித்துத் தந்தவை! ஒரு சமயம் அவள் பட்ட கஷ்டங்கள் இன்னவென்று உணராமல் இருந்தான். புத்தி வந்த பிறகு அவள் படும் இன்னல்களைப் புரிந்துகொண்டு அவளுக்கு உறுதுணையாக இருக்க முற்பட்டான். அவளும் தன் துய ரைச் சொல்லிக்கொள்ள ஆந்தரிகமான மகனைப் பெற்று வேதனையை மறந்தாள். இதைவிடக் காளிபதன் பெருமைப் படக்கூடியது வேறு என்ன இருக்கிறது! அவள் ஆசியுடன் தந்த அந்த நோட்டுக்களைத் திவ்வியப் பிரசாதமாக அவன் இது வரை போற்றிப் பத்திரப்படுத்தினான்; பாவம்! அன்னையின் அந்த அன்புக் கருவூலத்தை யாரோ கன்னம் வைத்துக் கவர்ந்து சென்றனரே!.....இதைவிடக் கொடுமை உண்டோ?

பக்கத்திலுள்ள மாடிப்படியில் அடிக்கடி சத்தம் கேட் டது. மாடியாட்கள் காரணமின்றி ஏறி இறங்கிக்கொண்டிருந் தனர். ஊர் பற்றி எரியும்போது, அதன் அருகிலுள்ள ஆறு கலகலத்து ஓடுவதுபோலவே இருந்தது இந்தக் காட்சி.

மாடியில் ஒரே அட்டகாசமாக இருக்கவே, சட்டெனப் புரிந்தது காளிபதனுக்கு, இது கள்ளர் வேலை அன்றென்று. கணப்போதில் சைலேனின் குழுவினரே இந்தக் காரியத்தைச்

செய்தவர்களென்று வெளிச்சமாகியது. திருடன் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. செல்வச் செருக்குடைய இந்த இளைஞர்கள் இப்படிச் செய்தது மிகவும் அநீதம். தன் அன்னையின் உடலில் கை வைத்ததுபோலவே எண்ணிக் காளிபதன் துடிதுடித்தான். இதுவரை அவன் மாடிக்கே சென்றவனல்ல. அன்று பொறுக்க முடியாத தலைவலியாலும், உள்ளக் குமுறலாலும் முகம் சிவப்பூற, வேகமாக மாடிக்குச் சென்றான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கல்லூரி இல்லை. மாடியில் மரக் கைப்பிடி போட்ட வராந்தாவில், சிலர் மர நாற்காலியிலும், சிலர் பிரம்பு நாற்காலியிலும் உட்கார்ந்து சிரிப்பும் குதூகலமுமாய் இருந்தனர். காளிபதன் இவர்களிடையே ஓடி, கோபத்தால் குரல் தடுமாற, ''கொடுங்கள் என் நோட்டுக்களை...கொடுங்கள்!'' என்றான்.

அவன்மட்டும் கெஞ்சும் பாவனையில் கேட்டிருந்தால், அந்த நோட்டுக்களைத் திருப்பித் தந்திருப்பார்கள். அவன் ரோஷமாக வந்ததைப் பார்த்துச் சைலேனும் பிகுவாகி விட்டான். அவனுடைய வீடாக இருந்தால் அப்போதே வேலைக்காரனை விட்டுக் காதைத் திருகிக் காளிபதனை விரட்டியே இருப்பான். எல்லோரும் படை எடுப்பதுபோல் அவனைப் பார்த்து, ''என்ன ஐயா? யார் பார்த்தார்கள் உன் நோட்டுக்களை?'' என்று உறுமினர்.

காளிபதன், ''என்னுடைய பெட்டியிலிருந்து நீங்கள் எடுத்தீர்கள்'' என்றான்.

''என்ன, பெரிய வார்த்தையெல்லாம் பேசுகிறாய்...! எங்களையா திருடன் என்கிறாய்?'' என்று எல்லோரும் கூவினர்.

காளிபதன் கையில் அப்போது கத்தியோ தடியோ இருப்பின் அக்கணமே கொலைகூட நடந்திருக்கும். அவனை நாலைந்து பேராக வளைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர். வலையில் சிக்கிய புலியைப்போல் குமுறலானான் காளிபதன்.

இந்த அநீதத்திற்கு ஒரு முடிவு காண அவனுக்கோ சக்தி இல்லை. அவர்கள் களவாடியதற்கு அத்தாட்சி எதுவும் இல்லையே! அவன் இப்படிச் சந்தேகம் கொண்டு நடந்ததைப் பைத்தியக்காரத்தனம் என்று எண்ணி ஒதுக்கிவிடுவார்கள். அவனுக்கு மரணத் தீம்பு புரிந்தவர்கள் இந்த அநீதத்தைச் செய்ததோடு அவன் இப்படி நடந்துகொள்வதைக் கண்டிக்கவும் தலைப்பட்டனர்.

அன்று இரவுப் பொழுதைக் காளிபதன் எப்படித்தான் கழித்தானோ யாருக்கும் தெரியாது. சைலேன், நூறு ரூபாய்

நோட்டொன்றை எடுத்துத் தன் தோழனிடம் கொடுத்து, ''இதை அவன் மூஞ்சியில் எறிந்துவிட்டு வா'' என்றான்.

''பைத்தியமா என்ன உனக்கு? முதலில் அவன் திமிர் அடங்கவேண்டும்! நம்மிடம் அவன் கையெழுத்துப்பட மன்னிப்புப் கோரவேண்டும்'' என்றான், சைலேனுக்குத் துணை போனவன்.

எல்லோரும் உண்டுவிட்டுப் படுத்துத் தூங்கும் நேரமாகிவிட்டது. மறுநாள் காளிபதனைப்பற்றிய விஷயத்தை மறந்தே போயினர். காலையில் சிலர் மாடிப்படி வழியாக இறங்கி வருகையில் காளிபதன் அறையில் யாரோ பேசுவது போன்ற ஓசையைக் கேட்டு நின்றனர். அறை மூடியபடியே இருந்தது. காது வைத்துக் கேட்டனர்; தெளிவாகப் புரியவில்லை; புரிபடாத பிதற்றல்போல் இருந்தது. வக்கீலுடன் ஏதோ யோசனைதான் என்று நினைத்தனர்.

மாடிக்குச் சென்று சைலேனுக்குச் சமாசாரத்தை எட்டவிட்டனர். சைலேன் இறங்கி வந்து காளிபதன் அறைக் கதவருகில் நின்று கவனித்தான். அடிக்கடி, 'அப்பா... ஐயோ, அம்மா' என்று பிதற்றும் ஓசையே வந்தது.

நோட்டுக்கள் காணுமல் போன வேதனையில் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று பயந்தான் சைலேன். வெளியே இருந்தபடியே இரண்டு மூன்று முறை கூப்பிட்டான், ''காளிபத பாபு'' என்று. பதிலே இல்லை. ஆனுல் என்னவோ முணுமுணுப்பதுபோல் சப்தம் கேட்டது. மீண்டும் உரத்த குரலில், ''காளிபத பாபு! உங்களைத்தான்'' என்றான் சைலேன். கதவு திறக்கப்படவில்லை; வெறும் முணுமுணுப்பு மட்டும் கேட்டது. விஷயம் இவ்வளவு தொலைவுக்குப் போகுமென்று சைலேன் நினைக்கவே இல்லை. அவன் மனத்தை உள்ளூற வருத்தியது ஒரு வேதனை. ''கதவைத் திறந்து உள்ளே போகலாமா?'' என்றான் அவன். சிலர், போலீசை அழைத்து வரலாமென்று யோசனை கூறினர். அவனுக்கு உண்மையாகவே பைத்தியம் பிடித்திருந்தால், வெளியே வந்து அவன் விபரீதமாக நடந்து கொண்டால் என்ன செய்வதென்று எண்ணி எவரும் துணிவின்றி நின்றனர்.

''சீக்கிரம் யாராவது போய் அனாத் டாக்டரை இட்டு வாருங்கள்'' என்றான் சைலேன். அனாத் டாக்டர் அந்த விடுதிக்கு அருகிலேயே இருப்பவர். அவர் வந்ததும் கதவருகில் காது வைத்துக் கேட்டு, ''இது என்னவோ சன்னிப் பிதற்றல் போலவே இருக்கிறது'' என்றார்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்து டாக்டர் கீழே கிடக்கும் காளிபதனைத் தொட்டுப் பரீட்சை செய்ததும், ''இவ

ருக்கு நெருங்கிய நண்பரோ, உறவினரோ யாராவது இருக்கின்றனரா?'' என்று கேட்டார்.

சைலேனின் முகம் வெளுத்து மாறியது. அவன் திகிலுடன், ''என்ன டாக்டர்?'' என்றான்.

டாக்டர் ஆழ்ந்த முகத்துடன், ''அவர்களுக்குச் செய்தியை எட்டவிட வேண்டும்...அறிகுறிகள் நன்றாக இல்லை'' என்றார்.

''இவரை அதிகமாக எனக்குத் தெரியாது...இவருக்கு வேண்டியவர் எங்கே இருக்கின்றனரோ? யாரையாவது கேட்டுப் பார்க்கிறேன்...இதற்கிடையே இவருக்குச் செய்ய வேண்டியது என்ன?'' என்றான் சைலேன்.

டாக்டர், ''முதலில் இந்த அறையிலிருந்து காற்றோட்டமான இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்...பக்கத்தில் யாராவது இரவு பகல் இருந்து பணிவிடை புரிய வேண்டும்'' என்றார்.

சைலேன், நோயாளியைத் தன் அறைக்கு எடுத்துச் சென்றான். பக்கத்தில் யாரும் கும்பல் கூட வேண்டாமென்று தன் தோழர்களுக்கு எச்சரிக்கை செய்து அவர்களை வெளியே அனுப்பிவிட்டான். காளிபதனின் தலையில் 'ஐஸ்' பை வைத்துத் தன் கையாலேயே அவனுக்கு விசிறிக்கொண்டிருந்தான்.

மாடியில் இருப்பவர்களுக்குத் தன் வறுமை நிலை தெரிந்தால் ஏளனம் செய்வார்கள் என்ற லஜ்ஜையில் காளிபதன் எவரிடமும் தன் ஊரைப்பற்றியோ, தாய் தந்தையரைப் பற்றியோ தகவல் தந்தது கிடையாது என்று முன்பே கூறியுள்ளோம். கடிதம் போடுவதோ, ஊரிலிருந்து வரும் கடிதத்தைப் பெறுவதோ யாவும் மறைவாகத் தபாலாபீசிலேயே நடத்திவிடுவான்.

காளிபதனின் வீட்டு விலாசம் கண்டுபிடிக்க அவனுடைய தகரப் பெட்டியைத் திறந்து புரட்டும்போது, இரண்டு கற்றைக் கடிதங்கள் இருந்தன. ஒன்று, அவனுக்கு அவன் தாய் எழுதிய கடிதங்கள் அடங்கியவை; அது சிறிய கற்றை. மற்றொன்று பெரிது; அவனுக்கு அவன் தந்தை எழுதியவை.

அந்தக் கடிதங்களைப் படிக்கும்போது தன் நண்பர் யாருக்கும் தெரியக் கூடாதென்று கதவைத் தாழிட்டுக்கொண்டான் சைலேன். விலாசத்தைக் கண்டெடுத்தபோது அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சானியாடி கிராமம், சௌதுரி வீடு..காளியின் தந்தை கையெழுத்திட்டிருந்தார்; பவானிசரண்! 'யார், பவானி....பவானிசரண் சௌதுரியா....?'

கடிதத்தை வைத்துவிட்டுச் சைலேன், நினைவு இழந்திருக்கும் காளிபதனின் முகத்தையே கவனித்தான். சில நாட்களுக்கு முன்புதான் அவனுடைய தோழர்களில் ஒருவன், காளிபதன் ஜாடையாகவே சைலேனின் முகமும் இருப்பதாகக் கூறினான். அப்போது அதைக் கேட்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது. இன்றோ, அதற்கு அர்த்தம் இராது போகவில்லை என்பதைச் சைலேன் உணர்ந்தான். தன் பாட்டனார் இருவர் அண்ணன் தம்பிகள்; சியாமாசரணன், பவானிசரணன் என்று அவர்களுக்குப் பெயர் என்பதை அவன் அறிவான். பிற்காலத்து வரலாறுபற்றி அவனுக்கு எதுவுமே தெரியாது. பவானிசரணன் என்பவருக்கு ஒரு மகன் உண்டு. அவன் பெயர் காளிபதன் என்பதை அவன் அறிவான். அந்தக் காளிபதனா? தன்னுடைய சிற்றப்பாவா?' - இவ்வாறு நினைத்தான் சைலேன்.

சைலேனின் பாட்டியாகிய சியாமாசரணனின் மனைவி, பவானிசரணனைப்பற்றி உயர்வாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறான். இப்போது அவனுக்கு அது நினைவுக்கு வந்தது. பவானிசரணனின் பெயரைச் சொன்னதுமே பலபலவென்று கண்ணீர் பெருகும் அவளுக்கு. பவானிசரணன் அவளுக்கு மைத்துனன்தான்; ஆனால் அவளுடைய மகனைவிட வயதில் சிறியவனே. அவனைத் தன் பிள்ளையைப் போல் வளர்த்தவள். பின்னர்ச் சொத்துக்களைப் பங்கிட்டுக்கொண்டு தனியாகப் பிரிந்து போனாலும் பவானிசரணனைப் பற்றித் தகவல் அறிய அவள் எப்போதுமே ஆவலாக இருப்பாள். அடிக்கடி தன் பிள்ளைகளிடம், 'அடே, பவானி கள்ளம் கபடமற்றவன்; உலகமே தெரியாதவன். அவனை இப்படி ஏமாற்றிச் சொத்துச் சேர்க்க வேண்டாமடா. என் மாமனாருக்கு அவன் உயிரடா....அவன் கண்ணில் மண்ணைத் தூவி இப்படி ஏமாற்றுதீர்களடா' என்பாள். அவளுக்குத் தன் பிள்ளைகள் இப்படி மோசடி செய்வது துளியேனும் பிடிக்கவில்லை. இந்தப் பாட்டி மீது தான்கூட ஒரு சமயம் சள்ளென்று விழுந்தது சைலேனுக்கு ஞாபகம் வந்தது. இப்போது அந்தப் பவானிசரணன் மிகவும் தரித்திர நிலையில் இருப்பது அவனுக்குத் தெரியாத விஷயம். காளிபதனின் நிலையைப் பார்த்த பின்பே இதை உணர்ந்தான். எவ்வளவோ இழுத்துப் பார்த்தும் காளிபதன் தன் கூட்டத்தில் சேராமல் தனித்து இருந்ததை வெகுவாய்ப் பாராட்டிப் பெருமையும் கொண்டான். இன்று அவன் தன்னுடன் தற்செயலாகச் சேருவதாக இருந்தால், தனக்கு அதைவிட அவமானம் வேறில்லை என்பதை உணர்ந்தான் சைலேன்.

4

சைலேனின் கூட்டாளிகள் இதுவரை காளிபதனுக்கு இழைத்த தொந்தரைகள் இவ்வளவென்று கூறி முடியாது. அவர்களிடையே தன் சிற்றப்பாவை வைத்துக்கொள்ள விரும்பவில்லை சைலேன். டாக்டரின் கட்டளைப்படி அதிக அக்கறையுடன் அவனை ஒரு நல்ல இடத்திற்கு மாற்றினான்.

பவானிசரணன் சைலேனின் கடிதம் கண்டதும், ஒரு துணையுடன் கல்கத்தாவுக்கு விரைந்தோடி வந்தான். அவன் புறப்படும்போது விசனமே உருவாகி நின்ற ராஸமணி தான் இதுகாறும் மிச்சப்படுத்திய பணத்தையெல்லாம் கணவனிடமே தந்து, ''அவனுக்கு நல்ல வைத்தியம் பாருங்கள்....நானும் வரவேண்டியிருந்தால், கடிதம் போடுங்கள். உடனே வருவேன்'' என்றாள். சௌதுரி குலத்து மடந்தையர் எவரும் கல்கத்தாவில் கால் வைத்தது இல்லை இதுவரை. தான் அங்கே செல்வது நன்றாக இராதென்று தன்னை அடக்கிக்கொண்டாள் பாவம்! அவள் ரட்சாகாளி முன்பு சென்று வேண்டிக்கொண்டாள்; வீட்டுப் புரோகிதரை அழைத்துத் தன் மகனின் நலத்திற்காகச் சாந்திக்கு ஏற்பாடு செய்தாள்.

பவானிசரணன், காளிபதன் இருக்கும் நிலையைக் கண்டதும் கதி கலங்கிப் போனான். காளிபதனுக்கு இன்னும் நினைவு சரியாகத் திரும்பவில்லை. அவன் தன்னைப் பார்த்து மருள மருள, 'மாஸ்டர் மஷாயா?' என்றபோது பவானிக்கு இதயம் விண்டுவிடும்போல இருந்தது. நடுநடுவே சன்னி வேகத்தில், 'அப்பா...அப்பா' என்று பிதற்றுவான். மகனின் உடம்பையும் முகத்தையும் தடவித் தடவி, ''அப்பாடா, இதோ வந்துவிட்டேனடா.....என்னைப் பாரடா'' என்று பவானி சொல்லியும் அதை அவன் புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை.

டாக்டர் வந்து பார்த்தார். ''ஜுரம், மூன்னைவிடக் கம்மியாக இருக்கிறது.....கொஞ்சங் கொஞ்சமாகத்தான் தெளியுமென்று நம்புகிறேன்'' என்றார். காளிபதன் தேறமாட்டான் என்று நினைக்கவே பவானிக்குப் பயமாக இருந்தது. காளிபதன் பெரியவனாகியதும் சாதிக்க முடியாத விஷயமெல்லாம் சாதிப்பான் - இது யாரோ சொன்னது என்று அவன் ஒதுக்கிவிடவில்லை. அந்த உறுதி அவன் என்புவரைக்கும் ஊறிக் கிடந்தது. காளிபதன் எப்படியாவது பிழைத்தாக வேண்டும்; அவன் நல்லூழ் அப்படி இருக்கிறது என்பதே பவானிசரணனின் அசையாத நம்பிக்கை.

டாக்டர், சீக்கிரமே குணமாகிவிடும் என்றால், பவானி குணமாகி விட்டதாகவே நினைத்துக்கொள்வான். ராஸ

மணிக்கு எழுதும் கடிதங்களால் சந்தேகம் தொனிக்க மகனின் நிலையைப்பற்றி ஒரு வார்த்தைகூட இராது.

சைலேன் அக்கறை காட்டுவதுபற்றி பவாணிசரணன் வியப்பே அடைந்தான். தனக்கு மிகவும் நெருங்கியவன் அல்ல என்று யாரால் சொல்ல முடியும்? கல்கத்தாவில் நல்ல படிப்பும் நாகரிகமும் உடைய ஓர் இளைஞன், இப்படித் தன்னிடத்தில் பக்தி சிரத்தை காட்டுவதுபோல் வேறு யாரையுமே பார்த்ததில்லை. கல்கத்தா இளைஞரெல்லாம் இப்படித் தான் இருப்பார்களோ என்று நினைத்தான். நாட்டுப்புறத்துப் பிள்ளைகளுக்குத்தான் இந்தப் பண்பாடு கிடையாது என்று கருதும் அளவுக்கு வந்தான் பவானி.

காளிபதனுக்கு ஜுரம் இறங்கிக்கொண்டு வந்தது. நினைவும் படிப்படியாகத் திரும்பியது. தந்தை தன் பக்கலில் இருப்பதைப் பார்த்து, தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். வறுமை நிலையை ஏற்றுத் தான் கல்கத்தாவில் இருக்கும் கோலத்தைத் தந்தை பார்த்துவிட்டாரே என்ற கூச்சமே அவனுக்கு. அதைவிட நாட்டுப்புறத்து மனிதரான அவர் இந்தப் பட்டணத்து ஆசாமிகளின் கேலிக்குப் பாத்திரமாகப் போகிறாரே என்ற வேதனையும் இருந்தது. நாற்புறமும் கவனித்தவுடன், 'இதென்ன? இது யார் வீடு? நாம் எங்கே இருக்கிறோம்? காண்பது கனவா?' என்றெல்லாம் நினைத்துக்கொண்டான்.

அச்சமயம் அதிகமாகச் சிந்தனை செய்யக்கூடிய சக்தி அவனுக்கு இல்லை. தனக்கு அசௌக்கியம் என்று தெரிந்தும் அப்பா ஓடி வந்து தன்னை வேறு வீட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார் என்றே எண்ணினான். 'இதையெல்லாம் அவர் எங்ஙனம் செய்ய முடிந்தது? அதற்கான பணம் ஏது?' என்பதையெல்லாம் சிந்திக்க அவனுக்குப் போதிய வலிமை வரவில்லை. தான் பிழைத்து எழுந்தால் போதும்; உலகத்தில் தான் செய்ய வேண்டிய கடமை உள்ளது என்பதே அவனுடைய கவலை.

ஒரு சமயம், அவன் தந்தை அறையில் இராதபொழுது சைலேன் ஒரு கோப்பையில் பழ ரசத்துடன் அவன் அருகில் வந்து நின்றான். காளிபதன் திகைப்புற்று அவன் முகத்தையே நோக்கினான். 'இதுவும் அவன் செய்யும் பரிகாசங்களில் ஒன்றோ?' என்று எண்ணி, முன்னால் தன் தந்தையை இவன் செய்யும் கேலி நாடகத்திலிருந்து காக்கவேண்டுமென்று உறுதி கொண்டான்.

சைலேன் பழரசம் அடங்கிய கோப்பையை மேசைமீது வைத்துக் காளிபதனிடம் பணிவாக, ''நான் பெரிய தவறு செய்துவிட்டேன்; என்னை மன்னித்து விடுங்கள்'' என்றான்.

காளிபதனுக்குச் சங்கடமாக இருந்தது. சைலேன் கபட மின்றி இதைக் கூறுவதுபோல் இருந்தது. முதன் முதல் உணவு விடுதிக்கு வந்தபோது சைலேனின் தேசு நிரம்பிய முகம் தன்னைக் கவர்வதை உணர்ந்தான் காளிபதன். வறுமையின் வேதனையினால் இவனே நெருங்கக் கூசிக்கொண்டான். தன் நிலைக்குச் சமமானவனாக இருப்பின் அவனுடன் நெருங்கிப் பழகியே இருப்பான் காளிபதன். ஆனால் அவனுக்கும் சைலேனுக்கும் இடையே அந்தஸ்தின் வேற்றுமை நின்றதே! மாடிப் படியில் ஏறும்பொழுதும் இறங்கும்போதும் இந்த நாகரிகனின் சாதரிலிருந்து வீசும் நறுமணம் காளிபதனின் இருட்டறையினுள்ளும் நுழையும். அப்போது தன் படிப்பை நிறுத்தி அவனது வசீகரமான தோற்றத்தை நோக்கவே மனம் தூண்டும். அந்தத் துளிநேரம் அந்த ஈரங் கசியும் அறையில் அழகுலகின் ஒளிக்கிரணம் சட்டெனப் புகுந்து காளிபதனின் உள்ளத்தை அசைக்கும். அப்புறம் அந்தச் சைலேன் அவனுக்கு இழைத்த கொடுமை யாவும் தெரிந்த விஷயமே. இன்று கையில் உள்ள பழரசம் உள்ள பாத்திரத்துடன் அவன் நிற்பதை நோக்கி, காளிபதன் பெருமூச்செறிந்து அவனையே கண் கொட்டாமல் நோக்கினான். மன்னிப்பை அவன் தன் வாயால் கூறுது போனாலும் அவன் நீட்டிய பழரசத்தை மெல்லக் கையில் வாங்கிக் குடித்திருப்பான். இதன் மூலம் அவன் சொல்ல வேண்டியது வெளிப்பட்டது.

நாட்டுப்புற மனிதரான தன் தந்தையும், பட்டணத்துச் சைலேனும் இழைந்து பழகுவது காளிபதனுக்கு வேடிக்கையாக இருந்தது. சைலேன் பவானியைத் தாத்தா என்று அழைத்தான். இருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டனர். இருவருடைய வேடிக்கைப் பேச்செல்லாம் ஊரிலிருந்து வராத அந்தப் பாட்டியைக் குறித்தவையே. பவானிசரணனின் மனத்துள், அந்த இளைஞனின் தொடர்பு, மெல்லிய தென்றலெனப் புகுந்து பழைய இனிய நினைவுகளை எழுப்பிப் புல்லரிக்கச் செய்தது. அந்தப் பாட்டி அனுப்பிய ஊறுகாய் வற்றல்களைக் காளிபதன் நோயுற்ற சமயத்தில் சைலேன் திருடித் தின்று தீர்த்துவிட்டான். இதை அவன் வெட்கமின்றி ஒப்புக்கொண்டான். இப்படி அவன் செய்ததைக் குறித்துக் காளிபதன் உண்மையில் மகிழ்ச்சியே கொண்டான். அவன் தாய் கைப்பட்ட எந்தப் பண்டந்தான் ருசிக்காது? இவ்வுலகில் யாருக்குத்தான் சுவை அளிக்காது? இது பெருமை தரும் விஷயம். இன்று அவன் நோயாகக் கிடக்கும் அந்த அறை, இன்பம் நிரம்பிய இடமாகவே மாறியது. அவனுடைய தாய்மட்டும் அங்கே இருப்பின் ஆனந்தக்

கோலமாகவே இருக்கும்; சைலேனிடம் என்ன அன்பு காட்டு வாள்! - இவ்வாறெல்லாம் காளிபதன் கற்பனை செய்து கொண்டான்.

ஒரே ஒரு விஷயந்தான், இந்த ஆனந்தவெள்ளத்தைத் தடுத்து நின்றது. காளிபதனுக்குத் தன் வறுமையைக் குறித்துப் பெருமையே. ஒரு சமயம் தங்களுக்கு ஏராளமான சொத்து இருந்தது என்று பறை அறைந்துகொள்ள அவன் வெட்கப்பட்டான். ஏழைதான்; இதில் 'ஆனால்' என்று இழுப்பதற்கு அவசியமே இல்லை என்பது அவனுடைய கொள்கை.

பவானிசரணனுக்குத் தான் ஒரு சமயத்தில் நல்ல நிலையில் இருந்ததைச் சொல்லிக்கொள்வதில் பெருமை இராது போகவில்லை. உண்மையிலேயே நல்ல காலத்தைப் பார்த்தவன்தான். அப்போது நிறை இளமை. நம்பிக்கைத் துரோகம் அந்த ஏக குடும்பத்தில் இன்னும் தலைதூக்கவில்லை. சியாமாசரணனின் மனைவி - அன்பு கனிய அவனை வளர்த்த அந்த மதனி ரமாசுந்தரி - வீட்டுக்குத் திருமகள் போல இருந்து, வற்றுத அதன் களஞ்சியத்தைத் திறந்து அவனுக்கு விட்டிருந்தாள். அதில் திளைத்தவன் பவானி. மங்கி மறைந்த அந்நாட்களே பவானியின் வாழ்வில் பொன்யுகமாகும். இந்த இனிய நினைவுகளுக்கிடையே அந்த உயில் களவு ஒன்றுதான் அவன் மனத்துள் சுற்றிச் சுற்றி வந்து முள்போல் உறுத்தியது. அந்தப் பேச்சை எடுக்கும்பொழுதெல்லாம் பவானிக்கு ஆத்திரம் மூண்டுவிடும். இந்த உயில் கட்டாயம் கிடைத்துவிடுமென்று நம்பிக்கை அவனுக்கு நிறைய உண்டு. அவனுடைய பதிவிரதை அன்னை கூறியது எங்கேயாவது வீண் போகுமா? இது ஒன்றே காளிபதனைத் துளைத்து வந்தது. தந்தையின் பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு வருந்தினான். சைலேன் எதிரே தந்தை இதையெல்லாம் கிளறுவது அவனுக்குப் பிடிக்கவே இல்லை. பன்முறை தந்தையிடம், 'அப்பா, நீ கொள்வது பொய்யான சந்தேகம்' என்று சொல்லிப் பார்த்தும் நேர்மாறான பலனே விளையும். தன்னுடைய சந்தேகம் பொய்யென்றென நிரூபிக்க ஒவ்வொரு விஷயத்தையும் அலசிப் பார்க்க முற்படுவான். காளிபதன் எவ்வளவோ தடுத்தும் அவன் ஓயவே மாட்டான்.

இந்தப் பேச்சு வெகுவாய்ச் சைலேனுக்குப் பிடிக்கவில்லை என்பதைக் கவனித்தான் காளிபதன். அவனும், சற்று விறுவிறுப்பாகவே பவானிசரணனின் வாதங்களைக் கண்டிக்கத் தொடங்கினான். வேறு எந்த விஷயத்தில் வேண்டுமானாலும் பவானிசரணன் அடங்கிப் போனாலும் போவான்; ஆனால் இதில் மட்டும் அவன் துளியேனும் அசைந்து கொடுத்ததில்லை.

அவனுடைய தாய்க்கு எழுதப் படிக்கத் தெரியும். அவளே அந்த உயிலை இரும்புப் பெட்டியில் வைத்துப் பத்திரமாக மூடியவள். அவன் எதிரிலேயே ஒரு நாள் அவள், அதைத் திறந்த பொழுது மற்றப் பத்திரங்கள் இருந்த இடத்திலேயே கிடக்க, அந்த உயிலை மட்டும் காணவில்லை. இது களவல்லாமல் வேறு என்னவாம்? காளிபதன் அவரைத் தணிவிக்க, 'அப்பா, அதெல்லாம் சரி; உன் சொத்தை அநுபவிக்கிறார்களே; அவர்கள் யார்? உன் பிள்ளைகளைப்போலத்தான். நெருங்கிய உறவினர்தாம். மூன்றும் ஆள் எடுத்துக்கொண்டு போகவில்லையே! நம் வம்சத்தில் இருக்கிறது' என்பான். இந்தப் பேச்சையெல்லாம் சைலேன் வெகு நேரம் நின்று கேட்க மாட்டான்; அறையை விட்டு வெளியே போய்விடுவான். அப்போது காளிபதனுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். 'தந்தையைச் சைலேன் சோற்றுப் பித்தன் என்று நினைத்துக்கொள்ளப் போகிறானே.... உண்மையில் அவருக்கு எதன்மீதும் ஆசையே கிடையாது; இதைச் சைலேன் உணர்வானா?' என்று நினைத்துக்கொள்வான்.

சைலேன் தான் யாரென்பதைக் குறித்து இத்தனை நாளில் காளிபதனுக்கும் பவானிசரணனுக்கும் வெளியிட்டிருப்பான்; ஆனால் இந்த உயில் களவு போன பேச்சு அதைச் செய்ய விடாமல் குறுக்கிட்டது. தன் பெற்றோர் இந்தக் களவில் சம்பந்தப்பட்டவில்லை என்பது அவனுடைய உறுதியான நம்பிக்கை. ஆனால் பவானிக்குச் சேரவேண்டிய சொத்தைச் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை என்பதை முடிவில் ஒப்புக்கொள்ளாமலும் இருக்க முடியவில்லை.

இப்போது மாலை நேரங்களில் சற்று ஜுரம் வந்து தலை வலி கண்டால், அதைக் காளிபதன் பெரிதாகவே நினைப்பதில்லை. படிக்க வேண்டுமென்று பரபரப்புற்றான். ஒரு தரந்தான் உதவிச் சம்பளம் இழக்க நேர்ந்தது; இந்தத் தரம் நன்றாகத் தேறி அதைப் பெற வேண்டுமென்பது அவனது சங்கற்பம். அதனால் சைலேனுக்குத் தெரியாமல் அவன் படிப்பில் கவனம் செலுத்தினான். டாக்டர், புத்தகத்தையே அவன் தொடக் கூடாதென்று தடுத்திருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தவில்லை. தந்தையைப் பார்த்துக் காளிபதன், ''நீ ஊருக்குப் போகலாம், அப்பா! அம்மா தனியாக வேதனைப்படுவாள். எனக்குத்தான் குணமாகிவிட்டதே'' என்பான்.

சைலேனும், ''இனிமேல் நீங்கள் இங்கே இருக்கவேண்டிய அவசியமில்லை. கவலைக்கிடமில்லை. இன்னும் ஒரே வாரத்தில் நடக்க ஆரம்பித்துவிடுவான் காளி. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் அவனை'' என்றான்.

பவானிசரணன், ''அது தெரியும். காளிபதனைக் குறித்துக் கவலை இல்லை. நான் கல்கத்தாவுக்கு வந்தது, வேறு ஒரு விஷயத்தையும் உத்தேசித்து. அதுவும் உன்னுடைய பாட்டி, அந்த அபிப்பிராயம் கொண்டிருக்கும்பொழுது அந்தப் பேச்சை எப்படி விட்டுவிட முடியும்?'' என்றான்.

சைலேன் சிரித்து, ''தாத்தா, இடங் கொடுத்துக் கொடுத்து என் பாட்டியைப் பாழாக்கிவிட்டீர்கள்'' என்றான்.

பவானியும் சிரித்தவாறு, ''பேரனே! உனக்குப் பெண் டாட்டி வரட்டும். அவளை நீ எப்படி நடத்துகிறாயோ பார்க்கலாம்'' என்றான்.

பவானி, ராஸமணி உருவாக்கிய ஒரு ஜீவன். கல்கத்தாவில் தங்கியிருந்தபோது அவனுக்குச் செய்த உபசரணைகள், சௌகரியங்கள் பலத்து இருந்தும் ராஸமணியின் ஆதரவில் காணும் ஓர் இன்பத்திற்கு அவை ஈடாகுமா? ஊருக்குத் திரும்பும்படி பவானியை வற்புறுத்த அவசியமே ஏற்படவில்லை.

காலையில் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிவிட்டு, காளிபதனிடம் விடைபெற வந்தபோது அவனுடைய முகம் சிவந்திருந்ததைப் பார்த்தான் பவானி. உடம்பு ஜ்வரத்தால் பொரிந்தது. முன்னுள் இரவெல்லாம் 'லாஜிக்' பாடம் படித்தான் காளிபதன். இரவெல்லாம் தூங்கவே இல்லை.

காளிபதனுக்கு ஏற்பட்ட பலவீனம் போகவே இல்லை. வேறு நோயின் அறிகுறிகள் அவனிடம் தென்படவே, டாக்டர் சற்றுக் கலங்கிப் போனார். சைலேனைத் தனிமையில் அழைத்து, ''எனக்கு அவன் தேறுவான் என்று படவில்லை'' என்றார். பவானிசரணனிடம் சைலேன், ''தாத்தா, நோயாளியைக் கவனிக்கத் தகுந்த ஆள் வேண்டும். நீ பாட்டியை வரவழைத்து விடு'' என்றான்.

சைலேன் எவ்வளவு மூடி மறைக்கப் பார்த்தாலும், பவானியின் மனத்தை ஏதோ ஒரு கிலி பற்றிக்கொண்டது. அவனுடைய கைகாலெல்லாம் நடுங்கத் தொடங்கின. ''உனக்குத் தோன்றியபடியே செய்'' என்றான்.

ராஸமணிக்குக் கடிதம் வந்தது. அவள் பகளாவைக் கூட்டிக்கொண்டு கல்கத்தாவுக்குப் பறந்து வந்தாள். அவள் வந்த சமயம் இருட்டிவிட்டது. தன் மகன் காளிபதன் இரண்டு மணிகாலமே உயிருடன் இருப்பதைப் பார்க்கக் கொடுத்து வைத்தாள். ஜ்வர வேகத்தில் அவன், 'அம்மா' என்று அழைத்தது அவள் இதயத்தைப் பிழிந்துவிட்டது போல் இருந்தது.

இந்த அதிர்ச்சியை எப்படித்தான் தன் கணவன் சகித்து உயிர் வைத்திருக்கப் போகிறானே என்று ராஸமணி தன்

சோகத்தை வெளியிடாமல் தனக்குள் குமுங்கிப் போனாள். இனிச் சகிக்க முடியாது என்று அவள் உள்ளம் கதறினாலும், அவள் சகித்துத்தானே ஆகவேண்டும்?

5

இரவு வெகு நேரம் இருக்கும். ஆழ்ந்த சோகத்தினால் களைப்பெய்திச் சில கணம் தன்னையும் மீறி ராஸமணி தூங்கிப் போய்விட்டாள். ஆனால் பவானிசரணனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டவண்ணம், ''ஏ ஹரி, தயாளு'' என்று அரற்றிக்கொண்டிருந்தான். காளிபதன் சிறுவனாக இருந்தபோது அவன் படித்த அறையினுள் பவானிசரணன் கைகள் நடுங்க ஒரு விளக்குடன் நுழைந்தான். ராஸமணி பூ வேலை செய்த அந்தத் துணி இன்னும் அந்த மேசைமீதே இருந்தது. அதில் பல இடங்களில் அவன் மகன் செய்த அடையாளங்கள் இருந்தன. சுவரெல்லாம் அவன் கிறுக்கிய ஜாமெட்ரிக் கணக்கின் கோடுகள். மேசையின் இழுப்பு அறையில், அவன் படித்த ராயல் மூன்றும் வாசகத்தின் கிழிந்த பகுதி கண்ணில் பட்டது. ஐயோ...! அவன் சிற்றடிகள் அணிந்த அந்தச் செருப்புக்களை இதுவரை யாருமே கவனித்ததில்லை. இப்போது திடுமென அவை கண்ணில் சிக்குகின்றன அவனுக்கு.

புரையில் விளக்கை வைத்துவிட்டுப் பவானி, வெகுநேரம் அந்த அறையிலேயே காளிபதன் மஞ்சத்தின்மீது உட்கார்ந்து விசனத்தில் ஆழ்ந்திருந்தான். வறண்டுபோன அவனுடைய விழிகளில் நீர் துளிக்கவே இல்லை. ஆனால் உள்ளத்தில் மட்டும் சொல்லமுடியாத வேதனை. மூச்சுத் திணறி இதயக் கூட்டிலிருந்து வெடித்து வெளியேறத் துடித்தது. அறையின் கிழக்குப் புறமான சாளரத்தைத் திறந்து அதன் கிராதியைப் பிடித்துக்கொண்டு வெளியே நோக்கினான்.

ஒரே இருள். பிசுபிசுவென்று தூற்றல் விழுந்தது. எதிர்ப் புறம் சுவருக்குள் ஒரே புல்லும் பூண்டும். அதனிடையே சிறிது இடம், காளிபதன் தோட்டம் அமைக்கத் தன் கையால் கொத்தி வைத்திருந்தான். அவன் தன் கையாலேயே நட்ட சம்பங்கிக் கொடி படலில் படர்ந்து ஆடிக்கொண்டிருந்தது; அதன் பூ மணம் வேறு. அதைப் பார்த்ததுமே பவானியின் தொண்டை விம்மிற்று. இனிமேல் ஆசை வைப்பதற்கு என்ன இருக்கிறது? காளி கோடை விடுமுறையின்போது வந்து போனவன்; இந்தத் தரித்திரம் பிடித்த இடத்தில் என்ன சுகத்தைக் கண்டான்? இனி வரவே மாட்டான்! ''அட, என் மகனே!'' என்று கூவித் தொப்பென்று தரையில் விழுந்து

விட்டான்; காளிபதன், தன் தந்தையின் வறுமையை ஒழிக்கும் சங்கற்பத்துடன் கல்கத்தாவுக்குச் சென்றான். ஆனால் அவன் தன் கிழத்தந்தை கடைசி வரைக்கும் வறுமையில் உழல்வது போதாதென்று வெந்துயரிலும் துடிக்கும்படி வைத்து விட்டான்! மழை சற்று வலுத்து வந்தது வெளியே.

அச்சமயம் இருட்டில் செடிகளை அசைத்து யாரோ வரும் காலோசை கேட்டது. பவானியின் இதயம் திக்கென்று அடித்துக்கொண்டது. அவன் எங்கேயாவது மீண்டு வருவானோ? வீண் மாயை! மழை கனத்த தாரையாக விழுந்தது. 'ஐயோ அவன் உடம்பு நனையப் போகிறதே!' என்று பவானியின் மனம் அடித்துக்கொண்டது. சே! அவன்தான் இல்லையே...அச்சமயம் யாரோ சன்னலுக்கு வெளியே கிராதியின் முன்னால் கணநேரம் நிற்பதுபோல் தெரிந்தது. மருள்தானோ? இல்லை. துணியால் முகத்தை மறைத்துக்கொண்டிருந்தது அந்த உருவம். யாரென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏறக் குறையக் காளிபதன் சாயலாகவே இருக்கும் போலத் தோன்றியது. ''வந்துவிட்டாயடா, கண்ணு?'' என்று பவானி பித்துப் பிடித்தவன்போல் அறைக்கு வெளியே வந்தான். கதவைத் திறந்துகொண்டு தோட்டப் பக்கம் சென்றான். அங்கே யாருமே இல்லை. அந்த மழைத் தூற்றலில் நனைந்து நாலு திசையும் சென்று தேடினான். எவரையும் காணவில்லை. அந்த நள்ளிரவில், இருளிடையே பவானிசரணன், ''காளிபதா!'' என்று கூவத் தொடங்கினான். ஒரு பதிலும் இல்லை. அந்தக் கூச்சலைக் கேட்டு வேலைக்காரன் நோடோ - மாட்டுத் தொழுவத்தில் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தவன் - ஓடிவந்து, நிலைகெட்டு அலையும் தன் கிழ எசமானனை வீட்டினுள் அழைத்து வந்தான்.

மறு நாள் நோடோ அதே அறையில் குப்பையைப் பெருக்கி வாரச் சென்றபோது சன்னல் கிராதி ஓரமாகக் காகிதத்தில் சுருட்டிய ஏதோ ஒன்று விழுந்திருப்பதைக் கண்டான். அதைப் பவானிசரணனிடம் கொடுத்தான். பிரித்துப் பார்க்கையில் பழைய பத்திரம் போல் இருந்தது. மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பவானி அதைப் படித்ததும் ராஸமணியிடம் வேகமாக ஓடிவந்து அவள் எதிரே அந்தக் காகிதத்தைக் காட்டினான்.

ராஸமணி, ''என்ன அது?'' என்றாள்.

பவானி, ''அந்த உயில்'' என்றான்.

ராஸமணி, ''யார் கொடுத்தார்கள்?'' என்றாள்.

பவானி, ''நேற்று இரவு அவனே வந்து கொடுத்தான். அவனே கொடுத்துவிட்டுப் போனான்'' என்றான்.

ராஸமணி, ''இப்படியும் நடக்குமா?'' என்றாள்.

பவானி, ''இனிமேல் இது எனக்குத் தேவையே இல்லை'' என்றதும் அந்த உயிலைப் பிய்த்து எறிந்தான்.

இந்தச் செய்தி அந்த ஊரெங்கும் பரவியது. பகளா சரணன் தலையை ஆட்டிக்கொண்டு, ''நான் சொல்ல வில்லையா, காளிபதன் மூலமாகக் காணுமற்போன அந்த உயில் கிடைக்குமென்று'' என்றான். கடைக்கார ராமசரணன், ''ஆனால் சுவாமி, நேற்று இராத்திரி பத்துமணி வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஓர் இளைஞன் - பணக்கார பாபு என்றே கூறலாம் - அவன் என் கடையண்டை வந்து சௌதுரியின் வீடு எந்தப் பக்கம் என்று கேட்டான். நான் வழி காட்டினேன். அவன் கையில் ஏதோ காகிதச் சுருள் இருந்தது; அதை நான் பார்த்தேன்'' என்றான்.

''அதையெல்லாம் விட்டுத் தள்ளு'' என்று பகளாசரணன் அவனுடைய பேச்சை உதறித் தள்ளினான்.

ஹால்தார் குடும்பம்

இந்தக் குடும்பத்தாரிடையே சண்டையோ சச்சரவோ மூள்வதற்குத் தகுந்த காரணம் எதுவும் இல்லை. நல்ல நிலையில் இருந்தார்கள். மனிதர்களும் நல்லவர்தாம். ஆனாலும் கிளர்ச்சி ஏற்பட்டது.

தகுந்த காரணமிருந்தால் குடித்தனம் ஒரு கணக்குப் பேரேட்டிற்குச் சமமாக இருக்குமே. சற்று விழிப்பாக நடந்தால் கணக்கிலே எங்குமே தவறு கண்டுபிடிக்க முடியாது; அப்படி ஏதாவது தென்பட்டாலும் ரப்பரைக் கொண்டு அழித்துத் திருத்திவிடலாம்.

ஆனால் மனிதனுடைய அதிர்ஷ்ட தேவதைக்குக் குறும் பென்றுல் பிடிக்கும். கணிதத்தில் அந்தத் தேவதைக்கு ஆற்றல் உண்டோ, இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் ஆர்வம் இல்லையென்று மட்டும் சொல்லுவேன். மனித வாழ்வில் ஏற்படும் கூட்டல் கழித்தலைப்பற்றி அது அவ்வளவாக மண்டையை உடைத்துக்கொள்ளவில்லை. இதற்காகவே தன் கணக்கு வழக்கில் ஒரு புதிய விஷயத்தைக் கையாள்கிறது: அநுசிதம் என்பதுதான் அது. உசிதமான காரணமே இராது. ஆனால் திடீரென்று ஒன்று நிகழும். இதனால் குடும்பம் பம்பரமாகச் சுழலும். சிரிப்பும் கண்ணீரும் கரை புரண்டு ஓடும் வீட்டில்.

இந்த இடத்திலும் அதுவேதான் நடந்தது. கண்ணுக்கு அழகாகத் தாமரை கூடுபோல் பூத்திருந்தது. யார் எண்ணினார்கள், மதயானை வந்து அதைப் பாழாக்குமென்று? சேற்றில் முளைத்த தாமரை சேற்றோடு குழைந்து போய்விட்டது. இப்படி நேராது போனால் கதை உருவெடுப்பது எப்படி?

இப்பொழுது சொன்ன குடும்பத்தாரிடையே எல்லாரையும்விட யோக்கியமானவன் பனுவாரிலாலே; அதில் ஐயமில்லை. அது அவனுக்கும் நன்றாகத் தெரியும். அதனாலேயே கர்வம் சற்றுத் தலைகேறி இருந்தது. யோக்கியதை, எஞ்சினிலுள்ள நீராவிபோல் அவனை முன்னுக்குத் தள்ளியது. எதிரே வழி இருந்தால் அது நன்மையாக முடியும்; இராது போனால் குறுக்கே எது தடுத்தபோதிலும் அதன்பேரில் மோதிக் கொள்ள வேண்டியதுதான்.

அவனுடைய தந்தை மனேகரலால் பழைய காலத்துப் பெரிய மனித ரகத்தைச் சேர்ந்தவர். தம் சமூகத்தின் சிகாமணியாகத் தலைமை வகிக்க வேண்டுமென்பது அவர் அவா. அதனால் சமூகத்தின் கை கால் போன்ற கீழ் உறுப்புக்களுடன் அவர் வேலையே வைத்துக்கொள்வதில்லை. சாதாரணமான மனிதர்கள் தம் வேலையைச் செய்வார்கள். சுறுசுறுப்பாக இருப்பார்கள்; அவரோ வேலை எதுவுமே செய்யாத உடம்பைத் துளிக்கூட அசைக்காத ஒரு பெருந் தகைமைக்கு நடுநாயகமாக விளங்கினார்.

இத்தகைய மனிதர்கள் முயற்சியின்றியே இரண்டொரு விஷயங்களில் ஆற்றல் மிக்கவராக இருக்கிறார்கள். காந்தக் கல்போல் சரியான ஆட்களைத் தம் பக்கமாக இழுத்துக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் வேறென்றும் இல்லை. உலகில் ஒரு சாரார் தொண்டு செய்வதற்கென்றே ஜன்மம் எடுக்கிறார்கள். தாம் எடுத்த ஜன்மம் பயனடைவதன் பொருட்டே கையாலாகாத ஒருவனுடைய மாயத்துள் கட்டுண்டு அலைகிறார்கள். இவர்களுடைய பலவீனத்தைக் கண்டு அவனும் தன் முழுப் பொறுப்பையும் இத்தகையோர் மேல் போட்டுவிடுகிறான். 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடையவர்கள் தம் சொந்த வேலையில் ஒருவித ஆறுதலும் அடையாது போனாலும் ஒருவனுக்கு மட்டும் அமோகமான நிம்மதியைத் தருகிறார்கள். அவனைச் சங்கடங்களிலிருந்து மீட்கிறார்கள். உலகத்தவர் கண்முன் அந்த உதவாக்கரையை உயர்த்தி வைக்கிறார்கள். ஆண்களாகப் பிறந்த தாய்மார் என்றே கூற வேண்டும் இவர்களை. அதுவும் சொந்தப் பிள்ளைகளுக்கல்ல; பிறர் மக்களுக்கு.

மனேகரலாலின் வேலைக்காரனின் பெயர் ராமசரணன். பாபுவின் உடலை வளர்ப்பதற்கென்றே அவன் உயிர் வைத்திருந்தான் என்று சொல்வது மிகையாகாது. பாபுவுக்கு மூச்சுவிடுவது சிரமமான காரியமாயிருந்தால், நாள் முழுவதும் துருத்திபோல் மூச்சுவிட அவன் சித்தமாகக் காத்திருந்தான். வெளியார்மட்டும் நினைப்பார்கள் - 'பாவம்! இந்த ஆள் காரன் உயிரை எடுத்துவிடுகிறான், சண்டாளன்' என்றுதான். கீழே நழுவி விழுந்துவிடும், கையிலுள்ள குடாக்குக் குழாய். அதை எடுப்பது என்னவோ சிரமமான காரியமன்று. ஆனால் பாபு இதற்காக ராமசரணனைக் கூப்பிடுவார். எந்த வேலை இருந்தாலும் போட்டுவிட்டு ஓடிவருவான். அநாவசியமாக உடலை வாட்டிக்கொள்வதில் ராமசரணனுக்கு அளவற்ற ஆனந்தம்; பிரபுவுக்குச் செய்யும் சேவை அல்லவா?

ராமசரணன் எப்படியோ, அப்படியே இன்னொரு பக்தன்

இருந்தான்-நீலகண்டன்; குடும்பச் சொத்து, உடைமை யாவை யும் பாதுகாக்கும் பொறுப்பு அவன் தலைமீது விழுந்தது. பாபு சாப்பிட்டு மிகுந்த பிரசாதங்களைப் பெற்று ராமசரணனுடைய உடல் மினுமினுவென்று கொழுத்திருந்தது. ஆனால், நீலகண் டனை உலர்ந்த மேனியும் எலும்புக் கோவையுமாக இருந் தான். பாபுவின் செல்வக் களஞ்சியத்தின் காப்பாளன்தான்; ஆனால் பஞ்சத்தின் குறி அவன் முகத்தில். சொத்தெல்லாம் மனைகரலாலுடையது. அதை வகிக்கும் மதிப்பு என்னவோ நீலகண்டனுக்குத்தான்.

சில நாட்களாகவே நீலகண்டனுக்கும் பனைவாரிலாலுக் கும் நடுவே மனத்தாங்கல் முற்றி வந்தது. தந்தையைப் பேட்டி கண்டு பனைவாரி தன் மனைவிக்கு நகை பண்ணிப்போடு வதற்கு உத்தரவு பெற்றிருந்தான். அவன் எண்ணம், பணத் தைக் கொண்டு தன் விருப்பப்படி நகை செய்ய வேண்டு மென்பதே. ஆனால் அந்த மாதிரி நடத்துவதற்கு வழி இல் லையே! செலவெல்லாம் நீலகண்டன் கையைக் கொண்டே செய்ய வேண்டியிருந்தது. அதன் விளைவென்ன? நகை என்னவோ உருப்படியாக வந்தது. ஆனால் விருப்பம்போல் அமையவில்லை. தட்டானும் நீலகண்டனும் சேர்ந்து ஏதோ சூழ்ச்சியம் பண்ணிவிட்டார்களெனப் பனைவாரி நம்பிவிட்டான். கறார்ப் பேர்வழிகளுக்கு விரோதிகள் இருப்பது இயல்பு. பல பேர் பல விதமான புரளி எழுப்பினர், நீலகண்டனைப்பற்றி. குத்திக்கொடுத்ததுபோல் ஆகிவிட்டது பனையாரிக்கு. பிறரை வஞ்சித்ததைவிடத் தன் வீட்டிலேயே இவன் அதிகமாகச் சுரண்டிவிட்டிருப்பானென்ற தவறான கொள்கை கொண்டிருந் தான் பனைவாரி.

இரு பக்கத்தார் நடுவே குருத்துவிட்ட இந்தப் பகை அற்பக் காசு ஐந்து ரூபாயிலிருந்து ஆரம்பம். நீலகண்டன் முன் யோசனைக்காரன். பனைவாரியுடன் ஒத்துப் போகாது போனால் பிற்பாடு தன் வேலைக்கே உலை என்ற செய்தியை அவனுக்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஆனால் எசமான ருடைய சொத்தின்பேரில் அவனுக்குக் கருமிக்குரிய ஒரு பாசம் இருந்தது. தன் புத்திக்குச் சரியென்றெனப் பட்டால், எசமானர் உத்தரவு கொடுத்திருந்தாலும் பணத்தைச் செலவு செய்ய மாட்டான்.

இந்தப் பக்கம் பனைவாரிக்குத் தீய வழிகளில் பணத் தைச் செலவு செய்ய வேண்டிய வாய்ப்புக்கள் உண்டாயின. ஆடவர்கள் அநியாய வழிகளில் இறங்குவதற்கு மூல காரண மாக நிற்கும் ஒரு விஷயம் இந்த இடத்திலும் வெட்ட வெளிச்சமாகத் தோன்றியது. பனைவாரியின் மனைவி கிரண

லேகாவுக்கு வயது என்ன இருக்குமோ தெரியாது. பார்வைக்குத் துளியுண்டு பெண்ணுக இருந்தாள். வீட்டின் பெரிய மாட்டுப் பெண்ணிடத்தில் இருக்கவேண்டிய கம்பீரம் அவளிடத்தில் கொஞ்சமேனும் இல்லே. அவ்வளவு பெரிய இடத்திற்கு அவளுடைய சிறிய உருவம் ஒத்திருக்கவில்லே.

பனேவாரி அவளே ஆதரவுடன் அணு என்று அழைப்பான். அதுவும் போதாது போனல் பரமாணு என்பான். இரசாயனக் கல்வியில் பற்றுடையவர்கள் இந்த உயிர்ப்படைப்பில் அணு பரமாணுக்களுக்கு உள்ள சக்தியை உணர்வார்கள்.

கிரண் என்றுமே கணவனே நெருங்கி எதுவும் கேட்டதில்லே. அவளுக்கு வீட்டில் ஒருவிதக் குறையுமில்லே. நாத்தனர், ஓர்ப்படிகள் நிறைய இருந்தார்கள். அவளுடைய பொழுதெல்லாம் இவர்களுடன் பழகுவதிலேயே கழிந்து விடும். புது இளமையில் பூக்கும் காதல் எப்போதும் தனிமையில் விரகத் தவம் பூண்டிருக்கும். ஆனல் இவளுக்கு அத்தகைய நிலே ஏற்படவில்லே. பனேவாரி விஷயத்தில் இவளுக்கு ஆர்வம் குறைவே. அவனிடத்திலிருந்து இவள் எதையும் அமைதியுடனேயே பெற்றுள். தானுகவே முன் விழுந்து யாசிக்கவில்லே. இதன் பலன் தன் மனேவியை எப்படி வசப்படுத்திக்கொள்வதென்ற கவலேக்கு உள்ளானுன் பனேவாரி. பெண்டாட்டி தானே வாய் திறந்து எதையாவது கேட்டால், அவளோடு தருக்கம் புரிந்து கொஞ்சம் குறைத்தே செய்வதற்கு இடம் இருந்தது; ஆனல் தானே பரிந்து அவளுக்குச் செய்வதும் உசிதமல்ல. அவள் வருந்திக் கேட்காதபோது காட்டும் தாராளம் அதிகக் செலவுக்கே வழி வைக்கும்.

கணவன் தந்த அன்பளிப்பைக் கண்டதும் கிரண் பூரித்துப் போனுளா என்று அறிவதற்கு வழி இல்லே. இந்த விஷயமாக அவளேக் கேட்டபொழுது நன்ருக இருக்கிறது என்றுமட்டுமே கூறினுள். பனேவாரிக்குத் திருப்தி உண்டாகவில்லே. ஒரு வேளே போட்ட நகை அவளுக்குப் பிடிக்கவில்லேயோ என்று நிமிடத்திற்கு நிமிடம் அவன் சந்தேகப்பட்டான். கிரண் கணவனேக் கடிந்து, ''உங்களுக்குத்தான் இந்தக் கோணல்புத்தி. எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள்? நகை எனக்குப் பிடித்துத்தான் இருக்கிறது!'' என்ருள்.

பாடப் புத்தகங்களில் களிப்பு உணர்ச்சி மனிதனுக்குரிய மகத்தான பண்பு என்பதைப் படித்திருக்கிருன் பனேவாரி. ஆனல் மனேவியின் குணத்தினுல் இந்த மேன்மையான உணர்ச்சி அவனுக்குத் துன்பத்தையே தந்தது. கிரண் அவனுக்குத் திருப்தியை மட்டுமா தந்தாள்? மோகத்துள் ஆழ்த்தி

ஞள். அவனும் மனைவியை மயக்க விரும்பினான். மோகவலை வீசக் கிரண் முயற்சியே எடுத்துக்கொள்ளவில்லை. இளமைச் செவ்வி வழிந்தோடியது அவள் அங்கங்களில். தானாகவே அது வெளிப்பட்டது. ஆனால் ஆடவர்களுக்கு இந்த வாய்ப்பில்லை; மனைவியின் மனம் குளிர்வதற்கு ஏதாவது செய்து காட்டினால் காதலில் வெற்றி ஏற்படும். ஆடவரிடத்தில் கவர்ச்சி இராதுபோனாலும் பணம் அந்தக் குறையைத் தீர்த்து விடுகிறது. பெண்களுக்கு அது மயிலின் தோகை மாதிரி. பணத்தின் விசித்திர சக்தியை முழுவதும் விரித்தால்தான் பெண் மனம் பூரிப்படையும். பனேவாரியின் காதல் நாடகத்திற்கு இடையூறாக நின்றான் நீலகண்டன். பனேவாரி எசமானரின் மூத்த பிள்ளையா யிருந்தும் அவனுக்கு அதிகாரமே இல்லை. எசமானரின் நிழலில் வளரும் அடிமையான நீலகண்டன் பனேவாரிமீது தன் அதிகாரத்தைச் செலுத்தி வந்தான். பனேவாரியின் பொருமல் எல்லாம், மனைவி மையல் கொள்ளத் தன்னிடம் மலரம்பு இல்லையே என்ற வேதனையினால்தான்.

ஒரு நாள் இந்த அளவற்ற செல்வம் அவனுக்கே வரப் போகிறது. ஆனால் இளமை திரும்பி வருமா? இப்பொழுது அவன் கிண்ணம் நிறையப் பருக விரும்பும் ஓர் இன்பம், வயது ஏறிய பின்பு எங்கிருந்து வரும்? பணம் அப்பொழுது குவிந்திருந்தும் என்ன பயன்? மலைமுடியில் உறைந்து கிடக்கும் பனிக் குவை மாதிரிதான். இளமையில் வீண் விரயம் செய்தாலும் மனசுக்குத் தெம்பையே தரும்.

பனேவாரிக்கு மூன்று விஷயங்களில் பித்தம்: குஸ்தி, வேட்டை, சம்ஸ்கிருத காவியம். சம்ஸ்கிருத கவிகளிலிருந்து மணிமாணிக்கங்களைத் திரட்டி வைத்திருந்தான். மழை மேகங்கள் கூடும் காலம், நிலவு பொழியும் இரவு, பூந்தென்றல் வீசும் மாலை வேளை இவை போன்ற சமயங்களில் அது பயன்படும். நீலகண்டன் பணத்தை இழுத்துப் பிடித்தபோதிலும் அந்த அழகிய காவியங்களில் மண்டியிருக்கும் உவமை அணிகளை அவனால் குறைக்க முடியாதே! உயர்வு நவிற்சி அணி மிகையாக இருந்தால்தான் என்ன? நீலகண்டன் வைக்கும் கணக்கில் அது ஏறுவதற்கு வழி இல்லை. கிரணுடைய அழகிய காதுக்கு ஒரு நேர்த்தியான கம்மல் பண்ணச் சக்தி இராதுபோனாலும், அவள் காதுக்கு இனிமை பயக்கும் சந்தங்களில் கவிதை பொழிய அவன் பின்வாங்கவில்லை. மாத்திரை வழு இருந்தாலும் பாவத்தின் மாற்றுக் குறை இராது.

பனேவாரி, பார்வைக்கு ஒரு மல்வீரனைப் போல் வாட்ட சாட்டமாய் இருப்பான். அவனுக்குக் கோபம் வந்தாலோ

வீடே கிடுகிடுக்கும். ஆனால் மிகவும் இளகிய நெஞ்சினன். அவனுடைய தம்பி வம்சிலால், சின்னப் பையனாக இருக்கும் சமயம் தாயின் அன்பு செலுத்தி அவனை வளர்த்து வந்தான். சீராட்ட வேண்டுமென்ற ஓர் அவா அவன் உள்ளத்தில் குடி கொண்டிருந்தது.

மனைவியின் மீதுள்ள நேயத்தோடு இந்த அபூர்வமான குணமும் பின்னி இருந்தது; அதாவது, சீராட்ட வேண்டு மென்ற நசை. அடர்ந்த மரநிழலூடே வழி தவறி நுழைந்த ஓர் ஒளிக்கதிர்போல் துளியுண்டு ஆளாக இருந்தாள் கிரண லேகா. அவள் குள்ளமென்று கணவனுக்குச் சற்று வருத் தமே. அந்தப் பொம்மை மனைவியைச் சிங்காரித்து அழகு பார்க்க வேண்டுமென்று ஆசை. அவளைத் தொட்டு அணைத் துக்கொள்ளும் இன்பம் அன்று; அணிகள் பூட்டிக் கண்ணுரைக் காணும் களிப்பே; ஒன்றைப் பல விதமாக்கும் ஆனந்தம். கிரணலேகாவுக்குப் பல வர்ண ஆடைகளை அணிந்து விசித்திர நகைகளைப் பூட்டிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையே! வெறும் சம்ஸ்கிருத காவியங்களை மடமடவென்று கொட்டு வதனால் இந்த வேட்கை தணியவில்லை. அவனிடத்தில் ஆடவ னுக்குரிய தலைமை நிரம்பி இருந்தும் அதை வெளிப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு தனவந்தனுக்கு மகனைப் பிறந்தும் உரிமை இழந்தவனைய் அவன் நிற்பதும், மனைவியோ லாவண்யம் பொங்க விளங்குவது அந்தக் குடும்பத்தில் ஏதோ அனர்த்தம் விளையப் போவதைக் குறிப்பிட்டன.

சுகதா, செம்படவ மது என்பவனுடைய பெண்டாட்டி. மனேகர பாபுவின்கீழ்க் குடி. ஒரு நாள் அவள் அந்தப்புரத்துள் நுழைந்து கிரணலேகாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு ஓவென்று கதறத் தொடங்கினாள். காரணம் இதுவே: சில ஆண்டுகளுக்கு முன்பு ஆற்றில் வலை போட்டு மீன்பிடிக்கும் நிமித்தமாய்ச் செம்படவரெல்லாம் ஒன்று கூடிப் பத்திரம் எழுதிக் கொடுத்து மனேகரலாலின் பணப் பெட்டியிலிருந்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார்கள். மச்சம் நன்றாக விழுந்தால் வட்டியோடு அசலைத் தீர்ப்பதில் எந்தவிதமான தொந்தரவும் இராது; இதை எண்ணியே அதிக வட்டிக்குக் கடன் வாங்கத் துணிந்தார்கள். ஆனால், கடன் வாங்கிய ஆண்டு மீன் அவ்வளவாக ஆதாயம் இல்லை. இப்படியே அடுத்தடுத்து மூன்று ஆண்டுகள் ஏமாற்றம் அடைந்தனர்; நஷ்டம் ஏற்பட் டது. கடன் வேறு தலைக்குமேல் ஏறிக்கொண்டிருந்தது. இதில் கலந்து கையொப்பம் இட்ட சில வலைஞர் தலை மறைந்து விட்டனர். மது என்பவன் ஊரில் குடியும் குடித்தனமு

மாய் இருப்பவன். அவன் தலையில் விழுந்தது இந்தக் கடன் சுமை. தப்புவதற்கு வழி இல்லை என்று கண்டு அவன் மனைவி, கிரணிடம் அடைக்கலம் புகுந்தாள். கிரணுடைய மாமியாரைப் பிடித்தால் காரியம் கை கூடாதென்று எல்லாருக்கும் தெரியும். கணக்குப் பார்க்கும் நீலகண்டனே இம்மி கூட விட்டுக் கொடுக்க மாட்டான். முழு வட்டியும் கறந்து விடுவான், அவர்களிடமிருந்து: பனேவாரிக்கும் நீலகண்டனுக்கும் ஒற்றுமை போதாதென்பதை அறிந்தே மது தன் மனைவியைச் சின்ன அம்மாளிடம் அனுப்பினான்.

பனேவாரி நீலகண்டன்மீது எவ்வளவு சிறியபோதிலும் கடன் விஷயமாகத் தலையிடுவதற்கு அவனுக்கு யாதோர் உரிமையும் இல்லை என்பதைக் கிரண் அறிவாள். சுகதாவுக்கு இதை விளக்க அவள், ''என்னால் என்னடி ஆகும்? இதில் நான் தலையிட்டால் விரசமாயிருக்கும். பெரியவர் இருக்கிறார். அவரைப் பிடியுங்கள். ஏதாவது நடக்கும்'' என்றாள்.

இந்த முயற்சியை முன்னாலேயே செய்து பார்த்தாகி விட்டது. மனேகரலாலிடம் முறையிட்டுக் கொண்டால், அவர் அதை விசாரிக்கும் பொறுப்பை நீலகண்டனிடமே தள்ளுவார். இதனால் அதிக சங்கடம் உண்டாகுமே ஒழிய வேறல்ல. இரண்டாந்தடவை 'அப்பீல்' செய்துகொண்டாலோ, எசமானருக்குக் கடுமையான கோபம் வந்துவிடும். இந்தச் சள்ளையெல்லாம் தலையில் போட்டுக்கொண்டால் அப்புறம் சம்சாரத்தில் என்ன சுகம் இருக்கும் என்ற மனப்பான்மையே அவருக்கு.

கிரணிடம் சுகதா அழுது தன் குறையைச் சொல்லிக் கொண்டிருக்கும் சமயம் பக்கத்து அறையில் பனேவாரி துப்பாக்கியில் எண்ணெய் போட்டுத் துடைத்துக்கொண்டிருந்தான். எல்லாம் அவன் காதில் விழுந்தன. இந்த விஷயமாக உதவி செய்யத் தனக்குச் சக்தி இல்லையென்று கிரண் மனம் இளகிச் சொல்லுவது பனேவாரியின் இதயத்தைத் துளைத்தது.

அன்று பகல் ஒரே இறுக்கமாயிருந்தது. சாயங்காலம் வெப்பம் நீங்கித் திடுமென ஒரு பெருங்காற்று எடுத்தது. தோப்பில் குயில் ஒன்று தொண்டை வறளக் கூவிக்கொண்டிருந்தது. மீண்டும் மீண்டும் அதே பல்லவியில் எங்கோ புலவியால் தனிமையில் வாடும் தன் பேடையை விளித்துக் கூவிற்று. திக்குத் திசையெல்லாம் வெறிகொள் பூவின் இன்மணம். சன்னலுக்குப் பக்கத்திலேயே புழைக்கடைத் தோட்டத்திலிருந்து முல்லையின் நறுமணம் மனத்தைப் பரவசமாக்கியது.

அன்று கிரண் மெல்லிய வர்ணத்தில் சேலை உடுத்திருந்தாள். அவள் கூந்தலில் மல்லிகைப் பூ முறுவலித்து மூச்சு விட்டது. காதல் கனிவதற்கு வசந்த காலம் எப்பொழுதுமே துணையாக இருக்கும். அழகிய வர்ணத்தில் மெல்லிய பட்டாடையும் கூந்தல் நிறையப் பரிமளிக்கும் மல்லிகைப்பூவும் அந்த உணர்ச்சியைப் பின்னும் கிண்டிவிட்டன. இரவு முதல் யாமம் கழிந்தது. பஞ்சோவாரியைக் காணவில்லை. இளமையாகிய கிண்ணம் வழிந்தோடியும் அது அவனுக்குச் சுவை தருவதாக இல்லை. மனத்துள் குறை இருந்தால் காதல் எழுப்பிய ஓர் இன்பலோகத்தில் கால் வைக்க முடியுமா? பாவம், ஒரு செம்படவனுடைய துயரை நீக்க அவனுல் இயலவில்லை. நீலகண்டன் அல்லவோ சர்வாதிகாரி! பேடியின் கழுத்திற்கு இந்த மல்லிகை மாலையை யார் தொடுத்தார்களோ? - இந்த வேதனைதான்.

முதலில் அவன் நீலகண்டனை வெளி அறையின் பக்கமாக வரவழைத்து, கடனுக்காகச் செம்படவனைப் பிடிக்க வேண்டாமென்று சொன்னான். ''ஒழியட்டுமென்று இவனுடைய கடனை ரத்து செய்துவிடுகிறேன். அப்புறந்தானே தொல்லை? எல்லாரும் தம் கடனுக்கு அடி போடுவார்களே. பெருத்த நஷ்டமல்லவோ ஏற்படும்?'' என்றான் நீலகண்டன். இதற்கு எதிரிடையாக வாதிக்கத் தெரியாமல் பஞ்சோவாரி வாயில் வந்தபடி திட்ட ஆரம்பித்தான். ''அற்பனடா நீ'' என்றான்.

''அற்பனுக இராது போனுல் உங்களைப் போன்ற பெரிய மனிதர்களின் காலின்கீழ் நான் விழுந்து கிடப்பானேன்?'' என்றான் நீலகண்டன்.

''சொத்தைச் சூளையம் செய்யும் பெருச்சாளி'' என்றான் பஞ்சோவாரி.

''இருக்கலாம். பகவான் எனக்குக் கிருபை பண்ணவில்லை. பிறர் சொத்துக்குத்தான் நான் ஆசைப்படுகிறேன். போமே'' என்று வசவுகளைப் பொறுத்துக்கொண்டான் நீலகண்டன். கடைசியில் போகும்பொழுது அவன், ''வக்கீல் காத்துக்கொண்டிருக்கிறார். மறுபடியும் ஏதாவது காரியம் இருந்தால் கூப்பிடுங்கள், வருகிறேன்'' என்றான்.

பஞ்சோவாரி, சிறிய் தம்பி வம்சியைத் தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு தந்தையிடம் செல்வதென்று துணிந்தான். தான் தனியாகப் போனுல் காரியசித்தி ஆகாதென்று தெரியும் அவனுக்கு. காரணம், நீலகண்டன்மேல் முன் ஒரு தரம் புகார் செய்தபொழுது மஞ்சுகரலால் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அதற்கு மாறுகப் பிள்ளையின் பேரிலேயே

சிறி விழுந்தார். எசமானருக்குப் பாசம், மூத்த மகன்மீது தான் என்று எல்லாரும் நினைத்திருந்தார்கள் ஒரு சமயம். ஆனால் இப்பொழுது இளைய பிள்ளை வம்சியின் பேரில்தான் பட்சமெல்லாம் என்று தோன்றியது. அதனாலேயே வம்சியைக் கைக்குள் போட்டுக்கொண்டு பனைவாரி வேலை செய்யப் புகுந்தான்.

எதுவாயிருக்கட்டும், வம்சி நல்ல பிள்ளை. அந்தக் குடும்பத்தில் அவன் ஒருவனே இரண்டொரு பரீட்சைகளில் 'பாஸ்' செய்தவன். சட்டப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தான். இரவும் பகலும் நெட்டுருத் தள்ளி மூளையில் அவன் எவ்வளவு ஏற்றிக்கொண்டானென்பது கடவுளுக்குத் தான் தெரியும்! உடம்புமட்டும் துரும்பாக இளைத்துப் போனதுதான் மிச்சம்.

கோடை நாட்களில்கூட அவனது அறையின் சாளரங்கள் மூடியே கிடக்கும். பருவ மாறுதல்களைக் கண்டு அஞ்சுபவன். நன்றாகக் காற்று வீசினால் அவனுக்கு நஞ்சுபோல் இருக்கும். மேசைமீது கெரோசின் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு நாற்காலிமீது புத்தகக் குவியல். அலமாரியை நிரப்பிக்கொண்டு மருந்துச் சீசாக்கள்.

பனைவாரியின் யோசனைக்கு அவன் இணங்கவில்லை. அண்ணன் சிறி, ''டேய், அந்த நீலகண்டனுக்குத்தானே பயப்படுகிறாய்?'' என்றான். வம்சி கம்மென்று இருந்தான். நீலகண்டன் சார்பாகவே அவன் நிற்பதற்குக் காரணம் இருந்தது. கல்கத்தாவில் வசிக்கும்பொழுது, கைச் செலவுக்குப் பணம் போதாமற் போனால் நீலகண்டனைத் தூக்கி வைப்பான் வம்சி. தனக்குச் சமயத்தில் உதவி புரிந்தவனை எப்படிப் பகைத்துக்கொள்வது?

''பயங்கொள்ளி, பேடி, நீலகண்டன் பின்னால் செல்லும் நாய்'' என்றெல்லாம் வசவுகளை அடுக்கியதும் தந்தையின் முன் தானே நின்றான். மனைகரலால், தோட்டத்திலிருக்கும் குளத்தங்கரையில் தம் பருத்த உடலைத் திறந்துவிட்டுக் காற்று வாங்கிக்கொண்டிருந்தார். இச்சகம் பாடுவோர், அவரைச் சூழ்ந்து கோர்ட்டில் வழக்குத் தொடுத்த எதிரி ஜமீன்தார், பாரிஸ்டரின் குறுக்கு விசாரணையில் திக்குமுக்காடிய கதைகளையெல்லாம் அளந்துகொண்டிருந்தனர். இளவேனில் மாலையில் எழுந்த சுகமான தென்றலுக்கும் இந்தச் செய்தியைக் கேட்பதற்கும் அவருக்குத் தெம்பாக இருந்தது.

திடுமெனப் பனைவாரி நடுவில் நுழையவே சுவை மிகுந்த இவர்களது பேச்சுப் பாழாயிற்று. பீடிகை போட்டுத் தன் விஷயத்தை மெதுவாய்த் தொடங்கும் வழியே தெரியாது, பனை

வாரிக்கு. அவன் உரத்த குரலிலேயே நீலகண்டன் செய்த விஷமங்களை எடுத்துச் சொன்னான். ''திருடன், எசமான ருடைய பணத்தைக் கவர்ந்து கொழுத்துவிட்டான்'' என் றெல்லாம் நிந்தனை செய்தான். ஆனால் அத்தாட்சி எதுவுமே இல்லை; அவை உண்மையும் அல்ல. நீலகண்டனுடைய மேற்பார்வையினால் ஹால்தார் குடும்பத்தாருடைய செல்வம் பெருகியது. இந்தக் குற்றச்சாட்டை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீலகண்டன் நல்லவனென்று நம்பியே அவனிடம் சொத்துக்களைக் கண் மூடித்தனமாக விட் டிருப்பதாக எண்ணம் பனைவாரிக்கு. இது அவன் கொண்டிருந்த பிரமையே. மனைகரலாலுக்கு நன்றாகத் தெரியும், சமயம் அகப்பட்டால் பயல் சுருட்டிக் கொண்டு போய்விடுவானென்று. ஆனால் அதற்காக அவனை நம்பாமலும் இல்லை அவர். காரணம், நெடுநாளாக ஒரு குழப்பமும் இன்றிக் காரியம் நடந்து வருகிறது. அண்டி வாழ்வோர் எப்போதுமே எசமானருடைய சில்லறைப் பாபத் துக்களில் கை வைத்தே வாழ்வார்கள். இந்த வித்தையில் தேர்ச்சி இராதுபோனால் எசமானரின் சொத்துக்களை அவர்க ளால் எங்ஙனம் பரிபாலிக்க முடியும்? இராச்சியபாரம் வகிப் பது தர்மபுத்திரனால் ஆகாத காரியம். மனைகரலால் சினந்த வராய், ''நீலகண்டன் என்ன பண்ணுகிறான், எங்கே போகி றானென்று கவனிக்க நீ யார்?'' என்றதும் அவர், ''வம்சி இந்த மாதிரி எல்லாம் எனக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை. அவன், தான் உண்டு தன் படிப்புண்டு என்று இருக்கிறான்'' என்றார்.

எதிரி ஜமீன்தார் பரிதாபகரமான தோல்வி அடைந்த கதைகூட அவருக்குச் சப்பிட்டுவிட்டது. அன்று வீசிய மந்த மாருதமும் மனைகரலாலுக்கு இன்பத்தைத் தரவில்லை. குளத்து நீரில் பளபளக்கும் நிலவொளியும் அவலமாயிற்று. அன்றைய மாலைப் பொழுது வம்சிக்கும் நீலகண்டனுக்குமே வீணாகக் கழியவில்லை. கதவையெல்லாம் மூடிக்கொண்டு வம்சி இரவு வெகு நேரம்வரை படித்துக்கொண்டிருந்தான். நீல கண்டன் வக்கீலுடன் ஏதோ வழக்குச் சம்பந்தமாகப் பேசி முடிப்பதற்கும் பாதிராத்திரி ஆவதற்கும் சரியாக இருந்தது.

கிரண் தன் படுக்கையில் இருந்த விளக்கை ஊதிவிட்டுச் சாளரத்தருகில் வந்து உட்கார்ந்தாள். வீட்டுக் காரியங்களை அன்று பொழுதோடேயே முடித்துவிட்டாள். இரவு, சாப்பாடு தான் பாக்கி. பனைவாரி இன்னும் சாப்பிடவில்லை. அவனை எதிர்நோக்கினாள். செம்படவ மதுவின் கவனமே அவளுக்கு இல்லை. அந்த ஏழையின் துயரைத் தன் கணவனால் தீர்க்க

முடியவில்லையே என்ற கோபமோ, தாபமோ அவளுக்குத் துளி யளவும் இல்லை. கணவன் திறமையுள்ளவனு என்று சோதனை பார்க்க வேண்டுமென்ற ஆவலும் இல்லை. குடும்பத்தின் பெரு மையே தன் கணவனுடைய பெருமையும்; தன் கணவன் அல்லவோ வீட்டிற்குத் தலைப்பிள்ளை? இதைவிடப் பெருமை கொள்வதற்கு வேறு என்ன வேண்டும்? 'இவர்கள் அல்லவோ கோஸாயிகளின் புகழ்பெற்ற ஹால்தார் குடும்பத்தார்!' என்ற பெருமிதமே அவளுக்கு.

பனுவாரி இரவு நெடுநேரம் வெளி வராந்தாவில் உலவி யதும் உள்ளே வந்தான். தான் இன்னும் சாப்பிடவில்லை என்பதை அடியோடு மறந்து போனான். கிரணும் உணவு கொள்ளாமல் தனக்காக அத்தனை நாழிகை காத்திருந்தது தான் அன்று விசேஷமாக அவனை வாட்டியது. கிரண் இப்படியெல்லாம் உள்ளுற வருத்தப்படுவதும், தான் பய னற்ற சரக்காய் இருப்பதும் பிடிக்கவில்லை. அவன் விழுங்கும் பிடியளவு அன்னமும் நெஞ்சில் வந்து அடைத்துக்கொள்வது போல் இருந்தது. பனுவாரி கொதிப்புடன், ''எந்த வகையி லாவது இந்த மதுவை நான் காப்பாற்றாமல் போகிறேனே இல்லையா பார்'' என்றான். காரணமற்ற இந்த வீரப்பைக் கண்டு வியப்படைந்து கிரண், ''சரிதான். நீங்கள் அவனை எந்த வழியில் காப்பாற்றுவீர்கள், சொல்லுங்களேன்'' என் றாள்.

மதுவின் கடனைத் தானே அடைத்துவிடுவதென்று சபதம் செய்துகொண்டானே தவிர அதை நிறைவேற்ற அவன் கை யில் காசு சிக்கினால்தானே? தன்னிடமிருந்த மூன்று துப் பாக்கிகளில் ஒன்றையும், கையில் அணிந்திருந்த வயிர மோதி ரத்தையும் விற்றுப் பணமாக்க உறுதிகொண்டான். ஆனால் கிராமத்தில் அவைகளுக்குச் சரியான விலை கொடுத்து யார் வாங்குவார்கள்? மேலும் ஊராரும் என்னவோவென்று பேசிக்கொள்ள இடம் உண்டாகும். ஏதோ சாக்குச் சொல்லிப் பனுவாரி கல்கத்தாவுக்குப் போனான். போகும்பொழுது மதுவைக் கூப்பிட்டு, ''பயப்படாதே!'' என்று ஆறுதலும் சொன்னான்.

பனுவாரியின் உதவியை நாடினானே இந்த மது என்று நீலகண்டனுக்கு அவன்மீது கடுங்கோபம். செம்படவர்களைப் பலவிதமாக வாட்டி எடுத்துவிட்டான்.

கல்கத்தாவிலிருந்து பனுவாரி திரும்பின அன்று மது வின் பிள்ளை சொரூபன் இரைக்க இரைக்க ஓடி வந்து குய்யோ முறையோவென்று அழுதான். ''என்ன நடந்த தடா?'' என்று பனுவாரி விசாரித்தான். தன் தந்தையை

முன்னுள் இரவே இழுத்துக்கொண்டு போய்ச் சாவடியில் அடைத்துவிட்டார்களென்ற செய்தியைச் சொன்னுன் அவன். கோபத்தால் உடம்பெல்லாம் நடுங்கியது பனேவாரிக்கு. ''சட்டென இப்பொழுதே தாணுவுக்குச் சென்று பிராது கொடு'' என்ருன்.

இது என்ன இழவு! தாணுவிலா பிராது செய்வது? அதுவும் நீலகண்டனுக்கு விரோதமாக? சொரூபனுக்குக் கைகால் ஆடவே இல்லே. கடைசியில் பனேவாரி தூண்டவே தாணுவுக்குச் சென்று தன் தந்தை அடைபட்டிருக்கும் விஷயத்தைச் சொல்லிப் பிராது செய்தான். போலீசார் சரேலெனச் சாவடிக்கு வந்து அடைபட்டிருக்கும் மதுவை விடுவித்தனர். நீலகண்டனேயும் மற்றும் சில பேரையும் பிடித்துக் கொண்டு போய் மாஜிஸ்டிரேட் முன்னிலேயில் கொண்டு நிறுத்தினர்.

மனேகரலால் பெரிய சங்கடத்திற்கு ஆளானுர். இச்சகம் பாடும் அவருடைய மந்திரிகள் போலீசாருடன் கலந்து கொண்டு பணமாகக் கறந்தனர். கல்கத்தாவிலிருந்து ஒரு பாரிஸ்டரைத் தருவித்தார்கள். அநுபவம் முற்ருத பாரிஸ்டர். அவருக்கு எவ்வளவு 'பீஸ்' பேசினுர்களோ அவ்வளவும் அவர் பைக்குள் போகவில்லே. நடுவிலுள்ள ஆட்கள் பாதி கபளீகரம் செய்துவிட்டார்கள். இந்தப் பக்கம் செம்படவனுக்காகத் திறமை வாய்ந்த ஒரு வக்கீல் வாதாடினுர். அவருக்குப் பணம் யார் அளந்தார்களென்பது யாருக்குமே தெரியாது. நீலகண்டனுக்கு ஆறு மாதம் கிறைவாசம் கிடைத்தது. உயர்நீதி மன்றத்திலும் 'அப்பீல்' தொடர்ந்தது. அங்கும் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பே உறுதியாயிற்று.

மோதிரத்தையும் துப்பாக்கியையும் விற்றுவந்த பணம் விழலுக்குப் போகவில்லே. மதுவின் மானம் தங்கியது. நீலகண்டனும் மண்ணுக்குப் போனுன். ஆனுல் இது நடந்த பின்னர் மதுவினுல் ஊரில் எப்படி நிலேத்திருக்க முடியும்? பனேவாரிமட்டும் தைரியம் சொல்லுவான், ''நீ இருடா; நான் இருக்கும்போது உனக்கு ஒரு தீங்கும் வராது'' என்று. எந்தத் தைரியத்தின்மேல் இதைச் சொன்னுன் என்பது அவனுக்குத் தான் தெரியும். ஒரு வேளே தனக்குள்ள ஆண்மையை நினேத்தோ என்னவோ?

இந்த வழக்கிற்கெல்லாம் அடிப்படையாக நின்று தான் வேலே செய்ததைப் பனேவாரி மூடி வைக்க விரும்பவில்லே. வெளியே சொல்லிவிட்டான். எசமானர் செவிக்கும் எட்டியது. அவர் ஒரு வேலேக்காரன் மூலமாக இனிமேல் பனேவாரி தம் எதிரே தலே காட்டக்கூடாதென்று கடுமையான

உத்தரவைப் போட்டார். அவர் சொன்னது சொன்னது தான்.

கணவன் செய்த கூத்தைப் பார்த்துக் கிரண் திடுக்கிட்டுப் போனாள்: 'இதென்ன அமர்க்களம்! வீட்டுக்குப் பெரிய பிள்ளை. தந்தையோடு முகாலாபம் இல்லாமல் செய்து கொண்டாரே. அதற்குமேல் இப்படித் தம் சொந்த மனிதனையே சிறைக்கு அனுப்புவார் உண்டோ? அதனால் அவமானமல்லவா - தமக்குந்தான் சரி, குடும்பத்துக்குந்தான்? அந்த அற்பச் செம்படவனுக்காகவா ஊரார் சிரிக்க இந்தமாதிரி நடக்கவேண்டும் இவர்; வேடிக்கைதான்!'

வேடிக்கைதான்! இந்தக் குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாக எத்தனையோ மூத்த பிள்ளைகள் தோன்றியுள்ளனர். நீலகண்டனைப் போன்ற கட்டிப் பிடிக்கும் ஆட்களும் இருந்தார்கள். அந்த நீலகண்டர்கள்மேல் பாரத்தைப் போட்டு விட்டு அந்த மூத்த பிள்ளைகளெல்லாம் 'ஹாய்'யாக இருந்து விட்டுக் குலப்பெருமை சுருங்காமல் காலமாயினர். ஆனால் இந்தமாதிரி விபரீதமான காரியம் ஒரு நாளும் நடக்கவில்லை.

இன்று, இந்தப் பெரிய குடும்பத்தின் மூத்த மகனுக்கு ஏற்பட்ட புகழ்க்கேடு, பெரிய நாட்டுப் பெண்ணுக்கு மானம் போகிற விஷயமாக இருந்தது. இதனால் கணவன்மீது உண்மையில் வெறுப்பே கொண்டாள் கிரணலேகா. இத்தனை நாள் இல்லாமல், இன்று அணிந்திருந்த அந்த மெல்லிய வர்ணச் சேலையும் கூந்தலில் மணந்த மல்லிகையும் அவள் வரைக்கும் மங்கிப் போயின.

கிரணுக்கு வயதேறியும் மக்கட்பேறு இல்லை. இதை நீலகண்டன் ஒரு சமயம் எசமானரின் விருப்பத்திற்கிணங்கப் பணிவாரிக்கு இன்னொரு பெண்ணை நிச்சயம் செய்திருந்தான். மூத்த பிள்ளைக்குப் பிள்ளைப் பேறில்லாமல் போகலாமா? கிரணுக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லைதான். ஆனாலும் அவர்கள் செய்வதும் நியாயந்தானே என்று பட்டது.

நீலகண்டனை நொந்துகொள்ளாமல் தன் துர்ப்பாக்கியத்தை நினைத்து வருந்தினாள். பணிவாரி மட்டும் நீலகண்டனுக்குத் தீம்பு வைக்காமல், இந்தத் திருமணம் தனக்குப் பிடிக்கவில்லை யென்று தந்தையிடம் நயமாகச் சொல்லியிருந்தால் கிரண் அவனை மெச்சியிருப்பாள். மேலும், வமிச விருத்தியில் அக்கறை கொள்ளாமல் பணிவாரி காலங்கடத்துவது கிரணுக்கும் பிடிக்கவில்லை. அவனுக்கு ஆண்மை இருக்கிறதோ, இல்லையோ என்றுகூட நினைத்தாள். பெரிய இடத்திற்குரிய உரிமை அற்ப சொற்பமான உரிமையா? தன்னைத் தான் நொந்துகொள்வதற்குக்கூட அவளுக்கு அதிகாரமில்

லேயா? இளையாள் எவள் வந்தால் என்ன? ஏழைச் செம்படவக் குடும்பம் எக்கதி போனால் என்ன அவளுக்கு?

எந்த விதத்திலும் வீட்டில் தலைமை தாங்க வேண்டியவன் பனைவாரி. அநாவசியமான விஷயங்களை மேலே எடுத்துப் போட்டுக்கொண்டு, பரம்பரையாக வரும் ஓர் உரிமையைப் பனைவாரி அலட்சியம் செய்ததே கிரணுக்கு வேதனையைத் தந்தது. தன் மைத்துனனிடம் இதைச் சொல்லி எத்தனையோ தடவை அழுதிருக்கிறாள். வம்சி அறிவாளி; உண்ட சோறு அவனுக்குச் செரிக்காது போனாலும், காற்று மாறும்பொழுது நிதான புத்தி உண்டு; ஆராய்ந்து யோசிப்பான்; கெட்டிக்காரன். சட்டப் புத்தகத்தில் அவன் கவனம் வைத்துப் படித்த அத்தியாயத்தண்டைப் புத்தகத்தைப் பிரித்தபடியே குப்புற மேசைமீது வைத்துவிட்டு கிரணிடம், ''இது அசட்டுத்தனமே ஒழிய வேறல்ல'' என்றான். கிரண் கொதிப்புடன் தலையை அசைத்து, ''எனக்குத் தெரியும்; உங்கள் அண்ணா வெறுமென இருந்தால் நல்லவர்தாம். ஆனால் வெறி பிடித்ததோ அவரைச் சமாளிப்பது கஷ்டமே. இதை நானே சொன்னால் நன்றாயிருக்குமோ?'' என்றாள்.

வீட்டுச் சிப்பந்திகள் தனக்கு மதிப்பு வைக்காது போனாலும், கட்டின பெண்டாட்டியான கிரணும் அவர்களுக்குச் சமமாகத் தன்னை இழிவாகக் கருதுவதுதான் பனைவாரியை மிகவும் குத்தியது. துக்கணியுண்டு சிறுக்கி; இன்னும் முற்றிவிடவில்லை. பூவினும் மெல்லியள். ஆந்தரிகமாகத் தன் மன வேதனையைச் சொல்லி அவள் இதயத்தைத் தன்பால் இழுத்துக்கொள்ள முடியவில்லையே! ஆடவனுக்குரிய முழு வன்மையும் அவளிடம் பலிக்காமல் போயிற்று. அன்று மட்டும் கிரண் அவனுடன் கலந்திருந்தால் அவனுடைய மனப் புண் எவ்வளவோ ஆறியிருக்கும்.

மது போன்ற ஏழை ஒருவனைக் காப்பாற்றுவது இயல்பாக யாரும் செய்யக்கூடிய கடமையே; நாலு பக்கமும் மனிதர்கள் குத்திக் கொடுக்கவே பனைவாரி அவனைக் காக்கும் வேலையில் தீவிரமாக இறங்கினான். கடைசியில் இதே வெறி பிடித்து விட்டது. சம்சாரத்தில் எந்த அலுவலும் அவனுக்கு முக்கியமெனத் தோற்றவில்லை. இந்தப் பக்கம் நீலகண்டன் சிறையிலிருந்து விடுபட்டு உடல் இளைக்காமல் வந்து சேர்ந்தான், மாப்பிள்ளைமாதிரி. பழையபடியே தன் தொழிலில் இறங்கினான்.

மதுவை ஊரைவிட்டு ஓட்டாது போனால் ஊரார் முன்னே வர மூஞ்சியே இருக்காது நீலகண்டனுக்கு. மானத்திற்காக அவன் மட்கவில்லை. குடிமக்கள் அவனைக் கிள்ளுக்கீரையாக

எண்ணிவிடுவார்களே. அடங்கி ஒடுங்கி இருக்கமாட்டார்கள். இதற்குத்தான் அவன் மதுவை வேரோடு கிளப்பிவிடக் கங்கணம் கட்டிக்கொண்டான். இந்தத் தடவை பஞ்சுவாரி பதுங்கி இருக்கவில்லை. நீலகண்டனிடமே வெளிப்படையாக, ''உன்னால் ஆனதைப் பார்'' என்றான். முதலில் மதுவின் கடன் அளவைத்தையும் தானே அடைத்தான். நீலகண்டன் நயவஞ்சகமாக வேலை செய்வதைப் பார்த்து வேறு வழியின்றி மாஜிஸ்டிரேட்டிடம் தானே நேரில் சென்று நீலகண்டன் மதுவின் குடித்தனத்தையே அழித்துவிடப் பார்க்கிறானென்று முறையிட்டான்.

பஞ்சுவாரியின் நன்மையைக் கோருவோர், எவ்வளவோ அறிவுறுத்திப் பார்த்தார்கள். அவன் செய்யும் இந்தக் காரியங்களால் மனைகரலாலின் ஆதரவையே இழக்க நேரிடுமென்றனர். ஆனால் பஞ்சுவாரியின் தாய் உயிருடன் இருந்தாள். உற்றார் உறவினர் ஏசுவார்கள், மனைகரபாபு ஏதாவது பதறிச் செய்தால். அதனாலேயே எசமானர் கம்மென்றிருந்தார்.

இவ்வாறு நிற்கையில் திடீரென ஒரு நாள் மதுவின் வீட்டு வாயிற்கதவு பூட்டிக் கிடந்தது. இரவோடு இரவாக அவன் தன் மனைவி மக்களுடன் எங்கே போனானே, ஒரு செய்தியும் தெரியாது. விஷயம் விரசமாவதைக் கண்டு நீலகண்டனே பெட்டியிலிருந்து பணத்தை எடுத்து அவனைக் குடும்பத்தோடு காசிக்கு ஒழித்துவிட்டான். போலீசுக்கும் இது தெரியும். அதனாலேயே அமளிகுமளி இல்லை. நீலகண்டன் மாத்திரம் மிகவும் சாதுரியமாக ஒரு சரடு விட்டான்: அமாவாசைக் கறுக்கலில் காளிக்குத் தன் பெண்டாட்டி பிள்ளைகளைப் பலி கொடுத்துவிட்டு அவர்களுடைய சவங்களை ஆற்று நீரில் மது அமிழ்த்திவிட்டதாக! இதைக் கேட்ட போது எல்லார் குடலிலும் சங்கடம் மூண்டது. முன்னை விட நீலகண்டனிடம் பொது மக்களுக்குப் பயபக்தி அதிகமாயிற்று.

பஞ்சுவாரிக்குத் தலைவலியாக இருந்த ஒரு தொல்லையும் நீங்கியது. அவன் நிம்மதி அடைந்தான். ஆனால் இல்வாழ்க்கை முன்போல அவனுக்கு மகிழ்ச்சியாக இல்லை.

ஒரு சமயம் வம்சியின்மேல் உயிராக இருந்தான். இன்று அவன் வேற்று மனிதனுகவே தோற்றினான் - அசல் ஹால்தார் குடும்பத்துப் பீஜமாகவே! மனைவி கிரண், இளமை மலரும் அவன் நெஞ்சைக் கொள்ளைகொண்டிருந்தாள். இன்றோ அந்தப் பழைய கிரணை இல்லை. அவளுக்கும் இந்த ஹால்தார் குடும்பத்தின் சாயம் ஏறிவிட்டது. அவள் பொருட்டல்லவா

ஒரு சமயம் நீலகண்டன்மூலம் பண்ணிய நகை சரியாக அமையவில்லையென்று பஞ்சுவாரியின் உள்ளம் வெதும்பியது? காளிதாசன், அமரு கவி, பில்ஹணன் போன்ற கவிகளின் இனிய பாடல் ரத்தினங்களைக் கொண்டு தன் காதலியின் உள்ளத்தைக் குளிர்வித்தான். அதெல்லாம் பழங்கதையாய் முடிந்தது. அது ஹால்தார் குடும்பத்து மாட்டுப் பெண்ணுக்குச் சிறிதளவும் பொருந்தவில்லை. அந்தோ, குளிர் பூந்தென்றல் அதன்பாட்டிற்கு வீசும். இரவு நேரங்களில் தண்ணிய மழைத்தாரை யாழின் இசைபோல் ஒலிக்கும். காதல் அவிந்த ஓர் உள்ளத்தில் இவ்வினிய ஓசைகள் அழுகை போலவே எதிரொலித்தன.

காதல் கனிவதற்காகப் பெரும்பான்மையோர் காத்திருக்க மாட்டார்கள். குடித்தனம் பண்ணுவதற்குத் தகுந்த அளவு இருந்தாலே போதும், மனிதர்களுக்கு. ஆனால் சிலருக்கு இதற்கு மேலும் வேண்டியிருக்கிறது. முட்டையினுள் குறுகிய இடத்தில் பறவையின் கருவாக அடங்கி இராமல் ஓட்டிலிருந்து பீறிக்கொண்டு, சிறகடித்துத் தன் உணவைத் தானே தேடிக்கொள்ளும் மாப்பறவையை ஒத்தவர்கள் இந்த இனத்தார். பஞ்சுவாரி இந்த வேட்கையுடன் பிறந்தவன். ஆண்மையின் மூலம் காதலை நுகர்வதற்கே அவன் உள்ளம் அலைந்தது. ஆனால் எந்த மூலைக்கு ஓடிப்போனாலும் அங்கே இந்த ஹால்தார் குடும்பம் மதில்போல் போக விடாமல் தடுத்தது.

பழையபடியே அவனுடைய நாட்கள் சென்றன. முன்னை விட வேட்டைமேல் ஊக்கம் செலுத்தினான்; இதைத் தவிர வெளிக்கு அவன் வாழ்வில் பெரிய மாறுதல் எதுவும் தென்படவில்லை. வேளையில் சாப்பிடப் போவான். உண்டபின் நிதானமாய்ச் சற்று நேரம் மனைவியோடு பேசுவான். செம்படவ மதுவைமட்டும் கிரண் முழுவதும் மறந்துவிடவில்லை. கிரண் இன்று மதிப்பு இழந்து நிற்பதற்குக் காரணம் அவனே என்பது அவள் எண்ணம். நடுநடுவே அவளுடைய நாக்கு, தீவிர நஞ்சைக் கொட்டிவிடும். மதுவை ஒரு முறை வாயாரச் சபிக்காது போனால் அவளைப் பாட்டில் போடாது; அதுவும் அவள் கணவன் மனம் குளிர்ந்திருக்கும் சமயம். இரண்டொரு முறை பஞ்சுவாரி அவளை இந்த விஷயமாக எதிர்த்தான். இதனால் அவளுக்குள்ள உக்கிரமே அதிகமாயிற்று. அதற்குமேல் வாய் கொடுக்க அவனுக்குத் தைரியமில்லை. இவ்வாறு பஞ்சுவாரி நியமப்படி தன் இல்லறத்தை நடத்தி வந்தான். கிரணுக்கு இதனால் குறையோ, வருத்தமோ எதுவும் உண்டாகவில்லை; ஆனால் பஞ்சுவாரியின்

வாழ்க்கை உள்ளுக்குள் வறண்டு வெளுத்துச் சும்பிக்கொண் டிருந்தது.

அதே சமயம், சின்ன மாட்டுப்பெண், வம்சியின் மனைவி கர்ப்பவதி யென்று தெரிந்துவிட்டது. குடும்பத்தவர் முகம் மலர்ந்தது. கிரண் மூலம் வம்சம் விருத்தியடையாத குறையை இது ஒருவாறு நீக்கியது. ஷஷ்டித் தாயின் கிருபை யால் தலைச்சன் ஆணுகப் பிறக்க வேண்டுமென்பது எல்லார் அவாவும்.

ஆண் மகவையே ஈன்றாள் அவள். வம்சி கல்லூரித் தேர்வில் தேறியதோடு குடும்பத் தேர்விலும் முதல் 'மார்க்' கே வாங்கினான். அதனால் அவனையே எல்லாரும் நோக்கினர். அவன்மீது குடும்பத்தார் செலுத்திய அன்பிற்கும் ஆதரவுக் கும் எல்லையே இல்லை.

குழந்தை, வீட்டாருக்குக் கண்மணியாக இருந்தது. கிரண் அதைக் கணமேனும் கீழே விடமாட்டாள். குழந்தையைச் சீராட்டுவதில் செம்படவன்மேல் இருந்த வெறுப்பைக்கூட மறந்துவிட்டாளென்றால் சொல்லுவானேன்?

பனைவாரிக்கும் குழந்தைகளென்றால் உயிர். மத்து மதுக்கென்றிருக்கும் குட்டி உயிர்களின்மீது அவனுக்குக் கரை காணுத பாசம்; இளக்கம். ஒவ்வொரு மனிதனிடமும் அவ னுடைய இயல்பிற்கு மாறுனதொன்றைக் கடவுள் அமைத்து விடுகிறார். இராது போனால் இவ்வளவு பாசமும் இரக்கமும் குடிகொண்ட பனைவாரியின் உள்ளம் பறவை வேட்டைமீது செல்வானேன்?

கிரணும் ஒரு மகனைப் பெற்றெடுப்பாளென்ற ஆசை வெகு நாட்களாகப் பனைவாரியின் உள்ளத்துள் குமிழ்த்துக் கொண்டே இருந்தது. இதனாலேயே வம்சிக்குப் பிள்ளை பிறந்ததென்று கேட்டதுமே அவன் சற்றுப் பொறுமை கொண்டான். ஆனால் இந்த இழிவு மனப்பான்மையை ஒதுக்கத் தாமதமாகவில்லை. அவனுக்கென்னவோ குட்டி குழந்தையின் மீது அளவு கடந்த அன்பு. ஆனால் கிரண் அதைச் சுற்றிக் கொண்டு தனக்கே சொந்தமென்று நினைப்பதுதான் அவ னுடைய அன்பின் வேகத்திற்கு முட்டுக்கட்டையாக இருந் தது. வரவரக் கணவன் - மனைவி இவர்களது நெருக்கம் விலகிக்கொண்டே வந்தது. இத்தனை நாட்களுக்குப் பிறகு கிரணுடைய மனத்தை முழுவதும் கவரும் ஒரு கருவூலம் கிடைத்துவிட்டதாகவே எண்ணிக்கொண்டான். இதுவரை இவனே தன் மனைவியின் நெஞ்சு நிறையக் குடி புகுந்திருந் தான். எல்லாப் போகமும் அவனுடையதே; தடுப்பார் இல்லை. ஆனால் இப்போது வீட்டின் உரிமையாளன் பிறந்து,

விடவே இவனுக்குரிய இடம், அந்த மாடி அறை ஒன்றுதான்; கிரணுடைய பற்று இவ்வளவு தூரம் படர்வதைக் கண்டு பனுவாரி தலையை அசைத்துத் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்: 'இவளுடைய உள்ளத்தைத் தூண்ட என்னால் ஆகவில்லை. முடிந்தமட்டும் பார்த்தேன். ஊற்றுச் சுரக்கவில்லை.'

குலக்கொழுந்து ஒன்று தோன்றிய பின்னரே கிரண் வம்சியோடு அதிகமாகப் பழக ஆரம்பித்தாள். ஏதாவது யோசனை கேட்க வேண்டி இருந்தால் வம்சியிடமே அவளுக்கு ஆந்தரிகம். நுண்ணிய அறிவும், நோஞ்சலான உடம்பும் படைத்து உயிருக்கு வாதாடும் அந்தக் கோழையின்மேல் பனுவாரிக்கு அருவருப்புக் கொஞ்சங் கொஞ்சமாக வளரத் தொடங்கியது. வம்சியே எல்லா விஷயத்திலும் சிறந்தவனென்று வீட்டிலுள்ளவர்கள் நினைப்பதைக்கூடச் சகித்துக் கொண்டான். ஆனால் இன்று தன்னைவிட அவனையே உயர்வாகக் கிரண் கருதியதால் பனுவாரிக்கு வாழ்க்கை கசந்து விட்டது.

தேர்விற்காக வம்சி கல்கத்தாவுக்குப் போயிருந்தான். திடீரெனச் சமாசாரம் வந்தது, அவனுக்குக் கடுமையான காய்ச்சல் என்று. அவன் பிழைப்பது அரிதென்று டாக்டர்களெல்லாம் சந்தேகப்பட்டார்கள். பனுவாரி வெறுப்பையெல்லாம் மறந்து தன் தம்பிக்கு நல்ல வைத்தியம் செய்ய ஓடினான். ஆனால் அவன் தேறவில்லை. தம்பியின் மரணம் பனுவாரியின் மனத்துள் உறுத்திய முள்ளை நீக்கியது. அவன் கண்ணுங்கருத்துமாய் வளர்த்த அருமைத் தம்பி அல்லவா வம்சி? அவனுடைய பிரிவை நினைத்துக்கொள்ளும் பொழுதெல்லாம் கண்ணீர் உகுத்தான் பனுவாரி. திரும்பி வந்ததும் அவன் தம்பியின் குழந்தையை வாஞ்சையுடன் வளர்த்துப் பெரியவனாக்க வேண்டுமென்று உறுதி கொண்டான். ஆனால் கிரண், தன் கணவனை நம்பிக் குழந்தையை விடவில்லை. குழந்தையின் பேரில் பனுவாரிக்கு முதலில் ஒரு வெறுப்பு இருந்ததை அவள் உணர்வாள். கணவனைப்பற்றி ஒரு கெட்ட எண்ணமே அவள் மனத்தில் பதிந்து விட்டது. குலத்துக்கு ஒரே விளக்கு வம்சியின் குழந்தை. அதற்குள்ள மதிப்பு யாருக்குத் தெரிந்திருந்தாலும் பனுவாரிக்குமட்டும் தெரியாதென்பது அவள் கொள்கை. அவளுக்குத் தன் கணவனிடத்தில் பயமே, அவனுடைய பாழும் கண் பட்டுக் குழந்தைக்கு ஏதாவது கெடுதல் விளையுமோ என்று! மைத்துனனும் இறந்துவிட்டான்; தனக்கோ பிள்ளைப் பேறு ஏற்படுமென்ற நிச்சயமில்லை. அதனாலேயே இந்தக்

குழந்தையை எப்படியாவது வளர்த்து ஆளாக்க வேண்டு மென்பது கிரணுடைய நோக்கம். பஞ்சுவாரியின் நல்ல எண்ணத்தில் மண் விழுந்தது. அவனைக் குழந்தையண்டை நெருங்க விடவில்லை கிரணலேகா.

வீட்டிலுள்ளவர்களும் கட்டிக் கவிந்து நிற்கவே வம்சி யின் பிள்ளை வளரலானுன். ஹரிதாஸ் என்று பெயர் வைத் தார்கள். ஊட்டி ஊட்டி வளர்க்கவே அவன் நோயும் நொடியு மாகவே இருந்தான். காற்றுக் கரப்பு, கண்ணிரை இவைகளின் வாடைபடாமலிருக்கப் பிள்ளையின் உடம்பெல்லாம் தாயத்தும் ரட்சா கவசங்களும் கட்டியிருந்தார்கள்.

இவ்வளவு பாதுகாத்தும் பஞ்சுவாரியினிடம் எப்பொழு தாவது ஹரிதாஸ் ஒடி வந்துவிடுவான். பெரியப்பாவின் குதிரைச் சவுக்கைச் சுழற்றுவதில் அவனுக்கோர் ஆனந்தம். பஞ்சுவாரியும் அவனுக்கு வேடிக்கை காட்டத் தோல் சவுக்கை வீய்க் வீய்க்கென்று வீளாசுவான். ஒவ்வொரு நாள் குதிரை மீது அவனை ஏற்றிவிடுவான். வீட்டிலுள்ளவர்களெல்லாம், ''இது என்ன காரியம்? குழந்தை விழுந்துவிடுவானே!'' என்று அலறிப் புடைத்துக்கொண்டு வருவார்கள். சில சமயம் பறவை சுடும் துப்பாக்கியை அவன் கையில் வீளையாடக் கொடுப்பான். கிரண் அதைப் பார்த்ததும், 'அம்மா' என்று விரைந்து பிள்ளையை இழுத்துக்கொண்டு போய்விடுவாள். வீட் டார் இந்தமாதிரி பயங்கர வீளையாட்டுக்களிலிருந்து தடுக்கத் தடுக்கக் குழந்தை ஹரிதாசுக்கு அந்த வழியிலேயே புத்தி சென்றது. இந்தமாதிரி வேடிக்கைகளைக் காட்டும் பெரியப்பா விடம் அவனுக்குப் பற்றுதலும் அதிகமாயிற்று.

நெடுநாட்களுக்குப் பிறகு ஹால்தார் குடும்பத்தில் யமன் நடமாடத் தொடங்கினுன். முதலில் மனேகரலாலின் மனைவி பழுத்த சுமங்கலியாகவே சொர்க்கம் புகுந்தாள். நீலகண்டன் மீண்டும் ஒரு முறை பஞ்சுவாரிக்காகப் பெண்ணைப் பார்த்து முகூர்த்த நாள்கூட வைத்துவிட்டான்; திடீரென மனேகரலால் இறந்துபோனுர். ஹரிதாசுக்கு எட்டு வயது நிரம்பியது. சாவுக்கு முன்னுல் மனேகரலால் ஒரே குல சிந்துவான ஹரிதாசைக் கிரண், நீலகண்டன் இவர்கள் பாது காப்பிலேயே வைத்துவிட்டுச் சென்றுர். பஞ்சுவாரியைக் கூப்பிட்டு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

பெட்டியிலிருந்து உயிலை வெளியே எடுத்தபொழுது சொத் தெல்லாம் ஹரிதாசின் பெயருக்கே எழுதி வைத்திருந்தார். உயிரோடு இருக்கும்வரை பஞ்சுவாரிக்கு மாதம் இருநூறு ரூபாய் கொடுப்பதென்றும் உயிலில் கண்டிருந்தது. நீல கண்டனை எக்ஸிக்யூடராக (செயலாளனுக) நியமித்திருந்தார்

மனைகரலால். உயிர் இருக்கும் வரை அவனே குடும்பத்தின் எல்லா விதமான காரியங்களையும் செய்வதற்கு முழு அதிகாரம் பெற்றிருந்தான்.

தன்னிடம் பழகப் பிள்ளையை விட இவர்கள் மறுப்பது ஒரு புறம் இருக்கட்டும்; சொத்தைக்கூடத் தன் கண்காணிப்பில் வைக்காமல் மோசம் செய்துவிட்டார்களே என்று மனம் புழுங்கினன் பனைவாரி. அவனுக்கு ஒரு பற்றுக்கோடும் இல்லை. நன்றாகச் சாப்பிடலாம்; பஞ்சணைமீது படுத்து நன்றாகத் தூங்கலாம்; இவையே அவனுக்கு அளித்திருந்த உரிமை. தாங்க முடியவில்லை பனைவாரியால். கிரணிடம் வந்து, ''நீலகண்டன் கொடுக்கும் வாழ்க்கைப் பணத்தில் நான் வாழ விரும்பவில்லை. இந்த வீட்டைத் துறந்துவிட்டு நான் கல்கத்தாவுக்குப் போகிறேன்'' என்றான்.

''ரொம்ப அழகுதான். வீட்டுக்குப் பெரியவர் நீங்கள். ஹரிதாஸ் உங்களுடைய பிள்ளைக்குச் சமம். அவனுக்கே சொத்தை எழுதி வைத்திருக்கிறதென்று உங்களுக்குக் கோபம்?'' என்றாள் கிரண்.

'ஐயோ, கணவனுக்கு ஏனை கடின நெஞ்சம்! கொழுந்து போலக் குடும்பத்திற்கு ஒரே பிள்ளை; அவன் மேலா இவ்வளவு பொறுமை?—மாமனார் உயில் எழுதிய விதம் கிரணுக்குச் சரியென்றே பட்டது. பனைவாரியின் கையில் சொத்து மட்டும் சிக்கியிருந்தால் துன்மார்க்கரோடு சேர்ந்துகொண்டு ஊதி விட்டு ஹால்தார் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைப்பானென்றே திண்ணமாக நம்பினாள். மாமனார் குலத்திற்கு ஹரிதாஸ் விளக்குப்போல். சொத்து என்ற எண்ணெய் இருந்தால்தானே அது நீடித்து ஒளிரும்? அதற்கு ஏற்ற காவலன் நீலகண்டனே!

அந்தப்புரத்துள் நுழைந்து ஒவ்வோர் உடைமையையும் ஜாபிதாவில் குறித்துக்கொண்டு, பெட்டி பேழைகளைப் பூட்டி, 'சீல்' வைத்துவிட்டான் அவன். கடைசியில் கிரணுடைய அறைக்கு வந்து பனைவாரி அன்றாடம் உபயோகிக்கும் சாமான்களைக் கணக்கெடுத்தான்.

நீலகண்டன் அந்தப்புரத்தினுள் இவ்வளவு தாராளமாக வந்து போவதைப் பார்த்தும் கிரண் துளிக்கூடக் கூச்சங் கொள்ளாமல் இருப்பதுதான் பனைவாரியை அறுத்தது. இறந்து போன மாமனாரை நிமிடத்திற்கு நிமிடம் நினைத்து மூக்கைச் சிந்திக்கொண்டே அவள் ஒவ்வொரு சாமானையும் நீலகண்டனுக்குக் காட்டினாள். பொறுமை இழந்த பனைவாரி சிங்கர்ஜனை செய்து நீலகண்டனை விளித்து, ''நாயே, என் அறையை விட்டு வெளியே நட'' என்றான்.

நீலகண்டன் வணக்கமாகவே, ''பாபு, நான் என்ன தவறு செய்தேன்? கர்த்தாவின் உயில்படி நான் இந்தமாதிரி காரியத்தைச் செய்யவேண்டி யிருக்கிறது. உடைமைகள் யாவும் ஹரிதாசுக்குச் சொந்தம்; அதனால்தான்'' என்றான்.

கிரண் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்: ''பாருமே, உங்கள் ஜபம் பலிக்குமா இனிமேல்? ஹரிதாஸ் எனக்கு அயலா? நம் குழந்தை அவன். அவன் சொத்தைக் கணக்கெடுப்பதில் மானம் போகிற விஷயம் என்ன இருக்கிறதோ தெரியவில்லை. செத்துப் போகும்போது நம் உடைமை வருமா? இன்றைக்கு இராது போனாலும் நாலு பிள்ளைகள் பிறந்தால் பாகப் பிரிவினை யாகிவிடுகிறது.''

அன்று தொட்டு வீட்டின் தரைகூட முள் தைப்பது போல் இருந்தது, பனேவாரிக்கு. அவன் நெஞ்சம் விரிந்தது. கோபம் தலைக்கெழுந்தது. தான் வீட்டைத் துறந்துபோவதும், நீலகண்டன் 'ஹாய்'யாக ஆட்சி புரிவதும் அவனுக்குச் சகிக்கவில்லை. ஏதாவது பெரிய தீம்பு செய்தால்தான் மனம் அமைதியுறுமெனத் தோன்றியது. ''பார்க்கிறேன், இந்தப் பயல் சொத்தைக் காப்பாற்றுகிற லட்சணத்தை!'' என்று உறுமினான்.

வெளியே வந்து தன் தந்தையின் அறையினுள் நுழைந்தான். அங்கே யாருமில்லை. எல்லாரும் பின்கட்டில் நகை நட்டு, பாத்திரம் பண்டங்களைக் கணக்கெடுப்பதில் ஊக்கமாயிருந்தனர். எப்பொழுதும் விழிப்பாக இருப்பவன்கூட என்றைக்காவது ஏமாந்திருப்பான். எசமானருடைய தஸ்தாவேஜு வைக்கும் பெட்டியைப் பூட்ட மறந்துவிட்டான் நீலகண்டன். உயிலும் அந்தப் பெட்டியில்தான் இருந்தது. அதன்பேரில்தான் இந்தக் குடும்பத்தின் ஆஸ்திபாஸ்தியெல்லாம் நின்றன.

பனேவாரிக்கு இந்தத் தஸ்தாவேஜுகளைப்பற்றி அக்கறையே விழவில்லை. ஆனால் இவை பிற்காலத்தில் ஏதாவது வழக்கு மூண்டால் பயன்படுமென்பதுமட்டும் தெரியும் அவனுக்கு. பெட்டியிலுள்ள பத்திரங்களைத் தன் உருமாலில் சுருட்டி வைத்துக்கொண்டதும் தோட்டத்திற்கு அருகிலுள்ள ஒரு சம்பக மரத்தின்கீழ் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

அடுத்த நாள் பண்ணவேண்டிய சிராத்தச் சடங்குகளைப் பற்றி ஆலோசனை செய்த நீலகண்டன் பனேவாரியிடம் வந்தான். முன்னைவிட அதிகமாக வணக்கம் நீலகண்டனுடைய உடல் வளைவில் தென்பட்டது. ஆனால் அவன் முகத்தில் மட்டும் வேறொரு பாவம் கூத்தாடியது. பனேவாரியின்

வயிறு எரிந்தது. இப்படிக் கூழைக் கும்பிடு போட்டுத் தன்னை அவன் ஏளனம் செய்வதாகவே பஞ்வாரிக்குப் பட்டது. நீலகண்டன், ''பெரியவருடைய சிராத்தம்—'' என்று எடுத்தான். அவன் மிகுதி வார்த்தையை முடிக்கவிடாமல் பஞ்வாரி, ''அதைப்பற்றி எனக்கென்ன?'' என்றான்.

நீலகண்டன், ''இதென்ன வார்த்தை, பாபு? தாங்கள் தானே கர்மம் செய்ய வேண்டியவர்?'' என்றான்.

''பெரிய உரிமை! கர்மம் செய்வதற்குத்தானே உரிமை? இதற்குமட்டும் நான் அவசியமாக்கும்! வேறு எதற்கும் எனக்கு உரிமை கிடையாது! போடா போ! எரிச்சலைக் கிளப்பாதே!'' என்றான் பஞ்வாரி.

போகும்பொழுது நீலகண்டன் தன் பின்னல் கேலியாகச் சிரித்தானென்றே பாவித்துக்கொண்டான் பஞ்வாரி. ஏன், வீட்டு வேலைக்காரர்களும் தன்னைப் பரிகாசம் செய்ததாகவே அவனுக்கு உள்ளுறப் பட்டுவிட்டது. வீடிருந்தும் வீடிழந்தவன் போலவே நின்றான் பஞ்வாரி; அவன் நடுத்தெரு ஆண்டியுமல்ல. என்னே விதியின் கூத்து!

பத்திரங்கள் அடங்கிய முடிச்சுடன் வெளியே புறப்பட்டான். ஹால்தார் குடும்பத்தாருடைய எதிரிகள், பிரதாபபுரத்தில் இருக்கும் பானர்ஜிகள். இந்தத் தஸ்தாவேஜுகளை அவரிடம் கொடுத்து விடுவதென்று துணிந்தான். குடும்பச் சொத்து எப்படிப் போனால் என்ன அவனுக்கு?

அவன் வெளியே கால் எடுத்து வைத்ததும் மாடியிலிருந்து ஹரிதாசின் மழலைக் குரல் கேட்டது: ''பெரியப்பா, நீ வெளியே போறயே; என்னையும் அழைத்துக்கொண்டு போகமாட்டாயா?''

பாலகனுடைய போதாத காலமே இந்தமாதிரி அவனைச் சொல்லத் தூண்டியது. 'நான்தான் போய்விடுகிறேனே; இந்தப் பையனையும் அழைத்துக்கொண்டு தலை மறைந்து விடுகிறேன். குடும்பம் நாசமாகப் போகட்டுமே' என்று எண்ணிக் கொண்டான்.

தோட்டத்தைத் தாண்டி அவன் இரண்டு அடி வைத்ததும் ஊர்க்கோடியில் பெருத்த கூச்சல் கேட்டது. யாருடைய குடிசையோ திகுதிகுவென்று எரிந்தது. இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் சும்மா நின்று வேடிக்கை பார்ப்பது பஞ்வாரியின் இயல்பே அன்று. பத்திரக்கட்டைச் சம்பக மரத்தடியில் போட்டுவிட்டுத் தீயை அணைக்க ஓடினான்.

திரும்பி வந்தபொழுது உருமால் முடிச்சைக் காணவில்லை. சுறுக்கென அவன் உள்ளத்தில் வேதனை துளைத்தது. ''ஆகா! கடைசியில் நீலகண்டன் அல்லவோ கண்ணில் மண்ணைத் தூவி

விட்டான்? யார் குடிசை எரிந்துபோனால் எனக்கு என்ன வந்தது? நான் ஏன் போனேன்? பயல் சமயம் பார்த்து இடுக்கி விட்டான் தஸ்தாவேஜுகளை...உம்'' என்று பொருமினான்.

புயல் வேகத்துடன் கஜானா இருக்கும் இடத்திற்கு வந்தான். நீலகண்டன், சாவதானமாகவே பேரேடுகளை மூடிப் பீரோவில் வைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பீரோவில்தான் தஸ்தாவேஜுகளை அவன் மறைத்திருக்க வேண்டுமென்று நினைத்தான் பனைவாரி. ஒன்றும் சொல்லாமல் அலமாரி, பெட்டியெல்லாம் துருவிப் பார்த்தான். குரல் அடைக்க நீலகண்டனை விளித்து, ''நீ தோட்டத்துப் பக்கம் போயிருந்தாயா?'' என்றான்.

''ஆமாம்; சில நாழிகைக்கு முன் அந்தப் பக்கம் வந்திருந்தேன். தாங்கள் அவசரமாக எங்கோ போய்க்கொண்டிருந்தீர்கள். என்னவென்று பார்க்க நானும் உங்கள் பின்னாலேயே வந்தேன்'' என்றான்.

பனைவாரி, ''ஏதாவது காகிதச் சுருள் அடங்கிய உறுமாலைக் கண்டாயா?'' என்றான்.

சாதுவைப் போல் நீலகண்டன், ''நான் எதையும் பார்க்கவில்லையே'' என்றான்.

''பொய் சொல்லுகிறாய்; உனக்கு இது நல்லதல்ல. மரியாதையாகக் கொடுத்துவிடு, அந்தக் காகிதங்களை'' என்றான் பனைவாரி.

மிரட்டிப் பார்த்தானே தவிரக் காணுமற்போன பொருள் இன்னதென்று வெளிப்படையாகச் சொல்ல அவன் தயங்கினான். அது அவன் களவாடிய பொருள் அல்லவா? இதனால் தன்னுடைய பிசகை நினைத்துக்கொண்டு வருந்தினான்.

கஜானா அறையில் இந்த மாதிரி பேய்க்கூத்து ஆடிவிட்டு, மீண்டும் ஒரு முறை சம்பக மரத்தின்கீழ்ச் சென்று தேடினான். பெற்ற தாயின்மீது ஆணை வைத்து, 'இதை நான் தேடிப் பிடிக்காமல் விடப்போவதில்லை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். தேடுவதெப்படி என்ற விஷயத்தை அவன் முற்றும் ஆலோசிக்கவில்லை. அதற்குப் போதிய புத்திக் கூர்மையும் அவனுக்கு இல்லை. சண்டித்தனமான குழந்தைகளைப்போல் தரையை உதைத்து, ''கண்டுபிடிப்பேன் இதை! கண்டுபிடிப்பேன்'' என்று கூச்சலிட்டான்.

ஓய்ந்துபோய் மரத்தடியிலேயே உட்கார்ந்துவிட்டான். யாருமே இல்லை; அவனுக்குச் சொந்தமானவர் எவருமே இல்லை. வாழ்க்கையோடு அவன் போராட வேண்டியதே. கௌரவம் போய்விட்டது. அன்பு இல்லை; நேயம் இல்லை; ஒன்றும் இல்லை இந்த உலகில். மரணம் ஒன்றுதான்.

இவ்வாறு அவன் மனம் அலை பாயவே மிகவும் சலித்த வனுய் மரத்தடியிலே தூங்கிப் போய்விட்டான். விழித்துக் கொண்டபொழுது தலைமாட்டண்டை ஹரிதாஸ் இருப்பதைக் கண்டான். பெரியப்பா எழுந்திருக்கவே அவனும் எழுந்து, ''பெரியப்பா, நீ எதைக் கெட்டுப் போக்கிவிட்டாய்?'' என் ருன்.

பஞ்வாரிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் மேலும், ''நான் கொண்டு வந்து கொடுத்தால், எனக்கு என்ன கொடுப்பாய்?'' என்ருன்.

வேறு ஏதாவதுதான் இருக்குமென்று எண்ணினுன் பஞ் வாரி. ''என்னிடம் இருப்பதைக் கொண்டு வந்து தருகிறேன்'' என்று ஹரிதாஸ் சொன்னபொழுது பையன் ஏதோ பரிகாசம் செய்தானென்றே நினைத்தான் பஞ்வாரி.

அச்சமயம், ஹரிதாஸ் தன் துணி மறைவிலிருந்து உரு மாலில் சுற்றியிருக்கும் காகிதச் சுருளை வெளியே எடுத்தான் அந்த உருமாலில் புலியின் வர்ணச்சித்திரம் வரைந்திருந்தது அதை எத்தனையோ தடவை பஞ்வாரி அவனுக்குக் காட்டி மகிழ்வித்திருக்கிறன். இந்த உருமால்மீது பையனுக்கு உலோ பம். தீ அணைக்கும் பரபரப்பில், வேலைக்காரர்கள் வெளியே போயிருந்த சமயம் ஹரிதாசும் வெளியே ஓடி வந்தான். மரத்தடியில் விழுந்து கிடந்த உருமால் கட்டுத் தற்செயலாக அவன் கண்ணில் பட்டது. புலியின் பொம்மை இருந்ததால் பெரியப்பாவினுடையதென்று பத்திரப்படுத்தினன்.

பஞ்வாரி ஹரிதாசைத் தன் மார்போடு அணைத்துச் சற்று நேரம் இன்பத்தில் ஆழ்ந்திருந்தான். தாரை தாரை யாகக் கண்ணீர் பெருகிற்று. பழைய சம்பவம் ஒன்று அவன் மனக்கண்முன் வந்து நின்றது. ஒரு தரம், அவன் ஒரு நாயை, அது பிடிவாதம் பிடித்ததென்று நன்ருகச் சாட்டை யைக் கொண்டு வீரிவிட்டான். அந்தச் சாட்டை திடீரென ஒரு நாள் காணுமல் போயிற்று. எங்கே தேடியும் அகப்பட வில்லை. தொலைந்தது தொலைந்ததுதானென்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயம், பாவம் அந்த நாய் சாட்டையை எங்கிருந்தோ தேடி வாயில் கவ்விக்கொண்டு வந்து அவன் எதிரே நின்று வாலை ஆட்டியது. அன்றுமுதல் அவன் சாட் டையைக் கையால்கூடத் தொடவில்லை.

பஞ்வாரி பெருகிவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''ஹரிதாஸ்! கண்ணு! உனக்கு என்ன வேண்டும் சொல்லு?'' என்ருன்.

''அந்தச் சவுக்கத்தை எனக்குக் கொடுத்து விடேன், பெரியப்பா'' என்ருன் ஹரிதாஸ்.

''வாடா, என் முத்தே! தோள்மேல் ஏறிக்கொள்'' என்றான் பனைவாரி.

ஹரிதாசைத் தோள்மீது ஏற்றிக்கொண்டு அந்தப்புரத்துள் சென்றான் பனைவாரி.

படுக்கையறைக்குச் சென்று பார்த்தான். கிரண் படுக்கைகளை வெயிலில் மாடி முற்றத்தில் பிரித்துவிட்டுத் திரும்பினாள். பனைவாரிமீது சவாரி செய்யும் பையனைப் பார்த்து அவள் திடுக்கிட்டு, ''ஐயோ! அவனை இறக்கிவிடுங்கள்! அவனை உங்களால் சமாளிக்க முடியாது. தொப்பென்று கீழே போட்டு விடுவீர்கள்'' என்றாள்.

பனைவாரி கிரணையே கூர்ந்து நோக்கி, ''பயப்பட வேண்டாம். நான் ராட்சசனு என்ன, அவனைக் கீழே தள்ளி விடுவதற்கு?'' என்றான்.

தோள்மீது குதிக்கும் ஹரிதாசைக் கீழே இறக்கிக் கிரணின் மடியில் விட்டான். பத்திரச் சுருளை அவள் கையில் ஒப்படைத்து, ''இவை ஹரிதாசுக்குச் சொந்தம். காப்பாற்றி வை'' என்றான்.

''எங்கிருந்து கிடைத்தது உங்களுக்கு?'' என்றாள் கிரண் வியப்புற்று.

''நான் களவாடினேன்'' என்றான் பனைவாரி நிச்சலமாய்.

உடனே ஹரிதாசைத் தன் பக்கமாக இழுத்து மார்போடு தழுவிக்கொண்டு, ''இந்தாடா என் கண்ணு, உன் பெரியப்பாவின் சொத்தின்மேல் நீ ஆசை வைத்தாய்; எடுத்துக்கொள்'' என்றதும் புலிச்சித்திரம் போட்ட அந்த உருமாலைத் தம்பியின் பிள்ளையிடம் சேர்ப்பித்தான்.

அப்புறம் ஒருதரம் கிரணை ஏற இறங்கப் பார்த்தான். முன்போல் அவள் கொடியிடையாளாக இல்லை. பருத்து விட்டாள். முகப்பொலிவும் அழிந்துகொண்டு வந்தது. மோகிப்பதற்கு அங்கு ஒன்றுமே இல்லை. ஹால்தார் குடும்பத்தின் பெருந்தனம் அவள் உடலெங்கும் ஊதிப் புடைத்தது. சொத்தையெல்லாம் துறந்தமாதிரியே, அவளுக்கென அவன் மனத்துள் தொகுத்திருந்த ஒப்பற்ற காவியத் துணுக்குகளுக்கும் தாரை வார்த்துவிட வேண்டியதுதான்!

அன்று இரவே பனைவாரி காணமற் போய்விட்டான். ஒரு காகிதத்தில்மட்டும் தான் உத்தியோகம் சம்பாதிக்கப் போய்விட்டதாக அவன் எழுதியிருந்தான்.

தந்தையின் அபரக்கிரியைகள் முடியும்வரை அவன் காத்திருக்கவில்லை. இதற்காக அவனை ஊராரெல்லாரும் சாபம் இட்டனர்.

மனைவியின் கடிதம்

சரண கமலங்களைத் தியானித்து அடியாள் எழுதிக்கொள்வது:—

இன்று பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன, நமக்கு மணமாகி. இதுவரையில் உங்களுக்கு நான் கடிதம் எழுதியதில்லை. நீண்ட நாள் அருகிலேயே இருந்தேன். எவ்வளவோ விஷயங்களைப்பற்றி உங்களிடம் பேசியும் இருக்கிறேன்; நீங்களும் என்னுடன் கலந்து பேசியிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக்கொள்வதற்கான வாய்ப்புமட்டும் நமக்கு ஏற்படவில்லை.

இங்கே நான் ஸ்ரீ க்ஷேத்திரத்தை* வந்தடைந்தேன். நீங்களோ சொந்த அலுவலில் ஆழ்ந்திருப்பீர்கள். நத்தை எங்காவது அதன் மேலோட்டிலிருந்து பிரிந்து வாழுமா? அதேபோல் கல்கத்தாவை விட்டு அரைக்கணம் நீங்கினால் உங்களுக்கு உயிர் போய்விடுமே! உங்கள் வாழ்க்கை அதோடு ஒட்டிக்கொண்டு விட்டது.

ஆபீசில் லீவ் என்றைக்காவது வாங்கிக்கொண்டிருக்கிறீர்களா? பகவானுக்கு அந்த மாதிரி நேரவேண்டுமென்ற அபிப்பிராயமே இல்லைபோலும்! நான் இத்தனை நாள் அவரிடம் கெஞ்சிய பிறகு அவர் என் விடுதலையின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்.

நான் உங்கள் குடும்பத்தில் வாழ்க்கைப்பட வந்த நடு நாட்டுப்பெண். இந்தப் பதினைந்து வருட காலம் சென்ற பின்பே, இந்தக் கடற்கரையில் நிற்கும்பொழுது, ஒரு பேருண்மையைக் காண்கிறேன். எனக்கும், இந்த உலகத்தைப் படைத்த கடவுளுக்கும் உள்ள தொடர்பு முற்றும் வேறானது. அதனாலேயே இன்று இந்தக் கடிதத்தை எழுதத் துணிந்தேன். இது உங்கள் வீட்டு நடு நாட்டுப் பெண்ணின் கடிதமன்று.

உங்களுடன் நான் வாழ்க்கை நடத்த நேரிடுமென்று என் தலையில் எழுதி வைத்தவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத காலத்தில் - அதாவது, சிறு வயதில் - நானும் என் தம்பியும் ஒரே சமயத்தில் சந்நிபாத ஜ்வரம் கண்டு படுக்கையாகக் கிடந்தோம். என் தம்பி இறந்து போய்விட்டான்; நான் - பின்

---

*ஜகந்நாத க்ஷேத்திரம்

னர் இதையெல்லாம் அநுபவிக்க வேண்டுமே! - பிழைத்து எழுந்தேன். எங்கள் அண்டை அயலாரெல்லாம் 'மிருணாளினி பெண்ணே இல்லையோ, அதுதான் பிழைத்தாள்! பிள்ளையா யிருந்தால் விடுவானா யமன்?' என்று சொல்லிக்கொண்டார் கள். களவாடுவதில் யமன், கைதேர்ந்தவன்; உயர்ந்த பொருளின்மீதே அவன் நாட்டமெல்லாம்.

எனக்குச் சாவே வராது. இதைத் தெளிவாக உங்களுக்கு அறிவிக்க வேண்டியே இந்தக் கடிதத்தை எழுத முற்பட் டேன்.

அன்று உங்கள் மாமாவும், நண்பர் நீரதரும் பெண் பார்க்க எங்கள் வீட்டிற்கு வந்திருந்த சமயம், எனக்கு வயசு பன்னிரண்டு. மிகவும் அசௌகரியமான உள் நாட்டிலே ஒரு குக்கிராமத்தில் எங்கள் வீடு. அந்த ஊரில் பகல் வேளையி லேயே நரி ஊளையிடும். ரெயிலடியிலிருந்து ஏழு காததூரம் கட்டை வண்டியில் வந்து, அப்பால் மூன்று மைல் புழுதி நிறைந்த வழியில் பல்லக்கில் ஏறி எங்கள் ஊருக்கு வர வேண்டும். அன்று உங்களைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவோ தொல்லை, பாவம்! போதாக் குறைக்கு நாட்டுப்புற ரீதியில் அன்று வந்தவர்களுக்கு விருந்து நடந்தது. உங்கள் மாமா சாப்பிட்டுவிட்டு, அந்தச் சமையலின் ருசியைப் புகழ்வது போல் இகழ்ந்ததை இன்னும் அவர் மறக்கவில்லை என்று எண்ணுகிறேன்.

உங்கள் வீட்டுப் பெரிய நாட்டுப் பெண்ணுக்கு அழகு இல்லாக் குறையை நடு நாட்டுப் பெண்ணின் மூலமாக அகற்ற வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டாள், உங்கள் தாய். இல்லாவிட்டால் இவ்வளவு இன்னல்களையும் பொறுத் துக்கொண்டு, அந்தப் பட்டிக்காட்டில் என்னைத் தேடிப்பிடிக்க வருவீர்களா? வங்காளத்தில் மகோதரம், மலேரியா, பித்த பாண்டு, மணமாகாத பெண்கள் இவைகளுக்காகத் தேடி அலையவேண்டிய அவசியமே இல்லை. தாமாகவே அவை எதிர்ப் படும்; பிடித்துக்கொண்டால் விடவே விடா!

அப்பாவின் இதயம் திக் திக்கென்று அடித்துக்கொண் டது; அம்மா, துர்க்கையின் நாமங்களை உச்சரித்துக்கொண்டே இருந்தாள். நகரத்திலிருந்து வந்திருக்கும் தெய்வத்தைப் பட்டிக்காட்டுப் பூசாரி எந்த மாதிரி திருப்தி செய்வது? எங்களைச் சேர்ந்தவர்களுக்கு இருந்த நம்பிக்கையெல்லாம், நான் நல்ல அழகியென்ற ஒரு விஷயமே. இந்த அழகை மட்டும் படைத்திருக்காத பட்சத்தில், பெண்ணைப் பார்க்க வந்தவர்கள் இடும் மதிப்பே முடிவானதாகிவிடும். ஆகவே, அழகும் குணமும் ஆயிரம் இருந்தாலும், 'பிள்ளை வீட்டார்

.என்ன நினைப்பார்களோ' என்ற பெண்டுகளுக்கு இயல்பான கவலை மட்டும் எளிதில் போகாது.

எங்கள் வீட்டாருக்கு இருந்த ஒரு திகில் - ஏன், ஊர் முழுவதுமே திகில் கொண்டிருந்தது - என் உள்ளத்தையும் பெரும் பாறைபோல் அழுத்தியது. அன்று ஆகாயத்திலிருந்த வெளிச்சமனைத்தும், உலகில் திகழும் சக்திகள் யாவும் பன்னிரண்டு வயசுடைய ஒரு நாட்டுப்புறப் பாவையைப் பரீட்சகர்கள் இருவர் கண்ணெதிரே ஈவு இரக்கமின்றிக் கொண்டு நிறுத்தியதுபோல் இருந்தது. ஓடி ஒளிந்துகொள்வதற்கு எனக்கு இடமே அகப்படவில்லை.

வீடும் வெளியும் புலம்ப மேளம் கொட்டியது. விவாகம் முடிந்ததும் புக்ககம் வந்து சேர்ந்தேன். எனக்கு எங்கேயாவது சொட்டையா சொள்ளையாவென்று ஆய்ந்து பெரியவர்களெல்லாரும் முடிவில், நான் அழகியென்றே தேர்ந்தனர். அதைக் கேட்டதுமே என் ஓரகத்தியின் முகம் திமுதிமுவென்றுகி விட்டது. எதற்கு உபயோகம் இந்த அழகு என்பதைத்தான் யோசிக்கிறேன். அழகென்ற பொருளை, பழைய காலத்து அறிஞர் யாராவது கங்கை மண்ணைக் கொண்டு உருவாக்கியிருந்தால், அதற்கு எவ்வளவோ ஆதரவு ஏற்பட்டிருக்கும். ஆனால், அழகென்பதைப் பிரம்மா, தாம் பார்த்து இன்புறுவதற்காகவே படைத்தார் அல்லவா? நீங்கள் பின்பற்றும் ஓர் உலக தர்மத்தில் அதற்கு ஒரு மதிப்பாவது, விலையாவது இல்லை.

நான் அழகி யென்பதை நீங்கள் அறவே மறந்து போக நெடு நாட்கள் ஆகவில்லை; ஆனால் எனக்கு இருந்த புத்தி மட்டும், அடிக்கடி என்னைப்பற்றி உங்களுக்கெல்லாம் கவனப் படுத்திக்கொண் டிருந்தது. என்னுடன் பிறந்த அந்தப் புத்தி உங்கள் குடும்பத் தொல்லையில் இத்தனை நாட்கள் உழன்றும், இன்றைவரையில் குலையாமல் நிற்கிறது. என் தாய் எனக்குள்ள இந்தப் புத்தியின் பொருட்டே கவலை கொள்வாள். 'மாமியார் வீட்டாருக்கும் இவளுக்கும் ஒத்துப் போகுமா?' என்பதே அவள் அஞ்சியதெல்லாம். ஓர் இடத்தில் அடங்கி ஒடுங்கி நடந்துகொள்ள வேண்டியவள் தன் புத்தி ஏவியபடியே சென்றால், அடிக்கு அடி தடுக்கி விழ வேண்டியதுதான். ஆனால் என்ன செய்வேன் நான்? உங்கள் வீட்டு நாட்டுப் பெண்ணைப் வருபவளுக்கு அறிவு, இருக்க வேண்டிய அளவுக்கு அதிகமாகவே கடவுள் கவனப் பிசகாகக் கொடுத்துவிட்டான். அதை இப்போது திருப்புவது எவ்வாறு? நீங்களெல்லாரும் என்னை அடங்காப் பிடாரியென்று அன்றுடம் இரண்டு தரமாவது நினைக்காமல் இருக்கமாட்டீர்கள். கையாலாகாதவர்களுக்கே

பிறர் மனம் வாடும்படி கடுத்துப் பேசுவதில் ஒருவிதத் தெம்பு. அதையெல்லாம் மன்னித்துவிட்டேன்.

வீட்டுக் காரியங்களின் தொல்லைகளை மீறித் தனியாக என்னிடம் ஒன்று வளர்ந்து வந்தது. அதை நீங்கள் ஒரு வருமே அறியவில்லை. நான் மறைவில் கவிதை இயற்றி வந்தேன். நான் எழுதியது குப்பையோ கூளமோ, உங்கள் கட்டுக்காவல் அந்த இடத்தில் பயன்படவில்லை. என் முழு உரிமையையும் அங்கேதான் பெற்றேன். அவ்விடத்தில் அனைத்தும் நானே. நடு நாட்டுப் பெண்ணிடம் இருக்க வேண்டிய அளவுக்கு மேலாக என்னிடம் இருந்த சில அதிசய குணங்கள் உங்களுக்குப் பிடிக்கவும் பிடிக்கா. அவ்வாறு இருப்பதாக நினைக்கவும் மாட்டீர்கள். பதினைந்து வருடங்கள் பழகியும் நான் கவி என்பதை உங்களிடம் காட்டிக்கொள்ளவில்லை பாருங்கள்!

உங்கள் வீட்டைப்பற்றி நினைக்கும்போது, எல்லா இடத்தையும்விட எனக்குப் பளிச்சென மனத்துள் தோன்றுவது அந்த மாட்டுத் தொழுவமே. பின் கட்டிற்குப் போகும் வழியிலுள்ள அறையொன்றில் பசுமாடுகளைக் கட்டிவைப்பார்கள். எதிரே சிறு முற்றத்தைத் தவிர்த்து அவை காலாற உலவ வேறு இடமே இல்லை. அந்த முற்றத்தின் ஒரு மூலையில் மாடுகளுக்காகக் கழுநீர் கொட்டிவைக்கும் மரத்தொட்டி உண்டு. காலையில் ஆள்காரன் ஏதாவது வேலையைக் கவனிக்கப் போய்விடுவான். வயிறு சுண்டி வாடும் பசுக்கள், காலித் தொட்டியின் விளிம்பை 'வர் வர்' என்று நக்கிச் சுரண்டும். அப்போது என் மனசு துடிக்கும். நான் நாட்டுப்புறமல்லவா? உங்கள் வீட்டிற்கு வந்த புதிதில் அவ்விரண்டு பசுக்களும் அவற்றின் கன்றுகளுமே எனக்கு மிகவும் அறிமுகமான நண்பர்களாக இருந்தன. புது நாட்டுப் பெண்ணுக உங்கள் வீட்டில் இருந்தவரை நான் என் பசியைக்கூடக் கவனியாமல் யாருக்கும் தெரியாதபடி மறைவாகப் பசுக்களுக்கு வயிறுரத் தீனி போட்டுத் தண்ணீர் காட்டுவேன். வீட்டாருக்கு நான் பழைய மனுஷியாக மாறியபின், மாடு கன்றுகளிடத்தில் எனக்குள்ள பற்றைக் கண்டு, கேலி செய்வதே காரியமாகக் கொண்ட உங்களைச் சேர்ந்தவர்கள், என் குலம் கோத்திரத்தைப்பற்றிக் கூடச் சந்தேகப்பட்டார்கள்.

எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து உடனேயே இறந்துவிட்டது. என்னையும் யமன் அந்தச் சிசுவுடன் கொண்டு போவதாக இருந்தான். அதுமட்டும் உயிருடன் இருந்திருந்தால் என் வாழ்க்கையில் நான் எதைச் சிறந்த தெனப் போற்றி வந்தேனே, எதை உண்மையெனக்

கருதினேனே அதையெல்லாம் அக்குழந்தை பின்பற்றி இருக்கும். அந்தமாதிரி நேரிடுமானால் நான் அற்பமான ஒரு நாட்டுப் பெண் நிலையிலிருந்து ஓர் அன்னையின் கௌரவத்தை அல்லவோ பெற்றிருப்பேன்? தன் சிறு இல்லறத்தின் நடுவே இருந்தாலும், தாய் உலக மென்னும் பேரில்லறத்திற்கும் ஒப்பற்ற அன்னையாவள். ஒரு குழந்தைக்குத் தாயாகும் துன்பத்தை அடைந்தேனே ஒழிய அன்னையாகும் விடுதலையையும் பெற்றிலேனே!

ஆங்கில டாக்டர் ஒருவன் வந்து, உங்கள் வீட்டில் பெண்கள் இருக்கும் விடுதியின் அழகைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனான். பிரசவ அறை இருக்கும் ஆபாசத்தை இகழ்ந்து கூறிச் சென்றான். பார்வைக்கு, வீட்டிற்கு வெளிப் புறம் தோட்டமென்ன, உள்ளே பெரிய அறைகளில் நாகரிக மான சாமான்களென்ன, அங்கே செய்திருக்கும் ஆடம்பரங் கள் என்ன! ஆனால் பின்கட்டோ, பகட்டான ஜரிகைச் சேலையின் மறு பக்கம்போல் இருந்தது. அந்த இடத்தைச் சீர்படுத்த யாருக்கு அக்கறை? பாழடைந்து, அலங்காரமற்று இருந்தது. விளக்கொன்று மினுக்கு மினுக்கென்று எரியும். காற்று, தாராளமாக உள்ளே வீசாமல், திருடனைப்போல் பதுங்கி எப்போதாவது நுழையும். எந்த மூலையைப் பார்த் தாலும், எத்தனை நாளைக் குப்பையோ மலையளவு சேர்ந் திருக்கும். சுவரிலும் தரையிலும் அழுக்குக் கறை ஏறி யிருக்கும். அந்த வெள்ளைக்காரன், இவைதாம் எங்களை யெல்லாம் இரவும் பகலும் துன்புறுத்துவன என்று தவருக நினைத்துக்கொண்டான். ஆனால் அதற்குக் காரணம் நேர் மாறானது. ஆதரவு இன்மையே நீறெனப் பூத்திருந்தது. அத னுள்ளே கனிந்துகொண் டிருந்தது நெருப்பு. வெளியிலிருந்து பார்த்தால் அதன் வெம்மையை எவ்வாறு உணரக் கூடும்? தன்னிடத்தில் மதிப்பு ஒருவனுக்குக் குறைவாக ஆக வீட்டில் உள்ளோர் காட்டும் இந்த அலட்சியம் அநீதமாகவே படாது. அதனால் வேதனையும் இராது. இந்தப் பெண் பிறவி துயர் கொள்ளவும் நாணுகின்றது. அதனால்தான் சொல்லுகிறேன், பெண்பாலார் துன்பத்தை அநுபவிக்க வேண்டுமென்று உங்களுக்கு இருந்தால் அதற்குத் தடை ஒன்றும் அவர்கள் சொல்லவில்லை. ஆனால் கூடியவரையில் அவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டாம்; ஏனென்றால், அந்த ஆதரவே துயரின் வேதனையைப் பன்மடங்காக ஆக்கிவிடுகிறது.

எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்; துக்கம் உண்டென்பதை நினைக்க ஒரு நாளாவது என் மனம் தூண்டவில்லை. பிரசவ அறையில் தலைமாட்டண்டை யமன்

வந்து நின்றபோதுகூட மனத்தில் பயமே தோன்றவில்லை. வாழ்வு நிலையுள்ளாத என்ன, மரணத்தைக் கண்டு அஞ்சுவதற்கு? ஆதரவைப் பெற்றவர்களுக்குத்தான் பிரிவு கஷ்டமாக இருக்கும். அன்று யமன்மட்டும் என்னைக் கொண்டுபோவதாக இருந்தால் நான் எளிதாகவே, தரையில் படர்ந்திருக்கும் புல்லைப்போல், வேருடன் பெயர்ந்து வந்திருப்பேன். வங்காள தேசத்துப் பெண்களே ஒவ்வொரு வார்த்தைக்கும் 'சாவு வராதா?' என்கிறார்கள். 'ஆனால் இந்த மாதிரி மரிப்பதில் என்ன இன்பமோ! உயிர் விடுவதென்றால் வெட்கமாயில்லையா?' என்றால் எங்களால் எளிதில் ஆகக்கூடிய காரியம் அதுதான்!

என் வயிற்றில் பிறந்த குழந்தை அந்தி வானில் ஒரு தாரகைபோல் தோன்றி மறைந்துவிட்டது. அப்புறம் என்றும்போல் வீட்டு வேலையிலும் மாடு கன்றுகளின் பேரிலும் கவனம் செலுத்தலானேன். என் வாழ்நாள் இவ்வாறே முடிவடைவதாக இருந்தால் உங்களுக்கு இந்தக் கடிதத்தை வரையவேண்டிய அவசியமே ஏற்பட்டிராது. ஆனால் காற்றுக் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு சிறு விதையைக் கெட்டித் தரையில் எப்படியோ ஊன்றி விடுகிறது. ஓர் அரசங்கன்று சில நாட்களுக்கெல்லாம் தலை காட்டுகிறது. முடிவில், செங்கற் சுவரையும் பிளந்துகொண்டு கட்டிடத்தையே அழித்துவிடுகிறது. என் வாழ்விலும் பலமான கட்டுத் திட்டங்களுக்கிடையே சுதந்திரத்தின் பொறியொன்று எங்கிருந்தோ பறந்து வந்தது. அதற்குப் பிறகே தொடங்கியது இந்தச் சிதைவு.

என் ஓரகத்தியின் தங்கை பிந்து; அவளுடைய விதவைத் தாய் இறந்த பின்பு, சிறிய தகப்பனாரின் வீட்டில் சில காலம் இருந்தாள். அங்கே உள்ளவர் செய்யும் துன்பங்களைத் தாள முடியாமல் தமக்கையிடம் வந்தடையும்போது நீங்களெல்லாரும், 'இதென்ன சங்கடம்' என்று எண்ணிக் கொண்டீர்கள். என் பாழும் சுபாவம் வெறுமே இருக்கவில்லை. நீங்களெல்லாரும் வெறுப்படைந்திருப்பதைப் பார்த்து, அந்தத் திக்கற்ற பெண்ணின் பக்கம் என் மனம் கச்சை கட்டிக் கொண்டு எழுந்ததே பிறர் அகத்தில் அவர்களது விருப்பமின்றி அடைக்கலம் புகுவது பெரிய மானக்கேடான காரியம் அல்லவா? வேறு வழியில்லாமல் தமக்கையின் ஆதரவை நம்பி வந்தவளை உதைத்துத் தள்ளிவிடுவதா தர்மம்?

அப்புறம் என் ஓரகத்தியின் நிலையைக் கவனிக்கலானேன். அவளும், தன் தங்கையை வேறு வழியில்லாமல் தன்னிடம் அழைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் அவளுடைய

கணவனுக்கு அது விருப்பமில்லை யென்பது தெரிந்தவுடன் அவளும் பெருத்த சங்கடத்துள் ஆழ்ந்தாள்; தங்கையை அப்புறப்படுத்தினால் போதும் என்றுகிவிட்டது அவளுக்கு. திக்கற்ற தன் தங்கையை மனமார்ந்த அன்புடன் ஏற்றுக் கொள்ளும் துணிவு அவளிடத்தில் இல்லையே! பாவம், அவள் அகமுடையானுக்கு அடங்கியவள் அல்லவா? - பதிவிரதை!

ஓரகத்தி படும் அல்லலைப் பார்த்து என் மனம் கேட்க வில்லை. அவள், வீட்டில் எல்லோரையும் சற்று அதிகமாக உபசரிக்கத் தொடங்கினாள். தன் தங்கைக்குத் தின்பதற்கு மிகுந்த சோற்றையும், உடுப்பதற்கு மட்டரகச் சேலையையும் கொடுத்து, வீட்டில் வேலைக்காரி செய்யும் வேலைகளை யெல்லாம் அவளுக்கே இட்டாள். இதையெல்லாம் பார்த்த எனக்குத் துக்கம் மட்டும் அல்ல, அவமானமும் உண்டாயிற்று. இந்த மாதிரி செய்தாவது தன் தங்கையின் சுமையை வீட்டார் உணராமல் மழுப்பலாமென்று நினைத்தாள்; பாவம்! தாராளமாக அக்கா வேலையிடுவாள். அந்தப் பெண்ணின் பாடு நாய் உழைப்புத்தான். அவள் பதிலுக்குப் பெறுவதென்னவோ மிகவும் அற்பமானது: சோறு, துணி. அன்புக்கு எங்கே போவது?

என் பெரிய ஓரகத்தி நல்ல வமிசத்தில் வந்தவளென் பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. பரம ஏழை; அழகி லும் உயர்வல்ல. என் மாமனாரின் காலை, கீலைப் பிடித்துக் கொண்டதன்பேரில், உங்கள் வீட்டில் ஒரு நாட்டுப் பெண்ணாக அவள் வர முடிந்தது. அவளுக்கும் தெரியும் அது; இந்தப் பெரிய இடத்தில் தனக்கு விவாகமானதே விலக்க முடியாத பெருங்குற்றமென அவளே நெடுநாட்களாக எண்ணிக்கொண் டிருக்கிறாள். அதனாலேயே வீட்டு விஷயங்களில் மேலாக ஒங்கி நிற்காமல் ஒடுங்கியிருக்கிறாள்.

ஆனால் அவள் இப்படிச் சாத்துவிகமாக நடந்துகொள்வது எங்களுக்கெல்லாம் பெருந் துன்பத்தை விளைவித்தது. எந்த விஷயத்திலும் என்னை இழிவுபடுத்திக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. நல்லதென்று தோன்றியதை வேறு யாருக்காவது அஞ்சி அது நல்லதல்ல என்று சொல்வது என் இயற்கையிலேயே இல்லை. இதற்கான அத்தாட்சியை எவ் வளவோ முறை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

பிந்துவை-அந்த அநாதைப் பெண்ணை-நான் அழைத்துக் கொண்டேன். அப்போது நாத்தனார், ''பாவம், இவளுக்கு அந்த ஏழை வீட்டுப் பெண்மேல் ஆசை சொட்டி வழிகிறது!'' என்றாள். நான் என்னவோ வீட்டிற்குப் பெரிய ஆபத்தைக்

கொண்டுவைத்துவிட்ட மாதிரி அவள் எல்லாரிடமும் இந்தச் சமாசாரத்தை விதைக்க ஆரம்பித்துவிட்டாள்.

இப்போது தப்பெல்லாம் என் ஒருத்தி தலையில் வடிந்தது. தன் சொந்தத் தங்கைமேல் வெளிப்படையாக அன்பு செலுத்தாத என் ஓரகத்தி என் மூலமாக அந்த ஏக்கத்தைக் கொண்டவுடன் அவள் மனம் இலேசாகியது. என் ஓரகத்தி பிந்துவின் வயசை இரண்டு மூன்று ஆண்டுகள் குறைத்தே சொல்லுவாள். ஆனால் அந்தப் பெண்ணுக்கு என்னவோ பதினாலுக்கு மேலே இருக்குமே ஒழியக் குறைவில்லை. அதைச் சில காரணம்பற்றி அவள் ஒளித்துக் கூறுவதிலும் தப்பில்லை. பார்வைக்கு அப்படிக் கோரமில்லை அந்தப் பெண்; உங்களுக்கும் தெரியும். ஆனால் அவள் தவறிக் கீழே விழுந்து தலையை உடைத்துக்கொண்டால், ''ஐயோ, பட்டான தரை பிளந்து போய்விட்டதே'' என்று வீட்டு மனிதர்களுக்கெல்லாம் ஆத்திரம் வரும். ஓர் இடத்தில் கட்டிக் கொடுத்துவிடலாமென்றால் அப்பாவோ, வேறு யாருமோ இல்லை அவளுக்கு. தானே வலிய வந்து அவளை மணந்துகொள்பவன் யார்?

பிந்து, அதிகக் கூச்சத்துடனேயே என்னிடம் வந்தாள். தன் உடம்பு என்மேல் பட்டால் நான் சகிப்பேனோ மாட்டேனோ என்ற தயக்கம் அவளுக்கு. இந்த விரிந்த உலகில் பிறக்கக்கூடத் தனக்கு யாதோர் உரிமையும் இல்லையோ வென்று அவள் தன் நிழல் எவர்மீதும் படாமல் கண் மறைவாகவே இருந்து வந்தாள். வீட்டின் ஒரு மூலையில் குப்பை நாள் கணக்காகக் குவிந்து இருந்தால் அதை யாரும் கவனிப்பதில்லை; ஆனால் அந்தத் திக்கற்ற பெண் யாருக்கும் துன்பம் கொடுக்காமல் ஒரு பக்கமாக விழுந்து கிடப்பதுதான் எல்லாருடைய கண்களையும் உறுத்தியது. குப்பைக்கு இருந்த இடங்கூட அவளுக்கு இல்லையே! அவள் சிற்றப்பா பிள்ளைகளான ஒன்றுவிட்ட சகோதரர்கள்மட்டும் உலகத்தில் என்ன சாதித்துவிடப் போகிறார்களோ தெரியவில்லை? அவர்களுக்கு ஒரு கேடும் இல்லை; பச்சென்றுதான் இருக்கிறார்கள்.

பிந்துவை என் நிழலில் அழைத்துக்கொண்டபோது, அவளுடைய மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அவ்வளவு பீதி, பாவம்! அதைப் பார்த்து எனக்குத் துக்கம் பொங்கி எழுந்தது. ''அம்மா, நிற்பதற்கு உனக்கு எங்கேயும் துளி நிழல் இராது போனாலும் நான் இருக்கும் வரையில் உனக்கு ஒரு குறைவும் இல்லை. என் இடத்தில் இரு'' என்று ஆறுதல் கூறினேன்.

ஆனால் என் வீடு என் ஒருத்திக்குச் சொந்தமில்லையே! இதனால் நான் துணிந்து செய்வது சற்றுக் கடினமாகவே

இருந்தது. நாலைந்து நாட்கள் என் அருகிலேயே இருக்கும் போது பிந்துவின் கன்னங்களில் தழும்புபோல் செக்கச் செவேலென என்னவோ தோன்றியது. ஏதாவது கட்டி வெடிப்பாக இருக்கும். உங்கள் வீட்டாரெல்லாம், அதைப் பெரியம்மையென்றே வைத்துவிட்டார்கள். கூற்றுக்குட்டி வைத்தியனைருவனை அழைத்து வந்து காண்பித்தீர்கள். இன்னும் இரண்டொரு நாட்கள் போனால்தான் தெரியு மென்று அவன் சொல்லிவிட்டான். அந்த இரண்டு நாட்கள் தாம் ஏன் பொறுத்துக்கொண்டு இருக்கப் போகிறீர்கள்? தனக்கு நோயீ வந்துவிட்டதே என்று பிந்து மானக்குறை வினால் வெந்து போனாள். ''பெரியம்மை வந்தால்தான் என்ன? நான் அவளைப் பிரசவ அறையில் தனியாக வைத்துக் கொள்ளுகிறேன். அவளால் உங்கள் யாருக்குமே தொந்தரவு வேண்டாம்'' என்று அவள் பக்கமாக நான் பேசியபோது என்னை எல்லாரும் மூஞ்சியால் அடித்தீர்கள்; பிந்துவின் தமக்கைகூட மிகவும் வெறுப்புற்றவள்போல், ''இந்தச் சனியனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்த் தொலைத்து விடுகிறேன்!'' என்றாள். இப்படி இருக்கும்போது பிந்துவின் கன்னங்களில் இருந்த சிவப்புத் தழும்பு திடீரென்று மறைந்து போய்விட்டது. அதைப் பார்த்ததும் நீங்கள் பின்னும் முணு முணுத்தீர்கள்: ''நிச்சயமாக, அம்மைதான் வந்து அப்புறம் இறங்கிவிட்டது!'' என்றீர்கள். அவள் பிந்து அல்லவா? ஏழைக்குத் தெய்வமே துணை!

ஆதரவின்மையின் நடுவில் வளர்வது ஒரு விசேஷ குண மென்றே சொல்லவேண்டும். அந்நிலையில் உள்ளவரின் உடல் எதையும் சகித்துச் சகித்து வயிரமாகி விடுகிறது. அவர்களை நோய்நொடி அண்டுவதில்லை. யமலோகத்திற்குப் போகும் வாயில்கூட அவர்கள் வரையில் அடைபட்டு விடுகிறது. பிந்து வுக்கு நோய் மேலாக வந்து பயமுறுத்திவிட்டுப் போய் விட்டது. இதிலிருந்து எனக்குப் புதிய ஞானம் உதயமாயிற்று. உலகத்தவர்கள் கிள்ளுக் கீரையாக நினைக்கும் ஓர் ஆத்மா வைக் காப்பது எவ்வளவு கடினமான காரியம், அப்பா! இடங் கொடுத்து ஆதரிக்க நாம் எவ்வளவு முயற்சிகள் செய்கிறோமோ அவ்வளவு தடைகள் இழைப்பாரும் இருக்கிறார்கள், இந்தப் புண்ணிய பூமியில்.

என்னிடத்தில் பிந்துவுக்குப் பயம் தெளிந்துவிட்டது. என்மேல் அவள் அதிகப் பற்றுதல் கொள்வதைப் பார்த்து எனக்குத் திகில் மூண்டது. அம்மாதிரி ஓர் ஆசையின் உருவை நான் இதுவரையில் கண்டதேயில்லை. புத்தகங்களில் படித் திருக்கிறேன், கணவன் மனைவியரிடையேதான் அவ்வாறு

தோன்றும் என்று. என் அழகைக் கண்டு நானே மயல் கொள்வதற்கு வாய்ப்பே ஏற்படவில்லை. என் சுந்தர வடிவமே, இந்தக் குரூபியின் மனத்தைக் கவர்ந்துவிட்டது. 'அக்கா, உன் முகத்தை என்னைத் தவிர வேறு யாராவது கண்டு இன்புற்று இருக்கிறார்களா?' என்பாள் அவள். என் கூந்தலை நானே வாரி முடிந்துகொள்ளும்போது அவளுக்கு என்மேல் ஊடல் உண்டாகிவிடும். என் கூந்தலின் சுருளை இரண்டொரு தரம் தொட்டுத் தடவிப் பார்த்த பிறகுதான் அவளுடைய மனம் சமாதானம் அடையும். எங்காவது போவதாயிருந்தால் தான் நான் அலங்காரம் செய்துகொள்வது வழக்கம். ஆனால் பிந்து ஒரு நாள் விடாமல் என்னைப் பலவிதமாகச் சிங்காரித்து அழகு பார்ப்பாள். வெறி பிடித்தவள்போல் என்னை நேசித்தாள் அந்தப் பேதை.

உங்கள் வீட்டின் பின்கட்டில் பேருக்கு ஒரு துண்டு மண் தரைகூட இல்லை. சுவர் ஓரமாகச் செல்லும் சாக்கடையின் பக்கத்தில் தப்பித் தவறிப் புல்லாந்திச் செடி ஒன்று வளர்ந்திருந்தது. அது செந்தளிர் விட்டுப் பூமியில் வசந்த காலத்தின் வருகையை அறிவித்தது. என் வீட்டு வேலைக்கிடையில் எல்லோருடைய இகழ்ச்சிக்கும் இலக்கான அந்தப் பேதை பிந்துவின் மனத்துள்ளும் இளவேனிலின் சாயல் படிந்தது. புற உலகைத் தவிர்த்து அக உலகிலும் இளந்தென்றல் உலவுமென்பதை அன்றுதான் அறிந்தேன். எந்தச் சுவர்க்கத்திலிருந்து அந்தப் புளகம் மெல்ல வருமோ? எங்கள் வீட்டுச் சாக்கடைச் சந்து வழியாக வரவில்லை; அதுமட்டும் நிச்சயம். பிந்து காட்டிய அன்பின் வேகம் என்னைச் சஞ்சலத்திற்கு உள்ளாக்கியது. சிற்சில சமயம் அவள்மீது எரிச்சல்கூட வரும் எனக்கு; அதை மறைப்பானேன்? ஆனால் அந்தப் பேரன்பின் மூலமாக என் உண்மையான உருவத்தை நான் கண்டறிந்தேன்: என் வாழ்வில் ஒரு நாளும் தோன்றுத ஓர் உருவம்-என் விடுதலையின் உருவம்!

இந்தப் பக்கம், பிந்துவைப் போன்ற ஓர் அநாதைப் பெண்ணுக்கு நான் பரிவது உங்களுக்கெல்லாம் விரசமாக இருந்தது. இதற்காகப் புருவத்தைச் சுளித்துக்கொள்ளுவது, வெடுக்கெனப் பேசுவது, இன்னும் எவ்வளவோ கூத்து! என் வங்கி களவு போனபோது, பிந்துவுக்குத்தான் கை நீள மென்று அவள்மேல் அடாப் பழி சுமத்தினீர்கள். தேசிய இயக்கத்தின்போது உங்கள் வீட்டைப் போலீஸார் சோதனை போட வருகிறார்களென்று வைத்துக்கொள்வோம். பிந்துவை அவர்கள் ஏவிய வேவுகாரியென்றுகூட வாய் கூசாமல் சொல்லியிருப்பீர்களே! அதற்கு அத்தாட்சி வேண்டியதே இல்லை;

பிந்து அநாதை அல்லவா? அவள் எந்தப் பழியையும் ஏந்திக் கொள்ளக் கூடியவள்!

பிந்து ஏதாவது காரியம் செய்யச் சொன்னால் உங்கள் வீட்டு வேலைக்காரிகள் உடனே மறுத்துவிடுவார்கள். அவள் அதற்குமேல் அவர்களுக்கு வேலையிடத் துணிய மாட்டாள். இந்தக் காரணங்களினால் அவள்பொருட்டு எனக்குச் செலவு கிறிது அதிகரித்தது. தனியாக ஒரு பணிப்பெண்ணை அமர்த்திக்கொண்டேன். அது உங்களுக்குச் சம்மதப்படவில்லை. பிந்துவுக்கு இரண்டு துணி மணி வாங்கித் தருவதைக் கவனித்ததும், நீங்கள் எனக்குக் கைச் செலவுக்காகக் கொடுக்கும் பணத்தையும் நிறுத்திவிட்டீர்கள். இதற்கு அடுத்த நாளே நான் வீலை குறைவுள்ள மோட்டாப் புடைவையையே உடுத்த ஆரம்பித்துவிட்டேன். என் எச்சில் இலையை நானே எடுத்து வெளியே கொண்டுவந்து பசு மாட்டுக்குப் போடுவேன். குழாயின் பக்கம் போய் என் பாத்திரங்களை நானே துலக்கிக் கொள்வேன். ஒரு நாள் தற்செயலாக நீங்கள் என்னிடத்தில் இந்தப் புது மாறுதலைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை. என்னைப் பார்த்து நீங்கள் மகிழ்ச்சி அடையாது போனால் போகிறீர்கள் - உங்களை மகிழ்விக்க வேண்டுமென்ற நற்புத்தி இதுவரையில் எனக்குத் தோன்றவில்லையே! என்ன செய்வேன்?

உங்களுக்கெல்லாம் கோபம் என்மேல் மிகுதியாக ஆக, பிந்துவுக்கு வயசும் வளர்ந்துகொண்டே வந்தது. இயற்கையின் செயலைப் பார்த்து மானிட இயல்பிற்கு மாறான வெறுப்புக் கொண்டீர்கள். பிந்துவை நீங்கள் பலவந்தமாக வீட்டை விட்டு அப்புறப்படுத்தியிருக்கலாம்; ஆனால் ஏனோ அவ்வாறு செய்யவில்லை? அதுதான் இன்றளவும் எனக்கு அதிசயமாயிருக்கிறது. என்னிடத்தில் உங்களுக்கெல்லாம் உள்ளூற அச்சமென்பதை அறிவேன். பிரம்மா எனக்குப் புத்தியும் தந்திருக்கிறார்; மனசினுள்ளாவது அதை நீங்கள் பாராட்டாது போனால் மண்டை வெடித்துவிட்டிருக்குமே!

கடைசியில், பிந்துவை உங்கள் சொந்தச் சக்தியினால் கிளப்ப முடியாமல் போகவே, விவாக தேவதையிடம் சரண் புகுந்தீர்கள். பிந்துவுக்கு வரன் நிச்சயமாகிவிட்டது. பெரிய ஓரகத்தி ஆறுதலுடன் பெருமூச்செறிந்து, ''பிழைத்தேன்! அந்த ஈசுவரிதான் எங்கள் வமிசத்தின் மானத்தைக் காப்பாற்றினாள்'' என்றாள்.

மணமகன் பார்வைக்கு எப்படி இருப்பானோ, எனக்குத் தெரியாது. நல்ல சம்பந்தமென்று சொல்லிக்கொண்டீர்கள். பிந்து என் காலைப் பிடித்துக்கொண்டு விக்கி விக்கி அழத்

தொடங்கினாள்; ''அக்கா, எனக்கு எதற்காக, இந்தக் கல்யாணம்?'' என்றாள்.

''பிந்து! பயப்படாதே, அம்மா. உனக்கு வாய்க்கும் கணவன் நன்றாக இருப்பானும்'' என்று அவளுக்கு நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.

''அவர் நன்றாக இருந்தால் என்ன? அவர் கண்களுக்குப் பிடித்திருக்கும்படி என்னிடத்தில் என்ன இருக்கிறது?'' என்று கூறியதும் அவள் மார்பு விம்மியது.

பிள்ளை வீட்டார் ஒப்புக்காவது பெண்ணைப் பார்க்க வரவேண்டாமா? வரவே இல்லை! இதனால் அவளுடைய அக்காவுக்கு நிம்மதி ஏற்பட்டது. பிந்துவைப் பார்த்துவிட்டு அவர்கள் சம்மதிக்காது போனால் என்ன செய்வதென்ற திகிலே!

பிந்து இரவு பகலாய்க் கண்ணீர் பெருக்கியவாறே இருந்தாள். அவளை வருத்திய துன்பம் என்னவென்பது எனக்குத் தெரியும். பிந்துவின் பொருட்டு நான் உங்கள் வீட்டாருடன் எவ்வளவோ சச்சரவு இட்டிருக்கிறேன். அவளுடைய மணத்தை நிறுத்தி வைக்க எனக்குத் துணிவு உண்டாகவில்லை. எந்த அதிகாரத்தைக் கொண்டு நான் இதைச் செய்வது? நான் இறந்து போனபின் அவளுடைய நிலை என்னவாகும்?

அவளோ பெண்-அதனுடன் குரூபி; நிறம் கறுப்பு; எந்த இடத்தில் வாழ்க்கைப்படுகிறாளோ? அவள் கதி என்ன ஆகுமோ? - இவற்றையெல்லாம் நினைத்து என்ன பயனென்று சும்மா இருந்தேன். ஆனால் என் இதயம்மட்டும் அநுதாபத்தால் அடித்துக்கொண்டது.

''அக்கா, கல்யாணத்துக்கு இன்னும் ஐந்தே நாள் இருக்கின்றன. அதற்குள் எனக்குச் சாவு வராதா?'' என்பாள் பிந்து. பாவம்! அவளை நான் கோபித்துக்கொண்டேன். ஆனால் என் நெஞ்சில் நிறைந்தவனுக்குத்தான் இது தெரியும்; பிந்துவுக்கு அதற்குள் சுக மரணம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் கட்டாயம் பரம திருப்தியையே அடைந்திருக்கும் என் மனம்.

விவாகத்திற்கு முந்தின நாள் பிந்து தன் சகோதரியிடம், ''அக்கா, உன் வீட்டில் மாட்டுத் தொழுவத்திலாவது விழுந்து கிடக்கிறேனே! காலில் விழுந்து கேட்கிறேன்; இப்படி என்னைத் தள்ளிவிடாதே'' என்று வேண்டிக்கொண்டாள்.

சில நாட்களாகவே தமக்கையும் மறைவாகக் கண்ணீர் விட்டு அழுதுகொண் டிருந்தாள். அன்றும் அவ்வாறே கண்ணீர் பெருக்கினாள். உள்ளம் என்பதைத் தவிர, சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறதே! என்ன செய்வாள் பாவம், என் ஓரகத்தி?

''அம்மா பிந்து, கணவனால்தானே பெண்களுக்குக் கதிமோட்சம். தலை எழுத்து, துக்கம் அநுபவிக்கவேண்டு

மென்று இருந்தால் யாரால் தடுக்க முடியும். அம்மா!'' என்று புத்தி புகட்டினாள். இதன் முடிவென்ன? பிந்து மீள்வதற்கு ஒரு வழியும் இல்லை; பிந்து விவாக பந்தத்துள் சிக்கித்தான் ஆகவேண்டும். அதற்குமேல் விதிப்படி எல்லாம் நடக்கும்.

என்னால், முடிந்தவரையில் அவளுடைய கல்யாணத்தை நம் வீட்டிலேயே நடத்தப் பாடுபட்டேன். ''அது சரியல்ல; பிள்ளையின் வீட்டிலேதான் நடக்கவேண்டும்'' என்று நீங்களெல்லாரும் முரணுகப் பேசினீர்கள்.

பிந்துவின் விவாக நிமித்தம் நீங்கள் பணம் செலவழித்திருந்தால், கட்டாயம் உங்கள் குலதெய்வம் கோபித்துக் கொண்டு மலையேறிவிட்டிருக்கும். நல்ல காலம், அப்படி ஒன்றும் நிகழவில்லை. என் ஓரகத்திக்குத் தெரிவித்திருந்தால் அவள் நடுங்கிப் போயிருப்பாள். என் நகைகளில் சிலவற்றைப் பிந்துவுக்கு அணிவித்தேன். அவள் கண்ணில் அவை படாது போயிருக்குமா? கவனித்தாலும் கவனியாததுபோல் இருந்து விட்டிருப்பாள். உங்கள் சநாதன தர்மத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; அந்தக் குற்றத்திற்காக அவளை மன்னித்து விடுங்கள்.

போகும்போது பிந்து என்னை அணைத்துக்கொண்டு, ''அக்கா, என்னை என்றென்றும் துறந்துவிடுவாயா?'' என்றாள்.

''அப்படி ஒன்றும் இல்லை, என் பிந்து! உனக்கு எந்தத் துன்பம் வந்தாலும் உன்னைக் காட்டிக்கொடுப்பேனா?'' என்றேன்.

மூன்று நாட்களாயின. உங்கள் ஜமீன் குடிமக்கள் சிலர் எசமானர்களைப் பேட்டி காண வந்திருந்த சமயம் காணிக்கையாக ஓர் ஆட்டுக்கடாவைச் சமர்ப்பித்தார்கள். அகாதமான உங்கள் வயிற்றுப் பசியைப் போக்க வந்த அந்த ஜீவனைக் காப்பாற்றிக் கட்டை, கரி நிரப்பி வைக்கும் அறையில் மறைத்து விட்டேன். காலையில் எழுந்ததுமே முதல் காரியம் அதற்குத் தழை கொண்டு போடுவேன். இரண்டொரு நாள் உங்கள் வேலைக்காரர்களை நம்பியிருந்தேன். அவர்களோடு தீனி போடுவதைவிட அதைத் தின்றுவிடுவதிலேயே கருத்தாக இருந்தனர்.

ஒரு நாள் அதிகாலையில் அவ்வறையில் நுழையும்போது பிந்து, ஒரு மூலையில் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். என்னைப் பார்த்த மாத்திரம் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டே எதுவும் பேசாமல் தேம்பித் தேம்பி அழுதாள்.

பிந்துவின் கண்வன் பைத்தியம்!

''நிஜமாகச் சொல்லு, பிந்து?'' என்றேன்.

''நான் உன்னிடத்தில் பொய் சொல்லுவேனு, அக்கா? அவருக்குப் பைத்தியந்தான்! - மாமனுருக்கு இந்த விவாகத்தில் துளிக்கூட விருப்பமில்லை; ஆனால் என்ன செய்வார்? யமகாதகி யான என் மாமியாரிடத்தில் அவருக்குப் பயம். கல்யாணத் திற்கு முன்பே காசிக்குப் போய்விட்டார். தன் பிடிவாதத் தைச் சாதிக்க மாமியார் பிள்ளைக்கு விவாகம் செய்தே முடித்தாள்'' என்றாள்.

நான் கரிக் குவியல்மீது உட்கார்ந்துவிட்டேன். பெண் களுக்குத் தம் இனத்தாரிடத்திலேயே கருணை இல்லை. கேட்டால், பெண் ஜன்மந்தானே என்கிறார்கள்! தன் பிள்ளை பைத்தியமா யிருந்தாலும் ஆண் மகன் அல்லவா?

பிந்துவின் கணவன் எப்போதுமே பைத்தியம் பிடித்து அலைகிறானென்று சொல்வதற்கில்லை. ஒவ்வொரு நாள் யாருக் குமே அடங்காமல் வெறி மூளும். அப்போது அவனை ஓர் அறையில் தள்ளிப் பூட்டிவிடுவார்கள். விவாக தினத்தன்று இரவு அவன் தன் சுவாதீனத்தில்தான் இருந்தான். இரவு கண் விழித்ததன் பயனாக மறு நாள் மூளை கலங்கிவிட்டது. பிந்து பகலில் சாப்பிட உட்கார்ந்த சமயம் அவன் வெறிகொண்டு அவள் புசிக்க இருந்த சோற்றை அது வைத்திருந்த பித்தளைத் தட்டோடு வெளியே வீசி எறிந்துவிட்டான். திடீரென்று, பிந்து பெரிய ராணியென்றும் அவள் தங்கத்தட்டைப் பரிசாரகன் திருடிக்கொண்டு வேறு ஏதோ ஒன்றை அவளுக்கு வைத்துவிட்டானென்றும் தோன்றிவிட்டது, அவன் மனசில்; அதனால்தான் அவ்வளவு கோபம்! பிந்து அதைக் கண்டு நடு நடுங்கிப் போனாள். மூன்றாவது நாள், மாமியார் அவளைக் கணவனுடைய அறையில் படுத்துக்கொள்ளும்படி உத்தர விட்டதைக் கேட்டதும் உயிரே ஒடுங்கியது போல் ஆயிற்று; மாமியாரோ காளி! கோபம் வந்துவிட்டால் தன்னையே மறந்து விடுவாள். அவளும் பைத்தியந்தான்; அரைகுறை ஆனதால் பின்னும் பயங்கரமானது; பிந்து அறையில் நுழைய வேண்டிய தாயிற்று. அன்று அவள் கணவன் சற்றுத் தணிந்தே இருந் தான். ஆனால் திகிலினால் பிந்துவின் சரீரம் கட்டையைப் போல் உணர்வை இழந்தது. கணவன் நன்றாகத் தூங்கும் சமயமாகப் பார்த்து அவள் வெகு சாமர்த்தியமாக ஓடி வந்துவிட்டாள். அதை இங்கே விவரிக்கத் தேவை இல்லை.

அசூயையும் கோபமும் கலந்து வரவே, என் உடல் கொதிக்கத் தொடங்கியது; ''உன்னை ஏமாற்றி நடத்திய இந்த விவாகம் விவாகமே அல்ல. பிந்து, நீ முன்பு எப்படி இருந் தாயோ அதே மாதிரி என்னிடமே இரு. உன்னை அழைத்துப்

போக எவனுக்கு அவ்வளவு மண்டை உறுதி இருக்கிறதோ பார்க்கலாம்!'' என்றேன்.

''பிந்து சொல்வது அவ்வளவும் பொய்'' என்று நீங்கள் எல்லாரும் சேர்ந்துகொண்டு சொன்னீர்கள்.

''அவள் பொய் சொல்லுவாளென்றால் நான் நம்பவே மாட்டேன்'' என்றேன்.

''எப்படி உனக்குத் தெரியும்?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டீர்கள்.

''எனக்குத் தெரியும்; அதுவே போதும்'' என்றேன் உறுதியை விடாமல்.

அப்புறம் பிந்துவின் கணவன் வீட்டார் போலீஸ் வழக்குத் தொடுப்பார்கள் என்று பயமுறுத்திப் பார்த்தீர்கள்.

''ஏமாற்றி ஒரு பைத்தியக்காரனுக்கு அவளைக் கொண்டு மடுத்தார்களே; அது நியாயமா? கோர்ட்டு அவர்களுக்கு மாத்திரமா இருக்கிறது?'' என்றேன்.

''இதற்காகக் கோர்ட்டுக்குப் போய் நாலு பேர் சிரிக்க வேண்டுமா? அவளைப்பற்றி நாம் தலையை உடைத்துக்கொள் வானேன்?'' என்றெல்லாம் வாது செய்தீர்கள்.

''என் சொந்த நகைகளை விற்றுச் செலவு செய்து, இது நியாயமா, அநியாயமா என்பதைப் பார்த்துவிடுகிறேன்'' என்றேன்.

''வக்கீல் வீட்டுக்குப் பத்துத் தடவை நீ நடந்து எங்கள் மானத்தை வாங்க வேண்டுமா?'' என்று கூறினீர்கள்.

இதற்குப் பதில் தரவில்லை நான். நெற்றியில் படீர் படீரென அறைந்துகொள்வதைவிட வேறு எதைச் செய்வது? பிந்துவின் புக்ககத்திலிருந்து அவளுடைய பெரிய மைத்துனர் வந்து வெளிப்பக்கம் பலத்த கூச்சல் போட்டுக்கொண் டிருந்தார்; ''இதோ பார்: போலீஸாரை அழைத்து வருகி றேன்'' என்று மிரட்டினார்.

அப்போது எனக்கு எங்கிருந்துதான் அப்பேர்ப்பட்ட தைரியம் வந்ததோ? கசாப்புக்கடைக் கத்திக்கு உயிர் தப்பி என்னை அடைந்த ஒரு ஜீவனை, மிரட்டல் உருட்டலுக்குப் பயந்து மறுபடியும் கசாப்புக்காரனிடமே கொடுத்து விடுவேனே? எதற்கும் சளைக்காமல் நான், ''உங்கள் சாமர்த்தி யத்தைத்தான் பார்க்கிறேனே! போய்ப் போலீஸாரை அழைத்து வாருங்கள்'' என்றேன். அதைக் கூறிவிட்டு, பிந்துவை என் அறையிலேயே பாதுகாப்புடன் வைக்க யோசனை செய்துகொண்டு அவளைத் தேடப்போனேன். ஆனால் அவளைக் காணவில்லை. உங்களுடன் நான் விவாதித்துக்கொண்டிருந்த சமயம் பார்த்து, அவள் தானாகவே வெளியே வந்து மைத்துன

ரிடம் அகப்பட்டுக்கொண்டாள். இந்த வீட்டில், தான் இருந்தால் எல்லாருக்கும் துன்பம் விளையுமென்று அறிந்தாள். நடுவில் ஒடிவந்து பிந்து தன் துன்பத்தைப் பின்னும் பெருக்கிக் கொண்டாள். 'என் பிள்ளை ராட்சசனு என்ன, அப்படி அவளைக் கடித்து தின்றுவிட? உலகத்தில் எவ்வளவோ குடும்பங்களில் கெட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என் பிள்ளை மாணிக்கமென்றே சொல்லவேண்டும்.' - இது அவளுடைய மாமியாரின் வாதம்.

'அவளுடைய அதிருஷ்டம் சப்பை. அதற்காக வருத்தி என்ன பலன்? பைத்தியமோ பிசாசோ அவன் எப்படி இருந்தாலும் கணவனல்லவா?' என்று தன் கருத்தை வெளியிட்டாள் என் பெரிய ஓரகத்தி.

குஷ்டரோகியான தன் கணவனை ஒருத்தி வேசி வீட்டிற்குத் தானே அழைத்துச் சென்றாளாம். பெண்களெல்லாரும் அந்தமாதிரி உத்தம பத்தினிகளாக இருக்கவேண்டும் என்பது தானே உங்கள் கொள்கை? உலகத்திலேயே இதைவிடப் பேராண்மை என்ன இருக்கிறது? இந்தப் புண்ணிய கதையைப் பரவச் செய்யும் இந்த ஆடவர்களுக்குத்தான் வெட்கம், மானம் இல்லையோ? மிக உயர்வான மனிதப் பிறவி எடுத்த உங்களுக்குப் பிந்துவின் விஷயத்தைப் பார்த்துக் கோபந்தானே வருகிறது? வெட்கத்தால் தலை தரையோடு கவிழ்ந்து போகவில்லையே! பிந்துவுக்காக என் இதயம் பிளந்தே போயிற்று. உங்களுக்காக நான் பட்ட வெட்கத்துக்கு ஓர் எல்லையே இல்லை. அசல் நாட்டுப்புறத்துப் பெண் நான்; உங்கள் வீட்டில் புகுந்தேன். பகவான் கவனப் பிசகாக எனக்குச் சிறிது மூளையை வைத்துவிட்டார். நீங்கள் ஒதின தர்ம நீதிகள் எனக்குச் சிறிதும் சகிக்கவில்லையே!

பிந்து செத்தாலும் இந்த வீட்டு வழி வரமாட்டாளென்று எனக்கு நன்றாகத் தெரியும். நான் அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை எப்படி மறப்பேன்? அவளைத் துறப்பதில்லை; கடைசி வரையில் பார்த்துவிடுவது என்ற உறுதிக்கு வந்தேன். என் சிறிய தம்பி சரத், கல்கத்தாவில் படித்துக்கொண்டிருந்தான்; உங்களுக்கும் தெரியுமே அவன் விஷயமெல்லாம். தொண்டர் படையில் சேர்ந்து தேசசேவையில் ஈடுபடுவது, காலரா கண்ட இடத்திற்குச் சென்று உதவி செய்வது, வெள்ளச் சேதம் ஏற்பட்ட காலத்தில் ஜனங்களுக்கு உழைப்பது - இந்த மாதிரி சேவைகளில் வெகு உற்சாகத்தோடு உழைத்ததால் பரீட்சையில் எத்தனையோ தரம் தவறியிருக்கிறான். அவனைக் கூப்பிட்டு நான், ''பிந்துவைப்பற்றி எனக்கு அடிக்கடி சமாசாரம் எட்டும்படியான வழியைத் தேடவேண்டும்; சரத்!

எனக்குக் கடிதம் எழுதக்கூடிய துணிவு அவளிடத்தில் இல்லை. எழுதினாலும் என் கைக்கு வந்து சேராது'' என்று பொறுப்பை அவன்மேல் போட்டுவிட்டேன்.

ஆனால் இதைவிடப் பிந்துவைக் களவாடிக்கொண்டு வந்து விடு அல்லது அவளுடைய பைத்தியக்காரக் கணவனின் குரல் வளையை அழுத்திவிடு என்றால் அவன் சட்டப்டென்று முடித்து விட்டிருப்பான்!

சரத்துடன் நான் இதைப்பற்றி யெல்லாம் யோசனை செய்துகொண்டிருக்கையில் நீங்கள் என் அறைப் பக்கமாக வந்து, ''மறுபடியும் எந்த விபரீதத்தைச் செய்யச் சதி செய்கிறீர்கள்?'' என்று சொன்னது கவனம் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

''பிந்துவை எங்கேயாவது ஒளித்து வைத்து விட்டீர்களா என்ன?'' என்று வினவினீர்கள். அதற்கு நான், ''அவள் வருவதாக இருந்தால் கட்டாயம் மறைத்து வைக்கவே உத்தேசம்; ஆனால், அவள் வரமாட்டாளே! நீங்கள் திகிலடைந்து போவதற்கு ஒன்றும் இல்லை'' என்றேன்.

சரத் என்னோடு இருப்பதைக் கண்டு உங்களுக்குச் சந்தேகம் தட்டியதுபோல் இருக்கிறது; மேலும், சரத் அடிக்கடி வந்து என்னைக் கண்டு பேசிப் போவதே உங்கள் வீட்டாருக்கு ஆகவில்லை. போலீஸார் அவன்மேல் கவனமாயிருந்ததே இதற்குக் காரணம். ஏதாவது அரசியல் வழக்கில் மாட்டிவிடப் போகிறானே என்ற பயந்தானே! இதற்காகவே சுபதினங்களில் சகோதரனுக்கு நான் இடவேண்டிய மங்கள திலகத்தைக்கூட யார் மூலமாவது அனுப்பி வைப்பேன். உங்கள் வீட்டுக்குள் அவனை அழைக்கும் வழக்கமே இல்லை!

பிந்து மீண்டும் ஓடிவிட்ட செய்தி உங்கள் மூலமாகத் தெரியவந்தது; அதனால் அவர்கள் உங்கள் வீட்டில் அவளைத் தேடிப் பிடிக்க வந்தார்கள். இதைக் கேட்டதும் என் மார்பில் அம்பு பாய்ந்தமாதிரி இருந்தது. அந்த அபாக்கியவதிக்குப் பொறுக்க முடியாத கஷ்டம் என்னவெல்லாம் ஏற்படுகிறது! இது தெரிந்தும் அவளுக்கு உதவ ஒரு வழியும் காணேமே!

சமாசாரத்தை அறிந்துவரச் சரத் ஓடினான். அன்று சாயந்தரமே என்னிடம் வந்து விஷயத்தை அவிழ்த்தான்:

''பிந்து அவள் சிற்றப்பா வீட்டுக்குப் போனாளாம்; அவள் வந்ததைப் பார்த்து அவர்கள் ஆத்திரம் மூண்டவர்களாய்ப் பழையபடி அவளது புக்ககத்திலேயே கொண்டுபோய் விட்டார்களாம்; அவளால் ஏற்பட்ட வண்டிச் சத்தம் போன்ற தண்டச் செலவுகளை நினைத்துக்கொண்டு இன்னும் உறுமிக் கொண்டிருக்கிறார்கள்.''

உங்கள் சித்தியம்மா ஸ்ரீ க்ஷேத்திரத்திற்குத் தீர்த்த யாத்திரையாகப் போக வேண்டி வீட்டில் வந்து இறங்கினாள்; ''நானும் போகட்டுமா?'' என்று உங்கள் உத்தரவைக் கேட்டேன். திடீரென எனக்குத் தர்மத்தில் இவ்வளவு பற்றுதல் உண்டானதைக் கண்டு வீட்டாரெல்லாம் ஆனந்தத்தில் ஆழ்ந்தனர். குறுக்கே ஒன்றுமே பேசவில்லை. நான் கல்கத்தாவில் இருந்தால் திரும்பவும் இந்தப் பிந்துவின் விஷயத்தில் தலையிடக் கூடுமென்ற எண்ணத்தாலும் என்னை வேறு இடத்தில் சில நாட்கள் அனுப்பிவைக்க உத்தேசித்தீர்கள்; அதுவும் தெரியாமல் போகவில்லை.

நான் உங்களுக்கெல்லாம் பெரிய முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தேன். புதன்கிழமை நான் புறப்பட வேண்டிய நாள். ஞாயிற்றுக்கிழமை தொடங்கியே மூட்டை முடிச்செல்லாம் கட்டிச் சித்தமாகிவிட்டது. சரத்தை வரவழைத்து, ''எப்படியாவது பிந்துவைப் புதன் கிழமையன்று, புரிக்குப் போகும் வண்டியில் ஏற்றிவிடு'' என்று கூறினேன்.

சரத்தின் முகம் இந்த யுக்தியைக் கேட்டதும் மலர்ந்து விளங்கியது; ''அக்கா, உனக்குக் கவலையே வேண்டாம்; அவளை வண்டியில் ஏற்றுவதோடு, கூடவே புரி வரைக்கும் கொண்டு விடுவதும் என் பொறுப்பாகும்'' என்றான்.

அன்று விளக்கு வைக்கும் சமயம். சரத் மறு முறை என்னைக் காண வந்தான். அவன் முகத்தில் பொலிவே இல்லாததைக் கண்டு சாம்பியது என் உள்ளம்.

''என்னடா சரத், சௌகரியப்படவில்லையா?'' என்று பரபரப்புடன் வினவினேன்.

''இல்லை'' என்றான்.

''அவள் இதற்கு இணங்கவில்லையா?'' என்றேன்.

''அதற்கு அவசியமே இல்லை; நேற்று இரவே அவள் தன் புடைவையைக் கொளுத்திக்கொண்டு தற்கொலை பண்ணிக் கொண்டாள். அவர்கள் வீட்டில் ஒரு பையனைத் தட்டிக் கொடுத்துக் கேட்டதில் உன் பேருக்கு அவள் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்றாளாம்; ஆனால் அந்தக் கடிதத்தை அவர்கள் சாம்பராக்கி விட்டிருப்பார்கள்'' என்றான்.

போகட்டும்!—என் மனம் அமைதியுற்றது.

''இந்தக் காலத்திலேயே புடைவையைக் கொளுத்திக் கொண்டு பிராணனை விடுவது ஒரு 'பாஷன்' ஆகிவிட்டது'' என்று ஊரெங்கும் வம்பளந்தார்கள். நீங்களெல்லாரும் இதெல்லாம் வெறும் நாடகம் என்று இழிவாகக் கூறினீர்கள்; இந்த நாடகம் வங்காளிப் பெண்களின் புடைவையை மட்டுமா

பிடித்துக்கொள்ள வேண்டும்? ஆடவர்களின் வேஷ்டிக் கொசுவத்தைப் பற்றுதது ஏனே? இதன் உண்மையை ஆராய்வது உசிதம்.

பிந்து நிர்ப்பாக்கியவதியே! உயிருடன் இருந்த வரையில் ரூபத்தாலோ குணத்தாலோ யாதொரு புகழையும் அடையவில்லை. சாவதற்குத் துணிந்தாளே; அதையாவது ஆடவர்களெல்லாரும் வியந்து போற்றும்படி புதுவிதமாக நடத்தியிருக்கக்கூடாதா? இறந்தும் உலகத்தவரின் இகழ்ச்சிக்கு ஆளாகிவிட்டாளே!

அவள் தமக்கை தன் அறையிலேயே புலம்பலானாள். அந்த அழுகையில் ஓர் ஆறுதல் இருந்தது. எப்படியோ அவள் குலத்தின் பெயர் கெடவில்லை; அவள் இறந்ததால் ஒழிந்தது ஒரு துக்கம். உயிரோடு இருந்திருந்தால் என்ன அவதூறெல்லாம் விளையுமோ?

புண்ணியத் தலத்தை அடைந்தேன். அங்கே பிந்து வரவேண்டிய அவசியமே இல்லை; எனக்கு மட்டும் இருந்தது.

துக்கமென்று உலகத்தவர் சொல்லுகிறார்களே, உங்களுடைய குடும்பத்தில் அது எனக்குச் சிறிதாகிலும் ஏற்படவில்லை. உங்கள் வீட்டில் சோற்றுக்கும் துணிக்கும் என்றுமே பஞ்சமில்லை. உங்கள் அண்ணாவின் நடத்தை எப்படியோ தெரியாது. உங்களிடத்தில் கோளாறு எதுவும் இல்லாததைப்பற்றி நான் தெய்வத்தைத்தான் தூஷிக்க வேண்டும். அப்படி உங்கள் சுபாவமும் பெரியவருடையதுபோலவே இருந்திருக்குமானால் என் வாழ்நாளும் அதன் வழியே சென்றிருக்கும். உத்தமியான என் பெரிய ஓரகத்தியைப்போல நான் கணவனென்னும் தெய்வத்தைத் தூற்றுமல், உலகத்தின் கர்த்தாவைத்தான் திட்டியிருப்பேன். ஆகையால், உங்களைப்பற்றிக் கடவுளிடம் நான் முறையிடுவதற்கு ஒன்றுமில்லை. நான் எழுதும் இந்தக் கடிதம் அதைச் சொல்வதற்கல்ல.

நான் மாகன் படால் சந்தில், 27-ஆம் எண் உடைய உங்கள் இல்லத்திற்கு இனித் திரும்ப மாட்டேன். பிந்துவைப் பார்த்தாகிவிட்டது. இல்லறத்தில் சில நாள் பழகியதில் பெண்கள் எத்தன்மையோர் என்பது தெளிவாகிவிட்டது. இனி என்னைப்பற்றி உங்களுக்கு அக்கறை இல்லை.

இதையும் உணர்ந்தேன்; பிந்து ஈனமான பெண் பிறவி எடுத்தாலும் அவளைக் கடவுள்மட்டும் துறக்கவில்லை.

அவள்மீது நீங்கள் தொடுத்த சமூக பாணம் சிறிதளவே அவளைப் பாதித்தது. மழுங்கிப் போகும் நிலை அதற்கும் ஒரு நாள் ஏற்படாததா? இந்தப் பாழும் மனித இனத்தவரின் கைக்கு எட்டாத உயர்ந்த இடத்தில் இருக்கிறாள் பிந்து.

அவளை என்றென்றும் காலின் கீழே நசுக்கிவிட உங்களால் முடியாதே! மறலி உங்களைக் காட்டிலும் கெட்டிக்காரன்! துர்மரணமானாலும் அவள் செய்த காரியம் மகத்தான தியாக மென்றே கூறுவேன்: இந்த இடத்தில் பிந்து, வங்க தேசத்தில் தோன்றிய ஒரு பெண் மட்டுமல்ல; அவளை நிராகரித்த சிறிய தந்தை வீட்டுப் பிள்ளைகளின் தங்கையாக இருந்ததோடு அவள் நிற்கவில்லை; ஒரு பைத்தியக்காரனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி மாத்திரமா? அவள் உலகின் உறவை ஒழித்து முக்தி பெற்ற ஒரு பெரிய ஆத்மா.

மறலியின் குழலிசை, பிந்துவின் உடைந்த உள்ளத்தின் மூலம் என் இருண்ட வாழ்வின் யமுனைக் கரையில் ஒலித்த போது, என் நெஞ்சத்தில் வேல் பாய்ந்தது. உலகத்தில் மிகவும் அற்பமான விஷயம், ஏன் எல்லாவற்றையும் விடக் கடினமாக இருக்கிறதென்று கடவுளை வினவினேன்.

ஒரு சந்திலே சுவர் மறைவில் துயரமே குடிகொண்ட ஓர் அற்பமான நீர்க்குமிழிக்கு ஏனே இந்த இடையூறுகளெல்லாம்? பருவ காலங்கள் தம் நிறை கலசங்களிலிருந்து இன்னமுதைப் பொழியும்போது, ஏனே என்னால் அதை உட்கொள்ள முடியா மல் போய்விட்டது? கடவுள் படைத்த இவ்வழகிய மேதினி யில், என்னைப்போன்ற ஜீவன் கூட்டில் அடைபட்ட பறவை போல் துளித் துளியாக ஏன் வெம்பிச் சாக வேண்டும்? நான் நடத்திய ஓர் இல்லறம் எவ்வளவு அற்பமானது! இவ்வுலகத்த வர் விதிக்கின்ற கட்டுத் திட்டம் எவ்வளவு இழிவானது; முடிவில், இழிவான இந்த நாகபாசத்திலிருந்து மீண்டு வெற்றி பெற வேண்டும்; இல்லாவிட்டால் உயிரைப் போக்கிக் கொண்டு அழியா ஆனந்த உலகிற்குப் போவதே நல்லது.

மறலியின் குழலிசை இன்னும் என் செவியுள் ஒலித்துக் கொண் டிருக்கிறது. எந்தப் பாபத்தைச் செய்தோமென்று எங்களை நீங்கள் இவ்வாறு கடுமையான வாழ்க்கையில் அடைத்து வைக்கிறீர்கள்? அதோ மரண தேவதையின் கரங் களில் விடுதலையின் வெற்றிக்கொடி பறக்கிறது! அடி பேதாய்! இனிப் பயமில்லை. உன் துக்கம் ஒழிந்துவிட்டது, நாட்டுப் பெண்ணென்ற இந்தச் சடலத்தைப் பிளந்துகொண்டு வெளிக் கிளம்புவதற்கு உனக்கு அரைக்கணங்கூட ஆகாதே!

உங்கள் வீட்டிற்கு ஒரு கும்பிடு! அதன் அச்சம் அறவே நீங்கியது, என் மனத்தைவிட்டு. என்னெதிரே அலைக்கிற நீலக் கடல்; என் தலைக்குமேல் வெண்முகில் உலவும் ஆகாயம்!

உங்களுடைய பழக்க வழக்கம் என்ற இருள் என்னை இது வரையில் மறைத்துக்கொண் டிருந்தது. நொடிப்பொழுது பிந்து என் வாழ்வில் தோன்றி அந்தத் திரையைச் சிறிதே

விலக்கிச் சென்றுள். அவளுடைய மரணத்துடன் அந்தத் திரை முழுவதுமே கிழிந்துவிட்டது. இன்று வெளியே வந்ததும் பார்க்கிறேன்; என் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் இடமும் இல்லையே! எனக்கு அழகு இருந்தும் அலட்சியம் செய்தீர்கள். எந்தப் பொருளுக்கு என்னைப் பிடித்திருந்ததோ அதன் திவ்விய நேத்திரம் இந்நீல ஆகாயத்தின் மூலமாக என்னை அழைக்கிறது.

நான் சாகத் துணிந்துவிட்டேன் என்று எண்ண வேண்டாம் நீங்கள்; அந்தப் பயம் இல்லை. மீராபாய் என்னைப்போல் ஒரு பெண்தான். அவளைப் பிணைத்த பாசமும் அற்பமானதல்ல. அவள் உயிரைப் போக்கிக்கொள்ளவில்லையே! ஒரு பாட்டில் அவள் சொல்லுகிறாள்:

''பாபே சாடே, மாயே சாடே, சாடே ஸஹாஸஹீ
மீரா ப்ரபு லகனலகீ ஜோ ந ஹோயே ஹோயி.''*

இந்தப் பெருமுயற்சி இருந்தால் போதும்; உயிர் வாழலாம். நானும் அவளைப்போல். உயிரை வைத்துக்கொள்ள விரும்புகிறேன்; பிழைத்துப் போனேன்!

உங்கள் திருவடியிலிருந்து விலகிய
மிருணாள்.

---

*தந்தை, தாய், நண்பர்கள் யாவரும் விட்டொழித்தாலும் பிரபுவை மீரா அடைய முற்பட்டுவிட்டாள்; இனி நடக்கிறது நடக்கட்டும்.

"இடம் இருக்கிறது"

எனக்கு வயசு இருபத்தேழுதான். ஆண்டுக் கணக்கிலாவது, அபார குணத்திலாவது எனது வாழ்க்கை உயர்வானதல்ல. ஆனாலும் அதற்குச் சற்று மதிப்பு உண்டு. மலர்போல் மெல்லிய ஓர் உள்ளத்தை நோக்கி வண்டு பறந்து வர, அது கால் வைத்த வீணாவு அம்மலர் அகாலத்தில் பக்குவமான கனியாக மாறியது.

அந்தக் கதையின் விஷயம் மிகவும் சிறியது. அதைச் சுருக்கமாகவே எழுதுவேன். சிறியதாகையால் சாதாரணமானதென்று தவறுன எண்ணம் கொள்ளாதவர்களே அதன் சுவையை உணர்வார்கள்.

கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற வேண்டிய பரீட்சைகள் யாவற்றிலும் தேறிவிட்டேன். சிறு பிள்ளையாக இருக்கும்பொழுது என் அழகிய முகத்தை வாகை மலரோடும், களாப் பழத்தோடும் ஒப்பிட்டு எங்கள் உபாத்தியாயர் வேடிக்கையாகக் கூறுவார். அது எனக்கு மிகவும் நாணமாக இருக்கும். வயசு ஆக ஆக, 'மறு பிறப்பிலும் (அப்படி ஒன்று இருக்கும் பட்சத்தில்) என் அழகான முகமும் வாத்தியார் அதைக் கேலியாக வர்ணிப்பதும் திரும்பி வருமா?' என்று சில சமயம் நினைத்துக்கொள்வேன்.

என் தந்தை ஒரு சமயம் பரம ஏழை. பின்னல் வக்கீல் தொழிலில் ஏராளமான பணம் ஈட்டினார். ஆனால் அதை அநுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. உயிர் விடும்போது தான் அவருக்கு ஒழிவு ஏற்பட்டது.

எனக்கு அப்போது வயசு மிகவும் குறைவு. அம்மாவின் கையில் வளர்ந்து மனிதனானேன். தான் எளிய குடும்பத்துப் பெண், நாங்கள் பணக்காரர் என்பதை அவள் மறக்கவில்லை; நானும் அதை மறக்காமல் இருக்கும்படி செய்தாள். குழந்தைப் பருவம் தொட்டு என்னைத் தரையில் விடாமலே எடுத்து வளர்த்தார்கள். அதனாலேயே கடைசி வரையில் நான் அரை குறையாக நிற்கிறேன். என்னை இன்றைத் தேதிக்குப் பார்த்தால்கூடப் பார்வதியின் மடியில் வீற்றிருக்கும் செல்வப் பிள்ளையாகவே தோன்றும் உங்களுக்கு.

எனக்கு முக்கிய வாரிசுதார் என் மாமாவே. அவர்

என்னைவிட ஆறேழு வயது பெரியவராக இருப்பார். ஆனால் புதை மணலைப்போல் எங்களுடைய குடும்பத்தைத் தம் முள்ளே இழுத்துக்கொண்டு விட்டார். அவர் அறியாமல் எதுவுமே நடக்காது. இக்காரணத்தால், எதன்பேரிலும் எனக்கு அக்கறையே விழவில்லை.

பெண்ணைப் பெற்றவர்கள்மட்டும் நான் நல்ல பிள்ளை என்பதை அறிவார்கள். கெட்ட பழக்கம் எதுவுமே என்னை அணுகவில்லை. பெரிய மனிதனுக வேஷம் போடும் அவசியமும் இல்லை. உண்மையில், பெருந்தன்மை என்னிடத்தில் இருந்தது. தாயின் கட்டளைப்படி நடக்க எனக்கு ஆற்றல் உண்டு. அந்தப்புரத்திற்கு அடங்கிச் செல்லும்படியே என்னைத் தயாரித்துவிட்டார்கள். அப்படிச் சுயமாக வரனைத் தேடும் கன்னிகை யாராவது இருந்தால் எனக்குள்ள இந்தச் சிறந்த லட்சணத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ளட்டும்.

பெரிய இடங்களிலிருந்து சம்பந்தத்திற்குப் பெண்கள் வந்தனர். ஆனால் மாமா இருக்கிறாரே, இந்த உலகத்தில் என்னுடைய பாக்கிய தசைக்கு அவர் பிரதான ஏஜெண்டானபடியால், விவாக சம்பந்தத்தைப்பற்றித் தனிப்பட்ட கருத்துக்கள் உடையவர். பணக்கார வீட்டுப் பெண்ணென்றால் அவருக்குப் பிடிக்காது. வீட்டுக்கு வருகிற நாட்டுப்பெண் குனிந்த தலையுடன் வரவேண்டும் என்பார். ஆனால் பெண்ணின் அழகைப்பற்றி அவருக்குள்ள ஆசை அவர் எலும்புவரையில் ஊறியிருந்தது. ஏமாந்த வரையில் பணத்தைக் கறந்துகொள்ள வேண்டும்; அதைக் கொடுக்கும் பெண்ணைப் பெற்றவன் மட்டும் முகத்தைச் சுளித்துக்கொள்ளக்கூடாது; இதுதான் அவர் கருத்து.

என்னுடைய நண்பன் ஹரீசனுக்குக் கான்புரில் வேலை. லீவுக்காக அவன் கல்கத்தாவுக்கு வந்திருந்தபோது என் மனசைக் கிளறிவிட்டான். ''அடே! பெண் என்றால் அந்த மாதிரி குட்டி கிடைக்கவேணும்!'' என்றான்.

நான் எம். ஏ., பரீட்சையில் தேர்ச்சி பெற்றுச் சில நாட்களே ஆயின. எனக்கு ஒய்வு நேரம் நிரம்ப இருந்தது. பரீட்சையின் கவலை இல்லை. எதையாவது சாதிக்கவேண்டும் என்ற ஊக்கமும் இல்லை; வேலை இல்லை; எதன் மேலும் இச்சை இல்லை. எனக்கு இருந்தவர்களெல்லோரும், உள்ளே ஓர் அம்மாவும் வெளியே ஒரு மாமாவுமே.

அளவற்ற ஒய்வென்னும் பாலையின் நடுவில் என் உள்ளம் பெண்களின் உருவம் என்னும் கானல் நீரையே பார்த்து மயங்கி நின்றது. ஆகாயத்தில் அவர்களுடைய கருவிழிகள் தோன்றின; காற்றில் அவர்கள் விடும் மூச்சை உணர்ந்தேன்;

இலைகளின் ஓசையில் அவர்களுடைய இரகசியப் பேச்சைக் கேட்டேன்.

இந்த நிலையில் ஹரீசன் வந்து, ''பெண்ணென்றால் அப்படி இருக்கவேண்டும்'' என்று சொல்லும்போது என் மனம், வசந்த மாருதம் அணைந்த மகிழந்தளிரைப் போல் துடிதுடித்தது. ஒளியும் நிழலும் புனைந்து இன்பக் கனவு கண்டது என் மனம். ஹரீசன் ரசிகன்; எதையும் சுவையோடு வர்ணிக்கும் சக்தி அவனுக்கு உண்டு. அவன் அந்தப் பெண்ணைப்பற்றிப் பேசப் பேச எனக்கு அதிக வேட்கை மூண்டது. ''இதை மாமாவிடம் மெல்ல விட்டுப் பாரேன்'' என்றேன் ஹரீசனோடு. வலை யக் கட்டுவதில் அவனுக்கு யாரும் இணையே இல்லை. அவனுக்கு எங்கேயும் நல்ல பேர். அவன் அகப்பட்டுவிட்டால் அவனை விடவே மாட்டார் மாமா. என்னுடைய விவாகத்தைப்பற்றி வார்த்தை வந்தது. பெண்ணைக் காட்டிலும் பெண்ணின் தகப்பனாரே அவருக்கு முக்கியம். ஒரு காலத்தில் அவர்கள் வீட்டில் திருமகள் தாண்டவம் ஆடினாளாம்; இப்பொழுது அவ்வளவு இல்லையாம். தம் ஊரில் பழைய வமிச கௌரவத்துடன் வாழ முடியாதெனக் கண்டு அவர் மேற்குப் பிரதேசத்தில் வீடுவாசல் அமைத்துக்கொண்டு எளிய வாழ்க்கையையே நடத்துகிறாராம். ஒரு பெண்ணைத் தவிர வேறே பிள்ளை குட்டி இல்லையாம். அதனால் மீதியுள்ள சொத்துச் சட்டெனக் கரைவதற்கு ஏது இல்லை.

எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. பெண்ணுக்குப் பதினைந்தாவது பிராயமென்று கேட்டவுடன் மாமாவுக்குச் சப்பிட்டுவிட்டது. வமிசத்தில் ஏதாவது தோஷம் இருக்குமோ? அதுவும் இல்லை. தேடிப் பார்த்தும் தகுந்த வரன் கிடைக்கவில்லையாம். இப்போது கல்யாணச் சந்தையில் பிள்ளைகள் கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறது; அதற்குமேல் வரதட்சிணை; இவற்றை யெல்லாம் உத்தேசித்துப் பெண்ணின் தகப்பனார் கல்யாணத்தை ஆறப் போட்டுவிட்டார். ஆனால் பெண்ணின் வயசு நில்லென்றால் நிற்குமா?

எதுவானால் என்ன? ஹரீசன் பேச்சுப் பேசிக் காரியத்தைச் சாதிப்பதில் கெட்டிக்காரன். மாமாவை வழிக்குக் கொண்டு வந்துவிட்டான். விவாகத்தின் பூர்வாங்கங்கள் யாவும் தடையின்றி நடந்தேறின. கல்கத்தாவைத் தவிர உலகத்திலுள்ள மற்ற எல்லா இடமும் அந்தமான் தீவைச் சேர்ந்தவை யென்பது மாமாவின் எண்ணம். வாழ்வில் ஒரு தடவை ஏதோ காரியமாகக் கோன்னகர் வரை அவர் போயிருந்தார். மாமா மட்டும் மனுவாய் இருந்திருந்தால் ஹாவ்ரா பாலத்தைக் கடப்பதே சாத்திரத்துக்கு விரோதமென்று

எழுதிவிட்டிருப்பார். என் கண்ணுலேயே பெண்ணைப் பார்த்து விட்டு வரவேண்டுமென்று எனக்கு ஆவல். அதை வெளியிட எனக்குத் தைரியம் இல்லை. பெண்ணைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற சம்பிரதாயத்துக்காகப் பினு அண்ணுவை அனுப்பினர்கள். அவனுடைய திறமையிலும், அவன் சொல்லிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. பினு அண்ணு திரும்பி வந்ததும், ''சுமாராக இருக்குமென்று நினைத்தேன். பத்தரை மாற்றுத் தங்கந்தான்!'' என்றான். பினு அண்ணு எதையும் மிகைப்படுத்திக் கூறவே மாட்டான். ஒன்றை நாம், 'முதல் தரம்' என்றால் அவன், 'என்னவோ இருக்கிறது ஒரு மாதிரியாக' என்பான். அவனே இப்படிச் சொல்லும்போது முடி போடும் பிரம்மாவுக்கும், மயிலை எழுப்பும் மாரவேளுக்கும் இடையே முரண் ஒன்றும் இராமல் காரியம் முடிவது என் அதிருஷ்டமென்றே கருதினேன்.

விவாக சுபமுகூர்த்தத்திற்குப் பெண் வீட்டாரே கல்கத்தாவுக்கு வந்தார்களென்று கூற வேண்டியதில்லை. பெண்ணின் தகப்பனரான சம்புநாத பாபு, ஹரீசனின் வார்த்தையை நம்பினரென்பதற்கு அத்தாட்சியாக, அவர் விவாகத்திற்குச் சில தினங்களுக்கு முன்பு என்னை நேரே வந்து பார்த்துவிட்டுத் திருப்தியுடன் சென்றார். கிட்டத்தட்ட அவருக்கு வயது நாற்பது இருக்கும்; தலைமயிர் நரைக்கவில்லை. மீசையில் மட்டும் நரை தென்பட்டது. கண்ணுக்கு நன்றாக இருந்தார். ஒரு கூட்டத்தின் நடுவில் பார்த்தால் அவருடைய கம்பீரமான தோற்றம் தனியே எடுப்பாகத் தெரியும். அவருக்கு என்னைப் பிடித்திருக்குமென்று நம்புகிறேன். ஆயினும் அதை அறிவதுதான் சற்றுக் கடினம். ஏனென்றால், அவர் வாயே திறவாத மனிதர். அவர் சொல்லும் இரண்டொரு வார்த்தை யைக்கூட அழுத்திச் சொல்வதில்லை. ஆனால் மாமாவின் வாயில் வளவளவென்று பேச்சுப் பொரிந்துகொண்டிருந்தது. பணத்திலாகட்டும், கௌரவத்திலாகட்டும், இந்தப் பெரிய நகரில் தமக்கு நிகரானவர் எவரும் இல்லை என்பதைச் சம்பந்தி வீட்டாருக்கு நினைவுறுத்திக்கொண்டே யிருந்தார். சம்புநாத பாபு அந்தப் பேச்சில் கலந்துகொள்ளவே இல்லை. ''உம்'' என்றுகூட எப்போதாவது மறந்து போயும் சொல்லவில்லை. மாமா பேசச் சளைக்கவே இல்லை. சம்புநாத பாபு கப்சிப்பென்று இருப்பதைக் கவனித்து, உணர்ச்சி இல்லாத ஆளாக இருக்கிறானே என்று மாமா எண்ணினார். பெண்ணைக் கொடுப்பவர்களிடத்தில் எந்தக் குறை இருந்தாலும் பாதக மில்லை; உணர்ச்சியோடு இருப்பதுதான் பெருங்குற்றமாகும். அது இராது போகவே மாமாவுக்கு மனத்துள் மகிழ்ச்சியே.

சம்புநாத பாபு எழுந்து போகும்போது, மாமா சுருக்கமாய் மாடியில் இருந்தபடியே அவருக்கு விடை கொடுத்தாரே தவிர வாசல் வரையில் வந்து வழியனுப்பவே இல்லை.

வரதட்சிணை விஷயம் இரு தரத்தாருக்கும் முரண்பாடு இல்லாமல் இனிது நிறைவேறியது. இம்மாதிரி விஷயங்களில் மாமா தம் சாமர்த்தியத்தைத் தாமே மெச்சிக்கொள்வது வழக்கம். அவர் பேசினால் எதிரில் பேசுபவன் முன்னுக்கேறச் சிறிதுகூட இடம் இராது. பணம் எவ்வளவென்று உறுதியாகி விட்டது. அதற்குமேல் பெண்ணுக்கு என்ன என்ன நகைகள் போடுவார்கள், எத்தனை சவரனில் வளையல்கள், வெள்ளிப் பாத்திரங்கள் எவ்வளவு ரூபாய் எடையில் - இந்தக் கணக்கு வழக்கெல்லாம் தீர்ந்தனவோ இல்லையோ எனக்குத் தெரியாது. இவை விவாகத்தின் முக்கிய அம்சங்கள் என்பதைமட்டும் அறிவேன். மாமா ஒன்றையும் விடமாட்டார்; அவர் மிகவும் பக்காப் பேர்வழி என்று எங்கள் குடும்பத்தார் புகழ்ந்தனர். எங்களுக்கு அளவற்ற பொருள்கள் இருந்தாலும், சம்பந்திக்கு மேலும் செய்வதற்குச் சக்தியில்லையென்று தெரிந்தும் கடைசி வரையில் வாட்டி எடுத்துவிடுவார். பிடித்தால் குரங்குப் பிடிதான்!

எனக்குப் 'பச்சை பூசுதல்'* தடபுடலாய் நடத்தினர். அவர் எடுத்த சீரை மதிப்பிட முடியாது; வரிசை எடுக்க ஆட்களைக் கணக்கிடவே ஓர் ஆளைப் போடவேண்டும். ''சம்பந்தி வீட்டார் இதையெல்லாம் பார்த்து வெட்கிப் போகவேண்டியே செய்தோம்'' என்று சொல்லும்போது அம்மாவும் மாமாவுடன் கலந்துகொண்டு நகைத்தாள்.

பாண்டு வாத்தியம், மேளம் இவற்றின் ஆரவாரமும் ஜனசந்தடியும் சேர்ந்து மதம்பிடித்த யானைக் கூட்டம் தாமரைப்பூ நிரம்பிய தடாகத்தை அலைத்துக் குழப்புவதுபோல் இருந்தது. இந்தத் தடபுடல்கள் புடைசூழ விவாக விடுதிக்கு விஜயம் செய்தேன். மோதிரங்கள், மாலைகள், ஜரிகை ஜாலர்கள் இவற்றுடன் நடந்து செல்லும் என் சரீரம் ஒரு நகைக் கடையாகவே காட்சி அளித்திருக்கும். மாப்பிள்ளை யாக வரப் போகிறவன் எவ்வளவு தாங்குவான் என்பதைச் சம்பந்திகளுக்கு நிரூபிக்கவா இந்தக் கூத்து?

கல்யாண வீட்டில் நுழைந்தவுடன் மாமாவின் முகம் வாட்டமுற்றது. பிள்ளை வீட்டார் எல்லோரும் அமருவதற்குப் போதுமான வசதி இல்லை. அதற்குமேல், ஏற்பாடெல்லாம் நடுத்தரமாகத்தான் இருந்தன. சம்புநாத பாபு சம்பந்திகளை

---

* காயே ஹலுத் - அம்மான் பொங்கல் போன்றது.

நன்றுக வரவேற்கவில்லையாம்! அவர் வாயைத் திறக்கவே இல்லை. கச்சை இழுத்துக் கட்டிக்கொண்டு, கத்திக் கத்திக் குரல் கம்மிப்போய், நடுத்தலை வழுக்கையாகி, கரியைவிடக் கறுப்பாய், பிரம்மாண்டமான தேகமுடைய அவருடைய நண்பர் கைகுவித்து வணங்கிச் சிரித்த முகத்துடன் விநயமாக, மேளக்காரன் முதல் சம்பந்தி வரையில் எல்லாருக்கும் மரியாதை செய்து உபசரிக்காமல் இருந்திருந்தால், தொடக்கத்திலேயே எல்லாம் விரசமாக முடிந்திருக்கும்.

மணப்பந்தலில் நான் உட்கார்ந்த சிறிது நேரத்திற் கெல்லாம் மாமா சம்புநாத பாபுவைத் தனியாக அழைத்து என்னவோ பேசினார். சம்புநாத பாபு என்னிடம் வந்து, ''அப்பா, இந்தப் பக்கம் வர முடியுமா?'' என்றார்.

விஷயம் இதுதான்: உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது லட்சியம் இராமற் போகாது. மாமாவின் ஒரே லட்சியம், எந்த விஷயத்திலும் ஏமாந்து போகாமல் இருப்பது. சம்பந்தி, பொன்னால் ஆன நகை என்று சொல்லிக் கில்டு நகையைப் போட்டிருந்தால் என்ன செய்வது? விவாக முடிச்சு ஏறிவிட்டால், அப்புறம் சண்டை போடுவதில் பயனில்லை. இதற்காகவே எங்களுக்குத் தெரிந்த நகை வியாபாரி ஒருவரை அழைத்து வந்திருந்தார். அடுத்த அறையில் மாமாவும் அந்த நகை வியாபாரியும் தராசு, உரைகல் யாவற்றையும் சித்தமாக வைத்துக்கொண் டிருப்பதைக் கவனித்தேன்.

சம்புநாத பாபு என்னை நோக்கி, ''உன் மாமா சொல்லுகிறார்: விவாகம் ஆரம்பிக்கு முன்பே நகைகளை யெல்லாம் காட்ட வேண்டுமாம். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றார்.

நான் என்ன சொல்லுவது? தலை குனிந்துகொண்டேன்.

''அவனைக் கேட்பானேன்? நான் சொல்லுகிறேன்'' என்றார் மாமா.

சம்புநாத பாபு என் பக்கமாகத் திரும்பி, ''அவர் சொல்லுகிறபடியே நடக்கவேண்டுமா? நீ சொல்லவேண்டியது ஒன்றும் இல்லையா?'' என்றார்.

எனக்கு இந்த விஷயத்தில் ஓர் அதிகாரமும் இல்லையென் பதைக் காட்டத் தலையை அசைத்தேன்.

''சரி, சற்று இருங்கள். குழந்தையின் உடம்பிலிருந்து நகைநட்டுக்களைக் கழற்றிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு அவர் உள்ளே சென்றார்.

மாமா என்னைப் பார்த்து, ''அநுபா! இங்கே நீ இருக்க வேண்டியதில்லை. பந்தலில் போய் உட்கார்'' என்றார்.

அப்போது சம்புநாத பாபு, ''வேண்டாம், இங்கேயே இரு, அப்பா'' என்றார்.

பெரிய துவாலை முடிச்சிலிருந்து நகைகளை ஜமுக்காளத்தின்மீது ஒவ்வொன்றாக எடுத்து வைத்தார். எல்லாம் பழைய மோஸ்தர் நகைகள்; தற்கால நாகரிக வேலைப்பாடு உள்ளவை அல்ல. எவ்வளவு தடிமனோ அவ்வளவு பளுவாக இருந்தன.

நகைப் பரீட்சகர் ஒவ்வொன்றையும் எடுத்து எடை போட்டு மதிப்பிட்டார். ''அரக்குப் பொடி, மட்டப்பொன் இவற்றின் கலப்பே இல்லை. அசல் தங்கமென்பதில் கொஞ்சங் கூடச் சந்தேகமே இல்லை'' என்று சொல்லிக்கொண்டு மகர முகம் வைத்த ஒரு கெட்டிக் கொலுசை மாதிரிக்கு நசுக்கிக் காண்பித்தார்.

மாமா தம் நோட்டுப் புத்தகங்களில் நகையின் வகைகளையும் அவற்றின் எடையையும் குறித்துக்கொண்டார். பின்னால் ஏதாவது கோளாறு நடந்தால் சரி பார்க்க இது மிகவும் உதவியாக இருக்கும் அல்லவா? கணக்குப் போட்டதில் பெண் வீட்டார் சொன்னதற்கு அதிகப்படியாக நகைகளைப் போட்டிருந்தார்கள்.

மாமா வைரக் கடுக்கனை எடுத்து நகை வியாபாரியிடம் கொடுத்து, ''இதையும் பார். 'இமிடேஷன்' ஏதாவது....'' என்று இழுத்தார்.

பூதக் கண்ணுடியின் மூலம் பார்த்துவிட்டுப் பரீட்சகர், ''சுவாமி, இதற்கென்ன சொட்டை! சீமைச் சரக்கு அல்லவா?'' என்றார்.

மாமாவுக்கு எல்லாம் திருப்தி யாகிவிட்டது. என்னைப் பார்த்து, ''போயேண்டா பந்தலுக்கு'' என்றதும், ''முகூர்த்தத்தை ஆரம்பிக்கலாமே, சம்பந்திவாள்'' என்றார் சம்புநாத பாபுவை நோக்கி.

''வேண்டாம், முதலில் சாப்பாடு ஆகட்டும். இலை போட்டிருக்கிறது'' என்றார் சம்புநாத பாபு.

''சாப்பாட்டிற்கு இப்போது என்ன அவசரம்? முகூர்த்தம் நடக்கவேண்டாமோ?'' என்றார் மாமா.

''அதற்கென்ன அவசரம்? வாருங்கள் போகலாம்'' என்றார் சம்புநாத பாபு.

வெளிக்கு ஒன்றும் அறியாதவரைப்போல் தோன்றினாலும், அவர் உள்ளழுத்தம் உடையவர் என்பது அப்போதுதான் புரிந்தது. எழுந்திருக்காது வேறு என்ன செய்வது? பிள்ளை வீட்டாருக்கெல்லாம் உபசாரத்துடனும் போஜனம் ஆயிற்று. எல்லோரும் சாப்பிட்ட பிறகு சம்புநாத பாபு என்னையும் ஓர் இலையில் உட்கார வைத்தார். மாமா அதைப் பார்த்து, ''என்ன, முகூர்த்தம் இன்னும் நடக்கவில்லையே;

விரதத்தோடு இருப்பவனுயிற்றே; அவன் எப்படிச் சாப்பிடுவான்?'' என்றூர்.

மாமாவின் சொல்லுக்குக் குறுக்கே நடப்பது என்னவோ என்னுல் முடியாத காரியம். நான் சாப்பிடவில்லை.

அப்போது சம்புநாத பாபு மாமாவிடம், ''சுவாமி, உங்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுத்துவிட்டேன். நாங்கள் பணம் படைத்தவர்கள் அல்ல. உங்களுக்கு ஏற்றபடி மரியாதை செய்யச் சக்தி அற்றவன் நான். மன்னிக்க வேண்டும். நாழிகையாகிவிட்டது. இன்னும் உங்களுக் கெல்லாம் கஷ்டம் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. நமஸ்காரம். இப்போது—'' என்றூர் நிதானமாகவே.

''நாங்களெல்லோரும் தயாராகத்தானே இருக்கிறோம்? .....ஆரம்பிக்கலாமே'' என்றூர் மாமா.

''—ஆனுல் போய் வண்டி ஏற்பாடு பண்ணிவிட்டு வருகிறேன்'' என்றூர் சம்புநாத பாபு.

''தமாஷ் பண்ணுகிறீர்களா என்ன?'' என்றூர் மாமா; அவருக்குச் சிறிது சிறிதாகக் கோபம் ஏறியது.

''இதுவரையில் தாங்களே தமாஷ் பண்ணினீர்கள்'' என்றூர் சம்புநாத பாபு.

மாமாவின் முகம் பெரிதாகி விட்டது; வாயடைத்து நின்றூர்.

''சொந்தப் பெண்ணுக்குப் போட்ட நகையில் சூது இருக்குமோ என்று சந்தேகிக்கும் ஒரு குடும்பத்தாருக்கு என் ஒரே குழந்தையைப் பறிகொடுக்க நான் தயாராக இல்லை, சுவாமி'' என்றூர் சம்புநாத பாபு.

அதற்குமேல் அங்கே என்ன நடந்ததென்பதை உரைக்க எனக்குப் பிடிக்கவில்லை. லஸ்தர் குளோபுகள், வாழை மரம், பந்தற் கால்கள் யாவும் எகிறின. தட்சன் வேள்வியில் மூண்ட அமர்க்களத்தைப் பிள்ளை வீட்டார் அங்கே நடத்திவிட்டு வெளியே வந்தனர். நான் தனியாக வீடு திரும்பும்போது மேளதாளம் ஒன்றுமே இசைக்கவில்லை. தீவட்டி விளக் கெல்லாம் ஆகாயத்தில் மினுமினுக்கும் நட்சத்திரங்களை ஏளனம் செய்துவிட்டு, இருக்கிற இடம் தெரியாமல் அணைந்து இருளில் மறைந்தன.

* * * *

வீட்டில் எல்லோரும் கொதித்துக்கொண் டிருந்தார்கள். ''பெண்ணைப் பெற்றவனுக்கா இவ்வளவு திமிர்? கலிகாலம் அல்லவா? அவன் பெண்ணை வேறு இடத்தில் எப்படிக் கட்டிக் கொடுக்கிறானே பார்க்கலாம்'' என்றனர் யாவரும். பெண்ணுக்குக் கல்யாணமாகாது போனுல், சனி விட்ட

தென்று இருக்கும் மனிதனுக்கு இந்த மிரட்டல் எம் மாத்திரம்?

இந்த வங்காள தேசமுழுவதும் நான் ஒருவனே விவாக தினத்தன்று பெண்ணைப் பெற்றவரால் தள்ளப்பட்டவன். மேளங்கள் கொட்டி மணக்கோலம் பூண்டும் எனக்கு நேர்ந்த இந்த அவமானத்திற்குக் காரணம் ஏதாவது கெட்ட கிரகத் தின் சேஷ்டையாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித் தார்கள்.

மானநஷ்டத்திற்குப் போவதாக மாமா எகிறிக் குதிக்கத் தொடங்கினர். ஆனல் அவர் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டதுதான் மிச்சம்.

என் மனத்துள் ஏமாற்றமும் அவமானமும் உண்டாயின. கலங்கிய இந்தச் சிந்தனையின் ஓட்டத்திற்குப் பக்கத்தில் மற்றொன்று தெளிந்து சென்றுகொண்டிருந்தது. என் அந்தக் கரணம், நான் கண்ணுல் பார்த்தறியாத அவளையே நாடியது. இன்றளவும் என்னுல் அவளை என்னிடம் அழைத்துக்கொள்ள முடியவில்லை.

தூணின் மறைவில் நின்றுகொண் டிருப்பாள் அவள். பிரகாசமான நெற்றியில் அழகான குங்குமப் பொட்டு; உடலில் அருணவர்ணமான கூறைப் புடைவை; நாணத்தினுல் சிவந்த முகம். அவள் இதயத்தில் என்ன வேதனை உண்டாயிற்றோ, யார் அறிவார்? என் மானச லோகத்தில் உலவும் அந்தக் கற்பகக் கொடி, தன் பூவின் பொலிவை எனக்கு அளித்துவிட்டுத் தரை யில் புரண்டு கிடந்தது. அதன் மணம் இன்னும் வீசுகிறது; அதன் தளிரின் மெல்லொலி இன்னும் என் செவியில் ஒலிக் கிறது. இந்த இன்பக் கனவிலிருந்து ஓர் அடி முன் வைத்தால் உண்மை எதிரே நிற்கிறது. அந்த ஆனந்தவல்லி என்னிட மிருந்து எவ்வளவோ தொலைவில் போய்விட்டாள்!

ஒவ்வொரு நாளும் சாயந்தரம், பினு அண்ணுவிடம் சென்று அவனை முடுக்கிக்கொண்டே இருந்தேன். பினு அண்ணுவின் வர்ணனைகள் யாவும் அளவுக்குமேல் போகாத தால் அவை நெருப்புப்பொறிகளைப்போல் என் உள்ளத்தைப் பற்ற வைத்துவிட்டன. பெண் ஆச்சரியமான அழகுடைய வளென்று சொல்லக் கேட்டிருந்தேனே தவிர, அவளை நேரிலா வது, படத்தின் மூலமாகவாவது நான் கண்டதே இல்லை. எனக்கு எல்லாம் மங்கலாக இருந்தன. புறத்தில் அவளைக் காண்பது அரிது; அகத்துள் அவளைப் போல் பாவித்துக் கொள்ள முடியவில்லை. இந்தத் திண்டாட்டத்தில் சிக்கி என் மனம் எந்த நிலைக்கும் வராமல் பேய்போல் அலை யத் தொடங்கியது.

என்னுடைய போட்டோவை அந்தப் பெண் பார்த்தா ளென்ற சமாசாரம் ஹரீசன் மூலமாகத் தெரியவந்தது. அவ ளுக்கு என்னைப் பிடித்துத்தான் இருக்க வேண்டும். என் னுடைய படத்தை அவள் மறைவாகத் தன் பெட்டியில் வைத் திருப்பாளென்று என் அசட்டுப் புத்திக்குத் தோற்றும். யாரும் இராத சமயமாகப் பார்த்துத் தனிமையில் அவள் அதை எடுத்துப் பார்ப்பாள். அவள் குனியும்போது அவளுடைய அலைக் கூந்தல் கொத்தாக அதன்மேல் படியும். யாரோ வரும் ஓசை கேட்கவே பரபரவென்று மணங் கமழும் தன் மேலாடையில் அதை மூடிக்கொள்வாள்.

என் எண்ணங்களுக்கு ஒரு வரம்பில்லை. நாட்கள் சென் றன. ஓர் ஆண்டு ஆயிற்று. மீண்டும் என்னிடம் விவாகப் பேச்சை எடுக்க மாமாவுக்கு மூஞ்சியே இல்லை. அம்மா மட்டும், ஊர் வம்பளப்பு ஓய்ந்ததும் இதைப்பற்றிப் பேச்சு எடுக்கலாம் என்றிருந்தாள்.

இந்தப் பக்கம் எனக்குக் கேள்வி என்னவென்றால், நல்ல இடம் வந்தபோது, பெண் தனக்கு விவாகமே வேண் டியதில்லை என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டா ளாம்! இந்தச் செய்தியைக் கேட்டதும் என் மனம் துள்ளிக் குதித்தது. மனக்கண்முன் பார்த்தேன் - அவள் உணவை வெறுத்துவிட்டாள். கூந்தலை வாரிப் பின்னிக்கொள்வதில்லை. 'ஏன் இப்படி இவள் நாளுக்கு நாள் இளைத்துப் போகிறாள்?' என்று அவளுடைய தகப்பனார் விசாரப்படுகிறார். அவர் பார்க்கும்போதெல்லாம் அவள் கண்களில் நீர் துளும்புகிறது. 'உன் மனசில் என்ன வேதனை, அம்மா?' என்று அவர் வினவும் போது, அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'ஒன்றும் இல்லையே' என்கிறாள். பாவம்! ஒரே பெண் அவருக்கு; மிகவும் செல்வமாக வளர்த்தார். மழைத்துளி காணாது வதங்கும் பூவின் அரும்புபோல அவள் இவ்வாறு உருக் குலைவதைப் பார்த்தால் அவர் மனம் தாளுமா? அவர் மானத்தையும் இலட்சியம் செய்யாமல் எங்களிடம் ஓடி வருகிறார். அதற்குமேல்—? அதற்குமேல் கலங்கி ஓடும் சித்தத்தில் ஒரு கருநாகம் சீறுகிறது. அவர் வருகிறார்; அவர் வந்து என்னைப் பார்த்து, 'இது அழகா? மங்களகரமாக வந்து இப்படி மணவறையை அலங்கோலம் செய்துவிட்டுப் போவது தர்மமா?' என்கிறார். இது என் கற்பனையின் வெண் மையான ஓட்டம். இப்போது அது அன்னத்தின் உருவு கொண்டு என்னிடம் வந்து, 'ஒரு சமயம் தமயந்தியைப் பூங்காவில் சந்தித்தேன். அவ்வாறே என்னைத் தூது அனுப்பு; பிரிவாற்றாது சாம்பும் அந்தப் பெண்ணரசியிடம் நற்

செய்தியை விடுக்கிறேன்' என்றது. அதற்குப் பின்? துயர் இருள் விலகியது; புது மழை பெய்தது; வாடிய அப் பெண் மலர் முகம் தூக்கியது. அவளுடைய இதயத்தைக் கொள்ளை கொண்டவன் ஒருவனே....பின்னர் என்ன? என் மனச் சித்திரங்கள் மறைகின்றன.

ஆனால் நான் சொல்லவேண்டியது இதோடு முடிந்து விடவில்லை. எவ்விடத்தில் அது முடிவுறுமல் நிற்கிறதோ, அவ்விடத்தில் நிகழ்ந்ததைக் கூறியதும் இந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி போட்டுவிடுகிறேன்.

* * * *

தீர்த்த யாத்திரை செய்ய அம்மா கிளம்பினாள். அவளுக்கு நான் துணையாகச் செல்லவேண்டியிருந்தது. ரெயில் வண்டியில் தூங்கிக்கொண்டிருந்தேன். வண்டி குலுங்கிக் குலுங்கிச் செல்லுகையில் தலைகால் இராத விசித்திரமான கனவுகள் வந்து போயின. திடீரென்று ஒரு ஸ்டேஷனில் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தேன். தூக்க மயக்கத்தில் எல்லாம், உலகமே ஒளியும் நிழலும் கலந்த கனவுபோல் தோற்றியது. வானத்தில் சிரிக்கும் மீன்களே எனக்கு நித்திய அறிமுகமாக இருந்தன. ஸ்டேஷனில் எரியும் விளக்குகள், பிளாட்பாரத்தில் செல்வோர் எல்லாம் சேர்ந்து வெகு தூரத்தில் நான் கண்டிராத ஓர் உலகில் சஞ்சரிப்பதுபோல் மருள் ஏற்பட்டது. அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். வண்டியில் எரியும் விளக்கு, பச்சை நிறத் திரை இடப்பட்டது போலவும் சாமான், படுக்கை பெட்டிகள் யாவும் தலைகீழாக இருப்பது போலவும் தோற்றின. தூக்கம் தெளியும் சமயம் என்முன் தோன்றிய ஓர் அற்புத உலகின் காட்சிகளாகும் இவை யாவும்.

அந்த விந்தை உலகில் ஓர் அதிசயமான இரவிலே இனிமையான குரல் ஒன்று, 'சீக்கிரம் வாயேன். அந்த வண்டியில் இடம் இருக்கிறது' என்று சொல்வது போல் கேட்டது.

மனிதக் குரலா அல்லது தேவக் குரலா என்று ஐயம் பிறந்தது. வங்க தேசத்துப் பெண்ணின் குரலில் வங்க மொழியானது அவ்வளவு மதுரமாகத் தொனித்ததை, எனக்கு ஏற்பட்டதுபோன்ற இடம், பொருள், ஏவலில் கேட்டிருப்பீர்களானால் நீங்களுந்தான் திகைத்துப் போயிருப்பீர்கள்.

நெடுங்காலம் வரையில் குரலோசை ஒன்றுதான் அழியாமல் மனத்துள் பதிந்துவிடுகிறது. ஆனால் மனிதனிடத்தில் அந்தரங்கமானதும், வர்ணிக்க முடியாததுமான ஒரு தன்மையை எதிரொலிக்கச் செய்வது குரல் இசையே.

விரைவாகச் சன்னலைத் திறந்து வெளியே முகத்தை நீட்டிப் பார்த்தபோது யாரையுமே காணவில்லை. பிளாட்பாரத்தின் இருட்டில் நிற்கும் 'கார்டு' பச்சை விளக்கைக் காட்டினான். வண்டியும் நகர்ந்தது. சன்னலண்டையே கிடந்தேன். என் கண் எந்த உருவத்தையும் காணவில்லை. ஆனால் உள்ளத்துள் மட்டும் வேறொர் இதயத்தின் உருவைக் கண்டேன். தாரகைகள் இதறிய கங்குலைப்போல் என் உள்ளத்தில் ஓர் உருவம் எழுந்தது; ஆனால் அதைப் பற்ற என்னால் முடியவில்லை. இன்னிசைக் குரலே! நான் கேட்டறியாத கண்டத் துவனியே, ஒரே கணத்தில் என் அந்தரங்கத்தில் குடிகொண்டு விட்டாயே! பரிபூர்ணமாய் என்னைக் கவர்ந்த வித்தை என்னே! நில்லாது ஓடும் காலப் பெருக்கில் முளைத்த அழகுள்ள மலரே! காலத்தின் அலை உன் இதழை அசைக்க வில்லையா? உன் மென்மை சற்றும் அதனால் நலிவுற வில்லையா?

ரெயில் வண்டி பல்வேறு ஜதிகளில் தாளங்களைப் போட்டுக்கொண்டே சென்றது. என் மனம் அதற்குத் தகுந்தாற்போல் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தது. அதன் பல்லவிதான், 'இடம் இருக்கிறது' என்பது. 'அவள் யாரோ', 'அவள் யாரோ' என்பது வெறும் பனித்திரை. அது ஒரு மாயை. அது விலகினால், யாரென்பது அறிமுகம் ஆகிவிடும். அமிர்தமயமான குரலே! என் இதயத்தில் திகழும் உருவற்ற அழகே! என்றென்றும் எனக்கு அறிமுகமாகாது இருப்பாயா? 'இடம் இருக்கிறது; இடம் இருக்கிறது; விரைந்து வா' என்று அழைக்கிறாயா? வந்துவிட்டேனே, இதோ தாமதம் செய்யா மல்!

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவே இல்லை. ஒவ்வொரு ஸ்டேஷன் வரும்போதும் தலையை வெளியே விட்டுக் கவனித் தேன். இராத்திரியே ஏதாவது ஸ்டேஷனில் அவள் இறங்கு வதாக இருந்தால் என்ன செய்வதென்று கதி கலங்கினேன்.

மறு நாள் ஒரு பெரிய ஜங்ஷனில் வண்டி மாற வேண்டி யிருந்தது. எங்களுக்கு முதல் வகுப்பு டிக்கட்டு இருந்தது. வேறு வண்டியில் இடம் எளிதாகக் கிடைக்குமென்றே நம்பியிருந்தோம். இறங்கிப் பார்த்தபோது, பிளாட்பாரத் தில் மலையளவு 'ஸூட் கேஸ்'களை வைத்துக்கொண்டு வெள் ளைத் துரையின் பரிவாரம் ஒன்று தயாராய்க் காத் திருந்தது. ஆசாமி யாரோ ராணுவ உத்தியோகஸ்தனும்; யாத்திரை செய்ய அந்த வண்டியில்தான் ஏறப் போகிறு னென்று தெரிந்தது. இரண்டு மூன்று நிமிடங்கள் கழித்து நாங்கள் செல்ல வேண்டிய வண்டித் தொடர் பிளாட்

பாரத்திற்கு வந்தது. அம்மாவை அழைத்துக்கொண்டு எந்த இடத்தில் ஏறிக்கொள்வதென்று இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் அலைந்தேன். முதல் வகுப்பைத் தன்னுடைய தாக்கிக்கொண்டான் அந்தச் சீமைத்துரை. எல்லா வண்டியிலும் கூட்டம் தாங்க முடியவில்லை. எதிலாவது ஏறித் தானே தொலையவேண்டுமென்று திரும்புகையில், இரண்டாம் வகுப்பிலிருந்து ஒரு பெண்மணி அம்மாவைப் பார்த்து, ''இப்படி வந்து ஏறிக்கொள்ளுங்களேன். இங்கே இடம் இருக்கிறது'' என்று கூப்பிட்டாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. கொஞ்சும் அதே இன்னிசைக் குரல்! 'இடம் இருக்கிறது' என்னும் அதே பாட்டின் அடி! தாமதம் செய்யாமல் அம்மாவுடன் அந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டேன். சாமான்களை எடுத்து வரக்கூட எனக்கு அவகாசமில்லை. என்னைப் போன்ற கையாலாகாதவன் உலகத்திலேயே அகப்பட மாட்டான். வண்டி புறப்பட்டுவிட்டது. அந்தப் பெண்மணி பரபரவென்று கூலியாளைக் கொண்டு என்னுடைய சாமான்களை உள்ளே இழுத்துப் போட்டாள். இந்த அவசரத்தில் என்னுடைய 'காமிரா'வை ஸ்டேஷனில் விட்டுவிட்டேன். அதைக்கூட நான் லட்சியம் செய்யவில்லை.

அதற்குமேல் என்ன செய்வதென்று தெரியவில்லை. என் மனத்துள் திகழும் ஓர் இன்பக் காட்சியை எங்கே தொடங்கி, எங்கே முடிப்பது? அதைச் சொற்களால் விவரிக்க எனக்கு இப்போது விருப்பமில்லை. கடைசியில் அவ்வினிய குரலை நேரில் கேட்டேன்; கண்டேன். அப்போதும் அவளை ஒரு குரலோசையாகவே பாவித்தேன். அம்மாவை உற்று நோக்கினேன். அவளுடைய கண்கள் இமைக்கவே இல்லை. பெண்மணிக்கு வயசு பதினாறு அல்லது பதினேழுதான் இருக்கும். ஆனால் இளமை அவளது மேனியில் அதிகமாகத் தன் ஆதிக்கியத்தைச் செலுத்தவில்லை. சகஜமான நடை, நிர்மலமான சுபாவம், பரிசுத்தமான அழகு. ஓர் இடத்திலாவது குறை தென்படவேண்டுமே; சிறிதளவும் இல்லை! நானே பார்த்தேன்; விவரித்துச் சொல்ல ஆகாது. அவள் அணிந்திருந்த புடைவையின் நிறம் இன்னதென்று சொல்ல அவ்வளவு ஆராய்ச்சி செய்யவில்லை நான். அவளைவிட உடையில் கண்ணைக் கவரக் கூடியதொன்றும் எனக்குப் புலப்படவில்லை. தன்னைச் சுற்றி உள்ளவற்றைக் காட்டிலும் அவள் ஒரு படி அதிகமே. துல்லிய சம்பக மலர், தன் நீண்ட காம்பில் தனி எழிலுடன் நிற்பதுபோல், அவளும் தன் இனத்தைக் கடந்து தனி அழகுடன் விளங்கினாள்.

அவளுடன் இரண்டு மூன்று சிறுமிகள் இருந்தனர். அவர்களுடன் அவள் உல்லாசமாகச் சிரித்து விளையாடியது இவ்வளவு அவ்வளவல்ல. குழந்தைகளுடன் பழகும்போது அவளுடைய உள்ளம் சிசுவினுடையதுபோல் மாறி விடுகிறது. படங்கள் அடங்கிய கதைப் புத்தகம் ஒன்று பக்கத்தில் இருந்தது. அதினின்று கதை சொல்லும்படி அச்சிறுமியர் அவளைப் பிய்த்தெடுத்தனர். அவர்கள் நூறு தடவைக்கு மேல் கேட்டிருந்த கதையாகத்தான் இருக்கவேண்டும் அது. ஆயினும், குழந்தைகளுக்கு ஏன் இவ்வளவு ஆவல் என்பதைப் புரிந்துகொண்டேன். அந்த அமிர்தம்போன்ற குரலில் வரும் சொற்கள் யாவும் அமுதமாகவே மாறின. அப்பெண்மணியின் உடலிலும், சொற்களிலும், பாவனையிலும் ஜீவன் ததும்பியது. அவள் வாயினின்று வரும் கதை அச்சிறுமிகளுக்கு வெறுங் கதையாக இல்லை; அவர்கள் இதயத்துள் பாயும் உணர்ச்சியின் அருவியாகவே இருந்தது. இந்தக் குரலிசையே அன்றொரு நாள் என்னுள் மகிழ்விரித்த கதிரொளியை மீண்டும் உயிர்ப்பித்தது. அடுத்த ஸ்டேஷனில் சிற்றுண்டி விற்பவனிடமிருந்து பலவிதப் பட்சணங்களை வாங்கிக் கூட வந்த குழந்தைகளுக்குக் கொடுத்துத் தானும் வேடிக்கையாகத் தின்றாள். என் சங்கோசம் என்னைத் தடுத்தது. இல்லாவிட்டால், நானும் கை நீட்டி மகிழ்ச்சியின் வடிவமான அவளிடமிருந்து தின்பண்டத்தை யாசித்திருப்பேன்.

பிடித்ததும் பிடிக்காததுமாக, இரு விதமாகச் செல்லும் மனத்தினளாய் அம்மா உட்கார்ந்து இவற்றையெல்லாம் கவனித்தாள். அந்த வண்டியில் நான் ஒருவனே ஆடவன். அவள் சற்றும் கூச்சங் கொள்ளாது பட்சணங்களை ஆவலுடன் தின்பதைப் பார்த்து அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு பெரிய பெண்ணுக்கு ஆடவர்கள் எதிரே மட்டு மரியாதை இல்லையே என்று நினைத்தாள் போலும்! அம்மா யாருடனும் சட்டெனப் பழக மாட்டாள்; ஒதுங்கி இருக்கவே விரும்புவாள். ஆனால், அந்தப் பெண்ணின் வசீகரம் அவளைத் தன்னையும் மீறிப் பேசத் தூண்டியது.

அதே சமயம் வண்டியும் பெரிய ஸ்டேஷன் ஒன்றில் வந்து நின்றது. அந்தச் சீமைத்துரையின் கூட்டாளியான மற்றொரு துரை வண்டியில் ஏறப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தான். எந்த வண்டியிலும் இடமே இல்லை. அவன் அடிக்கடி எங்கள் அறை எதிரேயே சுற்றிக்கொண்டிருந்தான். அம்மாவுக்குத் திகிலாக இருந்தது. எனக்கோ ஆத்திரம்.

வண்டி நகருவதற்குச் சிறிது நேரத்திற்குமுன் ரெயில்வே உத்தியோகஸ்தனான நம் நாட்டைச் சேர்ந்த ஒருவன், பெயர் எழுதிய இரண்டு சீட்டுக்களை எங்கள் வண்டியில் இரண்டிடத்தில் மாட்டிவிட்டு, ''இந்தப் பெட்டியில் உட்காருவதற்கு இரண்டு இடம் முன்னதாகவே துரைமார் இருவர் 'ரிஸர்வ்' பண்ணியிருக்கிறார்கள். நீங்கள் வேறு வண்டியில் இடம் தேடிக்கொள்ளுங்கள்'' என்றான். நான் வேறென்றும் கூற முடியாமல் இடத்தை விட்டு எழுந்திருந்தேன். அப்போது அப் பெண்மணி ஹிந்தியில், ''இவர்களை வண்டியைவிட்டு அப்புறப்படுத்தக் கூடாது'' என்றாள்.

அவன் ஒரே பிடிவாதமாக, ''போய்த்தான் ஆகவேண்டும்'' என்றான்.

ஆனால், யாரும் நகராதிருப்பதைப் பார்த்து, அவன் ஆங்கிலேயனான ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்து வந்தான். ஸ்டேஷன் மாஸ்டர் என்னைப் பார்த்து, ''தயை செய்து தாங்கள்—'' என்று ஆரம்பித்தான். நான், ''கூலி, கூலி'' என்று கூவினேன், சாமான்களை எடுத்துக்கொண்டு போவதற்காக. அப்போது, அந்தப் பெண்மணி கண்களில் தீப் பொறி பறக்க, ''நீங்கள் இதைவிட்டுப் போகவேண்டியது அநாவசியம். உட்காருங்கள்; என்ன நடக்கிறதோ பார்க்கலாம்'' என்றாள்.

இதைக் கூறியதும் அவள் வண்டியின் வாயிலை மறைத்துக்கொண்டு ஆங்கிலத்தில், ''இந்த வண்டி முன்பே 'ரிஸர்வ்' பண்ணப்பட்டிருக்கும் பேச்சுச் சுத்தப் பொய்'' என்றாள். உடனே இரு வெள்ளையரின் பெயர்கள் உள்ள சீட்டுக்களையும் பிய்த்துப் பிளாட்பாரத்தில் வீசி எறிந்தாள்.

இதற்குள் டவாலியுடன் ராணுவ உடை பூண்ட துரையும் வண்டியண்டை வந்தான். உள்ளே நுழையப் போகும்போது பெண்மணியின் ரௌத்திராகாரத்தைப் பார்த்து ஒதுங்கிப் போய் ஸ்டேஷன் மாஸ்டருடன் என்னவோ பேசினான். வண்டி புறப்படும் வேளை அதிக்கிரமித்தும், எங்களுடைய வண்டித் தொடரோடு வேறொரு பெட்டியை இணைத்த பிறகே வண்டி கூவென்று நகர்ந்தது. அந்தப் பெண்சிங்கம் பழைய கலகலப்புடன் பேச ஆரம்பித்துவிட்டாள். வெட்கத்தால் நான் என் மூஞ்சியை ஜன்னலுக்கு வெளியிலேயே நீட்டிக்கொண்டிருந்தேன்.

கான்புரில் வண்டி வந்து நின்றது. அப்பெண்மணி தன் சாமான்களைச் சரிவர எடுத்து வைத்துக்கொண்டாள். ஸ்டேஷனிலிருந்து ஒரு ஹிந்துஸ்தானிக்காரன் ஓடிவந்து சாமான்களைக் கீழே இறக்கி வைத்தான். அந்தப் பெண்ணோடு பேச அம்மா

ஆவல் கொண்டாள்; "உன் பெயர் என்ன, அம்மா?" என்று கேட்டாள்.

"என் பெயர் கல்யாணி" என்றாள் அவள். இதைச் செவியுற்றதும் அம்மாவும் நானும் திடுக்குற்றோம்.

"உன் அப்பா யார்?"

"அந்த ஊரில் ஒரு டாக்டர். அவர் பெயர் சம்புநாத சேன்."

அப்புறம் நாங்கள் வெவ்வேறு திசையாகப் பிரிந்தோம்.

பின்னுரை

மாமா கீறிய கோட்டை மீறி, அம்மாவின் கட்டளையை மீறி நான் கான்புருக்கு வந்தேன். கல்யாணியின் தகப்பனாரையும் சந்தித்தேன்; கல்யாணியையும் நேரில் கண்டேன். சம்புநாத பாபுவைக் கை கூப்பித் தலை வணங்கினேன். அவர் மனம் இளகியது. ஆனால் கல்யாணி, "விவாகம் வேண்டாம்" என்று சொல்லிவிட்டாள்.

"ஏன் அப்படி?" என்று வினவினேன்.

"மாதாவின் கட்டளை" என்றாள்.

இதென்ன சங்கடம்? அவளுக்குக்கூட என் மாமா வைப்போல் தடையாக யாராவது இருக்கிறார்களா என்ன?

'மாதா' என்பது 'மாத்ருபூமி' என்று அப்புறம் தெரிந்து கொண்டேன். விவாகப் பேச்சு முறிந்ததுமுதல் கல்யாணி பெண்பாலாரிடையே கல்வியைப் பரப்பும் மகத்தான தொண்டில் இறங்கிவிட்டாள்.

ஆனால் நான்மட்டும் நம்பிக்கையை விடவில்லை. அந்த இனிய குரல் இன்றளவும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்னை வீட்டினின்று வெளியேற்றி உலக அரங்கிற்கு அழைத்தது அந்தக் குரலின் இசையே! அன்றிரவு இருளினின்று எழுந்து என் செவியில் புகுந்த, 'இடம் இருக்கிறது' என்னும் சொல் எனக்குச் சலிப்பைத் தராத ஒரு பாட்டின் பல்லவியாக நீடூழி நிலவும். அப்போது வயசு எனக்கு இருபத்துமூன்று; இப்போதோ இருபத்தேழு ஆகிவிட்டது. ஆயினும், நான் நம்பிக்கையை இழக்கவில்லை. ஆனால் மாமாவை விட்டொழித்தேன். ஒரே பிள்ளையான படியால் என்னைத் துறக்க அம்மாவினால் முடியவில்லை.

கல்யாணம் செய்துகொள்ள எனக்கு ஆசை இருக்கிறதென்று நினைக்கிறீர்களா? அது ஒருகாலும் நடவாது. அன்றோர் இரவு முன்பின் அறியாததோர் மதுரமான குரலோசையைக் கேட்டதே போதுமென்று என் மனம் சொல்லுகிறது. எனக்கு 'இடம் இருக்கிறது'. இல்லாமற் போனால்?

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் சென்று மறைகிறது. அவளை எப்போதாவது கண்ணுரக் காண்கிறேன். அவளது இன் குரல் என் செவிக்கு இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது. சமயம் வாய்க்கும்போது அவள் இடும் ஏவலைச் செய்து வருகிறேன். என்னுள் ஒன்று, 'உனக்கு இடம் கிடைத்து விட்டதே' என்று எப்போதும் சொல்லிக்கொண்டே இருக் கிறது. 'நீ யாரோ? உன் பரிசயம் எனக்கு இன்னும் பூர்ண மாகவில்லை. ஆகவும் ஆகாது; உன்னிடம் வருவதற்கு இட மாவது கிடைத்ததே; அதுவே என் அதிருஷ்டம்!' என்று மனம் எண்ணுகிறது.

நல்ல வரன்

1

என்னுடைய தசாபுக்தியில் குருபலம் ஒரு நாளாவது வந்ததாகத் தெரியவில்லை; ஆனால் ஏரே சமயம் அந்தக் குருவின் பார்வை என் இதய கமலத்தின்மீது விழுந்தது. அப்பொது எனக்கு வயது பதினாறு. அப்புறம் என்ன? நல்ல தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டபின் தூக்கம் எங்கேயாவது பிடிக்குமா? என்னுடைய நிலையும் அந்த மாதிரியே ஆயிற்று. என் நண்பர்களுள் சிலர் இரண்டாந் தாரங்கூடக் கொண்டார்கள். ஏன் மூன்றுவதுங்கூடத்தான். அப்படி இருக்கையில் நான் மாத்திரம் பிரம்மசரிய வகுப்பில் கடைசிப் பையனாகச் சம்சார சூனியமாய் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

பதினாறு வயதில் நான் பிரவேசத் தேர்வில் தேறினேன். திருமணத்திற்கோ, அந்தத் தேர்விற்கோ வயதைப்பற்றி அக்கறை இல்லை. புத்தகங்களை நெட்டுருத் தள்ளும் வாடிக்கை இல்லை எனக்கு; மனைவியாதியோ, உடல் நோயோ ஒன்றும் என்னை வருத்தவில்லை. எலி எதைக் கண்டாலும் கடித்துத் தின்றுவிடும். நானும் அச்சடித்த புத்தகம் ஏதாவது கையில் சிக்கினால் ஓர் எழுத்து விடாமல் படித்துவிடுவேன். படிக்கத் தகுந்த புத்தகங்களைவிடப் படிக்கத் தகாத நூல்களே உலகத்தில் ஏராளம். நாம் வசிக்கும் இந்தப் பூவுலகு, நட்சத்திர லோகத்தில் துளியுண்டு. அதைவிட எத்தனையோ மடங்கு பிரம்மாண்டமான சூரிய மண்டலங்கள் இருக்கின்றன. அதுபோலவே பள்ளிப் படிப்புக்கு அவசியமான புத்தகங்கள் என்னிடம் கம்மி; படிப்புக்கு அனாவசியமானவைதாம் அதிகம். என்னுடைய சம்ஸ்கிருத ஆசிரியர் என் பிற்காலத்தைப்பற்றி மோசமாக நினைத்தபோதிலும் நான் தேர்வில் தேறிவிட்டேன்.

என் தகப்பனார் ஒரு டெபுடி மாஜிஸ்டிரேட். அந்தச் சமயம் நாங்கள் ஸாதக்ஷீராவிலோ, ஜாஹாநாபாதிலோ இருந்தோம். தொடக்கத்திலேயே உங்களுக்கு அறிவித்து விடுவது மேல் அல்லவா? என்னுடைய சரிதையில் இடம், பொருள், ஏவல் எதுவும் உண்மைக்கு ஒத்திருக்கும் என எதிர் பார்க்கவேண்டாம். சுவையைவிட விஷயத்தை அறிய விரும்பு

வோர் ஏமாற்றமே அடைவர். அப்பா ஏதோ வழக்கு விஷயமாக எங்கோ வெளியூருக்குப் போயிருந்தார். அம்மா என்னவோ ஒரு விரதம் மேற்கொண்டாள். காணிக்கையும் வடை பாயசமும் வாங்கிக்கொள்ள ஒரு பிராம்மணன் வேண்டியிருந்தது. இந்த மாதிரி பாரமார்த்திக விஷயங்களில் என் அன்னைக்கு உதவி புரிபவர் என்னுடைய சம்ஸ்கிருத ஆசிரியரே. இதற்காக அம்மா அவரிடம் மிகவும் சிரத்தை வைத்திருந்தாள். அப்பாவின் கொள்கையோ இதற்கு நேர் மாறானது. அன்று சாப்பிட்டானதும், காணிக்கையெல்லாம் உபாத்தியாயருக்கு வழங்கி ஆயிற்று. நோன்பு பலன் தராமல் போகவில்லை. விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லி விடுகிறேனே: நான் கல்லூரியில் சேர்வதற்காகக் கல்கத்தாவிற்குச் செல்லும் நாள் நெருங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் மைந்தனை விட்டுப் பிரியும் துயரத்தைப் போக்கிக் கொள்ள ஏதாவது வழி தேட வேண்டாமா? சின்னஞ்சிறு மாட்டுப்பெண் ஒருத்தி அம்மா பக்கத்திலேயே இருந்தால் அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கும் அல்லவா? பண்டிதரின் பெண் காசிசுவரி இதற்கு ஏற்றவளாயிருந்தாள். முதல் காரணம்; சின்னக் கன்னிகை. இரண்டாவது, நல்ல மாதிரி. இன்னொரு விஷயம்: எனக்கும் அவளுக்கும் துவாதசப் பொருத்தங்களும் சரியாக அமைந்திருந்தன. அது தவிர, ஓர் ஏழைப் பிராம்மணன் பெண்ணைக் கட்டிக் கொள்வது புண்ணியம் மிகுந்த காரியமாயிற்றே!

அம்மாவின் மனம் அலை பாய்ந்தது. பெண்ணைப் பார்க்கவேண்டுமே என்று சாடையாக அவள் சொன்னாளோ, இல்லையோ, பண்டிதர் உடனே, ''அதற்கென்ன நாளைக்கே வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்; நன்றாய்ப் பாருங்களேன்'' என்றார். சொன்னபடியே செய்தார். அம்மாவுக்கு ஏன் பிடிக்காது போகும்? பிடித்தம் ஒரு பக்கம் இருக்கட்டும். புண்ணியம் இருக்கிறதே. அதனாலேயே பெண்ணுக்கு மதிப்பு உயர்ந்தது. ''இவ்வளவு லட்சணம் வாய்த்தால் போதும். குழந்தைக்கு என்ன மூளி?'' என்று என் தாய் சொன்னதில் இந்த அர்த்தமே ஒலித்தது. அப்படிப் பெண் கண்ணுக்கு அழகாகத்தான் இல்லை. ஆனால் அம்மா திருப்தி அடைவதற்குக் காரணம் இருந்தது.

மெல்ல இந்தச் செய்தி என் காதுக்கு எட்டியது. 'ஐயோ, கடைசியில் இலக்கணப் புதிர்களை மடக்கி மடக்கிக் கேட்கும் அந்தப் பயங்கர மனிதனின் பெண்ணுக்கும் எனக்குமா முடி போடுகிறாள், கடவுளே! எந்த விதத்திலும் எங்க

ளுக்குப் பொருத்தமில்லையே!' இந்த வேதனையே என்னை வாட்டியது! கதைகளில் வருவதுபோல், வேற்றுமை உருவு, வினை எச்சம் யாவும் தம் இலக்கண வடிவைக் களைந்துவிட்டு லட்சணம் நிரம்பிய இளவரசியாக மாறுவதுதான் விந்தையிலும் விந்தை!

அம்மா, ஒரு நாள் என்னைத் தன் அறையினுள் அழைத்து, ''சனு! வாத்தியார் வீட்டிலிருந்து முந்திரிப் பருப்புப் பணியாரம் வந்திருக்கிறது. வா, தின்னு'' என்றாள். என் தாய்க்குத் தெரியும், என்னை வளையக்கட்டும் வழியெல்லாம். இந்தப் பணியார ஆசை காட்டுவதெல்லாம் வெறும் சாக்கு. அந்தச் சிறு பெண் காசிசுவரி, அம்மா மடிமீது உட்கார்ந்திருந்தாள். இப்பொழுது எனக்கு அவ்வளவு தெளிவாக ஞாபகம் இல்லை. சவரிக் குச்சு வைத்து அவளுடைய கூந்தலை முடித்திருந்தார்கள். உடம்பில் ஒரு வெல்வெட் ரவிக்கை இருந்ததாகக் கவனம். அதில் நீலமும் சிவப்பும் கலந்திருந்தன. ரவிக்கையின் கையில் 'லேஸ்' தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டது. எனக்கு நினைவு, பெண் மா நிறம். அடர்த்தியான கூட்டுப் புருவம். கண்களில் மருட்சியோ, அபூர்வமான பாவமோ ஒன்றுமே இல்லை. கூச்சம் இராமல் என்னை நேராக நோக்கினாள், அந்தக் கன்னிகை. முகத்தில் மற்ற அம்சங்கள் எந்த மாதிரியென்று வருணிப்பதற்குப் போதிய ஞாபகசக்தி எனக்கு இல்லை. ஒன்று கூறுவேன்: அந்தச் சமயம் பிரம்மா, தாம் நிருமித்த அந்த உருவத்திற்குத் தீர்மானமான கடைசல் பிடிக்கவில்லை என்றுதான். அவருக்கு வழுமூட்டும் வேலை பாக்கி இருந்தது. எப்படி இருந்தால் என்ன? மொத்தத்தில் பார்வைக்குப் பெண் அடக்கம் ஒடுக்கமாகத்தான் இருந்தாள்.

எனக்கு உள்ளுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது: 'சடைக்குச்சு மாட்டிக்கொண்டு, ரவிக்கை போட்டிருந்த பொம்மை எனக்குத்தானே சொந்தமாவாள்; நான் அல்லவோ அவள் கணவன், தெய்வம் எல்லாம்' நான் தலையை அசைத்து என் சம்மதத்தைத் தெரியப்படுத்த வேண்டியதுதான்; காரியம் முடிந்த மாதிரியே. இந்தச் சக்தியை இறைவன் ஆண்பிள்ளை ஒவ்வொருவருக்கும் அளித்துள்ளான். அம்மா எந்த மண்ணில் உருவான பெண் என்பதை நான் பிறகு உணராமல் இல்லை. அப்பாவுக்கு இந்த விரத உபவாசம், பட்டினி பாரணை என்றால் நஞ்சு. ஆனால் சாவித்திரி நோன்பைமட்டும் அவர் ஏளனமாகக் கருதுவதில்லை. அந்த நோன்பில் வழிபாடெல்லாம் யாரை முன்னிட்டு? இதை

நினைத்துக்கொள்வதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி. அம்மா அவரை மனப்பூர்வமாக நேசித்தாள். என் தந்தைக்குப் பிடிக்காத செய்திகள், அவருக்கு ஏதைக் கண்டால் எரிச்சல் வரும் என்பனவெல்லாம் அவளுக்கு மனப் பாடம். சாக்கிரதையாக நடந்துகொள்வாள். அவள் தம்க்கு அடங்கிய சரக்கு என்ற எண்ணத்தில் அவருக்கு அமோக திருப்தி; எப்படி வேண்டுமானலும் அவளை ஆட்டிவைக்க முடியு மென்ற ஆண்மையின் செருக்கு. விரதாதிகளில், தேவதை கள் திருப்தி அடைவது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் வீட்டிலுள்ள தெய்வம் கணவன். அவன் உத்தரவு கொடுத்தால்தானே மற்ற ஏற்பாடெல்லாம்? அந்த மண்ணில் உருவாகிய நான் எப்படி இருப்பேன்? அம்மா எவ்வளவு தூக்கி வைத்துப் பேசியபோதிலும், அந்தப் பெண்ணின் அழகோ, குணமோ என் இதயத்தைத் துளியேனும் கவர வில்லை. பதினைந்து வயது நிரம்பிய வாலிபனை எனக்கு விருப்பெல்லாம் நல்ல மாம்பழம் தின்பதில்தான்; மங்கை ஒருத்தியை மணப்பதில் அல்ல.

அன்று காசிசுவரிக்குத் தெரியாது, நான் அவளுக்கு எந்த உறவில் நிற்பவனென்னும் விஷயம். ஆனால் அவள் தன் வீட்டிற்குச் சென்றதும் தெரிந்துகொண்டிருப்பாள் என்ப தில் சந்தேகமில்லை. எப்போதாவது நான் கண்ணில் பட்டுவிட் டால், அவள் ஒடிப்போய்ப் பதுங்கிக்கொள்வாள். வெட்கம் பாவம்! அவள் இவ்வாறு நடந்துகொள்வதைப் பார்க்க எனக்குத்தான் வேடிக்கை. 'இந்த உலகில் நானல்லவோ இன்ன இடத்திற்கு, இன்ன ஆசாமியாக வரப் போகிறவன்! இந்தப் பெரிய காரியத்தைச் செய்வதற்குத்தானே படைப் புப் பொருள்களில் நான் உயர்ந்த இனத்தில் தோன்றி யுள்ளேன்?'-இவ்வாறு எண்ணிக்கொண்டு திரிவேன். என்னைக் கண்டு ஓடும் ஓர் ஆத்மா இருந்ததே, அதுதான் நான் ஆச்சரியப் படுவது. காசிசுவரி நடந்துகொண்ட விதம், நானே அவள் கணவன், அவளுக்கே சொந்தமானவன், அவளையே உறுதி யாக மணக்கப்போகும் பிள்ளை என்ற விஷயத்தைப் பறை சாற்றியது.

இத்தனை நாள் துளியளவு பையனாக இருந்தவன் திடீ ரென நொடிப் பொழுதில் இவ்வளவு கவுரவம் நிரம்பிய பதவிக்கு வந்த அதிர்ச்சியில், என் மூளை சில நாட்கள் வரை குழம்பியே இருந்தது. சமையல் சரியாக இல்லை என்றோ அல்லது வேறு எதற்காகவோ அப்பா அம்மாமேல் எரிந்து விழுவார். அவரைச் சாந்தப்படுத்த அம்மா என்னவெல் லாமோ வழி தேடுவாள். அதே மாதிரி என்னைச் சமாதானப்

படுத்தக் காசிசுவரியும் யுக்திகளைக் கையாள்வாள் என்று கற்பனைக் கண்ணால் காண்பேன். சட்டென என்னவோ வெறி பிடித்துவிடும். அவள்மீது ரொக்கமாக ஒரு பெருந் தொகையைப் பாங்கியில் கட்டிவிடுவேன். அவள் உடம்பை வயிர நகையால் இழைப்பேன். ஒரு நாள் எதற்காகவோ அவளைக் கடிந்துகொண்டேன். அவள் சாப்பிடவே இல்லை,. அன்று முழுவதும். நான் அறைக்குள் வந்து பார்த்தபொழுது அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது. அந்த உருக்கமான காட்சி என் மனத்தை எவ்வளவோ அசைத்துவிட்டது. 'சே! எதற்காக அவள் மனத்தைப் புண் படுத்தினேம்' என்றுகிவிட்டது எனக்கு. இவையாவும் உண்மை யென்று நினைக்கிறீர்கள்? என் மனத்துள் எழுந்த சித்திரங் களே தவிர வேறல்ல; காசிசுவரியை நான் மணந்துகொண் டால்; என் குடும்ப வாழ்வு எப்படி இருக்கும் என்பதன் சித்தி ரங்கள். குழந்தைப் பருவம் முதற்கொண்டே என் காரியத் தில் நான் 'கருத்தாயிருப்பவன். அப்பா எனக்குக் காட்டிய பழக்கம் அது. என் அறையை நானே சுத்தம் செய்து கொள்வேன். என் துணிமணிகளை என் கையைக் கொண்டே ஒழுங்காக வைத்துக்கொள்வேன். ஆனல், என் மனத்துள் தெளிவாகப் பதிந்திருந்த ஒரு சம்சாரத்தைப்பற்றி இங்கே கூறுகிறேன். என் மூதாதையர் வரலாற்றில் இதைப் போன்ற சம்பவம் ஒரு காலத்தில் நடந்தது. என்னுடைய கற்பனையைச் சுயமானது என்று சொல்வதற்கில்லை. அந்தச் சித்திரம் இதுவே. ஒரு ஞாயிற்றுக் கிழமை. பகல் உணவிற் குப் பின் நான் படுக்கையில் தலையணையின்மீது பாதி சாய்ந்த வண்ணம் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண் டிருந்தேன். கையில் 'குடாக்கு'க் குழாய் இருந்தது. சட்டெனத் தூக்கம் கண்ணைச் செருகியது. அந்தக் கலக்கத்தில் குழாய் கைநழுவிக் கீழே விழுந்தது. வராந்தாவில் காசிசுவரி வண்ணை னிடம் அழுக்குத் துணிகளைப் போட்டுக்கொண் டிருந்தாள். அவளைக் கூப்பிட்டேன். அவள் ஓடி வந்து குழாயை எடுத்து என் கையில் கொடுத்தாள். அவளைப் பார்த்து நான், ''இதோ பார், இடப் பக்கமாக இருக்கும் அந்த அலமாரி யில் நீல அட்டை போட்ட தடிமனான இங்கிலீஷ் புத்தகம் இருக்கும்; அதை எடுத்துக்கொண்டு வா'' என்றேன். நீல அட்டை போட்ட புத்தகம் ஒன்றைக் காசிசுவரி கொண்டு வந்து கொடுத்தாள். ''இதுவல்ல; இன்னும் மோட்டாவாக இருக்கும். அதன் முதுகில் பொன் எழுத்துப் பொறித்திருக் கும்; தெரிந்ததா?'' என்றேன். இந்தத் தடவை ஒரு பச்சை அட்டைப் புத்தகத்தை எடுத்து வந்தாள். நான் அதைத்

தொப்பென்று தரைமீது வீசி எறிந்துவிட்டுக் கோபத்துடன் எழுந்தேன். காசிசுவரியின் முகம் சிறுத்துவிட்டது. பலபல வென்று கண்ணீர் உகுத்தாள். நானே போய் அலமாரியைப் பார்வை இட்டேன். நான் கேட்ட புத்தகம் வேறோர் அல மாரியில் இருந்தது. புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் படுக்கையில் சாய்ந்தேன். தவறு என் பேரில் என்பதை நான் அவளிடம் சொல்லவில்லை. பாவம், அவள் குனிந்த முகம் நிமிராமல் வண்ணனுக்குத் துணிகளைப் போட்டுக்கொண் டிருந்தாள். தன்னுடைய அறிவின்மை யால் கணவனுக்கு வீண் தொந்தரவு கொடுத்ததை எண்ணி அவள் வருந்தினாள் போலும்!

அப்பா, ஒரு களவு வழக்கைக் கவனிக்கும் வேலையில் மும்முரமாக இருந்தார். நாட்கள் இவ்வாறு சென்றன. இந்தப் பக்கம் சம்ஸ்கிருத ஆசிரியர் என்னிடம் விநய மாகவே நடந்துகொண்டார். மிகவும் ஆந்தரிகமாக உரை யாடினர்.

களவு வழக்கு முடிந்து அப்பாவும் வீட்டிற்குத் திரும்பி னர். எனக்குத் தெரியும், அம்மா சமயம் பார்த்து என் திருமணத்தைப்பற்றி மெல்ல எடுப்பாளென்று. அப்பாவுக் குப் பிடித்த பட்சணத் தினுசுகளை அவள் பண்ணியதன் மர் மம் இதுவேதான்.

சம்ஸ்கிருத பண்டிதர் ஒரு கஞ்சர் என்பது அவரது கொள்கை. இது தெரியும் என் தாய்க்கும். பண்டிதரை அவ ளும் ஒப்புக்குப் பழித்துவிட்டு அவருடைய மனைவியையும், முக்கியமாக அவருடைய பெண்ணின் குணச் சிறப்புக்களை யும் புகழ்ந்திருப்பாள். ஆனல் துரதிருஷ்டவசமாகப் பண்டி தரவர்கள் சும்மா இருக்கவில்லை. 'திருமணம் நிச்சயமாகி விட்டது. முகூர்த்தந்தான் பார்க்கவேண்டும்' என்றெல்லாம் ஊரில் செய்தியை விதைத்துவிட்டார். 'சிரஸ்தாதாரே தம் பெரிய பங்களாவை மணத்திற்குத் தருவதாக வாக்களித்து விட்டார். அவர் தாமே இதில் சிரத்தை எடுத்துக்கொண்டு செய்கிறார். வக்கீல்களெல்லாம் சந்தா சேர்த்துத் தாமே முன்னின்று இந்தத் திருமணத்தை நடத்தி வைப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு திரிந்தார். அந்த ஊர் ஆரம்பப் பள்ளியின் காரியதரிசி வீரேசுவர பாபுவின் மூன்றும் பிள்ளை மூன்றும் வகுப்பில் படிப்பவன்; நிலவுக்கும் ஆம்ப லுக்கும் உருவகம் வைத்து, மணமக்களுக்கு வாழ்த்துச் செய் யுள் ஒன்று எழுதிவைத்தான். காரியதரிசி அந்த வாழ்த்துப் பாவைக் கண்ட இடத்திலும் அரங்கேற்றி வந்தார். இத

னுல் மணமகனைப்பற்றி உயர்வான கருத்து மக்களிடையே பரவியது.

அப்பா திரும்பி வந்து வீட்டில் கால் வைத்த உடனே இந்த நற்காரியங்கள் அவர் செவிக்கு எட்டின. அப்புறம் நடந்ததென்ன? அம்மா அழுது ஆர்ப்பாட்டம் செய்து பார்த்தாள்; கதறிப் பார்த்தாள்; பட்டினி போட்டாள். அப்பா கலங்கவே இல்லை. வீட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் வசவும் திட்டும் கிடைத்தன. இரண்டொரு வேலைக்காரர்கள் சீட்டு வாங்கிக்கொண்டார்கள். நீதி மன்றத்தில் மட மடவென்று எத்தனையோ வழக்குகள் தள்ளுபடி ஆயின. பண்டிதர் செய்த புரோகிதத் தொழிலின் வாயில் மண் விழுந்தது. பாவம், உத்தியோகம் போனதோடு நில்லாமல், சடைக்குச்சுப் பின்னலழகியான தம் பெண்ணோடு எங்கோ தலை மறைந்தார். வீடுமுறை கழிவதன் முன்பே அம்மா விடமிருந்து என்னைப் பிரித்துக் கல்கத்தாவுக்கு அனுப்பி விட்டார் அப்பா. வெடித்துப் போன பலூன் போல் வானளாவிய என் ஆசையெல்லாம் காற்றுப்போய் உள்ளம் வெம்பி நின்றேன்.

2

என் மண முயற்சிக்கு முதலிலேயே இந்த விதமான தடங்கல் விளைந்தது. அப்புறம் எத்தனையோ இடங்கள் வந்தன. முறிந்து போயின. முதல் கோணலோ இல்லையோ? அதையெல்லாம் இங்கே விவரமாகச் சொல்வதற்கு இடமில்லை. முயன்று வீணான இரண்டொரு வரலாறுகளை மட்டும் கூறுவேன். இருபது வயது நிரம்புவதற்குள், நான் முழு இறகு முளைத்த எம்.ஏ., ஆயினேன். படித்துப் படித்துப் பார்வை மங்கிவிடவே கண்ணுடி அணிந்துகொண்டேன். திருகிவிட்டுக் கொள்ளும் அளவிற்கு மீசை அரும்பி இருந்தது. அந்தச் சமயம் என் தகப்பனுர் நோவாக்காலியிலோ எங்கோ வேலை பார்த்து வந்தார். சொற்கடலுள் பாய்ந்து பட்டத்தைப் பெற்றேனு? இனி மேல் பொருட் கடலுள் மூழ்கி, நிதியம் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்பா, எனக்கு ஒரு நல்ல வேலை தேடத் தமக்குத் தெரிந்த துரை யாராவது இருக்கிருனுவென்று பார்த்தார். அவருக்கு உதவி செய்யக் கூடியவர்கள் ஒருவராவது இம்மையில் இருந்தால்தானே? சற்றுப் பழக்கமுள்ளவர்களில் ஒருவன் அப்பொழுது 'பென்ஷன்' வாங்கிக்கொண்டு சீமைக்குப் போய்விட்டான். மற்றெருவன் ஏதோ உத்தியோகத்திற்கு மாற்றலாகிப் பஞ்சாபில் இருந்தான். மீதிப் பேரெல்லாம் வெறும் வாய்ப்பந்தல் அடிப்பவர்கள்; நெருங்கும்

பொழுது கையை விரிக்கும் பேர்வழிகள். என் பாட்டனார் தாசில் வேலை பார்த்தபொழுது இவ்வளவு துன்பம் இல்லை உத்தியோக வேட்டையில். அந்தக் காலத்தில் சலுகை யாவும் பரம்பரையாக வரும். வேலை பார்க்கவேண்டியது, பென்ஷன் வாங்கிக்கொள்ள வேண்டியது, உடனே அவன் மகனுக்கு வேலை - இப்படியே தலைமுறைக்கு உத்தியோகம் காயமாக இருக்கும். இந்தக் காலமோ சுத்த மோசம். அப்பாவுக்குப் பெரிய குறை; சரியான இடம் வரவில்லையே, இப்படித் தட்டிக்கொண்டு போகிறதே என் திருமணம் என்றெல்லாம். தாலூகாக் கச்சேரியில் மாஜிஸ்டிரேட் பதவியிலிருந்து, ஜில்லாக் கோர்ட்டு சப்ஜட்ஜாக அவர் ஆரோகணமாகும் சமயம், ஒரு பணக்காரர் குடும்பத்துச் சம்பந்தம் வந்தது. கன்ட்ராக்டர் அவர். ஏராளமாகப் பணம் குவித்துவிட்டார். எந்த வழியில் இருந்தால் என்ன? கிறிஸ்துமஸ் தினத்தன்று தட்டுத் தட்டாக ஆரஞ்சுப் பழங்களும், இன்னும் எத்தனையோ விதமான காணிக்கைகளும், சமர்ப்பித்துப் பெரிய உத்தியோகஸ்தர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வார். அந்தப் பணக்காரர் வீட்டிற்கு எதிர் வீட்டில்தான் அப்பா இருந்தார். நான் ஒரு சமயம் அங்கே வந்திருந்தேன். அப்பா ஒரு டெபுடி மாஜிஸ்டிரேட். மகனே எம்.ஏ., வரைக்கும் படித்தவன். கேட்க வேண்டுமா, பெண்ணைப் பெற்றவர்கள் வலை வீசுவதற்கு? 'பழம் நிலையில் தொங்குகிறது. எட்டினால் கிட்டும்' என்ற நியாயத்தைக் கொண்டு கன்ட்ராக்டர் சற்றுத் தாவிப் பார்த்தார். அவர் கைகாரரென்று நான் முன்னாலேயே அறிவித்துள்ளேன். சொல்ல வேண்டியதில்லை. எளிதாகவே அந்தக் கை டெபுடியின் இதயம் வரைக்கும் நீண்டது. ஆனால் என் இதயமோ, இன்னும் ஆழத்தில் இருந்தது.

காரணம், எனக்கு வயது இருபதுகூடச் சரியாக நிரம்பவில்லை. நல்ல அழகியைக் கொள்வதில்தான் நாட்டம் எனக்கு; பணத்தில் அல்ல! இளமை அல்லவா? இன்பக் கனவுகள் காணும் பருவம். வாழ்க்கைத் துணை என்ற சொல்லுக்கு நான் கொண்டிருந்த கருத்தே வேறு; உலகத்தவர் புரிந்துகொள்ளும் அர்த்தம் அதற்கு இல்லை. இந்தக் காலத்தில் இல்லறமே குறுகிய மனப்பான்மை உடையது. நமக்கு நன்மையான விஷயங்களில் தாராள மனசும், பிறரோடு பழகும்போது அற்பத்தனமுமே வெளிப்படுகின்றன. இது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நான் கூடி வாழ விரும்பும் ஓர் இலட்சியப் பெண்மணி வெறும் அடுக்களையில் கட்டுண்டு இருப்பவள் அல்ல; என்னுடன்

சரிசமானமாகப் பழகத் தகுதியுடையவளாக இருக்க வேண்டும். வீட்டுக்காரியாக இருப்பதோடு வெளியுலகிலும் எனக்கு உறுதுணையாக இருப்பவளைத்தான் நான் தேடுவேன். நவநாகரிகமென்று மக்கள் ஏளனம் செய்கிறார்களே, கல்லூரியிலிருந்து வந்ததும் நான் அந்த இனத்தைச் சேர்ந்தவளுகிவிட்டேன். என்னுடைய காலத்தில் இந்தப் புதுமை வர்க்கத்தினரே, இன்றைவிட அதிகமாயிருந்தனர். வியப்பு என்னவென்றால், சமூகத்திற்கு அடங்கி நடப்பதுதான் பிற்போக்கு, அதைச் சீர்திருத்துவதுதான் முன்னேற்றம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

அத்தகைய முற்போக்காளனை நான் - திரு. சனத் குமார் - ஒரு கொழுத்த பணக்காரரின் கைக்குள் விழ இருந்தேன். ''காரியத்தைச் சட்டுப்பட்டென்று முடித்துவிடு'' என்று அப்பா சொன்னார். நான் எதுவும் பேசவில்லை. ஆய்ந்தோய்ந்த பிறகு அந்தப் பைக்குள் போய் விழலாமே என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன். கண்டது கொஞ்சம்; கேட்டது அதிகம். இதிலிருந்து விஷயம் தெரிந்தது எனக்கு. பொம்மை மாதிரி, பெண் மிகவும் சின்னவளாம்; நல்ல அழகாம். ஆனால் இயற்கை வழியில் அவள் வளர்ந்தவளாக எனக்குத் தோற்றவில்லை. இந்தச் சின்ன வயசிலேயே ஆசாரமான வழிகளில் அவள் பழகியிருந்தாள். கங்காஸ்தவம் மனப்பாடம். அவள் தாய் அடுப்புக் கரியைக்கூடப் புனித கங்கை நீரில் அலம்பியே உபயோகிப்பவளாம்! அவ்வளவு மடி விழுப்புப் பார்ப்பவளாம். பூமிதேவி எல்லாச் சாதிகளையும் தன்மீது சுமப்பவள். தீண்டாதவரும் இருப்பார்கள்; உயர்குலத்தவரும் இருப்பார்கள்; அதனாலேயே, இந்தப் பெண்ணின் தாய் தரைமீது கோமயம் தெளித்த பிறகே காலை வைப்பாள். எதன் பேரிலும் தண்ணீரைக் கொட்டிப் புனிதமாக்குவாள். நல்ல காலம், நீரில் வாழும் மீனினம் தீண்டாதார் வகுப்பையோ மிலேச்ச வம்சத்தையோ சேர்ந்ததன்று. அந்தப் பாழும் ஆசாரத்திற்கு விரோதமான வெங்காயம் தண்ணீரில் முளைக்காமல் இருந்ததே! பாத்திரம் பண்டங்களைத் துலக்கியானதும், தீர்த்தமாடிவிட்டு ஈரப் புடைவையுடன் மடியாகச் சமையற் கட்டில் வருவதற்குள் மணி பத்தடித்துவிடும். இந்த மாதிரி விஷயங்களில் தன் பெண்ணையும் பழக்கி வைத்திருந்தாள். சாப்பிடும்பொழுது விழுப்பு ஏதாவது பட்டுவிடுமோ என்று அழுக்குத் துணியைக் கட்டிக்கொள்வாள். தன் நிழலுக்குக்கூட மடிக் குறை உண்டாகாதவண்ணம் பார்த்துக்கொள்வாள். பல்லக்கில் ஏறித்தான் நீராடக் கங்கைக்குச் செல்வாள்.

இந்த மாதிரி, சனாதன தர்மத்தை விட்டு அட்சரங்கூடப் பிசகாமல் ஒழுகும் இயல்பினர் அந்தப் பணக்காரக் குடும்பத்தார். அம்மாவுக்கு, இந்த மாதிரி ஆசாரமான குடும்பம் என்றுல் பிடிக்கும். ஆனல் இன்னொருத்தனுக்கு இதெல்லாம் பிடித்திருந்தால்தானே? அதை அவள் யோசிக்கவே இல்லே. நான் வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன்: ''அம்மா, இந்த இடத்திற்கு நான் தகுதியற்றவன்.''

அவள் சிரித்துக்கொண்டே, ''கலியுகத்தில் இந்த மாதிரி ஓர் இடம் கிடைப்பது அபூர்வமடா'' என்றுள்.

''எனக்கு வேண்டாம்; அவ்வளவுதானே'' என்றேன்.

''சனு, யோசனே பண்ணு! பெண் மூக்கும் விழியுமாக இருக்கிறுளேடா?'' என்றுள் என் தாய்.

''அம்மா, எப்பொழுதும் அழகு பார்ப்பதற்கா பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறேம்? புத்தியும் கொஞ்சம் இருக்க வேண்டாமா?'' என்றேன்.

''நான் கேட்கிறேன்: இதற்குள் அவளுடைய புத்தியைப்பற்றி உனக்கு என்ன தெரிந்துவிட்டதடா?'' என்றுள் அம்மா.

''உண்மையாகப் புத்தி இருந்தால் இரவும் பகலும் இந்த ஆசாரக் குடுக்கையுள் அரைக்கணங்கூடத் தங்கியிருக்கவே மாட்டாள்; திணறிச் செத்துப் போயிருப்பாள்'' என்றேன்.

அம்மாவின் மூஞ்சி சுண்டிவிட்டது. இந்தப் பக்கம் அப்பா எல்லாவித ஏற்பாடும் செய்திருக்கும் செய்தி அம்மாவுக்குத் தெரியும். மற்றொர் ஆசாமியின் விருப்பம் என்பது ஒன்று உண்டென்பதை அப்பா அடிக்கடி மறந்துவிடுவார். அவர்மட்டும் வலுக் கட்டாயப்படுத்தாமல் இருந்தால் நான் ஒரு வேளே இணங்கி அந்தப் பொம்மையை மணந்துகொண்டு நித்தியக் கடமைகளேச் சரிவரச் செய்துகொண்டு என்றைக்காவது ஒரு நாள் கங்கா தீரத்தில் நற்கதிக்குச் சென்றிருப்பேன். அந்தப் பொறுப்பை அம்மாமட்டும் ஏற்றிருந்தால், என் காதில் ஒதி ஒதிக் கண்ணீர் சிந்தி எப்படியோ என்னுடன் பாட்டைப் பெற்றிருப்பாள். அப்பா மிரட்டி உருட்டிச் செய்யவே நானும் முறைத்துக்கொண்டேன். ''நீதானே, யாரும் தன் காலிலேயே நிற்கவேண்டும், தனக்குச் சரியெனத் தோன்றிய வழியே நடப்பதுதான் நல்லதென்று என் சின்ன வயதிலிருந்து போதித்து வந்தாய்? இப்போது அதை என் திருமண விஷயத்தில் பயன்படுத்துகிறேன்'' என்றேன். கல்லூரியில் தர்க்க நூல் படித்தவனேடு வாய் கொடுத்து யார் வெற்றி பெறுவர்? இந்த வாக்கு வாதமெல்லாம் நீரைக் கொண்டு அவிப்பது போல் அப்பாவின் பிடிவாதத்தைத்

திருப்பவில்லை; எரியும் கொள்ளியில் எண்ணெய் விட்டமாதிரி ஆயிற்று. வாக்குக் கொடுத்தாகிவிட்டது, அவர்களுக்கு மறு பேச்சில்லை. அப்பா பிடித்த முயலுக்கு மூன்றே கால். அன்று ஒரு நாள் அம்மாவும் இப்படித்தான் அந்தப் பைத்தியக் காரப் பிராம்மணரான சம்ஸ்கிருத ஆசிரியருக்கு உறுதி கூறி யிருந்தாள். அதனால்தானே அந்தத் திருமணப் பேச்சு முறிந்தது? பாவம்! அவர் பிழைப்பு வாயில் மண் விழுந்தது என்றுமட்டும் சொல்லியிருக்க வேண்டும். எங்கள் இரு வருக்கும் அடிதடியாகி நீதிமன்றம் வரைக்கும் வந்துவிட் டிருக்கும் விஷயம்.

இப்பொழுதெல்லாம் அப்பா, தம் பழைய கொள்கைகளை விட்டொழித்து 'வெறும் வறட்டு அறிவைக் காட்டிலும் சுத்தம், ஆசாரம், மந்திரம், தந்திரம் இவையே மேலான விஷயங்கள்' என்று சொல்லி, இவற்றுள் அடங்கி இருக்கும் உன்னதமான அழகிய கருத்துக்களை வேளை, சமயம் இராமல் எனக்கு அறிவு வரக் கூறி வந்தார். என் நாக்கை அடக்கி வைத்துக்கொண் டிருந்தேன். ஆனால் மனத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. 'இவ்வளவு பேசுகிறாயே, அப்பா! வீட்டில் அநாசாரமான காரியம் செய்கிறாயே; கோழி வளர்க்க லாமென்று எந்தச் சாத்திரம் சொல்லுகிறது?' என்று கேட்க என் நாக்கு வெளியே வந்தது. 'முன்னெல்லாம் அம்மா ஏதாவது விரதம் மேற்கொண்டால், சள்ளுப் புள்ளென்று அவள்மீது விழுந்துகொண்டே இருப்பாய். அப்போது அம்மா தவறு ஒன்றும் செய்யாது போனாலும், அபசாரமென்று கன னத்தில் போட்டுக்கொள்வாள். பாவம்! அவள் அபலை. அதனால்தான் நீ மிரட்டுவாய். நீ போனதும் பிராம்மணர் களுக்குச் சாப்பாடு போடுவாள். உன்னிடத்தில் பயம். ஆனால் கடவுள் பல கோடி உயிர்களைப் படைக்கும்பொழுது ஒரே அச்சில் இட்டு உருவாக்கவில்லை. மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உண்டு. ஒருவன் யுக்தி மற்றவனுக்குச் சரிப் படாது. ஒருவன் தான் பேசுவதுதான் நியாயம் என்றால், அவன் நியாயத்தை மீறினவனாகிறான். இதனால் அநியாயங் கள் உலகத்தில் தலை விரித்தாடும். அரசியல் அல்லது இல்லறக் கிளர்ச்சியில் பற்றுடையவர்கள் இதைக் கவனித்தல் நலம். ஒரு குதிரை தனக்குப் பின்னால் வண்டி இருப்பது அநியாய மென்று எண்ணி உதை கொடுத்தால், அந்த உதை அதற்கே தான் திரும்பும்.' - இளமையின் உணர்ச்சியில் நான் கற் றிருந்த இந்தத் தர்க்க வித்தை குதிரைக்கான வீளையையே எனக்குத் தந்தது. அந்த ஆசாரக் கோட்டையில் இருந்த பெண்ணைக் கொள்ளும் பாக்கியத்தை இழந்தேன்; என் நல்ல

காலம். ஆனால் அப்பாவின் ஆதரவையும் அத்துடன் நான் போக்கிக்கொண்டதில்தான் எனக்கு வருத்தம். ''போடா, உன்காலிலேயே இனிமேல் நிற்கப் பார்! என் உதவி எதற்கு?'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டார். நானும் என் பிகுவை விடாமல், ''அப்படியே ஆகட்டும்'' என்றேன். எங்கள் இரு வருக்கும் மூண்ட இந்த மனமாற்றத்தால் அம்மா உள்ளுறப் புழுங்கினாள்.

தந்தையின் தாராளமான கை குறுகிவிட்டது. ஆனால் அவருக்குத் தெரியாமல் அம்மா எனக்கு மணியார்டரில் பணம் ஏதாவது அனுப்பத் தவறவே மாட்டாள். மேகம் மழையைச் சுருக்கிக்கொண்டபோதிலும், இரவில் விழும் தண்பனி வறட்சியைப் போக்கும். அம்மா எனக்கு உதவிய தொகையிலிருந்து ஒரு சின்னத் தொழில் நடத்த ஆரம்பித்தேன். மூலதனம் 89 ரூபாயேதான். இன்று வியாபாரம் ஓங்கி - ஊரார் பொறுமையினால் என்னை ஏராளமாகக் குவித்துவிட்டானென்று சொன்னபோதிலும் - 20 லட்சத்திற்குக் குறைவில்லை சொத்து.

பெண்ணைப் பெற்றவர்கள் என் பின்னால் சுற்றத் தொடங்கினர். முன்னால் நான் எளிதாக நுழைய முடியாமல் இருந்த இடம் இப்பொழுது எனக்குத் தாராளமாகத் திறந்திருந்தது. இளமையின் பெருக்கில் நான் எனக்குக் கிட்டாத பதினாறு வயது மங்கை ஒருத்தியின்மேல் ஆசை வைத்திருந்தேன். (இப்பொழுது என் வயது என்னவென்று கேட்டுவிடாதீர்கள்!) ஆனால், அவளுடைய பெற்றோர்கள் ஐ.ஸி.எஸ்ஸோ, பார்-அட்-லாவோ தேறியிருக்கும் மணமகனைத் தேடினார்கள். நான் அச்சமயம், அவர்களுடைய மதிப்பு மீட்டரில் 'பூஜ்யம்' டிகிரியில் இருந்தேன். அப்புறம் அதே வீட்டில் ஒரு நாள் நான் 'லஞ்ச்' சாப்பிட்டேன். இரவு 'டின்னர்' ஆனதும் பெண்களுடன் வேடிக்கையாக 'விஸ்ட்' ஆட்டம் ஆடினேன். அந்த மெல்லியலார் என்னோடு நாகரிக இடத்தில் வழங்கும் ஆங்கில மொழியில் பேசினர். என் துரதிருஷ்டம், ராஸிலாஸ், டெஸர்ட்டட் வில்லேஜ், அடிஸன், ஸ்டீல் போன்ற ஆங்கில இலக்கியங்களைத்தான் தொட்டிருக்கிறேன். அந்த நவநாகரிக மடந்தையருடன் சரிசமானமாகப் பேச யாரால் முடியும்? O my, O dear, O dear, போன்ற விளிகள் அவர்கள் உச்சரிப்பதுபோல் என்னால் சொல்ல முடியவில்லை. எனக்குத் தெரிந்த ஆங்கிலம் படோபஜாரில் வியாபாரம் செய்வதற்குப் போதும்; ஆனால் இந்தக் காலத்து ஆங்கிலத்தில் காதல் உரைகள் பேசுவதெப்படி என்று நினைக்கும்பொழுதே எனக்கு மூண்டிருந்த காதல் உணர்ச்சி தலை காட்டாமல் ஒடிவிடும்போல் இருந்தது. வழக்

கத்தில் இருக்கும் வங்க மொழியோ இந்த வேலைக்குப் பயன் படாது. அசல் பங்கிம் ரீதியில் தேமதுர மொழியில் பேசினாலும் இவர்களை மயக்க முடியாது. அது எப்படியாவது போகட்டும்; இந்தச் சீமை மெருகு பூசிய பூவையர் என் கைக்குள் இலவசமாக விழும் நிலையில் இருந்தார்கள். ஆனால் கதவு இடுக்கிலிருந்து நான் பார்த்த ஒரு மாயா லோகம் தாராளமாகத் திறந்திருந்தபொழுது எங்கோ மறைந்து போயிற்று. 'சீச்சீ! இவர்கள் இரவும் பகலும் இந்தச் சீமை மோகத்தைக் கட்டிக்கொண்டு அலைகிறார்களே தவிர, இவர் களிடம் உயர்வானதொன்றும் இல்லையே' என்று எனக்கு உறைத்துவிட்டது. பீங்கான் கிண்ணத்திலிருந்து உறிஞ்சும் விதமோ, முள் கரண்டியைத் தூக்கும் பாணியோ ஒரு துளி பிசகினால், பெருத்த அவமானமாகக் கருதுபவர்கள்; நம் நாட்டுப்புறப் பெண்பாலார் தம் ஆசாரத்தில் ஓர் இழை தவறி நடந்தால் பிரமாதமாக எண்ணுவதுபோல், இவர்களும் வெறும் பொம்மைகள்; உணர்ச்சியின் வேகத்தில் செல்பவர் களல்ல. பழக்க வழக்கங்களுக்கு அடிமை பூண்டவர்கள். இதனால் இந்த உலகத்துக்குப் பெண் மக்களிடத்திலேயே எனக்கு ஒரு வெறுப்பு மூண்டது. ஒரு வித ஜீவ அணுவைப் பற்றிப் படித்திருக்கிறேன். அது தன்னைத் தானே சுற்றிச் சுற்றி வருமாம். ஆனால் மனிதன் அப்படி இல்லை. இத் தகைய ஜீவ அணுக்களைத்தான் பாழும் பிரமன் ஆடவர் களுக்கு முடி போட்டுவிடுகிறான்!

வயது எனக்கு ஏற ஏறத் திருமணத்தைப்பற்றிய தயக்க மும் அதிகரித்தது. மனிதனுடைய வாழ்வில் ஒரு வயதுக் காலம் வருகிறது. அப்பொழுது முன்பின் யோசிக்காமல் மணத்தலையில் மாட்டிக்கொள்கிறான். அந்த வயது கடந்துவிட்டால் மணம் செய்துகொள்வது துணிச்சல் நிரம் பிய ஒரு செயலாகும். நான் அந்தக் கண்மூடிக் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்லன். அதோடு அறிவுள்ள பெண் எவளும் காரணமின்றி என்னைப் பார்த்த மாத்திரம் மணந்துகொள்வா ளென்று எப்படி நினைப்பது? கேள்விப்பட்டிருக்கிறேன், காதலுக்குக் கண் இல்லை யென்று. குடும்பம் நடத்தத் தெரிந்தவர்கள் இரண்டு கண்கள் போதாமல் பல கண்களைக் கொண்டு நோக்குபவர். என்னிடத்தில் வியக்கத்தக்க தகுதி கள் பல இருக்கின்றன. ஆனால் அவை சட்டென ஒரே பார்வை யில் விளங்குவன அல்ல. எப்படியாவது போகட்டும் இது. வயதாகாத ஒரு பெண் சிறு கால அளவிற்குள் என்னை வரிக்கத் துணிவாளென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது அந்தப் பெண்ணிடம் ஊக்கமே எனக்குக் குறைந்துவிட்டிருக்

கும். நான்மட்டும் ஓர் இளம் பெண்ணாக இருந்திருப்பேனாயின் திரு. சனத் குமாரின் வளர்ந்த மூக்கு, அவன் ஆசை, அவன் அகம்பாவம் எல்லாம் மண்ணிற் கவியும்படி செய்திருப்பேன்!

இந்த வண்ணம் சரக்கில்லாத என் திருமண ஓடம் நடுநடுவே கரைப் பக்கமாகத் திரும்பினாலும் கரையை அடையவே இல்லை. என் வாழ்வில் பெண் என்னும் செல்வத்தைத் தவிர மற்ற எல்லாம் நிறைந்திருந்தன. ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். எனக்கு வயதும் ஏறிக் கொண்டே இருந்தது. சட்டென்று இது ஒரு கவனத்தை மூட்டுகிறது.

அபிரகச் சுரங்கத்தைப் பார்வையிட நான் சோட்டா நாகபுரைச் சேர்ந்த ஓர் ஊருக்குப் போயிருந்தேன். பழைய சம்ஸ்கிருத பண்டிதரை அங்கே தற்செயலாகக் காண நேரிட்டது. ஆற்றங்கரை ஓரமாக ஒரு வீடு கட்டிக்கொண்டு அமைதியாக இருந்தார். அவருடைய பிள்ளைக்கு அங்கே வேலை. அந்த ஆற்றங்கரைப் பக்கமாக நான் ஒரு கூடாரத்தில் இறங்கி இருந்தேன். நான் பெரிய பணக்காரனென்று நாடெங்கும் தெரியுமே. என்னைப் பார்த்துப் பழைய பண்டிதர், ''நீ முன்னுக்கு வருவாயென்று எனக்கு அப்போதே தெரியும்'' என்றார். ஆனால் அவர் ஏனோ அந்த விஷயத்தை அந்தச் சமயத்தில் மூடி வைத்திருந்தாரென்பதுதான் விளங்கவில்லை. அவர் என்னிடத்தில் எந்த லட்சணத்தைக் கண்டு இதை ஊகித்தாரோ? ஒரு வேளை முன்னுக்கு வருபவர்கள் பள்ளியில் பின்வரிசையில் இருப்பார்களா? காசிசுவரி மாமனாரகத்தில் இருந்தாள். ஆனால் எனக்குப் பண்டிதர் வீட்டில் பழகச் சற்று வசதியாயிருந்தது. பண்டிதரின் மனைவி இறந்துபோய் வெகு நாட்களாயினவாம். ஆனால் பேத்திகளும் பேரன்மார்களும் புடைசூழ இன்பமாகக் காலத்தைக் கழித்தார். எல்லாருமே அவருடைய சொந்தப் பேரப் பிள்ளைகள் அல்ல; காலஞ் சென்ற அவருடைய தமையனின் மக்களும் இருந்தனர். இவர்கள் நடுவே அமருசதகம், ஆர்யா சப்தசதி, மேகதூதம் போன்ற இனிய காவியங்களிலிருந்து சுவை மிகுந்த சுலோகங்களைத் தம் பேரன் பேத்திமாருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். கூழாங்கல்லின்மேல் சலசலத்துச் செல்லும் மலையருவி போல் இருந்தது அந்தக் காட்சி. நான் சிரித்து, ''இதென்ன கடைசி வயதில்?'' என்றேன்.

''அப்படியே, உங்கள் ஆங்கிலச் சாத்திரம் சொல்லுகிறது, சனிக்கிரகம் சந்திரஹாரம் அணிந்துகொண்டிருக்கிறதென்று. இவர்கள்தாம் என் கழுத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் திங்கட் குழவிகள்'' என்றார்.

அந்த எளிய குடும்பத்தைப் பார்த்த பிறகு நான் தனி ஒரு மனிதனுய் நிற்கிறேனே என்ற எண்ணம் எதனுலோ வந்தது; அதை நினைக்க நினைக்க வாட்டம் அடைந்தேன். தாம் வயதானவரென்று பண்டிதர் உணரவில்லே. ஆனல் நான் வயதானவனென்றுல் பொருளென்ன? எல்லாம் ஒவ்வொன்றுக விட்டுக்கொண்டே வருகிறது; வாழ்வு எத்திசையும் வெறுமை என்ற நினைவே! அந்த வெறுமையை எதைக் கொண்டு மறைப்பது? உலகம் எனக்குச் சுவையைத் தரவில்லே. வெறும் சக்கையைத்தான் அளித்தது. சக்கையையே மென்ற பழக்கத் தில் இதை மறந்திருந்தேன் இத்தனே நாள். ஆனல் பண்டி தரின் குடும்பத்தைப் பார்த்த பின் எனக்கு இரவு பகல் யாவும் வெறிச்சென்று இருந்தன. தம்மைவிடப் பாக்கியவா னென்று பண்டிதர் எண்ணிக்கொண் டிருக்கலாம் என்னைப் பற்றி. எனக்குச் சிரிப்பு வருகிறது. பொருள் மயமான இவ் வுலகைச் சூழ்ந்து கண்ணுக்குப் புலனுகாத இன்ப உலகம் ஒன்று இருக்கிறது. இந்த அதிசய உலகுடன் உயிரின் தொடர்பு இராது போனல் நாமெல்லாம் திரிசங்கு சுவர்க் கத்தில் தொங்கிக்கொண் டிருப்போம். பண்டிதருக்கு இந்த இன்ப உலகின் தொடர்பு இருந்தது. எனக்கோ? நான் சுகாசனத்தில் சாய்ந்தவாறு சிகரெட் குடித்துக்கொண்டே சிந்திக்கலானேன். மனித வாழ்வில் நாலு நிலே; ஒவ்வொரு நிலேக்கும் தனித் தனி அதிதேவதை உண்டு. குழந்தைப் பருவத்தில் அன்னே; இளமையில் இல்லாள்; நடுவயதில் மாட்டுப் பெண்; வயோதிகத்தில் பேர்த்தி. இப்படிப் பெண் கள் மூலமாகவே மனிதன் தன் நிறைவைக் காண்கிருன். இந்தப் பேருண்மை இலேயின் ஓசை நிரம்பிய சால மரத் தின்கீழ் எனக்குப் புலனயிற்று. வரப்போகும் என் முதுமை யின் எல்லே வரைக்கும் ஒருதரம் மனக் கண்ணுல் பார்த்தேன். அங்கே தென்பட்ட ஒரு பெரும் பாழ் என் உள்ளத்தைத் திடுக் குறச் செய்தது.

அந்தத் திக்கற்ற பாலேவெளியில், முதுகு வளேயப் பணம் என்னும் மூட்டையைச் சுமந்துகொண்டு எந்த இடத்தில் கால் இடறி மரிக்க வேண்டுமோ?...அதற்கு இன்னும் அதிக நாள் இல்லே. நாற்பதையும் கடந்துவிட்டேன். இளமையின் கடைசித் தொடர்பை எறிந்துவிட்டு ஐம்பதின் பாதையில் சென்றுகொண் டிருக்கிறேன். ஊன்றுகோல் அதோ காத்துக்கொண் டிருக்கிறது எனக்காக. இனிமேல் பையை நிரப்பிக்கொள்ளும் ஆர்வத்தை விட்டொழித்து, வாழ்வின் கடைசிச் சொட்டு இன்பத்தைப் பெறும் வழியைத் தேட வேண்டும். இளமை திரும்பி வாவென்றுல் வருமா? போனது

போனதுதான்! ஆனால் அதன் உணர்வு எனக்கு முழுவதும் அற்றுப் போகவில்லையே!

அந்த இடத்தைவிட்டு என் தொழில் விஷயமாக மேற்கே ஒரு நகரத்திற்குச் செல்லவேண்டி யிருந்தது. அந்தப் பக்கத் திற்கெல்லாம் செல்வாக்கு உடையவர் விசுவபதி பாபு; பெரிய வியாபாரி. அவரிடந்தான் எனக்கு வேலை இருந்தது! மிகவும் விழிப்பான பேர்வழி. எந்த விஷயத்திலும் அவர் சட்டப் டென்று தீர்மானத்திற்கு வருபவரல்லர். ஒரு நாள் எனக்குச் சப்பிட்டுவிட்டது, ஏனோ இவரைப் பிடித்தோமென்று. வேலை யாளைக் கூப்பிட்டு மூட்டையைக் கட்டச் சொன்னேன், ஊருக்குத் திரும்பிப் போகலாமென்று. அப்போது குளிர்ந்த மாலை வேளையில் விசுவபதி பாபு என்னிடம் வந்து, ''உங்க ளுக்குப் பல பேர் தெரிந்திருக்கலாம். நீங்கள் மனம் வைத் தால் ஒரு விதவை பிழைத்துப் போவாள்'' என்றார்.

விஷயம் இது: நந்தகிருஷ்ண பாபு என்பவர் பேரே லியில் ஓர் ஆங்கிலப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக வந் தார். நல்ல பெயர் வாங்கினார். இவ்வளவு படித்த மனிதர் சிறிய சம்பளத்திற்குத் தொலைவான இந்த ஊருக்கு வரு வானேனென்று எல்லாரும் வியந்தனர். வெறும் பரீட்சையில் மாணவர்களைத் தேர்ச்சி பெறப் பண்ணி வைப்பதைத் தவிர வேறு காரியங்கள் செய்வதிலும் அவர் வல்லவர். மனைவி நல்லவள்தான். ஆனால் அதே குலத்தைச் சேர்ந்தவளல்ல வென்ற விஷயம் திடீரென ஒரு நாள் வெட்ட வெளிச்ச மாகியது. அவள் ஏதோ ஓர் இழிகுலத்தவளாம்; அவள் தீண்டிய நீர் அதன் நீர்மையை இழந்துவிடுமாம். கோமயத்தை உட்கொண்டால்தான் அந்த மாசு விலகுமாம்!

எல்லாரும் அவரைப் பிலுபிலுவென்று பிடித்துக்கொண்ட பொழுது அவர் ஒளிக்காமல், ''கீழ்ச் சாதிதான் அவள்; ஆனால் மனுஷிதானே என் மனைவி?'' என்றார். அப்போது 'இந்த மாதிரி மணம் சாத்திர சம்மதமானதா?' என்ற கேள்வி எழுந்தது. இந்தப் பிரச்னையைக் கிளப்பிய ஆளைப் பார்த்து நந்த பாபு, ''நீங்களும் சாலக்கிராமத்தின் பேரில் ஆணை வைத்து அடுத்தடுத்து இரண்டு மனைவிகளைக் கொண் டிருக்கிறீர்கள். இரண்டோடு திருப்தி அடைந்ததாகத் தெரிய வில்லை. உங்கள் சாலக்கிராமம் ஒரு புறம் இருக்கட்டும். உங்கள் மணமுறையைவிட என்னுடையது சாத்திர முறைப்படி அமைந்ததே. எல்லாம் இறைவனுக்குத் தெரியும். இதற்குமேல் உங்களுடன் பேசுவதற்கு ஒன்றுமில்லை'' என் றார். இந்த வார்த்தையைக் கேட்டுக்கொண் டிருந்தவர் உள்ளங் குளிர்ந்து போனதென்று சொல்ல முடியாது. அதற்கு

மேல் ஊரார் இழைத்த தொந்தரைகளுக்கு எல்லையே இல்லை.

தொந்தரை தாளாமல் நந்தபாபு பேரேலியைத் துறந்து இந்த நகரில்தான் வக்கீல் தொழிலில் இறங்கினார். ஆசாமி நேர்மையானவர். வரும்படி இராது போனாலும், அக்கப் போர் வழக்குகளில் வாதாடுபவர் அல்ல. ஆனால் தொடக்கத் தில் அவருக்குத் துன்பங்கள் நேர்ந்தாலும் கடைசியில் படிப்படியாக மேன்மை அடைந்தார். நீதிபதிகள் அவரிடத் தில் மதிப்பு வைத்திருந்தனர். வாழ்வில் அவர் சற்று நிலைக் கும் சமயம் நாட்டில் பெரும் பஞ்சம் மூண்டது. சேவா சங்கங்கள் மக்களுக்கு உணவு அளிக்கச் சில ஆட்களை நியமித் தன. இவர்களெல்லாரும் அபகரிப்பதில் கெட்டிக்காரர் களென்று மாஜிஸ்டிரேட்டிடம் நந்தபாபு சொன்னபொழுது அவர், ''யோக்கியமான பேர்வழி எங்கே ஐயா இருக்கிறான்?'' என்றார்.

உடனே நந்தபாபு, ''என்னை நம்பி அந்தப் பொறுப் பைக் கொடுத்தால் ஏதோ முடிந்தவரை உழைக்கிறேன்'' என்றார்.

பஞ்ச நிவாரண வேலையை அவரிடமே ஒப்படைத்தனர். இந்தப் பணி தாளாமலோ என்னவோ ஒரு பகல் வேளையில் அவர் ஒரு மரத்தடியில் செத்துக் கிடந்தார். இதயம் வேலை செய்யாமல் திடீரென நின்றதனாலேயே இந்த மரணமென்று டாக்டர்கள் கூறினர்.

நான் கேள்விப்பட்டவரைக்கும் இதுவே நந்தபாபுவின் பூர்வ சரிதை. இவர் தன்னலம் கருதாது மக்களுக்காகப் புரிந்த அரிய தொண்டைப் பாராட்ட ஒரு நாள் அந்த ஊர் 'கிளப்'பில் நான், ''நந்தகிருஷ்ண பாபுவைப் போன்ற மகாநு பாவர்கள் பணம், பாக்கியம் எதுவும் குவிக்காமல் வாழ்வில் எந்த விதமான சுகத்தையும் காணாது மாண்டனர். அவர்களே கடவுளின் உண்மை ஊழியர்கள். இந்தப் பாழும் உலகை உன்னது—'' என்று சொல்லும்பொழுது, திடீரென மரக்கல மொன்று மணலில் கரை தட்டியதுபோல் என் பேச்சு அரை குறையாக நின்றது. எங்களைச் சேர்ந்த ஒரு பெரிய பணக் காரர் - செல்வாக்கு உடையவர் - அச்சமயம் பத்திரிகையில் கவனம் செலுத்துவதை விட்டு மூக்குக் கண்ணாடி மூலம் என்னைப் புன்முறுவலுடன் நோக்கி, ''பேஷ்! பேஷ்'' என்றார்.

அது போகட்டும். நம் நந்தபாபுவின் விதவை மனைவி தன் ஒரே பெண்ணுடன் அதே பேட்டையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். தீபாவளியன்று இரவு அந்தப் பெண் பிறந்தாளாம். அதனால் அவள் தந்தை தீபாலி என்று அவளுக்

குப் பெயர் சூட்டினோம். சமூகம் அவர்களை இழிவுபடுத்திய தால் தாயும் பெண்ணும் தனியாகவே ஓரிடத்தில் காலத்தைக் கடத்தினர். பெண் நன்றாகப் படித்தவள். அவளுக்கு வயது பதினேந்திற்குமேல் இருக்குமென்று அறிந்தேன். அவள் தாய் ஒரு நோயாளி. வயதாகிவிட்டது. என்றைக்குக் கண்ணை மூடிக்கொள்வாளோ தெரியாது. அப்புறம் அவள் பெண்ணின் பாடு திண்டாட்டம். கல்யாணம் ஆகவில்லை. நாணயமான வரன் எங்கே வரப்போகிறான்? மட்ட சாதி என்ற கெட்ட பெயரும் வேறு இருந்தது அவர்களுக்கு. விசுவபதி பாபு இந்த விஷயத்தை மெல்ல எடுத்து, ''எங்கேயாவது ஒரு நாணயமான பையன் இருந்தால் கட்டிவிடுமே. உங்களுக்குப் பெரும் புண்ணியமாகும்'' என்றார்.

விசுவபதி பாபுவை அற்பன், தன்னலக்காரனென்றே நினைத்திருந்தேன். ஓர் அநாதைப் பெண்ணுக்காக அவர் உள்ளுறப் பாடுபடுவதைப் பார்த்தபின் என் மனமும் மாறிவிட்டது. ஆதிகாலத்துப் பயங்கரமான 'மாம்மத்' என்ற பிராணிகளின் மரித்த உடலில் செரிமானப் பைக்குள் இருந்த தானியவித்துக்களைப் புதைத்தபொழுது அவை முளைத்தனவாம். அதுபோலவே எது அழிந்துபோனலும் மனிதத்தன்மை என்பது எங்கேயாவது, யாரிடமாவது குருத்து விடாமற் போகாது.

நான் விசுவபதி பாபுவிடம், ''பெண் யாரென்று தெரியும். தடங்கல் எதுவும் இல்லை. நிச்சயம் செய்வது, நாள் குறிப்பதெல்லாம் உங்கள் பாடு'' என்றேன்.

''பெண்ணைப் பார்த்தீர்களா?''

''பார்க்க வேண்டிய அவசியமில்லை.''

''சொத்து ஒன்றுமில்லை. இருக்கிற வீடு ஒன்றுதான்.''

''அதைப்பற்றிக் கவலை இல்லை. பிள்ளைக்குச் சொத்து இருக்கிறது.''

''பிள்ளையாண்டான் ஊர், பெயர் எல்லாம்—''

''அதை இப்பொழுது சொல்லுவானேன்? நாலு பேருக்குத் தெரிந்தால் யாராவது கலகம் பண்ணிவிடுவார்கள்.''

''பாருங்கள்: பெண்ணின் தாய்க்காவது இன்னுரென்று சொல்ல வேண்டாமா?''

''சொல்லுமே; உலகத்து மனிதனைப்போல் பிள்ளையிடமும் குணம், குறை ஏதாவது இருக்கும். நல்ல காலம், குறை மிகவும் கொஞ்சமே. அப்படி ஓகோவென்ற குணவானும் அல்ல. பெண்ணைப் பெற்ற எவனும் விரும்பக்கூடிய பாத்திரம். பெண்ணின் கருத்துத்தான் எப்படி இருக்குமோ?''

இவ்வளவு தூரம் காரியம் முடிந்ததைக் குறித்து விசுவபதி பாபுவுக்கு என்னிடத்தில் அளவற்ற நன்றி. என்மேல்

அன்பு அவருக்கு மிகுந்தது. அவர் கார்பாரில் கண்டிப்பான பேர்வழியாம். இந்தச் சமயத்தில் அவருக்கு விட்டுக் கொடுத்தே உடன்படிக்கையில் கையெழுத்துப் போடும் துணி வுக்கு வந்தேன். அவர் போகும்பொழுது, ''பிள்ளையிடம் சொல்லுங்கள், 'பெண் தங்கம், அந்த மாதிரி கிடைப்பது அரிது' என்று'' என்றார்.

சமூகம் வெறுத்த - உரிமையிலிருந்து உலகத்தவர் வஞ் சித்த - ஒரு பெண்ணை நான் என் இதயத்துள் ஏற்றுக்கொள் வதாயிருந்தால், அவள் ஏன் என்மீது அன்பு வைக்காமற் போவாள்? பேராசை பிடித்த பெண்கள் அதிக அன்பு உள்ள வர்கள்போல் நடிப்பார்கள். அது தெரியும் எனக்கு. ஆனால், இந்தத் தீபாலி, தீபாவளியில் ஏற்றும் அகல் விளக்குப்போல் ஆடம்பரமின்றி என் அகத்தினுள் நின்று ஒளிர்வாளென்பதில் ஐயமே இல்லை.

பொழுது மங்கியது. வீளக்கை ஏற்றிக்கொண்டு பத்தி ரிகை ஒன்றைப் படிக்க எடுத்தேன்; ஒரு பெண் என்னைப் பார்க்க வந்திருப்பதாகச் செய்தி வந்தது. என் வீட்டிலோ பேருக்குக்கூடப் பெண் இல்லை. எனக்கு அவளை எப்படி அழைப்பதென்று தெரியவில்லை. நான் தயங்கிக்கொண் டிருக் கையிலேயே பெண் தானே உள்ளே வந்தாள். வெளியார் யாரும் நம்ப மாட்டார்கள், இதை. நான் வெட்கத்தால் தலையைக் குனிந்துகொண்டேன். அவளோடு பேசக்கூட என் நா எழவில்லை. அவள்மட்டும், ''என் பெயர் தீபாலி'' என்றாள் என் எதிரே; இனிமையான குரல். சற்றுத் தைரியம் பிறந்தது. நிமிர்ந்து பார்த்தேன். மென்மையும் அறிவின் பொலிவும் கலந்த எழில் முகம். தலையில் 'கோம்டா' (முசுக்கு) இல்லை. சாதாரணமான நாட்டுச் சேலையே அணிந் திருந்தாள், இந்தக் காலத்து 'பாஷனி'ல். என்ன பேசுவ தென்று நான் யோசிக்கும்பொழுது அவள், ''எனக்குத் திரு மணம் செய்து வைக்கத் தாங்கள் அக்கறை எடுத்துக்கொண் டதாகத் தெரிந்தது. நீங்கள் முயற்சி எதுவும் செய்ய வேண் டாம், என் பொருட்டு'' என்றாள்.

எது எப்படி இருந்தாலும், தீபாலியின் வாயிலிருந்து இந்த வார்த்தை வருமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. திருமணமென்றதும் அவள் உடலும் உள்ளமும் பூரித்துப் போகுமென்றே நான் நினைத்திருந்தேன்.

''ஆனால் யாரையுமே நீ திருமணம் செய்துகொள்ளப் போவதில்லையா?''

''ஆமாம், யாரையுமே.''

மனத்தத்துவத்தைக் காட்டிலும் பொருள் தத்துவத்தில்

னக்கு அநுபவம் அதிகம். பெண்களுடைய மனம் என் வரைக்கும் ஆங்கில வார்த்தைகளின் உச்சரிப்புப் போலவே இருந்தது. வெளுத்ததெல்லாம் பாலென்று இருப்பவன் நான். ''சரி, நான் உனக்காகத் தேடியிருக்கும் வரன், ஒழுக்கத்தில் குறைந்தவன் இல்லை. உன் விருப்பத்திற்கு ஏற்றவன். தள்ளிவிடக் கூடியவன் இல்லை'' என்றேன்.

இதற்குத் தீபாலி, ''நான் அவரை இழிவாகக் கருத வில்லை. எனக்குத் திருமணம் வேண்டாமென்றுதான் சொன்னேன்'' என்றாள்.

''அவனை உன்னிடத்தில் உள்ளூற ஆசை வைத்திருக்கிறான்'' என்றேன்.

''வேண்டாம். என்மேல் ஆசை வைக்க வேண்டாமென்று சொல்லுங்கள்.''

''சரி; வேறு எந்த வழியிலாவது நான் உங்களுக்கு உதவி புரியலாமா, அதுவும் கூடாதா?''

''எங்கேயாவது ஒரு பெண்கள் பள்ளியில் எனக்கு வேலை தேடி வைத்தால் நலம்; இல்லை, கல்கத்தாவுக்கு எங்களை அழைத்துச் சென்று ஏதாவது வழி காட்டினால் எவ்வளவோ உதவி செய்தமாதிரி.''

''வேலை இருக்கிறது; உன்னை நல்ல இடத்தில் அமர்த்துகிறேன்.''

என் உறுதி மொழியில் ஓரளவுதான் உண்மை இருந்தது. பெண்பள்ளி ஒன்று எனக்குத் தெரியும்; அவ்வளவுதான். ஆனால் ஒரு பெண் பள்ளியை நிறுவுவதற்கு எனக்கு எத்தனை நாள் பிடிக்கும்; அப்போது வேலைக்குத்தான் என்ன குறைவு?

''நீங்கள் ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வந்து இதையெல்லாம்பற்றி அம்மாவிடம் பேசித் தெரிந்துகொள்ளுங்களேன்'' என்றாள் தீபாலி.

''நாளைக்கே வருகிறேன்'' என்றேன்.

தீபாலி அகன்றாள். பத்திரிகையில் என் மனம் ஓடவில்லை; மொட்டை மாடியில் ஒரு சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அதில் அமர்ந்தேன். வானில் கண் சிமிட்டும் தாரகைச் சுடர்களை விளித்து, நான், ''கோடானுகோடி யோஜனை தூரத்திற்கு அப்பாலிருந்து உண்மையில் மாந்தரின் விண்ணப்பயனை நீங்கள் பின்னிக்கொண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

அதே சமயம், முன் அறிவிப்பின்றி விசுவபதி பாபுவின் நடுப்பிள்ளை ஸ்ரீபதி மாடியில் தோன்றினான். அவனோடு நான் பேசியவற்றின் சாரம் இதுவே:

ஸ்ரீபதி தீபாலியைத் திருமணம் செய்துகொள்ள ஆவல் கொண்டிருந்தான். அதற்காகத் தன் குடும்பம், குலம் எல்லாவற்றையும் தியாகம் செய்வதாகக்கூட உறுதி கூறினான். அவன் இந்த மாதிரி காரியம் செய்தால் அவன் முகத்தில் விழிக்கப் போவதில்லையென்று சபதங்கூடச் செய்துவிட்டார் அவன் தந்தை. தனக்காக இவ்வளவு துன்பம், அவமானம், தியாகம் செய்வதற்குத் தன்னிடத்தில் அப்படியென்ன மகிமை இருக்கிறதென்று தீபாலி சொன்னாள். அதோடு ஸ்ரீபதி இளவயதிலிருந்து செல்வமான குடும்பத்தில் வளர்ந்தவன். தீபாலியைப் போன்ற சமூகம் வெறுக்கும் ஏழைகளின் வீட்டில் வறுமை மிகுந்த வாழ்க்கை அவனுக்குச் சகிக்குமா? இந்தச் சிக்கல் ஒரு முடிவிற்கும் வராமல் சுழன்றது. இந்தத் தொல்லைக் கிடையே சிக்கிக்கொண்டு, வேறு 'ஒரு வரனை' நான் தேடிக் கொண்டு வந்தபொழுது புதிர் இன்னும் கடினமாயிற்று. இதற்காக ஸ்ரீபதி என்னை இந்த நாடகத்திலிருந்து விலகிப் போகும்படி சொல்லிவிட்டான்.

''எப்போது இதில் புகுந்து வேலை செய்யத் தொடங்கி விட்டேனோ, இனிமேல் பின்வாங்குவது ஏது? அப்படி விலகு வதாயிருந்தால் இந்தச் சிக்கலைச் சரி செய்த பிறகே விலகுவேன்'' என்றேன் நான்.

திருமண நாள் இதனால் மாறிவிடவில்லை. வரன்தான் மாறினான். விசுவபதி பாபுவின் வார்த்தையை நிறைவேற்றி னேன். அதனால் என்மேல் அவருக்கு அன்பு ஏற்படவில்லை. தீபாலி சொன்னபடி நான் செய்யவில்லை. அதனால் அவள் மகிழ்ச்சியே அடைந்தாள். பள்ளியில் வேலை ஏதாவது காலி யாக இருந்ததோ இல்லையோ, என் வீட்டில் காலி இருந்தது. பெண் இல்லாத குறை எனக்கு நீங்கிற்று. என்னைப்போல் வீண் ஆண்டிகள் உண்மையில் ஆண்டிகள் அல்லவென்று தெரிந்துகொண்டான் ஸ்ரீபதி. என் சொத்தைக் கண்டதும் அவனுடைய வாழ்வின் விளக்கு எனது கல்கத்தா மாளிகை யிலேயே சுடர் விடத் தொடங்கியது. உரிய காலத்தில் திரு மணம் செய்துகொள்ளாததனால் அல்லவோ இவ்வளவு குறைகள்?

கடைசியில் பகவான் கண்ணைத் திறந்தார். நான் கேட்ட தற்குமேல் இரு மடங்காகக் கிட்டியது. இன்று அறுப தாண்டு விழாக் கொண்டாடும்வளவுக்குக் கிட்டத்தட்ட வந்து விட்டேன். வீடு நிரம்பப் பேர்த்திமாரைப் பெற்றுவிட்டேன். பேரனும் பிறந்துவிட்டான். ஆனால், விசுவபதி பாபுவுடன் என்னுடைய கார்பார் அடியோடு நின்றுவிட்டது. காரணம் பிள்ளை செய்த வேலை அவருக்குப் பிடிக்கவில்லை.

ரவீந்திரர் கதைத் திரட்டு

ரவீந்திரரின் ஒவ்வொரு கதையும் ஏதாவது உண்மை நிகழ்ச்சியின் பேரிலேயே உருவாகியிருக்கும். கவியின் இலக்கிய மெருகில் தோய்ந்து புதுப் பொலிவுடன் அவருடைய கதாபாத்திரங்கள் விளங்குவதைக் காண லாம். ரவியின் கிரணம் நெடுவரை, உன்னத மாளிகை, வானளாவிய மரத்தின் உச்சி இவற்றின் மீது படிவதோடு நில்லாமல், ஏழைக் குடியானவனின் இருண்ட மண் குடிலையும், கிராமப் பெண் குளிக்கும் ஆற்றுத் துறை, முற்றத்தில் உள்ள துளசி மாடம் போன்ற இடங்களையும் ஒளியுறச் செய்தது. கல்லாத, கபடற்ற எளிய மாந்தரின் இன்ப துன்பங்களை நேரில் கண்டு அவர்களுடன் இழைந்து பழகி, அந்தக் காட்சி களைக் கலைஞனின் கண் கொண்டு உயர்ந்த சிற்பியின் கைத்திறனுடன் அவர் வரைந்துள்ளார்.

ரூ. 50